வெளியீடு 28-1-1981] [Issued 28-1-1981

[illegible] OF TAMIL NADU
[illegible]
2 பிப். 1981

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

திங்கட்கிழமை 1980 ஜூலை 21—தொகுதி V—எண் 1
Monday 21st July 1980—Volume V—No. 1

தமிழ் நாடு அரசு—GOVERNMENT OF TAMIL NADU
1981

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை—600 009
Assembly Department, Fort, St. George, Madras-600 009

விலை 3-15 காசுகள்] [Price 3-15 Paise

V2;1'.51 N80
N81.5.1
123056

## உள்ளடக்கம்.


| | பக்கங்கள். |
|---|---|
| (i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும். | I–IV |
| (ii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். | V–VI |
| (iii) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப் பெற்ற) பெயர்ப் பட்டியல். | VII–XV |
| 1. <u>வினாக்கள்—விடைகள்</u> | |
| உடுக்குறியிட்ட வினாக்கள். | 1–21 |
| 2. <u>உரிமைப் பிரச்னை</u> | |
| பாசனத் துறை அமைச்சர்மீது—(தீர்ப்பு.) | 21–23 |
| 3. <u>ஒத்திவைப்புத் தீர்மானம்</u> | |
| கடலூர் காவல் நிலையத்தில் இளஞ் சிறுவன் மரணம் அடைந்துள்ளது. | 23–29 |
| 4. <u>தகவல் கோரல்</u> | |
| பேரவை நடைமுறை .. .. .. | 30–31 |
| 5. <u>கவன ஈர்ப்புகள்</u> | |
| (அ) மீனவர்களுக்கு கச்சத்தீவு அருகில் ஏற்படும் இன்னல்கள். | 31–35 |
| (ஆ) சென்னை நகரில் கொசுக்கள் தொல்லை. | 35–39 |

6. வரவு-செலவுத் திட்டம் 1980–81 வாக்கெடுப்பு—(தொடர்ச்சி)


| | |
|---|---|
| (அ) கோரிக்கை எண். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன. (ஆ) கோரிக்கை எண், 34—நகர்ப்பகுதி வளர்ச்சி. (இ) கோரிக்கை எண். 39—சாலைகளும் பாலங்களும். (ஈ) கோரிக்கை எண். 52—சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் | 40–182 |
| மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு. | 40–41<br>42, 43,<br>161–178 |
| திரு. என். கிட்டப்பா. | 43–49 |
| திரு. வி. கருப்பசாமி பாண்டியன். | 49–55 |
| திரு. அ. செல்வராசன். | 55–60 |
| திரு. பி. தங்கவேலு. | 60–65 |
| திரு. ஆர். ரங்கசாமி. | 65–68 |
| திரு. டி. மணி. | 68–73 |
| திரு. ஏ. தங்கராசு. | 73–76 |
| திரு. செ. சிவசாமி. | 76–81 |
| திரு. எஸ். எஸ். இராஜேந்திரன். | 81–85 |
| திரு. எஸ். என். இராமசாமி. | 85–87 |
| திரு. சேலம் மு. ஆறுமுகம். | 87–91 |
| டாக்டர் கே. பி. இராமலிங்கம். | 91–92 |
| திரு. சா. கிருட்டிணமூர்த்தி. | 93–95 |
| திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள். | 95–101 |
| திரு. தி. அன்பழகன். | 101–105 |
| திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன். | 105–108 |





| | |
|---|---|
| திரு. மு. சுந்தரம். | 108–113 |
| திரு. து. இராசரத்தினம். | 113–117 |
| திரு. பி. முகமது இஸ்மாயில். | 117–119 |
| திரு. புலவர் கோ. ஆனூர் ஜகதீசன். | 119–123 |
| திரு. வி. எம். தேவராஜ். | 123–125 |
| திரு. கே. எம். அப்துல் ரசாக். | 125–128 |
| திரு. பி. துரைராஜ். | 129–131 |
| திரு. எம். எஸ். மாணிக்கம். | 131–135 |
| திரு. என். பெருமாள். | 135–137 |
| திரு. சோ. கவித்தீர்த்தான். | 137–140 |
| திரு. ப. தீர்த்தராமன். | 140–141 |
| திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன். | 141–143 |
| திரு. கே. ஆர். சுந்தரம். | 144–146 |
| திரு. பொ. உத்திராபதி. | 146–148 |
| திரு. அன்பில் தர்மலிங்கம். | 148–161 |

7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள். 183

# தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

## தமிழ்நாடு ஆளுநர்

### திரு. பிரபுதாஸ் பட்வாரி.

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சி பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, பொதுப் பணித்துறை மற்றும் பொதுப் பணித்துறை (நிறுவனம்) சம்பந்தப் பட்ட அலுவல்கள்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)—நிதி, திட்டம், சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன் வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, முன்னாள் ராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின்துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகு கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் அமைச்சர்)—கிராம குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள் ; பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்)—வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத் துறை, காடுகள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)—தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி.

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (வேளாண்மைத்துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு மற்றும் வேளாண்மை பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு-சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள், மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு, கடன் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித்துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம், பூமி தானம், கிராமதானம், நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்) தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு, இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் திரு. எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்)—வேளாண்மைப் பணி, கூட்டுறவு சங்கங்கள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், வஃபு.

14. மாண்புமிகு திரு. எஸ். முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்)—அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில் அமைச்சர்)—பெருந் தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (கைத்தறி, கதர்த்துறை அமைச்சர்)—கைத்தறி, கதர், மது அனுமதிச் சீட்டு வழங்கல் நீங்கலாக மதுவிலக்கு, பயண இசைவுச் சீட்டு.

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (அரிசன நலத் துறை அமைச்சர்)—அரிசன நலம், எழுது பொருள்-அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலை வாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

*Governor of Tamil Nadu*

THIRU PRABHUDAS PATWARI.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. HON. THIRU M. G. RAMACHANDRAN (Chief Minister)—Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption Public Works Department and Establishment Matters relating to Public Works Department.

2. HON. DR. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)—Finance, Planning, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. HON. THIRU S. RAMACHANDRAN (Minister for Electricity)—Electricity, Iron and Steel Control.

4. HON. THIRU K. A. KRISHNASAMY (Minister for Rural Industries)—Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development and Registration.

5. HON. THIRU S. D. SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes, Excise and Census.

6. HON. THIRU R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Permits.

7. HON. THIRU C. ARANGANAYAGAM (Minister for Education)—Education including Technical Education and Official language.

8. HON. THIRU K. KALIMUTHU (Minister for Agriculture)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. HON. THIRU C. PONNAIYAN (Minister for Co-operation and Law)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. HON. THIRU P. KULANDAIVELU (Minister for Local Administration)—Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. HON. THIRU S. RAGHAVANANDHAM (Minister for Labour)—Labour, Housing, Slum-Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. HON. Doctor H. V. HANDE (Minister for Health)—Health.

13. HON. THIRU K. RAJA MOHAMMED (Minister for Irrigation)—Agro-Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. HON. THIRU S. MUTHUSAMY (Minister for Transport)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. HON. THIRU S. THIRUNAVUKKARASU (Minister for Industries)—Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. HON. THIRU S. N. RAJENDRAN (Minister for Handlooms and Khadi)—Handlooms, Khadi, Prohibition excluding grant of Liquor permits and Passports.

17. HON. THIRU M. VIJAYASARATHI (Minister for Harijan Welfare)—Harijan Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. HON. THIRUMATHI GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare)—Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. க. இராசாராம்.

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

### *மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. இரா. முத்தையா,
2. திரு. கோ. விஸ்வநாதன்,
3. திரு. பெ. சு. திருவேங்கடம்,
4. திரு. ஓ. சுப்ரமணியன்.

### சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்கள்,

திரு. த. இராதாகிருஷ்ணன்,

திரு. கே. பாலகுரு, பி.ஏ.

### குழு அலுவலர்.

திரு. ச. பாஷ்யம், பி.ஏ. (ஆனர்ஸ்).

## சார்புச் செயலாளர்கள்.

திரு. வி. சீதாராமன், பி.காம்.,

திரு. பி. எம். பத்மநாபன் நம்பியார், பி.ஏ.,

திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி.ஏ., பி.எல்.,

திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.,

திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.,

திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.,

திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ. (எஸ்டேட் அதிகாரி),

திரு. பி. கோதண்டராமன்—பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்.

## தலைமை நிருபர்.

திரு. மா. சந்திரசேகரன்.

## விவாதப் பதிப்பாளர்,

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி. லிட்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பெற்ற பெயர்ப் பட்டியல்).

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 1 | அங்குசாமி, திரு. ச. .. | திருவாடானை. |
| 2 | அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர். |
| 3 | அப்பாதுரை, திரு. மு. .. | ஓட்டப்பிடாரம் (செ.வ). |
| 4 | அம்பிகாபதி, திரு. மு. .. | மன்னார்குடி. |
| 5 | அரங்கநாதன், திரு. எஸ். .. | தர்மபுரி. |
| 6 | அரங்கநாதன், திரு. மு. .. | கூனூர் (செ.வ.). |
| 7 | அரங்கநாயகம், திரு. செ. .. | கோவை (மேற்கு). |
| 8 | அரங்கராசன், திரு. வெ. .. | உப்பிலியாபுரம். |
| 9 | அருணாசலம், திரு. இரா. .. | நாமக்கல் (செ.வ.) |
| 10 | அழகர்சாமி, திரு. சோ. .. | கோவில்பட்டி. |
| 11 | அன்பழகன், திரு. க. .. | புரசைவாக்கம். |
| 12 | அன்பழகன், திரு. தி. .. | நாட்ராம்பள்ளி. |
| 13 | அன்பில் தர்மலிங்கம், திரு. .. | லால்குடி. |
| 14 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம். |
| 15 | ஆண்டித் தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 16 | ஆறுமுகம், திரு. எம். .. | அவினாசி (செ.வ.) |
| 17 | சேலம் ஆறுமுகம், திரு. மு. .. | சேலம்-2. |
| 18 | ஆறுமுகம், திரு. த. .. .. | அரியலூர். |
| 19 | இரத்தினம், திரு. எம்.வி. .. | பொள்ளாச்சி. |
| 20 | இராசகுமார், திரு. மே.அ. .. | மருங்காபுரி. |
| 21 | இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம். |
| 22 | இராசரத்தினம், திரு. து. .. | பூந்தமல்லி. |
| 23 | இராசாம்பாள், திரு. தா. .. | தலைவாசல் (செ.வ.) |
| 24 | இராசாராம், திரு. க. .. | பனமரத்துப்பட்டி. |
| 25 | இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம். |
| 26 | இராசு, திரு. ஜே. எஸ். .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 27 | இராசேந்திரன், திரு. எஸ்.என். | தூத்துக்குடி. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 28 இராமச்சந்திரன், திரு. எம்.ஜி. | மதுரை (மேற்கு). |
| 29 இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ்.எஸ்.ஆர். | சாத்தூர். |
| 30 இராமச்சந்திரன், திரு. ச. .. | பன்ருட்டி. |
| 31 இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந. | செஞ்சி. |
| 32 இராமசாமி, திரு. த. .. | இராமநாதபுரம். |
| 33 இராமசுப்பிரமணியன், திரு. என். | ஸ்ரீவைகுண்டம். |
| 34 இராமலிங்கம், திரு. ஏ. .. | காட்டுமன்னார் (செ.வ.) |
| 35 இராமலிங்கம், டாக்டர், கே.பி. | இராசிபுரம். |
| 36 இராமலிங்கம், திரு. செ. .. | திருவிடைமருதூர். |
| 37 இராஜசேகரன், திரு. வெ. .. | இராதாகிருஷ்ண நகர். |
| 38 இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி. |
| 39 இராஜேந்திரன், திரு. எஸ்.எஸ். | ஆண்டிப்பட்டி. |
| 40 இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ.வ.) |
| 41 ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம். |
| 42 உகம்சந்த், திரு. எஸ்.டி. .. | மதுராந்தகம். |
| 43 உச்சி, திரு. கே. .. .. | கூடலூர். |
| 44 உத்திராபதி, திரு. பொ. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| 45 உமாநாத், திரு. ரா. .. | நாகை. |
| 46 கண்ணன், திரு. ம. .. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 47 கணபதி, திரு. கே. ஆர். .. | சிதம்பரம். |
| 48 கணேசன், திரு. இ. .. .. | இடப்பாடி. |
| 49 கணேசன், திரு. சி. .. .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 50 கந்தசாமி, திரு. கா. வே. .. | கிணத்துக்கடவு. |
| 51 கந்தசாமி, திரு. பி. .. | பொங்கலூர். |
| 52 கபாலி. திரு. டி. கே. .. | மைலாப்பூர். |
| 53 கருணாநிதி, டாக்டர் மு. .. | அண்ணாநகர். |
| 54 கருப்பசாமிப் பாண்டியன், திரு. வி. | பாளையங்கோட்டை. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 55 கருப்பையா, திரு. இரா. .. | குளித்தலை. |
| 56 கருப்பையா, திரு. ஏ. டி. ... | வால்பாறை |
| 57 கல்லன், திரு. கே. .. | உதகமண்டலம். |
| 58 கலிதீர்த்தான், திரு. சோ. .. | சங்கரபுரம். |
| 59 கலியமூர்த்தி, திரு. பெ. .. | மங்களூர் (செ.வ.). |
| 60 நன்னிலம் கலையரசன், திரு. அ. | நன்னிலம் (செ. வ.) |
| 61 காளிமுத்து, திரு. கா. | திருப்பரங்குன்றம். |
| 62 கிட்டப்பா, திரு. என். .. | மாயவரம். |
| 63 கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | காங்கேயம். |
| 64 கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம் விளக்கு. |
| 65 கிருட்டிணமூர்த்தி, திரு. சா. .. | ஆண்டிமடம். |
| 66 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. | நெல்லிக்குப்பம். |
| 67 கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்-1. |
| 68 கிருஷ்ணன், திரு. ரா. .. | வாசுதேவநல்லூர். |
| 69 குப்புசாமி, திரு. என். .. | மொரப்பூர். |
| 70 குப்புசாமி, திரு. கே. .. | ஒட்டன்சத்திரம். |
| 71 குப்புசாமி, திரு. செ. .. | வந்தவாசி (செ.வ.). |
| 72 குமரிஅனந்தன், திரு. .. | திருவொற்றியூர். |
| 73 குருசாமி, திரு. ப. .. .. | அந்தியூர் (செ.வ.) |
| 74 குருசாமி என்கிற அண்ணாதாசம், திரு. எம். | திருவரும்பூர். |
| 75 குலசேகர், திரு. ஏ. டி. ... | சிங்காநல்லூர். |
| 76 குலசேகரப் பாண்டியன், திரு.ந. | வாணியம்பாடி. |
| 77 குழந்தைவேலு, திரு. ப. .. | உடுமலைப்பேட்டை. |
| 78 கேசவ ஆதித்தன், திரு. சி. .. | திருச்செந்தூர். |
| 79 கோபால், திரு. சி. .. | சோளிங்கர். |
| 80 கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம். |
| 81 கோபாலன், திரு. ஆர். டி. .. | கம்பம். |
| 82 கோமதி சீனிவாசன், திருமதி. | வலங்கை (செ.வ.) |
| 83 கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி. |
| 84 கோவைத்தம்பி, திரு. .. | பேரூர். |

| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 85 | சக்கரபாணி, திரு. ஆர். .. | பொன்னேரி. |
| 86 | சங்கரய்யா, திரு. என். .. | மதுரை (கிழக்கு). |
| 87 | சட்டநாத கரையாளர், திரு. கி. | தென்காசி. |
| 88 | சண்முகம், திரு. இரா. .. | திருத்தணி. |
| 89 | சண்முகம், திரு. ஏ. சி. .. | ஆரணி. |
| 90 | சத்தியமூர்த்தி, திரு. வ. .. | கடலாடி. |
| 91 | சந்திரசேகரன், திரு. ஏ. .. | சோழவந்தான். |
| 92 | சபாபதி, திரு. சி. .. | அரூர் (செ.வ.). |
| 93 | சமரசம், டாக்டர் கே. .. | காவேரிப்பட்டணம். |
| 94 | சாகுல் ஹமீது, திரு. ஏ. .. | கடையநல்லூர். |
| 95 | சாமிக்கண்ணு, திரு. நா. .. | செங்கம். |
| 96 | சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம். |
| 97 | சிதம்பரம், திரு. சி. த. .. | காரைக்குடி. |
| 98 | சிவசாமி, திரு. செ. .. | இளையான்குடி. |
| 99 | சிவஞானம், திரு. ந. . | திருவோணம். |
| 100 | சிவப்பிரகாசம், திரு. சி. .. | சேந்தமங்கலம் (செ.வ.) |
| 101 | சிவபெருமாள், திரு. மு. .. | ஓமலூர். |
| 102 | சிவராமன், திரு. எஸ். .. | சின்னசேலம். |
| 103 | சின்னசாமி, திரு. எம். .. | கரூர். |
| 104 | சின்னதுரை, திரு. ஏ. .. | மேல்மலையனூர். |
| 105 | சின்னராசு, திரு. க. இரா. .. | கிருஷ்ணகிரி. |
| 106 | சின்னராஜ், திரு. எம். .. | தொண்டாமுத்தூர். |
| 107 | சுந்தரம், திரு. கே. ஆர். .. | குடியாத்தம். |
| 108 | சுந்தரம், திரு. ப. .. | திருப்பத்தூர். |
| 109 | சுந்தரம், திரு. மு. .. | ரிஷிவந்தியம். |
| 110 | சுந்தரமூர்த்தி, திரு. ஆர். .. | முகையூர். |
| 111 | சுந்தரராஜ், திரு. நா. .. | திருமயம். |
| 112 | சுந்தரராஜன், திரு. மு. .. | விருதுநகர். |
| 113 | சுப்பிரமணியன், திரு. உ. .. | சிவகங்கை. |
| 114 | சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். .. | போடிநாயக்கனூர். |
| 115 | சுப்பிரமணியன், திரு. மா. .. | திருவையாறு. |



| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர் |
|---|---|---|
| | (1) | (2) |
| 116 | சுப்பிரமணியன், திரு. வி. .. | திருநாவலூர். |
| 117 | சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர். |
| 118 | சுவாமிநாதன், திரு. வி. வி. .. | புவனகிரி. |
| 119 | செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபி செட்டிபாளையம் |
| 120 | செம்மலை, திரு. செ. . | தாரமங்கலம். |
| 121 | செல்லமுத்து, திரு, எம். .. | திருவாரூர் (செ.வ.), |
| 122 | செல்வராசன், திரு. அ. .. | துறைமுகம், |
| 123 | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. .. | அரவக்குறிச்சி. |
| 124 | சேதுராமன், திரு. ஏ. எம். .. | ஆற்காடு. |
| 125 | சொக்கலிங்கம், திரு. கெ. .. | திருப்போரூர், |
| 126 | சோமசுந்தரம், திரு. எஸ். டி.. | பட்டுக்கோட்டை. |
| 127 | சோமு, திரு. என். வி. என். | பூங்கா நகர் |
| 128 | சௌந்திரராசன், திரு. கே. | திருச்சி-2. |
| 129 | டாக்டர் சௌரிராஜன், திரு. கே. | தி. நகர். |
| 130 | தங்கமணி கவுண்டர், திரு. கே. எம். | திண்டிவனம். |
| 131 | தங்கராசு, திரு. ஏ. .. | குறிஞ்சிப்பாடி. |
| 132 | தங்கவேல்ராஜ், திரு. பி. எம், | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 133 | தங்கவேலு, திரு. பி. .. | ஜெயங்கொண்டான். |
| 134 | தவசி, திரு. ஆர். .. | பரமக்குடி (செ. வ ). |
| 135 | தனபால், திரு. ப. .. | சங்கரி (செ. வ.). |
| 136 | தனுக்கோடித் தேவர், திரு. கே. .. | முதுகுளத்தூர். |
| 137 | தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 138 | தியாகராசன், திரு. ஆர். .. | விருத்தாசலம். |
| 139 | திருச்சி சௌந்திரராஜன் திரு. ஆர். .. | ஸ்ரீரங்கம். |
| 140 | திருநாவுக்கரசு, திரு. எஸ்... | அறந்தாங்கி. |
| 141 | திருமாறன், திரு. பெ. .. | ஆலங்குடி. |
| 142 | திருமான், திரு. .. | ஏற்காடு (செ.வ.) |
| 143 | திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம். |
| 144 | தீர்த்தராமன், திரு. ப. .. | பென்னகரம். |

| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 145 | துரைசாமி, திரு. பி. எஸ்... | பர்கூர். |
| 146 | துரை முருகன், திரு. .. | இராணிப்பேட்டை. |
| 147 | துரை ராமசாமி, திரு. .. | வெள்ளக்கோவில். |
| 148 | துரைராஜ், திரு. பி, .. | சங்கரநயினார் கோவி (செ.வ.). |
| 149 | தேவராஜ், திரு. வி. எம். | வேலூர். |
| 150 | நடராசன், திரு. எஸ். .. | தஞ்சாவூர். |
| 151 | நரசிம்மன், திரு. பூ. மு. .. | பள்ளிப்பட்டு. |
| 152 | நல்லப்பன், திரு. தி. கா. .. | பெருந்துறை. |
| 153 | நவநீதகிருஷ்ணன்பாண்டியன் திரு. | ஆலங்குளம். |
| 154 | நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர். |
| 155 | நாராயணசாமி, திரு. கே. .. | திருவண்ணாமலை. |
| 156 | நாராயணன், திரு. பி. ஜி. | பவானி. |
| 157 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | திருநெல்வேலி. |
| 158 | நெடுமாறன், திரு. ப. | மதுரை (மத்திய). |
| 159 | பக்கீர் முகமது, திரு. இ. எஸ். எம். | கும்பகோணம். |
| 160 | பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர். |
| 161 | பம்மல் நல்லதம்பி, திரு. | தாம்பரம். |
| 162 | பரமசிவ கவுண்டர், திரு. பி. என். | பல்லடம். |
| 163 | பலராமன், திரு. இல. .. | போளூர். |
| 164 | பழனிசாமி, திரு. சு. .. | மேட்டுப்பாளையம் |
| 165 | பழனிமுத்து, திரு. சி. .. | ஆத்தூர். |
| 166 | பழனியப்பன், திரு. கு. ப. | விழுப்புரம். |
| 167 | பழனிவேல், திரு. என். .. | பழனி (செ. வ.). |
| 168 | பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி. |
| 169 | பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர். |
| 170 | பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு. |
| 171 | பாரமலை, திரு. க. .. | மானாமதுரை (செ.வ.). |
| 172 | பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி. |
| 173 | பாலகிருஷ்ணன், திரு. வி... | சிவகாசி. |



| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின். பெயர் (2) |
|---|---|---|
| 174 | பாலசுப்பிரமணியன், திரு. க. .. | சீர்காழி (செ.வ.). |
| 175 | பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. | வேடசந்தூர். |
| 176 | பாலன், திரு. சு. .. .. | பெரம்பூர் (செ.வ.). |
| 177 | பாலுச்சாமி, திரு. ஏ. .. | சமயநல்லூர் (செ. வ). |
| 178 | பிச்சை, திரு. எம். .. | அருப்புக்கோட்டை. |
| 179 | பிரபாகரன், திரு. ஜே. சி. டி. .. | வில்லிவாக்கம். |
| 180 | புருஷோத்தமன், திரு. தா. | சைதாப்பேட்டை, சென்னை. |
| 181 | பூங்காவனம், திரு. என். ஏ. | காட்பாடி. |
| 182 | பெரியசாமி, திரு. ஏ. .. | தாராபுரம் (செ. வ.). |
| 183 | பெரியசாமி, திரு. ரா. .. | தொட்டியம் (செ. வ.). |
| 184 | பெருமாள், திரு. என். .. | வரகூர் (செ.வ.). |
| 185 | பெருமாள், திரு. ரா. கு... | விளாத்திகுளம். |
| 186 | பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.). |
| 187 | பொன்னுரங்கம், திரு. ப. | இராயபுரம், சென்னை. |
| 188 | பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு. |
| 189 | மணி, திரு. டி. .. | விளவங்கோடு, |
| 190 | மணிமாறன், திரு. ஆர்... | திருப்பூர். |
| 191 | மாணிக்கம், திரு. எம்.எஸ். | வேதாரண்யம். |
| 192 | மாரிமுத்து, திரு. த. .. | குளத்தூர் (செ.வ.) |
| 193 | முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுரம். |
| 194 | முசிறிப்புத்தன், திரு. பி. | திருச்சி-1. |
| 195 | முத்துகிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி. |
| 196 | முத்துசாமி, திரு. சு. .. | ஈரோடு. |
| 197 | முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம். |
| 198 | முத்துவேல், திரு. என். .. | வானூர் (செ. வ.). |
| 199 | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி. |

| | தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 200 | முனிரத்தினம், திரு. இரா. சா. .. | கும்மிடிபூண்டி. |
| 201 | முனுசாமி, திரு. மு. ப... | பாலக்கோடு. |
| 202 | மூர்த்தி, திரு. ஜி. .. | பேரணாம்பட்டு (செ.வ.). |
| 203 | மொக்கையன், திரு. பி. | ராஜபாளையம் (செ. வ.). |
| 204 | யசோதா, திருமதி. டி... | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.). |
| 205 | ரகுமான்கான், திரு. அ... | சேப்பாக்கம். |
| 206 | ரங்கசாமி, திரு. ஆர். .. | சத்தியமங்கலம். |
| 207 | ரங்கசாமி, திரு. க. .. | உளுந்தூர்பேட்டை (செ. வ.). |
| 208 | ரமணி, திரு. கு. .. | கோயம்புத்தூர் கிழக்கு. |
| 209 | ராமசாமி, திரு. எஸ்.என். | சாத்தான்குளம் |
| 210 | ராஜமாணிக்கம், திரு. .. எல். கே. | முசிறி. |
| 211 | ரெத்தினராஜ், திரு. எஸ். | குளச்சல். |
| 212 | வரதராஜன், திரு. .. என். | திண்டுக்கல். |
| 213 | வால்மீகி, திரு. வி. .. | திருப்பத்தூர். |
| 214 | விஜயலட்சுமி, செல்வி வி. | வீரபாண்டி. |
| 215 | வின்சென்ட், திரு. மி. | நாகர்கோவில். |
| 216 | விஜயசாரதி, திரு. எம். | அரக்கோணம் (செ.வ.). |
| 217 | விஜயபாலன், திரு. என். | பூம்புகார். |
| 218 | விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை. |
| 219 | விஜயராகவன், திரு. .. பொ. | கிள்ளியூர். |
| 220 | விஸ்வநாதன், திரு. .. கோ. | அணைக்கட்டு. |
| 221 | வீராசாமி, திரு. த. .. | ஒரத்தநாடு. |
| 222 | வீரானம்பலம், திரு. க. வெ. | மேலூர். |
| 223 | வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | காஞ்சி. |



| | தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 224 | வெங்கட ரெட்டி, திரு. டி. | ஒசூர். |
| 225 | வெங்கடேசன், திரு. பி. எம். | பெரணமல்லூர். |
| 226 | வெள்ளைச்சாமி, திரு. அ. | ஆத்தூர். |
| 227 | வேணுகோபால், திரு. த. | தண்டராம்பட்டு. |
| 228 | வேலப்பன், திரு. சி. வி. | கபிலர்மலை. |
| 229 | ஜகத்ரட்சகன், திரு. எஸ். | உத்திரமேரூர். |
| 230 | ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குனேரி. |
| 231 | ஜகதீசன், ஆனூர், திரு. பு. கோ. | செங்கல்பட்டு. |
| 232 | ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி. |
| 233 | ஹாஜா செரீப், திரு. கே. எஸ். ஜி. | திருவல்லிக்கேணி. |
| 234 | ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டாறு |
| 235 | மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி. | (நியமன உறுப்பினர்) |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

மாண்புமிகு அமைச்சர்கள்—

1. மாண்புமிகு திரு. ஆர். எம் வீரப்பன்—அமைச்சர்.
2. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்.
3. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்.
4. மாண்புமிகு திரு. கே. இராசா முகமது—அமைச்சர்.
5. திரு. க. வெங்கடசாமி, வழக்கறிஞர் (பொறுப்பு).

## தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை.

### திங்கட்கிழமை, 1980 ஜூலை, 21

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

''கருமம் செயவொருவன் கைதூவேன் என்னும்
பெருமையில் பீடுடையது இல்''

தான் செய்ய மேற்கொண்ட (சமுதாயப்) பணியில் அப்பணியைச் செய்து முடிக்கும் வரையில் சோர்வடைய மாட்டேன் என்று சொல்லும் பெருமையைப் போல மேம்பாடானது வேறொன்றும் இல்லை.

### 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### கோட்டைபுரம் வைசியச் செட்டியார் வகுப்பு

*வினா எண். 26—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) ''கோட்டைபுரம் வைசியச் செட்டியார்'' சமூகத்தை பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ''கோட்டைபுரம் வைசியச் செட்டியார்'' சமூகத்தைப் பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே. இந்த 'கோட்டை புரம் வைசியச் செட்டியார்' என்பவர்கள் காரைக்குடியிலே உள்ள நாட்டுக்கோட்டை செட்டியார்கள் போல் வசதியான சமுதாயமாக இல்லை. அவர்கள் மிகவும்

பின்தங்கிய சமுதாயமாக ஸ்ரீவில்லிபுத்தூரிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தொழிலே வடை, முறுக்கு போன்றவைகளை விற்பதும், சின்ன சின்ன பல சரக்குக் கடைகளை வைத்துக்கொண்டு குறைந்த வருமானத்திலே வாழ்க்கையை நடத்திக்கொண்டு வருகிறார்கள். அவர்களுடைய பிள்ளைகள் எல்லாம் படிக்கவசதி இல்லாமல், முறுக்கு வடை விற்கக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே, நேரடியாக ஒரு குழுவை அமைத்து, இவர்கள் வாழ்க்கை முறையை ஆராய்ந்து, இவர்களை, பிற்பட்டோர் பட்டியலிலே சேர்ப்பதற்கு அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் பட்டியலிலே எந்தெந்த சமுதாயத்தைச் சேர்க்க வேண்டுமென்பதற்கு அரசியல் அமைப்புச் சட்டத்தில் சில விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கிறது. அதை மாநில அரசு முடிவு செய்ய வேண்டும். 1969 ஆம் ஆண்டில் ஏ. என். சட்டநாதன் தலைமையில் பிற்பட்டோர் நலக் குழு அமைத்து, அவர்கள் சில பல பரிந்துரைகளைச் செய்தார்கள். அந்த பரிந்துரையின் அடிப்படையிலே அரசு சில பல நடவடிக்கைகளை எடுத்தது. பல்வேறு சமுதாயத்தினர் தங்களுடைய சமுதாயத்தை பிற்பட்டோர் பட்டியலிலே சேர்க்க வேண்டுமென்று நீண்ட பட்டியலைத் தந்து கொண்டு வருகிறார்கள். அது மட்டுமல்ல, பிற்பட்ட வகுப்பினர் சிலர் தங்கள் சமுதாயத்தை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். இதையெல்லாம் ஆராய்ந்து பார்த்து, எந்தெந்த சமுதாயம் தாழ்ந்த நிலையிலே இருக்கின்றது என்பதைக் கண்டறிய வேண்டுமென்றால், அதற்கு ஒரு குழு வைத்து ஆராய்ந்து பார்த்து, அதற்குப் பிறகு பரிந்துரை செய்ய வேண்டுமே தவிர, அவரவர்கள் விரும்புகிறபடி, கேட்கின்றபடி, இந்த சலுகைகள் கொடுப்பதென்றால் இதற்கு முடிவே இல்லை. எல்லையும் இருக்காது. ஆகவே, இதைக் கருத்தில் கொண்டு அரசே ஒரு குழு அமைத்திருக்கிறது. பிற்பட்டோர் நல இயக்குநர் அவர்களைத் தலைவராக வைத்து, ஒரு 6 புள்ளிவிவர அதிகாரிகளை கூடுதலாக வைத்து, இந்தப் பிரச்சினைகளை ஆராயவேண்டும். இப்போது புதிதாக சென்ஸஸ் எடுக்கப்பட இருக்கிறது. இந்த சென்சஸ் எடுப்பதிலே பல குறிப்புகள் அதாவது ஒவ்வொரு வகுப்பினரிடையே அவர்களுடைய நிலை, படிப்பு, தகுதி ஆகியவைகளை எல்லாம் ஆராய்ந்து பார்க்க இருக்கிறது. மத்திய அரசினுடைய அந்த கணக்கெடுப்பு இப்போது நடைபெற இருக்கிறது. அந்தக் கணக்கெடுப்பு பணி செய்தால், பல்வேறு கோரிக்கைகளை ஆராயலாம் என்று இந்த அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது. இதற்கென அமைக்க இருக்கிற நலக் குழுவினர் அந்த அடிப்படையிலே ஆராய்ந்த பின்னர், அறிக்கை அளிக்கும்போது அரசு அதைப்பற்றி பரிசீலனை செய்யும்.





திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா அவர்கள் முதல்வராக இருந்தபோது தூத்துக்குடி துறைமுகம், சேலம் இரும்பாலை அமைக்கப்பட வேண்டுமென்பதற்காக எழுச்சி நாள் கொண்டாடியதுபோல் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கல்வியிலும் மற்றும் சமுதாயத்திலும் பிற்பட்டுள்ள நிலையில் பிற்பட்டோர் சமூகத்தினரின் 50 சதவிகிதத்தினருக்கு கல்வி, வேலை வாய்ப்பில் முன்னுரிமை கொடுத்து ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கோரி மாநில அரசு எழுச்சி நாள் கொண்டாட முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை பிற்பட்டோருக்கு என்று ஒரு ஒதுக்கீடும், தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடி மக்கள் என்பவருக்கு ஒரு ஒதுக்கீடும், பொது ஒதுக்கீடு ஒன்றும் ஆக மூன்று வகையில் வைத்திருக்கிறோம். மத்திய அரசைப் பொறுத்தவரை பிற்பட்டோர் என்று சொல்வது தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களைத்தான். இரண்டே இரண்டு பிரிவுதான். பிற்பட்டோர் என்று மாநில அரசு ஒதுக்கீடு செய்துள்ள பிரிவினரை அவர்கள் மேல் வகுப்பினர் என்று கருதுகிறார்கள். இதைப் பொறுத்தவரை நம்முடைய தமிழக மாநிலத்தில் கொண்டிருக்கிற இதே முறையை மத்திய அரசு பின்பற்ற வேண்டுமென்ற கோரிக்கை பல்லாண்டு காலமாக எழுப்பப்பட்டு மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. வட மாநிலங்களில் சிலவற்றில் கூட இது எழுப்பப்பட்டிருக்கிறது. மேலும் இதுபற்றி மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தும்.

திரு. உ. சுப்பிரமணியன் : பிற்பட்ட வகுப்பில் சேர்க்க வேண்டுமென்று பல்வேறு சமூகங்களில் இருந்து விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன என்று சொன்னார்கள். எந்தெந்த சமூகங்களில் இருந்து என்று அறிவிக்க இயலுமா? மேலும் இணைக்கும் போது மாநிலத்தில் தொழில் நிலையில் பொருளாதாரத் துறையில் முற்ற வகையில் பின்தங்கிய சமூகத்தினரை இணைத்துக் கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் பொதுப்படையாகச் சொன்னேன். அது பற்றிய விவரப்பட்டியல் இல்லை. நான் முதலிலேயே குறிப்பிட்டபடி இதையெல்லாம் ஆராய்ந்தறிய பிற்பட்டோர் நல இயக்குநரைத் தலைவராகக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு இன்னும் தன்னுடைய பணியைத் தொடங்கவில்லை. 1981-ஆம் ஆண்டு மக்கள் சென்சஸ் எடுக்கும் நிலையும் வருகிறது. அதிலே முழு விவரப் குறிப்பும் வருகிற காரணத்தால் அந்த இரண்டு பணிகளையும் இணைத்து ஆராயலாமா என்று அரசு யோசித்து வருகிறது. பிற்பட்டோர் நலக் குழு ஆராய்ந்து சிபாரிசு செய்தால் அரசு யோசித்து தக்க முடிவு எடுக்கும்.

திரு. ப. பொன்னுரங்கம் : அவை முன்னவர் அவர்கள் பிற்பட்டோர் பட்டியலில் இருப்பவர்கள் தங்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படிக் கோரிக்கை விட்டிருக்கின்ற மீனவர்கள் மிகவும் தாழ்ந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், தமிழக மக்கள் தொகைப் பிரகாரம் பார்த்தாலும் ஒன்றரை சதவிகிதத்தினருக்கு மேற்பட்டவர்கள். அவர்களுடைய நீண்ட நாளைய வேண்டுகோள் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கவேண்டுமென்பது. இந்த அரசு அதிலே தகுந்த கவனம் செலுத்தி அவர்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் குறிப்பிட்ட வகுப்பினரைச் சேர்க்கும் பணி மத்திய அரசைச் சேர்ந்தது. மீனவர்களை தாழ்த்தப்பட்ட வகுப்பில் சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கை பல ஆண்டு காலமாக இருந்து வருகிறது. மத்திய அரசை அவர்கள் வற்புறுத்தி வருகிறார்கள். அண்மையில் அமைக்கப்பட்ட குழு ஒன்று மாநிலங்களுக்கெல்லாம் சென்று ஆராய்ந்து வருகிறது. அந்தக் குழு தன்னுடைய சிபாரிசை மத்திய அரசுக்கு சொல்லும் என்று கருதுகிறேன். மத்திய அரசு முடிவு எடுக்கும்போது மாநில அரசின் யோசனையைக் கேட்கும்போது மாநில அரசு யோசனை கூறும்.

திரு. இ.ரெ. இராசமாணிக்கம் : இப்போது பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கவேண்டுமென்று எந்தெந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் கோரிக்கை கொடுத்துள்ளார்கள் என்பதைத் தெரிவிப்பார்களா? பிற்பட்டோருக்கு இப்போது ஒதுக்கப்பட்டிருக்கும் 50 சதவீதம் பேருக்கு சலுகை தற்போது கொடுக்கப்படுகிறதா ? அந்தச் சலுகை வேலை வாய்ப்பு, கல்விக் கூடங்களில் சேர்க்கப்படுதல் ஆகியவற்றில் அளிக்கப்படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலேயே சொன்னது போல் யார் யார் அப்படி பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று கோருகிறார்கள் என்ற விவரப் பட்டியல் இல்லை. இப்போது இருக்கிற நமது பட்டியலின் அடிப்படையில் 213 வகுப்பினர்கள் பிற்பட்ட வகுப்பினர் என்று கணக்கிடப்பட்டிருக்கிறார்கள்.

[முற்பகல் 9–10]

குற்றப்பரம்பரை பட்டியலில் இருந்து நீக்கப்பெற்ற 70 வகுப்பினரும் இதிலே சேர்கிறார்கள். செங்கோட்டை வட்டத்தில் இருக்கிற 21 வகுப்பினரும் இதிலே சேர்கிறார்கள். பிற்பட்டோர் பட்டியலில் இருக்கிற மொத்த வகுப்பினர் 213 வகுப்பினர் ஆவார்கள். 50 சதவீதம் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கப்படுகின்ற முறை எல்லா துறைகளிலேயும் கையாளப்



பட்டு வருகிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவீதமும் ஏற்கெனவே இருந்த 31 சதவீதத்திற்குப் பதிலாக பிற்பட்ட வகுப்பினருக்கு 50 சதவீதமும் கொடுக்கப்படவேண்டுமென்பது விதி. அது கடைப்பிடிக்கப்பட்டுவருகிறது.

## பெற்றோர்—ஆசிரியர் சங்கம்

*வினா எண். 27— திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழகத்தின் பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தின் தற்போதைய உறுப்பினர் யார் யார் ?

(ஆ) இச்சங்கத்தின் 1977–78 ஆண்டின் இருப்புத்தொகை எவ்வளவு ?

(இ) இத்தொகை எவ்வகையில் செலவு செய்யப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இக்கழகத்தின் தற்போதைய பொதுக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு : —

### தலைவர் :

கல்வி அமைச்சர்.

### துணைத் தலைவர்கள் :

1. அரசு கல்வித்துறை ஆணையர்—செயலர்.
2. பள்ளிக் கல்வி இயக்குநர்.
3. மாநில பொதுக்குழு உறுப்பினர்களிலிருந்து தேர்வு செய்யும் ஒரு பெற்றோர் பிரதிநிதி.
4. மாநில பொதுக்குழு உறுப்பினர்களிலிருந்து பொதுக்குழுவால் நியமனம் செய்யப்படும் ஒரு ஆசிரியர் பிரதிநிதி.

### பொருளாளர் :

பள்ளிக் கல்வி இயக்குநரகத்தின் நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர்.

### செயலர் :

அரசால் நியமிக்கப்படும் மாவட்டக் கல்வி அதிகாரி தகுதியில் உள்ள அரசு அலுவலர்.

### இணைச்செயலர் :

சென்னை மாநகராட்சி கல்வி அலுவலர்.

[1980 ஜூலை 21

உறுப்பினர்கள் :

1. கல்வித்துறை துணைச் செயலர்.
2. ஊரகவளர்ச்சித் துறை இயக்குநர்.
3. சமூகநலத்துறை இயக்குநர்.
4. சென்னை மாநகராட்சி ஆணையர்.
5. மதுரை மாநகராட்சி ஆணையர்.
6. நகரவை ஆய்வாளர், சென்னை.
7. அரிசன நல இயக்குநர்.
8. வருவாய் மாவட்ட உறுப்பினர்கள் 32 பேர்கள்.
9. அரசு நியமனம் — 5 பேர்கள்.

(ஆ) 31—3—1978 அன்று இருப்பு நிலை சேமிப்பு கணக்கில் ரூ. 56,467·69
வைப்பீடாக (Fixed Deposit) ரூ. 9,11,702·00

(இ) 1977–78-ஆம் ஆண்டு கீழ்க்கண்ட திட்டங்களுக்காக செலவு செய்யப்பட்டுள்ளது.

1. மாணவ மாணவிகளுக்கு காந்தியடிகள் பிறந்த தின விழா, குழந்தைகள் தின விழா போன்ற நாட்களில் பல்வேறு போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

2. பள்ளியிறுதித் தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி காட்டிய பள்ளிகளுக்கு பரிசுப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

3. செய்தி என்ற காலாண்டு இதழ் 12,000 படிகள் அச்சிட்டு பெற்றோர் ஆசிரியர் சங்கத்தோடு இணைப்புச் செய்த பள்ளிகளுக்கு இலவசமாக அனுப்பப்பட்டுள்ளது.

4. இது தவிர மாவட்டக்கிளை நிர்வாகத்திற்கும் மாநிலக் கழக நிர்வாகத்திற்கும் செலவுகள் செய்யப்பட்டுள்ளன.

## கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை.

*வினா எண் 28— திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தற்போது உள்நோயாளிகளுக்கான கட்டிலுடன் கூடிய படுக்கைகள் எவ்வளவு உள்ளன ?



1980 ஜூலை 21]

(ஆ) 16—6—1980 தேதியில் மொத்தம் உள்நோயாளிகள் எவ்வளவு பேர்?

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே : (அ) 907.

(ஆ) 1,136.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, நமது சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களே உடல் நலம் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள் என்று தெரிகிறது. இருந்தாலும் கூட. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கோவையிலே உள்ள மருத்துவ மனையில் உள்ள நோயாளிகள் பற்றியது.

திரு. கு. ரமணி : 907 படுக்கைகள் கொண்ட அந்த மருத்துவமனையிலே ஆயிரத்திற்கும் மேற்கொண்ட நோயாளிகள் இருக்கிறார்கள் என்று அமைச்சர் சொல்லியிருக்கிறார்கள். அந்த நோயாளிகளில் பலர் படுக்கையில்லாமல், கட்டில் இல்லாமல் நிலத்திலே படுக்கவைக்கப்பட்டிருக்கிறார்கள், அப்படிப்பட்ட கொடுமை அங்கே இருக்கிறது, அதைத் தீர்ப்பதற்கு உடனடியாக என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே : தலைவர் அவர்களே, முதலிலே என்னுடைய உடல்நலம் நன்றாக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கனவே இந்த மன்றத்திலே அறிவித்த மாதிரி 5·4 லட்சம் ரூபாய் செலவில் மகளிர் நோயியல் சிகிச்சைப் பிரிவு விரிவுப்படுத்துவதற்காக அரசு ஆணை நிலை எண் 984. சுகாதாரம், நாள் 10—6—1980-இல் உத்திரவிடப்பட்டிருக்கிறது. அந்த ஆணை மூலமாக அதற்காக 5·40 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது இல்லாமல் 8 லட்சம் ரூபாய் இன்னொரு கட்டடத்திற்கு, பர்ஸ்ட் ப்ளோர் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அரசாணை நிலை எண் 357, சுகாதாரம், 27—9—1979-ஆம் நாளன்று இன்னொரு ஆணையின் மூலமாக அதற்கு எட்டு இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இந்த நடவடிக்கைகள் உடனடியாக அங்கிருக்கின்ற அந்த இக்கட்டான நிலைமையைப் போக்கப் பயன்படும். அது அல்லாமல், தரையிலே பாய் கொடுக்கப்பட்டு அவர்கள் படுத்துக்கொள்ள வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் தரையிலே படுக்க வைக்கின்ற பழக்கத்தையே விட்டு விட வேண்டுமென்று சொன்னால் பல எமர்ஜென்சி கேஸ்கள், அர்ஜன்ட் கேஸ்கள் வரும்

பொழுது அவர்களுக்குஇடமில்லை என்றுசொல்லக்கூடிய நிலைமை இருக்கும். ஆகவே, இதற்குமேலே இன்னும் விரிவாகப் பெரிய திட்டம் வைத்திருக்கிறோம். இந்தத் திட்டத்தின் மூலம் ஷார்ட் டெர்மில் —குறுகிய காலத்தில் சில நன்மைகள் கிடைக்கும் என்று அரசு கருதுகிறது.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, அவுட் பேஷன்ட் பிளாக் என்று கட்டப்பட இருக்கும் கட்டிடம் நான்கு மாடிக் கட்டிடம் என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். அது நான்கு மாடிக் கட்டிடம் கட்டும் திட்டம். முதல் மாடிக் கட்டிடத்திற்காகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று கூறுகிறார்கள். இந்த நான்கு மாடிக் கட்டிடத்தைக் கட்டி முடித்தால்தான் நெருக் கடியைத் தீர்க்க முடியும். எனவே எவ்வளவு காலத்திற்குள் அந்த நான்கு மாடிக் கட்டிடம் கட்டப்பட்டு பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே : தலைவரவர்களே, எவ்வளவு காலத்திற்குள் என்று சொல்ல இப்பொழுது முடியாது. ஆனால் விரைவில் அதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டதைப் போல் படுக்கை வசதிகளை விஸ்தீரணம் செய்கின்ற அளவிற்கு அந்த மருத்துவமனை சுகாதார வசதி பெறாது என்பது எங் களுடைய அபிப்பிராயம். படுக்கை வசதிகளை அதிகப்படுத்து வதற்கு மேல்மாடிக் கட்டிடங்களைக் கட்ட வேண்டும் அல்லது புதிய இடம் ஒன்றைத் தேர்ந்தெடுத்து மருத்துவக் கல்லூரிக்கு உகந்த மருத்துவமனையை ஏற்படுத்தும் திட்டம் உண்டா? மேலும், கோவையைப் பொறுத்தவரையில் சோதனை நிலை, மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டதைப் போல கீழே வியாதிஸ்தர்களைப் படுக்க வைக்க முடியாது என்பதையும் மாண்புமிகு அமைச்சரவைர்களுக்கு ஞாபகப்படுத்தி, படுக்கை வசதிகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்றால் புதிய கட்டி டத்தைச் சீக்கிரமாக உருவாக்க வேண்டும். அந்தத் திட்டம் பலநாட்களாக இருப்பது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா என்று பணிவோடு கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே : தலைவரவர்களே, நீண்ட காலமாக அந்தத் திட்டம் இருக்கிறது என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும் பொதுவாக நம்முடைய இந்த இலாக்காவிலே, நூறு படுக்கைகள் ஏற்படுத்த வேண்டுமென்றால் சராசரி அரசுக்கு உண்டாகும் செலவு குறைந்த பட்சத்திற்கு மூலதனச் செலவு என்றாலும், பராமரிப்புக்காக





Recurring Expenditure ஆகக் கிட்டத்தட்ட ஐந்து இலட்சம் ரூபாய் செலவாகிறது. மூலதனச் செலவு கிட்டத்தட்ட 50 இலட்சம் ரூபாய் செலவாகக்கூடும். அது அந்தந்த இடங் களைப் பொறுத்து இருக்கிறது. ஆகவே, நம்முடைய நிதிநிலை மைகளை அறிந்துகொண்டு அதற்கேற்ப எந்த அளவிற்குத் துரிதமாக அதை விஸ்தரிக்க முடியுமோ அந்த அளவிற்கு அரசு விஸ்தரிக்கத் தயாராக இருக்கிறது. ஆனால் ஒட்டுமொத்தமாக இந்தப் பிரச்சினைக்கு நல்ல தீர்வு காண வேண்டுமென்றால்—மாஸ்டர் பிளான்—பெரிய திட்டம் ஏற்படுத்தினால்தான் முடியும். அதை எப்படிக் கொண்டு வரலாம், எப்படி நிதி நிலைகளைப் பெருக்க முடியும் என்பதையெல்லாம் அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவரவர்களே, கோவையிலிருக்கும் அந்த மருத்துவமனையை விஸ் தரிப்பதற்காக மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சரவர்கள் பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். கட்டிடங் களை விஸ்தரிப்பது, படுக்கைகளை விஸ்தரிப்பது போன்ற திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். அவர்கள் மக்கள் நல் வாழ்வுத்துறைக்கான மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற நேரத்தில் கோவை மருத்துவமனையில்தான் நான் பிறந்தேன், அது என்னுடைய கவனத்தில் இருக்கிறது. எல்லா வசதி களும் செய்து கொடுக்க இருக்கிறேன் என்று தெரிவித்தார்கள். அவர்கள் பிறக்காத மாவட்ட மருத்துவமனைகளிலும் இப்படிப் பட்ட நிலைமைகள் இருக்கின்றன. அவைகளையும் கவனத்திற் கொண்டு மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சரவர்கள் எல்லா மருத்துவமனைகளுக்கும் கட்டிட வசதிகள், படுக்கை வசதிகள் ஆகியவைகளையெல்லாம் செய்து கொடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா மாவட்டங்களுக்கும் உரிய ஏற்பாட்டைச் செய்து கொண்டு இருக்கிறோம். இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு ஒவ்வொரு மாவட்டத்திலேயும் இருக் கின்ற படுக்கைகளின் எண்ணிக்கை, வசதிகள் எல்லாம்பற்றிக் குறிப்புகளைச் சேகரித்துக்கொண்டிருக்கிறேன். ஒன்றிரண்டு மாதங்களுக்குள்ளே எந்தெந்த மாவட்டத்திற்கு பிரையாரிட்டி பேசிஸில் நாம் செய்யலாம் என்று கருதிக்கொண்டிருக்கிறேன்.

நான் அன்றையதினம் பதில் கொடுக்கும்பொழுது, மாற் றான்தாய் மனப்பான்மை இருக்கக்கூடாது என்று சொன்னதற் காகச் சொன்னேன், இதனால் அங்கே எக்ஸ்ட்ரா கவனம் இருக் கிறது என்பது அர்த்தம் இல்லை. மாற்றான்தாய் மனப்பான்மை இல்லை என்பதற்காகச் சொன்னேன். என்னைப் பொறுத்த வரையில் எல்லா மாவட்டங்களுக்கும், எல்லா மருத்துவமனை

[1980 ஜூலை 21

களுக்கும்—இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் புரட்சித் தலைவரவர்களின் கொள்கை கிராமப்புறங்களில் உள்ள வற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அதற்குரிய வகையில் அதை கிராமப்புற ஓரியண்டாக, கிராமப்புறங் களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்பது புரட்சித் தலைவரவர்களுடைய கொள்கை. அதற்கேற்ப அவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்று இந்த நேரத்திலே நான் வாக்குறுதி அளிக்கிறேன்.

[முற்பகல் 9–20]

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகரம் மிகவும் சிறப்பான நகரம். மாதர் இதழைக் கோவை என்பார்கள் கவிஞர்கள். அங்கேயே மருத்துவ மனையில், நோயாளிகளைத் தரையில் படுக்க வைக்கக்கூடிய நிலை இருக்கிறதென்றால், தஞ்சாவூரில் அதை விட மோசம். எனவே, எல்லா இடங்களிலுமே, படுக்கை இல்லாத நிலையைப் போக்க ஒரு சிறப்புத் திட்டம் (ஸ்பெஷல் ஸ்கீம்) தயாரிக்க அரசாங்கம் முன்வருமா என்று மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை வினவ விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கத்தினுடைய பல்வேறு மருத்துவ மனைகளிலே தற்பொழுது 29,000 படுக்கை வசதிகள் இருக்கின்றன. 14,000 படுக்கைகள் டி.எம். இ. மேற்பார்வையின் கீழ் இருக்கின்றன. மிச்சமுள்ள 15,000 படுக் கைகள்—ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனைகளிலுள்ளவை உட்பட—டி.எம்.எஸ். மேற்பார்வையின்கீழ் இருக்கின்றன. இதை விட இன்னும் அதிகப் படுக்கைகளை அமைக்க வேண்டுமென்றால், தற்போதுள்ளதை விரிவுபடுத்த வேண்டுமென்றால், நான் ஏற் கனவே சொன்னதைப் போல், 100 படுக்கைகளுக்கு மூலதனச் செலவு ரூ. 50 இலட்சம் ஆகும். ஆண்டொன்றுக்குப் பராமரிப் புச் செலவு ரூ. 5 இலட்சம் ஆகும். ஆகவே, நிதிநிலையைப் பொறுத்து, அதற்கேற்ப நாம் செய்யத் தயாராக இருக்கிறோம். மன்னார்குடியிலே கூட இப்படி ஒரு பிரச்சினை இருக்குமா னால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைத் தனியாக எழுதிக் கொடுப்பார்களானால், அது குறித்தும் நாம் ஆராயத் தயாராக இருக்கிறோம்.

திரு. எம். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில், நோயாளிகள் வந்து தங்குகின்ற படுக்கைகள் சுத்தமாக இல்லை. மேலும் அந்தப் படுக்கைகளில் மூட்டைப் பூச்சிகள் அதிகமாக இருக்கின்ற காரணத் தால், நோயாளிகள் மிகவும் அவதிப்படுகிறார்கள். ஆகவே,



1980 ஜூலை 21]

படுக்கைகள் சுத்தமாக இருக்கவும், மூட்டைப் பூச்சிகளை ஒழிக் கவும் அரசு நடவடிக்கைகள் எடுக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே : தலைவர் அவர் களே, மூட்டைப் பூச்சிகள் இருப்பது ஏற்கனவே எனக்குத் தெரிந்த ஒன்றாகும். ஏனென்றால், நான் மாணவனாக இருந்த நேரத்தில், காஷுவாலிட்டியில் என்னைப் போட்டார்கள். அந்த நேரத் திலே, அங்கு படுக்கைகளிலே இருந்த மூட்டைப் பூச்சிக்களை கவரில் போட்டு, அப்பொழுதிலிருந்த 'லே செக்கரட்டரி'யிடம் கொடுத்திருக்கிறேன். ஆகவே, மருத்துவமனைப் படுக்கைகளில் மூட்டைப் பூச்சிகள் இருப்பது எனக்குத் தெரியாத ஒன்று அல்ல. இப்பொழுது நான் பொறுப்பேற்ற பிறகு மருத்துவமனைப் படுக்கைகளைச் சுத்தப்படுத்த எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். படிப்படியாக அதிலே நாம் வெற்றி பெறுவோம் என்று எதிர்பார்க்கிறேன்.

*வினா எண். 29. திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கோவை மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு நான்கு மாடிக் கட்டிடம் கட்டும் திட்டம் தற்போது எந்நிலை யிலுள்ளது?

(ஆ) இக் கட்டிட வேலை எவ்வளவு காலமாக நடைபெற்று வருகிறது? எப்பொழுது முடிவடையும்?

(இ) 1979–80ஆம் ஆண்டில் இக்கட்டிட வேலைக்கு எவ் வளவு பணம் ஒதுக்கப்பட்டிருந்தது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நான்கு மாடிக் கட்டிடம் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) & (இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, இப்பொழுது இரண் டாவது மாடிக் கட்டப்படுவது உண்மைதானே? 4 மாடிக் கட்டி டம் கட்டப்படும் என்று எங்களுக்கு ஏற்கனவே சொல்லப்பட் டது. இப்பொழுது இல்லையென்று சொல்கிறார்கள். புதிய உண்மை இப்பொழுது வந்திருக்கிறது. ஆனால், முதல் மாடி கட்டுவது அதே கட்டிடத்தில்தானே, அதோடு அது நின்றுவிடுமா?

அப்படியானால், மேற்கொண்டு கட்டிடங்கள் விஸ்தரிப்புக் காக வேண்டி வேறு என்ன நடவடிக்கையை அந்த ஆஸ்பத்திரி யினுடைய எல்லைக்குள்ளே செய்யப் போகிறார்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலை வர் அவர்களே, 4 மாடிக் கட்டிடம் கட்டுவதற்கு இப்பொழுது குறிப்புகள் இல்லையென்றுதான் நான் சொன்னேன், ஏற்கன வே கேட்ட கேள்விக்கு நான் சொன்ன மாதிரியாக, முதலாவது மாடி, 'ஃபர்ஸ்ட் ப்ளோர்' கட்டுவதற்காக ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஏற்கனவே ஒரு உத்தரவு போடப்பட்டுள்ளது.

The Government approve the proposal of the Director of Medical Education for the construction of a 32 bedded ward in the first floor of the maternity block and a separate 28 bedded ward in the Coimbatore Medical College Hospital, Coimbatore and sanction the incurring of an expenditure of Rs. 4 lakhs therefor. The Government also direct that the expenditure of the scheme during 197:-74 should be restricted to Rs. 1 lakh only. இந்த அறிவிப்பு ஏறத்தாழ 3 ஆண்டுகளுக்கு முன்பு வந்தது. இப் பொழுது இந்த அறிவிப்பை நாம் நடைமுறைப்படுத்தி வரு கிறோம். இது 3 ஆண்டுகளுக்கு முன்பு, 1977 ஆம் ஆண்டு போட்ட ஆணை. ஆனால், இதுவரை அதை நடைமுறைப்படுத்த வில்லை. நான் வந்ததற்குப் பிறகு, அதை உடனடியாக அமுல் படுத்த வேண்டுமென்று நடவடிக்கை எடுத்து, இப்பொழுது துரிதமாக வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

4 மாடிக் கட்டிடம் பொறுத்தவரை நான் ஏற்கனவே சொன்ன மாதிரி ஒரு மாஸ்டர் பிளான் போட்டு, அதனை நிறை வேற்ற முடியும், வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கை எனக் கிருக்கிறது. கோவை மருத்துவமனை வெறும் மருத்துவமனை அல்ல, அது மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டது. அதாவது, கல்வி கற்பிக்கும் மனையாக இருக்கிறது. எனவே, சென்னையிலே பயிலும் மாணவர்களுக்கு என்ன வசதி கள் கொடுக்கிறோமோ, அதே வசதிகளை கோவை கல்லூரி மாணவர்களுக்கும் கொடுத்தாக வேண்டும். இல்லாவிட்டால், கோவை நகர மாணவர்கள் இங்கு வரலாமா என்று கூட யோசிப்பார்கள். எனவே, சென்னை பொது மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கீழ்ப்பாக்கம்



மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளில் என்ன, என்ன வசதி கள் கொடுக்கிறோமா, அதே அளவுக்கு கோவையிலே கொடுக் கப்பட வேண்டுமென்பதுதான் அரசினுடைய எண்ணம். அதை வெற்றிகரமாக நிறைவேற்ற எல்லா ஏற்பாடுகளையும் செய் வோம். ஆனால், இந்த பார்ட் டூ ஸ்கீமில் இல்லை என்றுதான் சொன்னேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அந்த மருத்துவ மனைக்கு ஒரு நாளைக்கு 4,000 க்கும் மேற்பட்ட வெளிநோயாளி கள் வருகின்றார்கள். அந்த மருத்துவ மனையை விஸ்தரிப்பதற் கான இடம் இல்லை. அவ்வளவு குறுகலாக இருக்கிறது. ஆகவே இப்போது கட்டப்படுகின்ற முதல் மாடி கட்டிடத்திலேயே 4 மாடிகள் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் முன் முயற்சி எடுப்பார்களா—அவர் பல முயற்சிகளை எடுத்துக் கொண்டு வருகிறார் அது வரவேற்கத்தக்கது—எனவே இந்த முதல் மாடிக் கட்டிடத்தின் மேலேயே 4 மாடிகள் கட்ட ஆலோசனை நடத்தி முடிவு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர் களே, இதிலேயே அந்த கட்டடத்தைக் கொண்டு வரவேண்டும் என்றால், அஸ்திவாரம்—பவுன்டேஷன்—எந்த அளவுக்கு இருக் கிறது என்று பார்க்க வேண்டும். அதைப் பற்றி ஆராய்ந்து கொண்டு இருக்கிறோம். இன்னொரு யோசனையும் இருக் கிறது. அந்த மருத்துவ மனைக்கு அருகாமையில் ஏதாவது விஸ்தாரமான இடம் இருக்குமானால் அங்கே அதைச் செய்ய லாம். இப்போது இருக்கும் இடத்தில் அஸ்திவாரம் எந்த அள வுக்கு இருக்கிறது என்று பார்த்து, இன்ஜினியர்களை கூப்பிட்டுப் பார்க்கச் சொல்லி, முடிந்தால் அந்த இடத்திலே 4 மாடி கட்டடத்திற்கு அரசு உத்திரவிடும். அதைப்பற்றி ஆராய்ந்து தான் முடிவெடுக்கவேண்டும்.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, படுக்கை வசதிகளை அதிகப்படுத்துகின்ற திட்டம் கோவை மருத்துவ மனையில் இருக்கிறது என்றும், அதற்கான இடவசதி இல்லை என்றும் சொன்னார்கள். அந்த மருத்துவ மனைக்குப் பக்கத்திலே இருக்கிற அரசுக் கல்லூரியை மருத்துவ மனையோடு சேர்த்துக் கொள்ள ஏற்பாடு நடக்கிறதா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர் களே, அப்பேற்பட்ட ஒரு எண்ணம் இந்த அரசுக்கு இல்லை.

திரு. இ. எஸ். எம். பக்கிர் முகமது : தலைவர் அவர்களே, கும்பகோணம் மருத்துவமனையை அரசாங்க ஹெட்குவார்ட்டர்ஸ் மருத்துவ மனையாக மாற்றுகிற உத்தேசம் உண்டா? மேலும்

அங்கே கட்டடம் கட்டப்படுவதற்காக சேங்ஷன் எல்லாம் ஆகி, இன்னும் கட்டிடம் கட்ட ஆரம்பிக்கவில்லை. அதை விரைவு படுத்த அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, குடந்தை மருத்துவமனையை ஹெட்குவார்ட்டர்ஸ் மருத்துவமனையாக ஆக்குகின்ற உத்தேசம் இல்லை. அந்தக் கட்டிடத்தைப் பொறுத்தவரையில், என்னிடத்திலே குறிப்பு எதுவும் இங்கே இல்லை. என்றாலும் நான் அதைப் பார்த்திருக்கிறேன். உடனடியாக எல்லா வேலைகளையும் ஆரம்பிக்க வேண்டும் என்று அந்த டிஸ்டிரிக்ட் மெடிக்கல் ஆபீசருக்குசொல்ல பட்டிருக்கிறது. உடனடியாக அந்த வேலைகள் ஆரம்பிக்கப் படும் என்று கருதுகிறேன்.

திரு. ஆர். தியாகராசன் : தலைவர் அவர்களே, விருத்தாசலத்திலே உள்ள மருத்துவமனையைச் சுற்றியுள்ள 40 கிலோ மீட்டர் தூரம் அளவுக்கு இரத்த சேமிப்பு நிலையமோ அல்லது எலும்பு முறிவு சிகிச்சை அளிக்கின்ற வசதியோ இல்லை. முக்கியமான பிரசவ கேஸ்கள் வந்தால் கூட அவர்கள் 40, 50 மைல்கள் உள்ள கடலூருக்குப் போகவேண்டியிருக்கிறது. அப்படிப் போகும்போது பல உயிர்களை இழக்கக்கூடிய நிலையிருக்கிறது..........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி, கோயம்புத்தூரைப் பற்றியது. விருத்தாசலத்திற்குப் போக ஆரம்பித்தால் பின்னர் தமிழ்நாடு முழுவதும் போகவேண்டி வரும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, கோவை மருத்துவமனையிலும், அதைப்போன்ற பெருநகரங்களில் உள்ள மருத்துவமனைகளிலும் போதுமான கட்டிட வசதி இல்லாமல் இருக்கின்றன. இதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். சரியான படுக்கை வசதிகள் இல்லாததால், கீழே படுக்கவைக்கின்றார்கள். எனவே கோவையைப் போன்று மற்ற நகரங்களிலும் கட்டிட வசதியை ஏற்படுத்தித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே, திரு. ரமணி அவர்கள் கேட்டபோது இதற்கு விடை அளித்தாகிவிட்டது. அப்போது நீங்கள் இல்லை.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, ஏற்கனவே விடை அளித்தாகிவிட்டது.



திரு. எ. சி. சண்முகம் : தலைவர் அவர்களே, 1972ஆம் ஆண்டு இந்த 4 மாடி கட்டிடம் கட்டுகின்ற திட்டம் இருந்தது என்று சொன்னார்கள். இது எந்த ஆட்சியின்போது போடப்பட்ட ஆணை. எத்தனை ஆண்டு காலமாக இது நிறைவேறாமல் இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, 1976ஆம் ஆண்டு இந்த ஆணை உருவாக்கப்பட்டது 1977லே இது துரிதப்படுத்தப்பட்டது. உடனடியாக நடவடிக்கை எடுத்தும் மேலும் 2 ஆண்டுகள் ஆகும். இப்போது நாம் திட்டம் போடுவோமேயானாலும், எப்படி இருந்தாலும் ஒரிரு ஆண்டுகள் ஆகும். அதைத் தவிர்க்க முடியாது. Administrative red–tapis யிலும். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசைப் பொறுத்தவரையிலும் எவ்வளவு துரிதமாக செய்ய முடியுமோ அவ்வளவு துரிதமாகச் செய்வோம். 24 மணிநேரமும் இதையே கவனத்தில் வைத்துக் கொண்டு முயற்சியைச் செய்து வருகிறோம்.

## தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விகிதாச்சார ஒதுக்கீடு.

*வினா எண். 30— திரு. எல். இளைய பெருமாள் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :—

(அ) 1979–80ல் மலைவாழ் மக்கள்-பழங்குடி மக்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்திய அரசியல் சட்டப்படி வழங்கப் பட்டுள்ள விகிதாச்சாரப்படி உத்தியோகம் Class I, Class II Class III, and Class IV–ல் கொடுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) விகிதாச்சாரப்படி கொடுக்கப்படவில்லையானால் காரணம் யாது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) மற்றும் (ஆ) தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசியல் சட்ட விகிதாச்சாரப்படி வேலை வாய்ப்பு கொடுக்கப்பட பதவி இடங்கள் 1979–80லும் ஒதுக்கப்பட்டன. பணிக்கு ஆட்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தொழில் நுட்பப் பணி (Technical) தொழில் நுட்பமற்ற பணி (Non-Technical) என்ற அடிப்படையில் அரசுப் பணிகள் பிரிக்கப் படுகின்றன. தொழில் நுட்பமற்ற பணியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் ஒன்று தகுதி வாய்ந்த நபர் இல்லாத காரணத்தால் காலியாக உள்ளது. தொழில் நுட்ப பணியில் 59 இடங்கள் தகுதி வாய்ந்தவர்கள் இல்லாத காரணத்தால் காலியாக உள்ளன. இக்காலியிடங்கள் அடுத்த பணி ஆண்டுத் தேர்வுக்கு கொண்டு செல்லப்படுகின்றன.

[1980 ஜூலை 21

(முற்பகல் 9-30)

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதிவாய்ந்த நபர்கள் இல்லாத காரணத்தா நிரப்பப்படாதுள்ள, அத்தகைய இடங்களை மற்ற பகுதியினருக்கு கொடுக்கிறார்கள் என்பது உண்மையா ? 7 ஆண்டுகளுக்கு முன்பு 18 சதவீதம் விகிதாச்சாரம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப் பட்டு இருந்தது. இப்போது தாழ்த்தப்பட்ட மக்கள் தமிழ் நாட்டில் அதிகமான அளவிற்கு படித்து விட்டு இருக்கிற காரணத் தால், வேலைக்கு வரவேண்டியவர்களின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்பதனால், அந்த விகிதாச் சாரத்தை உயர்த்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே முதல் கேள்வியைப் பொறுத்தவரையில், அப்படி தகுதி வாய்ந்த ஆட்கள் கிடைக்காததால் நிரப்பப்படாத இடங்கள அடுத்த ஆண்டிற்கு 'கேரி ஓவர்' என்ற முறையில் எடுத்துக்கொண்டு, அடுத்த ஆண்டில் அதை நிரப்புவதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன. மற்றொரு கேள்வியைப் பொறுத்த வரையில் ,மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போடவும்.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, 'டி-நோடிபைட் டிரைப்ஸ்' என்ற வகுப்பினர் எந்த லிஸ்டில் வருகிறார்கள். அவர்களுக்கு எந்த விகிதாச்சாரத்தின் அடிப் படையில் உத்தியோக வாய்ப்பு அளிக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர் களே, 'டி-நோடிபைட் டிரைப்ஸ்' பின் தங்கிய வகுப்பினர் பட்டியலில் வருகிறார்கள். மற்ற விவரங்களுக்கு மாண்புமிகு உறுப்பினர் தனிக்கேள்வி போடவேண்டும்.

திரு. ஜே. எஸ். இராசு : தலைவர் அவர்களே, தகுதிவாய்ந்த நபர் இல்லாத காரணத்தால் அந்த இடங்கள் நிரப்பப்படவில்லை என்று அரசு தரப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. தகுதியான நபர்களை டைரக்ட் ரெக்ரூட்மெண்ட் மூலமோ, எம்.பி.எஸ்.சி. மூலமோ அல்லது இலாகா மூலமோ அந்தப் பதவிகளில் நிரப்ப அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் நேரடித் தேர்வின் மூலமாகவும், எழுத்து மூலம் நடத்தப்பெறும் தேர்வு (எக்சாமினேஷன்) மூலமாகவும் தகுதியான ஆட்கள் நியமிக்கப்படுகின்றனர். அந்த 'ரிட்டன் எக்சாமினேஷனில்' தேர்ச்சி அடைவதில் குறைவான ஆட்கள் இருப்பதால், அந்த இடங்கள் காலியாக உள்ளன. அப்படி



1980 ஜூலை 21]

காலியாக உள்ள இடங்கள் அடுத்த ஆண்டிற்கு எடுத்துச் செல்லப் பட்டு, அடுத்த ஆண்டில் அதனை நிரப்ப நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு 'வருகின்றன.

திரு. க. பாரமலை : தலைவர் அவர்களே, தகுதி பெற்ற நபர்கள் கிடைக்காத காரணத்தால் ஒதுக்கி வைக்கப்பட்ட இடங் கள் நிரப்பப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார் கள். அப்படி தகுதி வாய்ந்த நபர்கள் கிடைக்காத காரணத்தால், அந்த 'ப்ரஸ்கிரைப்டு குவாலிபிகேஷனை' கொஞ்சம் தளர்த்திக் கொடுத்து, மத்திய அரசாங்கத்தில் அப்படிச் செய் கிறார்கள் —அவர்களை அதிலே நிரப்புவதற்கு தமிழக அரசுக்குத் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: இதுவரையில் அப்படிப்பட்ட திட்டம் இல்லை.

திரு. எல். இளைய பெருமாள் : தலைவர் அவர்களே, 1959, 1962 ம் ஆண்டுகளில் மத்திய அரசு மாநில அரசுக்கு கொடுத்த அந்த விகிதாச்சாரம் அமல்படுத்தப்படாமல் இருப்பதற்கான காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விகிதாச்சாரம் எங்கே அமல்படுத்தப்படவில்லை —கல்லூரியிலா அல்லது உத்தியோகத் திலா—என்பது குறித்து தெளிவாக கேள்வி போடவும்.

திரு. எல். இளையபெருமாள் : இங்கேயுள்ள செக்ரடேரி யட்டிலும், மற்ற அலுவலகங்களிலும் மத்திய அரசு ஆணையிட் டுள்ள அந்த விகிதாச்சார முறைப்படி உத்தியோகங்கள் ஒதுக்கப் படவில்லை என்பது என்னுடைய வினா. அதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, மலைவாழ் மக்கள், பழங்குடி மக்கள், தாழ்த்தப்பட்ட மக்க ளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற 18% இடங்களுக்கு தேர்ந்தெடுக்க தகுதியான ஆள் இல்லாத காரணத்தால் இடங்கள் நிரப்பப் படாமல் இருக்கின்றன.

திரு. எல். இளையபெருமாள் : தலைவரவர்களே, ஐ.ஏ.எஸ் ஐ.பி.எஸ். பதவிகளுக்கு தகுதியான ஆள் இருக்கும்போது கிளாஸ் 3, கிளாஸ் 4 பதவிகளுக்கு தகுதியான ஆள்கிடைக்கவில்லை என்று சொல்வது சரியான காரணம் அல்ல. ஆகவே, அவர்களுடைய விகிதாச்சாரத்தைக் கொடுக்கவில்லை என்பது என்னுடையகுறை. அதை அமைச்சரவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு தலைவரவர்களே, விகிதாச்சாரப்படி கொடுப்பதற்கு 'கால் ஃபார்' பண்ணி, ரிட்டன் டெஸ்ட், மற்றும்இன்டர்வியூ நடக்கிறது. தேர்வு செய்வதற்குள்ள தகுதியானஆள் இல்லை என்பதால் இடம் காலியாக இருக்கிறது. அதை தவிர விகிதாச்சாரம் குறைக்கப்படவோ அல்ல எடுக்கப்படவோ இல்லை என்பதைச் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர்களே, தகுதி இல்லை என்று சொல்லுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தகுதி இல்லை என்று சொல்லவில்லை. தகுதியான ஆள் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். தகுதி இல்லை என்பதற்கும் தகுதியான ஆள் கிடைக்கவில்லை என்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, ஏற்கெனவே சர்வீஸ் கமிஷன் மூலம் எம்.பி.பி.எஸ். படித்த டாக்டர்கள் தேர்வு செய்யப்படுவதற்காகப் போகிறார்கள். தேர்வுக்குப் போகும் போது அங்கே இருக்கக்கூடிய இன்டர்வியூ போர்டில் அதாவது இன்டர்வியூ நடத்தக் கூடியவர்கள் சிலர் ஐ.ஏ.எஸ் அதிகாரிகளாக இருக்கிறார்கள். அவர்கள் எம்.பி.பி.எஸ். படித்தவர்களை அந்த வேலைக்கு தகுதி இல்லை என்று நிராகரித்துவிடுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி உத்தியோகம் பற்றியது. நீங்கள் எம்.பி.பி.எஸ். பற்றி கேட்டால் அவர் பதில் சொல்வது கஷ்டம். எல்லாவற்றையும் கேட்கக்கூடாது. மூலக் கேள்விக்கு சம்பந்தப்பட்ட துணைக் கேள்வியை மட்டும் கேட்க வேண்டும்.

திரு. ரா. கிருஷ்ணன் : இதுவும் உத்தியோகம் தான் எம்.பி.பி.எஸ்.படித்தவர்கள் டாக்டர் வேலைக்கு நியமனம் பெற சர்வீஸ் கமிஷனுக்குப் போகிறார்கள். 'பாசிட்டி ஆஃப் காண்டிடேட்ஸ்' என்று சொல்கிறார்கள். அவர்கள் படித்த வேலைக்கே தகுதி இல்லை என்று சொல்லி நிராகரிக்கும் நிலை இருக்கிறது. அதை அரசு பரிசீலிக்குமா? அதைப்போல தனியார் துறைகளிலும் அரசாங்கத்தின் பணத்தை முதலிடு செய்திருப்பதால் தனியார் துறைகளிலும் இப்படிப்பட்ட ரிசர்வேஷன் அடாப்ட் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, இதற்கு தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, பதவி உயர்வுக்கு தகுதி படைத்த தாழ்த்தப்பட்ட மக்கள் கிடைக்காத காரணத்தால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பதவி உயர்வுக்கு அல்ல; பதவிக்கு ஆள் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்.





திரு. சு. பாலன்: பதவிக்குத் தகுதியான ஆள் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கிறார்கள். அப்படியானால் எந்தெந்த பதவிகள் காலியாக இருக்கின்றன என்பதை பத்திரிகைகள் மூலம் விளம்பரப் படுத்தி, தகுதியானவர்களைத் தேர்வு செய்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு ; தலைவரவர்களே. சென்ற ஆண்டு நிரப்பப்படாத இடங்கள் இந்த ஆண்டு நிரப்பப் படுவதற்காக 'கால் ஃபார்' பண்ணப்பட்டு முறையாக இன்டர்வியூ நடக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : கனம் சபாநாயகர் அவர்களே, எம்பிளாய்மென்ட் எக்சேஞ்சில் Qualiffied candidates are available என்று ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் Qualified candidates are not available என்று சொல்லியிருக்கிறார்கள் இதில் எது சரி. Qualified candidates are available among scheduled castes and scheduled tribes என்று எம்பிளாய்மேன்ட் எக்சேஞ்ச் சொல்வது சரியா? அல்லது Qualified candidates are not available among scheduled castes and scheduled tribes என்று அமைச்சர் சொல்வது சரியா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, காலி இடங்கள் ஏற்படும்போது அவற்றுக்கு 'கால்' ஃபார் செய்யப்பட்டு, நேர்முகத் தேர்வு அல்லது எழுத்துப் பரீட்சை (எக்சாமினேஷன்) மூலம் தேர்வு செய்கிறார்கள். தேர்வு செய்யப்படும் போது ஒவ்வொரு பதவிக்கும் சில வரன்முறைகளை வைக்கிறார்கள். அதன்படி தகுதியுள்ளவர்களைத் தேர்வு செய்கிறார்கள். இல்லை என்றால் தேர்வு செய்யாமல் விட்டு விடுகிறார்கள். தகுதியுள்ள நபர்கள் கிடைக்காத காரணத்தால் இருக்கக்கூடிய இடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அதை அப்படியே காலியாக வைத்து, அடுத்த ஆண்டு 'கால்ஃபார்' பண்ணி தகுதியானவர்களைத் தேர்வு செய்து நிரப்புகிறார்கள்.

## சிங்களேயர்புரியிலுள்ள அரசு மருத்துவமனை.

* கு.கா.வி.எண். 31—

திரு. பி. வின்சென்ட் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்ற ஆண்டு முதல் அரசு ஏற்று நடத்தும் நாகர்கோவில் தொகுதியைச் சார்ந்த சிங்களேயர்புரி மருத்துவமனையில் எத்தனை படுக்கைகள் உள்ளன?

(ஆ) படுக்கைகளை அதிகரிக்கும் உத்தேசம் அரசிடம் உண்டா?

(இ) அங்கு எக்ஸ்ரே கருவிகள் Blood Bank ஆகியவை கள் நிறுவ அரசு முயற்சி ஏதும் எடுத்துள்ளதா?'

<u>மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே</u> : (அ) தற்சமயம் நாகர் கோவில் தொகுதியைச் சார்ந்த சிங்களேயர்புரியில் ஒரு மருந்தகம்தான் உண்டு. அதில் படுக்கை வசதிகள் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

(இ) அம் மருத்துவமனையில் உள்நோயாளிகள் சிகிச்சை பெற வசதிகள் இல்லாததால், எக்ஸ்ரே, குருதி சேமிப்பு வங்கி முதலியன ஏற்படுத்துவது தற்சமயம் அவசியமானதல்ல எனக் கருதப்படுகிறது.

[முற்பகல் 9-40]

<u>திரு. மி. வின்சென்ட்</u> : தலைவரவர்களே, சுமார் 1 இலட்சம் கிராம மக்கள் பயனடைகிற அளவில் பல கிராமங்கள் சூழ்ந்துள்ள பகுதியாக இருப்பதால் இந்த மருத்துவமனைக்குப் படுக்கை வசதிகள் செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா? மேலும் இங்கே ஒரே டாக்டர் தான் இருக்கிறார். கூடுதலாக டாக்டர்களைப் போட்டு மேலும் நல்ல முறையில் கிராம மக்களுக்கு சிகிச்சை அளிக்க அரசு முன்வருமா?

<u>மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே</u> : தலைவரவர்களே, சிங்களேயர்புரி என்ற அந்த ஊர் நாகர்கோவிலிலிருந்து 6 மைல் தூரத்தில் இருக்கிறது. நாகர்கோவிலிலே இருக்கின்ற டிஸ்ட்ரிக்ட் ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரியில் 253 படுக்கைகள் இருக்கின்றன. மேலும் பல வசதிகள் அங்கு இருக்கின்றன. எக்ஸ்ரே போன்ற வசதிகள் எல்லாம் அங்கு இருக்கின்றன. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்தின் அடிப்படையிலே இதை மீண்டும் பரிசீலனை செய்து 4 படுக்கைகளை அங்கு ஏற்படுத்த முடியுமா என்பதை அரசு ஆராயும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. டி.. மணி</u> ; தலைவரவர்களே, நாகர்கோவில் தொகுதியில் தலைமை மருந்துவமனையில் 36 படுக்கைகளுக்குத் தேவையான இடம் கட்டப்பட்டும்அதற்கு வேண்டியபடுக்கைகள் இல்லாத காரணத்தால் அங்கு ஒரு அவலமான சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே அங்கு அவசியமான படுக்கைகள் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே</u> : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்திலேயே இதைப்பற்றி எடுத்துக் கூறி இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இது குறித்து நான் ஏற்கெனவே விசாரித்து அங்கு 10, 12 படுக்கைகள்தான் நிரப்பப்படாமல் இருப்பதை அறிந்து துரிதமாக எல்லாப் படுக்கைகளையும் அங்கு ...





அது சரியான வகையிலே இயங்குகின்ற வகையிலே உத்தரவு போட்டாகி விட்டது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. உரிமைப்பிரச்னை.

## பாசனத் துறை அமைச்சர் மீது (தீர்ப்பு).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : பேரவையின் 247-வது விதியின் கீழ், 1980 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9 ஆம் நாள் அன்று நெல்லிக்குப்பம் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்களும், திரு. துரை முருகன் அவர்களும் மாண்புமிகு பாசனத் துறை அமைச்சர் அவர்கள் மீது அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சனையைப் பேரவையில் எழுப்பினார்கள். மாண்புமிகு மைச்சர் அவர்கள் விளக்கம் அளித்த பிறகு, எனது தீர்ப்பைப் ரனர் அறிவிப்பதாகத் தெரிவித்திருந்தேன். சம்பந்தப்பட்ட வக் குறிப்புகளைப் பார்த்துவிட்டு இன்று எனது தீர்ப்பை க்கிறேன்.

80 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5 ஆம் நாள் அன்று வையில் ஒரு துணை வினாவிற்கு விடை அளிக்கையில், புமிகு அமைச்சரவர்கள் மேற்கு நோக்கிப் பாயும் ஆற்று பங்கிடுவது குறித்துத் தமிழக அரசு அலுவலர்களுக்கும் . அரசு அலுவலர்களுக்கும் இடையே பேச்சுவார்த்தை ததாகக் குறிப்பிட்டது, கேரள அமைச்சரால் மறுக்கப் ஆகிள்ளபடியால், வேண்டுமென்றே பேரவைக்குத் தவறான சரல் தரப்பட்டுள்ளது என்றும், எனவே இது அவை உரிமை பய செயல் என்றும் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் திரு. ரைமுருகன் அவர்களும் 1980 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9 ஆம் நாள் அன்று அறிவிப்புக் கொடுத்துப் பேரவையில் உரிமை மீறல் பிரச்சனையை எழுப்பினார்கள். இதற்கு விரிவாக விளக்கம் அளித்த மாண்புமிகு பாசனத்துறை அமைச்சர் அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்:—

" புதிதாக நாங்கள் ஆட்சிக்கு இப்போது வந்த பிறகு 1980 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9-ம் தேதி பதவி ஏற்பு நடந்ததற்குப் பிறகு இரண்டு கட்டத்திலே இது குறித்துப் பேச்சு

வார்த்தைகள் நடந்தது என்று நான் இந்த அவையில் குறிப்பிட்டிருக்கிறேன். அவைக் குறிப்பிலேயும் இருக்கிறது. திரும்பவும் அதை நான் உறுதி செய்கிறேன் ''.

மேலும் அவர் கூறியது—'' ஜூன் மாதமே சென்ட்ரல் வாட்டர் கமிஷனுடைய முயற்சிகளின் பேரில் அதிகாரிகள் அங்கே கலந்து முதலாவது கட்ட பேச்சுவார்த்தையை அகில இந்திய அளவிலே கிடைக்கக் கூடிய உபரி நீரைப் பங்கிடுவது பற்றிப் பேசி, இரண்டாவது நாள், ஒரு நாள் முழுவதும், மேற்கு நோக்கிப் பாயும் நதிகளைப் பற்றிப் பேசி அதற்குப் பிறகு முடிவு எடுத்திருக்கிறார்கள் ''.............. ''அங்கே பேசிய அமைச்சர் கருத்தை மறுத்து அல்லது விரோதமான கருத்தைச் சொல்வது நம்முடைய நலனுக்கு உகந்தது அல்ல என்ற காரணத்தால், அன்றைக்குப் பல்வேறு கேள்விகளைக் கேட்ட போதும் கூடச்சொன்னேன்—தயவு செய்து அதற்குள் ஆழமாகப் போகவேண்டாம் ''.

திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் ''இரண்டு மாநில அதிகாரிகள் மட்டத்தில் கூட்டங்கள், டிஸ்கஷன் நடந்திருப்பதாகக் கூறுவது வேறு '' என்று குறிப்பிட்டு, பின் '' நானும் புரோசீடிங்சைப் பார்த்தேன். இரண்டு மீட்டிங்குகள் நடந்திருக்கின்றன. ஆல் இந்தியா லெவலில் என்று சொன்னார். அதோடு விட்டு விடலாம் '' என்று திரு. கிருஷ்ணமூர்த்தி ம[illegible] முறையும் கூறியுள்ளார்.

அமைச்சர் அவர்கள் உரிமைப் பிரச்சினைக்குப் பதிலளி[illegible] யில் கடைசியாகப் பின்வருமாறு கூறியுள்ளார்—''திரு. கிருத் மூர்த்தி அவர்கள் திரும்பவும் பேசும்போது தனியாகப் 4 னார்கள் என்பது போல் சொல்லியிருக்கிறார்கள். அ[illegible] குறிப்பேட்டிலே பார்க்க வேண்டும். பொதுப்படையாக காரிகள் மட்டத்திலே பேச்சு வார்த்தைகள் நடந்திருக்[illegible] என்று சொல்லி, அது குறிப்பேட்டிலும் வந்திருக்கிறது. அ[illegible] தாங்கள் பார்த்துக் கொண்டு தீர்ப்பளிக்க வேண்டுமென்று த[illegible] செய்து கேட்டுக் கொள்கிறேன் '' என்று சொல்லி இருக்கி[illegible]

அதற்குத் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி ''நான் முன் கூறியவா[illegible] அதாவது, நானும் புரோசீடிங்ஸ் பார்த்தேன். இரண்டு மீட்டிங்குகள் நடந்திருக்கின்றன, ஆல் இந்தியா லெவலிலே என்று சொன்னார்கள் அதோடு விட்டு விடுவோம் '' என்று கூறியுள்ளார்கள். எனவே, இப்பொருள் பற்றித் தொடர்ந்து பல்வேறு மட்டங்களில் பல்வேறு சமயங்களில் தொடர்ந்து நடந்து வருகிறது. மேலும் அமைச்சர் பொதுப்படையாக அவைக்கு விவரங்கள் தரவேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலேதான் இரு மாநிலங்களுக்கிடையே உள்ள ஒரு பிரச்னை



என்றும் பாராமல் அவைக்குத் தகவல் கொடுத்துள்ளார்கள். ஆகவே, தவறான தகவலினால் அவையைத் திசை திருப்பியதாகக் கூற இயலாது.

எனவே, திரு.வி. கிருஷ்ணமூர்த்தி மற்றும் திரு. துரைமுருகன் ஆகியோர் எழுப்பிய பிரச்சினையில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கையில் உரிமை மீறல் தென்படவில்லை என்று, ''no prima facie case has been made out என்று '' தீர்ப்பளிக்கிறேன்.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்

### கடலூர் காவல் நிலையத்தில் இளஞ் சிறுவன் மரணம் அடைந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தென்னாற்காடு மாவட்டம், கடலூர் பழைய டவுன் போலீஸ் நிலையத்தில் 1980 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் நாள் அன்று 14 வயது வாசு என்னும் சிறுவன் கொல்லப்பட்டதால் அப்பகுதி பொது மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு,

1. திரு. அ. ரகுமான்கான்
2. திரு. மு. அம்பிகாபதி
3. திரு. செ. சிவசாமி
4. திரு. இரெ. இராசமாணிக்கம்
5. திரு. ரா. கிருஷ்ணன்
6. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்
7. திரு. ப. பொன்னுரங்கம்

ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக்கொள்கிறேன், திரு. அ. ரகுமான்கான்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் நிலையங்களில் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படுபவர்கள் காவல் நிலையத்திலேயே மரணம் அடைகிற சம்பவங்கள் தொடர் கதையாக ஆகிக்கொண்டிருக்கிறது. தென் ஆற்காடு மாவட்டம் கடலூர் பழைய நகரில் உள்ள குப்பக்காரத் தெருவைச் சேர்ந்த மணி என்ற மூட்டை தூக்கிப் பிழைக்கும்

[திரு. அ. ரகுமான்கான்] [1980 ஜூலை 21

தொழிலாளியின் மகன் 14 வயதுடைய வாசு என்ற சிறுவன் டிபன் பாக்ஸ் திருடிவிட்டான் என்ற குற்றம் சாட்டப்பெற்று, கைது செய்யப்பெற்று 1980ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் தேதி அன்று காவல் நிலையத்திற்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டான்.

காவல் நிலையத்தில் வைத்து, முகம், மார்பு, மர்மஸ்தானம் ஆகிய இடங்களில் போலீஸ்காரர்களால் அடிக்கப்பெற்று, போலீஸ் லாக்கப்பிலேயே மரணம் அடைந்தான். போலீஸ் லாக்கப்பில் ஏற்கெனவேயே வண்ணாரப்பேட்டையைச் சேர்ந்த இருபாள், கம்பத்தைச் சேர்ந்த முத்துசாமி, சின்னமனூர் ஒச்சத் தேவர், திருவொற்றியூர் மணி, நெல்லிக்குப்பம் இராமலிங்கம், இப்பொழுது கடைசியாக, கும்பகோணம் காவல் நிலையத்தில் செல்வராஜ் என்கிற ஷேக், இப்பொழுது அதைத் தொடர்ந்து இந்த கடலூர் வாசு. இப்படி தொடர்ச்சியாக காவல் நிலையத்தில் தாக்கப்பட்டு இறந்திருக்கின்றனர்.

போலீஸ் லாக்கப்பில் இந்த 14 வயது சிறுவன் தற்கொலை செய்து கொண்டான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு அவர்கள் சொல்கிற காரணம் சரியான காரணம் அல்ல. ஏனென்றால், பையன் கைது செய்யப்பெறும் பொழுது அரை டிரவுசரும், சட்டையும் தான் அணிந்திருந்ததாகச் சொல்லப் பெறுகிறது. ஆனால் அந்தப் பையன் தற்கொலை செய்துக் கொள்ளும்போது துணியைக் கழுத்தில் சுருக்குப்போட்டு இறுக்கி தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. இப்படி லாக்கப்பிலே தற்கொலை செய்துக் கொள்ள முடியாது. லாக்கப்பில் தள்ளுவதற்கு முன் அறைஞாண் கயிற்றைக்கூட கழற்றிப் பிடுங்கிக் கொண்டு தான் விடுவார்கள். இதேபோல் தான் முன்பு கும்பகோணத்திலே செல்வராஜ் அவர்கள் தாக்கப் பட்டு இறந்தபோதும், மண்ணெண்ணெயை ஊற்றிக்கொண்டு தற்கொலை செய்துக்.....................

மாண்குபுமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது கடலூரில் நடந்திருக்கும் பிரச்சினையைப் பற்றித்தான் ஒத்திவைப்புத் தீர் மானம். அங்கேதான் பதட்ட நிலை நிலவுவதாகச் சொல்லி யிருக்கிறீர்கள், அதனால் அதை ஒட்டி மட்டும் பேசுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : இது தொடர்பானது தான் எல்லாம், உதாரணத்திற்காகத்தான் சொன்னேன். இப்படி கழுத்தில் துணியைச் சுற்றிதூக்குப்போட்டுக்கொண்டுசாவது மண்ணெண்ணெய்யை ஊற்றி தீ வைத்துக் கொண்டு தற்கொலை செய்துக் கொள்வது எல்லாம், அதுவும் லாக்கப்பிலே இருக்கும் போது என்று சொல்வது நடக்கக் கூடிய காரியம் அல்ல. இந்த சிறுவன் இறந்ததற்குக் காரணம் போலீஸ்காரர்களின் சித்திர வதைதான். அவர்கள் சித்திரவதை செய்து அடித்து நொறுக்கிய



1980 ஜூலை 21] [திரு. அ. ரகுமான்கான்]

தால்தான் அவன் மரணமடைந்தான். அதற்குப்பிறகு அவசர அவசரமாக தற்கொலை என்று சொல்லி பிரேத விசாரணை செய்து பிரேதத்தை தாய் தந்தையரிடம் ஒப்படைத்திருக்கிறார் கள். போலீஸ் லாக்கப்பிற்கு விசாரணைக்காக கைதிகளை அழைத்து செல்வதற்கும், அழைத்து வந்த சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை விசாரணை செய்வதற்கும் போலீஸ்காரர்களுக்கு உரிமை உண்டு. இல்லையென்று சொல்லவில்லை.

[முற்பகல் 9-50]

அதேநேரத்தில் போலீஸ் லாக்கப்பில் அவர்களை அடிப்பதும், உதைப்பதும், சித்திரவதை செய்வதும் அவர்கள் உயிர்களைப் பறிப்பதும் இவற்றிற்கு போலீசுக்கு உரிமை கிடையாது. வேலியே பயிரை மேய்கிறது போல் கன்னிமாடத்துக் காவலனாக காமுகன் இருக்கக்கூடாது. பீகாரில் முதல் அமைச்சர் அவர்களாக இருந்த கர்பூரி தாகூர் அவர்கள் இதுபோன்று போலீசுக்கு யாரையாவது கொண்டு போனால் அந்தப் போலீஸ் நிலையத்தில் இருக்ககூடிய அதிகாரிகள் பொறுப்பேற்று அவர்கள்மீது அரசு 302-ன்கீழ் வழக்கு போடவேண்டுமென்று குறிப்பிட்டிருக் கிறார்கள். அதேபோல் இந்த அரசும் உண்மை நிலையைக் கண்டறிய வழக்கம்போல் ஆர். டி. ஓ. என்கொயரி என்று சொன்னால் அதிலிருந்து உண்மையை நாம் கண்டு அறிய முடியாது. ஆகவே சுதந்திரமாக ஒரு நீதிபதியை வைத்து ஒரு ஜூடிஷியல் என்கொயரி நடத்தி போலீஸ் தரப்பில் குற்றச் சாட்டு இருக்கிறது என்று தெரியப்படுமானால் இந்த அரசு அந்த போலீஸார் மீது 302-ன் கீழ் வழக்கு போட்டு குற்றம் செய்தவர் களை தூக்குமேடைக்கு அனுப்பினால்தான் இதுபோன்ற தவறுகள் இனிமேல் நடக்காது. இது மிக முக்கியமான பிரச்னை, உயிர்ப்பிரச்சினை, மக்கள் பிரச்னை என்பதால் இந்த அவையின் இதர அலுவலல்களை ஒத்திவைத்து—வழக்கம்போல் ஒன்றுமில்லை என்று சொல்லி முடித்து விடக்கூடாது—இது குறித்து விவாதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூரில் 15—7—1980-ல் மணி எண்பவர் மகன் வாசு என்பவன் லாக்கப்பில் அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறான் அவன் லாக்கப்பிற்குச் செல்லும்போது ட்ராயர் அணிந்ததாகச் சொல்லப்படுகிறது. அவன் தூக்கில் தொங்குகிறபோது வேட்டியை கட்டி தொங்கினான் என்று சொல்லப்படுகிறது.

காவலருக்குக் கொடுத்திருக்கிற பயிற்சி இப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற முறையில் இருக்கிறது. இந்த வாசு என்பவன் மீது சொல்லப்பட்டிருக்கிற குற்றச்சாட்டு என்ன வெனில் அவன் டிபன் பாக்ஸ் திருடியதாகச் சொல்லப்படுகிறது.

காவலர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பயிற்சி பிரிட்டிஷார் காலத்தில் இருந்து தொடர்ந்து இப்படி பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த பயிற்சியை மாற்றி, மக்களிடம் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதற்கான முறையில் பல நடவடிக்கைகளை நம் நாட்டில் தொடர்ந்து எடுக்கவில்லை.

ஒரு சிறு பையன் 14 வயதுள்ளவன் டிபன் பாக்ஸை திருடியதாகச் சொல்லப்படுகிறது. இது ஒரு பெரிய கையாடல் குற்றமோ, மோசடியோ அல்லது கள்ளநோட்டை அவன் அடிக்கவில்லை. ஒரு டிபன் பாக்ஸ் திருடியிருக்கிறான், அப்படி திருடியதாகச் சொல்லப்படுகிறது. அவன் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இது சம்பந்தப்பட்ட அத்தனைபேர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற நிலை உருவாகியிருக்கிறது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் குடந்தை காவல் நிலையத்தில் நடந்த சம்பவத்தைப்பற்றிப் பேசும்போது இதுபோல் இனிமேல் நடக்காமல் இருப்பதற்கான முயற்சிகள் எடுப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தச் சம்பவம் மக்கள் மத்தியில் ஒரு பயத்தையும் பீதியையும் ஏற்படுத்தியிருக்கிறது. காவல் நிலையத்திற்குச் சென்றாலே திரும்ப முடியாதோ என்று நினைக்கும் தன்மை மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது. இந்த வாசு என்பவன் திருடினானா, அப்படித் திருடியிருந்தால் அதற்கான சூழ்நிலை என்ன என்பதைப்பற்றியெல்லாம் சிந்தித்து எப்படி விசாரிக்கவேண்டுமோ அப்படி விசாரிக்காமல் காட்டுமிராண்டித்தனமாக ஒரு பச்சிளம்பாலகன், 14 வயது நிரம்பியவன் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு திரும்ப அவன் பிணமாக வந்து மக்கள் அந்த காவல் நிலையத்தை நோக்கி திரள்கிறார்கள் என்று சொன்னால், இது அரசுக்கு களங்கம் கற்பிக்கக்கூடிய நிலைக்குக்கொண்டுபோய் விடும். இந்த சம்பவம் பற்றி அரசு உடனடியாக தலையிட்டு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இது சம்பந்தப்பட்டவர்களை சஸ்பெண்ட் செய்யவேண்டும் என்றும், ஆகவே இந்தப் பிரச்சனை குறித்து விரிவான முறையில் விவாதிக்க இந்தப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் ; பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி போலீஸ் லாக்கப்பில் சாகடிக்கப்படுகிற சம்பவங்கள் தொடர்ச்சியாக வருவதற்கு முற்றுப்புள்ளி இட்டாகவேண்டும். பொதுவாக இந்த அவையில் போலீஸ்காரர்கள் பிரச்சனை வருகிறபோது போலீஸ் தரப்பிலிருந்து தரக்கூடிய ரிப்போர்ட்டை வைத்து அதை இங்கே வாசிப்பதும் அதன் அடிப்படையில் செயல்படக்கூடியதுமான நிலையை நாம் நிச்சயமாக பரிசீலிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஏற்கனவே ஒருவர் போலீஸ்



லாக்கப்பில் சாகிறபோது காடாவிளக்கில் இருக்கக்கூடிய மண்ணெண்ணையை விட்டுக்கொண்டு தற்கொலை செய்து கொண்டான் என்பதையும் நாலு, நாலரை அடி உயரத்தில் உள்ள ஜன்னலில் தான் உடுத்தியிருந்த வேஷ்டியை மாட்டிக்கொண்டு தூக்குப் போட்டுக் கொண்டான் என்றும் சொல்லப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது அவைமுன் இருக்ககூடிய பிரச்சினை பற்றிப் பேசுங்கள்.

திரு. ரா. கிருஷ்ணன் : ஆக, இப்படிப்பட்ட சால்ஜாப்புகள் சொல்வதெல்லாம் தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கிறது. அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்றால், பொதுவாக இடன்ராகேஷன், இன்வெஸ்டிகேஷன் என்று சொல்லுகிறபோது, நடவடிக்கைகள் மேற்கொள்ளும்போது, சில முறைகளை கையாள்வதை இந்த அரசாங்கம் கடைப்பிடித்தாக வேண்டும். அதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். அதேபோன்று . . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சபையை ஏன் ஒத்தி வைக்கவேண்டுமென்று சொல்லுங்கள். ஆலோசனை வேண்டாம்.

திரு. ரா. கிருஷ்ணன் : இதேமாதிரி சம்பந்தப்பட்ட காவல் துறையைச் சேர்ந்தவர்கள் அவர்கள்மீது செக்ஷன் 302 ஐ. பி. சி. அடிப்படையில் குற்றம் சாட்டும்போது அவர்கள் உண்மையிலேயே குற்றவாளிகளா, என்ன தவறுகளுக்காக பிடிபட்டான் அல்லது எந்த சூழ்நிலையில் ஏற்பட்டது என்பதைப் பார்க்கவேண்டும். இப்படி நடைபெறுவது தொடர்ந்து இருந்து வருவதால் இது சம்பந்தமாக முழுமையாக விசாரிக்க வேண்டுமென்றால், இதற்கு ஒரு ஜூடிசியல் என்கொயரி வைப்பது மிகவும் அவசியம். அதை நான் வலியுறுத்தி, இப்படிப்பட்டவைகள் தொடர்ச்சியாக நடைபெறுவதால், இதற்கு ஒரு தீர்வு காணவேண்டும், ஒரு முடிவு காணவேண்டும் என்ற வகையில், அந்த அடிப்படையில் இந்த அவையை ஒத்திவைக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இங்கே கடலூரிலே நடைபெற்ற, காவலிலே இருந்த ஒரு பையன் இறந்துபட்டதைப் பற்றி சில தகவல்களை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அரசுக்குக் கிடைக்கப் பெற்ற தகவலின்படி, திரு. வாசு என்ற வாய்முனி என்னும் 12 வயது பையன் கடலூர் பழைய டவுனில் உள்ள குட்டிக்கரைத் தெருவைச் சேர்ந்தவன். அவன் முன்பு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, இரண்டாண்டுகள் செங்கற்பட்டு, இளங்குற்றவாளிகள் பள்ளியில் ஜூன் 1977-ல் வைக்கப்பட்டிருந்தான்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1980 ஜூலை 21

15—7—1980 அன்று, கடலூர் பழைய டவுனில் உள்ள கிறித்துவர்கள் இடுகாட்டில் ஒரு டிபன் காரியரைக் திருட முயற்சித்தபோது அந்தச் சுடுகாட்டின் காவலர் தங்கவேலு என்பவரால் கையும் களவுமாகப் பிடிக்கப்பட்டு கடலூர் பழைய டவுன் காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டான். காவற் துறையினரின் பொறுப்பில் இருந்தான். தூக்குப் போட்டுக் கொண்டு இறந்துபட்டது மாலை 4 மணியளவில் தெரியவந்தது. அன்று இரவு இறந்த பையனின் பெற்றோர். உறவினர் மற்றும் பஞ்சாயத்தாருடன் சிதம்பரம் வருவாய் கோட்ட அலுவலர் பிணத்தை பார்வையிட்டனர். அப்போது பிணத்தில் வெளிப்புற காயங்கள் ஒன்றுமில்லை. அவரை அடைத்து வைக்கப்பட்டிருந்த அறையின் தென்புற வாயிலுக்கு மேலே உள்ள கம்பியில் வேட்டித் துண்டின் ஒரு முனையும், மறுமுனை கழுத்திலும் கட்டப்பட்டிருந்தது. நாக்கு வெளியில் நீட்டிக் கொண்டிருந்தது. பிணத்தை கீழே இறக்கிப் பார்த்த போது கழுத்தில் சுருக்கு விழுந்த அடையாளம் இருந்தது.

சிதம்பரம் வருவாய் கோட்ட அலுவலர் பிரேத விசாரணை செய்த பிறகு, உடலை பரிசோதனைக்கு அரசு தலைமை மருத்துவ மனைக்கு அனுப்பிவைத்தார். பையன் தூக்குப் போட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொண்டிருக்க வேண்டு மென்று பஞ்சாயத்தார்கள் கருதுகின்றனர்.

உதவி துணை ஆய்வாளர் (ஏ. எஸ். ஐ.) திரு. நடராசன் கைதியை ஒழுங்கான முறையில் காவலில் இருந்த காவலரிடம் ஒப்படைக்கவில்லை என்றும், காவலில் இருந்த காவலர் திரு. பார்த்தசாரதி சரியாக கைதியை கண்காணிக்கவில்லை என்றும் தெரிகிறது. இவர்கள் கடமையில் அசட்டையாக இருந்ததால், கைதி இறப்பதற்கு உதவியாக இருந்தது என்று தெரிகிறது. இவ்விருவரையும் தென்னாற்காடு காவல் துறை கண்காணிப் பாளர் தற்காலிக வேலை நீக்கம் செய்திருக்கிறார்.

இதுகுறித்து போலீஸ் நிலை ஆணை 145-ன்படி சிதம்பரம் வருவாய் துறை கோட்ட அதிகாரி ஒரு விசாரணை செய்து அறிக்கை அனுப்புமாறு மாவட்ட ஆட்சித் தலைவரால் பணிக்கப் பட்டுள்ளார். அவரது அறிக்கை கிடைத்த பின்பு அதனை பரிசீலனை செய்து அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும். இவ் விசாரணை அறிக்கை அரசுக்கு கிடைத்த பின்பே முழு விபரங் களும் தெரியவரும்.

ஆனால், காவலிலே ஆயிரக்கணக்கானவர்கள் இருந்தாலும், இந்த ஆயிரக்கணக்கானவர்களையும் காவல் துறையினர் கண்காணித்து வருகிறார்கள். எல்லா இடங்களிலும் இப்படிப் பட்ட நிலைமை தினமும் நடைபெற்றுக்கொண்டு வருகிறது என்றும் சொல்ல முடியாது. ஆனால், இங்கே இந்த துர்ப்பாக்



1980 ஜூலை 21] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கியமான சம்பவம் நடைபெற்றிருப்பது வருந்தத்தக்கதுதான். இதிலே, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுக்குக் கிடைத்த தகவல்களைச் சொல்கிறார்கள். நான் இங்கு எனக்குக் கிடைத்த தகவல்களை எடுத்துச் சொன்னேன். இதைப்பற்றி முழு விசாரணை செய்யவேண்டும். கோட்டாட்சித் தலைவர் இதற்காக பணிக்கப்பட்டிருக்கிறார். அந்த கோட் டாட்சித் தலைவரின் அறிக்கை வந்ததற்குப் பிறகுதான், தக்க நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும். ஆகவே, காவலிலே வைக்கப்பட்டிருக்கின்ற கைதியினுடைய உயிரையும், உடைமை களையும் பாதுகாத்துத் தர வேண்டியவர்கள், அவர்களைக் கண்காணிக்க வேண்டியவர்கள் காவல் துறையினர். இவர்கள் அவர்கள்மீது 24 மணி நேரமும் கண்பார்வை வைக்கவேண்டி யிருக்கிறது. இருந்தும், இப்படிப்பட்ட சம்பவம் நடைபெற்று வருகிறது. ஆகவே, காவலிலே இருக்கின்றவர்கள் அத்தனை பேர்களும் காவல்துறையினரால் தாக்கப்பட்டு இறந்தார்கள் என்றோ, அத்தனை பேர்களும் அடிக்கப்பட்டு செத்தார்கள் என்றோ ஒரு முடிவுக்கு வரமுடியாது.

[முற்பகல் 10—00]

ஒவ்வொரு வழக்கையும் தனித்தனியாக விசாரித்துப் பார்த்து உண்மை நிலையை ஆராய வேண்டும். காவலில் இருப்பவர்கள் காவல் துறையினரால் அடிக்கப்பட்டுதான் இறந்தார்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டால் அதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுக்கத் தயங்காது. விசாரணை முடிவு வந்த பிறகு முன், தன்மை தெரியும். அதன் பேரில் எடுக்க வேண்டிய நடவடிக் கையை இந்த அரசு எடுக்கத் தயங்காது.

அதற்கிடையில் கண்காணிக்க வேண்டியவர்கள் சரியாகப் பொறுப்பை நிறைவேற்றாததன் காரணமாக ஏ.எஸ்.ஐ. நட ராஜன் என்பவரையும், பார்த்தசாரதி என்பவரையும் இப்போது சஸ்பெண்ட் செய்து வைத்திருக்கிறார்கள். விசாரணை அறிக்கை வந்த பிறகு முறையான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும். இந்த அளவுக்குத்தான் இதுபற்றிய செய்திகளும் தகவல்களும் இருக்கிற காரணத்தால் அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கபடுவதால் அதிகமான அளவு விவரங்கள் கிடைத்துவிடப்போவதில்லை. எனவே, அவையை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லையென்று தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லையென்ற காரணத்தால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

## 4. தகவல் கோரல்.

### பேரவை நடைமுறை.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, இன்று நான் விடுதியிலிருந்து வெளிவந்தவுடன் என்னை போலீசார் கைது செய்து அழைத்துச்சென்றார்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுபோன்ற விஷயங்களையெல்லாம் திடீரென்று எழுந்து அவையிலே எழுப்புதல் கூடாது. அறையிலே வந்து என்னிடம் கூறவேண்டும். எழுத்து மூலமாக நடந்த சம்பவத்தை எழுதிக் கொடுத்து பிறகு, அனுமதிக்கப்பட்டால் அவையில் எழுப்ப வேண்டுமே தவிர, தனிப்பட்ட பிரச்சினைகளை இவ்வாறு திடீரென்று அவையில் எழுப்புதல் மரபல்ல.

திரு. மு. அம்பிகாபதி : இது ஒரு உறுப்பினருக்கு ஏற்பட்டப் பாதிப்பு, பேரவைத் தலைவர் அவர்கள் எங்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுபோன்ற விஷயங்களை அறையில் வந்து சொல்ல வேண்டுமே தவிர, அவையில் எழுப்புவது முறையாகாது. திரு. பழனிவேல் அவர்கள் முதலில் நடந்த சம்பவம் குறித்து என்னிடம் எழுதிக் கொடுக்க வேண்டும். உரிமை மீறல் பிரச்சினையாகக்கூட எழுதிக் கொடுக்கலாம்.

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன்: பேரவைத்தலைவர் அவர்களே, இந்த அவையில் எந்த ஒரு பிரச்சினை எழுப்பப்பட வேண்டுமென்றாலும் எந்த முறையில் எழுப்பப்பட வேண்டும், எந்த விதியின் கீழ் எழுப்பப்பட வேண்டும் என்பதற்கான விதிமுறைகள் இருக்கின்றன. அதன்படிதான் உறுப்பினர்கள் பிரச்சினைகளை மன்றத்தில் எழுப்ப வேண்டும். அவ்வாறு எழுதிக் கொடுத்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் அனுமதி தந்த பிறகு அதன்மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை மற்றொரு சாராரும் புரிந்துகொண்டு எடுக்க வாய்ப்பாக இருக்கும். அவ்வாறு இல்லாமல் இங்கே முன்கூட்டியே எழுப்பப்படுமானால் எழுப்புகிறவர் மட்டுந்தான் பிரச்சினையைத் தெரிந்தவராக இருப்பார், பதில் சொல்லுகிறவரிடமிருந்து உறுப்பினர்கள் விரும்புகிற பதில் வராது. உரிமைப் பிரச்சினை என்று எழுதிக் கொடுத்தால் உடனடியாகக் கிளப்பலாம். ஆகவே, பிரச்சினையை எழுதிக் கொடுத்து பேரவைத் தலைவர் அனுமதி தந்த பிறகு கருத்தை எடுத்துக் கூறினால் பதில் சொல்ல வாய்ப்பு ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. கு. ரமணி ; அவை முன்னவர் அவர்கள் சொல்லக்கூடிய முறைகளில் எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. ஆனால், இந்த அவைக்கு வந்து கொண்டிருக்கக்கூடிய ஒரு அங்கத்தினருக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய, யாரும் எதிர்பாராமல் நடந்த மோசமான நிலையை.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நடந்துவிட்ட நிகழ்ச்சி மோசமானதா அல்லது நல்லதா என்பதை இரண்டு பேரும் பேசித்தான் அறிந்து கொள்ள முடியும். திடீரென்று சபையிலே பிரச்சினையைச் சொல்லுவதன் மூலம் அதற்கு ஒரு முடிவு காண முடியாது. நான் காலை 8 மணிக்கே அலுவலகத்திற்கு வந்துவிட்டேன். அப்போதே கூட என்னைச் சந்தித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நடந்த நிகழ்ச்சி பற்றித் தெரிவித்திருக்கலாம்.

திரு. என். பழனிவேல் : எட்டு மணிக்கு நான் போலீஸ் ஸ்டேஷனில் இருந்தேன்.

## 5. கவன ஈர்ப்புகள்.

### (அ) மீனவர்களுக்கு கச்சத்தீவு அருகில் ஏற்படும் இன்னல்கள்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, " கச்சத்தீவு அருகில் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்களை இலங்கை கடற்படையினர் அடிக்கடி கைது செய்வது, சுட்டுக் கொல்வது பற்றிய" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் தலைவர் அவர்களே, இந்தியா, இலங்கை ஆகிய இரு நாடுகளுக்குமிடையே 1974 ஜுன் திங்களில் ஒன்றும், 1976 மார்ச்சுத் திங்களில் ஒன்றும், ஆக இரண்டு கடல் எல்லை நிர்ணய ஒப்பந்தங்கள் ஏற்பட்டன. கச்சத்தீவு, ஆதம்பாலத்திலிருந்து (Adams Bridge) பாக் ஜலசந்தி ( Palk Strait ) வரையிலுள்ள கடல் பரப்பில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையேயுள்ள எல்லையிலிருந்து இரண்டு மைல் தூரத்திலும் இராமேஸ்வரத்திலிருந்து ஏறத்தாழ 8 மைல் தூரத்திலுமுள்ளது. இந்த வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் இந்திய நாட்டு மீனவர்களும், புனிதப் பயணம் மேற்கொள்வோரும் மேற்படி ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன் சென்றுவந்தது

போலவே இனியும் கச்சத்தீவுக்குச் சென்று வரலாம். அதற்காக
அவர்கள் பயண ஆவணங்களும் இசைவு ஆணைகளும் (Travel
documents or visa) இலங்கை அரசிடமிருந்து பெற வேண்
டியதில்லை. இந்நாட்டு மீனவர்கள் அங்கு சென்று வலைகளை
வேண்டுமானால் உலர்த்தலாமே ஒழிய கச்சத்தீவுவைச் சுற்றி
மீன் பிடிக்கலாகாது.

கச்சத் தீவு பகுதியில் வடகிழக்குப் பருவக் காற்று காலங்
களில் அதாவது அக்டோபர்—ஜனவரி வரை இரால் மீன்கள்
மிகுதியாகக் கிடைக்கும். இந்திய கடல் எல்லையில் அதிகம்
பாறைகள் இருப்பதால் நமது எல்லையில் டிரால் வலைகளைப்
பயன்படுத்தி இரால் பிடிக்க இயலாது. ஆகவே, இராமேஸ்வரம்
மீனவர்கள் இலங்கைப் பகுதியில் உள்ள கச்சத்தீவுக்கு நெடுந்
தூரம் சென்று கடலில் மீன் பிடிக்கச் செல்கிறார்கள். இராமேஸ்
வரம் மீனவர்கள் இந்திய கடல் எல்லையைத் தாண்டி இலங்கைப்
பகுதிக்குச் சென்று மீன் பிடிக்குங்கால், இலங்கைக் கடற்படை
யினர் நம் மீனவர்களின் வலைகள், படகுகள், இரால்கள் ஆகிய
வற்றை பறிமுதல் செய்வதால் பெருமளவு இந்திய மீன
வர்களுக்கு இழப்பு ஏற்படுகிறது.

1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 5 ஆம் நாள் அன்று
கச்சத்தீவு திருவிழாவின்போது ஏறத்தாழ 60 இந்திய மீன்பிடி
படகுகள் பன்னாட்டுக் கடல் எல்லையைத் தாண்டி இலங்கைப்
பகுதிக்குச் சென்று மீன்பிடித்ததால் அந்தப் படகுகள் இலங்கை
கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன. பின்பு, இந்திய
கடற்கரைப் பாதுகாப்புப்படையினரின் வேண்டுகோளுக்கிணங்க,
60 படகுகளில், 58 படகுகள் நிபந்தனையின்றி விடுவிக்கப்பட்
டன. எஞ்சிய இரண்டு படகுகளும் அடிக்கடி பன்னாட்டு கடல்
எல்லையைத் தாண்டி வந்து மீன்பிடிப்பவை என்று புகார் கூறப்
பட்டது. இந்த இரண்டு படகுகளில், ஒன்று பழுதடைந்திருந்
தது. இலங்கை கடற்படையினரின் பாதுகாப்பில் இருந்தபோது
அப்படகு கடலில் மூழ்கிவிட்டது. அப்படகிலிருந்தவர்களை,
மீட்டு, மற்றொரு படகிலேற்றி தமிழ் நாட்டுக் கடற்கரை சேர்க்
கப்பட்டதாக இந்திய கடற்கரைப் பாதுகாப்புப் படையினர் கூறி
யுள்ளனர்.

1974 ஆம் ஆண்டில் கச்சத்தீவு இலங்கையிடம் ஒப்படைக்
கப்பட்டது. எனவே, மறுபடியும் கச்சத்தீவுக்குச்சென்று மீன்
பிடிப்பது சரியல்ல. ஆகவே, இராமேஸ்வரம் பகுதியிலுள்ள ஒவ்
வொரு மீனவரும் இதைப்புரிந்துகொண்டு இனிமேல் பன்னாட்டு
கடல் எல்லையைத் தாண்டி இரு நாடுகளுக்குமிடையே ஏற்பட்ட
ஒப்பந்தத்திற்கு மாறாக இலங்கை கடல் எல்லையில் மீன்பிடிக்கச்
செல்லாமல் இருக்க வேண்டும்.



இந்திய கடல் எல்லையைத் தாண்டி இலங்கைப் பகுதிக்
குச் சென்று மீன்பிடிக்காமல் இருக்க இராமேஸ்வரம் மீனவர்
களுக்கும் சம்பந்தப்பட்ட மீனவர் சங்கங்களுக்கும் தக்க அறிவுரை
வழங்கும்படி மீண்டும் இராமேஸ்வரம், இராமநாதபுரம் மீன்
துறை உதவி இயக்குநர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

இதுவரை தமிழ் நாட்டில் எந்தப் பகுதியைச் சேர்ந்த
மீனவரும் இலங்கை கடற்படையினரால் சுடப்பட்டு கொல்லப்பட
வில்லை. ஆதலின் இராமேஸ்வரம் மீனவர்கள் இலங்கை கடற்
படையினரால் சுட்டுக்கொல்லப் படுகின்றனர் என்ற கூற்று ஆதார
மற்றதாகும்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, கச்சத் தீவு மிக
முக்கியமான தீவு, நீண்ட நாட்களாக தொடர்ந்து அது நம்
முடைய அனுபவத்திலே இருந்து வந்தது. அந்தத் தீவிற்குப்
பக்கத்திலே இரால் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. அப்படி.
நம்முடைய மீனவர்கள் அந்த மீன்களைப் பிடிக்கிற நேரத்திலே
இலங்கை கடற் படையினர் அவர்களை சுட்டுக் கொன்று விட்ட
னர். எந்தவிதமான தகவலும் இல்லாமல் முடிவு எடுத்து விட்
டார்கள். தொடர்ந்து இப்படி நடப்பதற்குக் காரணம் என்ன ?
திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியிலேதான் அந்தத்
தீவு இலங்கைக்கு தானம் செய்யப்பட்டது. இனிமேல் அப்படிப்
பட்ட நிலைமைகள் ஏற்பட்டால் அதைத் தடுத்து நிறுத்தக்கூடிய
முறையிலே அந்த மீனவர்களைப் பாதுகாக்கக் கூடிய முறையிலே
அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர்
அவர்களே, இந்த கச்சத் தீவுப் பிரச்சினை முடிந்துவிட்ட ஒன்று,
இந்திய சர்க்காரால் முடிவு செய்யப்பட்ட ஒன்று. இந்தியா,
இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கிடையே 1974-ம் ஆண்டு
ஜூன் திங்களில் ஒன்றும், 1976-ம் ஆண்டு மார்ச்சுத் திங்களில்
ஒன்றும் ஆக இரண்டு கடல் எல்லை நிர்ணய ஒப்பந்தங்கள்
ஏற்பட்டன. கச்சத்தீவு இந்தியாவுக்குச் சொந்தமா, இலங்
கைக்குச் சொந்தமா என்ற பிரச்சினை எழுந்து மத்திய அரசு
அது இலங்கைக்குச் சொந்தம் என்று அறிவித்து விட்டது. திராவிட
முன்னேற்றக் கழகம் அப்போது ஆட்சியிலே இருந்தாலும்
அதற்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறுப்பல்ல,
அதற்கு மத்திய அரசுதான் பொறுப்பு, அப்போதே கூட கட்சி
வேறுபாடுகள் இல்லாமல் அனைத்துக்கட்சியினரும் சேர்ந்து அது
இந்தியாவுக்குத்தான் சொந்தமென்று வரலாற்றுக் காரணங்களை
எல்லாம் காட்டினார்கள். மத்திய அரசு ஒரு முடிவை எடுத்
தார்கள். அந்த முடிவின்படி திருவிழாக் காலங்களிலே அவர்கள்
தொடர்ந்து அங்கே போய்க் கொண்டு வரலாம். விசா வேண்டிய
தில்லை, மீனவர்கள் கச்சத் தீவில் மீன் வலைகளை உலர்த்தலாம்.

அங்கே உள்ள இறால் மீன்களைப் பிடிப்பதற்கு உரிமை இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய மீனவர்கள் சிலர் அந்த எல்லையையும் மீறிப் போய்விடுகிறார்கள். அந்த முறையிலே தான் 60 படகுகள் பிடிக்கப்பட்டன. அதற்குப் பிறகு நாம் வேண்டுகோள் விட்டதற்குப் பிறகு அவைகளிலே 58 படகுகள் விடுவிக்கப்பட்டன. இரண்டு படகுகளில் ஒன்று பழுதுபட்டுப் போனதன் காரணமாக அது மூழ்கிவிட்டது. அதிலே இருந்தவர்களும் மற்றொரு படகிலே ஏற்றி அனுப்பப்பட்டனர். அந்த எல்லைக்கு அப்பால் போக வேண்டாமென்று அவர்கள் சொல்லப்பட்டிருக்கிறார்கள். மீனளத் துறையும், அவர்களுக்கு அதைப் பற்றிச் சொல்லியிருக்கிறது. ஆகவே அவர்களை கைது செய்து வைத்தது உண்மை, சுட்ட நிகழ்ச்சிகள் எதுவும் நடைபெறவில்லை. எல்லையைத் தாண்டுகிற போது தான் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றனவே தவிர வேறு அல்ல.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, தரையிலே தான் எல்லைக் கோடு உள்ளது, கடலிலே எல்லை கிடையாது. கடற்படை நிறுத்தப்பட்டு உள்ளது அங்கே. எல்லைக்கு அப்பால் அவர்கள் போய் இறால் மீன் பிடிப்பது இல்லை, சாதாரண மீன்களை அவர்கள் பிடிக்கிற நேரத்திலே வாட்டர் கரண்டால் இழுத்துச் செல்லப்பட்டு, அல்லது காற்றின் காரணமாக அந்த எல்லைக்கு அப்பால் அடித்துச் செல்லப்பட்டுத்தான் அங்கே போகிறார்களே தவிர—எதிர்பாராத இயற்கைச் சீற்றங்களால் அவர்கள் அந்தப் பக்கத்திற்குத் தள்ளப்படுகிறார்களே தவிர—அவர்களாகப் போவதில்லை. அப்போது அவர்கள் கைது செய்யப்படவில்லை, சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அப்படித்தான் எனக்கு இராமேஸ்வரத்திலிருந்து தகவல் வந்திருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் மீண்டும் வராத முறையிலே அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று சில எதிர்பாராத காரணங்களினால் போனார்கள் என்றுதான், நம்முடைய கடற் படையினர் அதிலே 58 படகுகளை மீட்க முடிந்தது. இப்படி மீனவர்கள் செய்யாமல் இருக்குமாறு அவர்கள் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். நம்முடைய மீனளத்துறையும் அறிவுறுத்தியிருக்கிறது. எதிர்பாராத சம்பவங்களால் நடந்து விட்டது, அவர்களைச் சுட்டுக் கொல்லவில்லை. கைது செய்தார்கள் என்ற தகவல் கிடைத்து இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போன்ற நிலைமை இருக்குமானால் அதைப்பற்றி நாம் இந்திய அரசுக்கு எழுதி பிறகு அவர்கள் அதை இலங்கைக்கு எழுதியனுப்பித்தான் பரிகாரம் காண வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அதைப்பற்றி கவனத்திற்குக்



கொண்டு வந்தால் அதை இந்திய அரசுக்கு எழுதி அதன் மூலமாக நடவடிக்கை எடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (ஆ) சென்னை நகரில் கொசுக்கள் தொல்லை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 54 வது விதியின்கீழ் திருவாளர்கள் இரா. தாமரைக்கனி, சு. பாலன் ஆகியோர் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு திரு. சு. பாலன் கொண்டு வருவார்கள்.

[முற்பகல் 10–10]

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, '' சென்னையில் சில பகுதிகளில் கொசுத் தொல்லை அதிகமாய் உள்ளது பற்றிய'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவரவர்களே, சென்னை மாநகரத்தில் கொசுத் தொல்லையை ஒழிக்க கொசு ஒழிப்புத் திட்டம் (Anti Mosquito Scheme), தேசிய யானைக்கால் நோய் தடுப்புத் திட்டம் (National Filaria Control Programme) மற்றும் நகர்ப்புற மலேரியா திட்டம் (Urban Malaria Scheme) ஆகிய மூன்று திட்டங்களின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

கழிவுநீர்க் குழாய்கள், மழைநீர் வடிகால் குழாய்கள், சென்னை நகரத்தில் ஓடும் கூவம், ஓட்டேரிக் கால்வாய், திறந்துள்ள கிணறுகள், சரியாக மூடப்படாத மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் இவைகளினால் கொசுக்கள் பெருமளவில் வளருகின்றன. இக் கொசுத் தொல்லையைக் கட்டுப்படுத்த சென்னை மாநகராட்சி, சென்னைப் பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீர் வாரியம் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளின் ஒத்துழைப்புடன் தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. சென்னை நகரை 25 வட்டங்கள் உடைய 6 பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவிற்கும் ஒரு உதவி சுகாதார அலுவலரை நியமித்து கொசு ஒழிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கொசுக்கள் உண்டாகும் இடங்களில் கொசு ஒழிப்புக்கான மருந்து அடித்தல், கழிவுநீர்க் குழாய்கள், வடிநீர்க் குழாய்களில் தூர் எடுத்தல், முதலிய பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இது தவிர, மத்திய அரசால் வழங்கப்பட்ட சாதனத்தின் மூலம் சென்னையின் பல பகுதிகளில் மலேரியா கொசுவை ஒழிக்க Thermo-fogging எனப்படும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

[1980 ஜூலை 21

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்லும் நேரத்தில் அம்மை நோய், மற்ற நோய்கள் தடுக்கப்படுவதைப் போல கொசுத் தொல்லைகளை ஒழிக்கத் தீவிர நடவடிக்கை இருப்பதாகச் சொல்கிறார்கள். 1977-ம் ஆண்டு ' ஹை லெவல் எக்ஸ்பர்ட் கமிட்டி ' என்று ஏற்படுத்தி, அந்தக் கமிட்டி, பல இலட்ச ரூபாய்களை இங்கே செலவு செய்ய பல சிபாரிசுகளைச் செய்திருக்கிறது. அந்த சிபாரிசுகளின் அடிப்படையிலே நடவடிக்கை எடுப்பதற்கு ஏன் தவறியிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். அதே போன்று, 1980-ம் ஆண்டு ஏப்ரல் 16 முதல் 23ஆம் தேதி வரையில் சென்னை மாநகராட்சியில் தனி அதிகாரி அவர்கள் பம்பாயிலேயிருந்து கோபாங்கர் என்ற அந்தத் துறை யின் வல்லுநரை அழைத்து வந்து பல திட்டங்களைத் தந்திருக் கிறார்கள். அந்த வகையில் நடவடிக்கை எடுத்திருந்தால், கொசுக்களை ஒழிக்க முடியும் என்று சொல்லப்படுகிறது. அது மட்டுமல்லாமல் சென்னையிலேயே சிங்பாக் என்ற மெஷின்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கம் பெற கேள்வி கேட்க வேண்டும் ; உரை ஆற்றக் கூடாது.

திரு. சு. பாலன் : சென்னை மாநகராட்சியில், கொசுக் களை ஒழிப்பதற்காக பல ஆயிரம் ரூபாய் செலவு செய்து சிங்பாக் என்று வாங்கிய மெஷின் இருந்தது. அது இப்பொழுது வேலை செய்யவில்லை என்று சொல்கிறார்கள். அந்த மெஷின் வேலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலை வரவர்களே, இவர்களுடைய பரிந்துரையின் அடிப்படையிலே தான் இப்பொழுது தெர்மோஃபாகிங் என்று அறிக்கையிலே சொன்னேனே, அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ' மாலதி யான் ' என்ற மருந்து இருக்கிறது. அதைப் போட்டு உடனடி யாகப் புகையாக ஆக்கி கொசுக்களை ஒழிப்பதற்கான புது இயந்திரம் இருக்கிறது. ஆனால் அதில் பற்றாக்குறை இருக்கிறது. பல்வேறு பகுதிகளுக்கும்—ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு இயந்திரம் கொடுக்க வேண்டுமென்றால் இன்னும் வாங்க வேண்டியிருக்கிறது. எனவே, இன்னும் ஜாஸ்தியாக வாங்கலாமா என்று யோசனை செய்து கொண்டிருக்கிறோம். இப்பொழுதுள்ள பிரச்சினை என்னவென்றால், தனியார் வீடுகளிலே செஸ்பூல்களிலே கொசு உற்பத்தி நடந்து கொண்டிருக்கிறது. மாநகராட்சியாக இருந் தாலும், மருத்துவ இலாகாவாக இருந்தாலும், தனியார் வீடுகளிலே கொசுக்கள் உற்பத்தியாவதை ஐடென்டிஃபை செய்து, செஸ்பூல்களை கிளீன் செய்ய உள்ளே செல்லக் கூடாது என்ற நிலையிருக்கிறது. ஆனால் பம்பாயிலே இவ்வாறு செய்கிறார்கள். அங்கே ஸ்டாச்சுடரியாக, மான்டேட்டரியாகச் சென்று கண் காணிக்கச் சட்டம் இருக்கிறது.



1980 ஜூலை 21] [டாக்டர் எச். வி. ஹண்டே]

ஆகவே, தனியார் வீடுகளிலே கொசு லார்வா உற்பத்தி யாகி, மற்ற வீடுகளுக்கெல்லாம் போய்க் கொண்டிருக்கிறது. ஆகவே, அதையெல்லாம் தடுத்து, ஒட்டுமொத்தமாக, சரியான பரிகாரம் காண வேண்டுமென்றால், நான் கருதுவது, 3 இலாகாக்கள் இதிலே சம்பந்தப்பட்டிருக்கின்றன. நம்முடைய அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்கள் இங்கே இருக்கிறார் கள். அவருடைய இலாகாவும், பொதுச் சுகாதார இலா காவும், மற்றும் மெட்ரோபாலிட்டன் அத்தாரிட்டியும் சேர்ந்து, 3 இலாகாகளும் சேர்ந்து, நல்ல அருமையான திட்டம் போட்டு, கிராஷ் புரோகிராம் போல் போட்டு, பணிகளைச் செய்தால் நன்றாக இருக்கும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொன்ன மாதிரியாக அதற்கு ஆவன செய்ய நான் தயாராக இருக்கிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிற நேரத்திலே, அங்கங்கே பங்களாக்களில் தண்ணீரை அகற்றுவதற்கு ஏற்பாடு செய்வ தாகச் சொல்கிறார்கள். என்னுடைய பெரம்பூரில் ஒட்டேரி நல்லா என்ற கால்வாய் இருக்கிறது. அதில் தண்ணீர் அப்படியே தேங்கி நிற்கிறது. அதனால், கொசுவை ஒட்ட வழியில்லை. முன்பு கொசு ஒழிப்பிற்காக சீனியர் என்டமா லாஜிஸ்ட் என்ற அதிகாரி, அந்தப் பணியைச் செய்து வந்தார். இப்பொழுது அந்த அதிகாரியை மாற்றியிருப்பதாகத் தெரி கிறது. ஆகவே, அந்தப் பணியைச் செய்ய யாரும் இல்லை. அதனால், அவர் செய்து வந்த பணியை வேறு ஒருவரிடம் ஒப்படைக்க அரசு முயற்சி செய்யுமா என்று அறியவிரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, தற்பொழுது எடுத்துக் கொண்டு வருகிற நடவடிக்கை போதுமா என்ற கேள்வி வருகிற நேரத்தில், அதை இன்னும் விரிவுபடுத்தினால், துரிதப்படுத்தினால் நன்றாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. ஆகவே, எனக்கு முழுமையாகத் திருப்தி இருக்கிறதா என்றால், முழுமையாகத் திருப்தி இல்லை. அதை ஒத்துக்கொண்டாக வேண்டும். ஆகவே, முழுமையாக திருப்தி அளிக்கக்கூடிய வகையில், என்ன என்ன செய்யலாம் என்று தனிக் கவனம் செலுத்தி, உடனடி யாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஏனென்றால், இது எல்லோரையும் பாதிக்கின்றது. என்னையும் பாதிக் கிறது, உங்களையும் பாதிக்கிறது, எல்லோரையும் பாதிக்கிறது, ஒரு சாராரை மட்டும் அல்ல. ஆகவே தான், உடனடியாக, 25 சோனல்களாகப் பிரித்து, அதற்கு சோனல் அதிகாரி என்று போட்டு, உடனடியாக ஒவ்வொரு பகுதியையும் ஐடன்டிஃபை செய்துவிட்டு, அதைத் தடுக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்று நாம் யோசித்துக் கொண்டிருக்கிறோம்

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்
களே, சென்னை மாநகரம், கூவம் ஆற்றிலிருந்து உற்பத்தி
யாகிற கொசுவினால் மிகவும் பாதிக்கப்படுகிறது. அந்தக்
கூவம் ஆற்றிலிருந்து உற்பத்தியாகிற கொசு முதல் தாக்குதல்
நடத்துவது, எம். எல். ஏ. ஆஸ்டல் உணவு விடுதியையும்,
அடுத்து, எம். எல். ஏ.க்கள் அறையையும்தான். எம்.எல்.ஏ.
ஆஸ்டல் உணவு விடுதியைத் தாக்குவதால், உணவுப் பொருள்
கள் பாதிக்கப்பட்டு, அதனால், பல சட்டமன்ற உறுப்பினர்
கள் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஒருவர்
வாந்தி எடுத்திருக்கிறார். இன்னும் பலர் பாதிக்கப்பட்டு,
ஆஸ்பத்திரியில் சேர்க்கப்படக் கூடிய தருவாயிலிருக்கிறார்கள்.
இரவில் தூங்க முடியவில்லை. நேற்றுகூட. கொசு என்
கழுத்தில் கடித்து விட்டது. இதனால், எம். எல். ஏ.
ஆஸ்டலில் தங்கவே முடியவில்லை. மாண்புமிகு பேரவைத்
தலைவர் கூட, கொசுத் தொல்லைக்குப் பயந்துதான், 'கூவம்
வீட்டில்' குடியிருக்காமல், சாந்தோமில் தங்கியிருக்கிறார்கள்
ஆகவே, அங்கு கொசுவை ஒழிக்கத் தீவிர முயற்சி எடுக்கப்
படுமா?

அதோடு, இரண்டு வருஷத்திற்கு ஒரு முறையாவது,
கொசுவால் பாதிக்கப்படுகிற சென்னை மாநகர மக்களுக்கு
ஃப்ரீயாக கொசு வலைக் கொடுக்க அரசு முன்வருமா, சென்னை
மாநகர மக்களைப் பாதிப்பதற்கு மூலகாரணமாகவுள்ள கொசுவை
ஒழிப்பதற்காக, அரசு ஒரு மாநாடு நடத்த முன்வருமா என்று
அறிய விரும்புகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் கூவம்
வீட்டில் குடியிருக்காமல் சாந்தோமில் தங்கியிருக்கிறார்களே,
ஏன் ?........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவன ஈர்ப்புத்
தீர்மானம் கொடுத்த உறுப்பினர்கள் கேள்வி கேட்க முடியும்.
நீங்கள் குறுக்கிட முடியாது. கொசு கடிப்பதே போதும்
நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர்
அவர்களே, கொசுக்களே மாநாடு நடத்துகின்றன.
அதைப் பற்றி மாநாடு தேவையில்லையென்றுதான் ஆகவே,
கிறேன். (சிரிப்பு) இங்கே, மாண்புமிகு கருது
குறிப்பிட்ட பிரச்னையை இரண்டாகப் உறுப்பினர்
மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி பிரிக்கமுடியும்.
வந்தது என்று சொன்னார்கள். அது கொசுவால் அவர்கள் வாந்தி
அது ஈக்களால் வருவது. ஆனால், அதைச் வருவதல்ல.
டைத் தட்டிக் கழிக்க நான் சொல்லி, பொறுப்
தேவையான நடவடிக்கைகளை விரும்பவில்லை. அதற்குத்
எடுக்கிறோம். கொசுக்கள்



சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலே மட்டும் அல்ல, எல்லா
இடங்களிலும் இருக்கின்றன். ஆங்கிலத்திலே சொல்வதானால்,
கொசு ஒரு சோஷலிஸ்ட். ஏற்றத்தாழ்வற்ற நிலையில் அது
எல்லா இடத்திலும் பரவியிருக்கிறது. பணக்காரன் வீட்டிலும்
இருக்கிறது, ஏழையின் வீட்டிலும் இருக்கிறது. ஆகவே, அது
தனியாக ஒரு பகுதியில் மட்டும் தாக்குதல் நடத்துகிறது
என்று உறுப்பினர் சொன்னதற்காக, அதைச் சொல்கிறேன்.
அது பரவலாகப் பரவிக் கொண்டிருக்கிறது என்பதற்காகச்
சொல்கிறேன். ஆகவே, அதைத் தடுப்பதற்கு உடனடியாக
நடவடிக்கைகள் எடுப்பதற்காக

Weckly p'og'amme o' sp aying the sto:m water d:ainal
the c.s3 pools and septic tanks are done with M. L.O.C
This is done in coordination with the storm water drains
des*lting operation. For the control of Anophcline larsv
t.m)'ns or pa is g een is used. Fogging is done in place
whe'e complaints about mosquitoe nuisance are received
and also in houses from wdere positive cases of malaria
are reported. Fogging is aeing caraied out with a Fog
Van machine using pyathum exttract 2 with diesel ci,
Detecti n of Malaria cases a e being carried out by active
and passive surveillance and those who are fovnd positive
a c given radical treatment for three days.

ஆனால், இந்த கொசுக்களினாலே பரவக்கூடிய பைலே
ரியா, மலேரியா போன்ற நோய்களில் இருந்து நம்மைக்
காப்பாற்றிக்கொள்ள வேண்டும். அதற்காக,

Basic Health Workers 100 ; Basic Health Inspectors 25
Health Inspectors 48 (UMS 8 plus NFCF 40); A.M.G.
Th zhilalics 166 N.M.E.P. 20 N.F.C.P. 209 ; Mazdoor 400
Head Mazdoor 80.

இப்படி, விரிவுபடுத்தி, கொசுவை ஒழிப்பதற்காக இருக்கிற
மாபெரும் திட்டத்தை நாம் நடைமுறைப்படுத்திக் கொண்டு
இருக்கிறோம் என்ற மகிழ்ச்சியான செய்தியை, இந்த
மன்றத்திற்கு, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மூலம்
தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 10-20]

6 வரவு-செலவு திட்டம். 1980-81—வாக்கெடுப்பு (தொடர்ச்சி.)

(அ) கோரிக்கை எண். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.

(ஆ) கோரிக்கை எண். 34—நகர்ப்பகுதி வளர்ச்சி.

(இ) கோரிக்கை எண். 39—சாலைகளும் பாலங்களும்.

(ஈ) கோரிக்கை எண். 52—சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.

கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

" மானியக் கோரிக்கை எண். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ரூ. 67,74,30,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்;—

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா நகரங்கள், கிராமங்கள், பேரூராட்சிகளில் குறைந்த பட்சம் பெண்களுக்கு கழிப்பிட வசதிகள் கட்டிக் கொடுக்க படாமலிருப்பது பற்றி விவாதிக்க,

" மானியக் கோரிக்கை எண். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 67,74,30,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

என்றவெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, பெருந்துறை தொகுதி பள்ளிபாளையம் பேரூராட்சி, பள்ளிபாளையத்தில் ஆரம்பப் பள்ளி கட்டுவது சம்பந்தமாக விவாதிக்க,

" மானியக் கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 67,74,30,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.



திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே,

To discuss policy, I move——

That the allotment of Rs. 67,74,30,000 under Demand No. 28—Community Development Projects, etc., be reduced by Rs. 100.

கோரிக்கை எண் : 34—நகர்ப் பகுதி வளர்ச்சி.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

" மானியக் கோரிக்கை எண் 34—நகர்ப் பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின் கீழ் ரூ. 11,81,68,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியில் புதிதாக சேர்க்கப்பட்ட நகரப்பகுதியின் வளர்ச்சிக்காக அதிக கவனம் செலுத்தவேண்டும் என்ற கோரிக்கை அலைக்கழிப்பது குறித்து விவாதிக்க—

" மானியக் கோரிக்கை எண் 34—நகர்ப் பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,81,68,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும் "

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, நகராட்சி மன்றங்களின் தேர்தலை உடனடியாக நடத்துவது பற்றி விவாதிக்க,

"மானியக் கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,81,68,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

கோரிக்கை எண் : 39—சாலைகளும் பாலங்களும்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"மானியக் கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 50,68,33,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

[1980 ஜூலை 21

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, மாயூரம் மணல்மேட்டிற்கும்— காட்டுமன்னார் கோவிலுக்கும் இடையே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ஒரு தரையடிப்பாலம் அமைத்திடுவது பற்றி குறிப்பிடாமை குறித்து விவாதிக்க:—

''மானியக் கோரிக்கை எண் 39-சாலைகளும் பாலங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 50,62,33,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, கோவையில் இருந்து செல்லும் திருச்சி சாலையில் ஒண்டிபுதூர் ரெயில்வே கிராசிங்கிக்கு மேம்பாலம் கட்ட ஏற்பாடு செய்யப்படாமலிருப்பது குறித்து விவாதிக்க —

''மானியக் கோரிக்கை எண் 39-சாலைகளும் பாலங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 50,62,33 000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

கோரிக்கை எண்: 52 சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவா அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

'' மானியக் கோரிக்கை எண் 52-சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு '' என்ற தலைப்பின் கீழ் ரூ. 11,54,41,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்''.

திரு. சு. பாலன் : பேரவை தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க —

''மானியக் கோரிக்கை எண் 52-சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,54,41,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்'' என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி தாலுக்கா, காசிக்குவாயத்தான் ஓடை, கடங்குநேரி வெள்ளோடை போக்குவரத்து பாலம் கட்டாதது பற்றி விவாதிக்க—

''மானியக் கோரிக்கை எண் 52-சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,54,41,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.



1980 ஜூலை 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் முன்னால் நான்கு மானியக் கோரிக்கைகளின் அடிப்படையில் ''சமுதாய நல வளர்ச்சி திட்டங்கள் முதலியன '', ''நகர்ப் பகுதி வளர்ச்சி'', ''சாலைகளும் பாலங்களும்'', மற்றும் ''சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு'' ஆகியவற்றின் மீதான கொள்கைக்குறிப்புகள் புத்தக வடிவத்தில் இரண்டு நாட்களுக்கு முன்பே இங்கே கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அந்தப் புத்தகத்திலே இருக்கின்ற கொள்கை குறிப்புகளை@ எல்லாம் நான் படித்ததாக ஏற்றுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் மேலான கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், எனது கருத்துக்களைத் தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, அவை முன் உள்ள மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய சில கருத்துக்களைத் தாழ்மையாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த மாமன்றத்தில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கும்போது, வள்ளுவர் பெருந்தகையின்

''இயற்றலும் ஈட்டலும் காத்தலும்—காத்த
வகுத்தலும் வல்ல தரசு''

என்ற குறளை மேற்கோள்காட்டி, தனக்குப் பொருள்கள் வரும் வழிகளை மேலும் மேலும் உருவாக்குதல், அவ்வாறு வந்தவற்றைப் பேணிக்காத்தல், காத்தவற்றை அறநெறிவழிச் செலவிடுதல் ஆகிய இலக்கணத்தை இந்த அரசு கடைப்பிடிப்பதாகப் பெருந்தன்மையோடு அறிவித்தார்கள். எனவே அதை ஒட்டி இங்கே நான் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவை தன்னிறைவு காணாத நிலையில் தேவையான திட்டங்களை நிறைவேற்றிக்கொள்ள இயலாமல் இருக்கின்றன. அவைகளுக்கு நிதி வருவாய்களைப் பெருக்கிட சில,பல முறைகளைக் கையாள அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நகராட்சிகள் வருவாய் இனத்தை உயர்த்தத்தக்க விதத்தில் நகராட்சிகளுக்குச்

---

@183—316 பக்கங்களில் இணைப்பு I, II, III ஆக அச்சிடப் பெற்றுள்ளன.

[திரு. என். கிட்டப்பா] [1980 ஜூலை 21

சொந்தமான கடைகள், மார்க்கெட்டுகள், பேருந்து நிலையத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை ஆகியவற்றைத் தனியாருக்குக் குத்தகை விடாமல் நகராட்சியே ஏற்று நடத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சி மன்றப் பேருந்து நிலையங்களில் கட்டணக் கழிப்பிடங்கள் அமைக்கப்படும்போது, குளிக்கும் அறைகளையும் கட்டவேண்டும். அதற்குக் கட்டணம் வசூலிப்பதன் மூலம் மேலும் ஓரளவிற்கு வருமானம் நகராட்சிகளுக்கு வரும்.

ஏழை எளிய மக்களுக்குப் பயன்படும் வகையிலும், நகராட்சிகள் வருவாய் பெறத் தக்க விதத்திலும் 'திருமணக் கூடங்கள்' அமைக்கப்பட வேண்டும். தற்போது சில இடங்களில் இருக்கின்றன என்று சொன்னாலும், எல்லா நகராட்சிகளிலும் இந்தத் திருமணக் கூடங்கள் அமைக்கவேண்டும். இதனால் நகராட்சிகளுக்கு வருமானம் வரும் என்பதோடு மாத்திரமல்லாமல், குறைந்த கட்டணத்தில் அளிக்கவும் முடியும். அதனால் ஏழை எளிய மக்கள் பயன்பெற முடியும். ஆகவே, அதற்கு அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வருவாய் அதிகமாக உள்ள நகராட்சிகள் திரைப்பட அரங்குகள் அமைத்திட அரசாங்கம் அனுமதி அளிக்க வேண்டும் என்று கோருகிறேன்.

பெரும்பாலான நகராட்சிகள் நிதிப் பற்றாக்குறையுடன் இருந்தபோதிலும், சில பல நகராட்சிகள் நல்ல வசதி வாய்ப்பு பெற்று, அரசாங்கத்திடமிருந்து பெற்ற பணத்தைக் கூட செலவிட முடியாமல் நிதிப் பெருக்கத்தோடு இருப்பதால், அந்த நிதியையும் வங்கியிலே போட்டுவைக்கும் நிலை இருப்பதால், அத்தகைய நிதியைப் பெற்று நிதிப்பற்றாக்குறை உள்ள நகராட்சிகளுக்கு அந்தத் தொகையைப் பயன்படுத்த அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 10-30]

அதைப்போலவே நகராட்சிகள், ஊராட்சிகளில் இருக்கின்ற பேருந்துத் தடங்கள் அல்லாத சாலைகளையும் அரசு தன்னுடைய பராமரிப்பில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் நகராட்சிகள், ஊராட்சிகளுக்குத் தேவையான கட்டிடங்களைக் கட்டும் பணியை அரசே ஏற்க வேண்டும் என்றும் அப்போதுதான் அவைகள் மூலம் மக்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தரமுடியும் என்றும் குறிப்பிட்டுச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.



1980 ஜூலை 21] [திரு. என். கிட்டப்பா]

நகராட்சிகளில் குடிநீர்த் திட்டத்தை விரைவாகச் செயல்படுத்தும் அதே வேகத்தில் அங்கே சாக்கடைத் திட்டத்தையும் ஏற்படுத்திச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் இங்கே சற்று நேரத்திற்கு முன்னால் கொசுத் தொல்லையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றாததினால் பல இடங்களில் கொசுத் தொல்லைகள் அதிகமாகப் பெருகி இருப்பதை நாம் கண்கூடாகக் காணுகிறோம். மாயூரம் போன்ற பகுதிகளில் அத்தகைய நிலையைக் காணும் போது, அங்கே குடிநீர்த் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது; ஆனால் சாக்கடைத் திட்டம் உருவாக்கப்படவில்லை. மாயூரம் நகரில் சாக்கடைத் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்ற கோரிக்கையை நீண்ட நாட்களாக நான் இந்த மாமன்றத்திலே எடுத்து வைத்துக்கொண்டிருக்கிறேன் என்ற அடிப்படையில் அரசு அங்கே சாக்கடைத் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின் பற்றாக்குறை காலங்களில் பொது மக்களுக்கு நகராட்சிகளில் குடிநீர் வழங்கக்கூடிய திட்டம் பாதிக்கப்படுகிறது என்பதை நாம் அறிகிறோம். அந்தமாதிரியான நேரங்களில் ஜெனரேட்டர்களைப் பயன்படுத்தி, குடிநீர் வழங்க ஆவன செய்யலாம் என்ற யோசனையை அல்ல, பணிவான வேண்டுகோளை விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நகராட்சிகளில் நீண்ட நாட்களுக்கு முன்னால் பொருத்தப்பட்ட குடிநீர் குழாய்கள் என்ற அடிப்படையில் அவை அடிக்கடி பழுது அடைகின்ற காரணத்தால் அவைகளை மாற்றி, புதிதாக அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிசைப்பகுதி விரைவு மேம்பாட்டுத் திட்டத்தை எல்லப் நகராட்சிகளிலும் செயல்படுத்த வேண்டும். மொத்தமாகா பார்த்தால் 107 நகராட்சிகள், 8 நகரியங்கள் இருக்கின்றன. இந்த 8 நகரியங்களில் மட்டும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அதைப்போல எல்லா நகராட்சிகளிலும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சிகளில் தனிப்பட்டவர்கள் நிலங்களை மனைகளாகப் பிரித்துப் பொது மக்களுக்கு விற்பனை செய்கிறார்கள். பொது மக்கள் வீடுகட்ட அனுமதி கேட்கும்போது, நிலச் சொந்தக்காரர்கள் சாலை வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான தொகையைக் கட்டாததினால் வீடு கட்டுபவர்களிடம் சாலை வசதிகளுக்காக டெபாசிட் செய்யச் சொல்கிறார்கள். பணம் கட்டிய பிறகு வீடு கட்ட அனுமதிக்கிறார்கள். அப்படி வீடு கட்டி, காலனி உருவாக்கப்பட்ட பின்னாலும் கூட சாலை வசதிகள் செய்யப்படாமல் இருக்கிறது. அந்த நிலையை மாற்றி, உடனடியாக சாலை வசதிகளை ஏற்படுத்த ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சிகள், மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அரசு மானியம் மற்றும் கடன் வழங்குவதில் அதற்கான உத்திரவை நிதியாண்டில் ஆரம்பத்திலேயே வழங்க வேண்டும். அவ்வாறில்லாமல் நிதியாண்டு முடிவு பெறும் தறுவாயில் அல்லது 3, 4 மாதங்களுக்கு முன்னால் உத்தரவுகள் வழங்கப்படுவதால், மார்ச் 31-ஆம் தேதிக்குள் வேலைகள் முடிக்கப்பட வேண்டுமென்ற நிலை ஏற்படுவதால் நடைமுறையில் சாத்தியம் அல்ல ; செலவு செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. ஆகவே இந்த முறையை மாற்றி, இங்கே நிதிநிலை அறிக்கை நிறைவேற்றப்பட்ட உடனேயே அத்தகைய நிதி வழங்குவதற்கான உத்தரவுகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சிகளுக்கு சாலை வேலைகளுக்காகவும் வெள்ள நிவாரணம் போன்ற வேலைகளுக்காகவும் அரசு மானியம் மற்றும் கடன் வழங்குகிறது. . ஆனால் அந்தத் தொகைகளைப் பவர் ரோலர் கிடைக்காத காரணத்தால் குறிப்பிட்ட காலத்திற்குள் வேலையை முடிக்க முடியாமல் போகிறது. ஆகவே, பவர் ரோலர்கள் தாமதமின்றி நகராட்சிகளுக்குக் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிழக்குக் கடற்கரைச் சாலைகள் பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தக் கிழக்குக் கடற்கரை சாலைப் பணி தொடங்கிய நேரத்தில்தான் கேரள மாநிலத்தில் மேற்குக் கடற்கரை சாலைப் பணியும் தொடங்கப்பட்டது. இங்கே கூட கடற்கரை சாலைக்கு 401.20 இலட்சம் செலவில் 38 பாலங்கள் கட்ட மத்திய அரசு ஒப்புதல் அளித்து, அந்தப் பணிகளுக்காக 261 இலட்சம் ரூபாய் கடன் உதவியும் அளிக்கப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளதே தவிர கிழக்குக் கடற்கரை சாலை இன்னும் முழுமை பெறாமலேயே உள்ளது. அதனால் பல இடங்களில் போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பது மட்டுமல்ல, பல இடங்களில் 'ஆக்சிடென்ட்ஸ்' ஏற்படுவதற்கும் காரணமாக இருக்கிறது. அதற்குக்காரணம் அந்தப் பகுதியிலே ஏற்படுகிற நெரிசல்தான் என்பதை நாம் நன்றாக அறிவோம்.

கிழக்குக் கடற்கரைச் சாலையைப் பொறுத்தவரையில் அதன் பணி முடிக்கப்படுமேயானால் நிச்சயமாகப் போக்குவரத்திலே உள்ள நெருக்கடி தவிர்க்கப்படுவதோடு உயிர்ச் சேதங்களும் தவிர்க்கப்படும் என்பதை நான் கூறிக்கொள்கிறேன்.

நான் இங்கே என்னுடைய நன்றியறிதலையும் ஒரு முக்கியமான காரணத்திற்காகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பாபநாசத்திற்கு அருகில் இரண்டு இடங்களில் இரயில்வே மேம்



பாலங்கள் கட்டுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது என்ற நல்ல செய்தியினை இந்த மானியக் கோரிக்கையிலே அறிவித்திருக்கிறார்கள். இதை நான் நன்றியறிதலோடு வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தஞ்சை மாவட்டக்காரர் என்ற முறையிலே மட்டுமல்லாமல் அது மிகத் தேவையானது என்ற அடிப்படையிலே நான் அதை வரவேற்கிறேன்.

இன்னொரு கோரிக்கையை இங்கே வைக்க விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்திலே சீர்காழி, அரசூர் ஆகிய இரண்டு புகைவண்டி நிலையங்களுக்கு இடையிலே உள்ள இரயில்வே லைனுக்கு மேலே ஒரு மேம்பாலம் கட்ட வேண்டுமென்ற கோரிக்கையினை நீண்டகாலமாக இங்கே வலியுறுத்திக் கொண்டு வருகிறோம். ஆகவே அதையும் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றும் நான் நீண்ட காலமாக எடுத்துச் சொல்லி வந்திருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது மாயூரம் தொகுதியில் இருக்கின்ற மணல்மேட்டையும் தென்னார்க்காடு மாவட்டத்திலே இருக்கின்ற காட்டுமன்னார்கோயிலையும் இணைக்கின்ற வகையில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே பக்கா பாலமாக இல்லாவிட்டாலும் சொக்கா பாலம் என்று நான் சொல்ல மாட்டேன், அப்படியெல்லாம் பேசி எனக்குப் பழக்கம் இல்லை, ஒரு தரையடிப் பாலமாவது கட்டித் தர வேண்டும். ஒரு பாலம் கட்டவேண்டும் என்று ஆய்ந்து பார்த்த பிறகு அதற்கான எஸ்டிமேட் எல்லாம் தயாரிக்கப்பட்டு அதைத் துவங்க இருந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்டது. அதற்குப் பிறகு வந்த புதிய அரசிடம், அதாவது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசிடம், அதனுடைய தலைவர்களிடம், நமது முதலமைச்சரவர்களிடம் அந்தப் பாலத்தினுடைய அவசி யத்தை எடுத்து விளக்கி அங்கே ஒரு தரையடிப் பாலமாவது கட்ட வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்திருக்கின்றேன். ஆனால் அப்போது, வர இருக்கின்ற பட்ஜெட்டிலே இந்தத் திட்டத்தை இணைத்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். ஆனால் பட்ஜெட்டைப் புரட்டிப் பார்க்கின்றபோது நான் அறிந்த வரையில் அந்தப் பாலத்தைப் பற்றி ஒன்றும் காணவில்லை. ஆகவே அந்தப் பாலத்தைக் கட்டித்தர வேண்டும் என்ற கோரிக்கையை நான் விடுத்துக்கொள்கிறேன்.

மாயூரத்தில் காவிரி ஆற்றின் குறுக்கே புதிதாக ஒரு பாலத்தைக் கட்டி இருக்கிறார்கள். அங்கு ஏற்கெனவே இருந்த காவிரிப் பாலம் மிகக் குறுகலான பாலம். ஆனால் அன்றைய சூழ்நிலையில், அதாவது அன்றைய ஜனத் தொகை அடிப்படையில், அன்றைய போக்குவரத்தின் அடி

படையில் அந்தப் பாலம் கட்டப்பட்டது. பல இடங்களிலே உள்ள திட்டங்களைக் காண்கின்றபோது பாலங்களை விரிவுபடுத்துவதற்கு, அதாவது அகலப்படுத்துவதற்குப் போதிய தொகையைச் செலவிடுவது பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் மாயூரம் நகரிலுள்ள பழைய காவிரி பாலத்தை விரிவுபடுத்துவதற்கு, அகலப்படுத்துவதற்குரிய திட்டத்தைப் பற்றி நான் தேடிப் பார்த்தேன். ஒன்றையுமே காணோம். ஆகவே மற்ற திட்டங்களோடு தயவுசெய்து அதையும் இணைத்துக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை நான் எடுத்து வைக்க விரும்புகிறேன்.

அடுத்து மாயூரம் தொகுதியில் கொற்கை-தாழஞ்சேரி ஆகிய இரண்டு பஞ்சாயத்துக்களையும் இணைக்கின்ற வகையிலே பாலம் கட்ட வேண்டும் என்று நான் சென்ற முறையும் எடுத்துச் சொன்னேன். அங்கே பால வேலைகள் எல்லாம் துவங்குவதற்கு டெண்டர் எல்லாம் விட்டார்கள். இதில் ஒரு பெரிய வேடிக்கை என்னவென்றால் அந்தப் பாலத்தின் பணி நெடுஞ்சாலைத் துறையைச் சேர்ந்ததா அல்லது பொதுப்பணித் துறையைச் சேர்ந்ததா அல்லது ஊராட்சி ஒன்றியம் செய்ய வேண்டிய வேலையா என்று யாருக்குமே தெரியவில்லை. பொதுப்பணித் துறையினரைக் கேட்டால் நெடுஞ்சாலைத் துறையினர் செய்ய வேண்டிய வேலை என்று சொல்கிறார்கள். நெடுஞ்சாலைத் துறையினரைக் கேட்டால் பொதுப்பணித் துறையினர் செய்ய வேண்டிய வேலை என்று சொல்கிறார்கள். ஆகவே இதை யார் செய்ய வேண்டும் என்பதே தெரியவில்லை. இது குறித்து அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நமசிவாயபுரம், காளி ஆகிய முக்கிய ஊர்களை இணைக்கின்ற பழவாற்றின் குறுக்கே உள்ள பாலம் வெள்ளத்தால் சேதம் அடைந்து பாலத்தின் தென்புறம் அறுந்தோடிப் போய் அபாயகரமான நிலையில் உள்ளது. உடனடியாக அதைப் பழுது பார்க்க வேண்டும் என்ற கோரிக்கையை விடுக்கிறேன்.

[முற்பகல் 10-40]

கடந்த மூன்றாண்டுகள் காலமாக நெடுஞ்சாலைத் துறையிலே எந்தச் சாலையும் சேர்க்கப்பெறவில்லை என்றாலும், அதற்கு முன்பாக நெடுஞ்சாலைத் துறையிலே சேர்க்கப்பெற்ற சாலைகளாக இருப்பதினால் அப்படிச் செய்கிறார்களோ என்று நான் சொல்ல மாட்டேன். ஆனால் என்ன காரணத்தினாலோ பல நெடுஞ்சாலைகள், மாயூரம் பகுதியிலே உள்ள அரசினர் நெடுஞ்சாலைகள், பழுது பார்க்கப்பெறாமல், போக்குவரத்துக்கு





எவ்வளவு இடைஞ்சல்கள் தர முடியுமோ அவ்வளவு இடைஞ்சல்களையும் தந்துகொண்டிருக்கிறது. ஆகவே அவை பழுது பார்க்கபெற வேண்டும் என்று கூறி எனக்கு வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. வி. கருப்பசாமிப் பாண்டியன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் இந்த மாமன்றத்தில் பேசுகிற நல்வாய்ப்பைத் தந்த மாண்புமிகு முதல்வர், புரட்சித் தலைவர் அவர்களுக்கும், பாளையங்கோட்டைத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.]

உள்ளாட்சித் துறை சம்பந்தப்பட்ட இந்த மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு முன்பாக, இந்தத் துறை, மாநில சுயாட்சிக்காகப் போராடுவோம் என்று சொன்னவர்களுடைய காலத்திலே தான், இந்தத் துறைக்கென்று இருந்த பல்வேறு அதிகாரங்கள், வளர்ச்சித் திட்டங்கள் குறைக்கப்பட்டு, இன்றைக்கு இந்தத் துறை என்ன பணிகளை மேற்கொள்வது என்கிற வரையறைகள் மிகவும் சுருங்கப்பெற்ற நிலையிலே ஆக்கப்பட்டு இருக்கிறது என்பதை முதலிலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஏற்கெனவே பல்வேறு கிராமப்புற வளர்ச்சிகளில் உள்ள திட்டங்களை எல்லாம் செய்து வந்த இந்தத்துறை, இதிலிருந்த சாலைகள் பராமரிப்பை ரூரல் ரோட்ஸ் என்கிற தனித் துறையிலே பிரித்துக் கொடுத்துவிட்டது. அதேபோல குடிநீர் வழங்கு கிற பணியினை 'டுவாட்' (TWAD) என்று சொல்கிற அமைப் பின் கீழ் பிரித்துக் கொடுத்துவிட்டது. இன்னும் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் அரசு ஊழியர்களாக அறிவிக்கப்பெற்றிருக்கிற சூழ்நிலையில் எந்த அதிகாரமும் இன்றைக்கு ஊராட்சி ஒன்றியத்தின் கையில் இல்லா மல், எல்லாமும் எடுக்கப்பட்ட சூழ்நிலையில் இருக்கிறது.

ஆனால் 1977 வது ஆண்டில் புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் அமைந்த இந்த அரசினுடைய காலத்திலேயிருந்து தான் ஒரு நல்ல டணி, முக்கியமான பணி இந்த ஒன்றியங்களிலே நடைபெறுகிறது என்று சொன்னால் அது 'உழைப்புக்கு உணவு. திட்டம்' தான். இந்தப் பணியோடு 30 ஆண்டுகாலமாககிரா மப்புறங்களிலே எங்கெங்கெல்லாம் சாலை வசதிகள் அடியோடு இல்லாமல் மக்கள் அவதியுற்றனரோ அந்த இடங்களிலெல்லாம். புதிய சாலைகள் போடுகிற பணி துரிதமாக நடைபெற்றுக்கொண் டிருப்பதை நாம் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அரசினுடைய நோக்கம் சீரிய நோக்கமாக இருந்தாலும் கூட, ஒதுக்கப்பெறுகிற தொகைகளையெல்லாம் மக்களுக்கு முழுமையாகப் பயன்பெறுகிற வகையில். முறையாகப் பயன் பெறுகிற வகையில் மக்களுக்குப் போகிறதா என்றால், சில இடங்களில் ஏமாற்றம்தான் கிடைக்கிறது என்பதை நான் இங்கே அழுத்தம் திருத்தமாக எடுத்துக் கூற விரும்புகிறேன்.

உழைப்புக்கு உணவு வழங்கும் திட்டத்தில், பல தவறுகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் நடைபெறுகிறது என்பதை இங்கே உணர்த்துவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே அப்படிப்பட்ட வேலைகள் நடைபெறுகிற இடங்களில். அந்த வேலைகள் சரிவர நடைபெறுகிறதா என்பதைக்கண்காணிப்பதற்கு ஒதுக்கப்பெறுகிற தொகை முழுவதுமாக முறையாக மக்களுக்குப் பயன்பெறும் வகையில் செலவழிக்கப்பெறுகிறதா என்பதைக் கண்காணிப்பதற்கு, மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட குழு ஒன்றினை அதிகார பூர்வமாக அரசு நியமிக்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அதிலும் குறிப்பாக நெல்லை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், திருநெல்வேலி, பாளையங்கோட்டை, மேலப்பாளையம் ஆகிய இந்த மூன்று நகராட்சிகளும் 3 கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளாகவே அமைந்துள்ளது. நடுவே தாமிரபரணி ஆறு தான் இந்த மூன்று நகராட்சிகளையும் பிரித்துக் கொண்டு ஓடிக் கொண்டிருக்கிறது.

ஆனால் இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலை என்னவென்று பார்த்தால் மாவட்டத்தின் தலைநகராக இருக்கிற திருநெல்வேலியில் மத்திய பேருந்து நிலையம் தந்தை பெரியார் பெயரால் இருக்கிறது. அந்தப்பெரியார் பேருந்து நிலையத்திற்குள் வருகிற பஸ்கள் எல்லாம் வந்து விட்டு வெளியே செல்வதற்கு குறைந்த பட்சம் நாற்பது நிமிடங்களுக்கு மேலாகிறது. அந்தப் பேருந்து நிலையத்தினை விரிவுபடுத்துவதற்காகப் பக்கத்தில் இருக்கிற இடங்களை எல்லாம் ஆர்ஜிதம் செய்து பலஆண்டுகளாகியும் கூட அங்கே அதிகாரிகள் அக்கறை காட்டாத காரணத்தினால் அது முடங்கிக் கிடக்கிறது. ஆகவே நெல்லைப் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் பணியை விரைவு படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கனவே மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் இரண்டு தடவை தீர்மானங்கள் போட்டு நிறைவேற்றியிருக்கிறோம். அரசாங்கத்திடமிருந்து பரிசீலனையில் இருக்கிறது என்ற பதில் தான் இதுவரை கிடைத்திருக்கிறது. திருநெல்வேலி, பாளையங்கோட்டை, மேலப்பாளையம் இந்த மூன்று நகரசபைகளையும்





இணைத்து மாநகராட்சியாக ஆக்க வேண்டும் என்ற வேண்டுகோளை நெல்லை மாவட்டத்திலிருக்கிற அனைத்துச் சட்ட மன்ற உறுப்பினர்களும் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் ஒருமனதாகத் தீர்மானம் போட்டு நிறைவேற்றியிருக்கிறார்கள். இந்த அரசாங்கம் இன்றையதினம் கோவை நகரசபையை மாநகராட்சியாக்குவோம் என்ற நல்லதொரு திட்டத்தை, சீரிய பணியை நிறைவேற்ற ஆரம்பித்திருக்கிறது. அடுத்த தடவை நெல்லையை மாநகராட்சி ஆக்கிட அடுத்த வாய்ப்பினைத் தர வேண்டுமென்று நான் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் மாண்புமிகு முதல்வர் அவர்களையும் இந்த மன்றத்தின் மூலம் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இன்றைக்குத் தமிழகத்தில் எந்த நகரசபையிலும் இல்லாத அளவிற்கு ஒரு மோசமான நிதிநிலை, மேலப்பாளையம் நகரசபையில் இருந்துகொண்டிருக்கிறது. சிறுபான்மை இன மக்களான முஸ்லிம் பெருமக்கள் அதிகமாக வாழும் பகுதி அது. இன்றைய தினம் ரம்சான் பண்டிகை நடைபெறுகிறது. நோன்புக்காக காலையில் அவர்கள் தொழுகைக்குச் செல்கிற நேரத்தில் அவர்களுக்குக் குடிநீர் வசதி இல்லை. பக்கத்தில் இருக்கிற பாளையங்கோட்டை நகரசபையிலிருந்துதான் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி மேலப்பாளையம் நகரசபைக்குக் கடனாக வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். குடிநீர் சம்பந்தமாக பயங்கரமான தட்டுப்பாடு நிலை மேலப்பாளையம் நரசபைக்கு இருக்கிறது. மிக மோசமான நிலையில் இரவில் இரண்டு மூன்று மணிக்கு ஆயிரக்கணக்கான பெண்கள் வரிசையில் நின்றுகொண்டு குடிநீருக்காக அவதிப்படுகிற அவல நிலை இருக்கிறது. நான்கு பர்லாங் தூரத்தில் தாம்பிரபரணியில் ஆண்டு ஒன்றில் ஆறு மாத காலம் வெள்ளம் கரைபுரண்டோடுகிறது. மீதி ஆறு மாதங்களும் தண்ணீர் வற்றாத ஜீவநதியாக தாம்பிரபரணி ஆறு இருந்தும் பாளையங்கோட்டை, மேலப்பாளையம் நகரசபை மக்கள் குடிநீருக்காக அவதியுறும் நிலை இருப்பதற்குக் காரணம் அதிகாரிகளின் அசட்டைதான் என்று குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த முறை பாளையங்கோட்டைத் தொகுதியிலிருந்து வெற்றி பெற்ற ஒரு பெரிய மனிதர், இன்றைக்கு நிராகரிக்கப் பட்டிருப்பவர், சொன்னார். நான் வெற்றி பெற்றால் என் தொகுதிக்கு ஆற்ற வேண்டிய பணிகளை எல்லாம்—ஆறு மாதங் களுக்குள் இந்தக் குடிநீர்—திட்டத்தை முடித்துத் தருகிறேன். என்றும் இல்லையென்றால் என்னை மேலப்பாளையத்தில், பாளையங்கோட்டையில் சந்தியில் நிறுத்திவைத்து சவுக்கால் அடியுங்கள் என்றும் மக்கள் மத்தியில் பேசியவர் அன்று பதவியில் இருந்தபோது அந்தத் தொகுதிப்பக்கம் எட்டிப் பார்க்காமல் அங்கிருந்து தப்பித்து வேறு இடத்திற்கு வந்து சட்டமன்றத்திற்கு வரலாம் என்று நினைத்தாலும்கூட சவுக்கால் அடிக்காவிட்டாலும்

மைலாப்பூர் வாக்காளப் பெருமக்கள் வாக்குச் சீட்டுகளால்
அடித்திருக்கிறார்கள் என்பதை எண்ணும்போது இன்றைக்குப்
பாளையங்கோட்டை தொகுதி மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு அங்குள்ள சூழ்நிலை என்னவென்றால் அங்கு
வருகிற கமிஷனர்கள் எல்லாம் மக்கள் பிரதிநிதிகளுக்குப் பயப்
படுவது கிடையாது அவர்கள் சொல்வதை ஏற்றுக் கொள்வதும்
கிடையாது. காரணம் மேலப்பாளையம் கமிஷனர் சொல்கிறார்,
இப்போதுகூட இந்த நகரசபையிலிருந்து பணியாற்றுவதைவிட
வேறு இடத்திற்கு மாற்றலாகிச் செல்வதை மிகவும் ஆவலோடு
எதிர்பார்க்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருப்பதாகக்கேள்வி.
ஏனெனில் அந்த அளவிற்கு வருகிற வருமானம் அங்கே பணியாற்று
கிற ஊழியர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்குத்தான் சரியாக
இருக்கிறதே தவிர எந்தவிதமான ஆக்கப் பணிகளும் நடைபெறு
வதற்குப் போதியவசதி இல்லை. எனவே உள்ளாட்சித் துறை
அமைச்சர் அவர்கள் இதை மாநகராட்சி ஆக்க வேண்டும் என்கிற
அந்தத் திட்டத்தோடு அதற்கு முன்பாக மேலப்பாளையம்
நகரசபைக்கு அரசாங்கம் ஒரு நீண்ட காலத் தவணையில்
ஐம்பது இலட்சம் ரூபாய் கடன் உதவி தந்து உதவ வேண்டு
மென்று நான் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்ள
விரும்புகிறேன்.

[முற்பகல் 10-50.]

மேலப்பாளையத்திற்கு தண்ணீர் கடனாகக் கொடுக்கின்ற
காரணத்தினால், தென்னிந்தியாவின் பல்கலைக்கழகம் என்று
வர்ணிக்கப்படுகின்ற இந்தப்பாளையங்கோட்டையில் பல்வேறு
கல்லூரி நிறுவனங்களுக்கும் உயர்நிலைப்பள்ளிகளுக்கும் குடி
தண்ணீர் தட்டுப்பாடு இருக்கிறது. 6, 7 மேல்நிலை உயர்நிலைப்
பள்ளிகள் இன்றைக்கு அங்கே இருக்கின்றன. எனவே, இன்றைக்கு
அப்படிப்பட்ட நேரங்களில் குடிதண்ணீர் தட்டுப்பாடாக இருக்
கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்
திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அதே போல், நெல்லை மாவட்டத்தைப் பொறுத்த வரையில்
மூன்று நகரியங்கள் இருக்கின்றன. சங்கர் நகர், மணிமுத்தாறு,
குற்றாலம் என்று 3 நகரியங்கள் இருக்கின்றன. சங்கர் நகரிலும்,
மணிமுத்தாறிலும் செலவழிக்க முடியாமல் பலஇலட்சக்கணக்கான
ரூபாய்களை வங்கியிலே போட்டு வைத்திருக்கிறார்கள். மணிமுத்
தாறின் பிரதிநிதியாக துணைத் தலைவர் அவர்கள் இருக்கிறார்
கள். மொத்தம் 15 இலட்சம் ரூபாய் அங்கே செலவழிக்க
முடியாமல் முடக்கிவைக்கப்பட்டு வங்கியிலே இருக்கிறது. ஆனால்





குற்றாலத்தை எடுத்துக் கொண்டால் ஆண்டிற்கு இலட்சக்கணக்
கான மக்கள் சுற்றுலாப்பயணிகளாக அங்கே வந்துகொண்டிருக்கி
றார்கள். இந்த குற்றாலம் நகரியம் செலவழிப்பதற்குப் பணம்
இல்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர்
அவர்களுக்கு குற்றாலம் அழகான ஊர் என்று தெரிந்திருக்கும்
அவர்கள் இந்தத் துறைக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கி
றார்கள். இன்றைக்கு அங்கே இலட்சக்கணக்கான பயணிகள்
வந்துகொண்டிருக்கிறார்கள். மற்ற இடங்களைவிட இங்கே
ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் இல்லாமல் சுற்றுலா
பயணிகள் வந்து கொண்டிருக்கிறார்கள் இந்த குற்றாலத் தலத்
திற்கு. ஒரு வேளை குற்றாலம் தமிழகத்தின் தென் கோடியிலே
அமைந்திருக்கின்ற காரணத்தினால் யார் கண்ணிலேயும் படவில்
லையோ என்னவோ. இன்றைக்கு அங்கே நிதி நெருக்கடி காரண
மாக எந்த விதமான வசதியும் வருகின்ற பயணிகளுக்கு செய்து
கொடுக்க முடியாமல் இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்
காட்ட கடமைப்பட்டவனாக இருக்கிறேன். எனவே, இந்த
இரண்டு நகரியங்களிலும் இருக்கின்ற அதிகமான நிதியை கடனாக
வாவது கொடுத்து உதவ வேண்டும். காரணம் ஒரு ஆண்டிற்கு
அங்கே கிட்டத்தட்ட 15 இலட்சம் பயணிகள் வருகிறார்கள்.
அவர்கள் நலம் கருதியாவது இங்கே அதிக நிதி ஒதுக்க வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையில், நெல்லை,
பாளையங்கோட்டை, மேலப்பாளையம் ஆகிய இந்த மூன்று
நகரங்களைத் தாண்டிதிருவனந்தபுரம் செல்லுவதற்கு இணைக்
கின்ற ஒரு பை பாஸ் ரோடு போடுவதற்காக அழகாக அதிக மக
சூலைத்தரத்தக்க நஞ்சைநிலங்களை ஆர்ஜிதம் செய்து 4,5 ஆண்டு
களுக்கு முன்னால் அதிலே சாலை போட வேண்டுமென்பதற்காக
லாரி லாரியாக மண்ணைக் கொண்டுவந்து போட்டுவிட்டார்கள்,
ஆனால் என்ன காரணத்தாலே அந்த ரோடு போடாமல் முடக்கி
வைத்து இருக்கிறார்கள். அந்த விவசாய நிலங்களை அரசாங்கம்
பணம் கொடுத்து ரோடு போட வேண்டுமென்பதற்காக ஏற்கனவே
ஆயிரக்கணக்கான லாரி மண்ணைக் கொண்டுவந்து கொட்டியும்
அங்கே அந்த பைபாஸ் ரோடு வந்தபாடில்லை. எனவே நெடுஞ்
சாலைத் துறையினர் இந்த மூன்றுநகரங்களும் வேகமாக வளர்ந்து
வருகின்ற காரணத்தால் அதிலேயிருந்து கன்னியாகுமரி செல்
கின்ற பயணிகள், நெல்லை மாவட்டத்தின் பிற பகுதிகளுக்கும்
மக்கள் விரைவாகச் செல்வதற்கு இந்த நகரசபைகளின் போக்கு
வரத்து நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இந்த பைபாஸ் ரோட்டை
சீக்கிரமாக, துரிதமாக துவங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல் ஊராட்சி ஒன்றியங்கள் ஊராட்சி மன்றங்
களில் இருக்கிற செலவுகளை நிலமைகளை எண்ணிப் பார்க்
கின்ற போது மிகவும் வருத்தப்பட வேண்டியிருக்கிறது. புரட்சித்

தலைவர் அவர்கள் தமிழகத்திற்கு முதலமைச்சராக வந்த பின்னர்தான், மினி பஸ் திட்டமும், கிட்டத்தட்ட 30 ஆண்டு காலமாக பேருந்துகளைப் பார்க்காத பல்லாயிரக் கணக்கான கிராமங்களுக்கு பேருந்து வசதி செய்யப்பட்டிருக் கின்றது. கிட்டத்தட்ட இந்த இரண்டரை ஆண்டு காலத்திற்குள் 1400 பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு இந்தத் துறை கிராமங்களையும், நகரங்களையும் இணைக்கின்ற பணியைச் செய்து கொண்டிருக்கிறது. போக்குவரத்துத் துறையினர் பஸ்கள் விடுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் பேருந்துகள் செல்வதற்கான சாலைகள் இல்லை என்பதை நாம் ஏற்றுக் கொண்டாக வேண்டும். ஆனால், ஒன்றியங்களுக்கு ஒதுக்கப் படுகின்ற தொகையை எண்ணிப் பார்த்தால் மிகவும் குறைவாகத் தான் இருக்கிறது. ஊராட்சிமன்றங்களிலே இருக்கின்றபணம் ஒரே வகையிலே தான் பயன்படுகிறது. அங்கே இருக்கின்ற தனி அதிகாரிகள் அந்த ஊராட்சி மன்றப் பணத்தை மண்ணை அள்ளிப் போடுவதற்கு, அதாவது இந்த சாலைகளில் மண்ணைப் போடு கின்ற இந்த காரியங்கள்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதிலே 2000 ரூபாய் மதிப்பீடு போட்டு, இந்த சாலைகளில் கிராவல் போடுகின்றபோது ஒழுங்காக செலவழிக்கப் படுகிறதா என்பதைக் கண்காணிக்க நாம் அதிகாரிகளை மட்டும் நம்பிக்கொண்டிருந்தால் பயனில்லை. மக்கள் பிரதிநிதிகள் கொண்ட ஒருகுழு இப்படிப்பட்டகாரியங்களைக்கண்காணிப்பதற்கு அமைத்துத் தர வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போல் ஊராட்சி ஒன்றியங்களுக்கு இருக்கிற பணிகள் இன்றைக்குக் குறைக்கப்பட்டிருக்கிற சூழ்நிலையை எண்ணிப் பார்த்து இந்த ஊராட்சி ஒன்றியங்கள், மன்றங்கள் ஆகியவை கிராம மக்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருக்கும் துறை என்ற காரணத்தால் இந்தத் துறைக்கு பரவலாக அதிகமான நிதியை ஒதுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்ள விரும்பு கிறேன்.

இன்னொரு குறை—'ட்வாட்'-ல் இருந்து கிராமங்களுக்கு வந்து அடி பம்ப் போட்டுவிட்டு சென்று விடுகிறார்கள். அந்தப் பம்புகள் இரண்டு மூன்று மாதங்களிலே ரிப்பேர் ஆகிவிடுகின்றன. மக்கள் யாரிடத்தில் போய் முறையிடுவது என்று தெரியவில்லை, ஒன்றியத்தில் போய் சொன்னால் 'ட்வாட்'-க்குக் கையை காண்பித்து எஞ்சினியரிடத்தில் போய் சொல்லுங்கள் என்று சொல்லுகிறார்கள் ஒன்றியத்தில் இதற்கென்று ஆள் போட் டிருக்கிறார்கள் என்று தீர விசாரித்தறியச் சென்றால் ஒரு யூனியனுக்கு ஒரு ஆள் கொடுத்திருக்கிறார்கள். இருக்கிற 40 ஊராட்சி ஒன்றியங்களில் ஒவ்வொரு ஒன்றியத்திலும் 100, 150 க்கு மேற்பட்ட பம்புகள் இருக்கின்றன. சில இடங்களில் 300, க் குக்400-மேல் இருக்கின்றன. ஆகவே, ஒரு ஆளை வைத்து





வேலை வாங்குவது என்பது இயலாத காரியமாக இருக்கிறது. ஆகவே, அதிகமான பணியாளர்களை ஒதுக்கித் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல் பஞ்சாயத்திலே கேட்பாரில்லாமல் இருக்கிறவர் கள் ஏழை எளிய மக்களிடத்தில் அதிகத் தொடர்பு வைத்திருக்கக் கூடிய கிராம நல அலுவலர்கள் ஆவார்கள். அவர்கள் 20 ஆண்டு காலம் பணியில் இருந்தும் கணக்குப்பிள்ளை, வில்லேஜ் முன்சிப் போன்ற பதவியில் அமரும்போதும் ஓய்வு பெறும் போதும் ஒரே பதவியில் இருக்கிறார்கள் என்றால் அது நியாயம் தானா என்று கேட்க விரும்புகிறேன். அந்த கிராம நல அலுவலர் களுக்குப் பதவி உயர்வு கொடுக்குமளவில் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிகிறேன்.

ஏற்கனவே வேளாண்மைத் துறையில் சென்ற தடவை பொறுப்பேற்று சிறப்பான முறையிலே தமிழகத்திலே ஒரு பசுமைப் புரட்சியை நடத்தி அரசு எதிர்பார்த்த உற்பத்தியைவிட தமிழகம் உபரி ஆகிற அளவுக்கு ஒரு சூழ்நிலையை வேளாண்மைத் துறையிலே புரட்சித் தலைவரின் ஒப்பற்ற தலைமையிலே செய்து காட்டிய நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்தத் துறையிலும் மக்கள் பிரதிநிதிகளாக இருந்தாலும் சரி, அல்லது பொது மக்களாக இருந்தாலும் சரி, அவர்களிடத்தில் எந்த நேரத்திலும் சிரித்த முகத்துடன் குறைகளைக் கேட்டு விரைவாக வேகமாகப் பணியாற்றும் அமைச்சர் அவர்கள் பல்வேறு குறைபாடுகளை அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் போக்கித் தர வேண்டுமென்று கூறி அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலை யும், வாழ்த்துக்களையும் தெரிவித்து வாய்ப்புத் தந்த சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன்.

திரு. அ. செல்வராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளின் பேரில் பேசுவதற்கு முன்னால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார் பாக எனக்குக் துறைமுகத் தொகுதியில் வாய்ப்புத் தந்த தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், அதே போல் என்னை மீண்டும் தேர்ந்தெடுத்த அந்தத் தொகுதிவாழ் பெருமக்க ளுக்கும், வெற்றிக்காக அரும்பாடு பட்ட அருமை நண்பர் களுக்கும் முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தலைவர் அவர்களே, ஆண்டுக்கு ஒரு முறை நிதிநிலை அறிக்கை வருவதும், மானியக் கோரிக்கைகள் வருவதும் அவற்றின்மீது பேசுவதும் வழக்கமான ஒன்றாக இருக்கிறது. ஆனால் நாம் தீட்டுகின்ற திட்டங்கள் சரியாக . நடைபெறு

[திரு. அ. செல்வராசன்] [1980 ஜூலை 21

இன்றனவா என்பதுதான் முக்கியம். அந்தத் திட்டங்களுக்காக
ஒதுக்கப்படுகிற பணம் அந்தத் திட்டங்களுக்குச் சரியாகச் செலவு
செய்யப்படுகிறதா என்பதை இந்த அரசு கவனிக்கவேண்டுமென்று
இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

நான் தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னையில்
இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவன் என்ற முறையில் சென்னையை
பற்றியும், தொகுதியைப் பற்றியும் பேசுவது சாலச் சிறந்தது
என்று இந்த நேரத்தில் நான் கருதுகிறேன். திராவிட முன்
னேற்றக் கழகம் சென்னை மாநகராட்சிப் பொறுப்பேற்றுக்
கொண்டிருந்த நேரத்தில் வெளிநாடுகளில் இருந்து வந்தவர்
களானாலும் சரி, அகில இந்தியத் தலைவர்களானாலும் சரி,
நீலம் சஞ்சீவி ரெட்டியார் போன்றவர்களானாலும் சரி,
சென்னையைச் சுற்றிப் பார்த்து, அன்று சென்னைக்கு 'சிங்காரச்
சென்னை' என்று பெயர் சூட்டியதை இந்த நேரத்தில் கவன
மூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 11-00]

ஆனால் இன்று அதே சென்னை 'சீர்கெட்ட சென்னையாக'
மாறியிருப்பதை நான் இந்த அரசுக்குச் சுட்டிக்காட்டுவது என்
னுடைய கடமை என்று கருதுகிறேன்.

சென்றமுறை இவர்கள் 2½ ஆண்டுகாலம் ஆட்சி செய்தார்கள்
அப்போது இவர்கள் நினைத்திருந்தால் சென்னை மாநகராட்சி
மன்றத் தேர்தலை நடத்தியிருக்க முடியும். சென்னையைச்
சீர்திருத்தியிருக்க முடியும். ஆனால் அந்த நல்ல எண்ணம்
கிடையாது. காரணம் மக்கள் அவர்களுக்கு வாக்களிக்கவில்லை
என்ற ஒன்று தான். இப்போதும்கூட நான் சொல்கிறேன்,
உண்மையிலேயே சென்னை வாழ் மக்கள் மீது நல்ல எண்ணம்
கொண்டிருந்தால் உடனே மாநகராட்சித் தேர்தலை நடத்
தட்டும். ஆனால் நிச்சயமாக அவர்கள் நடத்தமாட்டார்கள்
என்பது எனக்குத் தெரியும். இப்போது 18 வயதிற்கு மேற்
பட்டவர்களுக்கு எல்லாம் வாக்குரிமை உண்டு என்று மசோதா
கொண்டுவந்திருக்கிறார்கள். அந்த மசோதாவை நிறை
வேற்றவேண்டுமென்றால் ஒரு ஆண்டுக்காலம் ஆகும். ஆகவே
18 வயது உள்ளவர்களுக்கு எல்லாம் வாக்குரிமை என்பதை
பின்னாலே வைத்துக்கொண்டு உடனடியாகத் தேர்தலை நடத்த
லாம். ஆகவே நான் சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலை
உடனடியாக வைக்கவேண்டுமென்று மீண்டும் கேட்டுக் கொள்
கிறேன்.

இப்போது சென்னையிலே பயங்கரமான சுகாதாரக் கேடு
இருந்து கொண்டிருக்கிறது. சென்னையிலே பேஸின்பிரிட்ஜ்
பகுதியிலே உள்ள பவர் ஹவுஸிலிருந்து வெளியாகும் புகை



1980 ஜூலை 21] [திரு. அ. செல்வராசன்]

யோடு கரித்தூள் கலந்து பார்க் டவுன், ராதாகிருஷ்ணன் நகர்,
பேஸின் பிரிட்ஜ் போன்ற பகுதிகளிலே உணவிலே கலக்கக்
கூடிய மோசமான நிலைமை இருக்கிறது. அந்தக் கரித்தூள்
காற்றோடு கலந்துவிடுகிற காரணத்தினால் மக்கள் சுவாசிக்கிற
காற்றிலே கலந்து விடுகிற காரணத்தினால் மக்களுக்கு ஆஸ்துமா,
காசநோய், நுரையீரல் நோய், புற்று நோய் போன்ற நோய்
கள் ஏற்படுகின்றன. மக்கள் நிச்சயமாகப் பாதிக்கப்படுவார்
கள் என்ற அச்சம் அதிகமாக இருக்கிறது.

வட சென்னை வாழ்மக்களுக்கும் அப்படிப்பட்ட நிலைமை
ஏற்படலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த
நிலையைப் போக்குவதற்காக மின்துறை அமைச்சர் அவர்
களும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் நட
வடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். அந்த பவர் ஹவுஸிலிருந்து வெளியாகிற புகைக்கு
ஒரு பில்டர், சல்லடை, மாற்றவேண்டு மென்ற குறை இருப்பதாகத்
தெரிகிறது. இதைப்பற்றி நான் சென்ற ஆண்டிலே பேசுகிற
போதே இந்த மன்றத்திலே வலியுறுத்தினேன். ஆனால் இது வரை
யில் அந்த சல்லடையை மாற்றவில்லை. அமைச்சர் அவர்கள்
அதன்மீது உடனடியாக நடவடிக்கை தக்கவாறு எடுக்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியிலே ஸ்டான்லி மருத்
துவமனை இருக்கிறது. தீக்காயங்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக
சென்னை பொது மருத்துவ மனையிலே இருப்பதைப் போன்று
ஒரு ஏர் கண்டிஷன் வார்டு அங்கே ஏற்படுத்தித் தர வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

பூங்காக்கள் ரோடுகள், தெருவிளக்குகள், சாக்கடைகள்
குடிநீர் குறைகள் இவைகளை சரி செய்ய வேண்டுமென்று
இந்த நேரத்திலே உள்ளாட்சித்துறை அமைச்சரைக் கேட்டுக்
கொள்கிறேன். கொசுத் தொல்லைகள் அதிகமாகிக் கொண்டிருக்
கிறது என்று நான் மட்டுமல்ல, இந்த மாமன்றத்திலே; உள்ள
அத்தனை பேர்களும் எடுத்துப் பேசினார்கள். ஈக்கள், கொசுக்
கள் அதிகமாகப் பரவி வருகின்றன. மாநகராட்சி மன்றத்திலே
இருந்தபோது நாங்கள் பைரத்னம் என்ற மருந்தைப்பயன்படுத்தி
ஒழிப்பதற்கு முயற்சி எடுத்தோம். அந்த முறை இப்போது பயன்
படுத்தாமல் கைவிடப்பட்டுவிட்டது. அந்தவிலைஉயர்ந்தமருந்தை
பயன்படுத்தி ஈக்களையும் கொசுக்களையும் ஒழிக்க நடவடிக்கை
எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ரோடு போடுவதில், சென்ற முறையிலே நான் பேசியிருக்கி
றேன். உள்ளாட்சித்துறை அமைச்சர் கவனமாகக் குறிப்பெடுத்
துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்—பெரிய
தெருக்களாக இருந்தாலும் சிறிய தெருக்களாக இருந்தாலும்

[திரு. அ. செல்வராசன்] [1980 ஜூலை 21

4 முதல் 6 அங்குலம் வரை உயர்த்திப் போடுகிறார்கள். இந்த நிலை 20 ஆண்டுகள் நீடிக்குமானால் தாழ்வாக இருக்கிற பகுதிகளிலேயெல்லாம் சாக்கடை நீரும், மழைகாலத்திலே மழை நீரும் புகுந்துவிடும் அபாயம் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் கையை ஆட்டுகிறார்கள், சென்ற முறை அமைச்சரிடம் சொன்னேன், என்னை அழைத்துப் பேசினார்கள், ஆனால் இதுவரையிலே எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

நான் தயவு செய்து அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்வது என்னவென்றால், பி. டபிள்யூ. டி. எஞ்ஜினியர்களையும் மாநகராட்சியிலுள்ள சிட்டி எஞ்சினீயர்களையும் அழைத்து, இதற்காக ஆலோசனை நடத்தி, உடனடியாக இந்தச் சீர்கேட்டை சென்னையில் மட்டுமல்ல, எல்லாயிடங்களிலும் போக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கொத்தவால்சாவடி, பந்தர் தெரு,மலையப்பெருமாள் தெரு, பத்ரயன் தெரு போன்ற வியாபாரஸ்தலங்கள் இருக்கின்ற இடங்களில் ரோடுகள் போடப்படாமல் பாழாகிக்கிடக்கின்றன். உடனடியாக அந்த ரோடுகளைப் போட வேண்டும். எஞ்சினீயர்கள் அதற்கு என்ன காரணம் சொல்கிறார்கள் என்றால்,அங்கே டிராபிக் அதிகமாக இருக்கிறது, லாரிகள் வருகின்றன என்று சொல்கிறார்கள். அதற்காக அதைத் தடை செய்கிறார்கள். அந்த நிலையில்லாமல், டிராபிக் போலீசாரோடு பேசி, ஒரு வாரத்திற்கு டிராபிக்கை நிறுத்தியாவது அந்த ரோடுகளை உடனடியாக போட்டுத்தர வேண்டுமென்று வற்புறுத்துகிறேன்.

வெளியே உள்ள ரோடுகளை மட்டும் போட்டுவிட்டு, இன்டீரியரில் இருக்கிற சிறிய ரோடுகளை விட்டுவிடுகிறார்கள். என்னுடைய தொகுதியில் உள்ள இந்தக் குறைகளை இந்த அரசு நிச்சயமாக நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பூங்காக்களைப் பொறுத்தவரையில், இருபது நாட்களுக்கு முன்பு பத்திரிகையில் பார்த்தேன். பூங்காக்களை அழகு படுத்தப் போவதாகப் பத்திரிகையிலே செய்திகள் வந்திருக்கின்றன. இந்த நேரத்திலே நான் கவனமூட்டுகிறேன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் மூன்று பெரிய பூங்காக்கள் இருக்கின்றன. என்னுடைய தொகுதியில்தான் மாடிப்பூங்கா என்று இருக்கிறது. அதைப்போலே சென்னையிலே வேறு எங்கேயும் மாடிப் பூங்கா இல்லை என்பதை இந்த நேரத்திலே நான் கவனமூட்டுகிறேன். நான் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக இருந்த பொழுது அந்த மாடிப் பூங்காவை சிங்காரச் சோலையாக வைத்திருந்தேன் என்பதை மாநகராட்சி மன்ற அதிகாரிகளும் என்னுடைய வட்டாரத்திலுள்ள மக்களும் தெளிவாக அறிவார்கள். அந்த மாடிப் பூங்காவை உடனடியாக அழகு செய்ய வேண்டு



1980 ஜூலை 21] [திரு. அ. செல்வராசன்]

மென்று கேட்டுக் கொள்கிறேன். அதை நிச்சயமாக நல்ல பூங்காவாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இன்னும்ஐந்து நிமிடங்களில் முடித்து விடுகிறேன்.

அடுத்து ஸ்ரீராமுலு நாயுடு பூங்கா என்று லோன்ஸ்கொயரிலே ஒரு பூங்கா இருக்கிறது. அது இன்றைக்கு சுடுகாட்டைப் போல காட்சியளிக்கிறது, அதற்கு மதில் சுவர்களை எழுப்பி, அழகாக வைக்க வேண்டும். இல்லாவிட்டால் வேறு எந்த நல்ல காரியத்திற்காவது பயன்படுத்திக் கொள்ளுங்கள். நான் இதைச் சொல்வதற்குக்காரணம், மாநகராட்சி மன்ற அதிகாரிகளை கேட்கும்போது அங்கே ஒரு பெரிய லாரி ஸ்டேஷன் ஒன்று கட்டுவதாகச் சொல்கிறார்கள். நிச்சயமாகக் கட்ட முடியாது என்பது எனக்குத் தெரியும். காரணம் என்னவென்றால், பத்தாண்டுகள் மாநகராட்சியில் இருந்தவன். ஒரு பொதுக் காரியத்துக்காக ஸ்ரீராமுலு நாயுடு என்பவர் அந்த இடத்தை இனாமாகக் கொடுத்திருக்கிறார்கள். அதனால்தான் அதற்கு ஸ்ரீராமுலு நாயுடு பார்க் என்ற பெயரை வைத்திருக்கிறார்கள். அதை அழகுபடுத்த முடியாத காரணத்தினால் அதை மாற்றப்போவதாக சொல்கிறார்கள் தயவு செய்து அந்தப் பூங்காவை மீண்டும் சுத்தமாகச் செய்து, பெரிய வியாபாரிகள் அங்கே தங்கிப் பேசுகிற அளவுக்கு ஒழுங்காக அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை]

அடுத்து, சிவஞானம் பூங்கா என்று பெத்துநாயக்கன் பேட்டையில் இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் நம்முடைய அரசினுடைய அச்சகம் இருக்கிறது. அந்த அச்சகத்திலே பணியாற்றக்கூடியவர்கள் மாலைநேரங்களில் அங்கே கூடிப் பேசுகிறார்கள். எந்த நல்ல காரியங்களை முடிவு செய்ய வேண்டுமோ அதை அங்கே இருந்து முடிவு செய்து, மகிழ்ச்சியை அவர்கள் அனுபவிக்கிறார்கள். அந்தப் பூங்காவிலே டி. வி. வைக்க வேண்டுமென்று சென்ற ஆண்டு கூடக் கேட்டேன். நான் கேட்ட காரணத்தினாலேயோ என்னவோ தெரியவில்லை, மயிலையிலே இருக்கிற நாகேஸ்வரராவ் பூங்காவிலே அந்த டி. வி. யை வைத்தார்கள். இந்த ஆண்டாவது அந்தப் பூங்காவிலே ஒரு டி. வி. யை வைக்க வேண்டுமென்று நான் மிகவும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

லாரிகளின்தொல்லை மிகவும்அதிகமாக இருக்கிறது. சென்னையிலே லாரிப் போக்குவரத்தின் காரணமாகப் பல விபத்துக்கள் ஏற்படுகின்றன. அன்றாடம் பத்திரிகைகளில் பார்க்கும்போது இது தெளிவாகத் தெரிகிறது. பஸ்கள் போகவும் வரவும் மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. குறிப்பாக பாப்ஹேம்ஸ் பிராட்வேயில் பஸ்கள் விரைவாகப் போகமுடியுமா என்றால் முடியாது. ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்வதற்கு இருபது நிமிடங்கள் அல்லது அரை மணிநேரம் ஆகிவிடுகிறது. ஆகவே இந்தக் குறைபாட்டை உடனடியாக நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. அ. செல்வராசன்] [1980 ஜுலை 21

என்னுடைய தொகுதியில் கொத்தவால்சாவடி பகுதி, மண்ணடி, முத்தியால்பேட்டை, தங்கசாலை போன்ற இடங்களில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. சமீபத்தில் தம்பு செட்டித் தெருவில் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்த இரண்டு சிறுவர்கள் லாரியில் அடிபட்டு இறந்துவிட்டார்கள். இந்தக் குறைகளை உடனடியாக நீக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் என்னுடைய சிறிய யோசனையாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புவது என்னவென்றால், இரவு பத்து மணிக்கு மேல் தான் லாரிகள் சென்னைக்கு வர வேண்டும், காலை ஆறு மணிக்குள் சென்னையை விட்டுப் போய்விட வேண்டும் என்று செய்தால் விபத்துக்களைக் குறைக்கலாம் என்று கருதுகிறேன். அரசு இதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். இது சம்பந்தமாக டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண் டோடு கலந்து பேசி இதை நடைமுறைக்குக் கொண்டுவந்தால் நிச்சயமாகச் சென்னையில் அதிக விபத்துக்கள் ஏற்படாது.

[முற்பகல் 11-10]

தமிழகத்திலே கூட அதிக விபத்துக்கள் ஏற்படாது என்பதை இந்த நேரத்தில் நான் கவனமூட்டுகிறேன்.

அடுத்து, நான் கடைசியாக கேட்டுக்கொள்வது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மதுரையிலே, மீண்டும் இந்த மாநகராட்சித் தேர்தலை நிச்சயமாக நடத்துவேன் என்று பேசியிருக்கிறார்கள். அவருடைய சொல் பொய்யாகாமல் இருக்க, நிச்சயமாக இந்தத் தேர்தலை நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்வதற்கு முன், சென்னையிலே வீட்டு வரியை 4 மடங்காக உயர்த்தி யிருக்கிறார்கள். தயவுசெய்து, அந்த வரியைக் குறைத்து, சென்னை நகர மக்களுக்கு நன்மை செய்து தர வேண்டுமென்று கேட்டு, தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டு விடை பெறுகிறேன். வணக்கம்.

*திரு. பி. தங்கவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றப் பேரவை யில் இந்திரா காங்கிரஸ் சார்பாக பேசுவதற்கு எனக்கு வாய்ப் பளித்த ஜெயங்கொண்டம் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமுதாய வளர்ச்சித் திட்டங்கள்—சாலைகளும், பாலங்களும்—லைகள், பாலங்கள் குறித்து மூலதனச் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது எனது கருத்துக்களையும் எடுத்துக் கூறு வதிலே மகிழ்ச்சி அடைகிறேன். இன்றைக்கு நூற்றுக்கு எழுபத் தைந்து விகித சமுதாய அபிவிருத்தி திட்டங்களெல்லாம் ஊரக வளர்ச்சித் துறை நிறுவனங்களின் மூலமாகத்தான் நிறைவேற்றப் படுகின்றன. இந்த நிலையில் இன்றையதினம், ஊராட்சி



1980 ஜுலை 21] [திரு. பி. தங்கவேலு]

மன்றங்களிலே தலைவர்கள் இல்லை ; ஊராட்சி ஒன்றியங்களிலே பெருந்தலைவர்கள் இல்லை ; பேரூராட்சிகளிலே தலைவர்கள் இல்லை. சுருக்கமாகச் சொன்னால் மக்களுடைய பிரதி நிதிகள் இந்த அமைப்புகளிலே இடம் பெறவில்லை.

சமுதாய நலத் திட்டத்தின் அடிப்படை நோக்கமே ஒவ்வொரு கட்டத்திலேயும் மக்களுடைய பிரதிநிதிகள் அதிகாரிகளுடன் இணைந்து செயல்பட வேண்டும் என்பதுதான். நமது சமுதாய மக்களுக்கு இத்தகைய திட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பிலே மட்டுமல்ல—திட்டங்களைத் தீட்டுவதிலேயும் அவர்களுக்கு உரிய இடங்களை அளிப்பதற்கு வற்புறுத்தப் பட்டிருக்கிறது. அதனால்தான் சமுதாய நலத் திட்டத்தை மக்களுடைய திட்டம் என்று அழைக்கிறோம்.

எனவே, மேதகு ஆளுநர் அவர்கள் தனது உரையில் கூறியது போல, எல்லா ஊராட்சி நிறுவனங்களுக்கும் இன்னும் ஆறு மாதங்களுக்குள் தேர்தல் நடத்தவேண்டுமென மாண்புமிகு உள் ளாட்சித்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஊரக வளர்ச்சி நிறுவனங்களின் தேர்தல்கள் நடக்கும் வரை, நிர்வாகத்தின் நடவடிக்கைகளை மக்களுடைய பிரதிநிதிகள் பார்வையிட இந்த அரசு வழிவகை செய்யுமா ? அப்படி யென்றால், மக்களுடைய பிரதிநிதிகளாக இருக்கும் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களை இந்த நிறுவனங்களிலே பங்கேற்க ஆவன செய்யுமாறு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

உடையார்பாளையம் வட்டம் மிகவும் பின்தங்கிய பகுதி எனவே, இந்த வட்டத்தை, தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக அரசு அறிவிக்க வேண்டுமென துவக்கத்திலேயே கேட்டுக்கொள்கிறேன்.

எனது ஜெயங்கொண்டம் தொகுதியில், ஜெயங்கொண்டம்-டி. பழுர் ஆக, இரண்டு ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. இப்பொழுது ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்தில் "கிராமத் தன்னிறைவு" திட்டம் செயல்பட்டு வருகிறது. சட்ட மன்ற உறுப்பினர்கள் தனது தொகுதியைப் பார்வையிட மாதத்திற்கு இரண்டு நாட்கள் ஜீப்பைப் பயன்படுத்தலாம் என்று கூறப் படுகிறது. ஆனால், ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத் திற்கு இன்றையதினம் ஜீப் வசதிகள் இல்லை. இந்த நேரத்தில், டி. பழுர் ஊராட்சி ஒன்றியத்தையும் கிராம தன்னிறைவு திட்டத்தில் எடுத்துக்கொள்ள மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கிராம தன்னிறைவு திட்டம் செயல்படும் ஒன்றியங்களில் ஒரு உதவி ஆணையரையும் நியமனம் செய்தால் அத்திட்டம் முனைப்பாக செயல்பட ஏதுவாகும் என்பதனையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியம் நடத்தும் பள்ளிகளில்தான் கிராமத்திலுள்ள பெரும்பாலான குழந்தைகள் கல்வி கற்கின்றனர். தொடக்கப்பள்ளிக் கட்டிடங்களுக்குச் சென்ற ஆண்டைவிட, நடப்பு நிதி ஆண்டில் அதிகத் தொகை ஒதுக்கப்பட்டிருப்பதோடு உயர் தொடக்கப் பள்ளிகளின் தரத்தையும் மேலும் உயர்த்துவதற்கு ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிக்கு வரும் மாணவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் இன்றைக்கு உயர்துவக்கப் பள்ளியில் பி.டி. படித்தவர்களை, தலைமை ஆசிரியர்களாகப் போடுகிறார்கள் என்று கருதுகிறேன். மாணவர்கள் எண்ணிக்கை கணக்கை ரத்து செய்துவிட்டு ஒவ்வொரு உயர்துவக்கப் பள்ளிக்கும் ஒரு பி.டி. ஆசிரியரை, தலைமை ஆசிரியராக அமர்த்தினால் நலமாக இருக்கும் என கேட்டுக்கொள்கிறேன். அத்துடன், இன்று வேலையில்லாமல் இருக்கும் புலவர் படித்த ஒருவரையும், உடற்பயிற்சி ஆசிரியர் ஒருவரையும் இப்பள்ளிக்கு நியமிக்கலாம். உயர்நிலைப் பள்ளிப் படிப்பிற்கும் தொடக்கப் பள்ளிப் படிப்பிற்கும் இடையிலிருக்கும் உயர்துவக்கப் பள்ளியின் தரம் சிறப்பான முறையில் அமைய இதனை விரிவாக்க வேண்டுமென மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் அவர்களையும் மிகவும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும் ரூரல் டிஸ்பென்சரி சென்ட[illegible] குறைந்தது மூன்று இடங்களிலாவது இருந்தால் நலமாக இருக்கும். இதற்கான நிதி ஒதுக்கீட்டையும் ஊரக வளர்ச்சித் துறையே செய்[illegible] வேண்[illegible] என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு [illegible]கொ[illegible]ம் தொகுதியில் பலகிராமங்களில் குடிதண்ணீருக்[illegible] சில[illegible]ல்கள் நடந்து செல்ல வேண்டிய நிலை இ[illegible]கிறது. இந்தத் [illegible]தொகுதியில் குழாய்க் கிணறுகள் அமைக்கவும், [illegible]புகள் தோண்டுவதற்கும் அதிக வாய்ப்புக்கள் இருக்கின்றன. [illegible]இன்றைய நிலையில் சமுதாயக் கிணறுகள் அமைத்து ப்ரொடக்ட்ட் வாட்டர் சப்ளை மூலம் எங்கள் பகுதிக்கு குடிதண்ணீர் வசதி செய்து [illegible]ம்படி கேட்டுக் கொள்கிறேன்.

உடையார்பாளை[illegible]ஊராட்சியில் உள்ள மக்கள் இன்றைக்கு குடிதண்ணீருக்கா[illegible]கவும் சிரமப்படுகிறார்கள். அவர்களுக்கு கொள்ளிடத்திலிருந்து குடிதண்ணீர் கொண்டு வரும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கின்றதா என்பதை அறிய





விரும்புகிறேன். அப்படி இல்லையென்றால் இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரும்படி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அணைக்குடம் என்ற ஊரின் வழியாக ஜெயங்கொண்டத்திற்கு கொள்ளிடம் குடிதண்ணீர் குழாய் செல்கிறது. அந்த தண்ணீர் குழாயிலிருந்து அணைக்குடம் கிராம மக்கள் தண்ணீர் எடுத்துக் கொள்ள கை பம்புகளை இணைப்பதற்கு அரசு ஆவன செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய பகுதியில் குழாய்க் கிணறுகளில் போடப்பட்ட பல கை பம்புகள் பழுதடைந்த நிலையில் குடிதண்ணீருக்குப் பயன்படாத நிலையில் இருக்கின்றன. இதனைப் பராமரிக்கின்ற பொறுப்பு தமிழ்நாடு வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதாக அறிகிறேன். இவற்றைப் பராமரிக்க கூடுதலான மெக்கானிக்-கம்-பிட்டர் போட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் செ ர்கிறேன்.

மக்களின் இன்றியமையாத தேவை குடி தண்ணீர். சமுதாய வளர்ச்சித் திட்டத்தில் இதற்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தாலும் இன்னும்அதிக நிதி ஒதுக்கீடு செய்து தர வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். எனவே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் துறையும் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் பொறுப்பிலேயே இருக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மத்தியத்தர நீர்த்தேக்கங்கள் கட்டுவதற்கு வாய்ப்பிருந்தும் நிறைவேற்றப்படாத தொகுதி ஜெயங்கொண்டம். அதனால் சிறு பாசனத் திட்டங்களை நம்பித்தான் விவசாயிகள் பயிர் செய்ய வேண்டியிருக்கிறது. குடி. மராமத்துப் டணிக்காக அரசாணை எண். 674-ல் ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 2.50 வீதம் நிர்ணயிக்கப்பட்டிருக்கி[illegible] அதில் 1 ரூபாய் அரசு மானியமாகவும் ரூ. 1—50 ஆயக்க[illegible]தாரரிடமிருந்தும் வசூலிக்கப்பட வேண்டுமென சொ[illegible]ப்பட்[illegible]க்கிறது. தஞ்சை மாவட்டத்தில் அமுலில் உ[illegible] போ[illegible]ரசு மானியத்தை ரூ. 2 ஆக உயர்த்தும்படி கேட்டு[illegible]ள்கி[illegible]

ஜெயங்கொண்டம் ஒன்றியத்தில் நபர் ஒன்[illegible] ஆண்டு வருமானம் ரூபாய் 720-க்குக்கீழேயுள்ள மக்கள் 60.[illegible]விகிதத்திலிருந்து 65 சதவிகிதம் வரை இரு[illegible]க கூறப்படுகிறது. வானம் பார்த்த பூமியில் வசிக்கும் இந்த[illegible]தி மக்களுக்கு கறவை மாடுகள் வழங்கும் திட்டம், கோ[illegible]ணை வைத்தல், ஆடு வளர்ப்பு ஆகிய திட்டங்களைத் தீ[illegible]ங்களாக அமுல்படுத்தினால் அவர்கள் வாழ்வில் முன்[illegible]வார்கள். இதற்காக ஜெயங்கொண்டம் தொகுதியில் கா[illegible]ப் பண்ணை அமைத்து அதனை ஒரு மைய நிலையமாக [illegible]ற்படுத்த ஆவன செய்ய வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. பி. தங்கவேலு] [1980 ஜூலை 21

கிராமப்புறங்களில் இணைப்புச் சாலைகள், ரூரல் ரோடுகள் அமைப்பது மிகவும் அவசியமும், அவசரமாகவும் செய்ய வேண்டிய திட்டம். ஏனென்றால் All social progress resolves itself into the making of good Roads அனைத்து சமுதாய வளர்ச்சியும் நல்ல சாலைகளை அமைப்பதி லேதான் அடங்கியிருக்கிறது. இன்றைக்கு ரூரல் ரோட்ஸ் திட்டத்தின் கீழ் 1500 மக்கள் தொகைக்கு மேலுள்ள கிராமங் களைத்தான் எடுத்துக் கொள்கிறார்கள். 1971 ஆம் ஆண்டு எடுத்த மக்கள் தொகை கணக்கு இது. இந்த 9 ஆண்டுகளில் மக்கள் தொகை அதிகரித்திருக்குமல்லவா? இனிமேல் 1981 ஆம் ஆண்டுதான் சென்சஸ் எடுப்பார்கள். 'கிராமத் தன்னிறைவுத் திட்டம்' ஒரு ஒன்றியத்தில் நான்கு அல்லது 5 ஆண்டுகள் நடை பெறும் என்று கூறுகிறார்கள். எனவே அனைத்து கிராமங்களுக்கும் சாலை வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்றால் 500 மக்கள் தொகை கொண்ட கிராமங்களையும் ரூரல் ரோட்ஸ் திட்டத்தில் எடுத்துக் கொள்ள வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்தில், கூட்டுறவு தீப் பெட்டி தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் உற்பத்தியாகும் தீப்பெட்டிகளை ஒருமார்கெட்டிங் செக்ஷன் அமைத்து அரசே அவற்றை வாங்கிக் கொள்ளவேண்டும். அதற்கான லேபிள்களைக் கூட அரசே தயாரித்துக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் தான் வெளி மார்க்கெட்டில் போட்டியிட முடியும். இந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலைகளும் நல்ல முறையில் செயல்பட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய அரசின் திட்டமான ''உழைப்புக்கு உணவு'' திட் டத்தை தமிழக அரசு செயல் படுத்தும் தருணத்தில் பின்தங்கிய பகுதியான ஜெயங்கொண்டம் தொகுதியில் முறையாகவும், முனைப்பாகவும் செயல்படுத்த வேண்டும் என்பதுதான் எனது ஆசையும், வேண்டுகோளுமாகும்.

[பிற்பகல் 11–20]

ஒரு கார் தார் ரோட்டிலே ஓடும்போது டாப் கீர் போட்டாலே போதும். ஆனால் அந்தக் காரே மணற்பாங்கான கரடுமுரடான சாலைகளில் செல்ல வேண்டுமானால், முதல்கியர் போடவேண்டும். தார் ரோட்டில் செல்வதைவிட மணற்சாலையில் செல்வதற்கு பெட்ரோல் கொஞ்சம் அதிகம் செலவாகும். இதைப் போலத் தான் அரசு நிதிகள் ஒதுக்கீடு செய்யும்போது, மிகவும் பின்தங்கிய பகுதியான ஜெயங்கொண்டம் தொகுதிக்கு நிதியை தாராளமாக தரவேண்டுமென மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர் களை நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். (மணி ரடிக்கப்பட்டது)



1980 ஜூலை 21] [திரு. பி. தங்கவேலு]

நடப்பு ஆண்டில் தமிழ்நாட்டினுடைய அரசு வருமானம் ஏறத் தாழ ரூ. 1000 கோடி எனக் குறிப்பிட்டு இருக்கின்றது. இதில் சமுதாய வளர்ச்சித் திட்டத்திற்காக 29 கோடியே 25 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகையானது மொத்தத்தில் 2½ சதவீதம் தான். நூற்றுக்கு எழுபத்தைந்து சத விகித மக்கள் கிராமங்களிலே தான் வசிக்கிறார்கள். எனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் சமுதாய வளர்ச்சித் திட்டத் திற்கு கூடுதலான நிதியை ஒதுக்க வேண்டு மென கேட்டுக் கொள் கிறேன்.

அத்துடன், மதனத்தூருக்கும், நீலத்தநல்லூருக்கும் இடையில் கொள்ளிடம் ஆற்றில் பாலம் கட்ட வேண்டுமென்பது ஜெயங் கொண்டம் தொகுதி மக்களின் நீண்ட நாளைய கோரிக்கை. இத்திட்டத்தை நிறைவேற்றித் தரும்படி தமிழக அரசைக் கேட்டுக் கொண்டு, இங்கே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தற்காலிக சபாநாயகருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஆர். ரங்கசாமி : தலைவர் அவர்களே, மாண்பு மிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் அவை முன் வைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகள் மீது என் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். உள்ளாட்சித் துறையைப் பொறுத்த வரையில், கிராமப்புறங்களில் அது மிகச் சிறப்பான பணியைச் செய்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயத் துறையைப் பொறுத்தவரையில் அங்கே ஒரு விவசாய டெப்போ அமைத்து, அது ஒரு அதிகாரியின் கீழ் செயல் படுத்துவதன் மூலம், விவசாயிகளுக்குத் தேவையான பொருள்களை, நியாயமான விலையிலும், மலிவான விலையிலும் வழங்கி வருவது, ஒரு மிகப் பெரிய பணி என்பதை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே போல் பள்ளிக் கூடங்கள் அமைத்து, கிராமங்களிலே ஆரம்பக் கல்வி நிர்வாகத் தை உள்ளாட்சித் துறை சிறப்பாகச் செய்து வருகிறது.

கிராமங்களில் மகளிர் மன்றங்கள் ஏற்படுத்தி, சமுதாயத்தில் தாய்மார்களுக்கு பங்கு என்ன என்பதை உணரச் செய்கிற மாபெரும் பொறுப்பை இந்த உள்ளாட்சித்துறை நிறைவேற்றி வருகிறது என்பதற்காக என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் பகுதியில் உள்ள சிக்கரசன்பாளையம், புதூர், புதுபீர்கடவு, போன்ற ஊர்களில் உள்ள மகளிர் மன்றங்கள் கூட்டுறவு முறையில் பால் விநியோகமும் செய்கிறார்கள். என்கிற விவரத்தையும் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் மூலம் கடன் பெற்று கறவை மாடு வாங்குதல், ஆடு வளர்த்தல், போன்ற பணிகளைச் செய்து, கிராமப் பொருளாதாரத்தை, கிராம வளர்ச்

சியை செய்து வருகிறது. இத்திட்டங்களுக்கான அரசு மானியத்தையும் ஆணையாளர் மூலம் வழங்கி நல்ல முறையில் இந்த உள்ளாட்சித் துறை செயல்படுவதற்காக என் பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய நாட்டில் முக்கியமான, அத்தியாவசியமான கொள்கையாக இருப்பது குடும்பக் கட்டுப்பாடு திட்டம். அந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கின்ற நம்முடைய பணியாளர்களின் மூலமாகத்தான் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே போல் தாய் சேய் நல விடுதிகள் 1000 மக்கள் தொகை உள்ள கிராமங்கள் தோறும் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருவது வரவேற்கத்தக்கதொன்றாகும். இந்த மகப்பேறு நிலையங்கள் நிர்வாகம் உள்ளாட்சித் துறை மூலம் தான் நடைபெறுகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, இது தாய்மார்களுக்குச் செய்யும் மிகப் பெரிய தொண்டு என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோல், பஞ்சாயத்து யூனியன் மூலம் மருத்துவமனைகளும் நடத்தப்படுகின்றன. கிராமங்களில் கால்நடைகளைப் பாதுகாப்பது மிக முக்கிய கடமையாகும். அந்தப் பணியும் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் தான் செய்யப்படுகின்றது. கிராமங்களில் குழந்தைகள் காப்பகங்கள் ஏற்படுத்தி, அங்கே குழந்தைகளைப் பராமரிக்கும் கட்டிடங்கள் கட்டிக்கொடுத்து. அந்தக் குழந்தைகள் நல்ல முறையில் வளர்வதற்கு சத்துணவுத் திட்டம் கொடுத்து வளர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல சிறு சேமிப்பு திட்டம், இன்னும் பல பணிகளை நம்முடைய அரசு ஊராட்சிகளிலும் ஊராட்சி ஒன்றியங்களிலும் கிராமப்பணிகளாகச் செய்து வருகிறது. இப்போது தன்னிறைவுத் திட்டம் என்ற அந்த திட்டத்தின் கீழ் 1978–79ஆம் ஆண்டில் 66 பஞ்சாயத்து யூனியன்களும் 1980–81ஆம் ஆண்டில் 100 பஞ்சாயத்துக்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கே முக்கிய கடமைகளை ஆற்றுவதற்கு இந்த அரசு முன்வந்திருப்பது இதற்குமுன் எந்த அரசும் செய்யாத மிகப்பெரும் சாதனை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த காலங்களில் எல்லாம் கிராமங்களில் ரோடு ஓரங்களில் வளர்ந்து இருக்கும் முள்ளை அகற்றுவதற்குக் கூட இரண்டு, மூன்று ஆண்டுகள் ஆகும் சூழ்நிலை இருந்தது. ஆனால் நம்முடைய அரசு வேலைக்கு உணவு என்ற அந்த திட்டத்தை கொண்டுவந்து, வருமானமே இல்லாத பஞ்சாயத்துக்களில் கூட ரோடு போடவும், பள்ளிக் கட்டிடங்கள் கட்டவும், சாலையோரம்





வளர்ந்துள்ள முள் செடிகளை அகற்றவும், சாலைகளை பராமரிக்கவும் இன்னும் பல நல்ல காரியங்களை அந்த வேலைக்கு உணவுத் திட்டம் என்ற அந்தத் திட்டத்தின்கீழ் செயல்படுத்திக்கொண்டிருக்கிறது.

ஒரு காலத்திலே சுவர்களிலே பார்த்தால் ''வேலை கொடு, இல்லை என்றால்உணவு கொடு '' என்ற வாசகங்களை பார்க்கலாம். வேலை கொடு, இல்லை என்றால் உணவு கொடு என்று கேட்ட அந்த திட்டத்தையும் நம்முடைய புரட்சித் தலைவர் ஆட்சியில் நிறைவேற்றியிருக்கிறார்கள். வேலையும் உண்டு, வேலைக்கு உணவும் உண்டு, வேலைக்கு உறுதியான திட்டமும் உண்டு என்ற நிலையை உருவாக்கியது நம்முடைய புரட்சித் தலைவர் ஆட்சி ஒன்றுதான்.

இரண்டரை ஆண்டு காலம் சிறப்பாக நடைபெற்ற அந்த வேலைக்கு உணவு என்ற திட்டத்தை நம்முடைய ஆட்சி கலைக்கப்பட்ட பின்னால் இடையிலே 4 மாதங்களுக்கு நிறுத்திவிட்டார்கள். மீண்டும் இந்த புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் அத்திட்டத்தை கிராமப்புறங்களிலே நிறைவேற்ற இப்போது முனைந்திருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்கும்போது ஏழை எளிய மக்கள், கிராமப்புற மக்கள் புரட்சித் தலைவரை சரியான நேரத்தில் தேர்ந்தெடுத்து இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அனுப்பி வைத்திருக்கிறார்கள் என்பதைத் இங்கே தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல 300 மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு குழாய் கிணறு அமைத்து அங்கும் குடிநீர் வழங்கப்படும் என்ற திட்டத்தை அறிவித்திருப்பது கிராம மக்களுக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய ஒன்றாகும். அதைப்போல 750 மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு கிராமத்திற்கும் இரண்டு குழாய் கிணறுகள் அமைத்து அல்லது பவர் பம்புசெட் மூலம் தண்ணீர் வழங்க திட்டமிடப்பட்டிருக்கிறது. கிராம மக்களுக்கு முக்கியமாகத் தேவைப்படுவது குடி தண்ணீர் வசதி, பள்ளிக்கூட வசதி, சாலை மேம்பாட்டுத் திட்டம் ஆகிய இந்த மூன்றும் ஆகும். நம்முடைய புரட்சித் தலைவர் ஆட்சி இந்தத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் இந்தத் திட்டங்களை நல்ல முறையிலே செயல்படுத்துவதையும், மற்ற எல்லாத் திட்டங்களையும் தன்னிறைவு திட்டத்தின் மூலம் நிறைவேற்ற இந்த அரசு திட்டமிட்டிருப்பதையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல இங்கே சாலை மேம்படுத்தும் திட்டம் செயல்படுகிறது. அதிலே நேஷனல் ஹைவேஸ்—தேசிய நெடுஞ்சாலைத் திட்டம் என்றும், மாநில நெடுஞ்சாலைத் திட்டம்

[திரு. ஆர். ரங்கசாமி] [1980 ஜூலை 21

என்றும், மாவட்ட நெடுஞ்சாலைத் திட்டம் என்றும், இன்னும்
ஊராட்சி ஒன்றியங்களில் ஊரக சாலைத் திட்டம் என்றும்
நான்கு பிரிவுகளாகப் பிரித்து இன்றைய தினம் ஒவ்வொரு
கிராமத்தையும் முக்கிய நகரகங்களுடன் இணைத்து அந்தக் கிராம
மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, வேண்டிய வசதிகளை
எல்லாம் ஏற்படுத்தி வருகிறது நம்முடைய புரட்சித் தலைவர்
அரசு.

கிராமப்புறங்களில் பொருளாதாரம் வளர்ச்சி பெறவேண்டு
மென்றால் சாலை இணைப்புகளை ஏற்படுத்தி, போக்குவரத்து
வசதி ஏற்பட்டால்தான் அங்கே இருக்கிற மக்கள் தங்களுடைய
விளைபொருட்களை நகரங்களுக்குக் கொண்டுவரவும், நகர்ப்புற
மக்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களை அவர்களிட
மிருந்து வாங்கிக்கொள்ளவும், கிராம மக்களுக்குத் தேவையானவை
களை நகரங்களிலிருந்து வாங்கிக்கொள்ளவும் வாய்ப்பு ஏற்படும்
என்பதை நம்முடைய புரட்சித் தலைவர் உணர்ந்து குழந்தை
உள்ளத்தோடு திட்டங்களைத் தீட்டி, வேல் போன்ற கூர்மை
யோடு அவைகளைச் செயலாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.
இப்படிப்பட்ட இந்த அரசுக்கு நான் என்னுடைய பராாட்டுதல்
களைத் தெரிவித்து, இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று
என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. டி. மணி : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு
உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கிற
மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்களை
சொல்ல விரும்புகிறேன்.

இந்த மானியங்களின் மூலமாக கோடிக்கணக்கான ரூபாய்
களை செலவிடக்கூடிய பல திட்டங்களை இங்கே வைத்துள்ளார்
கள். இந்தக் கோரிக்கைகளுக்கு எல்லாம் இந்தக் கோடிக்
கணக்கான ரூபாய் போதுமா என்றால் அது போதாது. ஏனென்
றால் இப்போது நகராட்சிகளை எடுத்துக்கொண்டாலும் சரி,
ஊராட்சி ஒன்றியங்களை எடுத்துக்கொண்டாலும் சரி, அங்கே
இருக்கிற குறைபாடுகளைச் சொல்ல வேண்டுமென்றால் முதலிலே
குடிநீர் வசதி இல்லை.

[முற்பகல் 11-30]

அடுத்து இரண்டாவதாகச் சொல்கின்றபோது சாலைகள்
வசதி போதுமானதாக இல்லை. இந்த மாதிரி குறைபாடு
களைப் பொறுத்தவரையில் நம்முடைய மாநிலத்தின் எந்தப்
பகுதியை எடுத்துக்கொண்டாலும் இப்படிப்பட்ட குறைபாடு
களைத்தான் பார்க்க முடியும். இந்த குறைகளை போக்க
போதுமான பணம் இல்லை என்று கூறுகிறார்கள். ஆனால்
ஊராட்சிகளைப் பொறுத்தவரையிலும், மற்றும் நகராட்சி



1980 ஜூலை 21] [திரு. டி. மணி]

களைப் பொறுத்தவரையிலும் அவற்றின் வருவாயை எவ்வாறு
பெருக்குவது என்பது குறித்து நான் ஒருசில கருத்துக்களைக் கூற
விரும்புகிறேன்.

சாதாரணமாக 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை வரி விதிக்
கின்றார்கள். வரிவிதிப்பிலிருந்து தனவந்தர்கள் தங்களை
பாதுகாத்துக்கொள்ள வாடகைக்கு விடும் விடுதிகளையும் கடை
களையும் பினாமியாக வைத்து ஏமாற்றி வருகிறார்கள். இதை
சரியான முறையில் கண்காணிக்க வேண்டும். பல பணம்
படைத்தவர்கள் அரசுக்குச் செலுத்தவேண்டிய வரியினை சரிவர
கொடுக்காமல் ஏமாற்றுகிறார்கள். ஆகவே நகராட்சியானாலும்
சரி, ஊராட்சி மன்றங்களாக இருந்தாலும் சரி அவைகளே
சொந்தமாக விடுதிகளையும் அதிகப்படியான கடைகளையும்
கட்டி அதன் மூலம் வருகின்ற வாடகையைப் பெற்றால் அவற்றின்
வருவாய் அதிகரிக்கும். அதைக்கொண்டு இப்படிப்பட்ட பல்
வேறு பணிகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
கிராமப்புறங்களை எடுத்துக்கொண்டாலும், நகராட்சிகளை
எடுத்துக்கொண்டாலும் அல்லது இரண்டாம் தர மூன்றாம் தர
நகராட்சிகளை எடுத்துக்கொண்டாலும் குடி தண்ணீர் பிரச்சினை,
தெருவிளக்குப் பிரச்சினை இன்று பெரும் பிரச்சினையாகி
யுள்ளன. இவற்றை எல்லாம் அகற்ற வேண்டும் என்றால்
அந்த நகராட்சிகளுக்கோ, ஊராட்சி மன்றங்களுக்கோ
அதிகப்படியாக மானியங்கள் கொடுத்து அல்லது நீண்ட காலக்
கடன்கள் கொடுத்து இது மாதிரிக் குறைபாடுகளைப் போக்கு
கின்ற வகையிலே நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏற்பாடு
செய்யலாம்.

சில இடங்களிலே பஸ் நிலையங்கள் நகராட்சிகளின் பொறுப்
பிலே இருக்கின்றன. அந்த பஸ் நிலையங்கள் சரியான வசதிகள்
உள்ள நிலையிலே இல்லை. அந்தப் பஸ் நிலையத்தை விரிவு
படுத்துவதற்கு நகராட்சிகளுக்கு போதிய பணவசதி இல்லை.
அதற்கு தேவையான பணவசதி செய்துகொடுக்க வேண்டும்.
குறிப்பாக குடியாத்தத்திலே உள்ள பஸ் நிலையத்தை விஸ்தரிக்க
வேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாக இருந்துவருகின்றது.
அந்த பஸ் நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றாமல் அதை
அந்த இடத்திலேயே விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்
கொள்ளப்படவேண்டும்.

எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நாகர்
கோவில், தக்கலை, குளித்தலை போன்ற இடங்களில் எல்லாம்
குடிநீர் வசதிகள் போதிய அளவில் இல்லாத நிலை இருக்கின்றது.
குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இப்போது மழை
பெய்ய வேண்டிய நேரம். தற்போது மழை இல்லாத காரணத்தால்
நாகர்கோவிலிலே குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டு குழா
யடிகளுக்கு அருகில் குடங்களை வைத்துக்கொண்டு நீண்ட வரிசை

நிற்பதை பார்க்கலாம். அது போன்றுதான் குமரி எல்லையிலும் குடிநீர் சரிவர கிடைப்பதில்லை குமரி டவுஷி ப்பாக இருந்தும் சரிவர கவனிக்கப்படாமல் பல்வேறு குறைகள் உள்ளன. குறிப் பாக என்னுடைய தொகுதியிலே உள்ள குளித்தலையில் ஒரு குடிநீர்த்திட்டம் இருக்கின்றது. இந்தத் திட்டத்திற்காக ஏற் கெனவே 10 ஆண்டுகளுக்கு முன்னால் 20 இலட்சம் ரூபாய் செலவிட்டார்கள். அவ்வாறு செலவிட்டு அதைச் சரிவர செய் யாததன் காரணத்தால் இன்று குடிநீர் சரிவர கிடைக்கசுாத நிலை இருக்கின்றது. அங்கே தண்ணீருக்காக டேப்பை திறந்தால் முதலிலே சிவப்பு நிறத்திலே கலங்கலான தண்ணீர் வருகின்றது, இரண்டாவது பால் நிறந்திலே தண்ணீர் வருகின்றது, மூன்றாவ தாக தான் குடிப்பதற்கான தண்ணீர் கிடைக்கின்றது. ஆகவே இன் றைக்கும் கூட அந்தக் குடிநீர்த் திட்டம் முழுமையாக செயல் படாத நிலையில் இருந்து வருகின்றது. அந்தத் திட்டம் மூடப் பட்டுவிடக்கூடும் என்று அங்கே இருக்கின்ற கமிஷனர் அவர்கள் தகவல் தெரிவித்திருக்கிறார்கள். அந்தத் திட்டம் சரிவர செயல்படவில்லை. ஆகவே அங்கு குடிநீர் கிடைக்கின்ற வகை யிலே ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இதுபோன்ற குறைகள் நம் மாநிலத்தில் பல்வேறு மாவட்டங்களில் இருக்கின்றன.

சாலைகளையும், பாலங்களையும் எடுத்துக்கொண்டால் கன் னியாகுமரி மாவட்டத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, நெல்லை மாவட்டத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, கோவை மாவட்டத்தை எடுத்துக்கொண்டாலும் எந்த மாவட்டத்தை எடுத்துக்கொண்டாலும் சரி சாலைகளும் பாலங்களும் சரியான நிலையிலே இல்லாதது மட்டுமல்ல தேவையான பாலங்களும், சாலைகளும் இல்லை.

எங்களுடைய மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் வெள் ளைக்காரன் இருந்த காலத்திலிருந்து சில கோரிக்கைகளை நாங்கள் சொல்லிக்கொண்டு வருகின்றோம். ஆனாலும் அப் போதிருந்த நிலைதான் இன்னும் இருக்கின்றது. குறிப்பாக கண்ணனூர், தூத்தூர் பந்நிப் பாலம் இவைகள் மிகவும் ஆபத்தானநிலையிலே இருந்துகொண்டிருக்கின்றன. அதேபோன்று திருவெட்டாறு பாலம் சரியான நிலையிலே இல்லை. மேலும் கண்ணனூர் பாலத்தைப் பொறுத்தவரையில் வட பகுதிக்கு செல்கின்ற பஸ்கள் எல்லாம் அந்த வழியாகத்தான் செல்கின்றன. அந்தப் பாலம் மிகவும் குறுகலான பாலமாக இருப்பதால் பஸ்கள் செல்லும்போது இரண்டு பக்கமும் உராயக் கூடிய நிலையிலே இருக்கின்றது. அதன் அகலம் கிட்டத்தட்ட 12 அடி தான் இருக்கும். இப்படிப்பட்ட கேடுகெட்ட நிலை அந்தப் பகுதி யிலே இருக்கின்றது.



அதேபோன்று சிற்றாற்றின் கரையிலே ஒரு பாலம் இருக் கிறது. எந்த நேரத்திலே அந்த பாலம் உடைபடும், எந்த நேரத் தில் அந்தப் பாலத்தின் மீது செல்கிற மக்கள், அல்லது பஸ்ஸில் செல்கிறமக்கள் ஆபத்துக்குள்ளாவார்கள் என்று புரிந்துக் கொள்ள முடியாமல், ஆபத்தான கட்டத்தில் இருக்கிறது. இதேபோன்று தான் பல பாலங்களின் நிலையும் தமிழ்நாட்டிலே இருந்து கொண்டிருக்கின்றன.

குறிப்பாக கோவை மாவட்டத்திலே இருக்கிற சில பாலங்களை பற்றிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கோவையில் புளியங்குளம் சாலையில், அம்மன் குளத்தருகில் ஒரு பாலம், வடகோவையில் இரயில்வே மேம்பாலம், வாசுதேவ நல்லூரிலே சேவல் பனையூர் பாலம், இனாம் கோவில்பட்டி தென்மலைச் சாலையிலுள்ள, அம்பை அடைச்சாணி பாலம், சிவகெங்கை பகுதியிலுள்ள இருப்புப் பாலம், ஆகியவைகள் இங்கே எடுத்துச் சொல்ல வேண்டியவைகளில் முக்கியமான பாலங்கள் இந்தப் பகுதிகளில் புதிய பாலங்கள் கட்டப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பாலங்களைப் போலவே சாலைகளும் மிக முக்கியமான தேவையாக கிராமப்புறங்களில் இருக்கின்றன. குறிப்பாக என்னுடைய தொகுதியிலே கிராமப்புறங்களிலிருந்து நகர் புறம் செல்லும் சாலைகள், கடலோரப் பகுதியிலிருந்து நகர்ப் புறம் செல்லும் சாலைகள், மலையோரப் பகுதியிலிருந்து நகர்ப் புறம் செல்லும் சாலைகள், ஆகியவைகள் மிக மோசமான நிலை யில் உள்ளன. இப்படிப்பட்ட இணைப்புச் சாலைகள் நல்ல நிலை யில் இருந்தால் தான் கிராம மக்களுக்கு நகரத்தோடு தொடர் புக் கொள்ள முடியும். ஆகவே இவைகளை செப்பனிட்டு சரிவர அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட இணைப்புச் சாலைகள் தாம் இந்த நிலையில் இருக்கின்றன என்று இல்லை, கிராமப் புறங்களிலே இருக்கிற எந்தச் சாலையை எடுத்துக் கொண்டாலும் சாலை அமைப்பு சரிவர அமைக்கப் பெறவில்லை என்பது ஒரு பெருங்குறையே. குறிப்பாக என்னுடைய தொகுதியிலே பேச்சுப் பாறையிலிருந்து கோதையாற்றுக்கு செல்கிற சாலை, ஒரு 16 கிலோ மீட்டர் தூரம் மொத்தமாக இருக்கும். இந்தச் சாலையின் இரு புறமும் வனப் பகுதியாகத்தான் இருக்கிறது. அரசு துறையின் கே.டி.சி. பஸ்கள் அந்தச் சாலை வழியாகத் தான் செல்கின்றன. மின் சாரத் துறையைச் சேர்ந்தவர்களும், வனத்துறையைச் சேர்ந்த அதிகாரிகளும் அந்தச் சாலை வழியாகத்தான் ஜீப் காட்டிலாகா பிலே, வேனிலே செல்கிறார்கள். அந்தச் சாலைகள் படு மோச மான நிலையில் குண்டும் குழியுமாக, மேடு பள்ளங்கள் நிறைந் திருக்கின்றன. அந்தச் சாலையில் எந்த நேரத்திலும் விபத்

நேரிடலாம் என்கிற பயத்தில் தான் செல்கிறார்கள். விபத்து
மட்டுமல்ல, ஒரு புறம் வனப்பகுதியாக இருப்பதினால், எந்த
நேரத்தில் காட்டு மிருகங்களால் அடித்துத் தாக்கப்படும் சூழ்
நிலையும் பேச்சிப்பாறையிலிருந்து கோதையாற்றுக்குச் செல்கிற
இந்தச் சாலையில் இருந்து கொண்டிருக்கிறது. ஏற்கெனவே
இந்தச் சாலையைப் பற்றி, 1978-லே இந்த மாமன்றத்தில் உறுப்
பினராக இருந்த என்னுடைய சகோதரர் இந்தப் பிரச்னையை
எழுப்பியிருக்கிறார். ஆனால் இரண்டாண்டு காலமாகியும்,
அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பெற்றும் சாலை பழுது பார்க்
கும் வேலை ஆரம்பிக்கப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.
ஆகவே அதை உடனடியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்று என் தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டுக்
கொள்கிறேன்.

அதைப்போலவே தேசிய நெடுஞ்சாலை என்று எடுத்துக்
கொண்டால் குமரியிலிருந்து களியக்காவிளைவரை உள்ள நெடுஞ்
சாலைக்கென்று ஏற்கெனவே 73 இலட்சம் ஒதுக்கப்பெற்று
அதற்கான பணி தொடங்கப்பெறவே இல்லை. அதையும்
கொஞ்சம் துரிதமாக முடிக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். அது போன்று காரோடுபுலியூர் சாலை ரோட்டில்
உள்ள ஒரு பகுதியில் இரு மருங்கிலும் பக்கச் சுவர்கட்டி பல
மாதங்களாகியும் அதன் நடுப் பகுதி செப்பனிடப்படாததால்
வெறுப்படைந்த மக்கள் வாழைக் கன்றுகளையும் நெல் பயிரையும்
நட்டார்கள். மக்கள் தங்கள் கடினமான எதிர்ப்பைக் காட்டி
யுள்ளனர். அதைப் போலவே கடலோரப்பகுதியில் எரேமியன்
துறையிலிருந்துநீரோடி வரை சுமார் 20 ஆயிரம் மக்கள்வசிக்கின்ற
பகுதியில் குடிதண்ணீர் இல்லாமல் அவதிப்படுகிறார்கள். அவர்
களின் ஒருஎல்லையில் கடல் தண்ணீரும் அதாவது உப்புத் தண்ணீ
ரும் மற்றொரு எல்லையில் A. V. M. கால்வாயும் அந்த முறையில்
செல்கிறது. அது சாக்கடைத் தண்ணீர் ஓடுகிற கால்வாயாக
இருப்பதினால் சாக்கடைத் தண்ணீராகவும் இருக்கிறது. அவர்
களுக்குக் குடிக்கக் குடிதண்ணீர் இல்லை. ஆகவே அந்த வசதியை
அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். அவர்களுக்குக் குடிதண்ணீர் வசதி கட்டாயம்
இந்த (மணியடிக்கப்பெற்றது) அரசு செய்து தரவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து குடிநீர் வடிகால் வாரியம் ஆரம்பிக்கப் பெற்று 10
வருடங்கள் ஆகியும் அதில் பணிபுரியும் ஊழியர்களுக்குக் கிடைக்க
வேண்டிய சலுகைகள் கூட கிடைக்காத நிலை இருந்து வருகிறது.
மேலும் அங்கே பணிபுரியும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தினக்கூலி
ஊழியர்கள் இன்றைய நாள் வரை நிரந்தரம் செய்யப்பெறாமல்
இருந்து வருகிறார்கள். அவர்களை உடனே நிரந்தரம் செய்ய
வேண்டும். அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய சம்பள விகி
தங்கள் மாற்றப்பட்டு, அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி
செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்
கப் பெற்றது).





அதைப் போலவே பஞ்சாயத்து யூனியனில் இருக்கிற சுமார்
ஐயாயிரம் ஊழியர்கள் எந்தவிதமான பதவி உயர்வும் இல்லாத
நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் அங்கே 10, 15 ஆண்டுக்
காலமாக வேலை செய்தும் அதே நிலையில் தான் இருந்து
கொண்டிருக்கிறார்கள், எந்தவித பதவி மாற்றமும் இல்லாமல்
இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக்கடமை பட்டி
ருக்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது). அவர்களுடைய நியாயமான
உரிமைகளை அரசு கவனிக்க வேண்டும், அதோடு ஒன்றை மட்டும்
[illegible] முடித்துக் கொள்ளுகிறேன். ஊராட்சி ஒன்றியங்களில் கால்
நடை விரிவாக்க ஆய்வாளர்களாகப் பணி புரிகின்றார்கள். அவர்
க்கும், கால்நடை டாக்டர்களுக்கும் இருக்கும்
[illegible] ச்சினையைப் சுமுகமாகப் பேசி முடிக்க வேண்டும் எனக்
ட்டுக் கொள்கிறேன். அடுத்ததாக, ஊராட்சிகளுக்கான தேர்
களை உடனடியாக நடத்தி முடிக்க வேண்டும். மாநிலங்
ளுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று நாம் வாதாடு
கின்றோம். ஊராட்சிகளுக்கும் அதிக அதிகாரம் கொடுத்து
ஜனநாயகத்தை விரிவுபடுத்தி அடிபட்ட மக்கள் வரை பங்காற்றக்
கூடிய அளவில பிரச்சினைகளைப் பார்க்க வேண்டும் என்று
சொல்லி முடிக்கிறேன்.

[முற்பகல் 11-40]

*திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலை
வர் அவர்களே, 1980—81-ம் ஆண்டுக்கான சமுதாய நல வளர்ச்சி
திட்டங்கள், நகர்ப் பகுதி வளர்ச்சி, சாலைகளும் பாலங்களும்,
சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு ஆகிய மானியங்
கள் மீது இந்த மாமன்றத்தில் பேசுவதற்கான அரிய வாய்ப்பினை
ஏற்படுத்தித் தந்த எங்கள் தானைத் தலைவர் மாண்புமிகு புரட்
சித் தலைவர் அவர்களுக்கும், என்னை எதிர்த்துப் போட்டியிட்ட
வேட்பாளர் ஜெயித்தாலும் தோற்றாலும் தான்தான் கூட்டுறவுத்
துறை அமைச்சர் என்று சொல்லி ஆசைவார்த்தைகள் காட்டி
யும் எனக்கு வெற்றி தேடித்தந்த குறிஞ்சிப்பாடி தொகுதி வாக்
காளப் பெருமக்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

இந்த மானியக் கோரிக்கைகள் மீது பேசும்போது நம்முடைய
அரசு சாலைகளைப் பல வகைகளாகப் பிரித்து தேசிய நெடுஞ்
சாலைகள், கிராமப்புறச் சாலைகள் என்று பலவகைகளாகப்
பிரித்து இந்த ஆண்டு நிறைய நிதி ஒதுக்கப்பட்டிருப்பதைப்
பாராட்டி வரவேற்கிறேன்.

என் தொகுதியில் கடலோரப்பகுதியில் நிறைய மீனவர்களும்,
தாழ்த்தப்பட்ட மக்களும், பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்த
வர்களும், குறிப்பாக முப்பது கிராமங்களைச் சேர்ந்தவர்கள் அங்கே
வாழ்கிறார்கள். அந்தப் பகுதிக்குச் செல்ல வேண்டியவர்கள்
உப்பனாறு என்ற ஆற்றைக் கடந்துதான் தங்கள் வாழ்க்கைக்கு
வேண்டிய அத்தியாவசியப் பொருள்களை, உணவுப் பொருட்களை
வாங்கி எடுத்துச்செல்லவேண்டியிருக்கிறது. அவர்கள் இப்போது
போட்டுகள் அல்லது தோணிகள் வழியாகத்தான் செல்ல

வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே உப்பனாருக்குக் குறுக்கே ஒரு பாலத்தை அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அங்குள்ள மக்களுக்கு அந்தப் பாலத்தை மட்டும் அமைத்துத் தந்தால் போதாது. அவர்களுக்கு சாலை வசதியும், குடிநீர் வசதியும் செய்து தரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக அந்தப் பகுதி மக்கள் வாழ்க்கையில் செம்மையுற தங்களுக்கு இவை இவை வேண்டும் என்று கேட்கிற நிலை இல்லாமல் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எப்படி வாழ்வது என்று தெரியாமல் வெளியேறிக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, அந்தப் பகுதி முன்னேற, அந்தப் பகுதி மக்கள் வாழ்க்கை செம்மையடைய அந்தப் பாலத்தைக் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு கூட அங்கு வேண்டிய சாலைவசதிகளும் செய்து தர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அங்கே பெருமாள் ஏரிக்கரை என்று கிட்டத்தட்ட 15 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. அந்தப் பாதை மிகவும் சீர்கேடான நிலையில் இருக்கிறது. அந்தப் பாதை வழியாகத்தான் பேருந்துகள் சென்றுகொண்டிருக்கின்றன. அந்தப் பாதை செம்மைப்படுத்தப்படாத காரணத்தால் அங்கே பேருந்துகளைச் சரியாக விடமுடியவில்லை. ஆகவே, அப்படிப்பட்ட ரோடுகளைச் செம்மைப்படுத்தித் தரவேண்டும் என்று நான் இந் நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்து, அங்கே பெருமாள் ஏரியின் கீழ்ப்பகுதியில் கிட்டத்தட்ட 40 கிராமங்கள் இருக்கின்றன. அந்த 40 கிராமங்களுக்குச் செல்ல வேண்டுமென்றால், கிட்டத்தட்ட 25 கிலோ மீட்டர் சுற்றிச் செல்ல வேண்டும். இந்தக் கிராமங்களுக்கு நேரடியாகச் செல்ல வேண்டுமென்றால், அங்கே இருக்கின்ற கொத்தவாச்சாரி, குண்டியமல்லூர் வழியாகச் செல்லலாம். அதைக் கடந்து செல்வதற்கு அங்கே ஒரு தரைப்பாலம் போடவேண்டும். அப்படி அங்கே தரைப் பாலம் போட்டால், அந்த 40 கிராமங்களுக்கும் குறுகிய காலத்தில், சீக்கிரமாகச் செல்வதற்கு வழியிருக்கிறது. எனவே, அந்தப் பாலத்தைப்போட்டுத் தரவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கடுத்து, நமது அரசாங்கத்தின் மூலமாகக் கிராமச் சாலைகள் போடும் திட்டத்தின்கீழ் அந்தப் பணிகள் தொடரப் படுகின்றன. அப்படிச் சாலைகள் போடுகின்றபோது, புளு மெட்டலால் போடப்படுகின்ற அந்தச் சாலைகள் சீக்கிரத்திலே கெட்டுப் போய் அங்குள்ள மக்களுக்குப் பயனில்லாமல் போய் விடுகின்றன. அங்கே நல்ல சாலைகள் போடமுடியாத நிலைமையால், அந்தப் பணம் வீணாகப் போகின்றது. இந்தச் சாலைகள் போடுவதற்கு மதிப்பீடு செய்யும்போதே தார் ரோடும் போடுவதற்கு ஏற்பாடுகள் செய்திருந்தால், அப்போது அந்த சாலைகள்



மக்களுக்குப்பயனுள்ளதாகஇருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிப் பட்ட சாலைகள் என்னுடைய பகுதியிலேயும் இரண்டை அமைத்தார்கள். 6 மாதங்களுக்குள்ளாக அந்தச் சாலைகள் எந்தவிதமான பயனும் இல்லாமல் போய்விட்டன. ஆகவே, ரோடுகள் போடும்போதே தார் ரோடுகளாகப் போடவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதற்கடுத்து, ஊராட்சி ஒன்றியங்கள். இந்த ஊராட்சி ஒன்றியங்களிலே பல வேலைகள் நடைபெறுகின்றன. கட்டிடங்கள் கட்டுதல், சாலைகள் போடுதல் போன்ற வேலைகள் நடைபெறுகின்றன. இப்படிப்பட்ட வேலைகள் நடக்கும்போது, அந்த வேலைகளைச் சரியாகக் கவனிப்பதற்கு, கண்காணிப்பதற்கு, அங்குள்ள ஏ. ஈ.யைப் போட்டால், அவரால் ஊராட்சி ஒன்றிய வேலைகளைச் சரிவரக் கவனிக்க முடியவில்லை. எனவே, மேலும் ஒரு ஏ. ஈ.யைப் போட்டு, 3 ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒரு ஏ.ஈ. என்ற வகையிலே ஒரு தனியாக ஏ.ஈ. போட்டால் இந்த வேலைகள் செம்மையாக நடைபெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதே நேரத்தில், இந்த ஊராட்சி ஒன்றிய வேலைகள் மேலும் செம்மையாக நடப்பதற்கு ரோடு ரோலர்கள், பவர் ரோலர்கள் உரிய காலத்திலே கிடைக்கவேண்டும். இப்படிக் கிடைக்காததால், ஊராட்சி மன்றங்களின் மானியம் கிடைக்காமல் போகிறது. ஆகவே, இந்த நிலைமைகளைச் சீர்படுத்தவேண்டுமென்றால், 3 ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒரு ஏ.டி. என்று தனியாக அமர்த்தினால், ஊராட்சி ஒன்றிய வேலைகள் செம்மையாக நடைபெறும்; அதே சமயத்தில் இந்த ரோடு ரோலர்கள், பவர் ரோலர்கள் கிடைப்பதற்கும்வழிசெய்து, இப்படிப்பட்டவேலைகள் உடனடியாக நடைபெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

அதற்கடுத்து, என்னுடைய பகுதியில் நிறைய வேலைகள் நடைபெறவேண்டும். எங்கே பார்த்தாலும் குடிதண்ணீர் வசதியில்லாமல், மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. ஆகவே, உடனடியாக என்னுடைய தொகுதியில் குடிதண்ணீர் வசதி செய்து தர வேண்டும். அதே நேரத்தில் என்னுடைய பகுதியில் நெய்வேலி இருக்கிறது. நெய்வேலியில் கல்லூரி ஒன்று அமைத்துத் தர இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அது தொழிலாளர்கள் நிறைய வாழ்கின்ற பகுதி. அந்த இடத்திலே ஒரு உயர் நிலைப்பள்ளி அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்து, நெய்வேலியில் இரண்டாவது பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் வெட்டும் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. (மணியடிக்கப்பட்டது). அதிலே ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அதிலே பணியாற்றுகின்றவர்களின் பிள்ளைகளுக்கே அங்குள்ள மக்கள் முன்னேற வேலை வாய்ப்புத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே மாதிரி, நெய்வேலியில் விவசாயப் பண்ணை நடைபெறுகிறது. அங்கே நிறைய பேர்கள் வேலை செய்கிறார்கள். அங்கே, திறமை இல்லாதவர்கள் இருக்கின்றபடியால், அந்த விவசாயப் பண்ணை நஷ்டத்தில் நடப்பதாகக் கணக்கு காட்டுகிறார்கள். நல்ல திறமையானவர்களை அங்கே நியமித்தால், லாபகரமாக நடக்கும். அதற்கு அரசு முன்வந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்கு வாய்ப்புக் கொடுத்த தலைவர் அவர்களுக்கு நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொண்டு, இந்த மான்ய கோரிக்கையை வரவேற்று, என உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

[முற்பகல் 11-50]

*திரு. செ. சிவசாமி : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சி வளர்ச்சி, குடிதண்ணீர், ரோடுகள், பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள், மருந்துகள் போன்றவற்றுக்குச் செலவழிப்பதற்கான அது சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகளின் பேரில் இந்தத் திட்டங்களைக் கொண்டு வருவதற்காக அதிகமாக நிதி ஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க அம்சம் என்றாலும் ஒரு சில குறைபாடுகளை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குடிதண்ணீர் 5420 குடியிருப்புகளுக்கு 31—6—80-க்குள் கொடுக்கப்பட்டுவிடும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதே போன்று 31—12—80-க்குள் அங்கே 38 கிராமங்களுக்குக் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தாயமங்கலம், திருப்பாலைக்குடி போன்ற பகுதிகளில் குடிதண்ணீர்த் திட்டம் நிறைவேற்றப்படவில்லை என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கிராமங்களில் கைப் பம்புகள் சரியான வேலை செய்யாததன் காரணமாக ஒவ்வொரு கிராமத்திலும் குடிதண்ணீருக்காகப் பல மைல் சென்று தண்ணீர் எடுக்க வேண்டியிருக்கிறது. உடனுக்குடன் பம்புகளை ரிப்பேர் செய்ய ஏற்பாடுகளை உடனடியாகச் செய்ய வேண்டும்.

இளையான்குடிக்குக் குடிதண்ணீர் கொடுக்க வேண்டுமென்று கருத்து தெரிவித்த காலத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'டெஃபர்' ஆகியிருக்கிறது என்ற வார்த்தையைச் சொன்னார்கள். அந்த 'டெஃபர்' என்ற வார்த்தையை நீக்கிவிட்டு உடனடியாக இளையான்குடிக்குத் தண்ணீர் கொடுக்கும் ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

ஆரம்பப் பள்ளிகளைப் பொறுத்தவரை அவை சரியான நிலையில் இல்லை. ஒருசில கிராமங்களில் அந்தப் பள்ளிகளில் பாம்புகள் தலைவிரித்தாடுகின்றன. நண்ணியாவூர் என்ற கிராமத்தில் தலைகாட்டிக்கொண்டிருக்கக்கூடிய நிலை இருக்கிறது என்று





ஏற்கெனவே தெரிவித்தேன். இன்னும் அப்படித் தலைகாட்டிக் கொண்டிருக்கக்கூடிய நிலைதான் இருக்கிறது. அப்படிப்பட்ட பள்ளிகள் இருக்கும் இடங்களில் நல்ல முறையில் கட்டிடங்கள் கட்டித் தரவேண்டும்.

இளையாங்குடியில் ஆஸ்பத்திரி கட்ட அஸ்திவாரக் கல் நாட்டி ஆறு மாதமாகிறது. தேர்தல் காலத்தில் கூட 'அஸ்திவாரக் கல் இங்கே, ஆஸ்பத்திரி எங்கே' என்று போர்டு எழுதி வைத்தார்கள். இந்த ஆஸ்பத்திரியை உடனடியாகக் கட்டுவதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்யவேண்டும்.

பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் தேர்தல்களை உடனடியாக நடத்தவேண்டும். கடந்த காலத்தில் மூன்று ஆண்டுகளாகத் தேர்தல் ஒத்திப் போடப்பட்டுக் கொண்டே வந்தது. இப்போதும் ஆறு மாத காலத்திற்கு ஒத்தி வைக்க பில் வருகிறது. கூடிய சீக்கிரத்தில் தேர்தல் வரும், வந்து விட்டது என்றெல்லாம் சொல்லப்பட்டது. தேர்தலை உடனடியாக நடத்த முன்வர வேண்டும். காலதாமதப்படுத்தக் கூடாது. தாமதம் பல சங்கடங்களுக்குக் காரணமாக இருக்கலாம் என்று குறிப்பாகக் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

துப்புரவுத் தொழிலாளர்கள் சம்பளம் பட்டுவாடா செய்யப்படவில்லை. அவர்களுக்கு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை சம்பளம் போடப்படுகிறது. அதை நீக்கி ஒவ்வொரு மாதமும் அவர்கள் வேலை செய்யக்கூடிய காலத்திற்குச் சம்பளம் போட்டுக் கொடுக்கவேண்டும்.

தெரு விளக்குகள் கிராமப் பகுதிகளில் 100-க்கு 80 சதவிகிதம் எரிவதே இல்லை. ஹெல்ப்பர்கள் ஒழுங்காக வேலை செய்வதில்லை என்று சொல்லப்படுகிறது. அவர்கள்தான் பல்புகள் ஒழுங்காக எரிவதற்கு உதவி செய்யக்கூடியவர்கள். அந்த ஹெல்ப்பர்களை நல்ல முறையில் கன்ட்ரோல் செய்து ஒவ்வொரு நாளும் விளக்குகள் எரியவில்லை என்ற ரிப்போர்ட் கிடைக்கும்போது உடனடியாக அவர்கள் வந்து கவனித்து விளக்குகள் எரியச் செய்வதற்கான நிலைமைகளை உருவாக்க வேண்டும்.

பேருந்து நிலையங்களை விரிவுபடுத்தி கக்கூஸ் வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும். திருப்பத்தூர் பஸ் ஸ்டாண்ட் மிகப் பெரிய பஸ் ஸ்டாண்டு. அங்கு ஓராண்டுக் காலத்திற்கு முன்னால் கக்கூஸ் கட்ட ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை பூர்த்தியாகாத நிலைமையில் இருக்கிறது. அது வேகமாகக் கட்டி முடிக்

[திரு. செ. சிவசாமி] [1980 ஜூலை 2]

கப்பட வேண்டும். திருத்துறைப்பூண்டியிலும் இந்த நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அதனையும் வேகமாகக் கட்டி முடிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

பரமக்குடி நகரத்தில் பாதாளச் சாக்கடைத் திட்டம் கொண்டு வரப்பட வேண்டும். குடிதண்ணீர்த் திட்டம் விரிவு படுத்தப்பட வேண்டும். பரமக்குடி—எமனேஸ்வரத்தை இணைக்கும் பாலத்தை அமைத்துக் கொடுக்கவேண்டும். அது மிகப் பெரிய டவுன், 65,000 ஜனத்தொகை கொண்ட டவுன் மிக மிக முக்கியமானது. உடனடியாக இவற்றைச் செய்ய முன் வரவேண்டும். எமனேஸ்வரம், இளையாங்குடி தாலூகா, பரமக் குடி தாலூகா முனிசிபாலிடியில் இரண்டு அமைப்புகளிலும் இருந்து கொண்டிருக்கிறது. இரண்டையும் ஒன்றாக அமைக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

[ பஞ்சாயத்து நிதிகளைப் பயன்படுத்துவதைப் பொறுத்து முருகேச முதலியார் கமிட்டி சிபாரிசு இருக்கிறது. அந்தக் கமிட் டியின் சிபாரிசுகள் அமல் நடத்தப்பட வேண்டும்.

தேவ கோட்டை டவுனைப் பொறுத்து செங்கல், மணல் எடுத்து வந்தவர்களுக்கு அபராதம் போட்டு ரூபாயை வசூலித்து வருவதாகச் சொல்லப்படுகிறது. இதற்கு முன்னால் செங்கல் லும் மணலும் சாதாரணமாக எடுத்துப் போய்க் கொண்டிருந் தது. புதிய நிலைமையில் செங்கல், மணல் எடுக்கக் கட்டணம் கட்டவேண்டுமென்று சொன்னதன் காரணமாக மிகப் பெரிய போராட்டம் நடக்கிறது. சர்வ கட்சிக் கூட்டம் ஒன்றும் நடை பெற்று சர்வகட்சியினர் பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். செங்கல் எடுத்துப் போகும் வண்டி இனாமாக எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படவேண்டும். மணல் எடுக்க எந்தவிதமான கட்டண மும் விதிக்கக்கூடாது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படு கிறேன்.

பஞ்சாயத்து யூனியன்களிலே உள்ள அலுவலகங்களிலே எம்.எல்.ஏ., எம்.எல்.சி.,க்களுக்காக தனி அறைகள் ஒதுக்க வேண்டுமென்று சென்ற முறை இங்கே தெரிவிக்கப்பட் டது. ஆனால் இன்றுவரையிலே அம்மாதிரி செய்யப்படவில் லை. ஆனால் அங்கே இருக்கிற ஜெனரல் ஹாலிலே, ஒரு சேர், ஒரு டேபிள் போட்டு, இது தான் உங்கள் இடம், இந்த இடத்திலே உட்காருங்கள் என்று சொல்கிற அவல நிலை இருக்கிறது. ஆகவே உடனடியாக பஞ்சாயத்து யூனியன் சேர்மனுக்கு இருப் பதைப்போல், ஆபீஸருக்கு இருப்பதைப்போல் தனியாக ஒரு அறையை ஆங்காங்கு அவர்களுக்கு ஒதுக்க நடவடிக்கை மேற் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



[1980 ஜூலை 2] [திரு. செ. சிவசாமி]

அடுத்து, பஞ்சாயத்து யூனியனில் உள்ள பல பகுதிகளைப் பார்ப்பதற்காக ஜீப்புகள் ஏற்பாடு செய்யப்படும் என்று இங்கே சொல்லப்பட்டது. ஆனால் இன்றுவரையிலே அதற்கான சரி யான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. அந்தக் காரணத்தி னால் தொகுதியைச் சுற்றிப் பார்க்கமுடியாத நிலைமை இருக் கிறது. அரசு எந்த நோக்கத்தோடு ஜீப் கொடுக்கப்படவேண்டு மென்று எண்ணியதோ அந்த நோக்கமே இன்றைக்கு ஈடேற வில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். புரகிராம் பிக்ஸ் பண்ணி ஒரு வாரத்திற்குள் ஜீப்புகளைக் கொடுப்பதற் கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

சென்னைநகர், புறநகர் திட்டத்தைப் போன்று கிராமங் களிலேயும் ரோடு வசதிகள், லைட் வசதிகள், ஆஸ்பத்திரி வசதிகள், குடிசை மாற்று வசதிகளைச் செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிராம நல ஊழியர்களைப் பொறுத்தவரையில் 5,000-க்கு மேற்பட்ட வர்கள் இருந்தாலும்கூட அவர்களுக்கு புரமோஷன் கிடைப்ப தில்லை. அவர்களுக்கு புரமோஷன் கிடைப்பதற்கான வழி வகைகளை அரசுசெய்யவேண்டும். பி.டி.ஓ. தன்னுடைய ஊரிலே இருக்கக்கூடாது என்ற நிலைமை இருக்கிறது. மற்ற ஊழியர் கள் எல்லாம் அந்தந்த ஊரிலே வேலை செய்யலாம் என்கிற போது இவர் மட்டும் அந்த ஊரிலே இருக்கக்கூடாது என்று சொல்வது சரியல்ல. அந்த முறையை மாற்றியமைக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். ஈ.ஓ., (இண்டஸ்ட்ரிஸ்) என்பவர் இப்போது யூனியன்களிலே இல்லை. இரண்டு யூனி யன்களுக்கு ஒருவர் என்ற முறையிலே இருந்தார்கள். இப்போது அது இல்லை, அதையும் மீண்டும் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, மன்னார்குடி, பெருகவாழ்ந்தான், பட்டுக் கோட்டையை இணைக்கும் முறையிலே பாமினி ஆற்றில் ஒரு பாலத்தைக் கட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மன்னார்குடி, ஆச்சரியபுரம், தேவபுரம், மங்கத்தான்குடி, மாங்குநகரி, செந்தாமரைக்கண், தேவதானம், ஊட்டித் திடல் வரையிலுள்ள சாலைகளையெல்லாம் நல்லமுறையிலே அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே, திருநெல்வேலி, பாளையங்கோட்டை, மேலப்பாளையம் ஆகியவற்றை இணைத்து மாநகராட்சி யாக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. செ. சிவசாமி] 1980 ஜூலை 21

கோவை நகராட்சியை மாநகராட்சியாக்குவதற்கு கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கூடிய சீக்கிரம் அங்கே தேர்தலை நடத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பரமக்குடி தாலுகா போகலூர் ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கின்ற வேலை என்ன ஆயிற்று என்றே தெரியவில்லை, உடனடியாக அதைப் பிரிக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

அடுத்து, 1,500 ஜனத்தொகை உள்ள கிராமங்களை இணைக் கக்கூடிய முறையிலே 1972–73-இல் இருந்து 1980 வரையிலே 83·44 லட்சம் செலவு செய்தும் 87 கிராமங்கள் தான் இணைக் கப்பட்டிருக்கின்றன. அதை மத்திய அரசு நிறுத்திவைத்திருப் பதாக 24 வது பக்கத்திலே சொல்லியிருக்கிறார்கள். என்ன காரணத்தினால் நிறுத்திவைக்கப்பட்டது. மேலும் அந்தக் கிரா மங்களை இணைக்கும் முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1977, 1978, 1979-இல் தனிக்கோட்டமாக அமைத்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ரிப்பேர் செய்ய வேண்டிய வேலையை எடுத்துக் கொண்டால் இராமநாதபுரத் திலே 348 வேலைகளில் எடுக்கப்படாத வேலைகள் 116 இருக் கின்றன என்று குறிப்புகள் காட்டுகின்றன. மற்ற மாவட்டங் களிலே எல்லாம் 25, 30 வேலைகளுக்கு மேல் பாக்கி இருக்க வில்லை. ஆனால் இராமநாதபுரம் மாவட்டத்திலே தான் 116 வேலைகள் இன்னும் ஆரம்பிக்கப்படாமலே இருக்கின்றன. பிற்பட்ட பகுதியை எந்த அளவுக்கு நீங்கள் பார்க்கிறீர்கள் என் பதற்கு இது ஒரு நல்ல உதாரணம். சீக்கிரமாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பாம்பன் மேம் பாலம் 557 லட்சம் ரூபாய் செலவில் கட்டப் படுகிறது. 115.23 அடி உள்ள மிகப் பெரிய கண் களை உடைய பாலம். இடையிலே 79 கண்களைக் கொண்ட பாலம். உப்புத் தண்ணீரிலே உருவாகக்கூடிய பாலம், இந்தியாவிலேயே மிகப் பெரிய பாலம் என்று சொல்லப்படுகிறது. இரண்டரை ஆண்டுக்கால மாக வேலை நடக்காமல் இருக்கிறது. அதையும் துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிழக்குக்கடற்கரை சாலையைப் பொறுத்தவரையிலே 401·20 லட்சம் ரூபாய் செலவில் 32 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டன. ஆனால் ரோடுகள் போடப்படவில்லை. பாலங்கள்கட்டி ரோடு போடவில்லை என்பது மொட்டைத் தலைக்கும் முழங்காலுக் கும் முடிச்சுப் போடுவது மாதிரி இருக்கிறது. உடனடியாக ரோடுகளைக் கட்டித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1980 ஜூலை 21] [திரு. செ. சிவசாமி]

அடுத்து சேது ரஸ்தா மிக முக்கியமானது, கடல் பொருள் களைக் கொண்டுவருவதற்கும், மீனவர்களுக்கு உதவியாகவும், பாதுகாப்புக்கும் முக்கியமாக இருக்கக்கூடிய ஒரு ரஸ்தா, அதைப் பூர்த்திசெய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[நண்பகல் 12–00]

மானாமதுரை, பரமக்குடி வழி தெ. புதுக்கோட்டை வழி யாக உள்ள ரோடு இன்னும் ரிப்பேர் செய்யப்படாமல் இருக் கிறது. அவைகளையும் கொண்டு வர வேண்டுமென்று கேட் டுக் கொள்கிறேன். மரவமங்கலம் ரோடு, ஆர்.எஸ். மங்கலம் ரோடு, கரஞ்சுத்தி ரோடு. மானாமதுரை ரோடு, ஆலந்தூர் ரோடு, சூராந்தூர் ரோடு ஆகிய இந்த ரோடுகளெல்லாம் கார் போவதற்கு லாயக்கற்ற முறையிலே இருந்து கொண்டிருக் கின்றன. மூன்று வருடங்களாகப் புயலாலும், வெள்ளத் தாலும் பாதிக்கப்பட்டு சின்னாபின்னப்பட்டுப் போய்க் கிடக் கின்றன. அங்கேயிருக்கும் பாலம், ரோடு ஆகியவை போக்கு வரத்திற்கு லாயக்கற்ற முறையிலே இருந்து கொண்டிருக்கின் றன. இவைகளையெல்லாம் ரிப்பேர் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

ஜனவேலி ஆற்றில் மேம்பாலம் கட்ட வேண்டுமென்று பல தடவைகள்—மூன்றாண்டுக் காலமாகச் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறேன். இன்றுவரையில் அதற்கு எந்தவிதமான குறிப் பும் இல்லை. அந்தக் குறிப்புகளையும் கொண்டு வரவேண்டும்.

ஆலந்தூர் பாலத்தை உடனடியாகக் கொண்டு வர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

*திரு. எஸ்.எஸ். இராஜேந்திரன் : மாண்புமிகு தலைவரவர்களே, சட்டமன்றத்தில் இன்றைக்குப் பேசும் வாய்ப்பு கிடைத்தமைக்காக மகிழ்ச்சி அடைகின்றேன். அதே சமயத்தில், தமிழகத்திலேயே அதிகப்படியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்த ஆண்டிப்பட்டி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், என்னுடைய வெற்றிக்காக உழைத்த தோழர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் உரித் தாக்குகின்றேன்.

நான் ஆண்டிப்பட்டி தொகுதியில் நின்ற நேரத்தில், அடுத்த முதலமைச்சர் நான்தான் என்று கூறவில்லை ; என்னு டைய கட்சியைச் சேர்ந்தவர்களும் அவ்வாறு கூறவில்லை ; என்னுடைய தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்களும் அவ்வாறு கூறவில்லை. அப்ப ஒருவேளை கூறியிருந்தால், ஐநூறுக்கு

உட்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி என அறிவிக்கப்பட்டு, அதுவும் இந்த நேரத்தில் அந்த கேஸ் தேறுமா தேறாதா என்கின்ற அவதிக்கு ஆளாக்கப்பட்டிருக்கக் கூடும்.

திரு. ஜே. எஸ். இராசு : பாயின்ட் ஆஃப் ஆர்டர். சார். அவர் டிமான்டிலே பேசுகிறாரா அல்லது வேறு ஏதாவது பொது விவாதத்திலே பேசுகிறாரா?

திரு. எஸ். எஸ். இராஜேந்திரன் : ஆகவே, அவ்வளவு அதிகப்படியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்த ஆண்டிப்பட்டி தொகுதி மக்களுக்கு என்னுடைய நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளராக என்னை நிறுத்தி, "என்னுடைய தம்பி எஸ். எஸ். ஆரை. இங்கே நிறுத்தியிருக்கிறேன், உங்களிடத்திலே ஒப்படைத்திருக்கிறேன் ; அவரை அதிகப்படியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்து சட்டமன்ற உறுப்பினராக என்னிடத்திலே ஒப்படையுங்கள்" என்று என்னுடைய அண்ணன் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் கூறினார்கள். ஆகவே, அதிகப்படியான வாக்குகள் வித்தியாசத்தில் ஆண்டிப்பட்டி தொகுதி மக்கள் என்னைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகமெங்கும் எனக்குச் சொந்தம் என்றாலும், ஆண்டிப்பட்டி தொகுதியைப் பொறுத்தவரையில் கொஞ்சம் தனி அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன் என்பதை அறிவித்துக் கொள்கிறேன்.

இங்கே எதிர்க்கட்சித் தலைவர் உட்பட பலபேர் சொன்னார்கள், எவ்வளவோ வாக்குறுதிகளை அளித்தீர்களே, அவைகளை நிறைவேற்றுவதாக இல்லையே என்று குறிப்பிட்டார்கள். இப்பொழுதுதான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துள்ளோம். மக்களுக்கு வேண்டிய நல்ல திட்டங்களைத் தர வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். இன்னும் ஐந்தாண்டுக் காலம் இருக்கிறது என்பதைத் தயவு செய்து நினைவில் கொண்டு பேச வேண்டுமென்று நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

ஆனால் ஒன்றை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஐந்தாண்டுக் காலத்திற்குள்ளாக மக்களுக்கு அதிகமான நன்மைகளை நாங்கள் செய்து விட்டால், அதாவது தேர்தல் அறிக்கையில் வெளியிட்டதைவிட அதிகமான நன்மை





களைச் செய்துவிட்டால், இப்படி அதிகமாகச் செய்து விட்டீர்களே, இது அடுக்குமா, இது முறையா, இது நியாயமா என்று எதிர்க்கட்சியிலிருப்பவர்கள் கேட்க மாட்டார்கள் என்று உறுதியாக நான் நம்புகிறேன். என்ன காரணமென்றால், அவர்களுடைய உயரிய பண்புகளை மிக நன்றாக உணர்ந்திருக்கிறேன் என்ற காரணத்தால் இதை நான் சொல்கிறேன்.

என்னுடைய ஆண்டிப்பட்டி தொகுதியைப்பற்றிப் பேசியாக வேண்டுமென்று குறிப்பிட்டேன். எனக்கு முன் பேசிய அங்கத்தினர்களெல்லாம், தங்கள் தொகுதிகளுக்குப் பாலம் அமைக்க வேண்டும், பாலத்தைச் சீர் செய்ய வேண்டும், சாலைகள் அமைக்க வேண்டும் என்றெல்லாம் பேசினார்கள். என்னுடைய தொகுதியிலே கடமலைக்குண்டு பகுதியில் பாலமே கிடையாது. ரோடு இருந்தால்தானே நான் பாலம் வேண்டுமென்று கேட்பதற்கு. கடமலைக்குண்டு பிரதேசத்தில், பாலம் இருக்கிறது என்று யாராவது கண்டுபிடித்துக் கொடுத்தால் அவர்களுக்குப் பரிசு தருவதற்குத் தயாராக இருக்கிறேன். அந்த அளவிற்கு அது பின் தங்கியிருக்கிறது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியா முழுவதும் நான் சுற்றியிருக்கிறேன் ; இலங்கையிலும் சுற்றிப் பார்த்திருக்கிறேன். ஆனால் ஆண்டிப்பட்டி தொகுதியைப் போன்ற சாலைகள் இல்லாத ஒரு தொகுதியை நான் பார்த்தது இல்லை. அந்தத் தொகுதியில் ஜீப், காரிலே போகத்தான் முடியும். தொகுதியிலுள்ள கிராமங்களுக்குப் போவதற்கான வசதிகள் கிடையாது. அம்மாதிரியான சூழ்நிலை அங்கே இருக்கிறது.

இங்கே ஒரு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள் ; சென்னையிலே அதிகமான மக்கள் ஓட்டுப் போடவில்லை ; ஆகவே, இங்கே வசதிகள் செய்யவில்லை, சென்னையைக் கவனிக்க மாட்டேன் என்கிறார்கள் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள்.

அவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன், அமைச்சர்களும், நான் உட்பட இந்த இயக்கத்திலே முக்கியமானவர்கள் எல்லாம் கூட சென்னையிலே தானிருக்கின்றோம். அதே நேரத்திலே, கிராமத்து மக்களைப்பற்றி நாம் கவலைப்பட்டாக வேண்டும். இந்த அரசு நிச்சயமாகக் கவலைப்படும் என்றும், அக்கறை எடுத்துக் கொள்ளும் என்றும் நான் எதிர்பார்ப்பதில் தவறில்லை என்று கருதுகிறேன்.

இன்னும் ஒன்று சொல்லிக் கொள்வேன், ஆண்டிப்பட்டித் தொகுதிக்கு, நம்முடைய தலைவரை அழைத்துச் செல்வதாக இருந்தது. ஆனால், பக்கத்திலேயிருக்கிற தொகுதிக்காரர்கள் எல்லாம் என்னிடத்திலே கேட்டுக் கொண்டார்கள், உங்களுடைய

தொகுதிக்கு வந்து சுற்றிவிட்டுத் திரும்புவதற்கு 4 நாட்கள் ஆகுமே, அந்த 4 நாட்களில் பல தொகுதிகளுக்குத் தேர்தல் பிரச்சாரத்திற்குச் செல்ல முடியுமே என்று கேட்டுக்கொண்டார்கள். நான் மாண்புமிகு முதல்வர் அவர்களை அணுகி, ''அண்ணே, என்னுடைய தொகுதிக்கு நீங்கள் வரவேண்டாம். வேறு தொகுதிகளுக்குச் சென்று பிரச்சாரம் செய்யுங்கள், இங்கு வந்தால் 4 நாட்கள் ஆகிவிடும். என்னுடைய தொகுதியை நானே பார்த்துக் கொள்கிறேன்'' என்று தெரிவித்தேன். அவர் சுற்றி வர முடியாது, அவ்வளவு மோசமான பகுதி என்று நான் அவரிடம் அப்போது கூறி வேறு தொகுதிகளுக்கு அனுப்பி வைத்தேன்.

என்னுடைய தொகுதியில், வர்ஷநாடு—கண்டமனூர் செல்லும் பாதை ஒன்று இருக்கிறது. பஸ்கள் செல்லும் ஒரே ஒரு பாதை அதுதான். அந்தப் பாதை உண்மையிலே மோசமாக இருக்கிறது. அந்தப் பாதையைப் புதுப்பிக்க வேண்டியது மிக அவசியமாக இருக்கிறது.

அடுத்து, மலைக்குண்டிலிருந்து, கோம்பைத் தொழுவு வழிச் சாலையை இணைத்தால், சுமார் 30 கிராமங்கள் இணைக்கப் படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மயிலாடும்பாறை டு எம். கல்லுப்பட்டி சாலை போட்டால் சுமார் 30 கிராமங்கள் இணைக்கப்படுவதுடன், இராஜபாளையம் மதுரைக்குச் செல்லும் வழித் தூரத்தில் சுமார் 50 கிலோ மீட்டர் குறையும்.

அடுத்து, மதுரை ரோடு டு புலிமான்கோம்பை நகரத்துப் பாதையும் மிகவும் மோசமாக இருக்கிறது. அதையும் அவசியம் கவனித்தாக வேண்டும்.

அடுத்தபடி, சக்கம்பட்டியிலிருந்து பாலக்கோம்பை வரை செல்லும் சாலை மிகவும் பழுதாயிருக்கிறது. அதைச் சரி செய்தால் போதுமானது.

அடுத்தபடி, லட்சுமிபுரம்—தெப்பம்பட்டியில் கண்மாய் அமைந்தால், சுமார் 2,000 ஏக்கர்களுக்கு நீர்ப்பாசனம் கிடைக்கும். அதனால், அப்பகுதி மக்களின் வறுமை பெரும் அளவுக்கு நீங்கும் என்று எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அண்ணன் அவர்களது கவனத்தை ஈர்க்கும் உடனடிப் பிரச்சினை, என்னுடைய வட்டாரத்திலே உள்ள தண்ணீர்ப் பஞ்சம். தேர்தலுக்கு வாக்குக் கேட்க நான் போன நேரத்தில், அவர்கள் அதைச் செய்ய வேண்டும், இதைச்செய்ய வேண்டுமென்று கேட்கவில்லை. என்னுடைய



தொகுதி மக்கள் கேட்டதெல்லாம் உடனடி தண்ணீர்தான். அடுத்து பாதை வசதிகள். இவை இரண்டுதான். இந்த இரண்டுக்கும் ஏற்பாடுகள் செய்கிறேன் என்று வாக்குறுதி கொடுத்துவிட்டு வந்திருக்கிறேன். ஆகவே, அந்த வட்டாரத்தில் தண்ணீர் பஞ்சத்தைப் போக்கித் தர வேண்டும், அதற்கான நடவடிக்கைகளிலே ஈடுபட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்வது பொருத்தம் என்று கருதுகிறேன்.

இன்னும் சொல்லப் போனால், நகரத்திலே கொசுத் தொல்லை அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலே, பாம்புத் தொல்லை மிகக் கடுமையாக இருக்கிறது. ஆகவே, அந்தப் பிரச்னையைக் கவனத்திலே வைத்து ஆவன செய்ய வேண்டுமென்பதையும் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தவிர வேறு பல நல்ல திட்டங்களை எல்லாம் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக அவரைப் பாராட்டி, இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று அமர்கிறேன்.

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் இந்த வரவு-செலவு திட்டத்தை நான் முழு நிறைவோடு வரவேற்கிறேன். மாண்புமிகு கவர்னர் அவர்கள் உரையில் கூறிய வேலைக்கு உணவு திட்டத்தைச்செயல் படுத்த எனது சாத்தான்குளம் தொகுதியில் நெடுஞ்சாலைகள், ஊராட்சி ஒன்றிய ரோடுகள் மிகவும் பழுதாகி விட்டன. மற்ற பகுதிகளைவிட மிகவும் பின்தங்கிய நிலையில் அந்தத் தொகுதி மக்கள் வசதி இன்றிக் கஷ்டப்படுவதால் ரோடுகள் முழுவதையும் உடனடியாகச் சீரமைக்கத் திட்டம் போட்டு அந்தத் தொகுதியில் வறட்சியால் வாடும் ஏழை மக்களுக்கு வேலைக்கு உணவுத் திட்டம் என்ற அடிப்படையில் உடனடியாக ரோடுகளைப் பழுது நீக்கித் தர வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் குடிநீர் வசதிகள் இல்லாது மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். சாத்தான்குளத்தில் சமீபத்தில் இரண்டு வார்டுகளுக்கு மட்டும் நல்ல குடி தண்ணீர் சப்ளை செய்யக்கூடிய டாங்கியை மாண்புமிகு கதர் கைத்தறித் துறை அமைச்சர் திரு. எஸ்.என். இராசேந்திரன் அவர்கள் திறந்து வைத்து தண்ணீர் சப்ளை கிடைக்கிறது.

[பிற்பகல் 12-10].

இது சாத்தான்குளம் மக்களுக்கு — அனைவருக்கும் விஸ்தரிக்கப்படுவதற்கும், வல்லநாடு அருகில் தாம்பிரபரணி நதியில் நிலத்தடியில் இருந்து கிணறுகள் போட்டு தூத்துக்குடி

நகரத்திற்குப் பெரிய அளவில் சப்ளை செய்து நிறைவு செய்தது போல, புரட்சித் தலைவர் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றபிறகு சிவலப்பேரி அருகில் சித்தாற்றில் நிலத்தடியில் இருந்து சுமார் 50 கிலோ மீட்டர் தூரம் உள்ள கோவில்பட்டி நகருக்குக் குடிதண்ணீர் வழங்கியது போல, பெரிய அளவில், நெல்லை மாவட்டம் ஆழ்வார் திருநகரி அருகில் உள்ள தாமிரபரணி ஆற்றின் உள்ளே கிணறுகள் போட்டு பெரிய திட்டமாகப் போட்டு நாசரேத், பழனியப்பபுரம், பேய்க்குளம், சாத்தான்குளம் பகுதி மக்களின் குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதைப் பிற்படுத்தப்பட்ட பகுதியாக அறிவித்து அரசு பணிகள் அவசரமாக மக்களுக்குக் கிடைக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், ஊராட்சி, பேரூராட்சி மன்றங்களில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு முறையான முழுநேர வேலைகளைக் கொடுத்து கிராம மக்களுக்கு முழுநேர சேவைகள் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப் பஞ்சாயத்துக்களில் வேலை செய்யும் எழுத்தர்கள் பல பஞ்சாயத்துக்களில் வேலை செய்வதையும், சில இடங்களில் ஆசிரியர்கள் சில பஞ்சாயத்துக்களில் எழுத்தர்களாக வேலை செய்வதையும் அகற்றி, முறையான வேலைத் திட்டமும், முழுநேரம் வேலை செய்யும் ஊழியர்களாக மக்களுக்கு சேவை கிடைக்க சீரமைக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

கிராம நல ஊழியர்களுக்கும், கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் சரியான அளவில் வேலைத் திட்டம் கொடுத்து சரியான சம்பளம் நிர்ணயம் செய்யவேண்டும். பாரம்பரையாகத் தொடர்ந்து வேலை செய்யும் முறையை அகற்றி, நிர்வாகச் சீரமைப்பு செய்ய ஒரு அதிகாரக் குழுவை அரசு நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும், சட்டமன்றம் நடக்கின்றபோது, சட்டமன்ற நடவடிக்கைகளையும், அமைச்சர்களையும், சட்டமன்ற உறுப்பினர்களையும் பார்ப்பதற்காக நமக்கு வாக்களித்த பொதுமக்கள் நமது செயலகத்திற்கு வந்து நெடுநேரம் அதிகாரிகள் கூடக் கொண்டு நமது அமைச்சர்கள் வரும்போது முண்டி அடித்துக் கொண்டு மிகவும் கஷ்டம் அடைகிறார்கள். ஆகவே நமது புரட்சித் தலைவர் அவர்கள் அரசு, இவர்களுடைய கஷ்டத்தைப் போக்குவதற்கு எண்ணம் ஒரு திட்டத்தை அமைத்தும், அதில் அவர்கள் உட்காருவதற்குத் தங்குவதற்கு போல பெஞ்சுகளும் அமைத்துத் தந்து, பொதுமக்கள் கஷ்டத்தைப் போக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு,



எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நான் சார்ந்துள்ள காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் உள்ளாட்சி, ஊரக வளர்ச்சி, நகர்ப்புற வளர்ச்சி, சாலைகள், பாலங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், மானியக் கோரிக்கை எண் 28, 34, 39, 52 ஆகிய மானிய கோரிக்கைகளின் மீது, மொத்தமாக ஏறக்குறைய 142 கோடி ரூபாய் மதிப்பீட்டை அனுமதிக்குமாறு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், அவர்கள் சமர்ப்பித்த இந்த மானியக் கோரிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களைக் கூற வாய்ப்பு அளித்தமைக்கு முதலில் நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பொதுமக்களிடத்தில் பழகும்போது குழந்தையைப் போன்றும், அதே நேரத்தில் பொதுமக்கள் சொல்லக்கூடிய குறைகளையும், கோரிக்கைகளையும், தேவைகளையும் நிறைவேற்றச் செய்ய நிர்வாக இயந்திரத்தை முடுக்கி விட அதிகாரிகளிடத்தில் வேல் போல கூர்மையாகவும், கவனமாகவும் இருக்கவேண்டும் என்றும், அவர் பெயருக்கேற்ப நடந்து கொள்ள வேண்டும் என்றும் நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் நகராட்சிகள் பற்றி மானியக்கோரிக்கை மீது பல்வேறு கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களையும் அதே நேரத்தில் தங்களுடைய பகுதியின் கோரிக்கைகளையும், குறைகளையும் எடுத்து வைத்தார்கள். இன்றைக்குள்ள நிலையில் நகராட்சிகள் தன்னிச்சையாக இயங்க முடியவில்லை. தன்னிச்சையாக என்று சொன்னால், ஊராட்சி ஒன்றியங்களே—நகராட்சி மன்றங்களே—அங்கே வாழ்கிற மக்களின் அடிப்படைத் தேவைகளை குறிப்பாக—குடிநீர் வசதி, சாலை வசதி, சாக்கடை வசதி, விளக்கு வசதி, கல்வி வசதி மற்றும் இதர வசதிகளை நிறைவு செய்வதில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் அவற்றை நிறைவேற்ற போதுமான அளவுக்குப் பொருளாதாரம் இல்லாமல், நிதி ஆதாரங்கள் இல்லாமல் இன்றைக்கு— பல நகராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. அரசின் உதவி பெற்றுதான், அரசின் உதவியை எதிர்நோக்கித்தான் அவைகள் செயலாற்றவேண்டி இருக்கிறது. அந்த நிலையில், இன்றைக்கு இங்கே பேசிய ஒவ்வொரு உறுப்பினரும், அந்தந்த தொகுதிகளின் தேவைகளை, குறைகளை எடுத்து வைக்கிற அதேநேரத்தில், அந்த நகராட்சிகளின் நிதி ஆதாரத்தைத் திரட்டுவதற்கான யோசனைகளை, முயற்சிகள் எடுக்க

[திரு. சேலம் மு. ஆறுமுகம்] [1980 ஜூலை 2

வேண்டியதைப் பற்றிச் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன்.
ஆனால், ஒருவரும் நகராட்சிகளின் நிதி ஆதாரங்களைத்
திரட்டுவதற்கு இன்னின்ன காரியங்களை அரசாங்கம் செய்ய
வேண்டும் என்று குறிப்பிடாதது வருந்தத்தக்கதாகும்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய தினம் பல்வேறு நகராட்சிகள் தங்களுடைய நிதி
ஆதாரங்களை வைத்துக்கொண்டு, ஒரு சில திட்டங்களைத்
தான் மேற்கொள்ள முடிகிறது. குறிப்பாக, ஆரம்பக
கல்வி, மருத்துவ வசதி, சாலை வசதி, விளக்கு வசதி போன்ற
வற்றைச் செய்து வருகிறது. அவற்றையும் பரிபூரணமாகச்
செய்வதற்கு முடியவில்லை.

இன்றைக்கு நகராட்சி சாலைகளில் பேருந்துகள், லாரிகள்
ஓடுவதற்காக மோட்டார் வாகன வரிச் சட்டத்தின் கீழ் ஒரு
குறிப்பிட்ட பங்கைத்தான் நகராட்சிகளுக்குத் தருகிறார்கள்.
அது பல ஆண்டுகளாக அப்படியே இருந்து வருகிறது.
நாளுக்கு நாள் பெருகி வரும் போக்குவரத்து காரணமாக
சாலைகள் பெரிதும் பழுதடைந்து விடுகின்றன. அதனால்
பராமரிப்புச் செலவும் அதிகரித்துக்கொண்டே வருகிறது.
ஆனால் கொடுக்கப்பட்டு வந்த பங்குத் தொகை மட்டும்
அப்படியே இருக்கிறது. ஆகவே, அந்தப் பங்குத் தொகையை
அதிகரிக்கும் வகையில் அந்தச் சட்டத்தை திருத்த
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி அதிகரித்துக்
கொடுத்தால் தான் நகராட்சிகள் நல்ல வகையில் சாலைகளைப்
பராமரிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழ் நாட்டில் புரட்சித் தலைவர் ஆட்சி
ஏற்பட்ட பிறகு தமிழ் நாட்டில் உள்ள அத்தனை கிராமங்
களுக்கும் இணைப்பு பாதை, பாதுகாக்கப்பட்ட குடிநீர், வசதி
மற்றும் பிற வசதிகள் செய்து கொடுக்க திட்டங்கள் தீட்டப்
பட்டு வருகின்றன. குடிநீர் திட்டத்தை நிறைவேற்றிவரும்
இந்த நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.
ஒருங்கிணைந்த கிராமத் திட்டத்தின் அடிப்படையில் ஒரு
ஊராட்சிக்கு குடிநீர் திட்டம் அமைக்கிறபோது, வருகின்ற
ய்ல் இருக்கும் கிராமங்களுக்கும் குடிநீர் வழங்க வேண்டும்
கிற முறையில் திட்டம் அமைக்கப்பட வேண்டும் என்று
ட்டுக் கொள்கிறேன்.

நகராட்சிகளின் வருவாயை பெருக்குவதற்காக இன்றைக்கு
பல்வேறு விதமான முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்
டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 1920 ஆம் ஆண்டில்
இயற்றப்பட்ட சென்னை ஜில்லா நகராட்சிகளின் சட்டத்தின்
அடிப்படையிலேயே இன்றைக்கு கட்டிடங்களுக்கு கட்டணம்
வசூலிக்கப்பட்டு வருகிறது. அந்தச் சட்டம் இயற்றப்பட்டு



1980 ஜூலை 21] [திரு. சேலம் மு. ஆறுமுகம்]

60 ஆண்டுகள் ஆனபிறகு இன்றைக்கும் அதே அடிப்படையில்
கட்டணம் வசூலிப்பது சரியல்ல. இன்றைக்கு பல்வேறு
தொழிலதிபர்கள் பலகோடி மூலதனம் போட்டு தொழில்
ஆரம்பித்து இருக்கிறபோது அதிக பட்சமாக ரூ. 125 தான்
வரி விதிக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். அந்த வரி
விதிகங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும்; அந்த வகையில்
அந்தச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

அடுத்ததாக, நான் சொல்ல விரும்புவது—டேன்ஜரஸ் அன்ட்
அஃபன்ஸ் டிரேடிங் லைசென்ஸ் என்று வழங்கப்படுவதற்கு
1949-ஆம் ஆண்டில் எந்த அளவிற்கு கட்டணம் நிர்ணயிக்கப்
பட்டதோ அதுவே இன்னறைக்கும் இருந்து வருகிறது; அதையும்
மாற்ற வேண்டும்.

[பிற்பகல் 12-20]

இன்றைக்கு நிறைந்து வருகின்ற மக்களின் தேவைகளை பூர்த்தி
செய்வதில் நகராட்சிகளுக்கு ஏற்படுகிற நிதிப் பற்றாக்குறை
யைப் போக்குவதற்கு இந்த 'டி அண்டு ஓ' லைசென்ஸ்'
கட்டணத்தை அதிகரித்து மாற்றியமைக்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று நகராட்சி இன்றைக்கு சொத்து வரி
மூலம்தான் மக்களிடமிருந்து பணத்தைப் பெற முடியும்.
அதிக அளவுக்கு சொத்து வரி போட்டால் அதை மக்களால்
தாங்க முடியாது. ஆகவே, திரை அரங்கு கட்டி வருமானத்தைப்
பெருக்கிக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. இன்றைக்கு
நகராட்சி திரை அரங்கு கட்ட அனுமதி இருக்கிறது. திரை
அரங்கு கட்ட நகராட்சியில் இடம் இருந்தும் நிதிவசதி
போதுமான அளவுக்கு இல்லாத காரணத்தால் கட்ட முடிய
வில்லை. ஆகவே, இன்றைக்கு தனியார்களுக்கு திரை அரங்கு
கட்ட 'ஃபிலிம் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன்' இருக்கிறது.
அங்கிருந்து கடன் பெற்று, அவர்கள் திரை அரங்குகளைக்
கட்டிக் கொள்ள வசதி இருக்கிறது. அதைப்போலவே அந்த
கார்ப்பரேஷன் மூலம் நகராட்சிகளும் கடன் உதவி பெற்று
திரை அரங்குகளை கட்டிக் கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு சென்னை மாநகராட்சிக்கு
உட்பட்ட பகுதிகளில் சினிமா வால் போஸ்ட், விளம்பர
போஸ்ட் ஒட்டுவதற்கு கட்டணம் வசூல் செய்கிறார்கள்.
அதைப்போல தமிழ் நாடு முழுவதும் இருக்கின்ற நகராட்சி

[திரு. சேலம் மு. ஆறுமுகம்] [1980 ஜூலை 21

களும் சினிமா மற்றும் விளம்பர வால்போஸ்ட் ஒட்டுவதற்கு
கட்டணம் வசூல் செய்து கொள்வதற்கும் ஏற்பாடு செய்ய
வேண்டுமென்று கேட்டுக் கோள்கிறேன்.

இன்றைக்கு நகராட்சிகள் தங்களுடைய நிதி ஆதாரங்
களைத் திரட்டுவதற்கான வாய்ப்புகள் எல்லா நகராட்சி
களுக்கும் இல்லை ; ஒன்றிரண்டு நகராட்சிகளுக்கு இருக்கிறது.
இதை கருத்திற்கொண்டு, தமிழ்நாடு முழுவதும் இருக்கிற
நகராட்சிகளுடைய நிதி ஆதாரங்களைப் பெருக்கிக் கொள்
வதற்கான வழிவகைகளைக் கண்டறிய ஒரு உயர் மட்டக்
குழுவை மாநில அளவில் அரசு அமைக்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் சேலம் நகராட்சியைப் பொறுத்தவரையில்,
அது சுமார் 3 கோடி ரூபாய் வருமானமுள்ள ஒரு நகராட்சி
யாக இருக்கிறது. காரணம் தமிழ் நாட்டில் சென்னைக்கு
அடுத்து சேலத்தில்தான் திரை அரங்குகள் அதிகமாக இருக்
கின்றன. அந்தத் திரை அரங்குகளின் வாயிலாக, 'தமாஷா'
வரி மூலம் ஆண்டு ஒன்றுக்கு 80 அல்லது 85 இலட்சம் ரூபாய்
வருமானம் கிடைக்கிறது. ஆகவே, அந்த நகராட்சி தன்
னிறைவு பெற்றிருக்கிறது. அதைப் போன்று எல்லா நகராட்சி
களும் இருக்க முடியாது. பொதுவாக நகராட்சிகளைப்
பொறுத்தவரையில் நிதி நிலையில் மோசமாக இருக்கின்றன.
ஒவ்வொரு நகராட்சியும் தன்னுடைய திட்டங்களை நிறை
வேற்ற அரசின் உதவியை எதிர்நோக்கி நிற்க வேண்டியிருக்
கிறது. ஆகவே, இன்றையதினம் நகராட்சிகளில் பணியாற்று
கின்ற ஊழியர்களுக்கு பல்வேறு குறைகள் இருக்கின்றன.

அரசு நகராட்சிகளின் தரத்தை உயர்த்தும்போது, மூன்றாம்
நிலை நகராட்சியை இரண்டாம் நிலைக்கும், இரண்டாம்
நிலை நகராட்சியை முதல் நிலைக்கும், முதல் நிலை நகராட்
சியை சிறப்பு நிலை நகராட்சி என்ற நிலைக்கும் உயர்த்து
கிறது. அதனால் பயனடைகின்றவர்கள் அந்த நகராட்சியில்
இருக்கின்ற கமிஷனர்தான்; மற்ற ஊழியர்களுக்கு எந்தவித
மான பயனும் இல்லை. ஆகவே, நகராட்சிகளின் தரத்தை
உயர்த்தும்போது அங்கே பணியாற்றுகின்ற ஊழியர்களுடைய
அந்தஸ்தும் உயர்த்தப்பட வேண்டும்; அரசு இதிலே கவனம்
செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல அரசு ஊழியர்களுக்கு, அவர்கள் பணியில்
சேர்ந்த நாளிலிருந்து கணக்கிட்டு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.
ஆனால் நகராட்சியில் அந்த ஊழியர்கள் என்றைக்கு சேம
நல நிதியில் சேருகிறார்களோ அந்த நாளிலிருந்துதான் கணக்
கிடப்பட்டு, அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இந்த
வித்தியாசம் இருக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.



1980 ஜூலை 21] [திரு. சேலம் மு. ஆறுமுகம்]

இன்றைக்கு அரசு ஊழியர்களுக்கு அவர்கள் வீடு கட்டிக்
கொள்ள அரசாங்கம் தன்னுடைய நிதியிலிருந்து கடன்
வழங்குகிறது. ஆனால் நகராட்சி ஊழியர்களுக்கு நகராட்சி
தன்னுடைய நிதியிலிருந்து கடன் வழங்க வாய்ப்பு இல்லை.
ஆகவே, அவர்களுக்கு அரசு தன்னுடைய நிதியிலிருந்து
கொடுக்காவிட்டாலும் நகராட்சியில் கட்டுகின்ற 'பென்ஷன்
காண்ட்ரிபுயூஷன்' கணக்கில் 6 கோடி, 8 கோடி ரூபாய் தேங்கி
இருப்பதாகத் தெரிகிறது ; அந்த பென்ஷன் காண்ட்ரிபியூஷன்
நிதியிலிருந்து அவர்களுக்கு குறைந்த வட்டியில் வீடு கட்ட
கடன் உதவி அளிக்கவும், நகராட்சி மார்க்கெட்டிங் போன்ற
'கமார்சியல் பிளாக்ஸ்' கட்டுவதற்கு கடன் உதவி அளிக்கவும்
ஏற்பாடுகள் செய்ய வெண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக
ஆக்கப்படுவதைப் போல நகராட்சி ஊழியர்களையும் அரசு
ஊழியர்களாக்க வேண்டுமென்று ஏற்கனவே பல இடங்களில்
கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவர் அரசு
அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவரவர்களே, 1980-81-ஆம் ஆண்டிற்கான உள்
ளாட்சித் துறையின் மானியக் கோரிக்கையின்பால் நடைபெறும்
விவாதத்தில் கலந்துகொள்ளும் வாய்ப்பினை அளித்தமைக்கு
நன்றி கூறிக் கொள்கிறேன். உள்ளாட்சித் துறையை
பெல்லா ஆட்சித் துறையாக மாற்றி தங்கள் வாழ்வை வளப்
படுத்திக் கொண்டவர்களை அகற்றிவிட்டு மக்கள் வாழ்விற்
காக உளமார்ந்த எண்ணத்தோடு உண்மையிலேயே உள்ளாட்சித்
துறையின் கீழ் மக்கள் பயனடைகின்ற வகையில் திட்டங்கள்
அறிவிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

அதேநேரத்தில் எந்தத் திட்டங்களை அரசு அறிவித்
தாலும் அது எந்தத் துறையாக இருந்தாலும் அதைச் செயல்
படுத்துகின்ற முக்கிய பொறுப்பு உள்ளாட்சித் துறையில்தான்
உள்ளது. ஆகவே அந்தத் துறையில் பணியாற்றுகின்ற அதி
காரிகளும், அலுவலர்களும் தாங்கள் யார் ஆட்சிக் காலத்தில்
பதவி பெற்றோம் என்பதை மறந்துவிட்டு யாருக்காகப் பணி
யாற்றுகிறோம் என்பதை உணர்ந்து மக்கள் கூறுகின்ற குறைகளை
உடனடியாகத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளில் தங்களை
ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமென அந்த அதிகாரிகளுக்கு
அரசு உணர்த்த நடவடிக்கை எடுத்தாக வேண்டுமென வேண்டு
கிறேன்.

[டாக்டர் கே.பி. இராமலிங்கம்] [1980 ஜூலை 21

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் மக்கள் குழு ஒவ்வொரு ஒன்றியங்களிலும் மீண்டும் செயல்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு ஒன்றியத்திலும் தேவைப்படுகின்ற தேவைகளை தீர்மானமாக உருவாக்கி அரசுக்கு அனுப்பும் அதிகாரம் தனி அதிகாரியிடம் உள்ளது. அவர் தன்னிச்சையாகத் தீர்மானங்களை அனுப்புகிறார். அதை யாற்றி அமைக்கின்ற வகையில் தேர்தல் நடைபெறும் வரை தனி அதிகாரியைத் தலைவராக வைத்து மக்கள் குழு தீர்மானங்களை நிறைவேற்றி அந்தத் தீர்மானத்தில் கையொப்பம் இடுகின்ற அதிகாரத்தை அரசு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உள்ளாட்சித் துறையின் பராமரிப்பில் உள்ள பேருந்து நிலையங்களும், அங்குள்ள கழிப்பிடங்களும் சரிவர பராமரிக்கப்படுவதில்லை. நெடுந்தூரப் பயணிகள் இதனால் மிகவும் அவலத்திற்கு ஆளாகின்றனர். இவைகளை போக்க நவீன கட்டண கழிப்பிடங்களை அரசு அமைப்பது மிகச் சிறந்த திட்டமென நான் வரவேற்கின்றேன்.

ஆனால் அதே நேரத்தில் கிராமப் புறங்களில் பெண்களுக்கென்று தனி கழிப்பிடங்கள் எங்கும் இல்லை. ஆகவே அதைக் கவனத்தில் கொண்டு அவர்களுக்கு தனிக் கழிப்பிடங்களை ஒவ்வொரு கிராமத்திலும் அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றொரு கருத்தையும் கூறிக் கொள்கிறேன். கால்நடை பராமரிப்புத் துறையைப் பொறுத்தவரை நீண்ட நெடும் நாட்களாக கால்நடைத் துறையின் வளர்ச்சி மந்தப்படுத்தப்பட்டுக் கொண்டு வந்திருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குக் காரணம் ஒவ்வொரு ஒன்றியங்களிலும் பணியாற்றக் கூடியவர்கள் 11 மாதம் சான்றிதழ் பயிற்சி பெற்றவர்களாக இருப்பதுதான். ஆகவே அவர்களை மாற்றி விட்டு வளர்ந்து வருகின்ற விஞ்ஞான உலகத்திலே சிறந்த பயிற்சி பெற்றவர்களான கால்நடை மருத்துவர்களை நியமிக்க வேண்டும். கால்நடை மருத்துவர்களுக்கு நன்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கின்ற வகையிலும் மேலும் சான்றிதழ் பயிற்சி பெற்றவர்களால் அங்கே இருக்கின்ற கால்நடைத் திட்டங்களை சரிவரப் பயன்படுத்த முடியவில்லை. ஆதலாலும் ஒவ்வொரு ஒன்றியங்களிலும் கால்நடை மருத்துவப் பட்டதாரிகளை நியமிப்பதாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் அறிவித்திருப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால் உடனடியாக அதை அமல்படுத்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்க கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆட்சி தமிழகத்திலே உள்ள நல்ல ஆட்சியாக உள்ளாட்சித் துறையிலும் பணியாற்றிக் கொண்டிருக்கின்றது என்ற கருத்தினைக் கூறி விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.



1980 ஜூலை 21]

திரு. சா. கிருட்டிணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நாட்டின் முன்னேற்ற வளர்ச்சிக்கு சாலை முன்னேற்றம் அடிப்படையான பணியாகும். இந்த நாட்டின் முன்னேற்றத்திற்கான நல்ல பலனை அடைவதற்கு அடிப்படையான சாலை வசதியை முன்னோடியாகக் கொண்ட புரட்சித் தலைவர் அரசு பல திட்டங்களைத் தீட்டி உள்ளதை மனமார பாராட்டுகிறேன்.

திருச்சி மாவட்டத்தில் ஆண்டிமடத் தொகுதி மிகவும் பின் தங்கிய தொகுதியாகும். திருச்சி மாவட்டத்தையும், தென்னாற்காடு மாவட்டத்தையும் இணைக்கும் வகையில் சம்பேரிக்கும்—தெத்தேரிக்கும் இடையே வெள்ளாற்றில் பாலம் ஒன்றினை அமைத்துத் தர வேணுமாய் வேண்டுகிறேன். எங்கள் பகுதி மக்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள், கால்நடைத் தீவனங்கள் மற்றும் மருத்துவ வசதி ஆகியவற்றிற்கு பெரும்பாலான மக்கள் பெண்ணாகடம் செல்ல வேண்டி உள்ளது. அத்துடன் எங்கள் பகுதியில் விளையும் கரும்பை பெண்ணாகடம் சர்க்கரை ஆலைக்குக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. எனவே பெண்ணாகடத்தையும் எங்கள் பகுதியையும் இணைக்கும் வண்ணம் இந்த பாலத்தை அமைத்துத் தந்தால் 100-க்கு மேற்பட்ட கிராமங்கள் பயன் அடையும்.

[பிற்பகல் 12-30]

அடுத்து பொன்பரப்பியிலிருந்து ஆண்டிமடம் (வழி) கொடுத்தூர், இடையக் குறிச்சி, அய்யூர் சாலையும், செந்துறையிலிருந்து ஆலத்தியூர் (வழி) பெரியாக் குறிச்சி, மாத்தூர், தாமரைப் பூண்டி, முள்ளுக்குறிச்சி சாலையும், ஆண்டிமடத்திலிருந்து உடையார்பாளையம்(வழி)கொளத்தூர் தேவனூர், வாரியங்காவல். நாகல்குழி, வீராகக்கன், பிலாக்குறிச்சி, பரணம், சாலையும், ஆண்டிமடத்திலிருந்து பொன்பரப்பி (வழி) ஆத்துக்குறிச்சி, அழகாபுரம், சிலம்பூர், இடையக் குறிச்சி, கொடுத்தூர், பொன் பரப்பி, ஆகிய நான்கு சாலைகளையும் நெடுஞ்சாலைத்துறை மேற்கொண்டு பேருந்து செல்ல வசதியாக மேம்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த அரசை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆண்டிமடத்திலிருக்கும் நெடுஞ்சாலை பகுதிக்கு உட்பட்ட இடங்களில் எல்லாம் தனியார்கள் ஆக்கிரமிப்பு செய்து, போக்குவரத்துக்கு இடையூறு செய்கிறார்கள். இதனால் சாலைப்பகுதி மிகவும் குறுகிக் காணப்படுகிறது. இதனால் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இந்தச் சாலை ஆக்கிரமிப்பு செயலுக்கு அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை, கோவை ஆகிய நகரங்களில் ஒருங்கிணைந்த அபிவிருத்தி திட்டங்கள் நிறைவேற்றப்படுவது கண்டு புரட்சி தலைவர் அவர்களின் அரசை நான் பாராட்டுகிறேன். அதுபோல் திருச்சி, சேலம் ஆகிய பெரும் நகரங்களுக்கும் இத்திட்டத்தை செயலாற்ற வேண்டுகிறேன். நகரங்கள் எல்லாவற்றிற்கும் முழுமையாக விரிவு அபிவிருத்தி திட்டங்கள் தயார் செய்து நிறைவேற்றிட வேண்டுகிறேன்.

நகராட்சிகளில் இதுபோன்ற திட்டங்களை அமுல் செய்கின்ற நகரமைப்பு அலுவலர்கள் மற்றும் கட்டிட ஆய்வாளர்கள் நகராட்சி ஆய்வாளரின்கீழ் பணி புரிகின்றனர். மேற்கண்ட திட்டங்களை செம்மையாகச் செயல்படுத்த நகராட்சி நகராய்வு அலுவலர்களை நகர் ஊர் அமைப்பு இயக்குநரின்கீழ் கொண்டு வர வேண்டுமென்று பணிவன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

நகரங்களில் முழுமை திட்டங்கள் தயாரித்து செயல்படுவது போல கிராமங்கள் சீரான வளர்ச்சி அடைய வட்டார வளர்ச்சித் திட்டங்கள் தயாரித்து செயல்படுத்திட வட்டார வளர்ச்சி குழுமங்கள் அமைக்கத் தேவையான சட்டத் திருத்தங்களை 1971ஆம் ஆண்டு நகர் ஊர் அமைப்பு சட்டத்தின்கீழ் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியைச் சார்ந்த ஆண்டிமடம், செந்துரை ஒன்றியங்கள் மிகவும் பின் தங்கிய பகுதியாகும். இதற்கான வட்டார வளர்ச்சித் திட்டங்களை தயாரித்து நிறைவேற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். இது போன்ற திட்டங்களை நிறைவேற்ற ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் நகர், ஊர் அமைப்பு விரிவாக்க அலுவலர்களை நியமித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த அரசை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதி திருச்சி மாவட்டத்தைச் சார்ந்தது. ஆனால் நகர் ஊர் அமைப்பு சம்பந்தமான பிரச்னைகளுக்கு மட்டும் சேலத்தில் அலுவலகம் உள்ளதால், சேலத்திற்கு செல்ல வேண்டியுள்ளது. இது பொது மக்களுக்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. எனவே அந்தப் பகுதியை திருச்சியில் உள்ள அலுவலகத்தோடு இணைக்க வேண்டுகிறேன்.

புரட்சித் தலைவர் அவர்களின் அரசு வளர்ச்சி மையங்களை தேர்ந்தெடுத்து செயல்படுத்தி வருவதை உளமார வாழ்த்துகிறேன். பாராட்டுகிறேன். எனது தொகுதியின் தலைமையிடமான ஆண்டிமடத்தையும் வளர்ச்சி மையமாக சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.





நமரமைப்பு துறையில் பணியாற்றும் அலுவலர்களின் நிலைமைபற்றியும் இங்கே குறிப்பிடுவது அவசியம் என்று நினைக்கிறேன். பெரும்பாலான தொழில் நுட்பப் பணியாளர்கள் ஏதாவது ஒரு விதத்தில் விதிவிலக்கு பெற்றுள்ளனர். இவைகளை களைய, மூன்றாவது ஊதியக் குழு சில பரிந்துரைகளை செய்துள்ளது. அதனை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனால் அதன் தொடர்பாக தேவையான ஆணைகள் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. அந்த ஆணைகளை விரைந்து வழங்கி, அந்த ஊழியர்களின் நலனை பாதுக்காக்க வேண்டுகிறேன்.

பட்டதாரி பொறியாளர்கட்கு மற்ற பொறியியல் துறையில் வழங்கப்பெறும் விகிதாச்சார பதவி உயர்வு வாய்ப்புகள் இத் துறையிலும் கடைபிடிக்க பணிவன்புடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

நகராட்சி மன்றத்தின் வரவுகளை அதிகப்படுத்துவது புரட்சித் தலைவர் அவர்களின் அரசின் முக்கியக் குறிக்கோளாக இருப் பதை நான் பாராட்டுகிறேன்: வாழ்த்துகிறேன். வருமானங் களை அதிகப்படுத்தினால்தான் பலவித அத்தியாவசிய வசதி களை மேம்படுத்த முடியும். எனவே திருமண மண்டபங்கள் கட்டுதல், கடைகள் கட்டுதல், கலை அரங்குகள் கட்டுதல், திரைப்பட தியேட்டர்கள் கட்டுதல் ஆகியவைகளை இந்த அரசு செய்து தர வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள் கிறேன்.

செயலின் வேகத்திற்கும் சிந்தனையின் விவேகத்திற்கும் சொந்தக்காரராக இருக்கின்ற இத்துறையின் அமைச்சர் தமது ஆக்கத்தையும், ஊக்கத்தையும் வலிவையும், பொலிவையும் இத் துறைக்கு அளித்திட வேண்டும் என்று கூறி, எனக்கு வாய்ப்பளித்த தலைவருக்கும் நன்றி கூறி, விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: கனம் துணை சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகள் மீது நான் ஒரு சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன். நமது ஒப்பற்ற தலைவர் காமராஜ் அவர்கள் முதல் அமைச்சராக இருக்கும்போது கம்யூனிட்டி ப்ராஜெக்ட்ஸ் என்றிருந்ததை மாற்றி மக்களுக்கு வேலை கிடைக்க வேண்டும்; படித்தவர்களின் குறைகளை நிவர்த் திக்க வேண்டும் என்ற அவசியத்தின் அடிப்படையில்தான் அவ் வைக்கு அந்த ப்ராஜக்ட்ஸை மாற்றி, ஜில்லா போர்டை கலைத்துவிட்டு பஞ்சாயத்து யூனியன்கள் என்று ஏற்படுத்தி 374 யூனியன்களுக்கும் பல அதிகாரிகளை நியமித்து, இந்த யூனியன் களை நடத்தி வந்தார்கள்.

பல குறைகளை நாம் எடுத்துச் சொல்லும்போது பக்கத்தில்
ஒரு அமைப்பு இருந்தால்தான் அந்தக் குறைகளை நிவர்த்தி
செய்து வேண்டிய பணிகளை ஆற்ற வசதியாக இருக்கும். பக்கத்
தில் ஒரு அமைப்பு இருந்தால்தான் அவர்களை அணுக முடியும்
என்ற காரணத்தால்தான் யூனியன்களை அமைக்க திட்டம்
போட்டு நல்ல பல காரியங்களைச் செய்து வந்தார்கள்.

அதேபோல் இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்கள் அமைச்ச
ரவையில் போடப்பட்டுள்ள திட்டங்களைப் பார்க்கும்போது
உண்மையிலேயே என்னைப் போன்றவர்கள் என்ன நினைக்கிறார்
கள் என்றால் ஒரு ஆண்டுக்குள்ளாக எல்லாக் கிராமங்களையும்
தன்னிறைவு பெற்ற கிராமங்களாக ஆக்கமுடியும் என்ற நம்பிக்கை
யின் அடிப்படையில்தான் நாங்கள் பேசுகிறோம். ஆனால் அந்த
நம்பிக்கை கொஞ்சம் தளரக் கூடிய வகையில் பஞ்சாயத்து
யூனியன் அதிகாரங்களை எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து
விடுகிற நிலைதான் இருக்கிறது. விவசாயம் சம்பந்தப்பட்ட
அதிகாரிகள் இருந்தார்கள். அவர்களை எடுத்துவிட்டார்கள்,
பின்னர் இ.ஓ. (இண்டஸ்டிரீஸ்) என்றிருந்தார்கள், அவர்களை
யும் நாம் எடுத்துவிட்டோம். ஆனால் பஞ்சாயத்து யூனியன்
ஆசிரியர்களை எல்லாம் சர்க்கார் ஆசிரியர்களாக ஏற்றுக்
கொண்டிருப்பதை பாராட்டுகிறேன். இருந்தாலும், ]முன்
பிருந்ததுபோல் பள்ளிக்கூடங்களை டி.இ.ஓ.ன் கீழ் கொண்டு
வராமல் யூனியனின் கண்டரோலில் இருந்தால் வசதியாக இருக்
கும் என்று இந்நேரத்தில் எடுத்துக்கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

பஞ்சாயத்து யூனியனுக்கு வாட்டர்போர்ட் மூலம் தண்ணீர்
கொடுக்கிறோம். ஆனால் குழாய்கள் ரிப்பேர் ஆனால் யாரிடத்
தில் சொல்வது, யாரை அணுகுவது என்று தெரியாமல் இருக்
கிறார்கள். மதுரைக்கு ஓடமுடியாது. ஆகவே யூனியன் அளவி
லேயே அதிகாரங்களைக் கொடுத்தால் திட்டங்களை விரைவில்
அமல்படுத்த உதவியாக இருக்கும் என்று இந்த அரசுக்கு தெரியப்
படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

ஒவ்வொரு ஊரிலும் பள்ளி வசதி, குடியிருப்பு வசதி, மருத்துவ
வசதி போன்றவைகளைக் கவனிக்க கிராம சேவக்குகளை வைத்
திருக்கிறோம். கிராம சேவக்குகளுக்கு ஏற்கனவே இருந்த
வேலைகள் சில. இப்போது அந்த வேலைகள் இல்லாமல்
சிமென்ட் பெர்மிட்டுக்கு கையெழுத்து போடுவது, சீனி வழங்க
கையெழுத்து போடுவது என்ற வேலைகளைத்தான் செய்து
கொண்டு வருகிறார்கள். அவர்கள் நல்லமுறையில் பணி
யாற்றக்கூடிய முறையில் ஒரு ஏற்பாடும் இல்லை. ஆகவே,
இணைப்புச் சாலைகள் போட வேண்டும் என்றால் ஆறு மாதங்
களுக்குள் போடவேண்டும் என்று கிராம சேவக்கிடம் பொறுப்பை
கொடுக்க வேண்டும். விளக்கு வசதி, குடிநீர் அளித்தல் போன்ற





வைகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். இப்போது பலயிடங்
களில் ஓவர் ஹெட் டாங்க்ஸ் கட்டி வைத்திருக்கிறார்கள், ஆனால்
அவற்றிற்கு பம்ப் செட்ஸ் பொருத்தாததால் பல ஆண்டுகளாக
அவை செயல்படாமல் இருக்கின்றன. ஓவர் ஹெட்டாங்க்ஸை
கிராமங்களில் உள்ள இளைஞர்களும் பெரியவர்களும்கூட சிட்டா
டும் மடமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே
இவற்றையெல்லாம் மாற்றியமைக்க கிராம சேவக்குகள் பொறுப்
பேற்றுக் கொள்ள வேண்டும்.

புறம்போக்கு நிலங்களில் எல்லாம் மரங்கள் நடவேண்டும்.
ஒரு ஆண்டில் இவ்வளவு மரங்கள் நடவேண்டும் என்று செய்ய
வேண்டும். முன்பெல்லாம் அதற்காக ரூ. 10,000 கொடுத்து
வந்தோம். இப்போது நிலை எப்படி என்று தெரியவில்லை.
நான் இதைப் படித்து பார்க்கவில்லை. ஊருக்கு போய் வந்ததால்
இதைப் படிக்க முடியவில்லை. ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும்
பத்தாயிரம் ரூபாய் பணம் ஒதுக்கி மரங்கள் நட்டால் அதனால்
வருமானம் வரக்கூடிய நிலை ஏற்படும். கிராம சேவக்குகள்
மூலம் இணைப்புச் சாலைகள் போடுகிறோம். இணைப்புச்
சாலைகளின் இரண்டு பக்கங்களிலும் மரங்களை வைத்தால் மூன்று
ஆண்டுகளில் அவை வளர்ந்து நல்ல பயனைத் தரும். ஆகவே
அதை ஒரு நிபந்தனையாகப் போடவேண்டும்.

சாக்கடைத் திட்டத்திற்கு என்று இனாமாக பணம் கொடுத்து
வந்தோம். இப்போது அந்நிலை இல்லை. சாக்கடைத் திட்டத்
திற்காக பணம் ஒதுக்கி கொசுக்கள் உற்பத்தியாகாமல் தடுத்து
கண்மாய்கள் அருகில் ஜினியா புல் வளர்த்து விவசாயிகளுக்கு
அதை குறைந்த விலையில் கொடுக்கச் செய்யலாம். அதனால்
வருமானம் வரவும் ஏதுவாகும்.

வேலைக்கு உணவுத் திட்டம் என்பது அருமையான திட்ட
மாகும். என் தொகுதியில் அழகாக ரோடுகள் போட்டிருக்கிறார்
கள். ஆனால் அவர்களுக்கு கொடுக்கப்படும் அரிசி எப்படியிருக்
கிறது என்றால், நிலக்கோட்டையில் அந்த அரிசி புழுக்கூடு பிடித்த
அரிசியாக இருக்கிறது. வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ்
கொடுக்கப்படுகிற அரிசி புழுக்கூடு பிடித்த அரிசியாக இருப்பதால்
மக்கள் வாங்க மறுக்கிறார்கள். ஆகவே நல்ல முறையில் நல்ல
அரிசி கொடுக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

[பிற்பகல் 12-40]

குடி தண்ணீரைப் பற்றி ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.
சிலிண்டர் பைப் போட்டுத்தான், அடிக் குழாயைப் போடுகிறார்
கள். இதை வாட்டர் போர்டு செய்கிறார்கள். இதிலே பல்

இருப்பதாகத் தெரியவில்லை. 4 பெண்கள் ஒருவர் மாற்றி
ஒருவர் ஒரு வாரம் அல்லது 10 நாட்கள் மாற்றி மாற்றி தண்ணீர்
அடித்தால், வெகு சீக்கிரத்தில் அந்தக் குழாய் கெட்டுவிடுகிறது.
எனவே, அதை மாற்றி சப்-மெர்ஜிபில் ஜெட் பம்பை அந்தப்
பகுதிகளுக்கு போட்டால், அந்தக் குழாய்கள் கெட்டுப் போகாமல்
இருக்கும்.

பெரிய பெரிய மேஜர் பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. நிலக்
கோட்டை பஞ்சாயத்திற்கு ஏனைய திட்டத்தின் மூலம் குடி
தண்ணீர் கொடுக்கப்படுகிறது. அதேமாதிரி அம்மையநாயக்கனூர்
பஞ்சாயத்தும் இருக்கிறது. பெரிய பெரிய பஞ்சாயத்துக்களுக்கு
வாட்டர் போர்டு மூலம் தண்ணீர் கொடுக்கலாம். ஆனால்,
சின்ன சின்ன பஞ்சாயத்துக்களும் இருக்கின்றன. இவைகளுக்கு
அந்த தண்ணீர் வசதிகளை பஞ்சாயத்து யூனியன் மூலம் செய்
தால், வெகு சீக்கிரத்தில் தர முடியும் ; குறைகளும் சீக்கிரத்தில்
நிவர்த்திக்க முடியும். நிலக்கோட்டை மேஜர் பஞ்சாயத்தி
லிருந்து தண்ணீர் கொடுக்கும்போது, அந்த ஊரைச் சுற்றியுள்ள
2, 3 வார்டுகளுக்கு, கிராமத்திற்கு சற்றுத் தள்ளி இருக்கின்ற
காரணத்தால், அங்கே குழாய்கள் போடாமல், தண்ணீர் வசதி
செய்து கொடுக்காமல், ஆனால் தண்ணீர் வரியை மட்டும் அதிக
மாக்கி வசூலிக்கின்றார்கள். இதை மாற்ற வேண்டும். அவர்
களுக்கு தண்ணீர் வசதி செய்து கொடுத்தால், அதிக வரியைக்
கொடுக்க ஆட்சேபிக்கவில்லை. எனவே, அந்தப் பகுதிகளுக்கும்
தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டும்.

நிலக்கோட்டை, அம்மையநாயக்கனூர் பஞ்சாயத்துகளுக்கு
குழாய்கள் மூலம் தண்ணீர் கொண்டு வரும்போது, அருகிலுள்ள
கிராமங்களுக்கும் இணைக்காமல் விட்டுவிட்டு, அம்மையநாயக்
னூருக்கு மட்டும் தண்ணீர் வசதி செய்து கொடுக்காமல், அந்த
பஞ்சாயத்தைச் சேர்ந்த 22 ஊர்களுக்கும் குழாயை இணைத்தால்
நலமாக இருக்கும், இந்த குழாய் இணைப்பைச் செய்து தர
வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அப்படிக்
கொடுத்தால்தான் தண்ணீர் வரி கட்டும்போது சிரமம் இல்லாமல்
கட்டுவார்கள்.

இன்னும் நமக்கு பலப் பிரச்னைகள் இருந்துகொண்டே இருக்
கின்றன: இந்த குடிதண்ணீர் கொடுப்பது என்பது மாத்திரமல்ல.
பள்ளிக்கூடங்கள் கட்டுவதிலேகூட ஒரு யூனியனுக்கு ஒரு ஆண்
டிற்கு ஒரு பள்ளிதான் கட்டவேண்டும் என்று சொல்லப்படுகிறது.
இது எப்படி போதும்? எனவே, 5 ஆண்டு காலத்திற்குள்
கிராமங்களிலே பள்ளிக்கூட கட்டிட இல்லாத கிராமங்களே
இருக்கக்கூடாது என்ற நிலைமையை இந்த அரசாங்கம் உண்டாக்க
வேண்டும். அப்போதுதான் நாம் ஏழை மக்களை பாதுகாத்த
தாக இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.





பாரதியார் அவர்கள் தெருவுகள் தோறும், 2, 3 பள்ளிகள்
இருக்க வேண்டும் என்று சொன்னார். இது நகரத்திலே தான்
இருக்கிறது. கிராமங்களிலே ஏதோ ரேராக இருக்கிறது. 500,
1,000 ஜனத்தொகை உள்ள கிராமங்களிலேகூட பள்ளிகள் இல்லா
மல் இருக்கின்றது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டால்
ஒரு மைல் தூரத்திற்கு ஒரு பள்ளிக்கூடம் இருக்கவேண்டும் என்
றிருக்கின்ற காரணத்தினால், வைக்க முடியாது என்று சொல்
கிறார்கள். இரண்டு பர்லாங்கு தூரமாக இருந்தாலும், அங்கே
ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்த வேண்டும். காரணம், அங்குள்ள
5 வயது பிள்ளைகளால் 2 பர்லாங் நடந்து செல்லமுடியாது.
எனவே, ஸ்பெஷல்கேஸாக 30 பிள்ளைகள் எங்கெல்லாம் இருக்
கிறார்களோ, அங்கெல்லாம் ஒரு பள்ளிக்கூடம் கட்டவேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது). இந்த
சபையிலே நான் ஒரு பெண் தான் இருக்கிறேன். எனவே, நான்
பேசுவதற்கு இன்னும் கொஞ்சம் நேரம் கொடுங்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : சீக்கிரம் முடித்து
விடுங்கள் ; இன்னும் 3 நிமிடங்கள் தருகிறேன்.

<u>திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்</u> : இந்த சாலைகள் போடு
வதற்கு நிறைய பணம் ஒதுக்கியிருக்கிறார்கள் ; அதை நான்
வரவேற்காமல் இருக்க முடியாது. ஆனால், இந்த சாலைகளில்
செம்பட்டி டு நிலக்கோட்டை ஹைவேஸ் ரோடில் பாலங்கள்
கட்டாததால், தண்ணீர் தேங்கி பஸ் போக்குவரத்துக்கு இடைஞ்ச
லாக இருக்கிறது. எனவே, இம்மாதிரி இந்த மாநிலத்திலே
எங்கெங்கே இருக்கிறதோ, அங்கேயெல்லாம் பாலங்கள் கட்டு
வதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும்.
இதைப்பற்றி அன்றைக்கே நான் பேசியிருக்கிறேன். இதேபோல்
பேரணைக்குப் பக்கத்தில் ஒரு பாலம் கட்டி, அங்கேயும் பஸ்
போக்குவரத்திற்கு வசதி செய்ய வேண்டும். அது மாத்திர
மல்ல. வத்தலகுண்டு டு உசிலம்பட்டி சாலையிலும் பாலம்
கட்ட வேண்டும். அப்படி பாலங்கள் போடப்பட்டு, பஸ்
போக்குவரத்திற்கு ஒழுங்கான வசதிகளை செய்து தரவேண்டும்.
அதேபோல், ராமய்யநாயகன்பட்டி டு ரங்கப்பநாயகன்பட்டி
அருகில் ஒரு பாலம் கட்ட வேண்டும். இதேபோன்று வத்தலக்
குண்டு, உசிலம்பட்டி ரோட்டில் சாந்திபுரம் பிரிவை இணைப்ப
தற்கு இணைப்புச் சாலைகள் போடப்பட்டுள்ளன. அது என்ன
காரணத்தாலோ ஏற்கனவே ஹைவேஸில் பூர்த்தியாகாமல் இருக்
கிறது. இப்போது அந்தப் பகுதி லடக் பகுதிபோல் இருக்கிறது.
இப்படிப்பட்ட ரோடுகளுக்கு முதல் இடம் கொடுத்துப் போட்டு,
செம்மேடுப்பட்டி, தருப்பட்டி, சந்தையூர், ரெங்கப்பநாயகன்
பட்டி, புள்ளிமான்கோம்பை, ஆண்டிப்பட்டி போன்ற இடங்களை
இணைத்தால், அதிகமான வருமானம் வருவதோடு அங்குள்ள

மக்கள் தங்கள் பொருள்களை தேனிக்குக் கொண்டுபோய் விற்பனை செய்வதற்கும் வசதியாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு நம்முடைய மாநிலத்திலே 12,700 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. இதிலே 4,000, 5,000 கிளார்க்குள் வேலை செய்கிறார்கள். அவர்களில் ஒரு சிலர்தான் ரூ. 75 வாங்குகிறார்கள். பாக்கி இருக்கின்றவர்களெல்லாம் 22½, 40 ரூபாய் வாங்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள். 1,000 பஞ்சாயத்துக்களில் தான் 75 ரூபாய் சம்பளம் வாங்கும் கிளார்க்குகள் இருப்பார்கள். பாக்கி பஞ்சாயத்தினுள் குறைவான சம்பளம்வாங்குகின்றார்கள். எனவே தயவுசெய்து நல்லெண்ணம் படைத்த அமைச்சர் அவர்கள் இதைப் பரிசிலனை செய்து இரண்டு பஞ்சாயத்துக்களுக்கு ஒரு கிளார்க் வீதம் போட்டு அவர்களுடைய சம்பளத்தையும் 100 ஆக உயர்த்திக் கொடுத்தால் சாலச் சிறந்ததாக இருக்கும்.

குழந்தைகள் மகளின் நலத் திட்டம் பற்றி இரண்டு முறை சொல்லியிருக்கிறேன். ஐ.சி.டி.பி. ஸ்கீம்—இந்தத் திட்டத்தின் கீழ் எப்படியாவது மத்திய அரசாங்கத்தை அணுகி நிறைவேற்ற வேண்டும். நிலக்கோட்டை தாலுகாவில் 100 பால்வாடிகள் வைத்திருக்கிறார்கள். ஒரு பால்வாடியில் 100 பேருக்கு சத்துணவு கொடுக்கப்படுகிறது. 30 கர்ப்ப ஸ்திரிகள், 30 பாலூட்டும் தாய்மார்கள், 40 குழந்தைகளுக்கு சத்துணவு கொடுக்கிறார்கள். நம்முடைய மாநிலம் முழுவதற்கும் மத்திய அரசாங்கத்தை அணுகி அவர்கள் உதவியைப் பெற்றும், நாமும் பணத்தை ஒதுக்கியும் இந்தத் திட்டத்தைக் கொண்டு வர வேண்டும். இதன் மூலம் படித்து வேலை இல்லாமல் இருக்கும் தாய்க்குலத்திற்கு—10-வது, எஸ்.எஸ்.எல்.சி., பி.ஏ., படித்துவிட்டு வேலை இல்லாமல் இருப்பவர்களுக்கு இந்தத் திட்டத்தின் மூலம் வேலை கிடைக்கவும் வழி செய்தவர்களாவோம்.

கிராமப் பகுதிகளில் சிறு சிறு தொழில்களைத் துவங்க பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கடனாகவும், மானியமாகவும் கொடுக்கப்படுகிறது. ஆனால், அந்த அதிகாரி—தமிழ்நாடு இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷன் அதிகாரி எங்கே இருக்கிறார் என்று கிராமவாசிகளால் கண்டு பிடிக்க முடியவில்லை. சிறு தொழில்களைச் செய்ய உதவிகள் கொடுப்பது பற்றி கிராம மக்களுக்கு வசதிகள் செய்து கொடுக்க யூனியன் மூலமாக இரண்டு எக்ஸ்டென்ஷன் ஆபீசர்களை நியமித்தால்





யூனியன் மூலம் வேலை வாங்கவும், தொழில் வட்டத்தை மக்களுக்கு எடுத்துச் சொல்லி வேலை வாய்ப்பைப் பெருக்கவும் தொழில்கள் வளரவும் வாய்ப்பாக இருக்கும் என்று கூறி விடை பெறுகிறேன்.

*திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் சமுதாய நல வளர்ச்சித் திட்டம், நகர்ப்புற வளர்ச்சி, சாலைகளும் பலன்களும் போன்ற மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

சமுதாய வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கிராம மக்களுக்கு அடிப்படையான தேவையான சாலை வசதி, குடி நீர் வசதி, மின் விளக்கு வசதி ஆகியவற்றைச் செயல்படுத்தும் பெரிய பொறுப்பை உள்ளாட்சித் துறை எடுத்துக் கொண்டிருக்கிறது. கிராம மக்களுடைய வளர்ச்சித் திட்டங்கள் நல்ல முறையில் செயல்படுத்தப்பட வேண்டுமென்றால் ஊராட்சி ஒன்றியங்களும் மன்றங்களும்சிறப்பாகச் செயல்பட வேண்டும். அப்படிஅவைநல்ல முறையில் செயல்பட ஊராட்சி ஒன்றியங்களுக்கும் மன்றங்களுக்கும் அதிக அதிகாரத்தை அளிக்க வேண்டும். நிதி வசதி இல்லாத ஊராட்சிகளுக்கு சம்பந்தப்பட்ட ஒன்றிய பொது நிதியிலிருந்து கடனாக அளிக்க முன்வர வேண்டும். அந்தக் கடனை ஊராட்சி மன்றங்கள் தவணை முறையில் திருப்பிச் செலுத்த வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டும்.

உள்ளாட்சித் துறையைப் பொறுத்தவரை நல்ல திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. தன்னிறைவுத் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு அந்தத் திட்டத்தின் வாயிலாக குடி தண்ணீர் வழங்கல் இணைப்புச் சாலைகள் அமைத்தல், நீர்ப்பாசனத் திட்டங்கள் அமைத்தல், பள்ளிக்கட்டிடங்கள் கட்டுதல் போன்ற கிராமங்களில் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் பணிகளை அரசு செய்து கொண்டிருக்கிறது. மூன்று நான்கு ஆண்டுகளுக்குள் தமிழகம் முழுவதும் உள்ள எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் தன்னிறைவுத் திட்டத்தைச் செயல்படுத்தும் குறிப்பை அரசு வைத்திருக்கிறது. நடப்பு ஆண்டில் 100 ஊராட்சி ஒன்றியங்களுக்கு பத்து கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது போக தமிழகம் முழுவதும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில் அரசு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

அதே போன்று விவசாயிகளுக்காக சிறு பாசனத் திட்டங்களை நிறைவேற்ற 1980-81-ம் ஆண்டில் இந்த நிதிநிலை மதிப்பீட்டில் 31·17 இலட்சம் ரூபாய் ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. சிறு பாசனத் திட்டங்களைப் பொறுத்தவரை அரசு அதற்கு ஒரு விதிமுறையை நிர்ணயித்திருக்கிறது. 100 ஏக்கருக்குக்

குறைவாக பாசனம் பெறுகிற அனைத்து ஏரிகளையும் ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் செயல்படுத்தும் திட்டத்தை அரசு வைத்திருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களுக்கு அந்த ஏரி களைத் தூர் எடுக்கவும், சீர் செய்யவும் அதிகாரம் இருக்கிறது. ஆனால் அந்த ஏரிகளுக்குப் புதிய கால்வாய்களை வெட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிகாரம் கிடை[illegible]. புதிய கால்வாய்களை வெட்ட அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிகாரத்தைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களின் செயல்கள் சிறப்பாக நிறை வேற பல மாறுதல்களை இந்த அரசு செய்ய முன்வரவேண்டும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் ஊராட்சி ஒன்றியத்தில் பல அலுவலகங்களில் நிர்ணயிக்கப்பட்ட பணி நடந்து வருகி கிறது.

[பிற்பகல் 12-50]

கூட்டுறவு விரிவாக்க அதிகாரி என்றும், தொழில் விரிவாக்க அதிகாரி என்றும் பணிபுரிகின்றனர். அவர்களுக்கு என்ன வேலை என்றே தெரியவில்லை. அவர்கள் ஒன்றியங்களிலே என்ன பணியைச் செய்கிறார்கள் என்றே தெரியவில்லை. அவர்கள் எந்தப் பணியையும் செய்யாமல் இருப்பார்களானால் அவர்களை வேறு துறைகளுக்கு மாற்றி இதற்காக செலவாகிற பணத்தை வேறு நல்ல திட்டத்திற்குப் பயன்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களிலே தொடக்கப்பள்ளிகளுக்கு பல இடங்களிலே நிரந்தரமான கட்டடங்கள் இல்லை. பள்ளிகள் எல்லாம் கூரைகளின் கீழேதான் நடந்துகொண்டிருக்கின்றன. ஆண்டு ஒன்றுக்கு ஒரு யூனியனில் ஒரு கட்டடம் கட்டுகின்ற திட்டம் அரசிடம் இருந்தாலும் இன்னும் அதிகமான அள வுக்கு நிரந்தரக் கட்டடங்களைக் கட்டித் தருவதற்கான முயற்சியில் அரசு ஈடுபட வேண்டும்.

குடிநீர் வசதியைப் பொறுத்தவரையில் தமிழக அரசு, குறிப்பாக, புரட்சித் தலைவர் பொறுப்பேற்றதற்குப் பிறகு குடிதண்ணீர் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தி, அதிக மக்களுக்கு குடிநீர் வசதி கிடைக்க வேண்டுமென்ற எண்ணத் தோடு பாடுபட்டார்கள். 7½ ஆண்டுக்காலத்தில் தி.மு.க. செய் ததை இரண்டரை ஆண்டுக்காலத்திலே குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகச் செய்து காட்டியிருக்கிறார்கள். இதன் மூலமாக அனைத்துப் பகுதி மக்களுக்கு[illegible]மை செய்யமுடி யாத ஒரு நிலையும் இருக்கிறது எ[illegible] சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குடிநீர் வடிகால் வா[illegible]ன் பொறுப்பிலே



இந்த நீர்நிலை தேக்கத் தொட்டிகள் இருப்பதால் அங்கங்கே இருக்கின்ற மோட்டார்கள் பழுது அடைந்துவிட்டால் அவை களைச் செப்பனிடுவதற்கு காலதாமதம் ஏற்படுகிறது. இதற்கு முன்னாலே ஒன்றியங்களே அந்தப் பணியைச் செய்து வந்தன. இப்போது வாரியம் அதைச் செய்வதால் ரிப்பேருக்காக அந்த மோட்டாரை எடுத்துச் சென்றால் 3 மாதம் 6 மாதம் கழித்துத்தான் ரிப்பேர் செய்து தருகிறார்கள். இந்தக் குறையை நீக்குகிற வகையிலே மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி களிலே உள்ள மோட்டார்கள் பழுதடைந்துவிட்டால் அவை களை செப்பனிடுகிற பொறுப்பை ஒன்றியங்களே மீண்டும் செய்கின்ற வகையிலே ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், பல இடங்களிலே பழுது அடைந்துவிட்டது என்று சொல்லி பல மாதங்கள் ஆகியும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. என்னுடைய பகுதியிலே ஒரு மோட்டார் பழுதடைந்தபோது அதை வாரியத்தினர் எடுத்துச் சென்றுவிட்டார்கள். ஆனால் அவர்கள் எடுத்துச் சென்றது, அந்தப் பகுதி மக்க ளுக்கோ அந்த ஒன்றிய அலுவலர்களுக்கோ தெரியாது, அதன் காரணத்தினால் அந்த மோட்டாரை யாரோ எடுத்துச் சென்று விட்டார்கள் என்று காவல் துறையிலே புகார் கொடுக்க வேண் டிய நிலை ஏற்பட்டுவிட்டது. இவைகளை எல்லாம் தவிர்க்க ஒன்றியங்களே அந்தப் பணியை ஏற்றுச் செய்யலாம். அப்படிச் செய்தால் தான் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு வசதி யாக இருக்கும். பெரிய பெரிய திட்டங்களை வேண்டுமானால் குடிநீர் வடிகால் வாரியம் பெறுப்பேற்கலாம், சிறிய சிறிய பணிகளைப் பொறுத்தவரையில் ஒன்றியங்களே பொறுப்பு ஏற்றுக்கொண்டு செய்யலாம் என்ற முறையிலே மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே தெருக்களுக்கு மின் விளக்கு வசதி அளிப் பதை ஒன்றியமே பொறுப்பேற்றுச் செய்து கொண்டிருந்தது முன்னாலே. இப்போது மின்வாரியம் அதைச் செய்கிறது. இதனால் காலதாமதமும் வசதிக்குறைவும் ஏற்படுகிறது. எனவே, 10 ஊராட்சிகளுக்கு ஒரு ஹெல்பர், அல்லது லைன் மேன் என்ற முறையிலே நியமித்து தெருவிளக்குகளைப் பராமரிக்கச் செய்ய வேண்டும்.

தொடக்கப்பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்தவரையிலே ஒன்றியங்களிலே அவர்கள் சரியாக வேலை செய்வதில்லை. பேறுகால விடுப்பு, ஈட்டிய விடுப்பு, மருத்துவ விடுப்பு என்று வழங்கப்படுவதால் அவர்கள் தொடர்ந்து நீண்டகாலமாக விடுப்பிலேயே இ[illegible]ர்கள். இதனால் சில நேரங்களிலே பள்ளி பிள்ளைக[illegible]க்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. அப்போது தற்கா[illegible]க வேலை செய்யக்கூடிய முறையிலே கூடுதல் ஆசிரியர்களை நியமிக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. தி. அன்பழகன்] [1980 ஜூலை 21

வேலைக்கு உணவுத் திட்டத்தை அரசு சிறப்பாகச் செய்து கொண்டு இருக்கிறது. இந்தத் திட்டத்தின் கீழ் அதிகமான வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வருவதால் அவைகளைக் கண்காணிக்கின்ற முறையிலே ஊர் நல அதிகாரிகளை போன்றஅதிகாரி நியமித்து அவற்றை கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் வாயிலாக சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அரிய கருத்துக்கள் மானியக் கோரிக்கை குறிப்புகளில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தேசிய நெடுஞ்சாலைத் திட்டத்தின்கீழ் பல 'பைபாஸ்' சாலைகள் முடிக்கப்பட்டிருந்தாலும் இன்னும் சில இடங்களிலே அந்தத் திட்டங்கள் செயல்படாத நிலைமை இருக்கிறது.

அதைப்போலவே சாலைகளைப் பராமரிப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பேருந்துகள் செல்லும் சாலைகள், ஊராட்சி ஒன்றியச் சாலைகள் ஆகிய அனைத்தையும் அரசே நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல 1,500 ஜனத்தொகை கொண்ட எல்லா ஊர்களுக்கும் சாலைப் போக்குவரத்தை அரசே செயல்படுத்தும் விதத்தில் 6 கோடி ரூபாய் இந்த வருஷத்திற்காக ஒதுக்கியிருப்பதைப் பாராட்டுகிறேன்; வரவேற்கிறேன். இணைப்புச் சாலைகளையும், பேருந்துகள் செல்லும் சாலைகளையும் ஊராட்சி ஒன்றியங்கள் செப்பனிடுவதற்கு வசதியில்லாமல் இருப்பதால், அந்த அனைத்து பாதைகளையும் அரசே ஏற்று நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கரும்பாலை இருக்கின்ற பகுதிகளுக்குச் சாலை அமைக்கும் திட்டத்தின்படி, எந்தெந்தப் பகுதிகளிலே கரும்பாலைகள் இருக்கின்றனவோ அந்தப் பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, அதிகமான அளவில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பகுதியிலே பாலாற்றின் குறுக்கே அம்பலூரிலிருந்து எக்கலாஸ்புரம் வரை தரைப்பாலம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்காக ஏறத்தாழ 16 இலட்சம் ரூபாய்க்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதை விரைவாகச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாலாற்றின் குறுக்கே ஆவாரங்குப்பத்திலிருந்து திம்மாம்பேட்டை வரை தரைப்பாலம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு செய்தால் ஆறு பக்கத்தில் இருக்கின்ற இருபது கிராமங்களுக்கு வசதி ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1980 ஜூலை 21] [திரு. தி. அன்பழகன்]

சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மேம்பாலம் கட்டுவது பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. எங்கள் வடாற்க்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் சென்னையிலிருந்து பெங்களூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில், இரண்டு மூன்றுஇடங்களிலே இரயில்வே கேட் இருப்பதால் அந்த இடங்களிலேயே மேம்பாலம் அமைத்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக வாணியம்பாடி புதூர் இரயில்வே கேட்டுக்கு ஒரு மேம்பாலத்தைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப் போல ஆம்பூருக்குப் பக்கத்தில் வடபுதுப்பட்டு என்ற இடத்தில் மேம்பாலம் அமைக்க வேண்டும்.

சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அரசு பல காரியங்களை செயல்படுத்த ஊராட்சி துறை அமைச்சரவர்கள் சிறப்பாகக் கவனம் எடுத்துக் கொண்டு, அதிலும் குறிப்பாக, என் தொகுதியைப் பற்றிக் கூறிய கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு, எனக்குப் பேச வாய்ப்பு தந்தமைக்காக நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

*திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: வணக்கத்திற்குரிய பேரவைத் துணைத் தலைவரவர்களே, சாலைகளும், பாலங்களும் என்ற மானியக் கோரிக்கையிலே பேசுகின்ற வாய்ப்பு கொடுத்தமைக்காக நான் முதலிலே நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆலங்குளம் தொகுதியை பொறுத்தவரையிலே பாசிக்கு வாய்த்தான் ஓடையிலும் கடங்கனேரி ஓடையிலுள்ள வெள்ளோடையிலும் பாலம் கட்ட வேண்டுமென்று பலஆண்டுகளாக கோரிக்கை இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் இதுநாள் வரையிலும் அந்தப் பகுதியிலே இந்த பாலங்கள் கட்டப்படாத காரணத்தினாலே போக்குவரத்து பாதிக்கப்பட்டு மக்கள் மிகவும் சங்கடப்படுகிறார்கள் என்பதை நான் இன்றைய தினம் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போன்று, ஆலங்குளம் தொகுதியிலே தாழையூத்து பகுதி நாஞ்சாங்குளம் வழியாக தஸ்தா வரை பாலமும் ரோடும் போட வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் பல்லாண்டுகளாக கேட்டுக் கொண்டு வருகிறார்கள். முக்கியமான போக்குவரத்து உள்ள அந்தப் பாதையைச் போடாத காரணத்தினாலே மழைக் காலத்தில் பஸ்கள் அந்தப் பகுதியில் செல்லாமல் மக்கள் மிக கஷ்டப்படுகிறார்கள். எனவே, தாழையூத்து பகுதிக்கும், நாஞ்சாங்குளம் பகுதிக்கும் பாலமும், ரோடும் உடனடியாகப் போடுவது பற்றி அரசு தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. தி. அன்பழகன்] [1980 ஜூலை 21

வேலைக்கு உணவுத் திட்டத்தை அரசு சிறப்பாகச் செய்து கொண்டு இருக்கிறது. இந்தத் திட்டத்தின் கீழ் அதிகமான வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வருவதால் அவைகளைக் கண்காணிக்கின்ற முறையிலே ஊர் நல அதிகாரி களை போன்றஅதிகாரி நியமித்து அவற்றை கண்காணிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் வாயிலாக சாலை மேம் பாட்டுத் திட்டத்தின்கீழ் அரிய கருத்துக்கள் மானியக் கோரிக்கை குறிப்புகளில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தேசிய நெடுஞ் சாலைத் திட்டத்தின்கீழ் பல 'பைபாஸ்' சாலைகள் முடிக்கப் பட்டிருந்தாலும் இன்னும் சில இடங்களிலே அந்தத் திட்டங்கள் செயல்படாத நிலைமை இருக்கிறது.

அதைப்போலவே சாலைகளைப் பராமரிப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பேருந்துகள் செல்லும் சாலைகள், ஊராட்சி ஒன்றியச் சாலைகள் ஆகிய அனைத்தையும் அரசே நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல 1,500 ஜனத்தொகை கொண்ட எல்லா ஊர் களுக்கும் சாலைப் போக்குவரத்தை அரசே செயல்படுத்தும் விதத்தில் 6 கோடி ரூபாய் இந்த வருஷத்திற்காக ஒதுக்கியிருப் பதைப் பாராட்டுகிறேன்; வரவேற்கிறேன். இணைப்புச் சாலைகளையும், பேருந்துகள் செல்லும் சாலைகளையும் ஊராட்சி ஒன்றியங்கள் செப்பனிடுவதற்கு வசதியில்லாமல் இருப்பதால், அந்த அனைத்து பாதைகளையும் அரசே ஏற்று நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கரும்பாலை இருக்கின்ற பகுதிகளுக்குச் சாலை அமைக்கும் திட்டத்தின்படி, எந்தெந்தப் பகுதிகளிலே கரும்பாலைகள் இருக் கின்றனவோ அந்தப் பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, அதிகமான அளவில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பகுதியிலே பாலாற்றின் குறுக்கே அம்பலூரி லிருந்து எக்கலாஸ்புரம் வரை தரைப்பாலம் அமைக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்காக ஏறத்தாழ 16 இலட்சம் ரூபாய்க்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதை விரை வாகச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாலாற்றின் குறுக்கே ஆவாரங்குப்பத்திலிருந்து திம்மாம் பேட்டை வரை தரைப்பாலம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு செய்தால் ஆறு பக்கத்தில் இருக்கின்ற இருபது கிராமங்களுக்கு வசதி ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1980 ஜூலை 21] [திரு. தி. அன்பழகன்]

சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மேம்பாலம் கட்டுவது பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. எங்கள் வடாற்க்காடு மாவட் டத்தைப் பொறுத்த வரையில் சென்னையிலிருந்து பெங்களூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில், இரண்டு மூன்றுஇடங்களிலே இரயில்வே கேட் இருப்பதால் அந்த இடங்களிலேயே மேம்பாலம் அமைத்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப் பாக வாணியம்பாடி புதூர் இரயில்வே கேட்டுக்கு ஒரு மேம் பாலத்தைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப் போல ஆம்பூருக்குப் பக்கத்தில் வடபுதுப்பட்டு என்ற இடத்தில் மேம்பாலம் அமைக்க வேண்டும்.

சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அரசு பல காரியங்களை செயல்படுத்த ஊராட்சி துறை அமைச்சரவர்கள் சிறப்பாகக் கவனம் எடுத்துக் கொண்டு, அதிலும் குறிப்பாக, என் தொகுதி யைப் பற்றிக் கூறிய கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டு மென்று கேட்டு, எனக்குப் பேச வாய்ப்பு தந்தமைக்காக நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

*திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : வணக்கத்திற்குரிய பேரவைத் துணைத் தலைவரவர்களே, சாலைகளும், பாலங்களும் என்ற மானியக் கோரிக்கையிலே பேசுகின்ற வாய்ப்பு கொடுத்த தமைக்காக நான் முதலிலே நன்றி சொல்ல கடமைப்பட்டிருக் கிறேன்.

ஆலங்குளம் தொகுதியை பொறுத்தவரையிலே பாசிக்கு வாய்த் தான் ஓடையிலும் கடங்கனேரி ஓடையிலுள்ள வெள்ளோடை யிலும் பாலம் கட்ட வேண்டுமென்று பலஆண்டுகளாக கோரிக்கை இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் இதுநாள் வரையிலும் அந்தப் பகுதியிலே இந்த பாலங்கள் கட்டப்படாத காரணத்தி னாலே போக்குவரத்து பாதிக்கப்பட்டு மக்கள் மிகவும் சங்கடப் படுகிறார்கள் என்பதை நான் இன்றைய தினம் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போன்று, ஆலங்குளம் தொகுதியிலே தாழையூத்து பகுதி நாஞ்சாங்குளம் வழியாக தஸ்தா வரை பாலமும் ரோடும் போட வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் பல்லாண்டுகளாக கேட்டுக் கொண்டு வருகிறார்கள். முக்கியமான போக்குவரத்து உள்ள அந்தப் பாதையைச் போடாத காரணத்தினாலே மழைக் காலத்தில் பஸ்கள் அந்தப் பகுதியில் செல்லாமல் மக்கள் மிக கஷ்டப்படுகிறார்கள். எனவே, தாழையூத்து பகுதிக்கும், நாஞ்சாங்குளம் பகுதிக்கும் பாலமும், ரோடும் உடனடியாகப் போடுவது பற்றி அரசு தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்] [1980 ஜூலை 21

அதே போன்று, ஆலங்குளம் தொகுதியிலே, ஆலங்குளம் முதல் நெட்டூர் ரெட்டியார்பட்டி வழி கீழக்கலங்கல் வரை விருப்பங் குளம் முதல் பிடாரக்குளம் வழி ஊத்துமலை வரை ரோடு போட்டு பத்து வருடங்களாகியும் இன்னும் அது பழுது பார்க்கப் படவில்லை. அவ்வாறு பழுது பார்க்கப்படாத காரணத்தினால் அது குண்டுங் குழியுமாக இருந்து கட்டை வண்டிகள் கூடப் போக முடியாத அளவிற்கு இருக்கிறது. அந்தச் சாலைகளை உடனடியாகப் பழுது பார்க்க ஆவன செய்ய வேண்டுமென்றும், அதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் பணிவன் போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போன்று, ஆலங்குளம் தொகுதியில் ஆலங்குளம் கால் வாய் என்று ஒன்று இருக்கிறது. பெயருக்குத்தான் கால்வாய் என்று இருக்கிறதே தவிர, அந்த வாய்க்காலில் தண்ணீர் வருவதே இல்லை. ஆலங்குளம் கால்வாயில் தண்ணீர் வரச் செய்து, ஆலங்குளம் குளத்திற்கு நிரந்தரமாகத் தண்ணீர் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1-00].

அதே போன்று ஆலங்குளம் மிகப் பெரிய பேரூராட்சி. அந்தப் பேரூராட்சியிலே பஸ் ஸ்டான்ட் வேண்டுமென்று பலஆண்டுகால மாக கோரிக்கை இருந்து வந்திருக்கிறது--முயற்சியும் எடுக்கப் பட்டிருக்கிறது. இன்றைய தினம் டெண்டர் கூட விடப்பட்ட தாகக் கேள்வி. ஆனால், யாருமே டெண்டர் எடுக்க முன் வர வில்லையென்று சொல்கிறார்கள். அதற்கான காரண காரியங் களை ஆராய வேண்டுமென்று இந்த அரசை நான் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்திலே, ராஜ பாண்டி ஒரு தனி ஊராக இருக்கிறது. அங்கு போக்குவரத்தோ, பஸ் வசதியோ சரியாக இல்லை. அங்கே ஐயப்பஞ்சேரி என்ற பச்சேரியிலிருந்து மக்கள் வெளியே வரக் கூட பாதை இல்லை. ஆகவே, அந்த பச்சேரிக்கு ஒரு பள்ளிக்கூடம் கட்டித் தர இந்த அரசு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள் றேன்.

ஆலங்குளத்திற்கும் கீழப்பாவூருக்கும் மத்தியிலே உள்ள துத்தி குளம் மக்கள் மற்றவர்களோடு எந்தவிதத் தொடர்புமில்லாமல் அனாதைகளாக இருக்கிறார்கள். அந்த துத்தி குளம் மக்களை பார்த்த நேரத்திலே, அவர்கள் எங்கள் ஊரிலிருந்து யாரும் பெண் எடுக்கவும் மறுக்கிறார்கள், பெண் கொடுக்கவும் மறுக் கிறார்கள். அதனால், நாங்கள் உள்ளூரிலேதான் சம்பந்தம் செய்ய வேண்டியிருக்கிறது. ஏனென்றால், இங்கு யாருமே வர முடியவில்லையென்று சொல்கிறார்கள். ஆகவே, அங்கு பாலமும், சாலையும் போட்டுக் கொடுத்தால்தான் அந்தக் துத்தி



1980 ஜூலை 21] [திரு. நவநீதகிருஷ்ண பாண்டியன்]

குளம் மக்கள் பின்தங்கிய நிலையிலிருந்து மீள முடியும். ஆகவே, அதற்கான முயற்சியை அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நல்ல காரியங்களைச் செய்வதற்கு அதிகாரிகளை கொஞ்சம் தூண்டிவிடுவதற்கு உண்மையிலேயே ஊராட்சி மன்றத் தேர்தல்களை ஒன்றியத் தேர்தல்களை உடனடியாக நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினராகத் பதவியேற்ற உடனே அவர் எல்லாமே செய்துவிடுவார் என்று மக்கள் நம்புகிறார்கள். ஆனால், சில பகுதிகளுக்கு நாங்கள் செல்லும்போது, ரோடு போட வேண்டுமென்றால், இன்ஜினியர் இல்லை, ஓவர்சீர் இல்லை என்ற புகார்கள் வருகின்றன. உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட ஒன்றியங்களைக் கவனித்து, எங்கெங்கே ஒன்றியப் பொறியாளர், ஒன்றிய ஓவர்சீர் இல்லையோ, அங்கே யெல்லாம் அப்பதவிகளை நிரப்ப முயற்சிக்க வேண்டும். சில பகுதிகளில் அதிகாரிகள் நீண்ட கால விடுப்பில் சென்றிருந்தால், பக்கத்து ஒன்றியப் பொறியாளர் அந்த ஒன்றிய பொறியாளர் பொறுப்பையும் சேர்த்து கவனிக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று, ஆலங்குளத்தை மையமாக வைத்து டவுன்பஸ் வசதி வேண்டுமென்று பல ஆண்டுகாலமாக அந்தப் பகுதி மக்கள் கேட்டு வருகிறார்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இதை முக்கியமானதாகக் கருதுவார்கள் என்று கருதுகிறேன். ஏனென்றால், சேரன்மாதேவியும் இதனால் பயன் பெறும். அதனை நிறைவேற்ற வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல், குடிதண்ணீரைப் பொறுத்த வரையிலே, மேல் நிலை நீர்தேக்கத் தொட்டிகள் பஞ்சாயத்துக்களுடைய பொறுப்பிலே இருந்தன. ஆனால், இப்பொழுது, பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்குகின்ற கிராமப் புற மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் பழுதடைந்து விட்டால், அதைப் பழுதுபார்க்க குடிநீர் வடிகால் வாரியத்தைத் தேடிச் செல்வதற்கு மிகவும் கால தாமதம் ஆகிறது. எனவே, அந்தப் பராமரிப்புப் பணிகளை மீண்டும் ஒன்றியத்திடமும் பஞ்சாயத்திடமும் விடவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று, இன்று ஆரம்பப் பள்ளிகளிலே ஸ்காலர்ஷிப் வழங்குகிறார்கள். அதை அநேகமாக புத்தகமாக வழங்கு கிறார்கள். அந்தப் புத்தகங்கள் பள்ளி இறுதிப் பகுதியிலே

தான் வருகின்றன. எனவே புத்தகமாகக் கொடுப்பதற்குப் பதிலாக பணமாகத் கொடுத்தால், அவர்கள் ஆரம்பத்திலே புத்தகங்களை வாங்க கடன் பெற்றிருந்தாலும் அந்தக் கடனை அடைக்க உதவும். ஆகவே, புத்தகத்திற்குப் பதிலாக, பணம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தாமிரபரணி ஆற்றிலிருந்து ஓடகன் கால்வாய் மூலம் கெங்கை கொண்டபுரம் பகுதிக்குத் தண்ணீர் கொண்டு வரவேண்டுமென்பது நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கிறது. அந்தக் கோரிக்கையை விரைவிலே நிறைவேற்றினால், 4 தொகுதிகள் அதனாலே பயன்பெறும். எனவே, அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய பெயராலே ஒரு பேருந்து போக்குவரத்துக் கழகத்தை அமைக்க வேண்டுமென்று நான் உங்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், பேரறிஞர் அண்ணா பெயராலே ஒரு போக்குவரத்துக் கழகம் இருக்கிறது. தந்தை பெரியார் அவர்கள் பெயரால் ஒரு போக்குவரத்துக் கழகம் இருக்கிறது. எனவே பெருந்தலைவர் காமராஜர் பெயராலே ஒரு போக்குவரத்துக் கழகத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பயணிகள் விடுதிகளிலே பெருந்தலைவர் காமராஜர் படமே இல்லை. பெருந்தலைவர் காமராஜர் அவர்களைக் கட்சிக்கு அப்பாற்பட்ட தலைவராக, எண்ணி, அந்த மாதிரி பயணிகள் விடுதிகளிலும், பள்ளிகள் போன்றவைகளிலும், பெருந்தலைவர் காமராஜர் படங்களை வைக்க வேண்டுமென்று கேட்டு இந்த மானியக் கோரிக்கையிலே பேச வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. மு. சுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திற்கு என்னை மீண்டும் தேர்ந்தெடுத்து அனுப்பிய ரிஷிவந்தியம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு, நான் சார்ந்திருக்கிற இந்திரா காங்கிரஸ் கட்சியின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1980—81 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகளான சமுதாய வளர்ச்சி, நகர்ப்புற வளர்ச்சி, சாலைகள் பாலங்கள் ஆகியவற்றின் மேல் என்னுடைய கருத்துக்களை கூற ஆசைப்படுகிறேன். சமுதாய நலத் திட்டம் ஆரம்பித்து 20 ஆண்டுகள் ஆயினும் இதுவரையில் கிராமங்களில் ஏற்படவே இல்லை. குறிப்பாகப் போக்குவரத்து வசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, சாலை வசதி, பள்ளிக்கூட வசதி கல்வி கூடங்களுக்கான கட்டிடங்கள் ஆகியவைகளை நாட்டு மக்களுக்கு அளிப்பதுதான் இந்த சமுதாய வளர்ச்சியின் நோக்கமாகும். இந்த அடிப்படைத் தேவைகளில் ஒன்று கூட முழுமையாக நடைபெறவில்லை.



ஊராட்சி ஒன்றியங்களில் பெருந்தலைவர் என்ற பதவி வெறும் அலங்காரமான பதவியாக இருக்கிறதே தவிர, அவருக்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை. இந்த ஊராட்சி ஒன்றியங்கள் ஆரம்பித்த நேரத்தில் இருந்து அதிகாரங்களை எல்லாம் இப்போது இந்தப் பெருந்தலைவருக்குக் கொடுக்க வேண்டும் என்று இந்த மன்றத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களுக்கு பழைய ஜில்லா போர்டு தலைவருக்கு இருந்த அதிகாரம்போல வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதுவரையில் அரசாங்கத்தில் எத்தனை இலாக்காக்கள் இருக்கின்றனவோ அத்தனை இலாக்காக்களையும் ஒருங்கிணைத்து ஒரு வட்டார அளவிலே இருக்கின்ற ஒரு அமைப்பாகத்தான் இந்த ஊராட்சி ஒன்றியங்கள் இயங்கிக் கொண்டு வருகின்றன. ஊராட்சி ஒன்றியத்திலே தேர்தல்கள் இன்றைய தினம் நடைபெறாமல் இருக்கின்ற நேரத்தில் இந்த நிர்வாகத்திலே பங்குகொள்ள சட்டமன்ற உறுப்பினர்களை எக்ஸ்-அபிசியோ சேர்மனாக நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பஞ்சாயத்து யூனியன்கள் மிகப் பெரியனவாக இருக்கின்றன. உதாரணமாக சில பஞ்சாயத்து யூனியன்களில் 65, 70 கிராமங்கள் உள்ளன. முகையூர் பஞ்சாயத்து யூனியனில் 65 கிராமங்களும், வல்லம் பஞ்சாயத்து யூனியல் 65, 67 கிராமங்கள் இருக்கின்றன. ஆகவே, இத்தகைய ஒன்றியங்களை இரண்டாகப் பிரித்து அவைகள் எளிதான முறையில் இயங்குகின்ற வாய்ப்பினை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து பாக்கம் வட்டாரப் பகுதியை மணலூர் பேட்டை ஒன்றியத்துடன் சேர்த்தும், ரிஷிவந்தியம் பகுதியை தியாகதுர்க்கம் ஒன்றியத்துடன் சேர்த்தும் நிர்வாகத்தை நல்ல முறையில் நடத்த வசதியாக பிரித்து உத்தரவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொன்றுக்கும் 4, 5 மைல்கள் இடைவெளி இருக்கின்றன. ஒரு பகுதிக்கும் இன்னொரு பகுதிக்கும் 30 மைல் தூரம் இருக்கின்றது.

ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் நிரந்தரமான பள்ளிக் கட்டடங்களும், இணைப்புச் சாலைகளும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியும், பஞ்சாயத்து அலுவலகக் கட்டிடமும் கட்டாயமாகக் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து பஞ்சாயத்து ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக எடுத்துக் கொண்டமைக்கு மகிழ்ச்சி. ஆனால் இவர்கள் எந்த விதத்தில் அரசு ஊழியர்களாக எடுத்துக் கொள்ளப்பட்டனர் என்ற விபரங்கள் தெரியவில்லை. எனவே இந்த ஆசிரியர்கள்

ஒன்று கல்வி இலாகாவுடன் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும். அல்லது ஊராட்சி ஒன்றியத்திலேயே பணியில் சேர்த்துகொள்ள வேண்டும்.

பல உயர்நிலைப் பள்ளிகள் புதியதாக ஏற்பட்டாலும் கூட, பல பழைய பள்ளிகளுக்கு கட்டிட வசதி இல்லை. குறிப்பாக என்னுடைய தொகுதியில் உள்ள திருக்கோவிலூரில் இரண்டு மேல்நிலைப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் இரண் டுக்கும் கழிவிடங்கள் கிடையாது. விளையாட்டுத் திடல்கள் அறவே இல்லை. இவை இரண்டும் ஆண்களுக்கும் கிடையாது, பெண் களுக்கும் கிடையாது. தற்போது இருக்கும் பழைய கட்டிடங்கள் அனைத்தும் இடிந்து விழும் நிலையில் உள்ளன. எனவே இந்த இரண்டு பள்ளிகளில் உள்ள மாணவர்கள் கல்வி பயில கட்டிடங் கள் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த இரண்டு பள்ளிகளிலும் கிட்டத்தட்ட 2,000 மாணவர்கள் படிக் கின்றார்கள். அவர்களில் 1,500 பேர்களுக்குத்தான் இட வசதி இருக்கின்றன. மற்றவர்கள் திறந்த வெளியிலும், மரத்தடியிலும் பயிலும் நிலை இருக்கின்றது. அடுத்து ஆசிரியர்களை மாற்றும் அதிகாரம் பெருந்தலைவருக்கு மாற்றப்படவேண்டும்,

அடுத்து மருத்துவ வசதியைப் பொறுத்த வரையில் என் னுடைய தொகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் இரண்டு இருந்தும் பொது மக்களுக்கு பூரண முறையில் சுகாதார வசதிகள் கிடைக்கவில்லை. டாக்டர்கள் மருத்துவமனையில் தங்குவதே கிடையாது. பிரைவேட் பிராக்டிஸ் பண்ண டவுனுக்குப் போய் விடுகிறார்கள். மேலும் ரிஷிவந்தியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணி நிலுவையில் உள்ளது. எனவே இதை அரசு பரிசீலித்து உடனடியாக ஆரம்ப சுகாதார நிலையத்தைக் கட்டி முடிக்க வேண்டும். மகப்பேறு உதவியாளர்களுக்கு நிரந் தரப் பயணப்படி வழங்கும் இந்த அரசு அவர்களுடன் பணி புரியும் ஆயாக்களுக்கும் நிரந்தர பயணப்படி வழங்கக் கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1–10]

கூட்டுறவுத் துறை நாட்டின் வளர்ச்சிக்கு பங்கேற்கும் ஒரு துறையாகும். கூட்டுறவு இயக்கம் நாட்டின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் மிகவும் முக்கியமாகும். ஆனால் துரதிருஷ்ட வசமாக நம் நாட்டில் கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில் இயங்கவில்லை. நல்ல முறையில் இயங்கும் கூட்டுறவு இயக் கங்களை பலவீனப்படுத்துகின்ற வகையிலும், மோசமாக இயங்குகின்ற சங்கங்களை கண்காணிக்காமலும் கூட்டுறவுத்துறை இயங்கி வருகிறது. குறிப்பாக திருக்கோவிலூர் கூட்டுறவு நகர் புற வங்கி ரிசர்வ் பேங்க் மூலம் 'ஏ' கிளாஸ் வங்கியாக அறிவிக்கப்பட்டு இயங்கி வருகிறது. தமிழ் நாட்டில் உள்ள





குறிப்பிடத்தக்க முதன்மையான வங்கிகளில் இதுவும் ஒன்று. ஆனால் கூட்டுறவு இலாகா அதிகாரிகள் தணிக்கை ஆட்சேப பனையை வைத்துக் கொண்டு ஏன் இந்த வங்கியினைக் கலைக்கக் கூடாது என முறைகேடான முறையில் நடவடிக்கை எடுக்கின் றார்கள். இந்த வங்கிக்கு 1978–79-ம் ஆண்டிற்கு 2,68,000 ரூபாய் இலாபம் கிடைத்து இருக்கிறது. ஆனால் இதைத் தணிக்கை செய்த அதிகாரிகள் கூட்டுறவு இலாக்காவில் மேல் அதிகாரிகளின் தூண்டுதலின் பேரில் இரண்டு லட்சம் ரூபாய் வராத கடன் என்றும், 50,000 ரூபாய் ரிசர்வ் நிதி என்றும், நிகரம் ரூ. 18,000 என்றும் தான் அவ்வருடத்திற்கு இலாபம் என்றும் கணக்கிட்டு தணிக்கை செய்து உள்ளார்கள். இது முறைகேடான செயலாகும். இது கடன் வாங்கியவர்களை அவமதிப்பதாகும்.

வங்கி ஆரம்பித்த நாள் முதல் வராத கடன் என்று ஒன்று இரண்டு உள்ளதே தவிர வேறு ஒன்றும் இல்லை. இப்படித் தணிக்கை செய்தது பொது மக்களின் மத்தியில் வங்கி நிர்வா கஸ்தர்கள் பேரில் அவநம்பிக்கை ஏற்பட இந்த இலாகா வழி செய்துள்ளது. எனவே, இந்த வங்கியின் விவகாரத்தை வேறு இலாக்காவின் அதிகாரிகளைக் கொண்டு விசாரணை செய்யும் படி கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், அதே ஊரில் வீடு அடமான சங்கம் ஒன்று உள்ளது. அதில் கடன் கோருபவர்களிடமிருந்து பங்குத் தொகை வசூலிக் கப்பட்டுள்ளது. ஆனால் இந்த தொகையை பினாமியாக ரசீது அச்சடித்து வங்கியின் கணக்கிற்கு வரவு வைக்காமல் செய்து உள்ளார்கள். ஆனால் பங்குத் தொகை கட்டாதவர்களுக்குக் கூட கடன் வழங்கப்பட்டுள்ளது. இதை பல முறை கூட்டுறவு அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகவே, அரசு உடனடியாக இதை பரிசீலித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது பலமுறை தணிக்கை செய்யப்பட்டும கண்டுபிடிக்கப் படவில்லை. அப்படியென்றால் இந்தத் தவறுகள் அதிகாரிகளின் ஒத்துழைப்பால் தான் நடந்துள்ளது என எண்ணுவதற்கு வாய்ப்பு உள்ளது. ஆகவே, கூட்டுறவு இலாக்காவிற்குத் தலைமை அதி காரியாக இருப்பவர் வேறு இலாகாவைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். இல்லையென்றால் இது கூட்டுறவு அதிகாரிகளின் கூட்டுறவாக இருக்குமேயன்றி பொதுமக்களின் கூட்டுறவு இயக் மாக இருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் பல்லாண்டு காலமாக பல ஏரி களும், கண்மாய்களும் ஆழப்படுத்தப்படாமல், சரிவர பராமரிக் கப்படாமல் உள்ளது. இதனை உடனடியாக கவனித்து நீர் பிடிப்பு அதிகமாக பிடிக்கின்ற வகையில் ஏரிகளை நல்ல முறை யில் செப்பனிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

. லேபர் கான்ட்ராக்டைப் பொறுத்த வரையில், ஒரு ஒன்றியத்தில் இருக்கும் பல அதிகாரிகள் அங்கே இருக்கும் பல வேலைகளை தாங்களே கான்ட்ராக்ட் எடுத்துக்கொண்டு, அந்த வேலைகளைச் செய்வதால், வேலை சரிவர நடைபெறவில்லை. இதை அரசாங்கம் கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் இரண்டு கால்நடை மருத்துவமனைகள் இருந்தும், செயற்கை முறையில் கருத்தரிக்கும் நிலையம் ஏற்படுத்தப்படவில்லை. இதை அரசு உடனடியாக கவனித்து என்னுடைய தொகுதியில் இரண்டு செயற்கை முறை கருத்தரிக்கும் நிலையங்கள் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு தொகுதியிலும் பொது மக்களுக்கு நல்ல முறையில் பால் வழங்கும் நிறுவனம் மூலம் பால் வினியோகிக்க வழிவகை செய்யவேண்டும்.

என்னுடைய தொகுதியில் உள்ள இரண்டு வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு குடியிருப்பு இல்லங்கள் கட்டித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

வேலை இல்லாமல் இருக்கும் கிராமப்பகுதி பெண்களுக்கு சிறு தொழில் ஏற்படுத்தி வேலை வாய்ப்பு செய்து கொடுத்து வருவாய்த் தேடித் தர கேட்டுக்கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் கிராம சேவக்குகளுக்கு ஐந்து கிராமங்களுக்கு ஒரு கிராம சேவக் வீதம் பிரித்துத் தரவேண்டும் என்று உத்தரவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ளத்தினாலும், தீயினாலும், புயலினாலும் பாதிக்கப்படும் மக்களுக்கு செய்யப்படும் உதவிகளை வட்டார வளர்ச்சி அலுவலர் மூலம் செய்து கொடுக்க தக்க ஆணைகள் பிறப்பிக்கவேண்டும். என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக இந்த அரசை நான் கேட்டுக் கொள்வது மறைந்த அமைச்சர் திரு. கோவிந்தசாமி அவர்கள் தன்னுடைய காலத்தில் மணலூர்பேட்டை–தியாகதுர்கம் ரோடில் பெண்ணையாற்றில் ஒரு பாலம் கட்ட முயற்சித்திருந்தார்கள். ஆனால் இதுவரையிலும் அந்த வேலை நடைபெறாமல் உள்ளது. இப்பாலம், அமைத்தால் முக்கியமாக தென்மாவட்டங்களையும், வடஆற்காடு பெங்களூர் போன்ற பகுதிகளை இணைக்கும் விதத்தில் குறுகிய காலத்தில் நீண்ட தூரத்தைக் கடக்கின்ற வாய்ப்பினை ஏற்படுத்தும். எனவே, நெடுஞ்சாலைத் துறையினர் இதனை பரிசீலித்து ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். மேலும் என்னுடைய தொகுதியில் பழைய சிறுவங்கூர் அருகில் மணிமுத்தாறு நதியில் ஒரு பாலம் கட்ட டெண்டர் விட்டும் இதுவரையில் வேலை





நடைபெறவில்லை. இதை உடனடியாக பரிசீலித்து பாலம் கட்டி அந்த பகுதி மக்கள் தங்களுடைய விவசாய விளைபொருள் களை எடுத்துச் சென்று வாணிபம் செய்ய வசதி செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். பாலம் கட்டும் வரையில் தற்காலிகமாக அணையின் மேல் வண்டிகள் போக்குவரத்திற்கு அனுமதி அளிக்கும் படி கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

என்னுடைய தொகுதியில் சோழவாண்டிபுரம் பணப்பாடியிலிருந்து ரிஷிவந்தியம் செல்வதற்கு வசதியாக கெடிலம் நதியில் ஒரு பாலம் அமைத்துக்கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் பேச அழைக்கப்பட்டார்).

*திரு.து. இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சமுதாய நலத்திட்டம், நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், சாலைகளும் பாலங்களும் என்ற தலைப்பில் பேசுகின்றதொரு நல்ல வாய்ப்பை பெற்றமைக்காக பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும், அங்கே சிறப்பாக ஒத்துழைப்பு கொடுத்து முனைப்பாக காரியங்கள் செய்த நண்பர்களுக்கும், கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து, இந்தத் தலைப்பிலே பேச விழைகிறேன்.

இதிலே முக்கியமாக இருப்பது சமுதாய நலத் திட்டம். இந்த ஊராட்சி ஒன்றியங்கள் ஏற்கெனவே வருவாய்த்துறை அதிகாரிகளின் கட்டுப்பாட்டிற்குள் சிக்குண்டு இருக்கின்றன. அந்த சிக்கலிலிருந்து மாற்றப்பட வேண்டுமென்ற எண்ணத்தில் கோட்ட வளர்ச்சி அதிகாரி ஒருவரை நியமிப்பதன் மூலம் வருவாய்த் துறையில் சிக்காமல் இருக்கலாம் என்ற அடிப்படை உருவாக்கப்பட்டது. இதிலும் சிக்கல் தீரவில்லை. இன்றைக்கு கீழே இருக்கின்ற அமைப்பைப் பார்த்தால், கிராம அதிகாரிகள்தான் பஞ்சாயத்து வீட்டுவரியை வசூல் செய்கின்ற சூழ்நிலை இருக்கிறது. கிராம அதிகாரிகள் வீட்டு வரி வசூல் செய்கின்ற நிலைமை மாற்றப்பட வேண்டும் என்று கிராம அதிகாரிகள் சங்கம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது. எங்களிடமிருந்து இந்த பொறுப்பை எடுத்துவிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பதிலாக ஊராட்சி ஒன்றியங்களில் ஒரு ஒன்றியத்திற்கு 6 பில் கலெக்டர் வீதம் நியமனம் செய்து, அவர்கள் மூலமாக இந்த வரியை வசூல் செய்ய ஏற்பாடு செய்யலாம். அதனால் ஏறத்தாழ 2,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பும் உருவாக்கப்படும். வருவாய்த் துறையின் சிக்கலும் தீரும்; வரியும் ஒழுங்காக வசூலாகும். இப்போது அவர்கள் வீட்டு வரியைப் பற்றி கவலைப்படுவதில்லை. நில வரியை மட்டும் வசூல் செய்துகொள்கிறார்கள்.

[திரு. து. இராசரத்தினம்] [1980 ஜூலை 21

வீட்டு வரி சரியாக வசூல் ஆகாததால் அதற்கு சமமாக அரசாங்கம் கொடுக்க வேண்டிய ஈட்டுத் தொகையும் கிடைக்க வழியில்லை. இதை மனதிலே கொண்டு, மாண்புமிகு அமைச்சரவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கெனவே பூவை ஒன்றியத்தில் தார் சாலை போடப் பட்டிருக்கிறது. கடந்த 5—2—1980-லே கூட மாண்புமிகு அமைச்சரவர்கள் வந்து பார்த்தார்கள். அந்த தார் சாலையை யார் பராமரிப்பது என்று இன்றுவரையில் முடிவு செய்யப்பட வில்லை. அன்றைக்கு போட்ட சாலையை யார் பராமரிப்பது என்று முடிவு செய்யாததால் அந்த சாலை பழுதுபட்டிருக் கிறது; பழுது சரிபார்க்கப்படவில்லை. ஊராட்சி ஒன்றியமாவது அந்த சாலையை பழுது பார்க்க வேண்டுமென்று, செப்பனிட வேண்டுமென்று உத்தரவிட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக செங்கற்பட்டு மாவட்டத்தில் 15 சட்டமன்ற தொகுதிகள் இருந்தன; இப்போது 17 சட்டமன்ற தொகுதிகள் இருக்கின்றன. அதிலும் குறிப்பாக பல பகுதிகள் சென்னை மாநகர எல்லையில் சென்னை மாநகரின் புறநகர் பகுதியாக இருக்கின்றன. ஆகவே, இந்த புறநகர் பகுதிகளுக்கு அதிகமாக செலவிடவேண்டியிருக்கிறது.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு ஆசிரியர்கள் பற்றாக்குறை அதிகமாக இருக்கிறது. பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்தில் மட்டும் 60 ஆசிரியர்கள் இடம் காலியாக இருக்கிறது. அதற்கு அடுத்து ஆவடி நகரியத்தில் 40 ஆசிரியர்கள் நியமிக்கப் படவேண்டியிருக்கிறது. பள்ளிக்கூட கட்டிடங்களும் சரியாக அமையவில்லை. ஆகவே, பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத் திற்கு இன்னும் அதிகமாகப் பணம் ஒதுக்க வேண்டும். காரணம் அது ஒரு புறநகர் பகுதி. ஆவடி ஒரு நகரியம். அதற்குப் போதுமான நிதி வசதி இல்லை. நகரியத்தின் வளர்ச்சிக்கும போதுமான நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

குறிப்பாக, ஆவடி நகரியம் ஆவதற்கு முன்னாலே அங்கே ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் இருந்தது. அந்த ஆரம்பச் சுகாதார நிலையத்தை 1975 ஆம் ஆண்டு நேமத்திற்கு மாற்ற வேண்டுமென்று ஆணையிடப்பட்டும் இதுநாள் வரையில் மாற்றப் படவில்லை. அந்த நகரியத்திற்கு பெரிய மருத்துவமனை கட்டப்பட வேண்டும். அதற்கு முன்னால் 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை உருவாக்கப்பட வேண்டுமென்று சொன்னோம்; இன்னும் உருவாக்கப்பட வில்லை. விரைவிலே உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1980 ஜூலை 21] [திரு. து. இராசரத்தினம்]

[பிற்பகல் 1.20]

அடுத்து ஆவடி நகராட்சிக்குப் போதிய வருவாய் இல்லாத நிலை இருக்கின்றது. அந்த வருவாய் 30 சதவீதம்தான் உள்ளது. அதை வைத்துக்கொண்டு எந்தப்பணியையும் செய்ய முடியாத நிலை இருக்கின்றது. ஆகவே அங்கே வருகின்ற அதிகாரிகளும், இந்த நிலை இருக்கின்ற காரணத்தால் வேறு இடங்களுக்கு மாற்றிக்கொண்டு போய்விடுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே நகராட்சிகள் பெரிதாக இருக்கக்கூடிய நிலையிலும் போதிய வருவாய் இல்லாத நிலையிலும் பல பணிகளும் செய்யப் படாத நிலையில் இருக்கின்றன. அங்கே குடிதண்ணீர் கூட கிடைக்காத நிலை இருந்து கொண்டிருக்கின்றது. குடிநீர் குறித்து நான் மாண்புமிகு அமைச்சரவர்களுக்குக் கடிதம் எழுதினேன் 3—1—1978 அன்று. ஆனால் அமைச்சரவர் களிடத்திலே இருந்து அதாவது அந்தத் துறையிலே இருந்து 16—1—1979 அன்றுதான் எனக்குப் பதில் வந்தது. ஓராண்டுக் காலம் கழித்து வந்தது. அவ்வாறு வந்த பதிலில் நேரடியாக இந்தத் திட்டத்தை தற்போது நிறைவேற்றுவதாக இல்லை என்று சொன்னாலும் பாதகம் இல்லை. ஆனால் அதிலே சொல்லப்பட்டிருப்பது என்னவென்றால் ஏதோ 2 இலட்சத்து 50 ஆயிரம் காலன் தண்ணீர் கொடுத்துக்கொண்டிருப்பதாகவும் அதை 4 இலட்சத்து 50 ஆயிரம் காலன் என்ற அளவிலே உயர்த்திக் கொடுக்கலாமா என்று கருதுவதாகவும் சொல்லப் பட்டிருந்தது. ஆவடி நகரத்திலே தண்ணீர் இல்லாத பிரச் சினையை எப்படித் தீர்ப்பது என்று திட்டமிட்டு ஆய்வு செய்து ஆவடி நகரியமும், அம்பத்தூர் நகரியமும் 3.66 கோடி ரூபாய்க்கு திட்டம் தீட்டி அத்திட்டம் இன்றுவரையில் செயல்படாமல் இருந்துகொண்டு வருகின்றது. அவர்களுக்குத் தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தால்தான் சிறப்பாக அமையும். ஆகவே உடனடியாக கொடுப்பதன் மூலமாக அந்தப் பகுதி மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சாலை களையும், பாலங்களையும் எடுத்துக்கொண்டால் என்னுடைய பகுதியிலே பூந்தமல்லிக்கும் பட்டாபிராமுக்கும் செல்லுகின்ற சாலையிலே கடந்த ஆண்டு 14 இலட்சம் ரூபாய்க்கு உடைபட்ட பாலத்தைத் திரும்பக் கட்டுவதற்கு திட்டம் தீட்டப்பட்டு இருந்தது. அதாவது கூவம் ஆற்றிலே உடைபட்ட பாலத்தைக் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டு இன்னும் அது கட்டப்படாமல் இருந்துகொண்டிருக்கின்றது. அந்தப் பாலத்தை உடனடியாகக் கட்டித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே அதுபற்றிய குறிப்பு இல்லை. மாண்புமிகு அமைச்சரவர்கள் எங்கள் தொகுதிக்கு 24 ஆம் தேதி வருகிறார்கள் என்று கருது கிறேன். அப்போது அவர்கள் நேரடியாகப் பார்வையிட்டு அதற்கான காரியங்களைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உடைபட்ட பாலத்தைப்பற்றிச் சொன்னேன். உடைந்துவிடும் நிலையிலும் சில பாலங்கள் இருக்கின்றது. திருவள்ளூருக்கும், பூந்தமல்லிக்கும் இடையிலே 29 வது கிலோ மீட்டரில் பாலம் உடையக்கூடிய நிலையிலே இருக்கின்றன. கூவம் ஆற்றிலே இருந்து செம்பரம்பாக்கம் ஏரிக்குச் செல்லக்கூடிய கால்வாய் அது. அதிலே இருமருங்கிலும் மண் எடுத்திருப்பதன் காரணத்தால் அது உடையக்கூடிய நிலைமையில் இருக்கின்றது. உடனே அதைத் தடுத்து நிறுத்தவேண்டும். இல்லாவிட்டால் நிச்சயமாக இந்த அரசுக்கு 2 இலட்ச ரூபாய் நஷ்டமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

அடுத்து, திருவேற்காட்டிலே ஒரு பாலம் கட்டப்பட்டிருக்கின்றது 10 இலட்சம் ரூபாய் செலவில். ஆனால் அதற்கு பாதை போட வேண்டும் என்று கேட்டும் இதுவரையில் கவனிக்கப்படவில்லை. அதையும் கவனித்து ஆவன செய்யவேண்டும் உடனடியாக.

அடுத்து தேசிய நெடுஞ்சாலையில் 17 கிலோமீட்டர் தொலைவில் தேவையற்ற முறையில் 3 அடி பைப்புகள் மார்ச் மாதம் கொண்டுவந்துபோடப்பட்டிருக்கின்றன. கல்வெட்டுகள் அமைக்க வேண்டும் என்பதற்காகப் போடப்பட்டிருக்கிறது. ஆனால் பணம் செலவு செய்ய முடியவில்லை என்ற காரணத்தால் அந்தப்பணி செய்யப்பட்டு அப்படியே நிற்கிறது. ஆகவே நெடுஞ்சாலையினுடைய வேலை நடைபெறவில்லை. அதற்கும் ஆவன செய்யவேண்டும். அடுத்து பூந்தமல்லிக்கும் ஆவடிக்கும் செல்லுகின்ற சாலைக்கும், சென்னைக்கும் பெங்களூருக்கும் செல்லுகின்ற சாலைக்கும், இடையிலே சென்னீர்குப்பத்தில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு இதுவரை 20 பேர் இறந்திருக்கிறார்கள். கடந்த வாரம் கூட ஒருவரை சாகடித்த காரணத்தால் ஒரு டிரைவரும் அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறார். ஆகவே அங்கே ஒரு தீவுத் திட்டு ஒன்று அதாவது ட்ராஃபிக் அயலன்ட் ஒன்று கட்டப்படவேண்டும். இது குறித்து மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பப்பட்டும் இன்னும் செய்யப்படாமல் இருக்கின்றது. அருள்கூர்ந்து இதை உடனடியாகச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மின்சார விளக்குகளைப் பொறுத்தவரையில் ஊராட்சி மன்றமாக இருந்தாலும், ஊராட்சி ஒன்றியமாக இருந்தாலும், நகராட்சியாக இருந்தாலும் 100-க்கு 10, 12 விளக்குகள் கூட சரியாக எரிவதில்லை. ஆனால்' ஏதோ 100-க்கு 100 எரிவதைப்போல 50 சதவீதம் மின்சார வெட்டு இருக்கின்ற காரணத்தால் தெருவிளக்குகள் நிறுத்தி வைக்கப்படும் என்று ஒரு உத்தரவு வந்திருக்கின்றது. தெருவிளக்குகள் அறவே எரியாத நிலை இருக்கின்றது. ஆகவே இந்த நிலையைப் போக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து ஆவடி—வாணியன்சத்திரம் சாலையைப்பொறுத்தவரையில் அது நெடுஞ்சாலைத் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு ஏழாண்டுக்காலம் ஆகின்றன. ஆனால் அந்தப் பாதை இன்னும் செப்பனிடப்படாமல் இருக்கின்றது. நான் நேற்றுக்கூட அந்தப் பகுதிக்குப் போகும்போது காரை எடுத்துக்கொண்டு செல்ல முடியவில்லை. இதுகுறித்து மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் முடிவு எடுத்தோம். ஆனால் இதுவரையில் ஏதுவும் செய்யப்படவில்லை. ஆக இன்றையதினம் ஊராட்சி மன்றங்கள் சிறப்பாக செயல்பட வேண்டும் என்று எண்ணுகின்ற நேரத்தில் அதற்கு உடனடியாகத் தேர்தல் நடத்தியாகவேண்டும். அவ்வாறு தோதல் நடத்தவேண்டும் என்று சொல்கின்ற நேரத்தில் வாக்காளர்களுக்கு 18 வயது ஆக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டு காலத்தைத் தள்ளிக்கொண்டு போகிறீர்கள். கிராமத்திற்கும் ஒன்றியத்திற்கும் காந்தியார் கண்ட கனவை நிறைவேற்ற முடியாமல் போய்விடக்கூடாது. கடந்த 5 ஆண்டுக்காலமாக அவ்வாறு சென்றுகொண்டிருக்கின்றது. இந்த நிலையை உடனடியாகப் போக்குகின்ற வகையில் உடனடியாகத் தேர்தல் நடத்த ஏற்பாடு செய்யவேண்டும். குடிநீர் வாரியத்திற்கும் ஊராட்சி ஒன்றியத்திற்கும் சம்பந்தம் இல்லாத நிலையில் பொது மக்களுக்கு போதுமான குடிநீர் கிடைக்காத நிலை இருக்கின்றது. ஆகவே இவை குறித்து வேகமாகச் செயல்படவேண்டும் என்று தெரிவித்துக்கொண்டு வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

* திரு. பி. முகமது இஸ்மாயில்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் அவர்களின் அனுமதி பெற்று என்னுடைய தொகுதியில் இருக்கிற சில குறைபாடுகளை மட்டும் இங்கே எடுத்துச்சொல்ல நான் ஆசைப்படுகிறேன்.

கிழக்கு கடற்கரையோரம் வழிப்பாதை அமையும் என்ற நம்பிக்கை ஓங்கி வருகிற வேளையில் இந்த கடற்கரை ரோடு கன்னியாகுமரியோடு நின்றுவிடாமல் இன்னும் சற்று விஸ்தரிப்பதாக இருந்தால், திருவனந்தபுரம் நகரைத்தொட்டு, மேற்கே பாம்பே நகரை எட்டுகிற மேற்கு கடற்கரை வழிப்பாதையும் அமைந்து விடும் என்பதனை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஆனால், அங்கு ஏற்படுகிற இடைஞ்சல்களை நீக்க சில சிறிய பாலங்கள் தேவைப்படும்.

அதுபோக மிக முக்கியமான பாலம் ஒன்றும் அங்கே தேவைப்படுகிறது. மணக்குடி என்ற ஒரு பகுதி அங்கே இருக்கிறது. ஏற்கெனவே அங்கே ரோடுகள் துண்டு துண்டாக இருந்தாலும் மணக்குடியில் வருகிற ஒரு காயல் அந்த ரோடுகளை இணையவிடாமல் செய்துக்கொண்டிருக்கிறது. எனவே, அங்கே பாலம் அமைப்பதாக இருந்தால் துண்டு துண்டாக இருக்கும் ரோடு

குளுக்கும் இணைப்பு ஏற்பட்டு விடும். அதன் வாயிலாக மேற்குக் கடற்கரையோர ரோடுகளும் அமைந்துவிடும் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

என்னுடைய பத்மநாபபுரம் தொகுதியில் ஈத்தவிளை, சரல் என்கிற இரண்டு ஊர்களையும் இணைப்பதற்காக அமையப்பெற்றிருக்கும் ரோடு மிக நல்ல முறையில் அமைந்துள்ளது. நூற்றுக் கணக்கான மக்கள் வாழ்கிற பகுதியாகவும் அது இருக்கிறது. ஆனால், அந்த ரோடில் பஸ் போக்குவரத்து விட வசதியில்லாமல் சில தடைகள் இருக்கின்றன. ஈத்தவிளை என்ற இடத்தில் ஒரு குறுகலான பாலமும், வள்ளியாறு என்ற ஆற்றிற்கு குறுக் ஒரு குறுகலான பாலமும் இருக்கிற காரணத்தினால் இந் பகுதியில் பஸ் போக்குவரத்து விட முடியவில்லை. இந்த இர பாலங்களையும் சற்று விரிவு படுத்துவதாக இருந்தால், அந் பகுதியில் வாழ்கிற மக்களின் நெடுநாள் வேண்டுகோளான ப வசதியை அவர்களுக்கு மிகச் சுலபமாக செய்து தர முடியும் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்து, அந்த இரண்டு பாலங்களையும் விரிவுபடுத்த, அகலப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கொளச்சல் என்ற நகரில் பாம்பூரி வாய்க்கால் என்ற சிறு ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. கொள சலிலிருந்து கருங்கல் செல்கிற ரோடில், அந்த வாய்க்காலின் மீ குறுகலான ஒரு பாலம் கட்டப்பெற்றிருக்கிறது. அந்தப் பால குறுகலாக இருக்கிற காரணத்தினால் பிளஷர் கார்கள் கூ போக முடியாத நிலை இருக்கிறது. இந்தப் பாலத்தின் அடு பகுதியில் சைமன் காலனி என்கிற மீனவ குடியிருப்பு இருக்கிற அந்த மீனவ குடியிருப்புக்கு செல்ல எந்த வசதியும் இல்லை. அந்தப் பாலம் மிகவும் குறுகலாக இருப்பதினால் கார்கள்கூட அந்த வழியாகப் போக முடியவில்லை. அந்தப் பாலத்தை தயவு செய்து விரிவுபடுத்த வேண்டும் என்றும், கொளச்சலிலிருந்து கருங்கல் செல்கிற பாலத்தையும் விரிவுபடுத்திக்கொடுக்க வேண்டும் என்றும் மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

பஸ்கள் ஓடிக்கொண்டிருந்தாலும் அந்தப் பாலங்கள் மிகவும் குறுகலாக இருக்கிற காரணத்தினால், பஸ்கள் சுவற்றில் மோதி விபத்துக்குள்ளாக நேரிடும் அபாயம் இருக்கிறது என்பதைக் கவனத்திற் கொண்டு, அந்தப் பாலங்களை விரிவுபடுத்தி, அகலப் படுத்திக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் இருக்கும் முக்கியமான குறிப்பிட்ட திட்டங்களை, மட்டும் இங்கே சுட்டிக் காட்டியிருக்கிற காரணத்தினால் அவைகள் நிச்சயமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தில் இருக்கும் என்கிற நம்பிக்கையோடு, தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன், வணக்கம்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

*பின்னர் பேரவை பிற்பகல் 1–30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.*

*சட்டமன்றப் பேரவை மீண்டும் மாலை 4–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் கூடியது.*

***திரு.பு.கோ.ஆனூர் ஜெகதீசன்:** பேரவைத்தலைவர் அவர்களே, இந்த மானியக்கோரிக்கை மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கிராம ராஜ்யம் என்று மகாத்மா காந்தி அடிகளால் துவக்கி வைக்கப்பட்ட இந்த பஞ்சாயத்து சிறப்பாக நடந்து வந்தது. ஆனால், அந்த கிராமப் பஞ்சாயத்துக்கள் இன்று வருவாய் இல்லாத ஒரு அவலநிலையில் இருந்துகொண்டிருக்கிறது. இன்று சர்சார்ஜ், ஸ்டாம்ப் ட்யூட்டி போன்ற வரி இனங்கள் மூலமாகதான் பஞ்சாயத்துக்கள் நடந்துகொண்டிருக்கின்றன. அவற்றிற்கு நிரந்தர-வருவாய் தரக்கூடிய வீட்டுவரி, தொழில்வரி, வாகன வரி போன்ற வரிகள் இன்று வசூலிக்கப்படாமல் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் தேங்கிக் கிடக்கிறது. இதற்குக் காரணம் கிராமப் பஞ்சாயத்துக்களில் வரி வசூலிக்கக்கூடிய கிராம முன்சீப்கள், கிராம கணக்குப்பிள்ளைகள் வசூல் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையை சில ஆண்டுகளுக்கு முன் ஏற்படுத்தினார்கள். அந்த கிராம அதிகாரிகள் இன்று அதற்குரிய கவனம் செலுத்தாமல் முடிந்தளவிற்கு செய்கிறார்களே தவிர போதிய வருமானம் வரக்கூடிய அளவில் அவர்கள் வசூல் செய்யவில்லை.' ஆகவே, இந்த நிலையை மாற்றி கிராமப் பஞ்சாயத்துக்கள் தன்னுடைய வருவாய்க்கு உட்பட்ட அளவில் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒவ்வொரு அலுவலரை நியமித்து அதன்மூலம் தன் வருவாயைப் பெருக்கிக்கொள்ளும் வகையில் மாற்றியமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1958 ஆம் ஆண்டு கிராமப் பஞ்சாயத்துக்கள் சட்டம் என்று ஒரு சட்டம் பஞ்சாயத்துக்களுக்கு இருக்கிறது. அந்தச் சட்டம் ஒரே குழப்பமான நிலையில் ஒன்றுக்கொன்று முரணான சட்டமாக இயங்கிக் கொண்டிருக்கிறது. ஒரு பஞ்சாயத்து போர்ட் தலைவர் தன் அதிகாரத்திற்குட்பட்ட அளவில் செய்ய வேண்டி ஒரு வழக்கை தொடருவாரேயானால் அந்த வழக்கு பஞ்சாயத்துக்கு அனுகூலமாக இல்லாமல் நேர்முரணான அளவில் இன்றைக்கு வழக்கு மன்றங்களில் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட முரணான, ஒன்றுக்கொன்று மாறுபட்ட, குழப்பமான பஞ்சாயத்துக்கள் சட்டத்தை திருத்தியமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பல பஞ்சாயத்துக்களில் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் எட்டு கிராமங்கள், ஒன்பது கிராமங்கள் என்றளவில் சேர்ந்து எந்தக் கிராமமும் முன்னேற முடியாத அளவிற்கு, பஞ்சாயத்துக்கள் சரிவர நிர்வாகம் செய்ய முடியாத அளவிற்கு இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றன. அந்தப் பஞ்சாயத்துக்களை இரண்டு அல்லது மூன்றாகப் பிரித்துத் தீரவேண்டிய நிலையில் இருக்கிறோம். ஒவ்வொரு பஞ்சாயத்தில் இருக்கும் கிராமங்களும் தனது வருவாயை தேடித்தீரவேண்டும் என்ற இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். உதாரணமாக எனது தொகுதியில் உள்ள விட்டலாபுரத்தில் ஏறக்குறைய ஆறு கிராமங்கள் அதோடு இணைந்திருக்கிறது. ஆகவே, எந்தக் கிராமமும் முன்னேற முடியாத அளவிற்கு ஸ்தம்பித்துப்போய் இருக்கிறது.

அதேபோல் மிகப் பெரிய ஒன்றியங்களை இரண்டு அல்லது மூன்றாகப் பிரித்துத் தீரவேண்டும். அதற்காக எவ்வளவு செலவானாலும், எவ்வளவு காலதாமதமானாலும், அதை ஏற்றுச் செய்துதர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உதாரணமாக, என்னுடைய தொகுதிக்குப் பக்கத்தில் இருக்கிற உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தில் 72 பஞ்சாயத்துக்கள் அடங்கி இருக்கின்றன. ஆகவே, அதை இரண்டு பஞ்சாயத்து ஒன்றியங்களாகப் பிரிக்கலாம் என்பதை நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், ஊராட்சி ஒன்றியங்களிலே இ.ஒ.-(பி.) என்று கூட்டுறவு விரிவு அலுவலர் பதவியிலே இருக்கிறார். இ. ஒ. (ஐ) என்று தொழில் விரிவு அலுவலர் அங்கே பதவியிலேயே இருக்கிறார். அந்த பதவிகளை வகிப்பவர்கள் தங்களுக்கு எந்த விதமான வேலையும் இன்றி, ஊர் சுற்றிக்கொண்டிருக்கும் பதவியாக இருக்கிறது. அப்படிப்பட்டவர்களை எந்த இடத்திலே, அமர்த்தினால், அவர்களுக்கு வேலை கிடைக்குமோ அந்த இடங்களிலே அவர்களை அமர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட பதவிகள் ஒழிக்கப்பட வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்களே அன்றையதினம் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அப்படிப்பட்டவர்கள் இன்னும் அங்கே பதவியில் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

ஊராட்சிகள் இன்றைய தினம் ஒன்றிய ஆணையர் மூலமாக நிர்வகிக்கப்படுகிறது. அவர்கள் ஏற்படுத்தக்கூடிய செலவினங்களை யார் தணிக்கை செய்கிறார்கள்? அவருக்குக் கீழே இருக்கிற அதிகாரி, இ.ஒ.(பி) தணிக்கை செய்கிற முறை இருக்கிறது. அதைத் தவிர்த்து, அவருக்கு மேற்பட்ட அதிகாரிகளைக் கொண்டு அந்த கணக்குகள் சரிபார்க்கப்பட வேண்டும்; ஆடிட் செய்யப்பட வேண்டும். அப்போதுதான் உண்மையான நிலை, செலவினங்களைக் கட்டுப்படுத்துகின்ற தன்மை இருக்க முடியும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.





ஊராட்சி ஒன்றியங்கள் கலைக்கப்பட்டது; அப்போது பதவியிலிருந்த ஊராட்சித் தலைவர்கள் பதவியை இழந்து விட்டார்கள். ஆனாலும்கூட அந்த ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கக்கூடிய ஊராட்சி கட்டிடங்கள் வானொலி கட்டிடம், குடிநீர் தேக்கக் கட்டிடங்கள் போன்றவைகளை காப்பாற்றக்கூடியப் பொறுப்பை அவர்கள் இன்னும் வகித்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை இருக்கின்ற காரணத்தினால், அங்குள்ள குடிமக்களுக்கும், முன்பு ஊராட்சித் தலைவர்களாக இருந்தவர்களுக்கும் தகராறுகள், தொல்லைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதைத் தடுக்க வேண்டுமென்றால், அத்தகைய பொறுப்புகளை ஆணையர் ஏற்றுத் தீர வேண்டும்.

ஒன்றியங்களில் இருக்கின்ற கிராம நல ஊழியர்கள் நகரப் பகுதிகளிலே குடியிருக்கின்ற காரணத்தினால், தலைமை இடத்திலே இருக்கின்ற காரணத்தினால் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட கிராமங்களுக்குப் போவதில்லை. அதனால், கிராமத்திற்கு வழிகாட்டியாக இருக்கக்கூடியவர்கள் கிராமத்தை வழிநடத்திச் செல்ல முடியாமல் இருக்கிறது. அவர்கள் நகரப் பகுதிகளிலே தங்கிக் கொண்டிருப்பதால், அவர்களால் போதிய கவனம் செலுத்த முடியவில்லை. இது ஒழிக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

குழந்தைகளுக்காக தொடங்கப்பட்டிருக்கின்ற தொடக்கப் பள்ளிகள் கீற்றுத் கொட்டகைகளாக, குழந்தைகளுக்கு படிக்க லாயக்கற்ற வகையிலே இருந்து கொண்டிருக்கின்றன. அவைகள் அனைத்தும் ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து நிதி ஒதுக்கப்பட்டு, கட்டிடங்களாக மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், ஊராட்சிகளில் அப்போது பாதுகாக்கப்பட்ட குடிநீர் பெற வேண்டுமென்ற எண்ணத்தோடு 1960-ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து பல கிணறுகள் வெட்டப்பட்டன. அப்படி கட்டி முடிக்கப்பட்ட கிணறுகளில் இன்றைக்கும் தண்ணீர் எடுக்கமுடியவில்லை. அப்பேர்ப்பட்ட குடிநீர் கிணறுகளுக்கு ராட்டினம் போடுவதற்குக்கூட பஞ்சாயத்துக்களுக்கு நிதி வசதி இல்லை. அப்பேர்ப்பட்ட கிணறுகளை பாதுகாக்கவும், அந்தக் கிணறுகளுக்கு சாதாரண ராட்டினம் போட முடியாமல் இருக்கின்ற நிலைமையையும் மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியங்களுக்கு செலவிடுவதற்கு நிதி வசதி இல்லாத காரணத்தினால், நீங்களே இந்த ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமே என்று கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சி அமைச்சராக இருக்கின்றவர் நெடுஞ்சாலைகள் அமைச்சராகவும் இருப்பது பொருத்தமானது என்று கருதுகிறேன். கிராமச் சாலைகள், இணைப்புச் சாலைகள், நெடுஞ்

சாலைகள் ஒன்றுக் கொன்று ஏற்புடையதாக இல்லாமல், ஒன்றுக்கு செலவிடுவதை மற்றொன்றுக்குச் செலவிடுவதால். அப்படியில்லாமல் கிராமங்களுக்கு ஒதுக்கி இருக்கும் தொகையை அந்தக் கிராமங்களுக்கே செலவிட்டு, நல்ல முறையிலே பாதைகள் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு இணைப்புச் சாலைகள் கேட்பாரற்ற முறையில் இருக்கின்றன. ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமத்திற்குச் செல்வதற்கு நல்ல சாலைகள் அமைத்துக் கொடுக்க வேண்டும். குறிப்பாக, மணல் பகுதிகளில், அதாவது கடலோரப் பகுதிகளில் மீனவர்கள் வாழ்கின்ற குப்பங்களுக்குப் போவதற்கு சாலைகள் கிடையாது. அப்பேர்ப்பட்ட இடங்களுக்கு சாலைகள் போடுகின்ற பொறுப்பை ஏற்படுத்தித் தருமாறு அமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றிய சாலைகள் மிகுந்த நீளமுள்ளவையாக நெடுந்தூரமுள்ளதாக இருக்கிறது. ஒவ்வொன்றும் 6 கிலோ மீட்டர், 8 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்ற காரணத்தினால், ஊராட்சி ஒன்றிய நிதியிலே இருந்து அவைகளை எடுத்து செலவு செய்ய முடியாத நிலையிலே இருக்கிறது. அப்பேர்ப்பட்ட சாலைகளை சர்க்காரே ஏற்று, ஹைவேஸ், ரூரல் ஒர்க்ஸ் என்பதில் ஏற்று அவைகளைச் செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

[மாலை 4-10]

என்னுடைய பகுதியில் இடையாத்தூர் என்ற கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்தைப் பற்றிச் சட்ட மன்றத்தில் கூட இரண்டொரு தினங்களுக்கு முன்பு விவாதிக்கப்பட்டது. அந்தக் கிராமம் பாலாற்றுக்கு நடுவே ஒரு தீவாக இருக்கிறது. மழையால் புயலால் வெள்ளம் வரும்போது அந்தத் தீவிலிருந்து யாரும் வெளியே வரமுடியாத அவல நிலை இருக்கிறது. ஆகவே, பாலாற்றுக்குக் குறுக்கே பாலம் கட்டித் தரவேண்டுமென்ற கோரிக்கை 30 ஆண்டுக் காலமாக இருந்தும் கூட இதுவரை பாலத்தைக் கட்டித் தர இயலாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. அரசு தனியான கவனம் செலுத்தி இடையாத்தூர் பாலாற்றுப் பாலத்தைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெடும்பூர்-நடுவக்கரை பாலத்தை அமைக்க வேண்டுமென்று சென்ற ஆண்டு 5½ இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் அது கட்டப்படாமலே இருக்கிறது. நெரும்பூர்-நடுவக்கரை பாலத்தை உடனடியாகக் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



மலாலிநத்தம்-சானூர் சாலை 10 கிலோ மீட்டர் ; நெரும்பூர்-வல்லபுரம் சாலை 9 கிலோ மீட்டர் ஆகிய இரண்டு சாலைகளையும் பெருவழித் துறையில் சேர்த்தால் அந்தச் சாலைகள் நல்ல முறையில் போடுவதற்கு உதவியாக இருக்கும். அவ்வாறு செய்வதன் மூலம் கிராமப் புறங்களுக்கு உதவி செய்ய முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊராட்சி மன்ற தொடக்கப் பள்ளிகள் எல்லாம் கீற்றுக் கொட்டகைகளில் இருக்கின்றன. அந்தப் பள்ளிகளை அரசாங்கமே எடுத்து ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து செலவு செய்து கட்டிடம் கட்டித் தரவேண்டும்.

முன்னதாகக் கட்டப்பட்டுள்ள கிணறுகளுக்கான ரிப்பேர்கள்—பிளாட்பாரம் போடுதல் போன்ற அத்தியாவசியப் பணிகளைப் பொது நிதியில் இருந்து எடுத்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. வி. எம். தேவராஜ் ; பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் பேச வாய்ப்பளித்த வேலூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று உள்ளாட்சித் துறை ஊழல் ஆட்சித் துறையாக இயங்குகிறது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை. புதிய திட்டங்கள் தொடங்கப்படவில்லை. உதாரணமாக, வேலூர் நகரின் குடிநீர்த் திட்டத்திற்குத், தமிழக அரசு ஒரு கோடி முப்பது இலட்சம் ரூபாய் ஒதுக்கி நடவடிக்கையில் உள்ளது. இத்திட்டம் துவங்கப்பட்டதால் 1977-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாள் முதல் குடிநீர் வரி ரூ. 2·50-ல் இருந்து ரூ. 7·50 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டரை ஆண்டுகளாக இந்தத் திட்டம் முடங்கிக் கிடக்கிறது. தெருக்கள் அனைத்தும் தோண்டப்பட்டுள்ளது. இன்றும் மூடப்படாமல் பொதுமக்களுக்கு இடையூறாக உள்ளது. தண்ணீர் வரவில்லை. அதிகாரிகள் வெறும் கோப்பு நடவடிக்கைகளை எடுப்பதாகத் தெரிவிக்கிறார்களே தவிர உண்மையான திட்டம் செயல்படுவதாக இல்லை. எனவே, இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு செலவானது? எப்போது திட்டம் முடிவடையும்? எப்போது தண்ணீர் கிடைக்கும்? என வேலூர் மக்கள் ஏங்கித் தவித்துக் கொண்டுள்ளனர். நகராட்சியில் வழக்கமாக உள்ள தண்ணீர் சப்ளை கூட சரியாக விநியோகிக்கப்படுவதில்லை. தண்ணீர்ப் பஞ்சத்தைத் தீர்க்க நகராட்சி நிர்வாகமானது எதுவும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

[திரு. வி. எம். தேவராஜ்] [1980 ஜூலை, 21

வட்டார வளர்ச்சி முறைகளைப் பற்றி இக் கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. வேலூர் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தும் ஏன் இதுவரை அபிவிருத்தி செய்யப்படவில்லை? இந்நகரம் புறக்கணிக்கப்படுவதாகக்கருதுகின்றேன். வளர்ச்சி பெறும் வகையில் அரசு தீவிரம் காட்ட வேண்டுமெனக் கோருகிறேன். வட்டார ஆய்வாளர்களே வேலூர் நகருக்கு நியமிக்கப்பட்டிருந்தும் இந்நகரில் நடக்கும் தவறுகளையும், சுற்றுப்புற நகரில் நடைபெறும் தவறுகளையும் கண்டு பிடித்ததாகத் தெரியவில்லை. இவர்களும் நிர்வாகிகளுக்கு உடந்தையாக இருப்பார்களா என்ற ஐயம் ஏற்படுகிறது.

வேலூர் நகரில் சுமார் 3,500 தெருவிளக்குகள் உள்ளன. நகராட்சியில் கவுன்சில் பணியாற்றியபோது பொது மக்களின் திருப்திக்கேற்றவாறு அவ்வப்போது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தற்போது பாதிக்கும் குறைவான விளக்குகள் எரிகின்றன. நகராட்சியிலும், மின்சார அலுவலகத்திலும் எந்த நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவில்லை. இந்த நிலை உடனடியாக மாற்றப்பட்டு தெரு விளக்குகள் நல்ல முறையில் எரிய வைக்க உரிய நடவடிக்கையினை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன்.

வேலூர் நகரம் வளர்ந்து வரும் பெரிய நகரங்களில் ஒன்றாகும். வேலூரில் பஸ் நிலையம் தற்போது உள்ளதை விரிவுபடுத்த திட்டமிடப்பட்டிருந்தும் எவ்விதப் பணியும் துவங்காமல் உள்ளது. இதனை அரசு கவனித்து உரிய பணிகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கோருகிறேன்.

வேலூர் நகரம் ஸ்பெஷல் கிரேட் நகராட்சியாக இருந்த போதிலும் நகரின் பாதைகள் சரியான முறையில் செப்பனிடப்படாமல் உள்ளன. குறிப்பாக சமீப காலங்களில் ரோடு வசதி எதுவும் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

வேலூர் நகரில் குடிசை அபிவிருத்தித் திட்டப் பணிகளுக்காக அரசு ஒதுக்கீடு செய்துள்ள தொகைகள் இன்னும் செலவிடப்படாமலிருப்பதால் குடிசைப் பகுதிகளும் தாழ்த்தப்பட்ட பகுதிகளும் முன்னேற்றம் அடையாமல் உள்ளது. இதன் மீது அரசு தனி கவனம் செலுத்த வேண்டுமென்று கோருகின்றேன்.

குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக அபிவிருத்தி செய்வதற்கு தீவிரம் காட்ட வேண்டுமென்று கோருகிறேன். வேலூர் நகராட்சியில் நீண்ட நாட்களாக உள்ள கோரிக்கையாக பாதாள சாக்கடைத் திட்டம் இருக்கிறது. அதை அமல்படுத்த தீவிர நடவடிக்கை எடுத்து நகரின் நலனைப் பாதுகாக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1980 ஜூலை 21] [திரு. வி. எம். தேவராஜ்]

அரசினர் ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் அனைத்து சலுகைகளும் உடனுக்குடன் நகராட்சி ஊழியர்களுக்கு வழங்கப்பட அரசு ஆவன செய்யவேண்டும். அரசு ஊழியர்கள் போன்று நகராட்சி ஊழியர்களுக்கும் பணியில் சேர்ந்த தேதி முதல், பென்ஷன் கொடுக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கோருகிறேன்.

கடந்த 4 ஆண்டுகளாக உள்ளாட்சித் தேர்தல் நடைபெறாமல் அதிகாரிகளால் நிர்வாகம் நடைபெற்று வருவதால் ஊழல் அதிகமாக உள்ளது. அலுவலகங்களில் லஞ்சம் கொடுக்காமல் எந்த வேலையும் நடைபெறுவது இல்லை. ஆசிரியர் நியமனம், மாற்றம், இவைகளுக்கு ஆயிரக்கணக்கில் லஞ்சம் வாங்கி வருகின்றனர். சமீபத்தில் வேலூர் நகராட்சியில் மேல் நிலைப் பள்ளிக்கான ஆசிரியர்கள் நியமனத்தில் சுமார் ரூ. 6,000 வரை ஒவ்வொருவரிடமும் லஞ்சம் பெறப்பட்டுள்ளது. சமீப காலமாக வேலூர் நகரில் நகராட்சியில் ஆளும் கட்சியினர் தலையீடு அதிகமாக உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குற்றச்சாட்டுகள் இருந்தால் அதைத் தனியாக வைத்துக் கொள்ளலாம், பொதுவாகப் பேசுங்கள்.

திரு. வி. எம். தேவராஜ் : நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். கடந்த 1980-ம் ஆண்டு ஜூன் திங்கள் 23-ம் நாளில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் வேலூர் வருகையின் போது ஆளுங்கட்சியினைச் சேர்ந்தவர்களை அதிகாரிகளுக்கு அறிமுகப்படுத்தி அவர்கள் சொல்வதை செய்யுமாறு சொல்லியதன்பேரில் இவர்கள் தலையீடு மேலும் அதிகமாக உள்ளது.

வேலூர் நகரிலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பாலமதி ஊராட்சியைச் சேர்ந்த செங்காநாத்து கிராமத்துக்கு ரோடு வசதியின்றி வரப்பு மீது செல்லும் நிலைமை உள்ளது. இதை உடனடியாக தமிழக அரசு கவனித்து விரைவான நடவடிக்கை எடுக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதைப்போலவே வேலூரில் வசிக்கின்ற முஸ்லீம் மக்கள் நோன்பு நோற்பதற்கு வசதியாக குடிதண்ணீர் வசதிகள் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம். நன்றி.

திரு. கே. எம். அப்துல் ரசாக் : மாண்புமிகு சட்டப் பேரவை தலைவர் அவர்களே, ஆலந்தூர் தொகுதியின் மக்களால் வாக்களிக்கப்பட்டு வெற்றி பெற்றதற்காக நான் அந்தத் தொகுதியின் மக்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். உள்ளாட்சித் துறை அமைச்

சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள உள்ளாட்சி பற்றிய இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்புத் தந்தமைக்காக சட்டமன்றப் பேரவைத் தலைவருக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய தொகுதியைக் குறித்து, 1, 2 கருத்துக்களைச் சொல்லலாம் என எண்ணுகிறேன்.

ஆலந்தூர் நகராட்சியில் 1972-ம் ஆண்டு பாலாறு குடிநீர்த் திட்டத்தை துவக்கி வைத்தும் இதுநாள் வரையிலேயும் தண்ணீர் தராமல் அந்த மக்களை ஏமாற்றி வந்த அரசியல்வாதிகள் இருக்கிறார்கள். ஆனால் இரண்டரை ஆண்டு ஆட்சிக் காலத்திலே புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலே இடைக்காலத் திட்டமாக ஆலந்தூர் பகுதிக்கு திருவான்மியூர் அருகிலிருந்து ஒரு ஆண்டுக்கு முன்னாலே சில பகுதிகளுக்குத் தண்ணீர் கொண்டு வந்திருக்கிறார்கள். அது புரட்சித் தலைவர் அவர்களுடைய பெருமை என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன். அதேபோல் 150 கிலோ மீட்டர் நீளமுள்ள ஆலந்தூர் நகராட்சியில் 40 கிலோ மீட்டர் வரையில்தான் தூசி படியாத சாலைகள் இருக்கின்றன. மீதியெல்லாம் மண் சாலைகளாக இருப்பதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்த நகராட்சிக்கு நிதிநிலை குறைவாக இருப்பதால் அரசாங்கத்திடமிருந்து மானியம் அதற்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போலவே வாலுவம்பேட்டை, தாம்பரம் ஆலந்தூர் தொகுதியை இணைக்கிற வழியில் ஒரு கல்வர்ட் இருக்கிறது. நீண்ட காலமாகக் கட்டப்படாமல் பஸ்கள் போக்குவரத்து இல்லாமல் இருக்கிறது. இடைக்காலத் திட்டமாக ஒரு சிறிய திட்டம் செய்து இருக்கிறோம், அந்த கல்வெர்டை கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[மாலை 4-20]

ஆலந்தூர் நகராட்சியில் 1,600 லைட்டுகள் இருக்கின்றன. அந்த லைட்டுகளில், நகராட்சியாகப் பொறுப் பேற்றிருக்கும் பொழுது கிட்டத்தட்ட 75 பர்சென்டாவது எரிந்து கொண்டிருந்தது. இன்றைக்கு 20 பர்சென்ட்கூட அந்த நகராட்சியில் லைட் எரியவில்லை என்பதை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பாலாறு குடிதண்ணீர்த் திட்டத்திற்கு இன்றைக்கு 7 கோடியே 8 இலட்சம் ரூபாயில் ஒரு திட்டத்தைத் தீட்டி இன்றைக்கு ஆரம்பிக்கின்ற நிலைமை இருக்கிறது. அதற்காக நான் புரட்சித் தலைவரவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த நிலைமைகளை உடனடியாக உருவாக்கித் தந்து ஆலந்தூர் நகராட்சிக்கும், பல்லவபுரம்





நகராட்சி மக்களுக்கும் தண்ணீர் தருவதற்கு நமது அரசு உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், பல்லாவரம் நகராட்சியிலே மின்சாரக் குறைபாடுகள் நிறைய இருக்கின்றன.

பேருந்து செல்லும் பாதைகள், ஆலந்தூர் நகராட்சியில் எம். கே. என். ரோடு 4½ கிலோ மீட்டர், பழவந்தாங்கல், நங்கநல்லூர் 4 கிலோமீட்டர் ஏற்கனவே ஹைவேஸ் எடுத்துக் கொண்டிருக்கிறது. புதிதாக எடுத்துக்கொள்ள வேண்டிய ரோடுகள் 10 கிலோ மீட்டர்கள் இருக்கும். இந்தப் பாதையை இதுநாள்வரையில் நல்ல பாதையாக அமைத்துத் தரவில்லை என்பதை அமைச்சவரர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன்.

பல்லாவரம் நகராட்சியில் ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் தான் இராஜேந்திர பிரசாத் ரோடை ஹைவேஸ் எடுத்துக் கொண்டது. மீதி எடுக்க வேண்டிய ரோடுகள், கீழ்க்கண்ட கீழ்க்கட்டளை தர்க்கா ரோடு மூன்றரை கிலோ மீட்டர், ஜி.எஸ்.டி. ரோட்டிலிருந்து நெம்மலச்சேரி ரோடு நான்கு கிலோ மீட்டர், ஆகமொத்தம் ஏழு கிலோ மீட்டர் பாதையை இந்த ஆண்டு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

பாலாறு குடிதண்ணீர்த் திட்டம் 1972-இல் துவங்கப்பட்டு, ஒவ்வொரு நகராட்சியும், வருஷத்திற்கு, எல். ஐ. சி. வாங்கிய கடனுக்கு வட்டியாகக் கட்டினால், ஒரு ஆண்டுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் என்றால், 1972-இலிருந்து இதுவரையில் 1980-ஆம் ஆண்டு வரையில் எத்தனை இலட்சம் ரூபாய் ஒவ்வொரு நகராட்சியும் கட்டித் தீர வேண்டுமென்பதை நான் இங்கே இருக்கின்ற சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இது யாருடைய காலத்திலே நடந்தது என்பதை நன்றாகச் சிந்திக்க வேண்டும். இங்கே எனக்கு முன்னாலே பேசிய சட்டப்பேரவை உறுப்பினர் ஒருவர், உள்ளாட்சித் துறையைப் பற்றி மட்டமாகப் பேசினார்கள். (குறுக்கீடு) குறையாகப் பேசினார்கள். நாங்கள் இருப்பதைத்தானே சொல்கிறோம். ஆரம்பிக்கப்பட்ட குடிநீர்த்திட்டத்தில் யார், எவ்வளவு பகிர்ந்து கொண்டார்கள் என்பதைக்கூட நான் சொல்ல முடியும் என்றாலும், எங்களுக்குத் தெரியும்—இருந்தாலும், பழைய நண்பர்கள், சட்டப்பேரவை உறுப்பினர்கள் எல்லோருக்கும், எல்லோரையும் பற்றியும், நாட்டுமக்களுக்கு நன்றாகத் தெரியும்.

[திரு. கே. எம். அப்துல் ரசாக்] [1980 ஜூலை 21

நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் மலையைத்
திருடிவிட்டதாகச் சொன்னார்கள். (மணியடிக்கப்பட்டது) நான்
இப்பொழுது தான் அசெம்பிளியிலேயே பேசுகிறேன்.
அவ்வாறு சொன்னார்கள். நான் முதலிலே 1977-இல்
வெற்றிபெற்றபொழுது 30,691 ஓட்டுகள் பெற்றேன், வெற்றி
பெற்றேன். இன்றைக்கு 50,385 வாக்குகள் பெற்றேன்
என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்
கிறேன். இன்னொரு உதாரணத்தைச் சொல்கிறேன். இந்த
மாதம் 30 ஆம் தேதி, மலையைத் திருடி விட்டார்கள் என்று
சொன்னார்களே அவர்களுக்கு ஒன்றைச் சொல்கிறேன். சென்ற
ஆண்டு ரூ. 20,000-க்கு ஏலம் போனது. இந்த ஆண்டு
ரூ.1,41,000-க்கு ஏலம் போனது என்பதையும், இதைக்கொண்டு
மலையைத் திருடியவர்கள் யார் என்பதும், யாருடைய ஆட்சிக்
காலத்தில் என்பதும் தெரியும் என்பதை மாண்புமிகு சட்டப்
பேரவை உறுப்பினர்கள் கவனத்திற்குத் கொண்டு வர
விரும்புகிறேன். அதே போல்தான், 1978 ஆம் ஆண்டு,
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு
அமைந்தபிறகு, பம்மல் மலையை ஏலத்துக்குக்கொண்டு
வந்தோம். முதல் முதலில், பழைய ஆட்சிக் காலத்தில் அந்த
மலை ரூ. 4,000-க்குத் தான் ஏலம் போனது. அப்பொழுது
ஆட்சியாளர்களுக்கும் அதிகாரிகளுக்கும் பங்கு இருந்தது.
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக
அரசு பொறுப்பேற்ற பிறகு, புரட்சித் தலைவர் ஆட்சிக்
காலத்தில்தான் பம்மல் மலை ரூ. 1,85,000-க்கு ஏலம் போனது
என்பதை இந்த மன்றத்தில் நான் சொல்லிக்கொள்ள கடமை
பட்டிருக்கிறேன்.

எனது தொகுதிக்கு இப்பொழுது ஆலந்தூர் என்று பெயர்
வைத்துள்ளார்கள். அந்தத் தொகுதியில் புரட்சித் தலைவர்
இரண்டு முறை வெற்றி பெற்றபொது, பரங்கிமலை தந்த
பாரி வள்ளல் என்று சொன்னார்கள் என்பதற்காக, அந்தப்
பரங்கி மலை தொகுதியை, ஆலந்தூர் என்று மாற்றினார்கள்.
அந்த ஆலந்தூர் என்ற பெயரைமாற்றி, மீண்டும் பரங்கி
மலை என்று பெயர் வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்

அடுத்து, செங்கற்பட்டு மாவட்டத்திற்கு பேரறிஞர்
அண்ணா மாவட்டம் என்று பெயரிட வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

கண்ணியம் மிகுந்த காயதே மில்லத் அவர்களுடைய
படத்தை இங்கே சட்டமன்றப் பேரவையில் வைக்க வேண்டு
மென்று கேட்டுக் கொண்டு, இந்த வாய்ப்பைத் தந்த பேரவை
தலைவருக்கு நன்றி தெவித்து விடை பெறுகிறேன், நன்றி,
வணக்கம்.



1980 ஜூலை 21]

*திரு. பி. துரைராஜ்: சட்டமன்றப் பேரவைத் தலைவர்
அவர்களே, நெல்லை மாவட்டம் சங்கரநயினார்கோவில்
தொகுதி திராவிட முன்னேற்றக் கழகக் கோட்டை என்று
எதிர்க்கட்சியினரால் பேசப்பட்ட நிலையை மாற்றி, அது
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின்
கோட்டை என்று நடந்து முடிந்த தேர்தலில் நிரூபித்த
நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த சங்கரநயினார்கோவில்
தொகுதி மக்களுக்கு, என்னை சட்டமன்ற உறுப்பினராகத்
தேர்ந்தெடுத்து, இங்கு அனுப்பி, பேசவாய்பளித்தமைக்காக,
அந்தத் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்குத் முதற்கண்
நன்றியைத் தெரிவித்துப் பேச ஆரம்பிக்கிறேன்.

இங்கே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்
களால் அளிக்கப்பட்ட, சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள்,
நகர்ப்பகுதி வளர்ச்சி, சாலைகளும் பாலங்களும், சாலைகள்-
பாலங்கள் ஆகிய மானியக் கோரிக்கைகளின்பேரில், ஒருசில
கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன்.

மக்களாட்சித் தத்துவத்திற்கு மிக அடிப்படையானவை
ஊராட்சி ஒன்றியங்களும் ஊராட்சி மன்றங்களும் என்பதை
நாம் எல்லோரும் அறிவோம். அந்த மக்களுக்காக அமைந்த
அந்தத் திட்டமானது ஒருங்கிணைந்து; பூரண வெற்றி
பெறும் நிலையில், இந்தச் சட்டசபையிலே, ஊராட்சி ஒன்றியங்
களுக்கு மக்களாட்சித் தத்துவத்தை அறிவித்து, அந்த மக்க
ளாட்சி தத்துவம் பூரணமாக வெற்றி பெற வழி வகுத்ததை
உள்ளபடியே நான் பாராட்டக் கடைமைப்பட்டிருக்கிறேன்.
எனக்கு முன்னால் பேசிய சில அங்கத்தினர்கள் சொன்னதைப்
போல், ஊராட்சி ஒன்றியங்களும் ஊராட்சிகளும், இன்றைக்கு
மிகமிக அவசியம் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

என்னுடைய சங்கரநயினார்கோயில் தொகுதியிலே, 3
ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. அதிலே, மேலநீலத்த
நல்லூர் ஒன்றியம், குருவிகுளம் ஒன்றியம் போன்ற ஒன்றியங்
கள் இருக்கின்றன. ஒவ்வொரு ஒன்றியத்திலும், 47-க்கும்
மேல் பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. ஆகவே, பெரிய
பஞ்சாயத்து யூனியன்களை, இரண்டாகப் பிரிக்க ஆவன
செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆக, 10,
15 கிராமங்களை ஒன்றாகச் சேர்த்து, கலிங்கப்பட்டி, வீரசி
காமணி போன்ற கிராமங்களை, இரண்டாகப் பிரிக்க மாண்பு
மிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று
இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பி. துரைராஜ்] [1980 ஜுலை 21

கல்வியைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டு ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்காக ரூ. 5½ கோடி ஒதுக்கப்பட்டிருப்பதை வரவேற்கிறேன். ஆரம்பப் பள்ளிகள் அனைத்துக் கிராமங்களிலும், பிள்ளைகள் படிக்க வசதியாக இருக்க வேண்டுமென்று வசதி செய்ய இருப்பதை பாராட்டாமல் இருக்க முடியாது. அதே போல், ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக மாற்றி அறிவித்திருப்பதற்காக ஆசிரியராக இருந்தவன் என்ற காரணத்தினாலே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் அங்குள்ள ஆசிரியர்களை, அரசியல் கட்சி மாச்சரியம் கொண்டு அனாவசியமாக மாற்றுகிறார்கள். 1967 ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக பதவியேற்றபோது, அரசியல் கண்ணோட்டங்களுக்காக ஆசிரியர்களை மாற்றுவதைத் தடுக்க, அந்தந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் உள்ளிட்ட ஒரு மாறுதல் கமிட்டி 'டிரான்ஸ்பர் கமிட்டி' ஏற்படுத்தினார்கள். அதைப்போன்றதொரு கமிட்டியை இப்போதும் ஏற்படுத்த ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[மாலை 4-30]

அடுத்து, இணைப்பு சாலைகள். என்னுடைய தொகுதியில் மேலநீலித்தநல்லூர் ஒன்றியம் மிகவும் பிற்படுத்தப்பட்ட தொகுதியாகும். எங்கு பார்த்தாலும் சாலைகள் குண்டும் குழியுமாக இருக்கின்றன. நல்ல சாலைகளே கிடையாது. அந்த நிலையில் அங்குள்ள மக்கள் நகரத்திற்குப்போக முடியாத அவல நிலையில் இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் நல்ல சாலை வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் வீரசிகாமணி என்ற கிராமத்தில் ஒரு குடிநீர்தொட்டி இருக்கிறது. அதைப் பராமரிக்கும் முழுப் பொறுப்பும் அந்த ஊரைச் சேர்ந்த ஊராட்சி மன்றத் தலைவரிடம் இருக்கிறது. அவர் அங்கே உள்ள பம்ப் செட்டைக் கழற்றி தன்னுடைய சொந்த நிலத்தில் உபயோகப்படுத்துவதாக மக்கள் புகார் கொடுத்தும் கூட, அங்கே இருக்கிற சங்கரநயினார் கோவில் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் நடவடிக்கை எடுக்காமல் அந்தத் தலைவருக்கு உடந்தையாக இருக்கிறார். எனவே அதை எல்லாம் நீக்குவதற்கு அங்கே மக்கள் குழுவை அமைத்து அதன் மூலம்தான் செம்மைப்படுத்த முடியும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.



1980 ஜுலை 21] [திரு. பி. துரைராஜ்]

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியில் உள்ள பாரப்பட்டி என்ற கிராமம் காரிசாத்தான் என்ற ஊர் ஒரு தீவு போல காட்சி அளித்துக் கொண்டிருக்கிறது. அந்தக் கிராமத்தைச் சுற்றிக் குளங்களும், வாய்க்கால்களும் ஓடைகளும் இருக்கின்றன. மழைக்காலத்தில் அந்தக் கிராமத்தைச் சுற்றிலும் தண்ணீர் நின்று அங்கிருந்து மக்களோ அல்லது ஆடு மாடுகளோ கூட வெளியே செல்ல முடியாமல் இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட அவல நிலையைப் போக்க பக்கத்திலுள்ள ஓடையில் பாலம் கட்டி, போக்குவரத்து வசதியை செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சிறுபாசன வசதி. என் தொகுதியில் உள்ள மேலநீலித்தநல்லூர் கிராமத்தில் சென்ற ஆண்டு பெய்த மழையின் காரணமாக அங்கிருக்கின்ற கால்வாய்கள் அத்தனையும் தூர்ந்து போய் விட்டன. இன்னும் இரண்டு மாதங்களில் மழைகாலம் ஆரம்பமாகப் போகின்றது. எனவே ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட குளங்கள், கால்வாய்கள் அத்தனையையும் தூர் வாரி, கரையைப் பலப்படுத்தி, மழைத் தண்ணீரைத் தேக்கி வைக்கின்ற நிலையை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் ஊராட்சி ஒன்றியங்களில் வேலை செய்கின்ற கேங் மஸ்டூர் கூலிகளை அரசு ஊழியர்களாக்கி, அவர்கள் இறந்தால் ரூ. 10,000 கொடுக்கின்ற வசதிகள் இப்போது இல்லாமல் இருக்கிறது. அவர்களுக்கும் அரசு ஊழியர்களைப் போன்று சலுகைகளை வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு என் நன்றியைக் கூறி விடைபெறுகிறேன், நன்றி வணக்கம்.

*திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாய வளர்ச்சித் திட்டத்தினுடைய மானியக்கோரிக்கையை ஆதரித்து பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து ஒன்றியங்கள் மாவட்ட குழுக்களுக்குப் பின்னாலே அந்தப் பணி சிறப்பான முறையில் நடைபெறுவதற்காக உள்ளாட்சி மன்றங்கள் பணி ஆற்றி வருகின்றன. அப்படிப்பட்ட பணியை அவர்கள் ஆற்றுவதற்காக அனைத்திந்தியஅண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி புரட்சித் தலைவரின் ஆட்சி—நல்ல கொள்கைகளை நிலைநாட்டி வருகிறது. இடைக்காலத்திலே தடங்கல்கள் ஏற்பட்டதற்குப் பின்னாலே அந்தக் தலைவர்கள் எல்லாம் நீக்கப்பட்டு இன்றைக்கு தனி அதிகாரிகள் பணியாற்றினாலும், விரைவிலே

தேர்தல் நடத்தி அரசு பிரதிநிதிகளை போடுகின்ற வகையிலே இந்த அரசு பணியாற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இடையில் அப்படிப்பட்ட நல்ல காரியங்கள் நிறைவேற்றுவதற்காகத்தான் பஞ்சாயத்துகளிலே மக்கள் குழுக்கள் போடப்பட்டிருக்கின்றன. அதில் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதில் பலர் தற்போது பதவி இழந்திருக்கிறார்கள். அவர்களை எல்லாம் நீக்கி தற்போது இருக்கும் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கிறவர்களைப் போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி மன்றங்கள் கட்டிடங்கள் இல்லாமல் இருக்கின்றன. அந்தக் கட்டிடங்களை எல்லாம் கட்டுவதற்கு உழைப்புக்கு உணவுத் திட்டத்தில் கட்டவேண்டும் என்று திட்டமிட்டு இருப்பதற்காக நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன்.

ஊராட்சி ஒன்றிய அலுவலர்களுக்கு வீடுகள் இல்லாத பல ஒன்றியங்களில் இருப்பதால், ஒன்றிய அலுவலர்களுக்கு வீடுகள் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சிகளுக்கு மானியம் கொடுக்கிறார்கள். உள்ளாட்சி மன்றங்களுக்கும் அரசு மானியம் கிடைக்கிறது. ஆனால் பேரூராட்சிகளுக்கு அரசின் உதவி கிடைக்காமல் மிகவும் மோசமான நிலையில் அவைகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட நிலையை மாற்றி பேரூராட்சிகளுக்கும் மானியம் கொடுத்து, அவைகளை பற்றாக்குறை நிலையில் இருந்து போக்குவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுப்பதன் மூலம், அவைகளையும் வளமான முறையில் முன்னேற்றம் அடையச் செய்ய முடியும் என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து ஒன்றியங்களில் இருக்கிற ஆசிரியர்கள் எல்லாம் இப்போது அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, அவர்களை பஞ்சாயத்து ஒன்றியங்களின் அதிகார வரம்பிலிருந்து விலக்கி, கல்வித் துறையில் சேர்ப்பதன் மூலம் பஞ்சாயத்து பள்ளிகள் மேலும் நல்ல முறையில் வளரவும், ஆசிரியர்கள் சிறந்த முறையில் பணியாற்றவும் முடியும் என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் பல பகுதிகளில் பல பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் இல்லாமல் இருக்கின்றன. நிதி ஒதுக்குகிறபோது, ஒரு பள்ளிக்கூடம் கட்டுவதற்குத்தான் நிதி ஒதுக்கம் செய்யப்படுகிறது. இந்த நிலைமை நீடித்தால் இன்னும் 20 ஆண்டுகள் கழிந்தால்





தான் பஞ்சாயத்துப் பள்ளிகள் அனைத்தும் பள்ளிக் கட்டிடங்களைப் பெற்றதாக இருக்கும். அப்படிப்பட்ட நிலையைத் தவிர்க்க மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் தன்னிறைவுத் திட்டம், என்கிற திட்டத்தின் மூலம் குறுகிய காலத்தில் அதிகமான பள்ளிகள் கட்டுவதற்காக நடவடிக்கை மேற்கொண்டதற்காக என் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிப்பட்ட பள்ளிக் கட்டிடங்கள் பள்ளி மாணவர்களுக்கு வசதியான இடங்களில் அமையத் தக்க வகையில் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சாலை வசதிகளைப் பொறுத்தவரையில், பிற்பட்ட பகுதிகளுக்கு அதிக நிதி ஒதுக்கித் தரவேண்டும். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார்கள். கிழக்குக் கடற்கரைச் சாலை மிகவும் பின் தங்கிய பகுதியாக இருக்கிறது என்று சுட்டிக் காட்டினார்கள். இப்போது அந்தச் சாலையில் பாலங்கள் கட்டும் பணிதான் முடிந்து இருக்கிறதே ஒழிய அந்தச் சாலை சீரான முறையில் இல்லை. அது மட்டுமல்ல, அந்தச் சாலையில் செல்கிறபோது வழி காட்டி விளக்கும் போர்டுகள் இல்லை. அங்கே இருக்கும் மக்களைக் கேட்டுத்தான் அந்த வழி எங்கே செல்கிறது என்பதை அறிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே, அந்தச் சாலைகளில் விளக்கக் குறிப்புகள் கொண்ட பலகைகள் வைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வேதாரண்யம் பகுதி மிகவும் பின் தங்கிய பகுதி. மணற்பாங்கான பகுதி. சாலை பராமரிப்பிற்காக நிதி ஒதுக்குகிற போது, எல்லா பகுதிகளுக்கும் ஒதுக்குவது போல் ஒரே மாதிரியான நிதியைத்தான் ஒதுக்குகிறார்கள். அப்படிப்பட்ட காரணத்தால், என்னுடைய பகுதியில் உள்ள ரோடுகள் சரியான முறையில் அமைக்கப்பட முடியவில்லை. திருச்சி, புதுக்கோட்டை ஆகிய இடங்களில் இருந்துதான் கப்பி, சரளைக்கற்கள் நாகப்பட்டினம் நெடுஞ்சாலை டிவிஷனுக்கு வருகின்றன. இதனால் ஒதுக்கப்படும் பணம் லாரி வாடகைக்கே போய் விடுகிறது. இதனால் சாலை வேலைகள் குறைவாகவே செய்ய முடிகிறது. ஆகவே நாகப்பட்டினம் நெடுஞ்சாலை துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து அங்கு சாலைகளை நல்ல முறையில் சீரமைத்து சாலைப் போக்குவரத்தை சிறப்பாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வேதாரண்யம் பகுதியில் இருந்து உப்பு மூட்டைகள் மேட்டூர் மற்றும் பல்வேறு இடங்களுக்குச் செல்கிறது. ரயில் போக்குவரத்து இல்லாததால், சாலை வழியாகத்தான் அவைகளை எடுத்துச்செல்ல வேண்டியிருக்கிறது. இதனால் திருத்துறைபூண்டி—வேதாரண்யம் சாலை மோசமாக உள்ளது. சாலை

வசதி சரியாக இல்லாததால் அந்தப் பகுதியில் உள்ள பல உப்பு உற்பத்தி நிறுவனங்கள் லாபத்தில் இயங்க முடியாமல் இருக்கின்றன. ஆகவே திருச்சி செல்ல வேதாரண்யம்—தஞ்சாவூர் சாலையை திருத்துறைப்பூண்டி வழியாகவும் சென்னை செல்ல கும்பகோணம் போகும் வேதாரண்யம், தஞ்சாவூர் சாலையை திருத்துறைப்பூண்டி வழியாகவும் சாலைகளை இரண்டு வழி சாலையாக மாற்றி, உப்பு, சவுக்கு நல்லமுறையில் வெளி மார்க்கெட்டுக்கு எடுத்துச்சென்று விற்பதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வேதாரண்யம்—தலைஞாயிறு ஒன்றியங்கள் தஞ்சை மாவட்டத்தில் 4 ஆம் தர பஞ்சாயத்து ஒன்றியங்களாக இருக்கின்றன. நம்முடைய தமிழ் நாட்டிலேயே 350 கிலோ மீட்டர் ஒன்றியச் சாலையை உடையது வேதாரண்யம் ஒன்றியமாகும். அந்த ஒன்றியத்திற்கு அதிக நிதி ஒதுக்கி அந்தச் சாலைகளைச் செப்பனிடுவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில்—கடந்த காங்கிரஸ் ஆட்சி காலத்தில் ஒரு ஊரைப் பிரித்து—வெட்டாறு வடிகால் வெட்டினார்கள். அதனால் அந்த ஊரே இரண்டாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறது. அவை இணைக்க பாலம் கட்டப்படவில்லை. முன்னால் இருந்த உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களும் வருவாய் துறை அமைச்சர் அவர்களும் அந்த இடத்தை வந்து பார்வையிட்டு இருக்கிறார்கள் அங்கே பாலம் கட்டித் தருகிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பாலத்தைக் கட்டித் தரவேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

[மாலை 4-40]

அதேபோல நீர்முளை—நத்தம்பள்ளம் சாலையில் ஒரு பாலம் கட்ட பழைய சட்டமன்ற உறுப்பினரின் உறவுக்காரர் ஒருவர் டெண்டர் எடுத்திருந்தார். அந்த பாலத்தின் வேலை இதுவரையில் முடிக்கப்படவில்லை. அந்த பழவனாறு பாலத்தை உடனடியாகக் கட்டித்தர வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் நீண்ட நாட்களாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். முள்ளியாற்றில் பன்னாள் ரோடு ஆதனூர், பஞ்சந்திக்குளம் மேற்கு ஆகிய இடங்களில் பாலம் கட்ட வேண்டுமென்ற அந்த கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு கடந்த கால ஆட்சியில் நடைபெற்ற தவறுகள் மேலும் நடக்க இடமளிக்கக்கூடாது என்றும் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).



சாலை போக்குவரத்தை நல்லமுறையில் உருவாக்கி கிராம மக்களின் வாழ்க்கையை முன்னேற்ற நல்ல பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சாலைகளைப் பராமரிக்க வேதாரண்யம் ஒன்றியத்திற்கு அதிக நிதி ஒதுக்க வேண்டும். இந்த ஒன்றிய சாலைகளில் 50 கிலோ மீட்டர் சாலைகளையாவது நெடுஞ்சாலைத் துறை எடுத்துக் கொள்ள வேண்டும்; அதன்மூலம் எங்கள் கிராம மக்களின் வாழ்க்கையை வளம்பெறச் செய்ய வேண்டும் என்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு என். பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின் நலன் கருதி மாண்புமிகு புரட்சித் தலைவர் சாலை வசதிக்கும், பாலங்கள் அமைப்புக்கும் கணிசமான நிதி ஒதுக்கியிருப்பதற்கு முதற்கண் அரசை பாராட்டுகிறேன்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் எனது தொகுதியான வரகூர் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. இங்கு சாலை வசதிகளும், பாலங்கள் அமைப்பும் சரியாக இல்லை. திருச்சி—சென்னை என். எச். சாலையையும், பெரம்பலூர்—அரியலூர் நெடுஞ்சாலையையும் இணைக்கும் ஆலத்தூர், காரை, கொளக்காநத்தம், அரியலூர் சாலை இருபத்தேழு ஊராட்சி கிராமங்களை இணைத்துச் செல்கிறது. இந்தச் சாலையின் குறுக்கே "இரயிலை கவிழ்த்து சரித்திரம் படைத்த" மருதை காட்டாறு செல்கிறது. இந்த ஆற்றின் துண்டிப்பே இந்தச் சாலைப் போக்குவரத்திற்கு பெரும் தடையாக உள்ளது. எனவே இந்த இடத்தில் உறுதியான ஒரு மேம்பாலம் கட்டித்தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

சில்லக்குடியிலிருந்த அரியலூர், சிதம்பரம், திருச்சி சாலைக்குச் செல்லும் சில்லக்குடி டு கல்லகம் சாலையையும், அரியலூர் டு அருணகிரி மங்கலம் சாலையையும் செப்பனிட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

பேரழியிலிருந்து குரும்பாளையம் வழியாக கொளக்காநத்தம் செல்லும் பாதையை தேசிய நெடுஞ்சாலையாக எடுத்து செப்பனிட்டு அதிலுள்ள பாலங்களை கட்டி போக்குவரத்து வசதி செய்து கொடுத்து அப்பகுதி மக்கள் நன்மை பெற உதவும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தேவையூரிலிருந்து கீழப்புலியூர், ஆய்க்குடி, பரவாய், புதுவேட்டகுடி, காடூர் வழியாக செந்துரை செல்லும் சாலையை இதுவரை எந்த அரசும் பராமரிக்கவில்லை. ஆகவே நமது அரசு உடனடியாக அந்தச் சாலையை சீர்படுத்தியும், பாலங்கள்

கட்டியும் வசதி செய்து கொடுத்தால் போக்குவரத்து தடையின்றி அப்பகுதி மக்கள் பயனடைவார்கள். மேலும் இந்த சாலையால் சேலம்—திருச்சி—தஞ்சை ஆகிய மூன்று மாவட்டங்களையும் இணைக்க கூடிய வாய்ப்புகள் உண்டு. ஆகவே உடனடியாக இச்சாலையை சீர்செய்யும்படி வேண்டுகிறேன்.

பெரம்பலூரிலிருந்து செங்குளம், சிறுகுடல் கீழப்புலியூர் வழியாக முருக்கன்குடி வரை செல்லும் சி. ஆர். சி. பேருந்தும் மற்றும் பாநுபாலன், பிருந்தா, அனுசுயா போன்ற தனியார் பேருந்துகளும் சென்று கொண்டிருக்கின்றன. செங்குளம்—முருக்கன்குடி வரை சாலையில் தார் போடாமல் இருப்பதால் சிறிது மழை பெய்தாலும் பேருந்து போக்குவரத்து தடைபடுகிறது. ஆகவே, அச்சாலையை தார் சாலையாக அமைத்து அப்பகுதி மக்களுக்கு உதவும்படி கேட்டுக்கொள்கிறேன்.

வேப்பூரிலிருந்து நன்னை, பழைய அரசமங்கலம் வழியாக ஒகளூர் செல்லும் பாதையில் சின்னாறு ஓடிக்கொண்டிருக்கிறது. அந்த ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்துதர வேண்டுகிறேன்.

என்னுடைய தொகுதியில் குடிநீர் பிரச்சனை மிகவும் அதிகமாக உள்ளது. ஆலத்தூர் ஒன்றியத்தில் சிறுகன்பூர், மாதவி, கூடலூர், கூத்தூர், பிலிமிசை, ஆதனூர் போன்ற ஊர்களில் குடிநீர் கிடைக்காமல் பொதுமக்கள் மிகவும் அவதிப்படுகின்றனர். வேப்பூர் யூனியனைச் சேர்ந்த வயலப்பாடி, பெரியம்மாபாளையம், அகூர், குன்னம், வேட்டகுடி, கீரனூர், அகரம், சிகூர், ஒகளூர்—இப்பகுதிகளில் உள்ளவர்கள் ஏரி, குட்டைகளில் உள்ள மழை நீரை தேங்கிய நீரைக் குடிக்கின்றனர். இப்பகுதிக்கும் குடிநீர் வசதி அளித்து, அப்பகுதி மக்களுக்கு நன்மை புரிய வேண்டுகிறேன்.

வேப்பூர், ஆலத்தூர் ஒன்றிய அலுவலர்கள் குடியிருப்பு விடுதி அமைத்துத் தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அரியலூரிலிருந்து (மருதையான் கோயில்) துங்கபுரம், வயலப்பாடி, வயலூர், சிகூர், பார்டர், ஆடுதுறை, லப்பைக்குடிக்காடு, திருமாந்துறை வழியாக திருச்சி—சென்னை தேசிய நெடுஞ்சாலையோடு இணையும் பாதையை விரிவுபடுத்தி சீர்படுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன். இதன் மூலம் அப்பகுதி மக்கள் அனைவரும் தேறு சர்க்கரை ஆலைக்கு கரும்பு ஏற்றிச் செல்ல, வசதியாக அமையும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மீண்டும்.........(மணியடிக்கப்பட்டது).

அங்குள்ள மக்களுக்கெல்லாம் என்னென்ன வசதிகள் வேண்டும் என்று அதிகாரிகளும் கமிஷனரும் கிராமம் கிராமமாகச் சென்ற பார்த்தால் தான் தெரியும். ஆனால்

வேப்பூர், ஆலத்தூர் போன்ற பகுதிகளிலே சில அதிகாரிகள் சென்று பார்ப்பதே கிடையாது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரவர்கள் இதை மிகத் தீவிரமாக கவனித்து என்னுடைய தொகுதிகளில் அதிகாரிகள் நேரடியாக கிராமங்களுக்குச் சென்று பார்வையிட்டு வருகின்ற வகையில் ஏற்பாடு செய்யவேண்டும். அப்போதுதான் என்னுடைய தொகுதியில் இருக்கின்ற குடிநீர் பிரச்சினை போன்றவை களைத் தீர்க்க முடியும் என்று கூறிக் கொண்டு எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

*திரு. சோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைரவர்களே, இந்த மாமன்றத்திற்கு முதன்முதலாக வருவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும் சங்கராபுரம் சட்டமன்றத்தொகுத் வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமுதாய நல வளர்ச்சி, சாலைப் பராமரிப்புத் திட்டத்தின் கீழ் என்னுடைய சங்கராபுரம் தொகுதி பற்றி சிலவற்றைக் கூற விரும்புகிறேன். என்னுடைய சங்கராபுரம் தொகுதி ரொம்பவும் பின்பட்ட தொகுதியாகும். பல ஆண்டுகளாக கொத்தடிமைகளாய் வாழ்ந்த சுமார் 30,000 மலைவாழ் மக்கள் அங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த மலை வாழ் மக்கள் மிகவும் மோசமான நிலையில் மனிதத் தன்மையற்ற நிலையில் உள்ளனர். அவர்களுக்கு போதிய கல்வி அறிவு கிடையாது. நல்லபழக்க வழக்கங்களும் கிடை யாது. அம்மக்கள் புனல் காடுகளை வெட்டி வாழ்க்கை நடத்துவதைத் தவிர வேறு வழியில்லாமல் இருக்கின்றனர். எனவே அவர்களது வாழ்க்கை முன்னேற்றம் அடைய நல்ல பல திட்டங்களை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக கல்வராயன் மலையில் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் பகுதி ஒரு தனி அதிகாரியின் கீழ் இயங்கிகொண்டு வருகிறது அங்கு ஒரு தனி ஒன்றியத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அங்குள்ள மக்கள் பஞ்சா யத்துக்கள் இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு ஊராட்சி ஒன்றியத்தை ஏற்படுத்திக் கொடுத்து நல்ல முறையிலே அவர்கள் தங்களது குறைகளை எடுத்துச் சொல் வதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த மக்களை நான் சென்று பார்க்கவேண்டுமென்று சொன்னால்கூட தலைவாசல், ஏற்காடு, சின்னசேலம், ஆத்தூர் ஆகிய தொகுதிகளைச் சுற்றிக்கொண்டு கிட்டதட்ட 125 கிலோ மீட்டர் கடந்துதான் சென்று பார்க்கவேண்டி இருக்கின்றது. கடந்த சட்டமன்றத் தேர்தலின்போது கூட என்னுடைய தொகுதியான அந்தத் தொகுதியின் மக்களிடம் சென்று அவர்களிடம் வாக்கு கேட்பதற்குக் கூட எந்தவிதமான வசதியும் இல்லாத நிலைமை அங்கே இருந்தது. இப்படிப்பட்ட நிலை அங்கே இருந்து வருகின்றது. ஆகவே கோமுகி நதி டேமிலிருந்து வெள்ளி மலைக்கு 27 கிலோ மீட்டர் தூரத்தில் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக கல்வராயன் மலையில் விளையக் கூடிய கடுக்காயைக் கொண்டு, கடுக்காயிலிருந்து எண்ணை எடுக்கும் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தினால் என்னுடைய தொகுதி மக்களில் பலருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். என்னுடைய தொகுதியில் உள்ள புஸ்குந்தா நதியில் லக்கிநாயக்கன்பட்டிக்கு அருகில் அணை ஒன்றை கட்டித் தருவதின் மூலம் பல ஆயிரக்கணக்கான நிலங்கள் பாசனம் பெறும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். கல்வராயன் மலை நீர் வீழ்ச்சியைக்கொண்டு அங்கே மின்நிலையம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சியில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் உற்பத்தியாகும் கரும்புச் சக்கையிலிருந்து ஒரு காகித ஆலையை ஏற்படுத்திக் கொடுக்கவும் இந்த அரசாங்கம் முயற்சிகளை மெற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சி 10 திருவண்ணாமலை சாலையில் மூங்கில் துறைப்பட்டு சர்க்கரை ஆலை இருப்பதால் அங்கு கரும்பை ஏற்றிச் செல்லும்போது அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. காரணம் என்னவென்றால் அந்தச் சாலை மிகக் குறுகலாக இருக்கின்றது. ஆகவே அந்தச் சாலையினை அகலப்படுத்தி நல்ல சாலையாக அமைத்துக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய சங்கராபுரம் தொகுதியிலே தண்ணீர்ப் பற்றாக்குறை அதிகமாக இருந்து வருகிறது. அங்கு குடிநீர்ப்பிரச்சினை மிகவும் அதிகமாக இருந்துகொண்டிருக்கிறது. சங்கராபுரத்திலே குடிநீர் வடிகால் வாரியத்தினர் அடிக்கல் நாட்டினார்களே ஒழிய அந்தத் திட்டம் என்ன ஆனது என்று ஒன்றுமே தெரியவில்லை. எனவே அந்தக் திட்டம் குறித்து துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



கள்ளக்குறிச்சி ஒரு பெரிய நகரமாக இருந்தும்கூட அங்கே ஒரு கல்லூரி கூட கிடையாது. இந்தப் பகுதி மாணவர்கள் கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்றால், 30 மைலுக்கு அப்பால் போய்த்தான் சேர முடியும். ஆகவே கள்ளக்குறிச்சியிலேயே ஒரு கல்லூரியை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த அரசை கேட்டுக்கொள்கிறேன்.

சங்கராபுரம் பெரிய நகரமாக இருக்கிறது. ஆனாலும் அது கள்ளக்குறிச்சி தாலுக்காவில்தான் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதை ஒரு தனித் தாலுகாவாக அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு சங்கராபுரத்திலே ஒரு மருத்துவமனை இருக்கிறது. அந்த மருத்துவமனையிலே ஒரே ஒரு மருத்துவர்தான் இருக்கிறார். மக்கள் அடிபட்டு மருத்துவத்திற்குச் சென்றால், இங்கே வைத்தியம் செய்வதற்கான வசதிகள் கிடையாது. நீங்கள் கடலூருக்குத்தான் போக வேண்டும் என்று சொல்லி, அந்த மருத்துவர் சர்டிபிகேட் எழுதிக் கொடுத்து கடலூருக்கு அனுப்பிவிடுகிறார். சாலை வசதிகள் சரிவர இல்லாத காரணத்தினால்தான் அடிபட்டவர்கள் நேரடியாக கடலூருக்கே உடனடியாகச் செல்ல முடியவில்லை, ஏனென்றால் சாலை வசதி இல்லாததினால் போக்குவரத்து வசதியும் கிடையாது, அதனால் மருத்துவ வசதியையும் மக்கள் பெற முடியவில்லை என்பதைச் சொல்லிக் கொண்டு, ஒரு பெண் மருத்துவரும் ஒரு செவிலியரும் அமர்த்த வேண்டும், அந்தப் பகுதிகளுக்கு சாலை வசதிகளை சரிவர செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கள்ளக்குறிச்சியில் தந்தை பெரியார் போக்குவரத்து கழகத்திற்காக பணிமனை ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்று ஏற்கனவேயே இடம் வாங்கப்பெற்றிருக்கிறது. இடம் வாங்கப்பெற்று இரண்டாண்டுகள் ஆகியும் பணிமனைக் கட்டுவதற்கான எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பெறவில்லை என்பதையும் கூறி, அந்த வேலையை துரிதப்படுத்தி, சீக்கிரமாக அங்கே தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் பணிமனையினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக பஸ்களை அதிகமாக விடுவதற்கும் ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி கிராமங்கள் அதிகமாக உள்ள தொகுதி. அதனாலே சாலை வசதிகள் மிகவும் குறைவாகவே இருக்கின்றன. ஆகவே, அந்தப் பகுதிகளில், கிராம மக்கள்

பயன் பெறும் வகையில் சாலை வசதிகளை நல்ல முறையில் சீர் செய்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனக்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி, இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று விடைபெறுகிறேன், நன்றி வணக்கம்.

[மாலை 4.50]

*திரு ப. தீர்த்தராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நடைபெறுகிற சமுதாய நல வளர்ச்சித் திட்டத்தின் மானியக் கோரிக்கை மீது பேச எனக்கு வாய்பளித்தமைக்கு என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். நான் மாநிலம் தழுவிய பிரச்சனைகளைப் பற்றி பேச வரவில்லை என்றாலும் என்னுடைய தொகுதியிலே இருக்கிற சில பிரச்சனைகளை முன் வைத்து என் உரையை தொடங்குகிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். அது எப்படிப்பட்ட பின்தங்கிய தொகுதி என்பது அவர்களுக்கு நன்கு தெரியும். உதாரணமாக அவர்களே ஒரு முறை ஓடத்திலே சென்று பள்ளிக்கூட கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். அதனால் அவருக்கு எவ்வளவு பின்தங்கிய தொகுதி என்று நான் சுட்டிக் காட்ட வேண்டிய அவசியம் இல்லை. என்னுடைய தொகுதி பின்தங்கிய தொகுதி மட்டுமல்ல. கிராமங்கள் அதிகம் உள்ள இடம். 75 சதவிதம் கிராமங்கள் நிறைந்த இடம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய மாவட்டமே மிகவும் பின்தங்கிய மாவட்டமாக இருந்தாலும், அதிலே என்னுடைய தொகுதி குறிப்பாக மிகவும் பின்தங்கிய பகுதி. அதனால் அங்கே சாதாரண மண் சாலைகள் கூட சரிவர அமைந்திருப்பதில்லை. சரியான போக்குவரத்தும் கிடையாது.* சாலை வசதிகளும் கிடையாது. பஸ்ஸுக்கு வர வேண்டுமென்றால், 10, 15 மைலுக்கு நடந்து சென்று பிறகு தான் பஸ் நிலையத்திற்கே செல்ல முடியும். பிச்சிலி மலையூர் பெரியூர் என்னும் ஒரு கிராமத்தில் 5,000 பேர் வாழ்கின்றனர். இதுபோல் ஐந்தாறு கிராமங்கள் சேர்ந்தாற்போல் இருக்கும். எந்தக் கிராமத்திலிருந்தும், நகரத்திற்குச் செல்ல சரியான சாலை வசதிகள் கிடையாது. நடந்துதான் பஸ் நிலையத்திற்கே செல்ல வேண்டும். சாலை வசதிகள் மட்டுமல்ல, மருத்துவ வசதிகள் கிடையாது. மின்சார வசதிகள் கிடையாது. எந்த வாய்ப்பு வசதியும் இல்லாத மிக பின்தங்கிய நிலையில்தான் என் தொகுதி மக்கள் இருக்கிறார்கள்.

இதற்கெல்லாம் காரணம் சாலை வசதிகள் இல்லாமைதான். டாக்டர்கள் வர சாலை வசதிகள் இருந்தால், மருத்துவ வசதி அவர்களுக்கு கிடைக்கும். சாலை வசதிகள் இருந்தால் மின்சார சாதனங்களைக் கொண்டு வர வழி ஏற்பட்டு, மின்சார வசதியும் கிடைக்கும். இங்கே முக்கியத் தொழில் பயிர் தொழில் தான். அவர்களின் விளை பொருள்களை மார்க்கெட்டுக்குக் கொண்டு போவதற்குக்கூட தேவையான வசதிகள் கிடையாது. சாலை வசதிகள் இருந்தால், போக்குவரத்து வசதிகள் ஏற்பட்டு, மற்ற வசதிகள் தானே வரும். ஆகவே மிக முக்கியமாக சாலை வசதியை அந்தப் பகுதிகளில் ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் காவிரி மின் திட்டத்தைப் பற்றி புரட்சித் தலைவர் அவர்கள் தீவிர முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். அதைச் செய்து கொடுப்பார் என்ற நம்பிக்கையும் எங்களுக்கிருக்கிறது.

ஹொகனேக்கலை பொறுத்தவரையில் நம்மாநிலத்தில் இருந்து மட்டுமல்ல, பல்வேறு மாநிலங்களிலிருந்து மக்கள் அங்கு வந்து களிக்கக்கூடிய அளவிற்கு இருக்கிறது. ஆகவே இருக்கிற சுற்றுலா மாளிகையோடு மேலும் பல சுற்றுலா மாளிகைகளை அமைத்து அந்நீர்வீழ்ச்சியைக் கண்டு எழுச்சி எண்ணங்கள் ஏற்படுகிற அளவிற்கு அமைத்துக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

சமுதாய நலம் பற்றி ஒரு வார்த்தை கூறிக்கொள்ள விரும்பு கிறேன். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இன் றைக்கு துப்பாக்கிச் சூடு, வெட்டுக்குத்து போன்றவை தினசரி நடந்துகொண்டிருக்கிறது. அதை நிவர்த்தி செய்தவற்கு என்ன வழி என்று காண அரசு முயற்சிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சட்டபூர்வமாக நாம் எடுக்கிற நடவடிக்கை களை தீவிரமாக்காமல், ஒரு குழு அமைத்து சரியான முறையில் ஆய்வு செய்து இப்படிப்பட்டதொரு மன நிலை மாற மாற்று நடவடிக்கை எடுக்க அரசு முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டு இந்த வாய்ப்பை தந்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கும்.

*<u>திரு கே. எம். எஸ். சுப்பிரமணியன்</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இந்த மன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கைகள் மீது எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு தங்களுக்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன். இந்த மானியத்தைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டின் எதிர்காலம் ஒளிமயமாகிற வகையில் நல்ல பல திட்டங்கள், புரட்சித் தலைவர் அவர்களால் தீட்டப்பட்டு, இன்று அவை முன் ஒப்புதலுக்காக வைக்கப் பட்டுள்ளன. முதலில் நான் இதை வரவேற்று பேச இருக்கிறேன்.

பொதுவாக தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் ஆங்காங்குள்ள நகராட்சிகள், ஊராட்சி மன்றங்கள் ஊராட்சி ஒன்றியங்கள் போன்றவைகளில் உள்ள அத்தனை கிராமங்களிலும் வாழக்கூடிய தாழ்த்தப்பட்ட மக்கள், அதிலும் குறிப்பாக ஹரிஜனங்கள் இருக்கக்கூடிய இடங்களில் குடிநீர் கூட இல்லாமல் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிற நிலை இருந்து கொண்டிருக்கிறது.

எனது தொகுதியைப் பொறுத்தவரையில் முன்னால் இருந்த அரசுகளாக இருந்தாலும் சரி, சென்ற முறை இருந்த நமது கழக அரசாக இருந்தாலும் சரி, ஏலக்காய் பயிர் வைத்து, ஏலக்காய் விளையும் பகுதி; ஏலக்காய் வர்த்தகம் செய்யக்கூடிய பகுதி. எனவே அந்தப் பகுதிக்கு என்ன குறை இருக்கிறது என்ற கண்ணோட்டத்தோடு அந்தப் பகுதிக்கு அதிகமாக அமைச்சர்கள் வந்து சுற்றுப் பயணம் செய்யமுடியாத ஒரு நிலை, இப்போதும் கூட அந்த நிலையில்தான் இருக்கிறது என்ற வருந்தத் தக்க செய்தியைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏலக்காய் என்பது கேரளாவில் விளைந்து அந்த ஏலக்காய் போடிக்கு கொண்டு வரப்பட்டு சுத்தப்படுத்தப்பட்டு வெளி நாடுகளுக்கு அனுப்பப்படுகிறதே தவிர அங்கிருப்பவர்களுக்கு அதனால் எந்தவிதப் பயனும் கிடையாது. ஆகவே அப்படிப் பட்டதொரு எண்ணத்தை, ஏலக்காய் விளைகிறது; ஆகவே என்ன குறை என்ற எண்ணத்தை விட்டுவிட்டு எங்கள் பகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதி என்பதால் அதை கருத்தில் கொண்டு அமைச்சர் அவர்கள் எங்களது கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக டி. சித்தலச்சேரி, சங்கராபுரம், மேல சித்தலச்சேரி, பல்லவ ராயன்பட்டி போன்ற இடங்களில் தண்ணீர் இல்லாமல் அது பிற்படுத்தப்பட்ட பகுதியாக, விளைச்சல் ஆகாத பகுதியாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதிகளில் தண்ணீர் கிடைக்காமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிகளை பார்வையிட்டு அந்தப் பகுதிகளில் குடிநீர் கிடைக்கவும் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[மாலை 5-00]

பொம்மநாயக்கன்பட்டி என்ற கிராமத்திலே கிட்டத்தட்ட 1½ ஆண்டுகளுக்கு முன்பு போரிங் போடப்பட்டு, அந்தக் கிணற்றிலே தண்ணீர் இருக்கிறது. அந்த போரிங்கிற்கு மின்சார இணைப்புக் கொடுப்பதற்கு அந்த பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் மறுத்து வருகிறார் என்பதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். அங்குள்ள மக்கள் மோட்டாரைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். கிணற்றுத்



தண்ணீரைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், மின்சார இணைப்பு கொடுப்பதற்கு அந்த கமிஷனர் என்ன காரணத்தினாலோ மறுத்து வருகிறார். முன்னால் இருந்த சட்டமன்ற உறுப்பினர் இதற்கு முயற்சித்தும் நடைபெறவில்லை. இப்போது நான் சட்டமன்றத்திலே இருப்பதால், அவரைச் சந்திக்க முடியாமல் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து, எங்களுடைய பகுதியிலே சாக்குளத்துமெட்டு என்ற ஒரு இடம் இருக்கிறது. அந்த இடம் பண்ணைபுரத்திலே இருந்து 12 மைல் தூரத்தில் இருக்கிறது. அங்குள்ள மக்கள் ஏலக்காய் விவசாயம் செய்வதற்காக கேரளாவிற்குச் செல்ல வண்டுமென்றால், சுமார் 60 கிலோ மீட்டர் தூரம் சுற்றிச் செல்லவேண்டியிருக்கின்றது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். முன்பு இங்கே உணவுக்கு வேலை என்னும் திட்டத்தின்கீழ் பாதை போடப்பட்டு, அது இப்போது முழுமையாக நிறைவேறாமல் நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, அந்தச் சாலையை போட்டுக் கொடுத்தால், அந்தப் பகுதி மக்கள், ஏலக்காய் விவசாயம் செய்யும் தொழிலாளர்கள் விரைவிலே கேரளாவிற்குச் சென்று விவசாயம் செய்ய வசதியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; ஏலக்காயிலேயே இருக்கிறீர்களே ? விஷயத்துக்கு வாருங்கள்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : அடுத்து, அகமலை என்ற பாரஸ்ட் ஏரியா பகுதி இருக்கிறது. அந்த பாரஸ்ட் பகுதியில் இலவம்பஞ்சு, காப்பி போன்ற விவசாயம் நடைபெறுகிறது. ஆனால், அந்தப் பகுதியிலே செல்வதற்கு எந்த விதமான பாதை வசதியும் கிடையாது. அதைப் பார்ப்பதற்கு பாரஸ்ட் அதிகாரிகளும், பாரஸ்ட் அமைச்சர் அவர்களும் வர வேண்டுமானால் அந்தப் பகுதியிலே சாலை வசதி இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதையெல்லாம் காட்டிலாகா மானியத்திலே பேசலாம். இது ஆர்.டி.எல்.ஏ. வைப் பற்றியது என்பது உங்களுக்குத் தெரியும். எஸ்டேட் ஓனர்கள் சார்பில் இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தால் எப்படி ? சீக்கிரம் முடியுங்கள்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : ஆகவே, அந்தப் பகுதிகளையெல்லாம் சென்று பார்த்தால், ஒரு சாலைகூட இல்லை என்பது தெரியும். அமைச்சர் அவர்கள் சென்று பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, உள்ளாட்சித் துறை மானியத்தின்மீது சில
கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதி
யிலே பல்வேறு கிராமங்களுக்கு ரோடு வசதியே கிடையாது.
குடியாத்தம் தொகுதியில் பஞ்சாயத்துக்கள் பெரும் பகுதி
ஆந்திர மாநிலத்திலிருந்து தமிழ்நாட்டிலே சேர்க்கப்பட்டிருக்
கின்றது. அந்தக் காரணத்தினாலோ என்னவோ அது கவனிக்
கப்படாமல், சரியான ரோடு வசதி இல்லாமல் இருக்கிறது.
அதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வந்து,
அந்த ரோடு வசதியை செய்து கொடுக்க வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, வீரிசெட்டிபள்ளி என்னுமிடம் மெயின் ரோட்
டிலே இருந்து 5 கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கிறது. அந்த
ஊருக்குச் செல்ல வேண்டுமென்றால், வரப்பின் மீதும், ஏரியி
லேயும் நடந்து செல்ல வேண்டியிருக்கிறது. பொதுவான நடை
பாதை இல்லாமல் இருக்கிறது. அங்கே ரோடு வசதி செய்து
கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வரதாரெட்டிப்பள்ளி என்னும் ஆந்திராவிலே
இருந்து வந்த பகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது.
பாதராமி கிராமத்திலே இருக்கின்ற மக்கள் இரண்டு ஏக்கர்
நிலத்தை அரசுக்கு கொடுத்தும், இதுவரைக்கும் அந்தப் பகுதி
யிலே ஆஸ்பத்திரி கட்டிடம் கட்டப்படவில்லை. அதேபோல்,
கொத்தமங்கலம்—கொல்லபல்லி ரோடு வசதி இல்லை. தேர்
தல் நேரத்திலே 5 கிலோ மீட்டர், 6 கிலோ மீட்டர் தூரம்
நடந்து சென்று வாக்குப் பெறவேண்டிய நிலைமை இருக்கிறது.
எனவே, அங்கேயும் ரோடு போடவேண்டும் என்பதை அமைச்சர்
அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

அதேபோல், சிங்கலப்பாடி-அணங்காநல்லூர் கிராமத்திற்
கும், உலகானி கிராமத்திற்கும் ரோடுகள் போடவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, சேப்பள்ளி-கொட்டாமடுகு கிராமங்களுக்கு
போவதென்றால் ரோடு வசதி இல்லை. அங்கே செல்வதற்கு
இடுப்பளவு தண்ணீரில் செல்லுகின்ற நிலைமை இருக்கிறது.
எனவே, அந்தப் பகுதியிலேயும் ரோடு அமைத்துக் கொடுப்ப
தோடு, இந்த அரசு ஒரு மேம்பாலத்தையும் கட்டித்தர வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், என்னுடைய தொகுதியை எடுத்துக்கொண்
டால், குறிப்பாக அரிசனங்கள் வாழ்கின்ற பகுதிகளிலே குடி
தண்ணீர் வசதி இல்லை. சில கிராமங்களில் மேல்நிலைத்
தொட்டிகள் கட்டப்பட்டு, மோட்டார் போடாமல்



இருக்கிறது. அப்படியே மோட்டார் இருந்தாலும், மின்சார
இணைப்பு இல்லாமல் இருக்கிறது. சில மோட்டார்கள்
பழுதடைந்து இருக்கின்றன. அவைகளை ரிப்பேர் செய்வதற்
குக்கூட ஆட்கள் நியமிக்கப்படவில்லை. இதைப்பற்றி ஏற்
கனவே பல உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை கூறியிருக்
கிறார்கள். கைபம்பு ரிப்பேர் செய்வதற்குக்கூட அங்கே
வசதியில்லை. எங்களுடைய பகுதியிலே குறிப்பாக, உலகாசி,
பட்டு கிராமம், கொத்தூர் ஆகிய கிராமங்களில் குடிதண்ணீர்
வசதி செய்ய வேண்டும் என்று ஏற்கனவே திட்டமிட்டும், இடை
யிலே நிறுத்தப்பட்டதாகத் தெரிகிறது. அதை உடனடியாகத்
தொடர்ந்து நடத்த திட்டமிட வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

அதேபோன்று குடியாத்தம் நகரத்தை எடுத்துக்கொண்டால்
நகராட்சி போதிய வருவாய் இல்லாத நகராட்சியாக இருக்கிறது.
மேலும் ரோடுகள் புழுதியாகவும் பள்ளமாகவும் இருக்கின்றன.
சுகாதார வசதி இல்லை. ரோடுகளைப் பராமரிக்கவும், சுகா
தார வசதியைப் பெருக்கிக் கொடுக்கவும் நிதி உதவி செய்து
கொடுக்கவேண்டும். கோரிக்கையைக் கொடுக்கின்ற நேரத்
தில், இவைகளுக்கு ஆதாரம் கிடைக்க வேண்டுமென்று சொன்
னால் நகராட்சி வருமானங்களைப் பெருக்கவும், ஊராட்சி
வருமானங்களைப் பெருக்கவும் அரசு ஆலோசனை கூற
வேண்டும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் நகராட்சி
களில் கடைகளைக் கட்டியும் ஊராட்சி ஒன்றியங்களில் வாரச்
சந்தைகளையும் ஏற்படுத்தி வருவாயைப் பெருக்க அரசு ஆதரவு
கொடுக்கவேண்டும்.

குடியாத்தம் நகரில் பேருந்து நிலையம் இருக்கிறது. அது
போதுமானதாக இல்லை. பின்னால் போதிய இட வசதி
இருக்கிறது. அந்த இடத்தை அரசு ஆர்ஜிதம் செய்து பஸ்
நிலையத்தை விஸ்தரிக்க அரசு ஏற்பாடு செய்யவேண்டும்.
நான் அறிந்தவரையில் பஸ் நிலையத்தை அங்கிருந்து அப்புறப்
படுத்தி ஊருக்கு ஒதுக்குப்புறமான, ஜனங்களுக்கு அசௌகரிய
மான இடத்திற்குக் கொண்டு போகும் அளவுக்கு நிலைமைகள்
இருப்பதாகச் சொல்லப்படுகிறது. பஸ் நிலையத்தை இருக்கும்
இடத்திலேயே அங்கேயே வைத்து விஸ்தரிக்க ஏற்பாடு செய்ய
வேண்டும்.

மேலும் சொல்லவேண்டுமென்று சொன்னால் பழனி
தொகுதியில் புது ஆயக்குடி வரதாப்பட்டினம் ரோட்டையும்,
பழைய ஆயக்குடி கட்டப்பாறை ரோட்டையும் தார்ச் சாலை
யாகப் போட்டுக் கொடுக்கவேண்டும்.

ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் கிராமங்களில் பெண்
களுக்கு மலஜலம் கழிக்க இட வசதி இல்லாமல் இருக்கிறது.
அதைப் பொதுவாகச் செய்து கொடுக்கவேண்டும். ஆயக்குடி

[திரு. கே. ஆர். சுந்தரம்] [1980 ஜூலை 21

குடிதண்ணீர்த் திட்டம் பல்லாண்டுக் காலமாகியும் வேலை ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது. யூனியன் பஸ் விஸ்தரிப்பு வேலை ஆமை வேகத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. அதைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். இரண்டு கிலோ மீட்டருக்கு அதிக நீளம் உள்ள எல்லாச் சாலைகளையும் அரசு நெடுஞ்சாலைத் துறையில் எடுத்துக் கொள்ளவேண்டும். குடியாத்தத்தில் 48 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. போதிய வருமானம் கிடையாது. ரோடு வசதி செய்ய முடியாது. அங்குள்ள இரண்டு மூன்று கிலோ மீட்டர் ரோடுகளை பொது மராமத்தின் மூலம் எடுத்துக் கொண்டு வேலை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

***திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள சமுதாய வளர்ச்சி, நகர்ப்புற வளர்ச்சி பற்றிய மானியக் கோரிக்கைகளின் மேல் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன்வந்திருக்கிறேன்.

சாலைகள், பாலங்கள் என்று சொல்லுகிறபோது அதிலே திருத்துறைப்பூண்டி தாலுகா மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. வேதாரண்யம்-திருத்துறைப்பூண்டி கடலோரப் பகுதியில் உள்ளதால் அமைச்சர் அவர்கள் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திருத்துறைப்பூண்டியில் மேலதண்டியக்காடு கடலோரப் பகுதியில் இருக்கிறது. அங்கு போகவேண்டுமென்று சொன்னால் ஒரு பக்கம் கிளைதாங்கி ஆறு, மறுபக்கம் மரைக்காய் கோரை ஆறு — இந்த ஆறுகளைத் தாண்டி மேலதண்டியக்காட்டுக்குப் போக வேண்டும். தண்ணீர் வந்துவிட்டால் ஆண்களும் பெண்களும் போக முடியாத நிலை இருக்கிறது. அந்த இடத்தில் ஒரு பாலம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பட்டுக்கோட்டை தொகுதியை சுற்றி போகவேண்டி உள்ளது. மேலநங்குறிச்சி என் தொகுதியில் இருக்கும் பஞ்சாயத்து. 30 மைல் சுற்றித்தான் பஞ்சாயத்துக்குப் போகவேண்டும். குறுக்கே இருப்பது பாமணியாறு. அங்கு ஒரு பாலம் கட்டிக் கொடுத்தால் பட்டுக்கோட்டை, திருத்துறைப்பூண்டி தொகுதியும் இணைக்கப்பட்டு அபிவிருத்தி ஏற்படும். அதற்கு பாமணி ஆற்றில் ஒரு பாலம் கட்டிக்கொடுக்கவேண்டும்.

திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் கோட்டூர் ஹையர் செகண்டரி பள்ளி இருக்கிறது. இருபது கிராமங்களில் இருந்து 500-க்கு மேற்பட்ட மாணவர்கள் அந்தப் பள்ளிக்குச் செல்கிறார்கள். அந்த மாணவர்கள் குறுக்கே ஐயனாற்றையும் முள்ளியாற்றையும் தாண்டி வரவேண்டியிருக்கிறது.



1980 ஜூலை 21] [திரு. பொ. உத்திராபதி]

திருத்துறைப்பூண்டி யூனியனில், ஐயனாற்றிலும், கோட்டூர் யூனியனில் முள்ளியாற்றிலும் பாலத்தைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

திருத்துறைப்பூண்டி யூனியனில் திருப்பத்தூர், கோமாளிப் பேட்டை சாலையைப் போட்டுத் தரவேண்டுமென்று ஐந்தாண்டுகளாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்த சாலைப் போக்குவரத்துக்கு மிகவும் அடிப்படையாக இருப்பதால் அதனை அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மன்னார்குடியிலிருந்து தலைஞாயிறு செல்லவேண்டுமென்று சொன்னால் 22 மைல் தூரம் உள்ள சாலை—இடையில் ஆலந்தூர், ஆலத்தூம்பாடி வரை அரிச்சந்திரா ஆற்றங்கரை இருக்கிறது. ஆற்றங்கரையை உயர்த்தி அகலப்படுத்தி அதில் கருங்கல் ஜல்லி ரோடு போட்டால் மன்னார்குடி, ஆலந்தூர், ஆலத்தூம்பாடி தலைஞாயிறு வரை பேருந்து விட்டு அதன் மூலம் 100 கிராமங்கள் வரை போக்குவரத்து வசதி ஏற்பட வாய்ப்பாக இருக்கும். அதையும் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருத்துறைப்பூண்டியில் ஒரு பாலம் இருக்கிறது. அங்கிருந்து பட்டுக்கோட்டை செல்லவேண்டுமென்றால், வேதாரண்யம் செல்ல வேண்டுமென்றால் செல்ல முடியாதபடி பாலம் இடையில் ரிப்பேர் ஆகிவிட்டது.

[மாலை 5-10]

எனவே சந்தைப்பேட்டைக்கு அருகாமையில் ஒரு பாலம் கட்டிக் கொடுத்தால் வேதாரண்யத்திலிருந்து பட்டுக்கோட்டை வரையிலே பேருந்துகள் செல்வதற்கு வசதியாக இருக்கும். முத்துப்பேட்டையிலே உள்ள நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் கிடையாத நிலை இருக்கிறது. எதிர்காலத்திலே அவர்களுக்கு பாதுகாப்புக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

முப்பது ஆயிரம் மக்கள் வாழ்கின்ற திருத்துறைப்பூண்டி நகரத்திலே, சுதந்திரம் பெற்று 33 ஆண்டுக்காலம் ஆகியும்கூட இரண்டு வார்டுகளுக்கு மட்டும்தான் குடிநீர் கிடைக்கவில்லை. அந்தப் பகுதிக்குத் தண்ணீர் வேண்டுமென்றால் கிடைக்கிறது. அந்தப் பகுதிக்குத் தண்ணீர் வேண்டுமென்றால் 2½ கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பாலுள்ள மேட்டுப்பாளையத்திலிருந்துதான் தண்ணீர் கொண்டுவரவேண்டும். குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக அதைச் செய்ய வேண்டுமென்றால் 27 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. பேரூராட்சிக்கு ஆறே கால் இலட்சம் ரூபாய் வருமானம் வருகிறது. முன்னாலே

நமது ஆட்சி அதை நகராட்சியாக ஆக்குவோம் என்று அறிவித்திருந்தது. ஆகவே இப்போது இருக்கிற உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதைக் கவனித்து இந்த சட்டமன்றக் கூட்ட தொடர் முடிவதற்குள்ளாக அதை நகராட்சியாக அறிவித்து, 30 ஆயிரம் மக்களுக்கு குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்திக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவை மாவட்டம், அவினாசிப் பகுதியிலே அன்னூர் யூனியனில் சாலை வசதி இல்லை. குடிதண்ணீர் வசதி இல்லை, கிராமங்களிலே போக்குவரத்து வசதிகள் இல்லை, பள்ளிகளிலே, தண்ணீர் வசதி இல்லை, பெரும்பாலான பம்பு செட்கள் வேலை செய்யாமல் ரிப்பேராக இருக்கின்றன. இதையெல்லாம் கவனித்து உடனடியாக நிவர்த்தி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, திருத்துறைப்பூண்டிப் பகுதியிலே கோட்டூரில் உள்ள ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோவையில் அன்னூருக்கு போய் மறுபடியும் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு வருகிறீர்கள், சீக்கிரம் முடியுங்கள்.

திரு. பொ. உத்திராபதி : அங்கே இருக்கின்ற ஹையர் செகண்டரி பள்ளியில் அதிகமான மாணவர்கள் படிக்கிறார்கள். அங்கே மாணவர்களுக்கு தண்ணீர் கிடையாது. உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதைக் கவனித்து ஆவன செய்ய வேண்டும். குடி தண்ணீர் வசதிகள், சாலைப் போக்குவரத்து வசதிகள், பாலங்கள் கிராமபுறங்களிலே இருக்க வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முதன்மையாகக் கவனிக்க வேண்டுமென்ற முறையிலே அறிவித்திருக்கிறார்கள். ஆதலால், உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் திருத்துறைப் பூண்டிப் பகுதியிலே அந்தச் சிறிய வேலைகளையெல்லாம் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றியைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

*திரு. அன்பில் தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்கள் முன்னேற்றம் அடைந்தால்தான் நகரங்கள் முன்னேற்றம் அடையமுடியும். நகரங்கள் முன்னேற்றம் அடைந்தால்தான் நாடு முன்னேற முடியும், நாடு முன்னேற்றம் அடைந்தால்தான் தேசம் முன்னேற்றம் அடையும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்லி வந்தது மாத்திரமல்ல, செயலிலும் காட்டி வந்தார்கள் என்பது தங்களுக்கு நன்றாகத் தெரியும். உத்தமர் காந்தியடிகள் ராமராஜ்யம் வேண்டுமென்று சொன்னது கிராம ராஜ்யம் தான் என்பதை கருத்திலே





அன்றைய இந்தியப் பிரதமர் பண்டித ஜவஹர்லால்
கொண்ட அன்றைய இந்தியப் பிரதமர் பண்டித ஜவஹர்லால்
நேரு அவர்கள் தமிழகத்திற்கு மாத்திரமல்ல, இந்திய தேசத்தி
திற்கே தனித் திட்டமொன்றை வகுத்து தேசிய வளர்ச்சித் திட்டம்
என்ற பெயரில் 1952-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2-ம் நாளில்
காந்தியடிகள் பிறந்த நன்னாளன்று ''நேஷனல் எக்ஸ்டன்ஷன்
ஸ்கீம் '' என்று கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டம் சரியாகச்
செயல்படவில்லை என்பதை உணர்ந்த நேரு அவர்கள் அந்தத்
திட்டத்தைப்பற்றிக் குறிப்பிடுகையில்கூட நான் இந்தத் திட்டம்
கொண்டு வந்ததன் நோக்கம் நாய் வாலை ஆட்ட வேண்டும்
என்று கருதினேன். ஆனால் வால் நாயை ஆட்டுகிறது, ஆகவே
வாலைவெட்ட வேண்டுமென்ற முறையிலே வேறு ஒரு திட்டத்தை
உருவாக்கினார்கள். அந்தத் திட்டம் உருவாக்கப்பட்ட நேரத்
திலே துணைத் தலைவராக இருந்த வி. டி. கிருஷ்ணமாச்சாரி
அவர்கள் கிராமங்கள் முன்னேற்றமடைய வேண்டுமென்ற முறை
யில் திட்டங்களைத் தீட்டினார்கள். அதுவும் சரியாக இல்லை
என்று உணரப்பட்டு எஸ். கே. டே அவர்களை நேரு அவர்கள்
அழைத்து ஆய்வு செய்யச் சொன்னார்கள், பிறகு இந்த சமுதாய
நலத் திட்டம் எப்படிச் செயல்பட வேண்டுமென்பதை ஆராய்
வதற்காக ஒரு குழுவை அமைத்தார்கள். 1959-ம் ஆண்டிலே
பல்வந்த் ராய் மேத்தா அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட
அந்தக் குழு இந்தத் திட்டம் எப்படிச் செயல்பட வேண்டுமென்
பதைக் குறித்து ஒரு பரிந்துரை வழங்கிற்று. அந்தப் பரிந்துரை
களின்படிதான் இன்றையதினம் அந்தச் சமுதாய நலத் திட்டம்
வளர்ந்து வருகிறது என்பதை அங்கத்தினர்கள் அனைவரும்
நன்றாக உணர்வார்கள் என்று நான் கருதுகிறேன். மாவட்ட
மன்றங்களாக இருந்த நேரத்தில் ஒரேயிடத்தில் அதிகாரங்கள்
குவிந்திருக்கின்றன, அவைகள் பரவலாக்கப்பட வேண்டுமென்ற
நோக்கத்தோடு, தாலுக்கா போர்டு, வட்ட அமைப்புகள்—அமைக்
கப்பட்டு, அதுவும் சரியாக இயங்கவில்லை என்ற காரணத்தால்
அவைகள் கலைக்கப்பட்டு, இப்பொழுது பஞ்சாயத்து யூனியன்
கள் ஏற்பட்டு, தமிழகத்திலே 374 பஞ்சாயத்து யூனியன்கள்
நடைபெற்று வருகின்றன. அந்தப் பஞ்சாயத்து யூனியன்களிலே
நடைபெறும் அத்தனை வேலைகளும் ஊராட்சி மன்றங்களால்
நடத்தப்பட முடியும். ஊராட்சி மன்றங்களுக்கு முக்கியத்துவம்
கொடுக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு அமைக்கப்பட்டது
என்பதும் நமக்குத் தெரியும்.

அப்படி அமைக்கப்பட்ட அந்த அமைப்புகள் சரியான முறை
யிலே இயங்குகின்றனவா என்று கேட்டால் நிச்சயமாக இல்லை
என்றுதான் நான் சொல்ல முடியும். இங்கே பல அங்கத்தினர்கள்
குறிப்பிட்டார்கள். கடந்த கால அரசு செய்யத் தவறியது,
கடந்த கால அரசு செய்யத் தவறியது என்றெல்லாம் குறிப்பிட்
டார்கள். நான் தங்கள் மூலமாக எடுத்துச் சொல்ல விரும்பு
கிறேன். கடந்த கால ஆட்சிக் காலத்திலேதான் 500 மக்கள்

இருக்கின்ற ஊர்களுக்கெல்லாம் கிராமச் சாலைகள், இணைப்புச்
சாலைகள் அமைக்கப்பட வேண்டுமென்ற திட்டம் கொண்டு வரப்
பட்டது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். 1,500 மக்கள்
தொகை கொண்ட ஊர்களுக்கு, பெரிய சாலையிலிருந்து அந்த
ஊருக்குத் தார்ச்சாலை போட வேண்டுமென்ற திட்டம் கொண்டு
வரப்பட்டதும் கடந்த கால ஆட்சியிலேதான் என்பதை நான்
நினைவு படுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

கிராமங்களுக்கு, நடப்பதற்கு நல்ல சாலை, படிப்பதற்குப்
பள்ளிக்கூடம், குடிப்பதற்கு நல்ல தண்ணீர், மின்சார வசதி ஆகிய
இவ்வளவையும் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு கடந்த
கால அரசு செயல்பட்டது என்பதை நான் நினைவு படுத்தக்
கடமைப்பட்டிருக்கிறேன். எல்லாக் கிராமகளுக்கும் மின்சார
வசதி செய்து கொடுக்க வேண்டும், எல்லாக் கிராமங்களுக்கும்
பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வழங்க வேண்டும் என்ற திட்டத்
திலேதான் தமிழ்நாட்டிலே குடிநீர் வடிகால் வாரியம் என்று
அமைக்கப்பட்டு, அந்தக் குடிநீர் வடிகால் வாரியம், ஏழாண்டு
காலத்தில் தமிழகத்தில் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் குடி
தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு
செயல்பட்டது கடந்த கால அரசில்தான் என்பதை நான் நினைவு
படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதி
செய்து கொடுக்க வேண்டுமென்ற திட்டத்தைக் கொண்டு வந்து'
ஏறக்குறைய எல்லாக் கிராமங்களுக்கும்—தமிழகத்திலே இருக்
கின்ற எல்லா மாவட்டங்களிலேயும் இருக்கின்ற எல்லாக் கிராமங்
களுக்கும் மின்சார வசதி செய்யப்பட்டிருக்கின்றது என்பதைத்
நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால், அவ்வாறு மின்சார வசதி செய்யப்பட்ட பல்வேறு
கிராமங்களில் இன்றையதினம் விளக்குகள் எரிகிறதா என்ப
தெல்லாம் அங்கு இருக்கின்றவர்களுக்கு நன்றாகத் தெரியும்
என்று கருதுகிறேன். எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதி
செய்து கொடுக்க வேண்டும், எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர்
வசதி செய்து கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு ஆரம்
பிக்கப்பட்ட அந்தக் குடிநீர் வடிகால் வாரியம் இப்பொழுது
இடையிலே சரியாக வேலை செய்யாத காரணத்திலால் அந்த
நோக்கம் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கிறது என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும்
கொடுக்கப்பட்டிருக்கின்ற வேலைப்பளு அதிகம் என்பதை நான்
தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களிடத்திலே 'Food for work'
ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.





Employment Guarantee Scheme பஞ்சாயத்து யூனியனிடம் ஒப்
படைக்கப்பட்டிருக்கின்றன. I.R.D.P. S.F.D.A., Rural
Housing Scheme, Dought Prone Area Programme.

ஆகிய இத்தனை வேலைகளும் பஞ்சாயத்து யூனியனிடம்
ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், 'ஹேன்ட் பம்ப்ஸ்'
மட்டும் குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டி
ருக்கிறது. ஸ்கூல் பில்டிங்க்ஸ் அவர்களிடத்தில் ஒப்படைக்கப்
பட்டிருக்கிறது.

இவ்வளவு வேலைகள் இருந்தாலும் மேலேயிருந்து கவனித்
துக்கொள்வது ரெவின்யூ இலாக்கா. இவ்வளவு வேலைகளை
யும் செய்வதற்கு அதற்குத் தகுந்த அளவில் ஆட்கள் ஒதுக்கப்
பட்டிருக்கிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்ல
வேண்டும். 1962 ஆம் ஆண்டு எந்த அளவிற்கு இருந்தார்களோ
அதே அளவிற்குத்தான் இருக்கிறார்கள். இடையிலே கொஞ்சம்
சேர்த்தாலும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டிருக்கிறதே தவிர
ஒன்றாக இணைந்து வேலை செய்ய வாய்ப்பில்லை.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், 'ஃபுட் ஃபார்
ஓர்க்' என்ற திட்டம் கிராமங்களிலே நடக்கும்பொழுது
காண்ட்ராக்டுக்குக் கொடுக்கக் கூடாது என்ற விதியே இருக்கிறது
அரசாங்கத்திலே உத்தரவுகூட போடப் பட்டிருக்கிறது. ஆனால்
அந்த 'ஃபுட் ஃபார் ஓர்க்' வேலைத் திட்டம் காண்ட்ராக்ட்
மூலம் நடைபெறுகிறதே தவிர அதிகாரிகள் மூலமாகவோ
அல்லது வேறு யார் மூலமாகவோ நடைபெறவில்லை என்பதை
தங்கள் மூலமாக அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு
வருகிறேன். இதைப்பற்றி சில புகார்கள்கூட என்னிடத்திலே
வந்திருக்கின்றன. இதை மாண்புமிகு அமைச்சரவர்களிடத்திலே
தர இருக்கிறேன்.

" Self-sufficiency scheme" இல் பள்ளிக்கூட
கட்டிடம் கட்ட பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகாரம்
வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் அப்படிக் கொடுக்கப்பட்டி
ருக்கிறதே தவிர, சிமென்ட், இரும்பு போன்ற மூலப்பொருள்
கள் கொடுக்கப்படவில்லை. ஓராண்டுக் காலத்திற்குள் அந்த
வேலையை முடிக்க வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள்.
ஏற்கனவே மூன்றாண்டுகளில் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற
லாம் என்று இருந்ததை, ஓராண்டுக் காலத்தில் முடிக்க
வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ஓராண்டுக்

காலத்தில் சிமெண்டோ, இரும்போ கிடைக்கவில்லை என்றால் அந்தப் பணத்தை அந்த வேலைக்குப் பயன்படுத்த முடியாது, அது வேறு வேலைக்குப் பயன்படும். எனவே, இதற்கு முக்கியத் துவம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

[ மாலை 5-20 ]

அதைப் போலவே ஏற்கனவே அமைக்கப்பட்ட கிராமப்புற சாலைகள்—நேரல் ரோட் ஒர்க்ஸ் ஸ்கீம்—அப்பொழுது போடப் பட்ட காலத்திற்குப் பிறகு மீண்டும், அதற்கு ஜல்லிகள் பரப்பப் படவோ, அல்லது சாலைகளைச் செப்பனிடுவது போன்ற வேலைகளோ, இதுவரையில் நடத்தப்படவில்லை. நேரல் ரோட் ஒர்க்ஸ்—கிராமப்புற வேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ் செய்யப் பட்ட சாலைகள் இன்றையதினம் பழுதடைந்திருக்கின்றன. அவைகளைக் கவனிப்பதற்குக் கூட நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. ஆனால் அமைச்சருடைய விளக்கக் குறிப்பிலே அதற்கு இப்பொழுது நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை உடனடியாகச் செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குடி தண்ணீரைப் பொறுத்தவரையிலே, குடி தண்ணீர் திட்டம், ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. நம் முடைய குடிநீர் வடிகால் வாரியம் டாங்குகள் மட்டும்தான் கட்டிக் கொடுக்கின்றது. டாங்கை கட்டிவிட்டு, அது பழு தடைந்து விட்டால் பஞ்சாயத்து யூனியனும் அதைச் சரி செய் வதில்லை. அந்தக் குடிநீர் வடிகால் வாரியமும் அதைச் செய்ய முடியவில்லை. அது காலியாக இருக்கிறது என்பதைத் தங்கள் மூலமாகக் கவனப்படுத்த விரும்புகிறேன்.

அதைப் போலவே, பல இடங்களிலே மன்றக் காலங் களில் அங்கே பொருத்தப்பட்டிருக்கின்ற மின்சாரப் பம்ப் செட்களில் தண்ணீர் வந்து விட்டால் அவை சரியாக இயங்கு வதில்லை. அதைப் பழுது பார்க்க வேண்டுமென்றால் வாட்டர் போர்டிலிருந்துதான் ஆட்கள் வரவேண்டும். அவர்கள்தான் ரிப்பேர் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள், பல நாட்கள் அது கவனிக்கப்படாத காரணத்தாலே, அங்கே குடி தண்ணீர் வசதி சரியாகச் செய்யப்படவில்லையென்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திட்டம் போடுவது பெரிதல்ல. திட்டத்தை நிறைவேற்று வதுதான் பெரிது. தங்களுக்கு நன்றாகத் தெரியும், பேரறிஞர் அண்ணா அவர்கள், "எத்தனை ஆண்டுக்காலம் நாம் பதவியிலே இருந்தோம் என்ற கணக்கை விட, பதவியில் இருந்த காலத்தில் எத்தனை வேலைகளை நாம் செய்திருக்கிறோம், மக்களுக்குச் செய்திருக்கிறோம் என்ற கணக்கைத் தான் நான் பார்க்கிறேன்'



என்று குறிப்பிட்டார்கள். அதைப் போலவே, திட்டம் போடுவது பெரிதல்ல. எத்தனை திட்டங்களை நிறைவேற்ற முடியும், நிறைவேற்றி இருக்கிறோம் என்ற கணக்கைத் தான் சொல்ல வேண்டுமே தவிர, தமிழகத்தைப் பொறுத்த வரையிலே, பெரும் திட்டங்கள் தீட்டி விட்டோம் என்று இருந்துவிடுவதிலே பயன் இல்லை. குறிப்பாகச் சொல்வதானால், நானே, ஊராட்சி ஒன்றியத் தலைவராக இருந்தபொழுது, பல வேலை களை நான் அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறேன். அதற்குப் பிறகு, உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்த பொழுதுகூட, அதை நிறைவேற்ற முடியாத சூழ்நிலையிருந்தது. ஏன் அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது என்று ஆராய்ந்த பொழுது அதிகாரிகள் பல விளக்கங்களைச் சொன்னார்கள். அப்பொழுது, பேரறிஞர் அண்ணா அவர்களிடத்திலே சென்று முறையிட்ட பொழுது, வேளாண்மைத் துறைக்கும் மக்களுக்குக் குடிநீர் வழங்குகின்ற திட்டங்களுக்கும் லாபநட்டக் கணக்குப் பார்க்கக் கூடாது. வேளாண்மைத் துறைக்குச் செலவழிப்பது எல்லாம் செலவுதான். விவசாயிகளிடமிருந்து லாபம் வரும் என்று எதிர்பார்ப்பது தவறு. நட்டம் ஏற்பட்டாலும் அந்தத் திட்டத்தை நாம் நிறைவேற்றித் தர வேண்டுமென்று குறிப் பிட்டார்கள்.

அதைப்போல, எல்லா மக்களுக்கும் குடிப்பதற்குத் தண்ணீர் கொடுக்கவேண்டும். அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டாலும் பரவாயில்லை. அதனாலே என்ன லாபம் வருகிறது? அந்தப் பஞ்சாயத்திற்குத் திருப்பிச் செலுத்துகின்ற அளவுக்குத் தகுதி இருக்கிறதா என்று தகுதி, திறமை பார்க்க வேண்டிய தேவை யில்லை. அவர்களுக்கு இலவசமாகக் குடி தண்ணீர் வழங்க வேண்டுமென்ற திட்டத்தை சொல்கிறார்கள். எனவே, அந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பொன்மலை நகரப் பஞ்சாயத்து, லால்குடி நகரப் பஞ்சாயத்து, பூவாளூர் நகரப் பஞ்சாயத்து, புள்ளம்பாடி நகரப் பஞ்சாயத்து, கல்லக்குடி நகரப் பஞ்சாயத்து, இந்தப் பஞ்சாயத்துக்களுக்கு வேண்டிய குடிநீருக்காக, முதல் ஆரம்பச் செலவுகள் செல வழிக்கப்பட்டு, அவர்களும் வந்து பரிசீலனை செய்து, ஏறத்தாழ 6 ஆண்டுகள் ஆகியும் இன்னும் அந்தப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கப்படவில்லை. திட்டம் தீட்டினோம். திட்டத்திற்கும் செலவாயிற்று. ஆனால், அந்தத் திட்டம் இன்னும் நிறை வேற்றப்படவில்லையென்பதைத் தங்கள் மூலமாக நான் மாண்பு மிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, குடி தண்ணீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில் அதிலே திருப்பிச் செலுத்துகிற லாப நட்டக் கணக்கைப் பார்க்காமல், அரசாங்கத்திற்கே நட்டம் ஏற்பட்டாலும் கூட, தண்ணீர் வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே, இன்றையதினம் சாலை வசதிகள்
எல்லா கிராமங்களுக்கும் செய்து கொடுக்கவேண்டுமென்ற
திட்டத்தின் அடிப்படையில், ரூரல் ரோட் ஒர்க்ஸ் என்ற
அடிப்படையில் எல்லா கிராமங்களுக்கும் இணைப்புச் சாலை
கள் போடப்பட்டிருக்கின்றன. போடப்பட்ட பிறகு, அந்தச்
சாலைகள் நல்ல பெரிய சாலைகளாக அமைக்கப்பட வேண்டு
மென்று அங்குள்ள கிராம மக்கள் விரும்புவதிலே தவறொன்று
மில்லை. தேவை, நாளுக்கு நாள் அதிகம் ஆக, ஆக, அவர்
களும் அதிகமாகக் கேட்பதிலே தவறில்லை. சாலையே இல்லாத
ஊர்களுக்குச் சாலை அமைத்துக் கொடுத்தோம். சாலை
அமைத்ததற்குப் பிறகு, அதிலே ஏதாவது சரளை போடக்
கூடாதா என்று கேட்டார்கள். சரளைப் போட்டுக் கொடுத்த
தற்குப் பின் நகரத்திற்கு மட்டும் தார் ரோடு, கிராமத்திற்குப்
போடக் கூடாதா என்று கேட்டார்கள். அதையும் போட்டோம்.
போட்ட பிறகு, பஸ் விடக் கூடாதா என்று கேட்டார்கள்.
பஸ்ஸும் விட்டோம். அத்தனையும் செய்து கொடுத்ததற்குப்
பிறகு, இப்பொழுது அத்தனையும் நின்று விட்டன. சாலைகள்
பெரும்பாலும் பழுதடைந்திருக்கின்றன. பஸ்கள் விடப்படுவ
தில்லை. விட்ட பஸ்களும் நின்றிருக்கின்றன. ஏனென்றால்
தனியார் துறையையும் நாம் வாழவிடுவதில்லை. அதைப்
பொதுத்துறையிலே செலுத்துபவர்கள், தங்களாலே அதைச்
செலுத்த முடியாது என்று நிறுத்தி விடுவதை நாம் பார்க்கிறோம்.

எங்களுடைய திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில்,
இன்றையதினம் கிராமங்களுக்கு பஸ் விட வேண்டுமென்றே
ஒரு போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 7, 8
கிராமங்களுக்குத் தனியார் பஸ் விட்டுக் கொண்டிருந்தார்கள்.
நான் வசிக்கின்ற இடத்திற்குப் பக்கத்து ஊரிலே, தின்னியம்
என்ற கிராமத்திற்குத் தனியார் பஸ் விட்டுக் கொண்டிருந்தார்
கள். அந்தப் பகுதியிலே பின்னர் அரசாங்க பஸ் விடப்பட்டது.
அரசாங்க பஸ் விட்டவுடனே தனியார் பஸ்காரன் நிறுத்தி
விடுகிறான்.

அதற்குப் பிறகு பஸ்களே போவதில்லை. அதைப்போல
அன்றையதினம் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்ச
ராக இருந்தவர், எங்கள் பகுதிக்கு வந்து பல இடங்களுக்கு
ஒரே சமயத்தில் பஸ்களை விட்டார்கள். தின்னியம் பஸ்
ரூட்டில் இருந்து பல இடங்களுக்கு பஸ் விட்டார்கள். நத்தம்—
மாங்குடி தச்சன்குறிச்சி பஸ்ரூட், பெருவளாம்பூர் பஸ்ரூட்,
கருடமங்கலம் ரூட் இப்படி பல சாலைகளில் பஸ் விட்டார்கள்.
ஆனால் இப்போது பஸ்களோ போவதில்லை. ஏற்கனவே
ஓடிக்கொண்டிருந்த பஸ்களும் நிறுத்தப்பட்டு விட்டன.
அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் எல்லாம் பஸ்கள்
விடவில்லை என்று போராட்டம் நடத்துகிறார்கள். அதிகாரி
களைக் கேட்டால் அவர்கள் சாலைகள் சரியில்லை என்ற





காரணத்தை சொல்லுகிறார்கள். எனவே அந்த சாலைகளை
பழுதுபார்க்க வசதி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன். சாலைகள் இல்லாத ஊருக்குச் சாலைகள் கொடுத்
தோம். அவர்களின் தேவைகள் நாளுக்குநாள் அதிகமான
காரணத்தினாலே, அவர்களுக்கு செய்து தருவது நம் கடமை
என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு பி.டபிள்யூ. டி. இலாகா பல அமைச்சர்களிடம்
ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. நீர்ப்பாசனம் ஒருவரிடத்தில்
இருக்கிறது. பெருவழிச்சாலை இன்னொரு அமைச்சரிடம் இருக்
கிறது. கட்டடங்களுக்குத் தனியே ஒரு அமைச்சர். இப்படி
பல அமைச்சர்களிடம் இந்தத் துறை பிரித்துக் கொடுக்கப்
பட்டு இருக்கிறது. என்னுடைய யோசனை என்னவென்றால்
எப்படி அவைகள் அதிகமாக இருக்கிற காரணத்தால் பிரிக்கப்
பட்டு இருக்கிறது என்று சொல்லுகிறார்களோ, அதைப்
போலவே வேலையும் அதிகமாக இருக்கிற காரணத்தாலே,
கிராமப்புற வேலைகளைப் பிரித்துச் செய்வதற்கு வசதியாக
இந்த இலாகா பிரிக்கப்பட்டு அதற்கு ஒரு தலைமைப் பொறி
யாளரை, சீப் இன்ஜீனியர் பார் ரூரல் ரோட்ஸ் என்று
போட்டால் அது மிகவும் நலமாக இருக்கும். அந்த சாலை
களைப் பராமரிப்பதற்கும் வசதியாக இருக்கும். எல்லாம்
ஒருவரிடத்திலே இருக்கின்ற காரணத்தால், கிராமப்புற
சாலைகள் புறக்கணிக்கப்படுகின்றன என்று கருதுகிறேன். அவை
களைத் தனியாகப் பிரித்தால் கூட சௌகரியமாக இருக்கும்.

அதைப்போலவே, பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரை
யில், இன்றையதினம் பெருவாரியான பஞ்சாயத்துக்களுக்கு
உட்பட்ட கிராமங்களிலே இருக்கிற தெரு விளக்குகள் எரிவ
தில்லை. மின்விளக்கு எரியாவிட்டால், அரசாங்கம் அதை
எடுத்துக்கொண்டது என்றோ அல்லது அரசாங்கம் செய்கிறது
என்றோ அங்கே உள்ள மக்கள் சொல்வதில்லை. ஆனால்
மக்கள் நினைப்பது எல்லாம் அரசாங்கம் செய்யவில்லை என்று
குறை சொல்வதைவிட பஞ்சாயத்து பிரசிடென்ட்டுகள்
செய்யவில்லை என்று கிராமங்களில் பேசப்படுகிறது. ஏன்
என்று கேட்டால், இன்றையதினம் பெருவாரியான மக்களுக்கு
பஞ்சாயத்துத் தலைவர்களே இல்லை என்ற விவரம் தெரிய
வில்லை. பஞ்சாயத்துத் தலைவர்கள் சரியாக வேலை செய்ய
வில்லை என்கின்ற குற்றச்சாட்டைத்தான் சொல்லுகிறார்கள்.

கிராமங்களில் ஏன் விளக்குகள் எரியவில்லை என்று
அதிகாரிகளைக் கேட்டால், அவர்கள் என்ன சொல்லுகிறார்
கள் என்றால் அவைகள் எல்லாம் எலக்டிரிசிடி போர்டுக்கு
ஒப்படைக்கப்பட்டுவிட்டன, அவர்களுடைய நிர்வாகத்தின்
கீழ்தான் உள்ளன என்று சொல்லுகிறார்கள். திருச்சியிலே

[திரு. அன்பில் தர்மலிங்கம்] [1980 ஜூலை 21

எலக்டிரிசிடி போர்டும் உள்ளது. எஸ். எம். ஈ. எஸ். ஸி. ( S.M.E.S.C. ) இருக்கிறது. இப்படி இரண்டும் இருந்தும் விளக்குகள் எரியவில்லை. அவர்களைக் கேட்டால் இவர்களைக் கேள் என்கிறார்கள். இவர்களைக் கேட்டால் அவர்களைக் கேளுங்கள் என்று சொல்லுகிறார்கள். ஆனாலும் தெரு விளக்குகள் எரியவில்லை. ஏன் என்று எலக்டிரிசிடி போர்டு அதிகாரிகளைக் கேட்டால், இன்னும் சரியான நிலையில் எங்களுக்கு ஒப்படைக்கப்படவில்லை என்று சொல்லுகிறார்கள். நாங்கள் இன்னும் எடுத்துக் கொள்ளவில்லை என்கிறார்கள். ஆனால் மக்களுக்கு யார் எடுத்துக் கொள்ளுகிறார்கள் என்பதெல்லாம் புரிவதில்லை. விளக்குகள் எரிவதில்லை என்று ஊரிலே உள்ளவர்களைத்தான் திட்டுவார்கள். எனவே அதற்கு உடனடியாக, விளக்குகள் எரிவதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கனவே நான் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது ஒரு உத்தரவைப் போட்டேன் என்று கருதுகிறேன். கிராம விளக்குகள் எரியாமல் போனால், அந்தந்த ஒன்றியங்களோ அந்த பல்புகளை வாங்கி வைத்து, தலைவரிடத்திலோ அல்லது அதிகாரிகள் மூலமாகவோ அவ்வப்போது எரியவிடவேண்டும் என்று உத்தரவைப் போட்டோம். அதைப்போலவே மீட்டர் எவ்வளவு எரிகிறது, ஏன் என்றால் மீட்டர் வைத்துக் கொண்டால் எவ்வளவு பணம் பஞ்சாயத்தில் இருந்து கட்டுகிறோம் என்ற கணக்கு பஞ்சாயத்துத் தலைவருக்குக் கூட தெரியாது. அப்போது மீட்டர்களை அந்தந்த பஞ்சாயத்துகள் வாங்கி வைத்துக் கொள்ளலாம் என்று உத்தரவு போடப்பட்டது. அந்த உத்தரவு இப்போது நீக்கப்பட்டு அது எலக்டிரிசிடி போர்டுக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அவர்களும் சரியாகச் செய்யவில்லை. ஒரு நாளைக்கு 4, 5 கம்பங்களிலே ஏறுகிறார்கள். எரியாத பல்புகளைப் பார்த்துவிட்டு எங்கள் வேலை தீர்ந்து விட்டது என்று அவர்கள் போய்விடுகிறார்கள். 30, 40 லைட்டுகள் எரியவில்லை என்கிறபோது அடுத்த வாரம்தான் பார்க்கமுடியும், எங்களிடத்திலே அதற்கு வேண்டிய ஸ்டாப் இல்லை; ஆகவே இன்றைக்கு இயலவில்லை என்று சொல்லி வருகிறார்களே தவிர, அதை போடுவதில்லை என்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வந்து, ஆவன செய்யவேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

[மாலை 5-30]

அதைப்போலவே, அண்ணா கண்ட கனவு நினைவாகத் தக்க வகையில் இந்த இலாகா பிரிக்கப்பட வேண்டும் என்று 1974 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1 ஆம் தேதியில் அந்த இலாகா தனியாகப் பிரிக்கப்பட்டது. தனியாகப் பிரிக்கப்பட்ட நேரத்தில் கூட இந்த இலாகா என்னென்ன செய்யவேண்டும் என்பதையெல்லாம் வரையறுத்து, இன்னின்ன காரியங்கள்



1980 ஜூலை 21] [திரு அன்பில் தர்மலிங்கம்]

அதனிடத்தில் ஒப்படைக்கப்படவேண்டும் என்று ஒரு ஏற்பாட்டை நாங்கள் செய்து இருந்தோம். குறிப்பாக, மாவட்ட ரெவின்யூ இலாகா, பஞ்சாயத்து இலாகா என்று பிரிக்கப்பட்டு, கோட்ட அளவில் ஆர்.டி.ஓ. நீக்கப்பட்டு, டி.டி.ஓ. தலைமையின்கீழ் அந்த பஞ்சாயத்து இலாகா ஒப்படைக்கப்பட்டது. இருப்பினும் அவர்களுக்கு வேண்டிய வசதி வாய்ப்புகள் எதுவும் செய்து தரவில்லை. அந்த டி.டி.ஓ.-விற்கும் மாவட்ட அளவில் கலெக்டர்தான் தலைமை நிர்வாகியாக இருந்தார். மாவட்ட கலெக்டர் அவர்கள் பல்வேறு நிர்வாகத் துறைகளுக்கு தலைமை வகிப்பதால், உள்ளாட்சித் துறையில் அவர் சரியான முறையில் கவனம் செலுத்தி அதனை அபிவிருத்தி செய்ய இயலவில்லை.

ஆகவே, நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது—அந்த டி.டி.ஓ.-விற்கு ஜீப் கொடுக்கவேண்டும், போன் வசதி கொடுக்கவேண்டும், ஆபீஸ் வசதி தனியாக செய்து தரப்படவேண்டும்—இன்னமும் அந்த அலுவலகங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகத்தில்தான் இருக்கின்றன.—அவருடைய நிர்வாகம் தனியாக இருக்கவேண்டும். வேண்டுமானால் மேலே கண்காணிக்கும் பொறுப்பு மாவட்ட ஆட்சித் தலைவர் கையில் இருக்கலாம் ஏன்று வைத்து இருந்தோம். அப்போதே கூட நான் குறிப்பு எழுதி அனுப்பினேன். இந்த கண்காணிக்கும் பொறுப்பு ஆட்சித் தலைவர் கையில் இருப்பது சரியல்ல. ஏற்கனவே, தாலுக்கா பஞ்சாயத்து ஆபீசர், டிஸ்டிரிக்ட் பஞ்சாயத்து ஆபீசர், ரீஜினல் இன்ஸ்பெக்டர் ஆப் பஞ்சாயத்து போர்ட்ஸ் என்று இருந்தது. இந்த ரீஜீனல் இன்ஸ்பெக்டர் ஆப் லோகல் போர்ட்ஸ் என்கிற பொறுப்பைத்தான் மாவட்ட ஆட்சித் தலைவர் பார்த்து வருகிறார். மாவட்ட ஆட்சித் தலைவர் சகலத்திற்கும் ஆட்சித் தலைவராக இருப்பதால், உள்ளாட்சித் துறையில் பல காரியங்களைச் செய்ய முடியாமல் இருக்கிறது என்று நான் குறிப்பு எழுதி இருக்கிறேன் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

கிராமத்தில் குடிநீர் வசதி இல்லை, மின்சார வசதி இல்லை, சாலை வசதிகள் இல்லை. அப்படியிருந்தபோதிலும் மாவட்ட ஆட்சித் தலைவர் என்ன செய்து இருக்கிறார் என்றால், ஒவ்வொரு பஞ்சாயத்தும் பால்வள நிறுவனத்திற்கு பணம் கொடுக்கவேண்டும் என்று உத்தரவு போட்டு இருக்கிறார். அதன்படி பணம் கொடுக்கப்படுகிறது. அதன் பிறகு அது அரசாங்கத்திற்கு ரேடிபிகேஷனுக்கு வருகிறது. அரசாங்கமும் ரேடிபிகேஷன் செய்கிறது. கிராமத்தில் குடிக்க நீர் இல்லை, அதற்குப் பணம் இல்லை என்று சொல்கிறபோது, நகரத்தில் உள்ள மக்களுக்கு பால் வழங்க வசதி செய்வதற்காக பஞ்சாயத்துப் பணம் எடுத்துக்கொள்ளப்படவேண்டுமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

[திரு. அன்பில் தர்மலிங்கம்] [1980 ஜூலை 21

ன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.
சமீபத்தில் கேள்விப்பட்டேன். நம்முடைய அரசாங்கம் அறிவித்த
கடன் நிவாரண திட்டத்திற்காக பாரம் அச்சடிக்க வேண்டும்
என்பதற்காக காகிதம் வேண்டும் என்று ஒவ்வொரு
பஞ்சாயத்தில் இருந்தும் 5 ரீம், 10 ரீம் பேப்பர் தரவேண்டும்
என்று ஆட்சித் தலைவர் ஆணையிட்டு இருக்கிறார். இந்த
பாரம் அடிக்க அரசாங்கம் பணம் செலவழிக்கக் கூடாதா?
மாவட்ட ஆட்சித் தலைவர் பஞ்சாயத்துப் பணத்தை இதற்கு
செலவழிக்க வேண்டுமா? இந்த நிகழ்ச்சியை தலைவர் அவர்
களே, தங்கள் மூலமாக அரசாங்கத்தின் கவனத்திற்குக்
கொண்டு வருகிறேன்.

இவ்வளவு நாட்கள் ஆகியும் அந்த இலாகாவிற்கு உரிய
எந்தவிதமான தனி அந்தஸ்தும் வழங்கப்படவில்லை.
அதிகாரிகள் பிரிக்கப்பட்டார்களே தவிர, அந்த மாவட்ட
ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டிடத்திலேயேதான் அவர்கள்
அலுவலகமும் நடக்கிறது. அதன் காரணமாக இந்த இலாகா
ஒரு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்தப்படுகிறது
என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, பஞ்
சாயத்துக்கள் நிர்வாகத்தை தனியாகப் பிரித்து, உடனடியாக
அந்த நிர்வாகத்தில் நல்லதொரு மாற்றத்தை ஏற்படுத்த
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்னும்
6 மாத காலத்தில் தேர்தல் நடத்தி விடுவோம் என்று குறிப்
பிட்டு இருக்கிறார்கள். தேர்தல் நடத்துவது கஷ்டம் இல்லை.
18 வயதாக ஓட்டுரிமை வயதைக் குறைக்கவேண்டும் என்று
கருத்தறிய கூட்டப்பட்ட கூட்டத்திலேயே நான் என்னுடைய
கருத்தைத் தெரிவித்து இருக்கிறேன். ஏற்கனவே 18 வயது
அடைந்தவர்கள் வாக்காளர்களாக சேர்ந்து விட்டார்கள்.
இனிமேல் சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை. அந்தந்த
கிராமத்திலேயே 18 வயது அடைந்தவர்கள் கணக்கு எடுத்து
பஞ்சாயத்துகளில் ஒன்றியங்களில் வாக்களார் பட்டியல் வைத்து
இருக்கிறார்கள். சட்டமன்றத் தேர்தல், நாடாளுமன்றத்
தேர்தல் ஆகியவை வருவதற்கு முன்பே இப்படிப்பட்ட வாக்
காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு விட்டது. ஆகவே, தேர்தல்
நடத்துவதை அதற்காக காலதாமதம் செய்யவேண்டியது இல்லை.

18 வயது அடைந்தவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்க
வேண்டும் என்று சொல்றெபோது நான் ஒரு கருத்தைச் சொன்
னேன். 18 வயது ஆகிவிட்டது என்று நிரூபிக்கும் பொறுப்பு
வாக்காளர்களைச் சேர்ந்தது. அவர்கள் தான் 18 வயது எய்தி
விட்டேன் என்பதற்கான சான்றுகளைக் கொண்டு வர வேண்டும்.



1980 ஜூலை 21] [திரு. அன்பில் தர்மலிங்கம்]

அப்படி கொண்டு வந்து கொடுத்தால் தான் சேர்த்துக் கொள்ள
வேண்டும். 18 வயது அடைந்தவர்கள் எப்படி பர்த் சர்ட்டிபி
கேட் வாங்குவார்கள் என்றெல்லாம் கேட்கலாம். அப்படி
பேசுவதால் பிரயோசனம் இல்லை. அரசின் தலை விதியை நிர்
ணயிக்கக்கூடிய தகுதியைப் பெறுகின்ற அவர்கள் இதை கண்டிப்
பாக செய்ய வேண்டும். அந்த வகையில் இந்த அரசாங்கம்
சட்ட திட்டங்களைச் செய்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

அதைப் போலவே இப்போது நேரடித் தேர்தல் முறையை
வைத்திருக்கிறோம். அதிலே ஒரு சிக்கல் இருக்கிறது. பஞ்
சாயத்துத் தலைவர்களை மக்கள் தேர்ந்தெடுத்து விடுகிறார்கள்.
பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கும் ஒரு வாக்கு போட்டு, அவர்
களே தேர்ந்தெடுத்துவிடுகிறார்கள். பஞ்சாயத்து யூனியன்
தலைவர் ஒரு கட்சியாக இருந்து, பஞ்சாயத்துத் தலைவர்கள்
ஒரு கட்சியாக இருந்தால் நிர்வாகம் சரியாக நடக்காது.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் என்னுடைய
தொகுதியில் லால்குடி பஞ்சாயத்து யூனியன் இருக்கிறது. அதிலே
46 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. இந்த 46 -ல் தலைவர்
ஒருவர் வந்துவிடலாம். ஆனால் 46 பஞ்சாயத்துக்களின் 30
பேர்கள் ஒரு கட்சியைச் சேர்ந்தவர்களாகவும், 16 பேர் வேறு
ஒரு கட்சியைச் சேர்ந்தவர்களாகவும் வந்து விட்டால், அந்த
பஞ்சாயத்து யூனியன் தலைவர் சரியாக நிர்வாகம் செய்ய முடி
யாது. நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர முடியாது.
நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வர முடியாவிட்டாலும்
மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மக்களால் தேர்ந்தேடுக்கப்பட்ட
தலைவரை நீக்கிவிட அதிகாரம் இருக்கிறது. நிர்வாகம் சரி
யில்லை என்றோ அல்லது வேறு பல காரணங்களைச்
சொல்லியோ தலைவர் மீது குற்றஞ்சாட்டி அதிகாரி நினைத்தால்
தலைவரை நீக்கி விடலாம். இந்த அதிகாரம் கலெக்டருக்கு
இருக்கக் கூடாது. அதே நேரத்தில் நிர்வாகம் ஒழுங்காக, சீராக
நடக்க வேண்டுமென்றால், சர்க்கார் வேலைகளைப் பிரித்து வட்
டார வளர்ச்சி அதிகாரி இன்னின்ன வேலைகளை கவனிக்கலாம்;
மற்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இன்னின்ன வேலைகளை கவ
னிக்கலாம் ; மக்களால் தேர்கதெடுக்கப்பட்ட தலைவர் இன்
னின்ன வேலைகளை கவனிக்கலாம் ; இன்னின்ன காரியங்களைச்
செய்யலாம் என்ற வரையறை செய்து விட வேண்டும். இல்லை
என்றால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வராவிட்டாலும் வேண்டு
மென்றே குற்றஞ்சாட்டுக்களைச் சொல்லி, கலெக்டர் நீக்கிவிடக்
கூடிய நிலைமை வரும் ; அது கூடாது என்று அன்றைய
தினம் சொன்னேன். அதற்கும் வேண்டிய ஏற்பாடுகளைச்
செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. அன்பில் தர்மலிங்கம்] [1980 ஜூலை 21

இன்றைய தினம் மக்களுக்கு மிக முக்கியமாகச் செய்ய வேண்
டியது விரைவிலே ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தேர்தலை நடத்த
வேண்டும் என்பது தான். அதை விரைவிலே செய்தால்தான்
கிராம மக்களுக்கு நன்மை செய்ய முடியும். அதை விரைவிலே
செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களுக்கு பல்வேறு பொறுப்புகள் இருப்ப
தால், வேலைப்பளு அதிகமாக இருப்பதால், நான் ஏற்கெனவே
குறிப்பிட்டதைப் போல, சரியாகப் பணியாற்ற முடியாமல்
இருக்கிறது. அதை எல்லாம் சரியாக ஆராய்ந்து பார்த்து,
வேலைப்பளுவைக் குறைத்து, சீரான செம்மையான நிர்வாகம்
நடைபெற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, உள்ளாட்சித் துறையில் இருப்பவர்களுக்கு
பிரமோஷன் குறைவாக இருக்கிறது. குறிப்பாக, டி.டி.ஓ.வாக
இருக்கிற ஒருவருக்கு அடுத்த ப்ரமோஷன் டிப்டி டைரக்டர்
பதவிதான். அந்தப் பதவியைத் தவிர வேறு வழியில்லை.
அதுவும் கஷ்டப்பட்டு ரிட்டயர் ஆகக்கூடிய காலத்தில் சிலருக்கு
ஜாயின்ட் டைரக்டர் ஆகும் வாய்ப்பு கிடைக்கும். இந்த
இரண்டு பதவிகள் தான் அவர்களுக்கு இருக்கிறது. ஆனால்
டிப்டி கலெக்டராக இருக்கிற ஒருவர் டி.ஆர்.ஓ. ஆக வரலாம் ;
அதற்கு மேலே பல வாய்ப்புகள் இருக்கின்றன. இந்த நேரத்
தில் போறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்ட ஒன்றை நினைவு
படுத்த விரும்புகிறேன். ''ரெவின்யூ இலாகாவிலே இருப்பவர்
கள் எந்த இலாகாவுக்கும் போக முடியும் ; அந்த வழி திறந்தே
இருக்கும் : ஆனால் மற்ற இலாக்காவினர் வந்தால் அடைத்து
விடுவார்கள். என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள்.
ஏன் என்று நான் கேட்டபோது ரெவின்யூ இலாகாவில் இருப்ப
வர்கள் *** இருந்து தொண்டைமான் வரையில் பார்த்து
விட்டு, கடைசியாக இங்கே வருகிறார்கள்'' என்று சொன்னார்
கள்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்</u> : தலைவரவர்
களே, இந்த ** ** இருந்து தொண்டைமான் வரை
யில்'' என்று சொன்னதில் ** என்ற வார்த்தையை எடுத்து
விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேறு ஒன்றும்
இல்லை.

** <u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : அந்த வார்த்தையை
எடுத்துவிடும்படி உத்தரவிடுகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.



1980 ஜூலை 21]

<u>திரு. அன்பில் தர்மலிங்கம்</u> : அது ஒன்றும் தவறான
வார்த்தை அல்ல. கிராமத்தில் இன்றும் சொல்லுகின்ற பழ
மொழிதான். அதை தவறு என்று நான் சொல்லமாட்டேன்.
இன்னொன்று கூட சொல்வார்கள். ''கணக்கனால்
ஆகாதது கலெக்டரால் ஆகாது'' என்றும் சொல்வார்கள்.
இந்த உள்ளாட்சித் துறையில் பணியாற்றுகின்றவர்களுக்கு ரிட்ட
யர் ஆகக்கூடிய காலத்தில் ஜாயின்ட் டைரக்டர் பதவி கிடைப்பது
கூட கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, இந்த முறையை மாற்றி
யமைக்கவேண்டும்.

இன்னும் சொல்லப்போனால் ஏற்கெனவே இருந்த முறைப்படி
ஜில்லா போர்டு என்று இருந்தால்கூட, அது தனியாக இருக்கும் ;
நல்ல நிர்வாகம் நடக்கும். ஆகவே, அதை தனியாக நடப்ப
தற்கு முதலமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக் கொள்வார்
என்று கருதுகிறேன். எல்லா காரியங்களும் செவ்வனே நடை
பெறுவதற்கு உடனடியாக பஞ்சாயத்துத் தேர்தல், நகராட்சித்
தேர்தல்களை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடிநீர் பிரச்சனையைப் பொறுத்தவரையில் திருச்சி நகருக்கு
பக்கத்தில் காவிரி ஆறு ஓடியும் இன்னும் இந்தப் பிரச்சினை தீர
வில்லை. அங்கே இரண்டு கோடி ரூபாய் பாதாள சாக்கடைத்
திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டும் இன்னும் வேலை நடக்கிறது.
'கலெக்டிவ் வெல்' என்ற கிணறு வெட்டுவதற்குக்கூட 6 ஆண்டு
காலமாகியும் இன்னும் அது செயல்படுத்தப்படவில்லை. அதி
காரிகளைக் கேட்டபோது பம்பாயில் இருக்கிற ஒரே ஒருவர் தான்
ஒப்பந்தக்காரர், அவர் வந்துதான் செய்யமுடியும் ;
அவரிடம்தான் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது ; அவர் வராவிட்
டால் செய்ய முடியாது'' என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்
கள். அதையும் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று
கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

[மாலை 5-40]

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு</u> : மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, இந்த அவையின் முன்னாலே 4 மானியக்
கோரிக்கைகள் அதாவது சமுதாய நல வளர்ச்சி, ஊரக வளர்ச்சி,
பாலங்கள், பாலங்களும் மூலதனச் செலவும் ஆகிய 4 மானியக்
கோரிக்கைகளின் மீதும் ஏறத்தாழ 31 மாமன்ற உறுப்பினர்கள்
இங்கே தங்களுடைய மேலான கருத்துக்களை எடுத்துச் சொல்லி
யிருக்கிறார்கள்.

குறிப்பாக, கிராம வளர்ச்சியைப் பொறுத்தவரையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் என்ன கருத்துக்களின் அடிப்படையிலே சமுதாய வளர்ச்சி வேண்டுமென்று சொன்னார்களோ அந்த அடிப்படையிலே நான் கடந்த 30-6-77-ஆம் தேதி அன்று ஆட்சிப் பொறுப்பினை தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்றிருக்கின்றார்கள். கிராமப்புறங்கள் வளர்ச்சி அடைய வேண்டும், கிராமம் வளர்ந்தால்தான் நகரம் வளர முடியும், நகரம் வளர்ந்தால்தான் நாடு வளர முடியும் என்கிற கருத்தின் அடிப்படையிலேதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினை புரட்சித் தலைவரவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் இங்கே புரட்சித் தலைவரவர்கள் இன்னொரு கருத்தினையும் அவர்கள் முதல்வர் பொறுப்பினை ஏற்கின்ற நேரத்திலே சொன்னார்கள். கிராமப் புறங்களிலே குறிப்பாக தாய்மார்கள் குடிப்பதற்கும் கூட தண்ணீர் இல்லாமல் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய குறையைத்தான் முதலிலே தீர்ப்பேன் என்கிற உறுதியோடுதான் ஆட்சிப் பொறுப்பினை ஏற்று குடிநீர்ப் பிரச்சினையை மையமாக வைத்து அதைத் தீர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் மீண்டும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் ஆளுகின்ற தன்மையினை அதிகாரத்தினை இந்த நாட்டு மக்கள் 5 ஆண்டு காலத்திற்கு ஒரு ஆட்சிக்குக் கொடுந் தாலும் எத்தனை நாளைக்கு, எத்தனை ஆண்டுகளுக்கு ஆளுவோம் என்பது பெரிதல்ல. எத்தனைக் கோடி மக்கள் பயன் பெறுகிறார் கள் என்பதுதான் முக்கியம், என்கிற அடிப்படையில்தான் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்று நடத்தி வருகிறார்கள் என்பதையும் நான் மீண்டும் தெளிவுபடுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பல உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்ன பிறகு கடைசியாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அருமை அண்ணன் அன்பில் அவர்கள் ஒருசில கருத்துக் களை இங்கே எடுத்துச் சொன்னார்கள். நிலச்சீர்திருத்தம், குடிநீர்ப் பிரச்சினைகள், சாலைகள் பற்றிய பிரச்சினைகள் போன்ற இவைகள் அனைத்தையும் ஒருங்கே சேர்த்து அவர்களுக்கே உரிய பாணியில் சில கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அவைகளுக்கு நான் பதில் சொல்ல வேண்டுமென்று சொன்னால்— குறிப்பாக வேலைக்கு உணவு திட்டத்தில் காண்ட்ராக்ட் முறை இருக்கின்றது என்று அவர்கள் கூறினார்கள்—வேலைக்கு உணவுத்





திட்டத்தில் காண்ட்ராக்ட் முறை கூடாது என்பதுதான் இந்த ஆட்சியினுடைய கொள்கை. காண்ட்ராக்ட் முறையிலே அதைக் கொடுக்கக்கூடாது என்றும் ஒப்பந்தக்காரர்களிடம் அது சிக்கி விட்டால் அது மக்களுக்குப் போய்ச் சேராது என்கிற அடிப்படை யிலே தான், காண்ட்ராக்ட் முறை கூடாது என்கிற அடிப்படை யிலே தான் இந்த ''வேலைக்குஉணவுதிட்டத்தை'' இன்று தமிழகத் தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடத்தி வருகின்றது என்பதை நான் பணிவன்போடு அவர் களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், அவர்கள் குறிப்பிட்டுக் காட்டிய அந்த குடிநீர் பிரச்சினைக்கும் கூட அவர்கள் காலத்திலேயே ஒரு முத்தாய்ப்பு அல்லது முற்றுப்புள்ளி வைத்திருக்க முடியும். அந்தப் பிரச்சினை யைத் தீர்க்க அவர்களாலே முடியவில்லை என்று அவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்த குடிநீர்ப் பிரச்சி னையை உடனடியாக இயன்றவரை முடித்துத் தீர்க்கவும் முயற்சி செய்வதாக இந்த நேரத்திலே உறுதி சொல்லக் கடமைப்பட் டிருக்கிறேன்.

அதேபோல், இங்கு தெருவிளக்கு பற்றிய பிரச்சினை பற்றி எடுத்துச் சொன்னார்கள். தெருவிளக்குப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் மின்சார வாரியத்திற்கும் ஊரக வளர்ச்சிக்கும் இடையே பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கிறது. அதை எப்படிச் செய்தால் தெருவிளக்குகள் மீண்டும் அங்கே பட்டொளி வீசி எரியக்கூடிய அளவுக்கு அவைகளை எல்லாம் செய்ய முடியும் என்பதற்காக 23 ஆம் தேதி பேச்சு வார்த்தை நடத்த இருக்கி றோம். ஆகவே தெருவிளக்கு பிரச்சினைக்கு ஒரு முடிவு கட்டுவ தற்கு நாங்களெல்லாம் முன்னோடியாகச் செயல்படுவோம் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, நிர்வாகச்சீர்திருத்தம் என்கிற அடிப்படையிலே அருமை அண்ணன் அவர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் எவ்வளவு தூரம் இந்தத் துறையிலே சீர்திருத்த முடியும் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து ஆலோசித்து செய்வோம் என்ப தையும் நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மேலும், குறிப்பாக 18 வயது அடைந்தவர்களுக்கெல்லாம் வாக்குரிமை கொடுக்கவேண்டும் என்பதற்காக கடந்த வாரத்தில் கடந்த 14 ஆம் தேதி என்று நினைக்கிறேன், அன்று அனைத்துக் கட்சிகளினுடைய தலைவர்களின் கூட்டம் இங்கே நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் பெரும்பான்மையான கட்சிகளுடைய

தலைவர்கள் எல்லாம் 18 வயது அடைந்தவர்களுக்கு வாக்குரிமை கொடுக்கலாம் என்கிற கருத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே 18 வயது வந்தவர்களுக்கெல்லாம் வாக்குரிமை கொடுப்பதற்கான சட்டத்திருத்தம் மசோதா ஒன்று இந்தக் கூட்டத் தொடரிலேயே கொண்டுவரவிருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மேலும், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களைப்பற்றி அவர்கள் கூறியிருக்கிற நேரத்தில் இன்று இருக்கக்கூடிய முறையில், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் வந்து விட்டால் இருக்கக்கூடிய மற்ற தலைவர்கள் எல்லாம் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர முடியாது என்கிற நிலையில் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புவது எல்லாம், பெரும்பான்மையான தலைவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை (நோ-கான்பிடென்ஸ்) கொண்டுவந்து அங்கே இருக்கக்கூடிய தலைவரை அவர்கள் விரும்பினால் எந்தப் பதவியிலிருந்தும் நீக்கமுடியும். அப்படிப்பட்ட அதிகாரம், விதி முறைகள் இருக்கின்றன என்பதை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. அன்பில் தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, இப்போ இருக்கிற விதிமுறைகளின்படி தகுதியின்மை) காரணமாக (டிஸ்-குவாலிபிகேஷன்) என்று சொல்லி நீக்கலாமே தவிர, தேர்ந் தெடுக்கப்பட்டவர்களை நீக்க சட்டத்தில் விதிமுறைகள் இல்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் சரியாக நிர்வாகம் நடத்த முடிய வில்லை தகுதியில்லை என்று காரணம் காட்டி அவர்களை நீக்க லாம். அதுகூட சரியில்லை என்று சொல்வேன். நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து பதவியிலிருந்து நீக்குவதற்குச் சட்டத்தில் விதி முறைகள் இல்லை.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, ஒன்றியங்களின் தலைவர்கள் நோ-கான்பிடென்ஸ், நம்பிக்கை இல்லை என்ற தீர்மானம் கொண்டு வந்து, தகுதி அல்ல என்று சொல்லி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைத்தால் அந்த அடிப்படையில் அவர்களை நீக்கலாம் என்று இருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட அதிகாரம் இருக்கிறது. டிஸ்குவாலிபிகேஷன் என்று சொல்லி தகுதியின்மை காரணமாக எந்த யூனியன் சேர்மேனையும் நீக்கலாம் என்ற விதி முறைகள் இருக்கிறபோது அவர்களை நீக்கவே முடியாது என்று நாம் சொல்வதற்கில்லை.



அடுத்து இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பல்வேறு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துக் கூறி இருக்கிறார்கள். குறிப்பாக இராசரத்தினம், செல்வராசன் போன்றவர்கள் சில கருத்துக்களை எடுத்துச் சொல்லி, அந்த கருத்துக்களுக்கெல்லாம் முடிவு கட்ட வேண்டும் அல்லது முடிவு சொல்ல வேண்டும் என்ற அடிப்படையில் சில காரியங்களை முன்வைத்திருக்கிறார்கள். நான் அவர்களுக்கு குறிப்பாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன் உள்ளாட்சியைப் பொறுத்த வரையில் தனி அலுவலர்கள் பதவிக்காலம் இன்னும் ஒரு ஆண்டு வரையிலும் நீட்டிக்கப்பட்டிருக்கிற சூழ்நிலை இருக்கிறது.

அதேபோல பல்வேறு பகுதிகளில்கூட சாலை வசதிகள் இல்லை சுகாதார நிலைமை சரியான முறையில் இல்லை. தெருவிளக்குகள் சரியாக எரிவதில்லை, குப்பைக் கூளங்கள் அதிகமாகி அவைகள் அள்ளப்படாமல் இருக்கின்ற நிலை இருக்கின்றன என்பவை எல்லாம் எனக்குத் தெரிந்தவைகளே. இவைகளையெல்லாம் எவ்வளவு தூரம், எவ்வளவு சீக்கிரமாக சீர்திருத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரம் சுகாதாரத்தை ஸ்திரப்படுத்தி, தெரு விளக்கு களை ஏற்படுத்தி அதன் மூலம் மக்களுக்கு எவ்வளவு நன்மைகளைச் செய்ய முடியுமோ அவைகளை காலாகாலத்திற்குள் செய் வோம் என்ற உறுதிப்பாட்டினை செல்வராஜ் போன்றவர்களுக்கு எடுத்துச் சொல்ல க் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் சமுதாய வளர்ச்சி என்கிற அடிப்படையில் இங்கே பல்வேறு கருத்துக்களை இம்மாமன்றத்தினுடைய உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக வளர்ச் சிப்பணிகள் வெற்றி பெற ஒட்டுமொத்தமாக மக்களுடைய ஒத் துழைப்பும் இருந்தால்தான் முடியும். இல்லையென்றால் கண்டிப் பாக முடியாது என்பதையும் இம்மாமன்ற உறுப்பினர்கள் ஒத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

அத்தகைய வளர்ச்சியை, வாழ்க்கையின் உயர் நிலையை எய்துவதற்காக மக்களை விழித்தெழச் செய்து, ஊக்குவித்து உழைக்கத் தூண்டும் ஒரு திட்டம்தான் சமுதாய வளர்ச்சித் திட்டம். ஆண்டுகள் உருண்டோடும் போது பலவகைப் பிரிவு பெற்று இயங்கிக் கொண்டிருக்கும் சமுதாய நீரோடைகள் நாட்டு முன்னேற்றம் என்ற ஆற்றில் ஒன்று சேர்ந்து கலக்க இந்த நாட் டின் வளர்ச்சிக்கு அவைகள் நம்மை ஈடுபடுத்துகின்றன. மக்கள் தமக்குரிய ஒன்றை தாமே வகுத்து, தாமே செயல்படுத்தி, அந்த எண்ணத்தை செயலில் காட்டும் முன்னேற்றப் பாதையில்தான் சமுதாய வளர்ச்சி என்ற கலங்கரை விளக்கு எரிந்துக் கொண் டிருக்கிறது. அதேபோல மக்களின் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு ஊர் வளர்ச்சிக்கென அரசு அளித்திருக்கும் முக்கியத்

துவத்திற்கு உதாரணமாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால் இன்று கொடுக்கப்பெற்றிருக்கிற சமுதாய வளர்ச்சியினுடைய புத்தகத்தில் 5 வது பக்கத்தில் எவ்வளவு தூரம் சமுதாய தேவைகளுக்காக இந்த அரசு பாடுபட்டு வந்திருக்கிறது என்பதை நான் கோடிட்டுக் குறிப்பிட்டுக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

[மாலை 5-50]

ஐந்தாவது பக்கத்தில் கடந்த 1975—76—ல் இருந்து 1980—81 வரையில் உள்ள அந்தக் கணக்குகளை உற்றுப் பார்த்தால் தெரியும். எவ்வளவு தூரம் இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னால் இங்கே சமுதாய வளர்ச்சிக்காகப் பாடுபட்டு வருகிறது என்பதையும், எந்த அளவிற்கு நிதி ஒதுக்கித் தந்திருக்கிறது என்பதையும் நான் இங்கே கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1978—79—ல் ரூபாய் 181 கோடி 56 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் 1980-81ல் ரூ. 217 கோடி 5 இலட்சத்து 34 ஆயிரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது இன்றைக்கு. ஆகவே சமுதாய வளர்ச்சிக்காக இந்த அரசு எந்தளவிற்கு பாடுபடுகிறது என்பதையும் தன்னிறைவுத் திட்டங்களை இந்த தமிழகத்தில் பல்வேறு ஒன்றியங்களில் கொண்டு வருவதன் மூலம் அடிப்படை வசதிகள் மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தமிழக முதல்வர் அவர்கள் பாடுபட்டு வருகிறார்கள் என்பதையும் நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த சமுதாயம் வாழ வேண்டும், வளர வேண்டும் என்பதற்காகத்தான் இன்று நிதி நிலை அறிக்கையில் இவ்வளவு தூரம் 217 கோடி ரூபாய் ஒதுக்குகிற அளவிற்கு இந்த சமுதாய வளர்ச்சியில் தமிழக முதல்வர் அவர்கள் அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கிராமங்களில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக உழைப்புக்கு உணவுத் திட்டம், வேலை வாய்ப்பு உறுதித் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், இளைஞர்களுக்கு என்று தனியாக வேலை வாய்ப்புத் திட்டம் இவைகள் எல்லாம் சமுதாய வளர்ச்சிக்குப் பக்கபலமாக இருந்து கொண்டு அந்தக் கடமைகளை ஆற்றிக் கொண்டிருக்கிறது என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உழைப்புக்கு உணவுத் திட்டம் சீரிய முறையில் செம்மையான முறையில் நடை பெற்று வருகிறது என்பது குறித்து இந்த மாமன்ற உறுப்பினர்கள் எல்லாம் பாராட்டினார்கள்.





உண்மையிலேயே இந்த உழைப்புக்கு உணவுத் திட்டத்தை
இன்னும் சிறப்பாக செய்ய வேண்டும் என்பதற்காக இந்த
ஆண்டு ஒரு லட்சம் டன் அரிசி தேவை என்று நாம் மைய
அரசுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இன்று முதல்
கட்டமாக 27,000 டன் அரிசியை அவர்கள் அனுப்பியிருக்கி
றார்கள். கடந்த 1979—80ம் ஆண்டு அவர்கள் கொடுத்த
அரிசியின் கணக்கு 73,000 டன். அதிலே 64,429 டன் அரிசி
இந்த உழைப்பிற்காக உணவுத் திட்டம் மூலம் செலவிடப் பட்
டிருக்கிறது. இப்படி செலவிட்ட காரணத்தினால் பயன் அடைந்
தவர்களின் எண்ணிக்கை ஆண்கள் 18,60,624 கடந்த 1979—80ல்
பயன் அடைந்திருக்கிறார்கள். பெண்கள், 4,55,455 பேர்
கள் பலன் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் கொடுத்த மனித
நாட்கள் 142 லட்சம். 142 லட்சம் மனித நாட்களைக்
கொடுத்து அவர்கள் அதன் மூலம் பல்வேறு திட்டங்களைச்
செயல் படுத்தியிருக்கிறார்கள். அதே போல் வருகிற 1980—81ம்
ஆண்டு ஒரு லட்சம் டன் அரிசி நமக்குக் கிடைத்தால் அதன்
மூலமாக சுமார் 40,000 பேர்களுக்கு உழைப்புக்கு உணவுத்
திட்டம் மூலம் வேலை வாய்ப்பு கொடுக்க முடியும். அதன்
மூலம் 250 லட்சம் மனித நாட்கள் நமக்குக் கிடைக்கும் என்ற
நல்ல சீரிய திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது.
அதன் மூலம் எல்லோருக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கும்
அடிப்படையில் இந்த அரசு பாடுபட்டு வருகிறது என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் என்று செயல் பட்டு
வருகிறது. கடந்த 1979—80 ல் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும்
ஒரு லட்சம் என்ற அளவில் 376 ஒன்றியங்களுக்கு ரூ. 3,76,00,000
செலவிடப் பட்டிருக்கிறது. அதன் மூலம் 1,88,912 பேர்
களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. வருகிற
1980—81ல் பத்து கோடி ரூபாய் இன்று ஒதுக்கப்பட்டிருக்கிறது.
கடந்த ஆண்டு ரூ. 3,76,00,000 ஒதுக்கப் பட்டது, ஆனால்
இந்த ஆண்டு அது பத்து கோடியாக ஆக்கப்பட்டிருக்கிறது.
ஆக, மூன்று மடங்கு அதிகமான நிதி இன்று வேலை வாய்ப்பு
உறுதித் திட்டத்தின் கீழ் இந்த அரசு ஒதுக்கியிருக்கிறது என்
பதையும் அதன் மூலம் எவ்வளவு தூரம் இருக்கக் கூடிய அனை
வருக்கும் வேலை தேடித்தர வேண்டும் உறுதி செய்ய வேண்டும்
என்பதில் மிக முனைப்பாக இருக்கிறது என்பதையும் பணிவுடன்
தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

1980—81 ல் மட்டும் இந்தத் திட்டத்தின் மூலம் ஐந்து
லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு உறுதி அளிக்கப்படும்.
ஆகவே இந்தத் திட்டம் மூலமாக ஐந்து லட்சம் பேர்களுக்கு
வேலை வாய்ப்பு கொடுக்கிற நிலையைக் கண்டு மாண்புமிகு
மன்ற உறுப்பினர்கள் எல்லோரும் சந்தோஷப்படுவார்கள்

என்று நினைக்கிறேன். காரணம், ஒவ்வொருவரும் பேசுகிற
நேரத்தில் பல குறைகளைக் கோடிட்டுக் குறிப்பிட்டுச்
சொன்னார்கள். அந்தக் குறைகள் என்ன என்பது உங்களுக்கு
நன்றாகப் புரியும். அந்தக் குறைகள் இல்லாத அளவிற்குப்
பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக இப்படிப்பட்ட சீரிய
திட்டங்களை இன்று சிறப்பான முறையில் செய்ய வேண்டு
மென்பதற்காக இந்த அரசு அவற்றில் அக்கறை காட்டிக் கொண்
டிருக்கிறது என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

அதே போல் இன்னொரு திட்டம் ; மிகச் சிறந்த திட்டம் ;
புரட்சிகரமான திட்டம் ; பலர் பாராட்டக் கூடிய திட்டம் ;
புரட்சித் தலைவர் அவர்களின் புகழுக்குப் புகழ் சேர்ப்பது
போல், தங்கக் கிரீடத்திற்கு வைரம் வைப்பது போல் இந்த
தன் நிறைவுத் திட்டத்தை 1979 ஆகஸ்ட் முதல் புரட்சித்
தலைவர் அவர்கள் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டத்தை
கடந்த 1-3-1980 முதல் தொடங்கி, அதிகாரிகள் நடத்தி வரு
கிறார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் முதலிலே 69 ஒன்றியங்
கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது ; இப்போது கொஞ்சமாக 100
ஒன்றியங்கள் எடுக்கப்பட இருக்கிறது. ஆகவே, இந்த 169
ஒன்றியங்களிலே தன் நிறைவுத் திட்டத்தின் அடிப்படையிலே,
அடிப்படை வசதிகளான குடிநீர் பிரச்னை, அதே போல் பள்ளிக்
கூடங்கள், இணைப்புச் சாலைகள், சிறு பாசனம், சுகாதாரம்
ஆகியவைகளில் எல்லாம் இங்கே இருக்கக் கூடிய மக்கள் இந்த
தன் நிறைவுத் திட்டத்தின் மூலம் ஏற்படுத்த புரட்சித் தலைவர்
அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக்
கொள்கிறேன். இந்தத் திட்டத்தின் மூலம் வருகின்ற 1981
மார்ச்சு 31 ஆம் தேதிக்குள் 169 ஒன்றியங்களிலே இந்த தன்
நிறைவுத் திட்டத்தின் மூலமாக எல்லோருக்கும் எல்லா வசதி
களும் கிடைக்கின்ற வாய்ப்புகளை நாங்கள் ஏற்படுத்தித் தர
இருக்கிறோம். இந்தத் திட்டத்தை 3, 4 ஆண்டுகளில் மேலும்
பல பகுதிகளாகப் பிரித்து, முதலிலே 69, அடுத்து 100, அதற்கு
அடுத்து 100, அதற்குப் பிறகு 100 என்ற முறையில் ஒவ்வொரு
பகுதியாக பிரிக்கப்பட்டு, இந்த 4 ஆண்டுகளுக்குள் தமிழகம்
முழுவதிலும் இருக்கக் கூடிய 376 ஊராட்சி ஒன்றியங்களிலும்
இந்த தன் நிறைவுத் திட்டத்தின் மூலம் எல்லா வசதிகளையும்
நிறைவேற்ற இருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்
களுக்கு இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட கடமைப் பட்டிருக்
கிறேன்.

அதே போல் இங்கே இருக்கக் கூடிய மாண்புமிகு உறுப்பினர்
கள் தங்கள் ஒவ்வொருவரின் பெயரையும் குறிப்பிட வில்லை
என்பதற்காக கோபித்துக் கொள்ள மாட்டார்கள் என்பது
எனக்குத் தெரியும். 31 பேர்கள் இங்கே பல்வேறு கருத்துக்



களைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த 31 பேர்களின் பெயர்
களை நான் படிப்பதாக இருந்தால், அதுவே 10 நிமிடமாகி
விடும். இங்கே பள்ளிக்கூட கட்டிடம் தேவை, அதுவும் இடி
யாத கட்டிடம் தேவை என்பதை ஒவ்வொரு உறுப்பினர்களும்
கேட்டார்கள். அந்த அடிப்படையிலேதான் புரட்சித் தலைவர்
அவர்கள் ஒரு பெரிய திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.
இந்தத் திட்டத்தின் அடிப்படையிலே செயல்பட்டால், ஒவ்
வொரு ஊரிலும் பள்ளிக்கூட கட்டிடங்கள் அமைக்கப்பட்டு,
பள்ளிக் கூடம் இல்லாத ஊரே இல்லை என்கிற அளவுக்கு,
அந்த நிலையை உருவாக்க வேண்டும் என்பதற்காக திட்டங்கள்
தீட்டப்பட்டிருக்கின்றன.

முன்பெல்லாம் பள்ளிக்கூட கட்டிடத்திற்கு மானியம்
கொடுப்பதென்றால் அதற்கு ஒரு சீலிங் இருந்தது. அந்த
சீலிங் இப்போது உயர்த்தப்பட்டு, முன்பு ஆரம்பப் பள்ளிக்கு
20,000 ரூபாய் என்றிருந்ததை, இன்று ஆரம்பப் பள்ளி கட்டு
வதற்கு ரூ. 40,000 கொடுக்க வேண்டுமென்று புரட்சித் தலைவர்
அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)
ஆகவே, எல்லாக் கிராமங்களிலும் ஆரம்பப் பள்ளிக்கூட கட்டிடங்
கள் கட்டப்பட்டு, பள்ளிக்கூட கட்டிடம் இல்லாத கிராமமே,
ஊரே இல்லை என்ற சூழ்நிலையை உருவாக்குவதற்கு இந்தத்
திட்டம் செயல் படுத்தப்படும் என்பதை நான் பணிவுடன்
தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒரு
ஊராட்சி ஒன்றியத்தை எடுத்துக் கொண்டால் அங்கே பணம்
அதிகம் வரக் கூடியதாகவும், அதே போல் இன்னொரு ஊராட்சி
ஒன்றியத்தை எடுத்துக் கொண்டால், அங்கே பணமே
இல்லாத ஊராட்சி ஒன்றியமாகவும், சம்பளம் கொடுக்க முடி
யாத அளவிலே இருக்கிறது. எனவே, இந்த ஊராட்சி
ஒன்றியங்கள் எல்லாம் 6 பகுதிகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றன
இந்த 6 பகுதிகளுக்கும் அரசு மானியத் தொகை எவ்வளவு
கொடுக்கப்படுகிறது என்பதை உங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள
புத்தகத்திலேயே இருக்கிறது. ஆனால், ஒரு வித்தியாசம்,
இன்று புரட்சித் தலைவர் அவர்கள் இந்த ஊராட்சி ஒன்றியங்
களுக்கு கொடுக்கக் கூடிய மானிய நிதியை அதிகப்படுத்தி,
அதை அரசின் மூலமாக கொடுக்க வேண்டும் என்று நேற்று
ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே முதல்
ஊராட்சி ஒன்றியப் பகுதிகளுக்கெல்லாம் 50 சதவீதம் அந்த
ஊராட்சி ஒன்றியம் தந்தால், அரசாங்கத்தின் மூலம் 50 சதவீதம்
மானியமாகப் பெற்று செயல்பட வேண்டும் என்றிருந்தது.
ஆனால், இப்போது எங்கே பணம் அதிகமாக இருக்கிறதோ,
அந்த ஊராட்சி மன்றங்கள் 50 சதவீதம் கொடுத்தால், அதே
நேரத்தில் அரசு தரப்பில் இப்போது குறைத்து 40 சதவீதம்

என்று போட்டிருக்கிறோம். ஆனால், அதே நேரத்தில் கடைசி
5, 6 என்கிறதில், பணமே இல்லாத ஊராட்சி ஒன்றியங்கள்
இருக்கின்றன ; சம்பளமே கொடுக்க முடியாத ஊராட்சி ஒன்றி
யங்கள் இருக்கின்றன. அவைகளுக்கு இந்த அரசு மானியத்தை
அதிகப்படுத்தி இருக்கிறது. முதலிலே எல்லாம் 75 சதவீதம்
மானியமாக கொடுத்துக் கொண்டிருந்தது, இப்போது 85
சதவீதம் என்று அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. அதே போல்,
80 சதவீதம் கொடுத்துக் கொண்டு வந்த ஊராட்சி ஒன்றியங்
களுக்கு இனிமேல் 95 சதவீதம் மானியம் அரசு கொடுக்கும்.
ஆகவே, இந்தத் திட்டத்தின் மூலமாக ஊராட்சி ஒன்றியங்களின்
நிதி வசதியை அதிகப்படுத்தி, அதன் மூலம் எல்லோருக்கும்
சம்பளம் கொடுக்கும் ஒரு நல்ல திட்டத்தை உருவாக்கி, அதை
செயல்படுத்துகின்ற அளவுக்கு சூழ்நிலையை உருவாக்க பாடு
படுவோம் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

[மாலை 6-00]

அதற்கு அடுத்தாற்போல் புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்
கனவே இந்த மாமன்றத்திலும், வெளியிலும் எடுத்துச் சொன்
னார்கள். தாய்மார்களுக்காக, குறிப்பாக கிராமந்தோறும்
கழிப்பிடம் தேவை என்பதைக் கோடிட்டுக் குறிப்பிட்டுச் சொன்
னார்கள். அதற்கேற்ப இந்த ஆண்டில் ஒவ்வொரு கிராமத்திலும்
தாய்மார்களுக்கென்று ஒரு கழிப்பிடம் கட்டப்படும். இனி ஒவ்
வொரு கிராமத்திலும் ஒரு கழிப்பிடம் தாய்மார்களுக்காக இருக்
கும் என்பதை இங்கிருக்கக் கூடிய அன்புச் சகோதரி பொன்னம்
மாள் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்
கின்றேன். அவர்களும் இதைக் கோடிட்டுக் காட்டினார்கள்.
ஆகவே, தாய்மார்களுக்குக் கழிப்பிடம் தேவை என்ற உங்க
ளுடைய கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது என்ப
தைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை மருத்துவர்களை எல்
லாம் விரிவாக்கப் பணியில் ஈடுபடுத்த வேண்டுமென்று டாக்டர்
ராமலிங்கம் அவர்கள் கேட்டார்கள். அது ஏற்கெனவே அரசின்
பரிசீலனையில் இருந்து வருகிறது என்பதைத் அவர்களுக்குத்
தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நகராட்சிகள் இருக்கின்றன. நிதிநிலை சரியில்லாத நக
ராட்சிகளும், நிதிநிலை இருந்தும் செயல்படுத்த முடியாத திட்
டங்களைக் கொண்ட நகராட்சிகளும் இருக்கின்றன. அவற்றை
யெல்லாம் சீர்படுத்தி, செம்மைப்படுத்த வேண்டுமென்ற
நோக்கத்துடன், திட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமென்ற
நோக்கத்துடன் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தைக் கொண்டு
வந்திருக்கிறோம்.





அதன் மூலம் சென்னையிலும் கூட பெருநகர வளர்ச்சிக்
குழுமம் ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் துவங்கி நடந்து கொண்டு
இருக்கின்றன. இங்கு இருக்கக்கூடிய மாமன்ற உறுப்பினர்
பாலன் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். எம். எம். டி. ஏ.
திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன் மூலம் பல்வேறு
திட்டங்கள் வட்டார வளர்ச்சித் திட்டம் என்ற முறையில் மணலி
புறநகர்த் திட்டம், மறைமலை நகர்த் திட்டம், விரிவான
வளர்ச்சித் திட்டம், கொத்தவால்சாவடியை கோயம்பேட்டுக்கு
மாற்றுதல், வெளியூர் பேருந்துகளுக்கு நிலையங்கள், சுமை
வாகனம் ஏற்படுத்துதல் போன்ற திட்டங்களை எல்லாம்
கொடுத்திருக்கிறோம். இந்தத் திட்டங்களின் அடிப்படையில்
பணிகள் துவங்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன.
இன்னும் கூட இங்கிருக்கக்கூடிய சென்னைக்கு மூன்று பகுகளில்
வரக்கூடிய வாகனங்களை எல்லாம் நகர்ப்புறப் பகுதிக்குள் வரா
மல் வெளியே நிறுத்தி எங்கெங்கு செல்லவேண்டுமென்று சொல்லு
வதற்குரிய வழிவகைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.
நகராட்சிகளை எடுத்துக் கொண்டால் 107 நகராட்சிகள் 8 நகரி
யக் குழுக்களும் சேர்ந்து அடங்கியிருக்கின்றன. 1—4—1980 ஆம்
தேதியிலிருந்து சீர்காழி நகராட்சி மூன்றாம் நிலையிலிருந்து
இரண்டாம் நிலைக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதை சீர்காழி
தோழர் அவர்களுக்கு, மாமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரி
வித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நகராட்சித் தேர்தல்களை நடத்த வேண்டுமென்று
மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கோரிக்கை விட்டார்கள்
நகராட்சித் தேர்தலைத் பொறுத்த அளவில் கூறுவதை
யில், 1—7—1976 முதல் கோவை தவிர எல்லா நகராட்சி
களுக்கும் தனி அதிகாரிகள் உள்ளனர். அவர்கள் பதவிக் காலம்
30—9—1980 வரை உள்ளது. கோவை 1—7—1975-ல் இருந்து
தனி அதிகாரி நிர்வாகத்தில் இருந்து கொண்டிருக்கிறது. கோவை
மாநகராட்சியான பிறகு தேர்தல் நடைபெற இருக்கிறது
மாநகராட்சித் தேர்தல்கள், கோவை மாநகராட்சியானவுடன்
மற்ற எல்லா நகராட்சிகளுக்கும் சேர்ந்து தேர்தல் நடத்தப்படும்
என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

கோவை மாநகராட்சியாக்கப்பட வேண்டுமென்பதற்காக
கடிதப் போக்குவரத்து நடந்து கொண்டிருக்கின்றது. குடியரசுத்
தலைவர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு சீக்கிரமாகக்
கோவை மாநகராட்சி ஆக்கப்பட வேண்டுமென்று கேட்டிருக்
றோம். கூடிய சீக்கிரத்தில் குடியரசுத் தலைவர் ஆணை கிடைக்கு
மென்று நம்புகிறோம். அது கிடைத்தவுடன் மாநகராட்சித்
தேர்தல்களுக்கான காலம், நேரம் குறிப்பிடப்பட்டு அறிக்கைகள்
வெளியிடப்படும் என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

[திரு. ப. குழந்தைவேலு] [1980 ஜுலை 21

முக்கியமான பிரச்சனையாக வயது பிரச்சினை பற்றி அருமை அண்ணன் அன்பில் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். மற்றும் பல்வேறு மாமன்ற உறுப்பினர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இது ஏற்கப்பட்ட ஒன்று. அனைத்துக் கட்சித் தோழர்களும், தலைவர்களும் ஏற்றுக்கொண்ட ஒன்று. 21 வயது என்று இருப்பதை 18 வயதாகக் குறைத்துக் கொள்ளலாம் என்பதை அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலே பெரும்பான்மையான கட்சித் தலைவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற காரணத்தால் அந்த வயதை 21-ல் இருந்து 18 ஆகக் குறைக்க நடவடிக்கை எடுத்து இந்த கூட்டத் தொடர் முடிவடைவதற்கு முன்பே சட்டத் திருத்தம் கொண்டு வர இருக்கிறோம். அப்படி 18 வயதாகக் குறைக்கின்ற நேரத்தில் வாக்காளர் பட்டியலைத் தயார் செய்வது என்றால் நான்கு மாதங்கள் பிடிக்கும். நான்கு மாத காலத்தில் வாக்காளர் பட்டியலை தயாரித்து அதற்குப் பின்னால் தேர்தலுக்கு அறிவிப்பு கொடுக்க இரண்டு மாத காலம் ஆகும். ஆறு மாத காலத்திற்குள்ளாக தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். அப்படிப்பட்ட நிலையில் இந்த அரசு உடனடியாக தேர்தல்களை நடத்த வேண்டுமென்ற எண்ணத்துடன்தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல் நகராட்சிகளைப் பொறுத்த அளவிலே நவீன கழிப்பிடங்கள் கட்டப்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் யோசனைகளைத் தெரிவித்தார்கள். இன்னும் சிறப்பாகச் சொல்லவேண்டுமென்றால், இந்த மாமன்றத்திலே அதுபற்றிய கேள்வி வந்தபோது அந்தக் கழிப்பிடங்களிலே எல்லாம் இசையை வைத்துக் கேட்கலாம் என்று பலர் யோசனை தெரிவித்தார்கள். இன்னும் சில இடங்களிலே, எங்கெங்கு குத்தகைக்கு விடப்பட்டதோ அங்கே எல்லாம் வருவோர் போவோரை எல்லாம் ஈர்க்கின்ற வகையில் பணத்தை அதிகமாக வசூல் செய்கிற வகையில் அவர்களை இசையினை வைத்து அந்தக் கழிப்பிடங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்ற யோசனையையும் எடுத்துச் சொன்னார்கள். கழிப்பிடங்களைப் பொறுத்தவரையில் பே அண்ட் யூஸ் என்பனவற்றை எவ்வளவு அதிகமாகக் கட்டமுடியுமோ அவ்வளவு அதிகமாகக்கட்டுவதற்கு அரசிலிருந்து நிதியைத் தாராளமாக கொடுப்பதற்கு நாம் தயாராக இருக்கிறோம். ஆகவே நகராட்சி ஆணையர்கள் அவர்கள் பே அண்ட் யூஸ் கழிப்பிடங்களை எவ்வளவு கட்ட முடியுமோ அவ்வளவு கட்டிக் கொள்ளலாம் என்பதைக் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த ஆண்டிலே 92 பே அண்ட் யூஸ் கழிப்பிடங்கள் கட்டப்பட்டன. இந்த ஆண்டிலே 200 கழிப்பிடங்கள் கட்டப்படுவதற்கு வழிவகைகள் செய்யப்படுகின்றன.



1980 ஜுலை 21] [திரு. ப. குழந்தைவேலு]

ஊராட்சியாக இருந்தாலும், ஊராட்சி ஒன்றியமாக இருந்தாலும் நகராட்சியாக இருந்தாலும் இவைகளுக்கு எல்லாம் ஏற்கெனவே மக்கள் குழுக்கள் போடப்பட்டிருக்கின்றன. அந்த மக்கள் குழுக்கள் 112 நாட்களாக அதுவும் பிப்ரவரி 17-க்குப் பின்னாலே கடந்த மே மாதம் கடைசி வரையிலும் வேலை செய்யவில்லை, மக்கள் குழுவைக் கூட்டவில்லை, மக்கள் மாமன்றத்தைக் கூட்டி அவர்களுடைய ஆலோசனைகளை யோசனைகளைப் பெறவில்லை என்ற கருத்தை எல்லோரும் சொன்னார்கள். ஆகவே மக்கள் குழுவுக்கு அதிகாரம் தேவை என்று பலர் கேட்டார்கள். நான் அவர்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். மக்கள் குழு அதிகாரப் பற்றற்ற குழு. ஆகவே, அதிகாரப் பற்றற்ற குழுவுக்கு அதிகாரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டால் கண்டிப்பாக சட்ட விதி முறைகளிலே இடம் இல்லை. ஆனாலும், ஒரு சில யோசனைகளை மட்டும் நான் இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். ஏற்கெனவே இருக்கின்ற மக்கள் குழுக்களின் ஆலோசனைப் பணிகள் தொடர்ந்து நடைபெறும். ஆளுநர் ஆட்சி காலத்திலே மக்கள் குழு செயல்படாததால் அடிப்படை வசதிகள் சரிவர நடைபெறவில்லை. உள்ளாட்சித் தேர்தல்கள் நடை பெற்று முடியும் வரையில் மக்கள் குழுவின் கூட்டம் மாதம் ஒரு முறை நடைபெறும். மக்கள் குழு அதிகாரப்பற்றற்ற குழு கூறும் ஆலோசனைகளின் அடிப்படையிலே நிறைவேற்றக் கூடிய திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். நிறைவேறாத திட்டங்கள் இருக்குமாயின் அதுபற்றிய திட்டங்கள் அக் குழுவுக்கு அந்தக் கூட்டம் கூடுவதற்கு முன்பாகவே மக்கள் குழுவினுடைய உறுப் பினர்களுக்கு தெரிவித்தாக வேண்டும். ஆகவே இந்த அடிப் படையில் நீங்கள் கூறக்கூடிய ஆலோசனைகள் ஏற்கப்பட்டு இருக்கிறதா இல்லையா என்பதை ஒவ்வொரு கூட்டத்திற்கும் நீங்கள் செல்கின்ற நேரத்திலே கண்டிப்பாக கொடுக்கவேண்டும். ஆகவே, அங்கே இருக்கின்ற அதிகாரிகளை வினவி, ஏன் இந்தத் திட்டங்களை நிறைவேற்றவில்லை என்ன காரணம் என்பது எல்லாம் உறுப்பினர்களுக்குப் புலப்படும் என்பதனை மட்டும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

பல நகராட்சிகள் வருமானம் இல்லாத நகராட்சிகளாக இருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் தமிழகத்திலே முதன்முதலாக ஏற்பட்ட நகராட்சி என்று சொல்லப்படுகிற வாலாஜா நகராட்சி கூட இன்னும் வருமானம் இல்லாத நகராட்சியாக இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அந்த வாலாஜா போன்ற நகராட்சிகளுக்கு வருமானத்தை அதிகரிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு புதிய திட்டங்களை புரட்சி தலைவர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்த திட்டங்களின் அடிப்படையிலே அந்த நகராட்சிகள் செயல்பட்டால் வருமானத்தை அதிகரிக்க முடியும். குறிப்பாக நகராட்சிகளின் வருமானத்தை உயர்த்துவதற்கு நாடகக் கொட்டகைகளை

நகராட்சிகள் மூலமாக ஏற்படுத்தலாம். நாடகக் கொட்டகைகள் என்று சொல்கின்ற நேரத்திலே சமுதாயக் கூடங்கள் என்று சொல்லப்படுகிற கூடங்களைக் கட்டி சமுதாயக் கூடங்களின் வழியாக நாடகங்களை நடத்தி அதன் மூலமாக தங்களுடைய வருமானத்தை பெருக்கிக் கொள்ளலாம். அதே போல் சினிமா திரையரங்குகளை நாம் கட்டி நகராட்சிகள் மூலமாக நடத்தி வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளலாம். இவைகளை எல்லாம் இந்த அரசின் மூலமாக அதற்கு வேண்டிய நிதி உதவிகளை தருவதற்கும் அதன் மூலமாக வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்கும் நகராட்சிகளுக்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாடகத் துறையைப் பொறுத்தவரையில் புத்துயிர் இல்லாமல் புனர்வாழ்வு இல்லாமல் இருக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. நாடகத்தையே யாரும் பார்க்கப்போவதில்லையோ என்ற ஒரு அய்யப்பாடு இருக்கிறது. ஆனால் நாடகத் துறை வளர்ந்தாக வேண்டும் என்ற அடிப்படையில் நாடகக் கொட்டகைகள் ஆங்காங்கே கட்டப்படுவதற்கு உண்டான திட்டங்கள் திட்டப்பட்டு நகராட்சிகள் செயல்படுத்த இருக்கின்றன என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக் சொள்கிறேன்.

எல்லா நகராட்சிகளிலும் விவசாய வரி என்ற ஒன்று வசூலிக்கப்படுகிறது. விவசாய வரி என்று வசூலிக்கிறார்களே தவிர அது எவ்வளவு வசூலாகிறது அதற்கு ஆகிற செலவு என்ன என்ற கணக்கை நாம் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பின்னாலேதான் நாம் பார்த்திருக்கிறோம்.

குறிப்பாக சொன்னால் ஒரு நகராட்சியை எடுத்துக்கொண்டால் ஒரு வருடத்திற்கு 1,500 ரூபாய் வருமானம் வருகிறது என்றால் வசூல் செய்யக்கூடிய ஆட்களுக்குப் போடக்கூடிய சம்பளம் 3 ஆயிரத்திற்கு மேல் போகிறது. ஆகவே, 3,000 ரூபாய் செலவழித்து 1,500 ரூபாயை விவசாய வரி என்று வசூலிப்பதைக் காட்டிலும் அந்த விவசாய வரி இந்த ஆண்டிலேயிருந்து ரத்து செய்யப்படுகிறது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

[மாலை 6-10]

மாநகராட்சித் தேர்தல்கள் பற்றி ஏற்கெனவே நான் உங்களுக்குக் கோடிட்டு, குறிப்பிட்டுச் சொன்னேன். ஆகவே, மாநகராட்சி, நகராட்சி இவைகளுக்குள்ள நிலைகளையெல்லாம் பல்வேறு உறுப்பினர்கள் எடுத்துப் பேசியிருக்கிறார்கள். ஆகவே, சமுதாய வளர்ச்சி, ஊரக வளர்ச்சி ஆகிய இந்த அடிப்படையிலே பல்வேறு கருத்துக்களைச் சொன்ன அருமை நண்பர்களுக்கு நான்





பணிவோடு தெரிவித்துக்கொள்வது, இந்தக் கருத்துக்களையெல்லாம் நான் மனதிலே கொண்டு, அதே நேரத்தில் குறித்து வைத்துக்கொண்டு இருக்கிறேன். ஒரு சிலருக்கு — பல்வேறு கருத்துக்களைச் சொன்னவர்களுக்கு, என்னைப்பற்றிச் சொல்லவில்லையே, என் கருத்துக்களுக்கு அவர் பதில் அளிக்கவில்லையே என்கின்ற ஐயப்பாடு, சந்தேகம் இருக்கலாம். அவைகளையெல்லாம் பெரிதுபடுத்தாமல், கண்டிப்பாக இவைகளையெல்லாம் நாங்கள் கவனத்தில் எடுத்துக்கொண்டிருக்கிறோம், கவனத்திலே வைத்துக் கொண்டிருக்கிறோம், உடனடியாகச் செயல்படுத்துவோம் என்ற எண்ணத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறை, சாலைகள் போக்குவரத்தைப்பற்றி ஒருசில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சாலைகள் போக்குவரத்தைப்பற்றி, அதிலும் குறிப்பாக நெடுஞ்சாலைகளைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்றால் இங்கே நெடுஞ்சாலைகள் மூலம் இருக்கிற சாலைகள் ஏறத்தாழ 33,468 கிலோ மீட்டர்கள் நெடுஞ்சாலைகளின் மூலமாக, 'ஸ்டேட் ஹைவேஸ்', 'ஸ்டேட் ரோட்ஸ்' பிரதான மாவட்ட சாலைகள் மற்றும் பிற மாவட்ட சாலைகள் என்று இருக்கக்கூடிய சாலைகள் இருக்கின்றன.

அதே நேரத்தில் பஞ்சாயத்துக்களின் மூலமாக நிர்வகிக்க கூடிய சாலைகளின் நீளம் 58,117 கிலோ மீட்டர்கள் பஞ்சாயத்துக்களின் மூலமாக இருக்கக்கூடிய சாலைகளின் நீளம். ஆகவே, இந்தச் சாலைகளைப் பராமரிப்பதற்குப் போதிய நிதிவசதி ஒவ்வொரு ஆண்டும் கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காகத்தான் புதிய சாலைகளை அமைக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

அதேபோல் தேசிய நெடுஞ்சாலைகளை மீண்டும் அதிகப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு இருக்கிறது. அதற்காகத்தான் 'கிழக்கு கடற்கரை ஓரச்சாலை', அதாவது, 'ஈஸ்ட் கோஸ்ட் ரோடு' என்று சொல்லக்கூடிய, சென்னையிலிருந்து கன்னியாகுமரியை இணைக்கின்ற சாலை ஏறத்தாழ 773·20 கிலோ மீட்டர்கள் இருக்கக்கூடிய அந்தச் சாலை, அந்தச் சாலையை உடனடியாக மைய அரசு அங்கீகாரம் அளித்துக் கொடுக்க வேண்டும்.; அதற்கு வேண்டிய நிதி உதவிகளைச் செய்ய வேண்டுமென்று நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். மைய அரசு உடனடியாகக் கொடுக்கும் என்று நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் நான் தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில், இங்கே இருக்கக்கூடிய மாமன்ற உறுப்பினர்கள் இணைப்புச் சாலைகளைப்பற்றி அதிகமாகச் சொல்லியிருக்கின்றார்கள். இணைப்புச் சாலைகள், எங்கெங்கு பாலங்கள் போடப்பட்டிருந்தாலும் அங்கே இணைப்புச் சாலைகள் இல்லாத

நிலைமைகள் இருக்கின்றன என்பதனை எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். ஆகவே, இணைப்புச் சாலைகளை இந்த ஆண்டு போடுவதற்கும், அதைச் செப்பனிடுவதற்கும் உரிய நடவடிக்கை கள் எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் மீண்டும் தெரி வித்துக்கொள்கிறேன்.

மேலும் பல பாலங்கள் கட்டப்படாமல் இருக்கின்ற சூழ்நிலை களை எடுத்துச் சொன்னீர்கள். அந்தப் பாலங்கள் கட்டப்படாத தற்கு முக்கிய காரணமெல்லாம் அங்கிருக்கக்கூடிய ஒப்பந்தக் காரர்கள் தங்களுக்குப் பணம் கட்டுப்படியாகவில்லை என்கின்ற காரணத்திற்காக, 'எஸ்கலேஷன் சார்ஜஸ்' அதிகமாக இருக்கிறது, விலைவாசிகளுக்கேற்றவாறு அதிகரித்துக்கொடுக்க வேண்டு மென்று கேட்கிறார்கள். ஆனால் சட்டத்தின் அடிப்படையிலே எப்பொழுது ஒரு காண்ட்ராக்ட் முடிவடைந்ததோ, ஒப்பந்தம் முடிவடைந்ததோ, அந்த ஒப்பந்தத்திற்குக் கட்டுப்பட்டுத் தான் வேலைகளைச் செய்தாக வேண்டும். அப்படிக் கட்டுப் படவில்லை அல்லது கட்டுப்படியாக வில்லை என்று சொன்னால் அவர்கள் "ஆர்பிட்ரேஷன் செல்" என்று சொல்லக்கூடிய "நடுவர் தீர்ப்புக்கு", "நடுவர் ஆய்வுக்குத்தான்" செல்ல வேண்டும். அவர்கள் நடுவர் ஆய்வுக்குச் செல்வதும் இல்லை; அதேநேரத்தில் பாலத்தையும் கட்டி முடிப்பது இல்லை. ஆகவே தான் இப்படிப்பட்ட நிலைமையில் அந்தப் பாலங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. அந்தப் பாலங்களையெல்லாம் உடனடி யாகக் கட்டி முடிப்பதற்கு இந்த அரசு முனைப்பாக செயல்களை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதையும், சீக்கிரம் அவைகளை முடித்துத் தருவோம் என்பதையும் மீண்டும் நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பல்வேறு சாலைகளில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படு கின்றன. அந்த விபத்துக்கள் ஏற்படுவதற்குக் காரணம், வண்டி வாகனங்கள் செல்லுகின்றநேரத்தில்—அதுவும் இரவு நேரங்களில் அந்த வண்டியின் பின்னால் ஒரு 'ரெட் லைட்', — சிகப்பு விளக்கு இல்லாத காரணத்தினால், போகின்றவர்கள் வேகமாக போவதாலும், வண்டி போகிறவதா இல்லையா என்பது பக்கத் திலே வருகின்ற நேரத்திலே தெரிவதாலும், அந்த ரெட் லைட் இல்லாத காரணத்தினால் விபத்திற்குள்ளாகி பலர் மாண்டுவிடுவது மான பல நிலைமைகள் ஏற்படுகின்றன. அவைகளையெல்லாம் தவிர்ப்பதற்காக, "கேரக்ஸ்ரெப்ளெக்டர்" என்று சொல்லக்கூடிய அந்த சிகப்பு விளக்குகளை இங்கே இலவசமாக மாட்டு வண்டி களுக்கு நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக இந்த ஆண்டிலே யிருந்து நாம் கொடுக்க இருக்கிறோம் என்பதனைப் பெருமை யோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு "கோரக்ஸ் ரெப்ளெக்டர்" என்பது, ஏறத்தாழ ஐந்து ரூபாய் பெறும். ஆகவே, பல சாலைகளில், அங்கே இருக்கக் கூடியவர் களுக்கு அடையாளம் காட்டுவதற்காக பாலம் இருக்கிறது, குழி இருக்கிறது என்று காட்டுவதற்காக இந்த "கேரக்ஸ்ரெப்ளெக்டர்" களை வைத்திருக்கிறோம்.



ஆனால், சாலைகளிலே போகின்றவர்கள், வருகின்றவர்கள், அந்த 'ரிஃப்ளெக்டரை' உடைத்து எடுத்துவிடுகின்றார்கள். அதன் மூலமாக நாம் என்ன பலனை எதிர்பார்க்கின்றோமோ, அந்தப் பலனை நன்மையும் கிடைக்காமல் விபத்துக்குள்ளாகிற சூழ்நிலை ஏற்படுகிறது. அதற்குக் காரணங்கள் எல்லாம், வண்டி களுக்கு வாங்கவேண்டுமென்றால் ரூ. 5 கொடுத்து வாங்க வேண்டும். அப்படி கொடுத்து வாங்குவதில்லை. ஆகவேதான், அந்த ரிஃப்லெக்டர்களை ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும், ஒவ்வொரு ஊராட்சியிலும், எங்கெங்கு அவர்கள் லைசன்ஸ் பெறு கிறார்களோ. அந்த இடங்களில் லைசன்ஸ் பெறுகின்ற நேரத்தில், நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக, அவர்களுக்கு இலவச மாக அது கொடுக்கப்படும். ஆகவே, அதன் மூலமாக, இனி ஆபத்துக்களை, விபத்துக்களைத் தடுக்கின்ற வழிவகைகளைச் செய்ய முடியும் என்பதை இந்த நேரத்தில் எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பாம்பன் பாலத்தைப் பற்றி இங்கே அருமை நண்பர்கள் எடுத்துச் சொன்னார்கள். பாம்பன் பாலம் வேலை ஒப்பந்தக் காரரின் கோரிக்கையின் காரணமாக, சமீபத்தில்ஏற்பட்ட புயலின் காரணமாக அதுவும் நின்றிருக்கிறது. ஆகவே, அதையும் அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொண்டு, இந்த 4 மானியக் கோரிக்கைகளின் மீதும் நீங்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லி யிருக்கிற அடிப்படையில் இந்த அரசு செயல்படும் என்பதனை சொல்லி, 'புதியதோர் உலகம் செய்வோம் கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்.' என்று இந்த நேரத்தில் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு தன்னிறைவுத் திட்டத் தின் மூலமாக, தன்னிறைவைத் தமிழகத்தில் ஏற்படுத்தி எல்லோருக்கும் எல்லாம் என்ற நிலையினைக் கண்டிப்பாக ஏற்படுத்துவோம் என்று தெரிவித்து, வாய்ப்பளித்த உங்களுக் கெல்லாம் நன்றியினைக் கூறி, அதே நேரத்தில், இங்கே மானியக் கோரிக்கைகளின்மீது வெட்டுப் பிரேரணைகளை நீங்கள் கொடுத் திருக்கிறீர்கள். அந்த வெட்டுப் பிரேரணைகளையெல்லாம் தயவு செய்து நீங்கள் வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று உங்களையெல்லாம் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள், கழிவிடங்கள் ஏராள மாகக் கட்டப்படும் என்று சொன்னார்கள். சென்னையைப் பொறுத்தவரையிலே அப்படிப்பட்ட கழிவிடங்கள் கட்டப்பட் டிருக்கின்றன. அவைகள் எல்லாம், எந்தவிதமான சுத்தமும் செய்யப்படாமல் மிகவும் மோசமான நிலையிலே இருக்கின்றன. அப்படித்தான் கிராமங்களிலே கட்டப்படுகிற கழிவிடங்களும் இருக்குமா? அவைகளைச் சுத்தம் செய்வதற்குத் தேவை யான ஆட்கள் நியமிக்கப்படுவார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவரவர்களே, நான் ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். 18 வயதானவர்களுக்கு வாக்குரிமை வழங்குவதாகச் சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். அதைப் போல், பெண்களுக்கு 20 சதவீதம் ஒதுக்கீடு ஊராட்சி ஒன்றியத் தேர்தல்களில் தரப்படும் என்று சென்ற காலங்களில் பேசப்பட்டதே, அதைபோல், அரிசனங்களுக்குத் தனித் தொகுதிகள் ஊராட்சி ஒன்றியங்களில் ஒதுக்கித் தருவதாகச் சொல்லப்பட்டதே அதைப் பற்றி விளக்குவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, விரைவிலே தேர்தல் நடத்த வேண்டுமென்கிற நோக்கம் இந்த அரசுக்கு இருக்கிற காரணத்தால், அந்தத் திட்டங்களைப் பரிசீலித்து நிறைவேற்றுவதற்குக் காலதாமதம் ஆகும். ஆகவே, இந்த முறை, இப்பொழுது, அமுல்படுத்த முடியாத நிலையில் இருக்கிறோம் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பு. கோ. ஆரூர் ஜெகதீசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நகராட்சிகள் சினிமாக் கொட்டகைகள் கட்டுவதற்கு அரசாங்கம் தேவையான அளவிற்கு மானியத்தோடு கடன் உதவி அளிக்குமா என்பதையும் 1958 ஆம் ஆண்டு பஞ்சாயத்து யூனியன் சட்டத்தைத் திருத்தி ஒழுங்குபடுத்தி, புதுச் சட்டத்தைக் கொண்டு வர உத்தேசம் இருக்கிறதா என்பதைப் பற்றியும் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுதே கொட்டகைகள் கட்டுவதற்கு மானியங்கள் தரப்படுகின்றன. அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அது தனியாருக்குக் கொடுக்கப்படுகிறது. அதை நகரசபைகள் எதிர்பார்ப்பது நியாயமாக இருக்காது. இந்தச் சட்டத் திருத்தத்தைப் பற்றி நிச்சயமாக இந்த அரசு பரிசீலனை செய்யும்.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் தன்னுடைய பதில் உரையில் கிராமங்களுக்கு ஒவ்வொரு கழிப்பிடம், குறிப்பாக பெண்களுக்குக் கட்டித் தரப்படும் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். தற்போதைய சமுதாய சூழ்நிலையில் ஒவ்வொரு கிராமமும் ஜாதி வாரியாக, அல்லது தெரு வாரியாகப் பிரித்து வைக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, தாழ்த்தப்பட்டோர் தெருக்கள் என்று ஊருக்கு அப்பாலே கூட, 2 பர்லாங், 3 பர்லாங்குக்கு அப்பாலேகூட இருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட இடத்தில்





அந்தக் கழிவறையை கட்டினால் அது எப்படி சகல பகுதி மக்களுக்கும் பயன்படும் என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, அண்ணன் பாலன் அவர்கள் சொன்னதைப் போல் இப்பொழுதே கூட சில இடங்களிலே இருக்கிற, பழைய காலத்திய கழிப்பிடங்களில், சுற்றுச் சுவர் மட்டும் கட்டப்பட்டிருக்கும். ஆகையினாலே ஒரு முறை பெண்கள் அல்லது யாராவது போய் விட்டு வந்தால், பிறகு யாருமே போக முடியாது. அப்படியே அசுத்தமாக இருக்கும். ஆகவே, புதிதாக, அமைக்கின்ற கழிப்பிடங்களை, அல்ட்ரா மாடர்னாக —ப்ளஷ் அவுட் லெட்ரின் மாதிரி இருக்குமா என்பதை அறிவிக்குமாறு அருள்கூர்ந்து வேண்டுகிறேன்.

[மாலை 6-20]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்தவரையில், காலனிக்காரர்களுக்கு ஒரு எண்ணத்தோடு செயல்படுவது கிராமங்களுக்கு தனியாக செயல்படுவது என்று பிரிக்கப்பட்டிருக்கிற நிலையிலே செயல்படவில்லை. பொதுத் தன்மையோடுதான் நாங்கள் திட்டங்களை நிறைவேற்றுகிறோம்.

அதோடு புதிதாகக் கட்டப்படுகிற கழிப்பிடங்கள் நாகரிக முறையோடு கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, கிராமங்களிலே இருக்கிற மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி, தரைத் தொட்டி போன்றவைகள் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் இருந்தபோது நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வந்தன. ஆனால் சமீபத்தில் வடார்க்காடு மாவட்டத்தில் அந்தத் தொட்டிகள் எல்லாம் குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் சரியாக செயல்படவில்லை. அவைகளை மாற்றி மீண்டும் ஊராட்சி ஒன்றியங்களிலே பராமரிக்கும் ஏற்பாடுகளைச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அது பற்றி அரசு பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

1980 ஜுலை 21]

மானியக் கோரிக்கை எண். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.

திரு. ரா. கிருஷ்ணன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றதாக கருதப்பெற்றது.

திரு. கா. நல்லப்பன் திருமதி எ. எஸ். பொன்னம்மாள் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ரூ. 67,74,30,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

மானியக் கோரிக்கை எண் 34—நகர் பகுதி வளர்ச்சி.

திருவாளர்கள் சு. பாலன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியவர்களின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின் கீழ் ரூ. 11,81,68,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மானியக் கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும்.

திருவாளர்கள் என். கிட்டப்பா, கு. ரமணி ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப்பெற்றுக்கொள்ளப்பெற்றனவாக கருதப் பெற்றன.



1980 ஜுலை 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 50,62,33,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மானியக் கோரிக்கை எண். 52—சாலைகள்பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.

திருவாளர்கள் சு. பாலன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியவர்களின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண் 52—சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 11,54,41,000-க்கு மேற்படாத தொகை வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (22-7-1980) காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை மாலை 6-25 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

50. தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 12.1.1980-ஆம் தேதியிட்டப்பெற்ற 23-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு- (தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

51. சில பகுதிகளை ஆட்சி வரம்பாகக் கொண்ட தீர்ப்பாயங்களை அமைப்பது குறித்து, வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 29.4.1980-ஆம் தேதியிடப்பெற்ற 30903/VIII-2/79-15-ஆம் எண் கடிதத்தில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு, 1963 ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/1963) 73 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

52. வீட்டு வசதித் துறையில் 3.10.1972-ஆம் தேதியன்று வெளியான 27.19.1972-ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம்-II, பக்கங்கள் 1 68 ல் (ஆங்கிலத்தில்) வெளியான எஸ். ஆர். ஓ. எண். ஏ. 100/72 ஆம் எண் அறிவிப்பில் கண்ட தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு குடிசைமாற்று வாரியக் கடைநிலைப் பணி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வீட்டு வசதி-நகர்ப்பகுதி மேம்பாட்டுத் துறையின் 26.11.1979-ஆம் தேதியிடப்பெற்ற 2123-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு, குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல்-அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*85. கோரிக்கை எண். 39-சாலைகளும்-பாலங்களும் மற்றும் கோரிக்கை எண். 52-சாலைகளும் பாலங்களுக்கான மூலதனச் செலவு-தமிழ்நாட்டில் சாலை மேம்பாட்டுத்திட்டம், 1979-80-ஆம் ஆண்டுக்கான திட்டங்களும் (தமிழ், ஆங்கிலம்)

*86. கோரிக்கை எண். 34-க்கான தமிழ்நாட்டில் நகர்ப்புற வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1980-81 (தமிழ், ஆங்கிலம்),

* 19-7-1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.





## இணைப்பு

[ ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### அறிமுகம்.

சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டு பின்னணிகளில் எத்தனையோ வகையான மாறுதல்களை மக்கள் சந்தித்திருந்தபோதும், கடந்த முப்பது ஆண்டுகளாக நிறைவேற்றப்பட்டுவரும் சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் ஆண்டுக்கு ஆண்டு முனைப்புடன் செயலாக்கப்பட்டு வருவதை நோக்கும் போது, கிராமப்புறத்தில் வாழும் பல்வேறு மக்களின் தேவைகளை நிறைவு செய்ய, இத் திட்டங்கள் இன்றியமையாதவை என்றும், வேண்டுபவை என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. விரும்பும் அளவிற்கு—வேண்டிய அளவிற்கு விரிவு படுத்துவதற்கு ஏற்றவை மட்டுமின்றி ஊர் புற முன்னேற்றத்தின் பல்வேறு வகைகளை உள்ளடக்கி, ஒன்றுபடுத்தி நடத்திச் செல்ல இத் திட்டங்கள் வழி வகுக்கின்றன என்பதும் மறுக்க முடியா உண்மை. கிராம சமுதாயத்தினரின் முன்னேற்ற வாழ்வில் வியப்பூட்டும் எண்ணிலடங்கா இலட்சியங்களைப் பொறித்த பெருமை கொண்ட இத் திட்டங்கள் அவர்களுக்காக அழிக்க இயலா வளங்களையும் அசைக்க இயலா வாழ்வு அமைப்புகளையும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றன. ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும், வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுவதற்கு அமைந்த சட்டபூர்வமான நிறுவனங்கள் எனினும், அத் திட்டங்களின் வெற்றி மக்களின் ஒத்துழைப்பில்தான் அடங்கி இருக்கிறது.

உழைப்புக்கு உணவுத் திட்டம், இளைஞர்களுக்கான தனி வேலை வாய்ப்புத் திட்டம், ஒருங்கிணைந்த ஊர் வளர்ச்சித் திட்டம் போன்ற நாட்டளவில் நடத்தப்படும் மைய அரசு உதவித் திட்டங்கள் மற்றும் மாநில திட்டமாக செயல்படும் வேலைக்கு உத்திரவாத திட்டமும் சமுதாய வளர்ச்சித் திட்டங்களுக்கு உறுதுணையாக அமைந்துள்ளன.

இத் திட்டங்களின் சிறப்புக் கூறு, தன்னிறைவுத் திட்டம், நீர் வழங்கல், இணைப்புச் சாலைகள், நீர்பாசன சிறு திட்டங்கள், மருந்தகங்கள் போன்ற கிராம வாழ் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து, மூன்று முதல் நான்கு ஆண்டுகளுக்குள் தமிழகத்தின் அனைத்து வட்டாரங்களிலும் இத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பது தன்னிறைவுத் திட்டத்தின் நோக்கம்.

பேரவையின் முன்னர் உள்ள இக் கோரிக்கையான ரூ. 67.74 கோடி ஊராட்சி ஒன்றியங்களில் நிறைவேற்றப்படும் பல்வேறு திட்டங்களின் மொத்த மதிப்பான ரூ. 217.05 கோடியின் ஒரு பகுதியே; இக் குறிப்புடன், பேரவையின் முன்னர் வைக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கை இணைப்பானது, ஊராட்சி வளர்ச்சிக் குரிய நிதி முதலீடுகளை எடுத்துக்காட்டும்.

ஊர்வளர்ச்சித் திட்டங்களின் நோக்கங்களை மட்டுமின்றி 1979-80 ஆண்டு களில் நிறைவேற்றப்பட்ட பணிகளின் ஆய்வு அறிக்கையை அளிக்கவும் 1980-81 ஆண்டுக்கான திட்டங்களையும் பற்றிக் கூறுவதற்குமே இக் குறிப்பு.

## 2. ஊராட்சி வளர்ச்சி நிர்வாகம்.

### (அ) அமைப்பு.

தென்னாற்காடு மாவட்டத்தில் கல்ராயன் மலைப் பகுதியைத் தவிர்த்து, இம் மாநிலம் முழுவதும் தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 35/1978) தற்போது செயலில் உள்ளது. கல்ராயன் குன்றுப் பகுதியில் அமைந்திருந்த ஜாகீர்ப் பகுதிகளை அரசு எடுத்துக் கொண்ட பின்னர் இப் பகுதிகளுக்கெனத் தனியான ஒரு வட்டாரம் ஏற் படுத்தப்பட்டுள்ளது. இப் பகுதியில் ஊராட்சிகளை ஏற்படுத்த நடவடிக்கை கள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இப் பணி இறுதிப்படுத்தப்பட்டு ஊராட்சிகள் அமைக்கப்பட்ட உடன் ஒரு ஊராட்சி ஒன்றியம் அமைக்கப் படும்.

### (ஆ) நிர்வாக யமைப்பின் வளர்ச்சி.

நிர்வாக அமைப்பும் அது செயல்படும் முறையும் தொடர்ந்து அரசின் ஆய்வில் இருந்து வருகின்றன. கீழ்வருபவை இப் பிரிவின் கீழ் இதுவரை செய்யப்பட்ட மாற்றங்களையும், இனி செய்யவிருக்கின்ற மாற்றங்களையும் தொகுத்துக் காட்டும்.

(i) ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களும் அரசு ஊழியர்களே என்ற இவ் வரசின் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ii) 1—2—1977 முதல் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், 12—9—1979 முதல் அனைத்து ஊராட்சிகளிலும் சிறப்பு அலுவலர்கள் பணி யமர்த்தப்பட்டுள்ளனர்



அனைத்து ஊராட்சி ஒன்றிய சிறப்பு அலுவலர்களின் நீட்டித்த பதவிக்காலம் 30—9—1980 அன்றும், ஊராட்சிகளின் சிறப்பு அலுவலர்கள் பதவிக்காலம் 11—9—1980 அன்றும் முடிவு பெறுகின்றன. சிறப்பு அலுவலர்கள் பதவிக் காலம் முடிவுற உள்ளாட்சி நிறுவனங்களுக்கு தேர்தல் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. உள்ளாட்சி நிறுவனங்களுக்கான தேர்தல் களில் வாக்கு அளிக்கும் வயது வரம்பை 18 ஆண்டுகளாக மாற்றுவதற்கு சட்டவரைவுகள் பற்றி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(iii) கன்னியாகுமரி மாவட்டத்தில் மொத்தம் 224 ஊராட்சிகள் உள்ளன. அவைகள் முனைப்புடன் செயல்படும் நோக்கோடு 91 ஊராட்சி களாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ள ஊராட்சிகள், அடுத்து ஊராட்சித் தேர்தலிலிருந்து பணியாற்றும்.

### (இ) பயிற்சித் திட்டங்கள்.

ஊரக வளர்ச்சி இயக்கம் நடத்தி வரும் கீழ்க்கண்ட பயிற்சி நிலையங் களில் வெவ்வேறு வளர்ச்சித் துறைகளைச் சார்ந்த மாவட்ட அலுவலர் களுக்கும்—ஊராட்சி நிறுவனங்களைச் சார்ந்த அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

(1) மாநில சமுதாய வளர்ச்சி நிலையம்—(பவானிசாகர்).

(2) ஊரக வளர்ச்சி பணி பயிற்சி நிலையம்—(பவானிசாகர்) (பெரியார் மாவட்டம்). (பட்டறைப் பிரிவு இணைக்கப்பட்டது).

தே. கல்லுப்பட்டி (மதுரை மாவட்டம்).

பட்டுக்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்).

சத்தியவிஜய நகரம் (வட ஆற்காடு மாவட்டம்) மற்றும்

கிருஷ்ணகிரி (தர்மபுரி மாவட்டம்).

மாநில சமுதாய வளர்ச்சி நிலையத்தில் மாவட்ட மற்றும் வளர்ச்சி அலுவ லர்களுக்கு ஊராட்சி கொள்கை பற்றிய பயிற்சியும், வட்டார வளர்ச்சி அலுவ லர்களுக்குப் பணி பயிற்சி மற்றும் ஊட்டச் சத்துணவு திட்டப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகின்றன. பிற பயிற்சி நிலையங்களில் ஊர்நல அலுவலர் களுக்கு வேளாண்மை, கால்நடை வளர்ச்சி பணிகளின் இரண்டாண்டு கால பணியிடைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஊர்நல அலுவலர்

களுக்கு வேளாண்மை பணிகளில் செறிவுப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகின்றது. கிராமக் கைவினைஞர்களுக்கும் அவர்களுடைய பிள்ளைகளுக்கும் ஓராண்டு காலத்திற்குத் தொழிற்கூடப் பயிற்சி, தச்சு மற்றும் கருமாரத் தொழில்களில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. சத்திய விஜய நகரத்திலும், தே. கல்லுப்பட்டியிலும் பெண் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் வசதிகள் அமைந்துள்ளன.

இந்தப் பயிற்சித் திட்டங்கள், சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் பற்றி அலுவலர்களுக்கு அறிவுரை வழங்குவதோடு, அவர்கள் தங்கள் பணியினைத் திறம்படச் செயலாற்றுவதற்கும் பெரும் உதவி புரிகின்றன.

பல்வேறு தொழில்களில்—ஊரகப்புற இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கும் பணிகளையும் ஏற்று நடத்த இப்பயிற்சி நிறுவனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. 1979-80 ஆம் ஆண்டில், 10,000 ஊரகப்புற கைவினைஞர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும் என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக 285 கிராம வாழ் இளைஞர்கள், தச்சு வேலை, கருமார வேலை, எண்ணை என்ஜின் பராமரிப்பு மற்றும் விசைத் தெளிப்பான் ஆகிய பணிகளில், மூன்று மாத பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர்.

இந்திய நாட்டளவில் நிறைவேற்றப்படும் தேசியத் திட்டமான "இளைஞர் குழாம் தமக்குத்தானே வேலைவாய்ப்பு" அளித்துக்கொள்ளும் வகையிலான திட்டத்தின் ஒரு பகுதியாக கிராம வாழ் வேலையில்லா 2200 இளைஞர்கள் மற்றும் இளம் பெண்களுக்கு, இப் பயிற்சி நிலையங்களில், வேளாண்மைத் தொழில் மற்றும் மனை இயலின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட 16 தொழில்களில் பயிற்சி அளிக்க எண்ணப்பட்டுள்ளது.

### (ஈ) நிதிநிலை மற்றும் திட்டங்களின் சாதனைகள் :

ஊர் வளர்ச்சித் திட்டங்களுக்காகும் நிதிச் செலவு ஆண்டுக்காண்டு அதிகரிக்கப்பட்டுள்ளது. 1975-76 ஆம் ஆண்டு முதற்கொண்டு வழங்கப்பட்ட





நிதி ஒதுக்கீடு மற்றும் வட்டாரத்திற்கென வழங்கப்பட்ட சராசரி நிதி ஒதுக்கீடு ஆகியவற்றின் விவரங்கள் வருமாறு :

| ஆண்டு. | நிதி ஒதுக்கீடு (ரு. இலட்சத்தில்) | ஒரு வட்டாரத்திற்கு வழங்கப்பட்ட சராசரி ஒதுக்கீடு. |
|---|---|---|
| 1975—76 .. .. | 11,123.87 | 29.74 |
| 1976—77 .. .. | 11,625.40 | 31.08 |
| 1977—78 .. .. | 13,255.30 | 35.44 |
| 1978—79 .. .. | 14,307.36 | 38.25 |
| 1979—80 .. .. | 18,156.90 | 48.55 |
| 1980—81 .. .. | 21,705.34 | 57.73 |

மக்களின் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு ஊர்வளர்ச்சிக்கென அரசு அளிக்கும் முக்கியத்துவத்திற்கு இவை வெளிப்படையான சான்றுகளாகும். (1975-76 ஆண்டு முதல் 1980-81 வரையில் ஊராட்சி வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடுகளைக் காட்டும் வரைப்படம் இக்குறிப்பின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது).

"உள்ளூர் செஸ் மேல் வரி"யின் மூலம் ஊராட்சி ஒன்றியங்கள் தம் வருவாயைப் பெருக்கிக் கொள்ள தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இதை ஊக்குவிக்கும் வகையில் உள்ளூர் செஸ் மேல் வரி இணை மானியமாக அரசு அளிக்கும் ஊக்குவிப்புத் தொகை ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்து வருவது இதற்குச் சான்று. 1980-81 ஆம் ஆண்டிற்காக மட்டும் உள்ளூர் செஸ் மேல் வரி இணை மானியத்திற்காக ரூ. 1,700 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சில திட்டங்களைப் பொறுத்தமட்டில் 1979 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் நிலவரப்படி அடிப்படைப்புள்ளி விவரங்கள் (கூடுதல் எண்ணிக்கை) கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வரிசை எண்ணும் அளவும். | 31—3—1976 | 31—3—1977 | 31—3—1978 | 31—3—1979. |
|---|---|---|---|---|
| | | (ஆம் நாள் நிலவரப்படி) | | |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. இணைப்புச் சாலைகளின் நீளம் (கி. மீ.) | 36,681 | 36,852 | 36,632** | 36,177** |
| 2. மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகள் தானியங்கி அழுத்த நீர்த்தொட்டிகள் ஆகியவற்றின் எண்ணிக்கை. | 6,796 | 7,400 | 7,899 | 8,184 |
| 3. குடிநீர் கிணறுகள் எண்ணிக்கை | 79,460 | 81,310 | 83,281 | 85,089 |
| 4. ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தின் கீழ் உள்ள தொடக்க நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை. | 19,826 | 19,922 | 20,071 | 20,172 |
| 5. ஊராட்சி ஒன்றியநிர்வாகத்தின் கீழ் உள்ள உயர்நிலைத் தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை. | 3,175 | 3,155* | 3,123* | 3,085* |
| 6. ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சொந்தமான பள்ளிக் கட்டிடங்கள். | 18,034 | 18,615 | 18,939 | 19,271 |

** சில சாலைகளை ஒன்றியச் சாலைகளாக மாற்றியதன் காரணமாக குறைவு ஏற்பட்டுள்ளது.

* உயர்நிலைத் தொடக்கப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றியதன் காரணமாக இந்த எண்ணிக்கையில் மாறுதல் ஏற்பட்டுள்ளது.



1976–77ஆம் ஆண்டு முதல் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்காக ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் அரசு செலவழித்துள்ள தொகை பற்றிய விவரங்களையும், 1980–81 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டையும் கீழ்க்கண்ட அட்டவணை காட்டும் :—

| திட்டத்தின் பெயர். | 1976–77 | 1977–78 | 1978–79 | 1979–80 திருத்தப் பட்ட திட்ட மதிப்பீடு. | 1980–81 வரவு-செலவு திட்ட மதிப்பு. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| வேளாண்மை | 38.82 | 39.00 | 39.65 | 45.00 | 45.00 |
| கால்நடை வளர்ச்சி | 10.02 | 9.85 | 10.17 | 12.00 | 12.00 |
| மீன் வளம் | 1.97 | 2.93 | 1.60 | 3.00 | 3.00 |
| இணைப்புச் சாலைகள் | 56.00 | 60.26 | 80.22 | 100.00 | 100.00 |
| குடிநீர் வழங்கல் | 315.58* | 137.02 | 148.04 | 150.00 | 150.00 |
| பள்ளிக் கட்டிடங்கள் | 53.79 | 54.20 | 84.71 | 125.00 | 550.00 |
| சமூகக் கல்வி | 8.02 | 8.19 | 8.49 | 8.00 | 8.00 |
| மகளிர், குழந்தைகள் நலன். | 17.66 | 16.04 | 14.55 | 14.57 | 14.57 |

* வறட்சி நிவாரணத்திற்காகச் செலவழித்துள்ள தொகை சேர்க்கப்பட்டுள்ளது.

### 3. பணிகள் பற்றிய திட்டங்கள்.

**(அ) ஊர்புற குடிநீர் வழங்குத் திட்டங்கள்.**

ஊர்ப்புறங்களின் குடிநீர் வழங்குதல் பற்றி நடத்தப்பட்ட ஆய்வின்படி தமிழ் நாட்டிலுள்ள அனைத்து குடியிருப்புகளும், (கிராமங்களும்) கீழ்க் கண்டவாறு ஆறு வகையாகப் பிரிக்கப் பட்டுள்ளன :

1. குடியிருப்புக்குள் எவ்வித நீர் ஆதாரமும் இல்லாத குடியிருப்புகள்.

2. நீர் ஆதாரங்கள் இருந்தும் அவை குடிநீருக்கு தகுதியற்ற உவர் நீராக மட்டுமே உள்ள குடியிருப்புகள்.

3. குடிநீர் ஆதாரங்கள் இருந்தும் அவை வற்றாத் தன்மை இல்லாதனவாக உள்ள குடியிருப்புகள்.

4. வற்றாத் தன்மையுடையதும் குடிநீருக்கு பயன்படக் கூடியதும் ஆன ஆதாரங்கள் இருந்தும் அவை தனியார் உடமையாகவோ அல்லது பாதுகாக்கப் படாமலோ உள்ள குடியிருப்புகள்.

5. குடியிருப்புக்குள்ளேயே குடிநீர் ஆதாரங்கள் இல்லாதவை. ஆனால் ஒரு கி.மீ. தொலைவிற்குள் நல்ல குடிநீர் ஆதாரத்தை கொண்டுள்ள குடியிருப்புகள்.

6. நல்ல குடிநீர் ஆதாரங்களை உடைய குடியிருப்புகள்.

ஊர்ப்புற குடிநீர் வழங்கு திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்க சிலவகை குடியிருப்புகளுக்கு முன்னுரிமை வழங்கும் வகையில் இப்பாகுபாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

முதல் மற்றும் இரண்டாம் வகைகளைச் சார்ந்த அனைத்து குடியிருப்புகளுக்கும் நீர்வழங்கும் திட்டம் ஏறத்தாழ நிறைவு பெற்றுவிட்டன. இவ்வகையைச் சார்ந்த 5120 குடியிருப்புகளுக்கும் 31—12—1980-க்குள் நீர் வழங்கப்பட்டு விடும். 1980—81 ஆம் ஆண்டில் மூன்றாம் வகை குடியிருப்புகளுக்கு நீர் வழங்கும் திட்டம் மேற் கொள்ளப்பட்டு, இவ்வகையில் அடங்கும் 500 குடியிருப்புகளுக்கு 31—3—1981-க்கு முன்னர் நீர் வழங்கப்படும்.



நீர் வழங்குத் திட்டம் நிறைவேற்றப்பட்ட குடியிருப்புகளையும் அதனால் பயன்பெற்ற மக்களின் எண்ணிக்கையையும் காட்டும் பட்டியல் இதோ :—

| வரிசை எண் விவரம். | நீர் வழங்கப் பட்ட குடியிருப்பு களின் எண்ணிக்கை. | தற்போது வேலைகள் நடைபெறும் குடியிருப்பு களின் எண்ணிக்கை. | பயன் பெற்ற மக்க ளின் எண்ணிக் கை. (இலட் சத்தில்.) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| (அ) முதல்வகை குடியிருப்புகள். | 2,409 | 1,045 | 8.50 |
| (ஆ) இரண்டாம் வகை குடியிருப்புகள். | 978 | 988 | 4.40 |
| (இ) மூன்றாம் வகை குடியிருப்புகள். | 47 | 138 | 0.17 |
| மொத்தம் .. | 3,434 | 2,171 | 13.07 |

ஊர்புற நீர்வழங்குத் திட்டத்திற்காக 1979-80-ல் மாநில ஒதுக்கீடு ரூ. 600 லட்சம். ஊர்ப்புற நீர் வழங்கு விரைவு திட்டத்திற்காக மைய அரசு அளித்துள்ள ஒதுக்கீடு ரூ. 213.52 லட்சம். எனவே 1978-79 ஆம் ஆண்டில் ஊர்ப்புற நீர் வழங்குத் திட்டத்திற்கான மொத்த தொகை ரூ. 813.52 லட்சம். இவைகளுடன், கிராமப்புற பணித் திட்டங்களின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 150 லட்சம் தேவைப்படும் வளர்ச்சி வட்டாரங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் மேற்கொள்ளப்பட இருக்கும் ஊர்ப்புற நீர் வழங்கும் திட்டத்திற்காக 1980-81 நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 150 இலட்சம்.

**(ஆ) இணைப்புச் சாலைகள்.**

இணைப்புச் சாலைகளுக்கான நிதி ஒதுக்கீடு ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள இணைப்புச் சாலைகளை மேம்படுத்துவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்காக 1980-81-ஆம் ஆண்டிற்காக ரூ. 100 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## (இ) பள்ளிக் கட்டிடங்கள்.

ஆரம்பப் பள்ளி மற்றும் உயர் ஆரம்பப்பள்ளி கட்டிடங்களுக்கான அதிகத் தொகை முறையே ரூ. 20,000 மற்றும் ரூ. 30.000 என கணக்கிடப்படுகிறது.

இத்துடன், மலைப் பகுதிகளில் உள்ள வட்டாரங்களைப் பொறுத்த வரையில், கட்டிடங்கள் கட்டும் பணிக்கான செலவின் உயர் வரம்பு 25 விழுக் காடு அளவு உயர்த்தப்படுகின்றது. 1980-81 நிதி நிலை அறிக்கையில் ஊர்ப் புறங்களில் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்காக ரூ. 550 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நீர்வழங்குதல், இணைப்புச் சாலைகள், பள்ளிக் கட்டிடங்கள் திட்டங்களுக்கான அரசு மானியமும் பொது மக்கள் நன் கொடை தொகை விகிதமும் பின்வருமாறு :—

| வட்டார வகை. | அரசு மானிய விகிதம். | பொது மக்கள் நன்கொடைத் தொகை விகிதம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| I. | 50% | 50% |
| II. | 55% | 45% |
| III. | 60% | 40% |
| IV. | 70% | 30% |
| V. | 75% | 25% |
| VI. | 80% | 20% |

அரிசனங்கள் பயன்பெறும் திட்டங்களைப் பொறுத்தவரையில், அரிசன நலத்துறையிடமிருந்து நீர்வழங்குத் திட்டத்திற்காக 15 சதவிகிதமும். இணைப்புச்சாலைத் திட்டத்திற்காக பத்து சதவிகிதமும் நன்கொடையாகப் பெறப்படுகின்றன. நீர்வழங்கு மற்றும் இணைப்புச் சாலைத் திட்டங்களுக் காக ஒதுக்கப்பட்டுள்ள தொகையில் இருபது சதவிகிதம் அரிசனங்கள் பயன் பெறும் வகையில் செலவழிக்கப்பட வேண்டும்.



## (ஈ) சாலைகள் பராமரிப்பு.

1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி சட்டத்தின் 131 ஆம் பிரிவின் கீழ், ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பிலுள்ள சாலைகளைப் பராமரிப்பதற்கென, "உள்ளூர் சாலைகள் மானியம்" ஒவ்வோராண்டும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படுகின்றன. 1980-81ஆம் ஆண்டு நிதிநிலை மதிப்பீட்டில் மக்கள் தொகை, சாலைகளின் நீளம் ஆகியவற்றின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பிரித்து வழங்குவதற்காக ரூ. 463 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

## (உ) சிறுபாசனம்.

சிறு பாசன அமைப்புகள் பாதுகாக்கப்படவும் பராமரிக்கப்படவும் ஊராட்சி ஒன்றியங்களிடம் சட்டபூர்வமாக ஒப்படைக்கப்பட்டுள்ளன, ஒவ்வொரு பாசன அமைப்புக்கும் குறைந்தது ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறையேனும் பராமரிப்புப் பணி செய்யப்பட வேண்டும் என்ற திட்டத்தின் கீழ் இவ்வமைப்பு களை ஊராட்சி ஒன்றியங்கள் பராமரித்து வருகின்றன. "உள்ளூர் பாசன மானியம்" என்னும் தலைப்பின் கீழ் அளிக்கப்பெற்றுள்ள நிதி ஒதுக்கீட்டி லிருந்து ஊராட்சி ஒன்றியங்கள் இப்பராமரிப்பு செலவை ஈடு கட்டும். இவ் வாறு ஒதுக்கப்படும் நிதியைக் கொண்டு இப்பாசன அமைப்புகளை ஊராட்சி ஒன்றியங்களால் பராமரிக்க இயலவில்லை என அறியப்பட்டுள்ளது. எனவே ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஏற்பட்டுள்ள இப்பளுவைக் குறைக்கும் பொருட்டு, 100 ஏக்கரும் அதற்கு மேற்பட்ட நிலப்பரப்பளவிற்கு நீர் வழங்கும் பாசன அமைப்புகளைப் பொதுப் பணித்துறையே பராமரித்து வரவேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது எனினும் 100 ஏக்கருக்குக் குறைவான நிலப்பரப்புக்கு நீர்வழங்கும் பாசன அமைப்புக்களை ஊராட்சி ஒன்றியங்களே தொடர்ந்து பராமரித்து வரும். 100 ஏக்கருக்குக் குறைவான நிலப்பரப்பிற்கு நீர் வழங்கும் பாசன அமைப்புகளை மட்டுமே ஊராட்சி ஒன்றியங்கள் பராமரித்து வந்தாலும், ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் மானியத்தில் எவ்வித குறைப்பும் இன்றி. தற்போதைய அளவினையே அரசு அளிக்கும். ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பாசன அமைப்புகளை நன்முறையில் பராமரித்து வரும் என எதிர்பார்க்கப் படுகிறது. 1980-81 நிதிநிலை மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ. [illegible]5.17 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஊ) சமுதாயக் கிணறுகள்.

அதிகப்படியான தம் நிதியிலிருந்து, மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி பெற்று, ஒரு கிணறுக்கு ரூ. 40,000 வரையிலான மதிப்பீட்டில், சமுதாயக் கிணறுகள் தோண்டப்படுவதற்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது. சமுதாயக் கிணறுகள் ஏற்படுத்தும் அளவிற்கு நிதி வசதி இல்லாத வட்டாரங்களை ஊக்கப்படுத்துவதற்காக கடன் வசதி அளிக்கப்படுகிறது.

4. உற்பத்தித் திட்டங்கள்.

வேளாண்மை, கால்நடை வளர்ச்சி மற்றும் மீன்வளம்.

ஒருங்கிணைந்த ஊர் வளர்ச்சித் திட்டம், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் போன்ற மைய அரசின் "ஆண்டுத் திட்டங்கள்" நிறைவேற்றப் படாத 97 ஒன்றியங்களில் வேளாண்மை மற்றும் கால்நடை பராமரிப்புத் திட்டங்கள், 1980-81 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டின் அடிப்படையில் நிறைவேற்றப்படுகின்றன. ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு குறிப்பிட்ட தொகை ஒதுக்கப்பட்டு, வேளாண்மைத் துறையின் ஆலோசனையுடனும், அவ்வப் போது அரசு வெளியிடும் ஆணைகளுக்கு ஏற்பவும், தத்தமக்குரியத் திட்டங் களைத் தீட்டுவதற்கு ஒன்றியங்களுக்கு முழு உரிமை அளிக்கப்பட்டுள்ளது. தொடர்புடைய தொழில் நுட்ப மாவட்ட அலுவலர்களின் ஆலோசனையுடன், ஊராட்சி ஒன்றியங்களால் இத்திட்டம் வகுக்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன. ஊராட்சி ஒன்றியங்கள் மேற்கொண்டுள்ள திட்டங்கள் வருமாறு.—

(அ) வேளாண்மை.

(1) வேளாண்மைக் கிடங்கு மற்றும் விற்பனை நிலையம்.

(2) ஊராட்சித் தோட்டங்களைப் பராமரித்தல்.

(3) மாவட்ட வேளாண்மை அதிகாரிகள் ஆலோசனையுடனும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒப்புதலுடனும் உள்ளூர் பகுதிக்கேற்ப கீழ்காணும் திட்டங்களைப் போன்ற ஊராட்சி ஒன்றியங்கள் தெரிந்தெடுக்க இருக்கும் ஏனையத் திட்டங்கள்:

(i) ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் வேளாண்மை கரு[illegible] வழங்குதல்.

( ) தனிப்பட்டவர்களுக்குக் கருவிகள் வழங்குதல்.





(iii) உதவிகள் விரிவாக்குதல், கிராம விழாக்கள், பொருட்காட்சிகள், போட்டிகள் நடத்துதல்.

(iv) வேளாண்மை விரிவாக்கப்பணி—விளக்கப்பாத்திகள் அமைத்தல்.

(v) தனிப்பட்டவர்களுக்கு விதைகளும் நாற்றுக்களும் வழங்குதல்.

1980—81ஆம் ஆண்டு நிதி நிலை மதிப்பீட்டில் வேளாண்மைத் திட்டங் களை நிறைவேற்றுவதற்கென 45 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

1980-81 ஆம் ஆண்டில் 97 ஊராட்சி ஒன்றியங்களுக்கு விவசாயத் திட்டத்தின்கீழ் ஒன்றியங்கள் விரும்பி மேற்கொள்ளும் திட்டத்திற்காக ஒன்றியம் ஒன்றிற்கு ரூ. 36,701 வழங்கப்பட உள்ளது. மீதமுள்ள ரூ. 9,40,000-யை கட்டுமான வேலைகளுக்காக, 376 ஊராட்சி ஒன்றியங் களுக்கும் சமமாக பங்கிட்டு தரப்பட உள்ளது.

(ஆ) கால்நடை பராமரிப்பு.

இத்திட்டத்தின் கீழ் ரூ. 12 இலட்சம் அரசு மானியமாக ஒதுக்கி வைக்கப் பட்டுள்ளது.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியப் பகுதியிலும் கால்நடை வளர்ப்புத் திட்டத் தின்கீழ் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன :—

(1) கால்நடை மருந்தகங்கள் கட்டுதலும், தற்போதுள்ள மருந்தகங் களை மேம்படுத்துதலும்.

(2) கால்நடை உதவி மருத்துவர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுதல்.

(3) கால்நடை, பால்பண்ணை, கோழி வளர்ப்பு, பன்றி வளர்ப்பு ஆகிய வற்றின் மேம்பாட்டுக்காக உள்ளூர் நிலைமைகளின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்கள் தெரிந்தெடுக்கவிருக்கும் இதர திட்டங்கள்.

ஒருங்கிணைந்த ஊர் வளர்ச்சித் திட்டம், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் போன்ற மைய அரசின் திட்டங்கள் நிறை வேற்றப்படாத 97 ஊராட்சி ஒன்றியங்களுக்கு, ஒன்றியம் ஒன்றுக்கு ரூ. 6,557 வீதம் மானியமாக வழங்கப்பட உள்ளது. மீதமுள்ள ரூ. 5,64,000-யை கட்டுமான வேலைகளுக் காக, 376 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் சமமாகப் பங்கிட்டு தரப்பட உ[illegible]. இம்மானியத்திற்கு இணையாக உள்ளூர் நன்கொடை பெறப்படல் வேண்டும்.

(இ) மீன் வளம்.

இத்திட்டத்தில் மாநிலம் முழுவதற்கும் "ஊராட்சி ஒன்றியங்களுக்கு மானியங்கள்" என்ற தலைப்பின் கீழ் ரூ. 3 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்புத் துறைகளைப் போன்றே மீன் வளங்களின் மேம்பாட்டுக்கென்று திட்டவட்டமான ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன. மீன் வளர்ப்பை எங்கெங்கு, மேம்பாடு செய்ய இயலுமோ அங்கங்கே அமைந்த ஊராட்சி ஒன்றியங்களில் மட்டுமே இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

1980-81 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.—

(1) மீன் குஞ்சு வளர்ப்பு—பேணுதல்.

(2) மீன் குஞ்சுகளை வழங்குதல்.

(3) ஏரிகளைப் புதுப்பித்தல் (குறைந்த அளவு தேவை முழுவதற்கும்).

5. நலப்பணித் திட்டங்கள்.

(அ) தொடக்கக் கல்வி.

ஊராட்சி ஒன்றியங்கள் தத்தம் பகுதிகளில் அவைகளின் நிதி வசதிக்கேற்ப ஒரு நியாயமான நிதியை ஒதுக்கித் தொடக்கப்பள்ளிகளைத் திறந்து, பேணி, விரிவுபடுத்தி, மேம்படுத்துவதையும், தனியார், தொடக்கப் பள்ளிகளுக்கு மானியங்கள் வழங்குவதையும், ஊராட்சி ஒன்றியங்களின் கடமையாக 1958-ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்திலுள்ள 65 ( ) பகுதி வகுத்துள்ளது. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் தொடக்கக் கல்வியை நிர்வகிக்கும் முழு பொறுப்பும் ஊராட்சி ஒன்றியங்களையே சார்ந்ததாகும். ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் தற்போது 28,537 பள்ளிகள் (தொடக்க, உயர் தொடக்க உதவி பெறும் பள்ளிகள்) உள்ளன. இவற்றில் 23,257 பள்ளிகள் ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. எஞ்சியவை உதவி பெறும் நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன. ஊராட்சி ஒன்றியம் மற்றும் உதவிபெறும் பள்ளிகளில் மொத்தம் 1,31,264 ஆசிரியர்கள், 50.27 இலட்சம் மாணவர்களுக்கு கல்வி கற்பித்து வருகின்றனர். பள்ளிகளின் எண்ணிக்கை அதிகரிக்க, அதற்கு ஏற்றார்போல் ஆரம்பக் கல்விக்கான செல





வும் அதிகரித்துள்ளது. 1973—74 ஆம் ஆண்டிலிருந்து அரசின் செலவு ஊராட்சி ஒன்றியங்களின் செலவின் பங்கு ஆகிய கீழே தரப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | அரசின் செலவு. | ஊராட்சி ஒன்றியங்களின் செலவின் பங்கு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூ. இலட்சத்தில்.) | |
| 1973—74 .. .. .. | 3,432.41 | 372.00 |
| 1974—75 .. .. .. | 3,636.97 | 392.00 |
| 1975—76 .. .. .. | 3,898.28 | 432.04 |
| 1976—77 .. .. .. | 4,300.02 | 662.94 |
| 1977—78 .. .. .. | 5,069.72 | 741.18 |
| 1978—79 .. .. .. | 5,468.00 | 817.06 |
| 1979—80 .. .. .. | 7,345.00 | 1,001.60 |
| 1980—81 .. .. .. | 7,521.02 | 1,024.99 |

(ஆ) நல்வாழ்வுப் பணிகள்.

ஆதார சுகாதார நிலையங்கள்.

ஆதார சுகாதார நிலையம், சமுதாயத்துக்கு நோய் தடுப்பு மருத்துவம் அளிப்பது, நோய் மருத்துவம், அளிப்பது மற்றும் மக்களின் உடல்நலம் ஊட்டம் பெற செய்வது ஆகிய பல்நோக்குடன் நிறுவப்பட்டதாகும். 382 ஆதார சுகாதார நிலையங்கள் தற்போது நிறுவப்பட்டுள்ளன.

தாய்சேய் நல நிலையங்கள்.

தாய்-சேய் நலப் பணிகளைச் செயல்படுத்துவது ஊராட்சி ஒன்றியங்களின் செ[illegible]ம் பொறுப்பாகும். இத்திட்டத்திற்காக ஊராட்சி ஒன்றியங்கள் மொத்தச் செலவில் 3-ல் 2 பங்கை அரசு உதவி மானியமாகத் தருகிறது.

ஊராட்சி ஒன்றியங்களால் பராமரிக்கப்படும் தாய்சேய் நல நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 2,811 ஆகும். 1980-81 ஆம் ஆண்டில் இந்த இனத்தின் கீழ் ரூ. 85 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள்.

மருந்தகங்களை நிறுவுவதும், நிர்வகிப்பதும் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும். இதற்குத் தேவையான நிதி வசதிகளை ஊராட்சி ஒன்றியங்கள் ஒதுக்குகின்றன. ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களைத் தவிர கிராம மருந்தகங்களும் ஊராட்சிகளில் உள்ளன. மருந்தகங்களை நிர்வகிப்பதற்கும் மொத்தச் செலவில் 50 சதவிதம் (ஆண்டொன்றுக்கு ரூ. 6,400-க்கு மேற்படாமல்) உதவி மானியம் பெற ஊராட்சி ஒன்றியம் தகுதி பெற்றதாகிறது. 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 5 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### குடும்ப நலத்திட்டம்.

குடும்ப நலத்திட்டப் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவது ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும். சீரமைக்கப்பட்ட குடும்ப நலத்திட்டம் 376 வட்டாரங்களிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

### (இ) சமூகக் கல்வி.

தற்போது 13,423 சமூகக் கல்வி நிலையங்கள் உள்ளன. கிராமங்களில் வயது வந்தோர் நாட்டு நடப்புச் செய்திகளை அவர்களுக்குள் விவாதிக்க வாய்ப்பளிக்கும் ஒரு நிலையமாக இவை விளங்கும். உள்ளூர்ப் பள்ளி ஆசிரியர்கள் அல்லது படித்தவர்கள் வேறு யாரேனும் இதன் அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் செய்தித் தாள்கள், இதழ்கள் ஆகியவற்றைப் படித்து விவாதங்களைத் துவக்கி வைக்க உதவுகிறார்கள்.

திட்டங்களில் மக்களின் கவனத்தை ஈர்க்குவிப்பதற்கும் ஆக்கப் பணிகளுக்கும் திட்டங்கள் ஆகியவற்றிற்கு மக்களின் ஆதரவைப் பெறுவதற்கும் கிராம வானொலி மன்றங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. 1980-81-ல் நிதி ஒதுக்கீடு ரூ. 8 இலட்சம் ஆகும்.

### (ஈ) மகளிர் குழந்தைகள் நலம்.

1962-63 ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்தே, ஓர் ஊராட்சிக்கு ஒரு மகளிர் மன்றம் வீதம் ஊராட்சி ஒன்றியத்திற்குக் குறைந்தது 30 மன்றங்கள் ஊர்ப்புறங்கள் அனைத்திலும் நிறுவப்பட்டுள்ளன. இம்மன்றங்களின் மூலம்





மக்களிடையே கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. தற்போது கிராமப் புறப் பகுதிகளில் 12,475 மகளிர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. வாழ்க்கையில் முன்னேற சிறப்பான வழிமுறைகளை இம்மன்றங்களின் மூலம் மகளிர் கற்று வருகின்றனர்.

## 6. சிறப்புத் திட்டங்கள்.

### (அ) செயல்முறை ஊட்டச் சத்துணவுத் திட்டம்.

மத்திய அரசு 'யூனிசெப்' மாநில் அரசு ஆகியவற்றின் உதவியுடன் 1962—63 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் முதல் முறையாக செயல் முறை சத்துணவுத் திட்டம் தொடங்கப் பெற்றது.

கிராமப் பகுதிகளில் குறிப்பாகத் தாய்மார்களும், குழந்தைகளும் சத்துணவு உட்கொள்ளும் நிலையைப் பழக்கத்தில் கொண்டு வருவதும், பாப்புவதும், சத்துணவுப் பொருட்களை பெருமளவில் உற்பத்தி செய்ய கிராம மக்களுக்கு உதவுவதும், குறிப்பாகக் கிடைக்கச் செய்வதுமே இத்திட்டத்தின் பொதுவான நோக்கமாகும்.

1962—63 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் 75 வட்டாரங்களுக்கு விரிவுபடுத்தப் பெற்றுள்ளன. இவற்றில், 43 வட்டாரங்களில் செயல்முறைச் சத்துணவுத் திட்டம் முடிவுற்றது. 32 வட்டாரங்களில் இத்திட்டம் செயல்பட்டு வருகின்றது. தற்போது இத்திட்டம் 1—4—79 முதல் மாநிலத் திட்டமாக மாற்றப்பட்டுவிட்டது. இதன் விளைவாக "யூனிசெப்" நிதியிலிருந்தும், மைய அரசிடமிருந்தும், இனி உதவிகள் கிடைக்காது. எனினும் இம்மாநில அரசின் சொந்த நிதியைக் கொண்டு 1978-1979 முதல் இத்திட்டம் புதிதாக நிறைவேற்றப்படுவதற்காக 14 வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளன. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் செயல் முறை ஊட்டச் சத்துணவுத் திட்டம் மேற்கொள்ளப்பட்ட வட்டாரங்களில் இத்திட்டம் 6 ஆண்டு காலத்திற்கு செயலில் இருக்கும். சத்துணவு திட்டம் செயல்படும் வட்டாரங்களிலுள்ள எல்லாக் கிராமங்களிலும் சிற்றூர்களிலும், கீழே குறிப்பிட்டுள்ள திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1. மீன் வளம்.
2. தோட்டக்கலை—
   (அ) தலைமையிடத்தில் நாற்றங்கால்.
   (ஆ) சமுதாயத் தோட்டம்.

3. கால்நடை வளர்ப்பு—

(அ) கால்நடைப் பண்ணைகளை உருவாக்குதல்.

(ஆ) கோழி முட்டை வளம் பெருக்கும் பிரிவுகள்.

(இ) புழக்கடைப் பிரிவுகள்.

(ஈ) தீவன மேம்பாட்டுத் திட்டங்கள்.

4. வீட்டுத் தோட்டங்கள்.

5. பள்ளித் தோட்டங்கள்.

6. சத்துணவுக் கல்வி—

(அ) மகளிர் மன்றங்களுக்கும் இளைஞர் மன்றங்களுக்கும் உதவி.

(ஆ) உணவளிப்பது குறித்துச் செயல் முறை விளக்கத் திட்டம்.

(இ) பாலவாடிக் கட்டிடங்கள் கட்டுதல்.

7. பொது நல்வாழ்வுப் பணிகள்—

(அ) ஆய்வு.

(ஆ) மருத்துவ சோதனை.

(இ) தடுப்பு ஊசி இடுதல்.

செயல் முறை சத்துணவுத் திட்டத்திற்கு 1980—81 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 56 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் குழந்தைகள் காப்பகங்களில் சத்துணவு வழங்கும் திட்டம்.

இத்திட்டம் 2 முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கும் தாய்மை நிலை மகளிர் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் சத்துணவு வழங்குவதை நோக்கமாகக் கொண்ட சிறப்புத் திட்டமாகும். இவர்களெல்லாம் எளிதில் நோய்வாய்ப்படும் வகையினர், ஆதலால் இன்றியமையாத வளர்ச்சி கால கட்டத்தில் இவர்களுக்கு சத்துணவு வழங்குவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். ஆண்டில் 300 நாட்களுக்கு 1,56,000 பேர்களுக்குச் சத்துணவு அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுகின்ற ஒவ்வொருவருக்கும் ஒரு நாளுக்கு 80 கிராம் பாலாகாரம் எனப்படுகின்ற மாவுப் பொருள் உணவும் (அதாவது தானியம், சோயாபீன்ஸ், மக்காச் சோளம் இவை கலந்த மாவு) 7 கிராம் வீதத்தில் 'சாலடு' எண்ணெய்யும் அல்லது 'பிரட்'





[illegible]வனத்தால் வழங்கப்படுகிறது. குழந்தைகள்
ண்ணெய்யும் 'கே[illegible] அளிக்கப்பட்டுப் பயன்பெறுவோரின்
ப்பகங்கள் ஒவ்வொ[illegible]லும் சத்துணவு அளிக்கப்பட்டுப் பயன்பெறுவோரின்
ார்த்தளவு எண்ணிக்கை 120 ஆகும்; அதாவது குழந்தைகள் 80 பேர், தாய்
ர்கள் 40 பேர். தற்போது இந்தச் சத்துணவு வழங்கும் திட்டம் 114 வட்
ாரங்களில் அமைந்துள்ள 1,442 குழந்தைகள் காப்பகங்களில் செயல்படுத்தப்
்டு வருகின்றது. இவற்றின் மூலம் 1,56,000 குழந்தைகளும் தாய்மார்களும்
பன்பெறுகின்றனர்.

1980-81 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள
ர்வாகச் செலவுகள், பல்வேறு குழந்தைகள் காப்பகங்களுக்கும் உணவுப்
பாருட்களை எடுத்துச் செல்வதற்காகும் போக்குவரத்துச் செலவு, உணவு
ழங்குவதற்கு ஆகும் செலவுகள், பாலசேவிகைகள். ஆயாக்கள் ஆகியோருக்கு
ஊதியம், பாத்திரம் வாங்குவதற்கு ஆகும் செலவு மற்றும் நிர்வாகச் செலவு
ஆகியன அடங்கும்.

(இ) வானொலியும் தொலைக் காட்சியும்.

இம்மாநிலத்தின் ஊராட்சிகளில் வானொலிப் பெட்டிகள் நிறுவப்படும்
மாபெரும் சிறப்புத் திட்டம் மிக விரைவாக செயல்படுத்தப்பட்டு, 1980 ஆம்
ஆண்டு மார்ச் திங்கள் வரை 41,326 வானொலிப் பெட்டிகள் மாநிலத்தின் பல்
வேறு கிராமங்களிலும், சிற்றூர்களிலும் நிறுவப்பட்டுள்ளன.

வேளாண்மை, குடும்ப நலம், பொது நல்வாழ்வு மற்றும் பிற துறைகளில்
விளைந்த அண்மைக்கால திட்டங்களை சிற்றூர்வாழ் மக்களும் அறிந்து
கொள்ளும் வகையில் 262 தொலைக்காட்சிப் பெட்டிகள், சென்னைத் தொலைக்
காட்சி நிலையத்தின் ஆற்றல் பகுதிக்குள் அமைந்த சிற்றூர்களில் நிறுவப்
பட்டுள்ளன.

இத்தொலைக்காட்சிப் பெட்டிகள், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின்
வானொலி-தொலைக்காட்சி பராமரிப்பு நிறுவனத்தில் புதிதாக ஏற்படுத்தப்
பட்ட தொலைக் காட்சி பராமரிப்பு பிரிவினால் பராமரிக்கப்படுகின்றன.
இப்பிரிவு நகராட்சிகளில் மற்றும் சென்னை மாநகராட்சியில் நிறுவப்
பட்டுள்ள தொலைக்காட்சிப் பெட்டிகளையும் பராமரித்து வருகின்றன.

(ஈ) தன்னிறைவுத் திட்டம்.

தன்னிறைவுத் திட்டம் இம்மாநிலத்தில் 69 வட்டாரங்களில் செயல்படுத்தப்
பட்டு வருகின்றது. நீலகிரி மாவட்டத்தில் 4 வட்டாரங்கள் மட்டுமே
இருப்பதால் அம்மாவட்டத்தைத் தவிர ஒவ்வொரு மாவட்டத்திலும் ஐந்து

வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்த வட்டாரங்களில் ஒருங் இணைந்த ஊர் வளர்ச்சித் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வட்டாரங்களில் ஒருங்கிணைந்த ஊர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ்த் தனிப் பட்ட குடும்பங்களுக்கான பொருளாதார திட்டங்கள் செயலாக்கப்படுகின்றன.

அடிப்படை வசதிகளான நீர் வழங்குதல், இணைப்பு சாலைகள் அமைத்தல், மருந்தகங்கள் நிறுவுதல், பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல், பாசன சிறு திட்டங்கள் ஏற்படுத்துதல் முதலிய திட்டங்கள் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் 1980—81-க்குள் நிறை வேற்றப்படும். இவ்வாண்டில் இத்தன்னிறைவுத் திட்டம் மேலும் 100 வட்டா ரங்களுக்கு விரிவுபடுத்தப்படும். மூன்று அல்லது நான்காண்டு கால அள விற்குள் இத்திட்டம் இம்மாநிலத்தில் அனைத்து வட்டாரங்களிலும் நிறை வேற்றப்படும். தன்னிறைவுத் திட்டத்திற்கென 1980—81ஆம் ஆண்டில் 1,000 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (உ) வருமான வரிச் சட்ட பிரிவு 35 (சிசி) மற்றும் 35 (சிசிஏ)-யின் கீழ் அளிக்கப்படும் சலுகை.

வரி விதிக்கத் தக்க ஆதாயத்தைக் கணக்கிட்டு கிராம வளர்ச்சித் திட்டத்தில் பங்கு கொண்டு அதன் மூலம் ஏற்படும் செலவை அந்த ஆதாயத்தி லிருந்து கழித்துக்கொள்ள வகை செய்து 1–9–1977 ஆம் ஆண்டிலிருந்து 35 (சிசி) என்ற புதிய பிரிவு ஒன்று வருமான வரிச் சட்டத்தில் கொண்டு வரப்பட்டது. நாட்டின் வளமான வருங்காலத்தை உருவாக்கும் இப்பணியில் தொழில்/வர்த்தக நிறுவனங்கள் குறிப்பிடத்தக்க அளவில் பங்கேற்கலாம். ஊர்ப் பகுதிகளிலுள்ள அனைவருக்கும் ஆதாயம் தரத்தக்க வேலை வாய்ப்பை அளித்து வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள கிராம மக்களை ஏழ்மை நிலை யிலிருந்து மீட்பதே இந்த வளர்ச்சித் திட்டத்தின் தலையாய நோக்கமாகும்.

தொழில் வர்த்தக நிறுவனங்கள்-நிறுவன உரிமையாளர்களிடமிருந்து நன்கொடைகளைப் பெற முயலவும், பெற்ற நன்கொடைகளை நன்முறையில் செலவிடவும், "தமிழ்நாடு ஊரக சீரமைப்புச் சங்கம்" (TARRA) என்ற அமைப்பை இவ்வரசு ஏற்படுத்தியுள்ளது. ஊராட்சி ஒன்றியங்களின் வசதிகள் / வாயிலாக பல்வேறு வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்ற நன்கொடைகளை அளிக்க விரும்பும் தொழில் வர்த்தக நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்டவர்களிடமிருந்து நன்கொடைகளைப் பெறுவதற்காக இச்சங்கம் 1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்சங்கம் மைய அரசின் அங்கீகாரம் பெற உள்ளது.



### (ஊ) வேலை வாய்ப்பு உறுதித் திட்டம்.

வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் 1979 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது. பதிவு செய்து கொண்ட, நல்ல உடல் வளம் கொண்ட 18 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் அனைவருக்கும் உடல் உழைப்பு பணிகளை வழங்குதல் இத்திட்டத்தின் நோக்கம். இத்திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் உறுதிமிக்க சமுதாய சொத்துக்களை உருவாக்குதலும் அடங்கும். வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் பணி புரியும் தொழிலாளர் களுக்கு ஊதியமாக உழைப்புக்கு உணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசி வழங்கப்படுகிறது. ஊதியத்தில் 50 சதவிகிதம் அரிசியாகவும் மீதி பணமாகவும் வழங்கப்படுகிறது. 1979-80 ஆம் ஆண்டில் இத்திட்ட வேலைக்கான கருவிகள் வாங்குவதற்காக ஒரு ஒன்றியத்திற்கு ரூ. 1 லட்சம் வீதம் ரூ. 376 லட்சத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. ஏறத்தாழ 1,88,912 பேர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பு அளிக்கப் பட்டுள்ளது. 1980–81 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு 1,000 இலட்சம் ஆகும்.

### (எ) உழைப்புக்கு உணவுத் திட்டம்.

1976-77 ஆம் ஆண்டில் நாட்டளவு திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்ட உழைப்புக்கு உணவுத் திட்டம். இரு நோக்கங்களைக் கொண்டு திகழ்கின்றது. வேலை இல்லாதவர்களுக்கும் வேலை குறைவாக உள்ளவர்களுக்கும் வேலை வாய்ப்புகள் நல்குவதும், வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தவும், அதன் இருபெரும் நோக்கங்களாகும். இத்திட்டத்தின் தொடக்கக்காலத்தில், கூலியின் ஒரு பகுதியாக வழங்கப்பட கோதுமை மட்டுமே மத்திய அரசு வழங்கியிருந்தது. ஆனால் 1979 முதல் உழைப்புக்கு உணவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இம்மாநிலத்திற்கு அரிசி வழங்கப்பட்டது.

1979-80-ன் முதலில் 17,000 டன் அரிசியை மத்திய அரசு இம்மாநிலத்திற்கு வழங்கியது. பின்னர் 1980 ஜனவரியில், 73,000 டன்களாக அதிகமாக்கப் பட்டது. இதுவரை தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்குதுறை மூலம் அரிசி பெறப்பட்டது. 31–5–1980 வரை உணவுப் பொருள் வழங்குதுறை 64,429.982 டன் அரிசியை வழங்கியுள்ளது. 1980-81 ஆம் ஆண்டு முழுவதுக்கும்

ஒதுக்கப்பட வேண்டிய அரிசியின் அளவு குறித்து மு[illegible]டுப்பதற்கு முன்னர், முதற்கட்டமாக 27,000 டன் அரிசி தமிழ் நாட்டிற்கென் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 13,500 டன் அரிசியை உடனடியாக பெற்று பயன்படுத்துவதற்கு மத்திய அரசு இவ்வரிசிற்கு அனுமதி வழங்கியுள்ளது. இனிமேல் இந்திய உணவுக் கழகம் இவ்வரிசியை வழங்கும். இத்திட்டத்தின் கீழ் பள்ளிக் கட்டிடங்கள், சமுதாயக் கட்டிடங்கள் கட்டுதல், சிறுபாசன குளங்களை மேம்படுத்துதல், சாலைப் பணிகள் முதலிய பல்வேறு பணிகள் ஏற்று நடத்தப்பட்டுள்ளன. 31–3–1980 முடிய 50.636 மெட்ரிக் டன் அரிசி செலவில், 32,904 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இப்பணிகளின் மொத்த மதிப்பு ரூ. 9.27 கோடி என கணக்கிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 18,60,624 ஆண்களுக்கும், 4,55,455 பெண்களுக்கும் வேலை வாய்ப்பு அளித்துள்ளதோடு, 142 இலட்ச மனித உழைப்பு நாட்களை உருவாக்கியும் உள்ளது.

(ஏ) ஊராட்சி ஒன்றிய உபரி நிதியைப் பயன்படுத்துதல்.

ஊராட்சி ஒன்றியத்தில் ரூ. 3 இலட்சத்திற்கு அதிகமாக இருக்கும் பொது நிதி உபரி நிதியாகக் கருத்திற்கொள்ளப்படும். இவ்வுபரி நிதியிலிருந்து ரூ. 1 இலட்சம் பெறுமான வேலைகளுக்கு ஒப்புதல் அளிக்க மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம் வழங்கப்பட்டு உள்ளது. ரூ. 1 இலட்சம் முதல் 3 இலட்சம் பெறுமான வேலைகளுக்கு அரசு ஒப்புதல் பெற வேண்டும். இந்த உபரி நிதி கீழ்க்கண்ட வேலைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது :—

(1) கிணறுகள் இறக்குதல், குழாய்க் கிணறுகள் அமைத்தல், ஆழ் குழாய் கிணறுகள் அமைத்தல், கிணறுகள் ஆழப்படுத்துதல், தரைமட்ட நீர்த் தேக்கங்கள், மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் அமைத்தல், சமுதாயக் கிணறுகள் அமைத்தல்.

(2) ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி ஆகியவைகளிடம் ஒப்படைக்கப்பட்ட சாலைகளை மேம்படுத்துதல், சாலைக் கற்கள் பரப்புதல், சல்லிக் கல் பரப்புதல்.

(3) ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சாலைகளில் பாலங்கள், சிறு பாலங்கள், தரைப் பாலங்கள் அமைத்தல்.

(4) கட்டிடங்கள் கட்டுதல், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்குக் கூடுதலான பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல்.



1979-80 ஆம் ஆண்டு[illegible] ஊராட்சி ஒன்றியங்கள் உபரி நிதியிலிருந்து ரூ. 81.17 இலட்சம் [illegible]ரையிலான தொகையைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதியளிக்கப்பட்டுள்ளன.

(ஐ) இம்மாநிலத்தில் 1—4—1978 இல் அறிமுகப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த ஊர் வளர்ச்சித் திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் தலையாயக் குறிக்கோளானது, உள்ளூர் வகை வளங்களைப் பயன்படுத்தி வட்டாரத்தின் முழு வளர்ச்சியை முன்னோக்கி துரிதப்படுத்தி வேலை வாய்ப்பினை அளிப்பதும், நலிவுற்றோரின், பொருளாதாரத்தை மேம்படுத்துதலே ஆகும். இத்திட்டம் இம்மாநிலத்தில் 187 ஒன்றியங்களில் செயல்பட்டு வருகின்றது. இவைகளில் 100 ஒன்றியங்கள், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டப் பகுதியிலிருந்தும், 30 ஒன்றியங்கள் வறட்சிப் பகுதி முன்னேற்ற திட்டப்பகுதிகளிலிருந்தும், மற்றைய 57 ஒன்றியங்கள் இச்சிறப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்படாத பகுதிகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் இந்த சிறப்புத் திட்டங்கள் எதுவும் நிறைவேற்றப்படாத 25 வட்டாரங்களில் இந்த திட்டத்தை விரிவுபடுத்துவதற்கு எண்ணப்பட்டுள்ளது.

மாவட்ட அளவில், ஒன்றிய அலுவலர்களின் ஒத்துழைப்போடு ஒருங்கிணைந்த ஊர் வளர்ச்சி திட்டங்களை நிறைவேற்றுவதற்கான பொறுப்பை சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்ட அலுவலர்கள் ஏற்றுள்ளனர். 1980-81 ஆம் ஆண்டில், இத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்த தொகை ரூ. 1,223 இலட்சமாக இருக்கும்.

[1980 ஜூலை 21

## இணைப்பு II

[43 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### மானியக் கோரிக்கை எண், 34.

### நகர்ப்புற வளர்ச்சி.

### கொள்கை விளக்கக் குறிப்பு.

### நகர்-நாட்டுப்புற அமைப்புத் திட்டம்.

1.1. வரும் ஆண்டுகளில், சிறிய நகரங்களிலும் மற்றும் நடுத்தரமான நகரங்களிலும்தான், பெரும்பாலும் அரசு மேற்கொள்ளும் நகர்வளர்ச்சியின் உந்துகை இருக்கும். இதனால், கிராமப் பகுதிகளில் உள்ள மக்கள் அருகிலுள்ள நகரங்களுக்குச் சென்று நகர்ப்புற வசதிகளைப் பெற எதுவாக இருப்பதுடன் கிராமப் பகுதிகளிலிருந்து குடிபெயர்ந்து பெரிய நகரங்களை நோக்கிச் செல்லும் போக்கினைக் குறைத்து, பெரிய நகரங்களில் தற்போது உள்ள மக்கள் நெருக்கம் குறையும் நிலை உருவாகும். தமிழ்நாடு முழுவதும் சீரான இடைவெளி தொலைவில் படிவரிசையாக (Hierarchy) மூன்று நிலைகளில் நகரங்களைக் கண்டறிந்து அந்நகரங்களைத் திட்டமிட்டு வளர்ச்சி பெறச் செய்தலே மேற்குறிப்பிட்ட திட்டத்தின் நோக்கமாகும். சென்னை பெருநகர் பகுதி நீங்கலாக ஏனைய தமிழ்நாட்டின் பகுதியை ஏழு வட்டார வளர்ச்சி முனைகளின் ( Regional Growth Polis ) பணி எல்லைக்குள் (Service Area) உட்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ் வளர்ச்சி முனைகள் குறிப்பிட்ட வட்டாரத்தில் நகர்ப்புற வளர்ச்சியின் முக்கிய மையமாக பணி புரியும் மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி வேலூர், கடலூர், தூத்துக்குடி ஆகிய ஏழு வட்டார வளர்ச்சி முனைகளில், முதல் ஐந்து நகரங்கள் நன்கு நகர் வளர்ச்சி பெற்று வட்டார வளர்ச்சி முனைகளாக ( Regional Growth Polis) செயல்படுகின்றன. வேலூர், கடலூர் ஆகிய இரண்டு நகரங்களும் வட்டார வளர்ச்சி முனைகளாக செயல்பட இன்னும் வளர்ச்சியுறச் செய்வது அவசியமாகும். இதற்காக வீட்டு வசதி மற்றும் நகர் வளர்ச்சி கழகத்தின் ( HUDCO ) உதவியை நாடப் படும். இவ்விரு ஊர்களின் செறிவான வளர்ச்சிக்காக விரிவான நகரமைப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும். மற்ற ஐந்து நகரங்களும் முறையான வளர்ச்சியைப் பெற வீட்டு வசதி மற்றும் நகர் வளர்ச்சி கழகத்தின் நிதி உதவியுடன் செயல்படும். மத்திய அரசின் உதவியுடன், மதுரை, கோவை



1980 ஜூலை 21]

நகரங்களில் ஏற்கெனவே துவக்கப்பட்ட திட்டங்களை 1979-ல் மத்திய அரசு, மாநில அரசிற்கு மாற்றி விட்டதால், மாநில அரசு நிதியுடன் இத்திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தப்படும். மேற்குறிப்பிட்ட நகரங்களின் புதிய திட்டங்களை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடன் எடுத்துக் கொள்ளப்படும். ஏற்கெனவே திருச்சி மற்றும் சேலம் நகரங்களுக்கு திட்டங்களை தயாரித்து வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

#### வளர்ச்சி முனைகள்.

1.2. முதல் நிலையில் உள்ள ஏழு வட்டார வளர்ச்சி முனைகளை அடுத்து, இரண்டாம் நிலையில் ஏறத்தாழ 50 கிலோ மீட்டர் இடைவெளியில் 93 வளர்ச்சி முனைகள் ( Growth Polis ) உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வளர்ச்சி முனைகளில் எல்லா நகர் நலவசதிகளும் அமைக்கப்பட்டு, ஏறத்தாழ ஒரு இலட்சம் மக்கள் வாழும் நகரங்களாக விளங்கும். இதனால் எந்த ஒரு கிராமப்பகுதியும் ஏறத்தாழ 25 கிலோ மீட்டர் தொலைவில் நகர் நல வசதிகளைப் பெற இயலும்.

#### வளர்ச்சி மையங்கள்.

1.3. மூன்றாவது நிலையில் ஏறத்தாழ 15.20 கிலோ மீட்டர் இடைவெளியில் 298 வளர்ச்சி மையங்கள் ( Growth Centues ) கொண்டதாக இருக்கும். இவ்வளர்ச்சி மையங்களில் பெரும்பாலான நகர் நல வசதிகள் ஏற்படுத்தப்பட்டு ஏறத்தாழ 20,000-50,000 மக்கள் வாழ வசதிகள் செய்யப்படும்.

1.4. இம்மாநிலத்தில் இறைமையாகச் செயல்படும் பல மையங்கள் கொண்ட ( Polynuclear Regio Polis ) நகர் அமைப்பு ( Urban Paictel ) ஒன்றை உருவாக்க மாநில அரசு துறைகள் மற்றும் தனியார் துறைகளில் பல்வேறு நிறுவனங்களின் முதலீடுகளை இவ்வளர்ச்சி முனைகளிலும் வளர்ச்சி மையங்களும் ஒருங்கிணைந்து திட்டங்களை செயற்படுத்த தகுந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

1.5. மத்திய அரசின் நிதியுதவியுடன் சிறிய மற்றும் நடுத்தரமான நகரங்களுக்காக வளர்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் கீழ் ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கும் குறைவாகக் கொண்ட நகரங்களில் ஒருங்கிணைக்கப்பட்ட நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்கள் துவக்கப்பட்டு இத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவிற்காக உள்ளாட்சி நிறுவனங்கள்

இருபது சதவீதத் தொகையை அளித்து, மீதிச் செலவை 50 : 50 (விகிதா சாரத்தில்) மத்திய மாநில அரசுத் தொகையுடன் கையாளப்படும். 1979-80 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களுக்காக உதகமண்டலம், தர்மபுரி, புதுக்கோட்டை மற்றும் கரூர் ஆகிய நான்கு நகரங்களுக்கு ரூபாய் 42.5 இலட்சம் மத்திய அரசின் உதவியுடன் அனுமதிக்கப்பட்டது. 1983 ஆம் ஆண்டிற்குள் மாநிலத்தில் அனைத்து மாவட்டங்களுக்கும் பகிர்ந்தவாறு 29 நகரங்களில் இத்திட்டத்தினை மேலும் விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்துடன் வீட்டு வசதி மற்றும் நகர் வளர்ச்சிக் கழகம் போன்ற மற்ற நிறுவனங்களின் நிதி உதவியும் முடிந்தளவு இத்திட்டங்களுக்காகப் பெறப்படும். தமிழ்நாடு அரசு ஏற்கெனவே மாநில நகர்-ஊரமைப்பு மற்றும் வளர்ச்சி நிதி ஒன்றினை ஏற்படுத்தியுள்ளது. ஒருங்கிணைந்த நகர வளர்ச்சி திட்டங்களுக்கான உதவித் தொகை இந்நிதி மூலமாக அளிக்கப்படும்.

**சிறிய நடுத்தர நகரங்களுக்காக மாநில நிதி.**

எல்லா சிறிய நகரங்களுக்கும் மைய உதவி கிடைக்காததாகையால் ஓர் ஆண்டில் சுமார் 30 நகரங்கள் உதவியைப் பெறுவதற்கென தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று குழு முடிவு செய்துள்ளது. அதாவது ஐந்தாண்டு காலத்திற்கு ஒரு நகரத்திற்கு ரூ. 20 இலட்சம் என்ற முறையில் இவ்வுதவி அமையும். ஓசூர், குடியாத்தம், கிருஷ்ணகிரி ஆகிய நகரங்களின் திட்டங்களுக்கு ஏற்கெனவே. ஒப்புதல் அளிக்கப்பட்டு மேற்கண்ட ஒவ்வொரு நகரத்திற்கும் ரூ. 2 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது. நகர்-ஊரமைப்பு மற்றும் வளர்ச்சி நிதிக்கு 1979-80-ல் ரூபாய் 3.79 கோடியும், 1980-81-ல் ரூபாய் 2 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

**நகர் மையங்கள்.**

1.6. இம்மாநிலம் முழுவதும் பரவலாக உள்ள சுமார் 300 நகர் மையங்களுக்குத் திட்டம் தயாரிக்கும் பெரும்பணியை விரைவாக மேற்கொள்ளும் பொருட்டு, நகர்-ஊரமைப்பு இயக்ககத்தில் நகர்த்திட்டப் பிரிவு (Town Project Division) என்ற தனியான ஒரு பிரிவை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. நகர் மையங்களுக்காக ஒருங்கிணைந்தத் திட்டங்களை உருவாக்கி அத்திட்டங்களைச் செயற்படுத்துதலைக் கண்காணித்து மதிப்பீடு செய்யும் பொறுப்புகள், இப்புதிய பிரிவிற்கு கொடுக்கப்படும். மிகக் குறுகிய காலத்தில் அதிக அளவிலான திட்டங்கள் விரைவாக நிறைவேற்றப்



படும். 31 பகுதிகளில் புதிய நகர் வளர்ச்சிக் குழுமங்களை ஏற்படுத்தவும் தமிழ்நாடு அரசு உத்தேசித்துள்ளது. ஓசூருக்கு அருகில் விரைவாக வளர்ச்சி ஏற்படுவதைக் கருத்திற்கொண்டு, தமிழ்நாடு அரசு ஏற்கெனவே புதிய நகர் வளர்ச்சி குழுமம் ஒன்றை இங்கு அமைத்துள்ளது. 1980-81-ல் இதுபோன்று மேலும் 5 குழுமங்கள் அமைக்கப்படும். இவ்விரு திட்டங்களுக்கு நிதி ஆண்டு 1980-81-ல் ரூ. 9.00 இலட்சம் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நகர் ஊரமைப்பு மற்றும் வளர்ச்சி நிதி.**

1.7. இந்த நகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு அரசு இம்மாநிலம் முழுவதிலுமுள்ள பெரும்பான்மையான ஆக்கப்பணிகளுக்கு பண முதலீடு செய்து (Funding) பணியின் வளர்ச்சியைக் கவனிக்க வேண்டியுள்ளது. இதற்காக அரசு, 1971 ஆம் ஆண்டின் நகர்-ஊரமைப்புச் சட்டத்தின் கீழ், நகர் ஊரமைப்பு மற்றும் வளர்ச்சி நிதி ஒன்றை ஏற்படுத்தி உள்ளது. நகர் ஊரமைப்பு (மாநில) வாரியத்தின் குழு இந்நிதியை மேலாண்மை செய்யும். இக்குழு பணியினை தொடங்கி பல்வேறு நகரங்களுக்கு பல திட்டங்களைத் தீட்டியுள்ளது. மத்திய அரசின் நிதி உதவியால் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டங்களுக்கும், உள்ளாட்சி நிறுவனங்களால் நிறைவேற்றப்படவிருக்கும் நல்ல வருவாய் தரும் திட்டங்களுக்கும். வளர்ச்சி மையங்களின் மூலம் கிராம வளர்ச்சி திட்டங்களுக்கும், நகராட்சி மற்றும் பேரூராட்சி நகரங்களில் கட்டணக் கழிப்பிடம் கட்டுவதற்கான திட்டங்களுக்கும், இந் நிதி மூலமாகவே பண செய்யப்படும்.

வீட்டு வசதி மற்றும் நகர் வளர்ச்சித் துறையின் ஆணையர் மற்றும் அரசுச் செயலாளரைத் தலைவராகவும் நிதித்துறையின் ஆணையர் மற்றும் அரசுச் செயலாளரை உறுப்பினராகவும் கொண்ட இக்குழுவிற்கு, ஆக்கப்பணிகளுக்கு ஒப்புதல் வழங்கவும், அப்பணிகளுக்காக செலவீட்டுத் தொகையை அளிக்கவும் அதிகாரமுள்ளது. ரூபாய் 25 இலட்சத்திற்கு மேலாக மதிப்பீடு கொண்ட பணிகளுக்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் வழங்கும். சிறிய பணிகளுக்கு குழுவே ஒப்புதல் அளித்துவிடும்.

**ஊரகப்பகுதி திட்டப்பணி.**

1.8. இந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்திற்குத் துணையாக ஊரகப் பகுதிகளையும் திட்டமிட்டு அமைக்கும் பணியினை சென்ற ஆண்டின் ஆளுநர் உரையில் குறிப்பிட்டுள்ளபடி மேற்கொள்ளப்படும். ஊராட்சி ஒன்றியத் திற்கான திட்டத்தின் அடிப்படையில் இந்த இயக்கம் 12 முதற்படி வளர்ச்சித்

திட்டங்களை ( Out Line Development Plan ) தயாரித்துள்ளது. இத் திட்டங்கள் மாவட்ட வளர்ச்சிக் குழுவில் வைத்து முடிவு செய்யும் நிலையில் உள்ளன. இத்திட்டங்கள் மாநில அரசின் பல்வேறு நிறுவனங்களால் செயற் படுத்தப்படும். இத்திட்டத்தால் கிராமப் பகுதிகளும் நில அமைப்பின் வடிவமைப்பில் ( Frame-Work ) இணைக்கப்பட்டு, நேரிடையான பயன்களை அடைய முடியும்.

கட்டிட விதி தொகுப்பு

1.9. இவ்வியக்ககம் இந்திய தரக்கட்டுப்பாடு நிறுவனத்துடன் கலந்தறிந்து, அறிவியல் அடிப்படையில் கட்டிட விதிகளின் தொகுப்பு ஒன்றை தயாரித் துள்ளது. இத்தொகுப்பு இந்திய தரக்கட்டுப்பாடு நிறுவனம் வெளியிட்ட பற்பல கட்டிடம் தொடர்பான படித்தரங்களை ( ) ஒன்று சேர்த் துள்ளது. இக்கட்டிட விதி தொகுப்பினை தொடர்ச்சியாக மறுபரிசீலனை செய்யவும், அவ்வப்போது தகுந்த மாற்றங்களைத் தெரிவிக்கவும் தமிழ்நாடு அரசு நிலையான நிபுணர் குழு ஒன்றை அமைத்துள்ளது. அடிக்கடி புயல் அழிவு ஏற்படும் கடற்கரை பகுதிகளுக்கும், நிலச்சரிவு நிகழும் மலைப் பகுதி களுக்கும் தனியான கட்டிட விதிகள் இவ்வியக்ககம் உருவாக்கியுள்ளது.

நகரமைப்பு விதி தொகுப்பு

1.10. கட்டிடங்களுக்கு அனுமதி வழங்குவதில் சீரான, பயனான கொள்கை களையும், முறைமைகளையும் மேற்கொள்ள தற்போதுள்ள எல்லா விதிகளையும் வழக்காறுகளையும் Convention தொகுத்து ஒரு சிறு புத்தகத்தை இவ் வியக்ககம் தயாரித்து வருகிறது. இம்மாநிலத்தின் பல பகுதிகளுக்கான முழுமைத் திட்டங்களையும், விரிவு அபிவிருத்தி திட்டங்களையும் தயாரிப்பதை இவ்வியக்ககம் தொடர்ந்து மேற்கொள்ளும்.

முக்கிய ஆய்வுகளை வெளியிடுதல்

1.11. இவ்வியக்ககம் தன்னுடைய பணிகளில் மேலும் கருத்து செலுத்தவும், பொது மக்களுக்கும் கல்விச் சாலைகளுக்கும் இடையே நல்ல தொடர்பை ஏற்படுத்தவும் நகர் மற்றும் மண்டல திட்டங்களில் முக்கிய சில ஆய்வுக் கட்டு களை வெளியிடும் திட்டம் ஒன்றை உத்தேசித்துள்ளது. நகர் மற்றும் மண்டல வளர்ச்சி நுணுக்கங்களை பொது மக்கள் நன்கு அறிந்துகொள்ளவும், அத் திட்டங்களில் அவர்கள் பங்குபெற தூண்டவும், இவ்வெளியீடுகள் பயன்படும்.



நகர் ஊரமைப்பு இயக்ககம் வரைமைப்புத் திட்டத்தின்கீழ், வட்டார மேம்பாடு திட்டத்தை தீட்ட உத்தேசித்துள்ளது. இதுவரை பண்ருட்டி மற்றும் சிவகங்கை வட்டங்களுக்கு மேற்சொன்ன திட்டங்களை தீட்டியுள்ளது.

மத்திய தகவல் அமைப்பு

1.12. இம்மாநிலம் முழுவதும் ஏற்படுத்தப்படும் நகர்ப்புற வளர்ச்சியை திட்டமிட மேற்கொள்ளும் திறமுறைகளை (S- e ies) நன்கு செயல்படுத்த, நகர்ப்புற பகுதிகளைப்பற்றிய மத்திய தகவல் அமைப்பு (Urban Infor-maion Syst-m) ஒன்றை அமைத்தல் இன்றியமையாதது. இவ்வமைப்பு, தகவல் வைத்திருக்கும் நிறுவனங்களின் பணிகளையும், நகர்ப் பகுதிகளில் தகவல்களைப் பயன்படுத்தும் பல்வேறு நிறுவனங்களின் பணிகளையும் ஒருமுகப்படுத்தும். இவ்வமைப்பிற்கான தொடக்கப் பணிகள் புதுடெல்லி யிலுள்ள மத்திய அரசின் நகர்-ஊரமைப்பு நிறுவனத்துடன் கலந்தறிந்து செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அடுத்த நிதியாண்டில் இந்த அமைப்பு தன் பணியினைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பெரிய நகர்ப் பகுதி களுக்கான வான்வெளிப் படங்களை வாங்கிச் சேர்த்து வான்வெளி நிழற்பட விளக்கப் பிரிவு ஒன்றை இவ்வியக்ககம் அமைத்துள்ளது.

இயற்கை சீற்றத்தை தடுக்கும் திறன்

1.13. இவ்வியக்ககம் இம்மாநிலத்தில் ஏற்படும் இயற்கைச் சீற்ற அழிவைத் தடுக்கும் திட்டங்களைத் தயாரிக்கும் தன் திறனை மேம்பாடு செய்யும் பணி யினைத் தொடரும். இத்துறையில் இவ்வியக்ககம் ஏற்கெனவே செய்த பணிகள், பெரும் பாராட்டைப் பெற்று, உலகச் செஞ்சிலுவைச் சங்கம், ஐரோப்பிய பொருளாதாரக் குழு போன்ற நிறுவனங்களின் உதவியுடன் தமிழகக் கடற்கரை பகுதியில் 82 புயல் பாதுகாப்புக் கூடங்களைக் கட்டும் திட்டம் ஒன்று உருவாகக் காரணமாயிற்று. புயல் மற்றும் வெள்ள நிவாரணப் பணிகளில் ஈடுபடும் ஆட்சி யாளர்களுக்கும் ( A m tra s ) மற்றும் பலருக்கும் அறிவியல் அடிப் படையிலான பயிற்சித் திட்டங்களை இவ்வியக்ககம் வரும் நிதியாண்டில் அமைக்கும். புயல், வெள்ளம் ஆகியவற்றால் ஏற்படும் இழப்பு மற்றும் அழி வினைக் குறைக்க, கடலோரப் பகுதிகளில் அமைந்துள்ள கட்டுமானங்களில் சிறுசிறு மாற்றங்களைச் செய்து, அவைகளை உறுதிப்படுத்தும் திட்டத்தினை இவ்வியக்ககம் அடுத்த நிதியாண்டில் தயாரித்து முடிக்கும்.

**2. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்**

2.1. சென்னை பெருநகர்ப் பகுதியின் சீரான வளர்ச்சிக்குத் திட்டமிடுவதற்கென்றே அமைக்கப்பட்ட சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தோற்றுவிக்கப்பட்டு ஆறாண்டுகளே ஆகியுள்ளன. தற்போது இக்குழுமம், வளர்ச்சியினைத் திட்டமிடுதல், திட்டப் பணிகளை ஒருங்கிணைத்தல், கண்காணித்தல், மேம்படுத்துதல் ஆகிய பணிகளுடன் வளர்ச்சியினை ஒழுங்குபடுத்தும் பணியினையும் மேற்கொண்டுள்ளது. குடியிருப்பு, குடிநீர், சாலைகள், போக்குவரத்து, குடிசைப் பகுதிகள் மற்றும் சமுதாய நலம் போன்ற பல பிரிவுகளுக்கான செயல் திட்டங்களைக் கொண்ட, உலக வங்கி உதவியுடன் செயலாக்கப்படும் சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தை, தமிழக அரசின் பணிப்பின்படி இக்குழுமம், ஒருங்கிணைத்தும், கண்காணித்தும் வருகின்றன. விரைவாக செயல்படுத்தப்பட்டு வரும் இக்குழுமத்தின் பல்வேறு பணிகளைப் பற்றிய சிறப்பு அம்சங்களைக் கீழே காணலாம்.

**வட்டார வளர்ச்சித் திட்டம்**

2.2. வட்டார வளர்ச்சித் திட்டம் ( Area Development Project ) சென்னைப் பெருநகர் குழுமத் திட்டத்தில் ஏற்கப்பட்டுள்ள செயல் நோக்கத் திற்கு ஏற்ப வேறு எந்த ஒரு அரசுத் துறையும் செயல்படாத சில குறிப்பிட்ட பகுதிகளை எவ்வாறு எந்நோக்கில் மேம்படுத்த வேண்டுமோ, அவ்வவ்வாறே சரியான முறையில் மேம்படுத்தும் திட்டமாகும். மணலி புறநகர் மையம் மற்றும் மறைமலைநகர் புது நகர் திட்ட வேலைகள் மேற்கொள்ளப்பட்டு 1974-75 ஆம் ஆண்டிலிருந்து முன்னேறி வருகின்றன.

**மணலி புறநகர் திட்டம்**

2.3. மணலி புற நகர்த் திட்டம், இப்பகுதிவாழ் தொழிலாளர்களுக்கும் மற்றவர்களுக்குமான வீட்டு வசதித் திட்டமாகும். இத்திட்டத்தின் முதல் கட்டத்தின்கீழ் 2,766 வீட்டு மனைகள் தவிர, வீடுகள் கட்டுவதற்கான 43 ஹெக்டேர் வசதி பெற்ற நிலப்பரப்பும் உருவாக்கப்படும். கடைப் பகுதிகள், அங்காடி, பள்ளிகள், விளையாட்டு மைதானங்கள், சாலைகள், பூங்காக்கள், திறந்தவெளிகள் மற்ற பொது வசதிகளுக்கான இடங்கள் முதலியன சுமார் 38.38 ஹெக்டேர் நிலப் பரப்பில் அமையும். இத்திட்டம் மத்திய அரசின் 'ஹட்கோ' ( HUDCO ) நிறுவன உதவியையும் பெறுகிறது. இதுவரை 543 வீடுகள் கட்டப்பட்டு, தொழிலாளர்களுக்கும் மற்றவர்களுக்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இரண்டாவது கட்டமாக 417 வீடுகள் கட்டும்பணி,



1979-80 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதல் கட்டத்தில் இரண்டாம் பாகத்தின்கீழ் 1980-81 ஆம் ஆண்டில் 46 ஹெக்டேர் பரப்பில் குறைந்த வருவாயினருக்கான 417 வீடுகள் எடுத்துக்கொள்ளப்படும்.

**மறைமலை நகர் :**

2.4. சென்னை நகரிலிருந்து சுமார் 45 கிலோமீட்டர் தொலைவில், சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையிலும், சென்னை-திருச்சி இரயில் பாதையிலும் அமைந்துள்ள மறைமலை நகர் என்ற இப்புது நகர், சுமார் ஒரு இலட்சம் மக்கள் வசிக்கும் அளவில் திட்டமிடப்பட்டுள்ளது. சுமார் 1,600 ஹெக்டேர் பரப்பில் அமையும் இத்திட்டத்தில், தற்போது குடியிருப்புப் பகுதிகளுக்காக சுமார் 100 ஹெக்டேரும், தொழிற்சாலைகளுக்காக சுமார் 120 ஹெக்டேரும் அடிப்படை வசதிகளுடன் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டம், 1,230 குடியிருப்பு மனைகளும், 57 தொழிற்சாலைகளுக்குமான மனைகளும் உருவாக வகை செய்கின்றது. இதில் 314 குடியிருப்பு மனைகளும், 46 தொழிற்கூட மனைகளும் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 'ஹட்கோ' உதவியுடன் 144 குறைந்த வருவாயினருக்கான வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இரண்டாவது கட்டமாக, சுற்றுப்புறத் திட்டம் 1-ல் 214 குறைந்த வருவாயினருக்கான வீடுகளும், சுற்றுப்புறத் திட்டம் 2-ல் 216 குறைந்த வருவாயினருக்கான வீடுகளும், 30 நடுத்தர வருவாயினருக்கான வீடுகளும் 1979-80 ஆம் ஆண்டு முதல் கட்டப்பட்டு வருகின்றன. சுற்றுப்புற திட்டம் 2 மற்றும் 3-ல், 25 ஹெக்டேர் பரப்பில் குறைந்த வருவாயினருக்கான 504 வீடுகளும், மிகக் குறைந்த வருவாயினருக்கான 214 வீடுகளும், நடுத்தர வருவாயினருக்கான 30 வீடுகளும், ரூபாய் 186 இலட்சம் செலவில் கட்டும் பணி 1980-81 ஆம் ஆண்டில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

**விரிவான வளர்ச்சித் திட்டம் :**

2.5. முழுமைத் திட்டத்தின் ஒழுங்கு முறை விதிகளைச் செயலாக்குவதும், சென்னைப் பெருநகர்ப் பகுதியில், குறிப்பாக சென்னை நகரின் பல்வேறு பகுதிகளில் விரிவான வளர்ச்சித் திட்டங்களைத் தயாரிப்பதும், இத்திட்டத்தின் கீழ் உத்தேசிக்கப்பட்டுள்ளது. திட்ட அனுமதிகள் வழங்கும் முறையினை சீரான நிர்வாக வழிமுறைகள் மூலம் விரைவுபடுத்த எற்கனவே இந்தக் குழுமமும், சென்னை மாநகராட்சியும் தேவையான மாறுதல்களைக் கொண்டுவந்துள்ளன. விரிவான திட்டங்கள் அமைத்திட சென்னை நகரம் 99 திட்டப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 41 பகுதிகளுக்கான விரிவான

வளர்ச்சித் திட்டங்கள் இதுவரை அறிவிக்கப்பட்டு, அத்திட்டங்கள் தயாரிக்கும் பணி பல்வேறு நிலைகளில் உள்ளன. இதில் இரண்டு திட்டங்களுக்கு அரசு திட்ட அங்கீகாரம் அளித்துள்ளது. 1980-81 ஆம் ஆண்டில் மேலும் 8 பகுதிகளில், விரிவான திட்டங்கள் அமைப்பது பற்றி உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**கொத்தவால்சாவடிச் சந்தையைக் கோயம்பேட்டிற்கு மாற்றுதல் :**

2.6. கோயம்பேடு பகுதியினில் சுமார் 120 ஹெக்டேர் பகுதியில், 3,000 கடைகள் அமைக்கும் முகமாக ஒரு புதிய மொத்த விற்பனை அங்காடி ஒன்றினை ஏற்படுத்தும் இத்திட்டம் 1979-80 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. சுமார் மூன்று ஆண்டுகளுக்குள் இந்தத் திட்டம் நிறைவுபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான நில ஆர்ஜித வேலை 1980-81 ஆம் ஆண்டின் முதற் பகுதியில் முடிவு பெறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பகுதியில் அடிப்படை தேவைகளை அமைக்கும் பணி 1980-81 ஆம் ஆண்டில் தொடங்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வெளியூர் பேருந்துகளுக்கான நிலையங்கள் :**

2.7. சென்னை நகரில் மத்திய பகுதியில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், பேருந்து வசதிகளைச் சீரமைக்கவும், சென்னை நகரின் வெளிப் பகுதியில் மூன்று உள் வட்டச் சாலை அருகில், மூன்று பேருந்து நிலையங்களை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது, இவைகளுக்கான நில ஆர்ஜிதப் பணி நடந்துகொண்டு வருகின்றது.

திட்டமிட்டுள்ள மூன்று பேருந்து நிலையங்களில் ஒன்று, சென்னை-பெங்களூர் சாலையில், கோயம்பேடு புதிய போங்காடியின் பகுதியாக அமைய விருக்கிறது. இத்திட்டத்திற்குத் தேவையான நிலம் 1980-81 ஆம் ஆண்டில் குழுமத்தின் வசம் வந்து இவ்வாண்டிலேயே பேருந்து நிலையத்திற்கான ஆக்க வேலைகள் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**கனரக வாகன முனைகள் :**

2.8. சென்னை நகரிலிருந்து செல்லும், மூன்று முக்கிய தேசிய நெடுஞ் சாலைகளில், உள் வளைவு சாலையின் அருகில், மூன்று கனரக வாகன முனைகள் அமைக்கப்பட இருக்கின்றன. அவற்றில் ஒன்று, தற்போது கோயம்பேடு பகுதியில் உருவாகி வரும் புதிய போங்காடியின் பகுதியாக அமையவிருக்கிறது. இதற்கான நிலம் 1980-81 ஆம் ஆண்டில் எற்கப்பட்டு தொடங்கப் பெறும்.





**சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் I.**

2.9. சென்னை பெருநகர்ப் பகுதியின் திட்டமிட்ட முறையான வளர்ச்சிக்கும், உடனடித் தேவைகள் மற்றும் நீண்டகால தேவைகளுக்கும் ஏற்ற வகையில் சென்னை பெருநகர்ப் பகுதியில் வாழும் ஏழை எளிய மக்களுக்கும் நேரடியான முறையில் பயனளிக்கும் வண்ணம் நிதி முதலீடுகளை செய்விக்கும் பொருட்டு இக்குழுமத்தினால் சென்னை நகர வளர்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டு 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் நாள் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ரூ. 46.80 கோடி மதிப்பீடு கொண்ட இத் திட்டத்திற்கான நிதியினை தமிழக அரசு தன் சொந்த வருவாயிலிருந்தும், மத்திய அரசின் கடனுதவியிலிருந்தும் அளிக்கும். இந்த திட்டத்திற்காக உலக வங்கி இந்திய அரசு மூலமாக தமிழக அரசுக்கு ரூ. 21.6 கோடி கடனாக வழங்க இசைந்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் தன்னிறைவு வீட்டு திட்டம், குடிசைப் பகுதி மேம்பாடு, வேலைவாய்ப்புத் திட்டம், சமூக மேம்பாட்டுப் பணிகள், போக்குவரத்துப் பணிகள் போன்ற துறைகளில் கணிசமான அளவில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமம் மேற் குறித்த பணிகளை தமிழக அரசின் பல்வேறு நிறுவனங்கள் மூலமாக செயலாக்கவும் திட்ட முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும் பொறுப்பு ஏற்றுள்ளது.

1979-80-ம் ஆண்டு வரை இந்த திட்டத்திற்கான செலவினம் ரூ. 22.98 கோடியாகும். 1980-81 ஆம் ஆண்டு ரூ. 15.90 கோடி இத்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்.**

2.10. சென்னை பெருநகர்ப் புற பகுதியில் பல்வேறு அரசுத் துறை நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வந்த குடிநீர் வசதி, கழிவு நீர் வடிகால் அமைத்தல், சாலைகள் அமைத்தல், வட்டார வளர்ச்சிப் பணி போன்ற பல்வேறு பணிகள் 1974-75 ஆம் ஆண்டு இந்திய அரசு உதவி பெறும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தில் கொண்டு வரப்பட்டு 1978-79 ஆம் ஆண்டு வரை தொடரப்பட்டது.

தற்போது செயலிலிருக்கும் திட்டங்களின் மதிப்பீடு ரூ. 35.97 கோடியாகும். 1979-80 ஆம் ஆண்டு முடிவு வரை மொத்த செலவினம் ரூ. 27.45 கோடி ஆகும். 1980-81 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ. 4.52 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் II.

3.11. ரூ. 53.31 கோடி செலவிலான இரண்டாவது சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தினை உலக வங்கி முடிவு செய்துள்ளது. சென்னைப் பெரு நகரில் உள்ள ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த குறைந்த செலவில் திட்டங்கள் வகுப்பதே முதல் மற்றும் இரண்டாம் திட்டங்களின் தலையாய நோக்கமாகும்.

## 8. நகராட்சிகள்.

### நகராட்சி நிர்வாகம் :

நகராட்சிகளின் ஆய்வாளர் அவருக்கு உதவியாக இணை ஆய்வாளர்களும் நகராட்சிகளில் முறையான நிர்வாகத்திற்கு பொறுப்புடையவர்கள். மேலும், நகராட்சிகளின் ஆய்வாளருக்கு உதவியாக மதுரை, சேலம், திருநெல்வேலி, தஞ்சாவூர், வேலூர் ஆகிய இடங்களில் வட்டார ஆய்வாளர்கள் ஐந்து பேர் உள்ளனர். வட்டார ஆய்வாளர்களுக்கு சில அதிகாரங்கள் வழங்கப் பட்டுள்ளன. மேலும் அவர்கள் முதல் நிலை நகராட்சிகள் வரை தத்தமது வரைமுறையில் உள்ள நகராட்சிகளையும் ஆய்வு செய்து வருகின்றனர். சிறப்பு மற்றும் தேர்வு நிலை மாநகராட்சிகளின் ஆய்வு மற்றும் மேற் பார்வைக்கு ஆய்வாளர்கள் பொறுப்பாவார்.

தற்போது மொத்தம் 107 நகராட்சிகள் (8 நகரியக் குழுக்கள் உட்பட) உள்ளன.

| | |
|---|---|
| சிறப்பு நிலை | 5 |
| தேர்வு நிலை | 12 |
| முதல் நிலை | 32 |
| இரண்டாம் நிலை | 34 |
| மூன்றாம் நிலை | 24 |



அரசினரால் வரையறுக்கப்பட்டுள்ள கோட்பாடுகளுக்கிணங்க கீழ்க்கண்ட நகராட்சிகளின் நிலை 1979-80 ஆம் ஆண்டு உயர்த்தப்பட்டுள்ளது :—

1. ஆலந்தூர் (இரண்டாம் நிலையிலிருந்து முதல் நிலையாக).
2. அருப்புக்கோட்டை (இரண்டாம் நிலையிலிருந்து முதல் நிலையாக).
3. ஈரோடு (தேர்வு நிலையிலிருந்து சிறப்பு நிலையாக).

1—4—1980 முதல் சீர்காழி நகராட்சியையும் மூன்றாம் நிலையிலிருந்து இரண்டாம் நிலைக்கு உயர்த்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

### நகராட்சித் தேர்தல்கள்.

1976 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1 ஆம் தேதி முதல் கோயம்புத்தூர் நகராட்சி தவிர மற்ற எல்லா நகராட்சிகளும் தனி அதிகாரிகளின் நிர்வாகத்தில் உள்ளன. அவர்களது நீட்டிக்கப்பட்ட பதவிக் காலம் 30—9—1980-ல் முடிவடைய இருக்கிறது. கோயம்புத்தூர் நகராட்சி 1—7—1975 முதல் தனி அதிகாரியின் நிர்வாகத்தில் உள்ளது. கோயம்புத்தூரைப் பொறுத்தவரையில் அதனை மாநகராட்சியாக மாற்றிய பின்னரே தேர்தல்கள் நடத்த வேண்டுமென அரசு தீர்மானித்துள்ளது. கோவை மாநகராட்சி வரைவு-மசோதா மைய அரசின் ஒப்புதலுக்காகவும், குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காகவும் அனுப்பப்பட்டுள்ளது. மைய அரசு, இவ்வரைவு மசோதா அதன் பரிசீலனையில் உள்ளது எனத் தெரிவித்துள்ளது. உள்ளாட்சித் தேர்தலுக்கு வாக்களிக்கும் வயது வரம்பை 21 வயதிலிருந்து 18 வயதாகக் குறைக்க அரசு முடிவெடுத்துள்ளது. அவ்வகையில் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி சட்டங்களை திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### நகராட்சி நிதிநிலைமை ஆய்வுக்குழு.

இந்தியாவிலேயே தமிழ்நாடு அதிகமான நகர்ப்புற பகுதிகளைக் கொண்டுள்ளது. நகர்ப்புற மக்கட் தொகையும் மிக அதிகமாக உள்ள இரண்டு மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாகும். மக்களின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்ய நகர்மன்றங்களுக்கு கூடுதல் பொறுப்புகள் நாளுக்கு நாள் பெருகி வருகின்றன. ஆனால் நகர்மன்றங்களை எதிர்நோக்கி உள்ள முக்கிய பிரச்சினை நிதி பற்றாக்குறைதான். நகர் மன்றங்களின் நிதி

நிலைமையைப் பெருக்குவதற்காக ஆலோசனைகளை அளிக்கும் பொருட்டு அமைக்கப்பட்ட நகராட்சி நிதிநிலைமை ஆய்வுக்குழு தனது விரிவான அறிக்கையை அண்மையில் சமர்ப்பித்துள்ளது. ஆய்வுக் குழுவின் அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

பெரிய திட்டங்கள்.

(1) குடிசைப் பகுதிகள் விரைவு மேம்பாட்டுத் திட்டம்.

பெரிய நகராட்சி நகரங்களில் குடிசைப் பகுதிகள் அதிக அளவில் உள்ளன. இத்திட்டம் முதன் முதலாக திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் நகராட்சிகளில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டது. இந்நகரங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில குடிசைப் பகுதிகளில் குடிநீர், சாலைகள் அமைத்தல், பொது கழிப்பிடங்கள் கட்டுதல், சாக்கடை வசதி, மின்வசதி போன்ற அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டன. இதனால் 50 குடிசைப் பகுதிகளில் உள்ள 70,000 மக்கள் தொகை கொண்ட 14,000 குடும்பங்கள் பயனடைந்தன. மேலும் சென்ற ஆண்டு இத்திட்டம் 1,57,000 மக்கள் தொகை கொண்ட 35,000 குடும்பங்கள் அடங்கிய ஆறு நகராட்சிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்த 1980-81 வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(2) நவீன கட்டண கழிப்பிடங்கள் கட்டும் திட்டம் :

சமீப ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களில் ஒரு முக்கியமான திட்டம் ஒவ்வொரு நகரின் முக்கிய பகுதிகளில் நவீன கட்டண கழிப்பிடங்கள் கட்டும் திட்டமாகும். இதுவரை 36 நகராட்சிகளில் ரூ. 25.00 இலட்சம் செலவில் 46 நவீன கட்டண கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன இத்திட்டம் அனைவராலும் ஒருமனதாக பாராட்டப்பட்டு மேலும் இது போன்ற பல கழிப்பிடங்கள் கட்டுவதற்கு ஊக்கம் அளித்துள்ளது. சென்ற ஆண்டு 22 கழிப்பிடங்கள் கட்டுவதற்காக ரூ. 10.00 இலட்சம் 12 நகராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் மேலும் சில நகராட்சிகள் இத் திட்டத்தை மேற்கொள்ளும் வகையில் ரூ. 10.00 இலட்சம் நிதியுதவி அளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வருவாய் பெருகும் இனங்கள்.

வருவாயினைப் பெருக்கக்கூடிய திட்டங்களை நகராட்சிகள் நிறைவேற்றுவதற்கென, நகராட்சிகளின் ஆய்வாளர் மூலமாக இதுவரை உதவியளிக்கப்பட்டு





வந்தது. இத்திட்டத்தை இப்போது நகர் கிராம திட்ட வாரியத்தின் குழுவின் அதிகாரத்திற்குள் அரசு கொண்டுவந்துவிட்டது. 1979-80-ல் ரூபாய் 66.61 இலட்சம் மதிப்புள்ள திட்டங்களுக்கு இக்குழு ஒப்புதல் அளித்து 14 நகராட்சிகளுக்கென முதல் தவணையாக ரூபாய் 40.13 இலட்சம் அளித்துள்ளது.

வெள்ள நிவாரணப் பணிகள் :

மாநிலத்தின் பல பகுதிகள் பெரும் மழை, வெள்ளம், நிலச்சரிவு முதலியவற்றால் பாதிக்கப்பட்டு, நகராட்சிகளின் சொத்துக்கள், சாலைகள் பாலங்கள் முதலியவற்றிற்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. இதனைப் பழுது பார்ப்பதற்கும், வெள்ளத்தாலும், நிலச்சரிவுகளாலும் மேற்கண்ட பெரும் சேதங்கள் இனிவரும் ஆண்டுகளில் ஏற்படாமல் தடுப்பதற்கும் பல திட்டங்கள் கடந்த இரண்டு ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டன. வெள்ள நிவாரண வேலைகளுக்காக அரசு ரூபாய் 331.00 இலட்சம் (கடன் ரூபாய் 115.00 மான்யம் ரூபாய் 216.00 இலட்சம்) கடந்த இரண்டு ஆண்டுகளில் வழங்கியுள்ளது. அனைத்துப் பெரிய சாலை வேலைகள், ஒப்பந்தப்பு வேலைகளாக, நெடுஞ்சாலைத் துறையினராலும் மீதியுள்ள வேலைகள் நகராட்சிகளாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ரூபாய் 260.00 இலட்சம் செலவில் மேலும் சில வேலைகள் 1980-81-ல் எடுக்கப்படவிருக்கின்றன.

பயிற்சி நிலையம் :

நகராட்சி நிர்வாகத்தை திறமையுடன் நடத்தும் பொருட்டு நகராட்சி ஆணையர்களுக்கும், நகராட்சி பணியாளர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்கென்று ஒரு பயிற்சி நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டு இதற்கான பூர்வாங்க வேலையை தொடங்க தனி அதிகாரி நியமிக்கப்பட்டார். இப்பொருள் பற்றி தனி அதிகாரியால் சமர்ப்பிக்கப்பட்ட செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

## இணைப்பு III

[....43-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பை காண்க.]

## தமிழ்நாட்டில் சாலை மேம்பாட்டுத் திட்டம்.

### 1979-80 ஆம் ஆண்டுக்கான ஆய்வுரையும் 1980-81 ஆம் ஆண்டுக்கான திட்டங்களும்.

1. இந்நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்குத் தகுந்த முறையில் சாலைகளை அமைப்பதும், மேம்பாடு செய்வதும் ஒரு முக்கிய வழியாகும். சாலைகளும், சாலைப் போக்குவரத்தும் அத்தகைய ஒரு முன்னேற்றத்திற்கு அடிப்படைத் தேவையாக அமைகிறது. ஒரு நாட்டின் சாலை வளர்ச்சியும், பொருளாதார வளர்ச்சியும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புள்ளவை.

2. இந்நாடு சுதந்திரம் அடைந்த பின்பு, திட்டப் பணிகள் மூலம் இந்நாட்டில் பல்வேறு துறைகளில் குறிப்பாக நீர்ப்பாசனம், விவசாயம், தொழில், வனம், மீன்வளம், சமூக நலம், மலைவாழ் மக்கள் மேம்பாடு போன்ற பல்வேறு துறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நாட்டின் முன்னேற்ற வளர்ச்சிக்கு சாலை முன்னேற்றம் அடிப்படையான பணி ஆகும். இந்நாட்டின் முன்னேற்றத்திற்கான நல்ல பலனை அடைவதற்கு அடிப்படையான சாலை வசதியை முன்னோடியாகக் கொண்டு மற்றைய ஆக்கப் பணிகளுடன் இணைந்து செயல்படுவது அவசியம்.

3. மாநில நெடுஞ்சாலை-கிராமப் பணித்துறை பின்வரும் சாலை வகைகளின் கீழ் அதாவது தேசிய நெடுஞ்சாலை (நகர்ப்புறம்), மாநில நெடுஞ்சாலை, மாவட்ட பெருஞ்சாலைகள், மாவட்ட பிற சாலைகள் என்பதன் கீழ் சாலைகளைப் பராமரித்து வருகிறது. பல்வேறு வகை சாலைகளின் நீளம் பற்றிய விவரம் வருமாறு :—

| | கிலோ மீட்டர். |
|---|---|
| தேசிய நெடுஞ்சாலைகள் (நகர்ப்புறம்) .. .. | 137 |
| மாநில நெடுஞ்சாலைகள் .. .. .. | 1,814 |
| மாவட்ட பெருஞ்சாலைகள் .. .. .. | 13,948 |
| மாவட்ட பிற சாலைகள் .. .. .. | 17,569 |
| மொத்தம்.. | 33.468 |

மேலும், இத்துறையானது மைய அரசு பொறுப்பேற்கும் பணிகளை, அதாவது மாநிலங்களுக்கிடையே பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த திட்டப் பணிகள், மலைவாழ் பகுதி





மேம்பாட்டுத் திட்டம், மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் போன்ற மத்திய அரசுத்துறைத் திட்டப் பணிகள், மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப் பட்ட திட்டப் பணிகள் முதலிய பல பணிகளை மேற்கொள்கிறது. தேசிய நெடுஞ்சாலை (கிராமப்) பணிகளுக்காக, நெடுஞ்சாலைத் துறை அப்பணிகளின் பேரில் ஒன்பது சதவிகிதம் ஏஜென்சி செலவுகளாக (Agency charges) வசூலிக்கிறது.

<u>திட்டப் பணிகள்:</u>

4. தற்போதுள்ள உறுதியற்ற கட்டுமானங்களை உறுதியுடன் கட்டுதல், பாலம் கட்டப்படாத கடவுப்பாதைகளில் மதகுகளும் பாலங்களும் கட்டுதல், நடைபாதைகளை அகலப்படுத்துதல் உறுதிப்படுத்துதல், வடிவமைப்பு இயல் மேம்பாடு போன்ற மூலப் பணிகள் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. மாநில சாலைப்பணித் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு துணைத் திட்டப் பணியைப் பொறுத்த வரையிலும் அவற்றின் நோக்கத்திற்கிணங்க அடைந்த சாதனை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(அ) தேசிய நெடுஞ்சாலைகள் (நகர்ப்புறம்).—1979–80-ல் ரூ. 10 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 16 புதிய பணிகளுக்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. (பணிகள் பற்றிய பட்டியலை இணைப்பு 1-ல் காண்க.) 1979–80-ல் ரூ. 9.15 இலட்சம் செலவிடப்பட்டது. 1980–81ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 10.51 இலட்சமாகும். இத்திட்டத்தின் கீழ் எஞ்சிய பணிகளைச் செய்து முடிக்க கருதப்பட்டுள்ளது. 1980–81-ல் ரூ. 8.00 இலட்சம் செலவில், 6 புதிய பணிகளுக்கு ஒப்புதலளிக்க ஏற்பளிக்கப்பட்டுள்ளது. (பணிகள் பற்றிய பட்டியலை இணைப்பு 2-ல் காண்க.)

(ஆ) மாநில நெடுஞ்சாலைகள்.—1979–80-ல் ரூ. 78.00 இலட்சம் செலவில் 32 புதிய பணிகளுக்கு ஒப்புதலளிக்கப் பட்டது. 1979–80-ல் ரூ. 53.14 இலட்சம் செலவிடப்பட்டது. 28 சாலைப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

1980–81-ல் ரூ. 91.00 இலட்சம் செலவில் 4 புதிய பணிகளுக்கு ஒப்புதலளிக்க ஏற்பளிக்கப்பட்டுள்ளது. (பணிகள் பற்றிய பட்டியலை இணைப்பு 3-ல் காண்க.) 1980–81ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 18·12 இலட்சமாகும்.

(இ) மாவட்டச் சாலைகள் (மாவட்டப் பெருஞ்சாலைகள்).—இத்தலைப்பின் கீழ் எடுத்துக் கொள்ளப்படுகிற முக்கிய பணிகளில் சூரமங்கலம்-தாராமங்கலம் சாலை மேம்பாட்டுப் பணி

ஒன்றாகும். இப்பணிக்கான செலவு ரூ. 130 இலட்சமாகும். இது சேலம் உருக்கு ஆலைத் திட்டத்திற்கு உதவுகிற பணியாகும். இப்பணியின் பெரும்பகுதி முடிந்து விட்டது; இவ்வாண்டில் முடிக்கப்படலாம். கடலூர் நகராட்சி எல்லைக்குள் உள்ள சிங்காரத் தோப்புக்கருகே உப்பனாற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணிக்கும் 1979–80-ல் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. இப்பணி விரைவில் எடுத்துக் கொள்ளப்படும். இப்பணிக்கு ரூ. 46 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை-திருத்தணி சாலையில் 53/1 கி. மீட்டர் தொலைவிலும், அரக்கோணம்-ரேணிகுண்டா சாலையில் 8/1 மைல் தொலைவிலும் ஆற்றினைக் கடப்பதை தவிர்ப்பதற்காக நந்தி ஆற்றுக்கு இணையாக மாற்று வழிப்பாதை ஒன்றை ரூ. 1.63 இலட்சம் செலவில் அமைக்கும் பணியும், 25 சாலைப் பணிகளும் 1979-80-ல் முடிக்கப்பட்டுள்ளன.

பின்வரும் மூன்று பாலங்கள் அமைக்கும் பணிகள் பெரும் பகுதி முடிந்து விட்டன; இவ்வாண்டின் தொடக்கத்தில் முடிக்கப்படலாம்:—

| | செலவு ரூபாய் இலட்சத்தில். |
|---|---|
| (1) திருவொற்றியூர்-பொன்னேரி பஞ்சட்டி சாலையில் 4·8 கி.மீ. முதல் 5·2 கி.மீ. வரை கொற்றலையாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டுதல் (செங்கற்பட்டு மாவட்டம்) .. .. .. | 17.00 |
| (2) சித்தூர்-திருத்தணி சாலையில் 22·4-6-கி.மீ. தொலைவில் பொன்னேரி ஆற்றின் குறுக்கே மூழ்கு பாலம் ஒன்று கட்டுதல் (வடாற்காடு மாவட்டம்) .. .. | 25.00 |
| (3) முள்ளுக்குறிச்சி கிராம சாலையில் 9·8 கி.மீ. தொலைவில் வச்சுக்கால் ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் ஒன்று கட்டுதல் (சேலம் மாவட்டம்) .. | 5.30 |



1979–80-ல் அரசு, ஒப்புதலளித்துள்ள பின்வரும் 3 பாலம் கட்டும் பணிகள் நடந்தேறி வருகின்றன:—

| | செலவு ரூபாய் இலட்சத்தில். |
|---|---|
| (1) பரங்கிமலை--பூவிருந்தவல்லி சாலையில் (மாவட்ட பெருஞ்சாலை) (செங்கற்பட்டு மாவட்டம்) 2·8 கி.மீ. தொலைவில் அடையாற்றின் குறுக்கே பாலத்தை அகலப்படுத்துதல் .. .. .. | 44.00 |
| (2) வண்டிப்பாதையை அகலப்படுத்துதல் உட்பட பரங்கிமலை-பூவிருந்தவல்லி சாலையில் (மாவட்ட பெருஞ்சாலை) (செங்கற்பட்டு மாவட்டம்) 3·4 கி.மீ. தொலைவில் உபரி வாய்க்காலின் குறுக்கே உள்ள பாலத்தை புதுப்பித்தல் .. .. .. | 12.50 |
| (3) விருத்தாசலம்-பரங்கிப்பேட்டை சாலையில் (மாவட்டப் பெருஞ்சாலை) (தென்னாற்காடு மாவட்டம்) 50·2 கி.மீ. தொலைவில் பக்கிங்காம் கால்வாய் குறுக்கே உள்ள பாலத்தைப் புதுப்பித்தல். .. | 12.50 |
| மொத்தம் .. | 69.00 |

இவற்றைத் தவிர ரூ. 60.00 இலட்சம் செலவில் 28 சாலைப் பணிகளுக்கும் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

''மாவட்டப் பெருஞ்சாலைகள்'' என்பதன்கீழ் 1979–80-ல் ரூ. 76.86 இலட்சம் செலவிடப்பட்டது.

1980–81ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 99.68 இலட்சத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

1980–81-ல் ரூ. 46.00 இலட்சம் செலவில் ஒன்பது புதிய பணிகளுக்கு ஒப்புதலளிக்க ஏற்பளிக்கப்பட்டுள்ளது. (பணிகள் பற்றிய பட்டியலை இணைப்பு 4-ல் காண்க.)

ஈ. ஏனைய மாவட்ட சாலைகள்:—

கீழரசம்பேட்டை சாலையில் 1·7 கி. மீ. தொலைவில் நாக நதி ஆற்றின் குறுக்கே ரூ. 5.50 இலட்சம் செலவில்பாலம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது. 1979–80-ல் ரூ. 25 இலட்சம் செலவில் 22 புதிய சாலைப் பணிகளுக்கும் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. அப்பணிகளில் 18 சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இப்பணிகளுக்காக 1979–80-ல் ரூ. 22.34 இலட்சம் செலவிடப்பட்டது.

1980–81 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 11.38 இலட்சமாகும். 1980–81-ல் ரூ. 105.50 இலட்சம் செலவில் 8 புதிய பணிகளுக்கு ஒப்புதலளிக்க ஏற்பளிக்கப்பட்டுள்ளது. (பணிகள் பற்றிய பட்டியலை இணைப்பு 5-ல் காண்க).

உ. ஏனைய சாலைகள் திட்டம்:

ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களின் நிதிச் சுமையைக் குறைக்கும் பொருட்டு 50,000 ரூபாய்க்கு மேல் செலவாகக் கூடிய ஊராட்சி, ஊராட்சி ஒன்றியச் சாலைகள் விடுபட்ட பெரிய, சிறிய பாலங்கள், தாம்போகிகள், படுகைப் பாலங்கள், சாலை மேம்பாட்டுப் பணிகள் போன்ற மூலப்பணிகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் முடிக்கப்பட்ட பாலங்களும் மேம்படுத்தப்பட்ட சாலைகளும் வருங்காலத்தில் பராமரிக்கப்படுவதற்காக உள்ளாட்சி மன்றங்களின் பொறுப்பில் திருப்பி ஒப்படைக்கப்படுகின்றன. 1979–80 ஆம் ஆண்டில் 78.80 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது.

1979–80 ஆம் ஆண்டில் முடிவடைந்த சில பாலம்/தாம்போகிப் பணிகளின் விவரம் வருமாறு:—

| | (செலவிடப்பட்ட தொகை ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. தருமபுரி மாவட்டத்தில் மேகலா— சின்னம்பள்ளிச் சாலையில் காட்டாற்றின் குறுக்கே தரைப் பாலம் அமைத்தல் .. .. .. | 1.90 |
| 2. திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் வளநாடு கண்மாயின் குறுக்கே பாலம் கட்டுதல் (புதுக்கோட்டை மாவட்டம்) .. | 2.50 |
| 3. தென்னாற்காடு மாவட்டம் ரெட்டணை—மாரூர் சாலையில் 6·0 கி. மீட்டரில் தாம்போகி அமைத்தல் .. .. | 5.76 |



| | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 4. ஆழ்வார்திருநகரி ஊராட்சி ஒன்றியத்தில் சரக்கனோடையின் குறுக்கே பாலம் கட்டுதல் (திருநெல்வேலி மாவட்டம்) .. | 4·10 |
| 5 ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் (மதுரை மாவட்டம்) சுத்திநாயக்கன்பட்டி மல்லி கவுண்டன் பட்டிச் சாலையில் 0·6 கி. மீட்டரில் சாக்கனோடையின் குறுக்கே நீர்க்கால் கொண்ட தாம்போகி அமைத்தல். | 1.75 |

நீலமங்கலம் ஈரூர் சாலையில் 1/6 கி. மீட்டரில் கிள்ளியூர் ஆற்றின் குறுக்கே 6.75 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு வரும் படுகை மட்டத் தாம்போகி முடிவடையும் தருவாயில்உள்ளது (1980–81).

பின்வரும் பணிகளும் நடைபெற்று வருகின்றன:

| | |
|---|---|
| 1 திருக்கண்ணமங்கை— அம்மையப்பன் சாலையில் 1·5 மீட்டரில் ஓடம்போக்கி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணியும் சாலை மேம்பாட்டு பணியும் (தஞ்சாவூர் மாவட்டம்) | 8.25 |
| 2 கருங்குழி—கள்ளக்குறிச்சி சாலையில் 1·4 கி. மீட்டரில் சங்கலோடையின் குறுக்கே பாலம் கட்டுதல் (தென்னாற்காடு மாவட்டம்) | 3.0C |
| 3 காட்டுமன்னார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் மானிய ஆதூர் முதல் நத்தமலை வரை சாலையில் மேம்பாட்டுப் பணிகள் (தென்னாற்காடு மாவட்டம்) | 2.25 |
| 4 திருக்கோவிலூர்—கடலூர் சாலையில் 57/8 கி. மீட்டரில் பிரிந்து செல்லும் 1 கி. மீ. நீளமுள்ள டி. புதுப்பாளையம் சாலையை மேம்படுத்துதல், பாகவையாகால்வாயின் குறுக்கே பாலம் கட்டுதல் (வடாற்காடு மாவட்டம்) | 2.50 |
| 5 மதுரை மாவட்டம், திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் வடாத்தி குளத்தின் அருகே திருமங்கலம் விருசங்குளம் சாலையில் 1/4 கி. மீட்டரில் பாலம் கட்டுதல் | 3.00 |

[1980 ஜூலை 21

| | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 6 பாளையபாளையம்—சின்னப்பன்பட்டிச் சாலையில் (சேலம் மாவட்டம்) 1/4 கி.மீட்டரில் படுகை மட்டத் தாம்போகி அமைத்தல் | 2.00 |
| 7 காட்டு நாயக்கன்பட்டி— பூமாலைக்குண்டு சாலை 0/4 கி. மீட்டரில் நீர்க்கால் கொண்ட அணையும் 0/10 கி. மீட்டரில் இரண்டு படுகைப்பாலங்களும் கட்டுவதுடன் 0·0 கி. மீட்டர் முதல் 1/2 கி. மீட்டர் வரையில் சாலையை மேம்படுத்துதல் (மதுரை மாவட்டம்) | 1.70 |
| 8 பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் நாட்டுச் சாலை முதல் வேடன் கோட்டை வழியாக செல்லும் துவரங்குறிச்சி வரை உள்ள சாலையை மேம்படுத்துதல் (தஞ்சாவூர் மாவட்டம்.) | 14.0. |
| 9 அம்பலப்பட்டியிலிருந்து சேம்பலூர் எட்டிப்புலிக் காடு வழியாக சேந்தன் காடு வரையுள்ள (0–9/4 கி. மீட்டர்) சாலையை மேம்படுத்தலும் கீழக்கரம்பையம் வரை 0/0.2/4 கி. மீ. தொடங்கி தஞ்சாவூர்—புதுக்கோட்டை சாலையில் 38/8 கி. மீட்டரில் சந்திக்கும் இடம் வரை இணைப்புச் சாலை போடுதலும் (தஞ்சாவூர் மாவட்டம்) | 24.50 |
| 10 சின்ன சிட்டாஞ்சி சாலையில் 1/2 கி. மீட்டரில் மாமண்டூர் சாலையில் 0/2–0/6 கி. மீட்டரில் உயர்மட்ட தரைப்பாலம் கட்டுதல் வேகமங்கலம் சாலையையும் மாமண்டூர் சாலையையும் (0/0–1/6 கி. மீ) இணைக்கும் சாலையை மேம்படுத்துதல் மாமண்டூரிலிருந்து கரிவேட்டிற்கு 0/0–1/0 கி. மீட்டர் தொலைவிற்கு ஒரு புதிய சாலை போடுதல் வேகமங்கலம், மாமண்டூர், கரிவேடு சின்ன சிட்டஞ்சி சாலையை மேம்படுத்துதல் (வடாற்காடு மாவட்டம்) | 10.00 |

1979–80 ஆம்ஆண்டில் ரூ. 165.87 இலட்சம் செலவிலான 16 பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. பணிகள் பட்டியலை இணைப்பு 6-ல் காண்க.



1980 ஜூலை 21]

1980-81 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் இப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு 214.70 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. 1980–81 ஆம் ஆண்டில் 106.00 இலட்சம் ரூபாய் செலவில் 17 புதிய பணிகளுக்காக ஒப்புதலளிக்க ஏற்பளிக்கப்பட்டுள்ளது. (பணிகள் பற்றிய பட்டியலை இணைப்பு 7—ல் காண்க)

ஊ. நிழற்சாலைகள் .—

வரவு–செலவுத் திட்டத்தில் இதுவரை நிழற்சாலைப் பணிக்காக செய்யப்பட்ட நிதி ஒதுக்கம் மிகச் சொற்பமாகும். அதிக எண்ணிக்கையிலான மரங்கள் வளர்க்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தும், சாலை ஓரங்களில் மரங்கள் வளர்ப்பதற்குள்ள சாத்தியத்தைக் கண்டறிந்தும் அரசு 1979–80 ஆம் ஆண்டு திருந்த மதிப்பீட்டில் 36.00 இலட்சம் ரூபாயை இப்பணிக்காக ஒதுக்கியுள்ளது. இதில் 35.53 இலட்ச ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. நெடுஞ்சாலை கிராமப்பணிகள் துறை, காடு வளர்ப்புத் திட்டத்துடன் நிழற்சாலைகள் ஏற்படுத்த தீவிரமான விரிவானதொரு திட்டத்தை வகுத்து அதனை அமல்படுத்தும் வகையில், வெட்டுமரம், விறகு, எண்ணெய், பழங்கள், பூக்கள் மற்றும் நிழல் தரும் மரங்களை பெருமளவில் வளர்த்திருக்கிறது.

1979–80 ஆம் ஆண்டில் சாலையோரங்களில் 18 இலட்சம் பனை நெற்றுக்களும், 6 இலட்சம் ஏனைய மரங்களும் நடப்பட்டன. 1979–80 ஆம் ஆண்டில் நடப்பட்ட மரங்களைப் பராமரிப்பதற்காக 6·00 இலட்சம் ரூபாயும், புதியதாக மரங்கள் நடுவதற்காக ரூ. 37.80 இலட்சம் ரூபாயும், ஆக ரூ. 43·80 இலட்சம் 1980-81-ம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டு 18,00,000 பனைமரங்களையும், 3,00,000 ஏனைய வகை மரங்களையும் புதியதாக நடுவதற்காக 37.80 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துறையில் முதலீடு செய்யப்படும் கணிசமான மூலதனத்தால் இவ்வாறு மரங்கள் நடுவது கிராமப்பகுதியில் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்துவதோடு ஓரளவு வருவாயும் கிட்டுகிறது.

(எ) கருவிகளும், தளவாடமும் :

பராமரிப்புச் சாலைகளின் நீளம் அதிகரித்து வருவதையும் அதிவிரைவாகச் செல்லும் வண்டிகளின் எண்ணிக்கையும் தரமும் பெருகி வருவதனையும் அதனைச் சமாளிக்க நடை பாதையின் வடிவமைப்புகளில் மேம்பாடு செய்ய வேண்டியதையும் கருத்திற் கொண்டு பார்க்கையில் இத்துறையிலுள்ள கருவிகள், தளவாடங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும், நவீனப் படுத்தவும் வேண்டிய அவசரத் தேவை எழுந்துள்ளது.

இதனைக் கருத்திற் கொண்டு, 1979–80 ஆம் ஆண்டில் ரூ. 69.28 இலட்சம் செலவிடப்பட்டது. 1980–81 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 57.18 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1979–80 ஆம் ஆண்டில் புதிய இயந்திரங்கள் வாங்குவதற்காக ரூ. 15.01 இலட்சம் செலவினம் ஒதுக்கப்பட்டது. சாலை போடுவதற்குத் தேவையான கற்கலவை இயந்திரங்களை சில முக்கியமான இடங்களில் நிறுவ துறை உத்தேசித்துள்ளது. இத்தலைப்பின் கீழ், மதுரை, தஞ்சாவூர் ஆகிய இடங்களிலுள்ள வட்டார ஆய்வுக் கூடங்களுக்கு அறிவியல் கருவிகள் வாங்கப்பட்டுள்ளன.

(ஏ) தற்போதுள்ள சாலை-இருப்புப் பாதைக் கடவுகளுக்குப் பதிலாக மேம்பாலங்கள், சுரங்கப்பாதைகள் கட்டுதல்.

1. மேம்பாலங்கள் சுரங்கப்பாதைகளைப் பொறுத்த மட்டில் ஏற்படும் செலவினைப் பகிர்ந்து கொள்வதில் மத்திய அரசின் தற்போதைய கொள்கை வருமாறு :—

(i) அணுகு சாலை உட்பட மேம்பாலங்கள் சுரங்கப்பாதைகள் கட்டுவதில் ஏற்படும் மொத்தச் செலவில் 50 சதவீதத்தை இரயில்வே ஏற்கும். மேற் கூறியவற்றில், மாற்றுவழிச் சாலை, சாக்கடைக் கால்கள், தந்திப் புதை வடங்கள், தண்ணீர் எடுத்துச் செல்லும் பெருங் குழாய்கள் போன்றவற்றை அமைப்பதற்கான செலவும் அடங்கும். ஆனால், நிலத்தை கையகப் படுத்தும் போது அதில் கட்டுமானம் ஏதாகிலும் இருந்தால், அதையும் சேர்த்து ஆகும் செலவு இதில் அடங்காது.

(ii) அணுகு சாலைகள் உட்பட மொத்தச் செலவில் 50-சதவீதத்தையும் கட்டு மானத்துடன் நிலத்தைக் கையகப் படுத்துவதற்கான முழுச் செலவையும் மாநில அரசு ஏற்கும்.

2. பொதுவாகப் பாலங்கள் 24 அடி அகலம் உடையனவாக (இரு வழித்தட அகலம்) இருக்கும். நகரங்கள், மாநகரங்களுக்கு அருகிலுள்ள பகுதிகளில் அவசியமாயின் இரு நடை பாதைகள் (ஒவ்வொன்றும் 6 அடி அகலம்) அமைக்கப்படும்.

3. இரயில்வே பாதையைக் கடப்பதற்கு வருங்காலத்தில் நிதி ஒதுக்க வேண்டியிருப்பின் அந்தப் பாலத்தின் கூடுதல் கட்டுமானத்திற்காகும் செலவு முழுவதும் இரயில்வேத் துறையினால் ஏற்றுக் கொள்ளப்படும். அத்துடன், பாலத்தின் எஞ்சிய பகுதிக்காகும் செலவு, அணுகு சாலைகளுக்காகும் செலவு ஆகியவற்றில் அதன் பங்கையும் ஏற்கும்.



4. மேலே (2) பத்தியில் குறிப்பிடப்பட்ட அதாவது இரு வழி அகலத்திற்கு மேலே சாலையில் கூடுதல் அகலம் வேண்டுமென்று மாநில அரசு விரும்பினால், இக் கூடுதல் அகலத்திற்காகும் செலவும்,

(i) தற்போதுள்ள பாதையுடன் இணைப்பதற்காகப் பாலத்தின் நீளத்தை அதிகப்படுத்தும் செலவு முழுவதும் மாநில அரசும்;

(ii) வருங்காலத்தில், கூடுதல் இரயில்வே பாதையைக் கடப்பதற்காகப் போடப்படும் எந்தவொரு கூடுதல் நீளத்திற்காகும் செலவை மாநில அரசும், இரயில்வேயும் சமமாகப் பகிர்ந்து கொள்ளும்.

5. சட்டப்படிக்கான விதித் துறைகளின் கீழ் அமைக்கப் பட்டிருக்கும் தற்போதுள்ள சாலை இருப்புப் பாதைக் கடவுக்குப் பதிலாக மேம்பாலங்கள் சுரங்கப் பாதைகள் அமைத்தல், தற்போதுள்ள சாலை இருப்புப் பாதைக் கடவுகளின் தரத்தை உயர்த்துதல், ஆளில்லாத இருப்புப் பாதைக் கடவுகளில் ஆட்களை நியமித்தல் போன்ற மாநில அரசின் பொறுப்புக்களை ஏற்பதற்காக, மத்திய அரசின் இரயில்வே அமைச்சகம் 1966 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 1 ஆம் நாள் முதற்கொண்டு ''இரயில்வே பாதுகாப்பு நிதி'' எனப்படும் ஒரு நிதியை ஏற்படுத்தியது.

(i) இரயில்வே சட்டத்தின் கீழ் வரும் சட்டப்படிக்கான விதித் துறைகளின் கீழ், ஆளில்லாத சாலை-இருப்புப் பாதைக் கடவுகளில் ஆட்களை நியமிப்பதற்கும் தற்போதுள்ள சாலை இருப்புப் பாதைக் கடவுகளின் தரத்தை உயர்த்துவதற்கும் இரயில்வேக்கு இந்நிதியில் 20 சதவீதம் நேரடியாக ஒதுக்கப் படுகிறது.

(ii) சாலை இருப்புப் பாதைக் கடவுகளுக்குப் பதிலாக மேம்பாலம், சுரங்கப் பாதைகள் அமைப்பதற்காக எஞ்சியுள்ள 80 சதவீத நிதி மாநில அரசுக்கு ஒதுக்கப்படுகிறது. சட்டப் படிக்கான விதித் துறைகளின்கீழ், தற்போதுள்ள சாலை-இருப்புப் பாதைக் கடவுக்குப் பதிலாக மேம்பாலம் சுரங்கப் பாதை கட்டும் பணி மாநில அரசு இரயில்வேயின் கூட்டு முயற்சியில் செய்யப்படுகிறது. நிலம் கையகப் படுத்துதல் நீங்கலாக இப்பணிக்காகும் செலவு மாநில அரசாலும், இரயில்வேக்களாலும் சமமாகப் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. நிலம் கையகப்படுத்தலுக்கான செலவு நீங்கலாக மாநில அரசின் பங்கு தொடக்கத்தில் மாநில நிதியிலிருந்து கொடுக்கப்படுகிறது. பின்னர், இது இரயில்வே பாதுகாப்பு நிதியிலிருந்து திருப்பிக் கொடுக்கப்படுகிறது.

(iii) சாலை மேம்பாலங்கள் நகராட்சிகளின் அதிகார வரம்
பிற்குள் வருமாயின் செலவுத் தொகையில் மாநிலத்தின் பங்கு
மாநில அரசு, நகராட்சிகள் ஆகியவற்றிற்கிடையே சமமாக
(மாநில அரசு 25 சதவீதம், நகராட்சிகள் 25 சதவீதம்) பிரித்துக்
கொள்ளப்படுகிறது. இரயில்வே பாதுகாப்பு நிதியில் குறைந்
தளவு தொகையே உள்ளதால், நகராட்சிகளுக்காகும் பங்குச்
செலவைப் பொதுவாக இந்நிதியிலிருந்து திருப்பிக் கொடுப்ப
தில்லை.

மேற்சொன்ன வகைப்பாடுகளின் கீழ் பல்வேறு நிலையில்
நிறைவேற்றப்பட்டு வருகின்ற பணிகளின் விவரம் வருமாறு :
1979–80 ஆம் ஆண்டில் ரூ. 27.37 இலட்சம் செலவிடப்பட்டது.
1980–81 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு
ரூ. 19.60 இலட்சம்.



1. நடந்தேறி வரும் பணிகள் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அனுமதி வழங்கப்பட்ட பணிகள்.

| பணியின் பெயர். | செலவு. (ரூபாய் இலட்சத்தில்.) | குறிப்புரைகள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| மாயூரம்-முத்துப்பேட்டை சாலையில் 41/8 கிலோ மீட்டரில் மேம்பாலம் கட்டுதல். | 40·00 / 44·00 | அணுகு சாலைகள் அமைக்கும் பணிகள் நடந்தேறி வருகிறது. இனி மேல்தான் பணி இரயில்வேத் துறையினரால் இரயில்வே பகுதிப் பணி மேற்கொள்ளப்பட வேண்டும். அவர்கள் ஒப்பந்தங்களை முடிவு செய்வதற்கான நடவடிக்கையை எடுத்து வருகின்றனர். |
| நாகப்பட்டிணம் - கோயம்புத்தூர் - கூடலூர் சாலையில் 22/6 கிலோ மீட்டர் தூரத்தில் மேம்பாலம் கட்டுதல். | 50·00 / 55·00 | அணுகு சாலை அமைக்கும் பணி முடிவடையும் நிலையிலுள்ளது. இரயில்வே பகுதியில் நடைபெற்று வருகிறது. |
| சென்னை-திருத்தணிச் சாலையில் 85/6 கி. மீட்டரில் சுரங்கப்பாதை ஒன்று கட்டுதல். | 18·00 / 19·80 | பணி நடந்தேறி வருகிறது. ரூ. 38 இலட்சத்திற்கான திருத்த நிர்வாக ஒப்பளிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. |

II. ஒப்புதலளிக்கப்பட்டு நிறைவேற்றுவதற்காக எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய பணிகள்.—

| | | | |
|---|---|---|---|
| 1 | மதுரை-அருப்புக்கோட்டை சாலையில் 1/6 கி. மீட்டரில் மேம்பாலம் கட்டுதல். | 35·00<br>38·50 | இப் பணிக்காக ரூ. 38·50 இலட்சத்திற்கு தொழில் நுட்ப இசைவளிக்கப்பட்டது. இது பின்னர் ரூ. 48·65 இலட்சமாகத் திருத்தப்பட்டது. திருத்த நிர்வாக ஒப்பளிப்பு வேண்டி அரசுக்கு எழுதப்பட்டுள்ளது. திருத்தச் செலவுகளுக்கும், மாற்றப்பட்ட வடிவமைப்பிற்கும் இரயில்வேயின் இசைவு எதிர்பார்க்கப்படுகிறது. இரயில்வே யிலிருந்து அனுமதி கிடைத்த பின்னர் மாநில அரசு திருத்த நிர்வாக அனுமதிக்கு இசைவளிக்கும். |
| 2 | சென்னை-கும்பகோணம்-தஞ்சாவூர் சாலையில் 176/10 கிலோ மீட்டரில் பண்ருட்டியில் மேம்பாலம் கட்டுதல். | 25·00 | இரயில்வேயிலிருந்து பெறப்பட்ட பொதுவான நேர்பாடு பற்றிய செயற்குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன. இரயில்வே உத்தேசித்தவாறு வண்டிப்பாதையின் அகலம் 7·5 மீட்டராக இருப்பதற்கு மாறாக 11 மீட்டர் ஆக மாற்றுவது பற்றி இரயில்வே கேட்டுக் கொள்ளப்பட்டது. |
| 3 | கடலூர்-சித்தூர் சாலையில் திருவடிக்கு அருகே 21·6 கி. மீட்டரில் மேம்பாலம் ஒன்றைக் கட்டுதல். | 25·00 | அணுகுசாலையின் மதிப்பீடு ரூ. 24 இலட்சமாகும். இசைவு பெறுவதற்காக இரயில்வேத் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. |



| | பணியின் பெயர். | செலவு (ரூபாய் இலட்சத்தில்.) | குறிப்புரைகள். |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| | மதுரை மாநகராட்சி எல்லைக்குள் 7-ம் எண் தேசிய நெடுஞ்சாலையில் தட்டனேரி அருகே 438/6 கிலோ மீட்டரில் மேம்பாலம் ஒன்றைக் கட்டுதல். | 60·00 | இட வரைபடத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, இரயில்வேத் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. அணுகு சாலைகளுக்குரிய மதிப்பீடு தயாரிக்கப்படுகிறது. |
| 5 | திண்டுக்கல் வட்டாணம் சாலையில் நாகல் நகர் நகராட்சி எல்லைக்குள் 2/4 கிலோ மீட்டரில் மேம்பாலம் ஒன்றைக் கட்டுதல். | 30·00 | மதுரை-திண்டுக்கல் அகல இருப்புப் பாதை, இரயில்வேத் துறையினரால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இரயில்வேயிடமிருந்து இட வரைபடம் வரப்பெற்றபின் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். ரூ. 43 இலட்சத்திற்கு பின்னேற்பு ஒப்புதல் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. |
| 6 | உளுந்தூர்பேட்டை-சேலம் சாலையில் தேவியாக்குறிச்சிக்கு அருகே மேம்பாலம் ஒன்றைக் கட்டுதல். | 30·00 | இரயில்வேயிடமிருந்து வரைபடத்திற்குரிய இசைவு எதிர்பார்க்கப்படுகிறது. அணுகு சாலைக்குரிய மதிப்பீடு இரயில்வேக்கு அனுப்பப்பட்டுள்ளது. அவர்களுடைய இசைவு எதிர்பார்க்கப்படுகிறது. |

| | பணியின் பெயர். (1) | செலவு (ரூபாய் இலட்சத்தில்) (2) | குறிப்புரைகள். (3) |
|---|---|---|---|
| 7 | சென்னை - கும்பகோணம் - தஞ்சாவூர் சாலையில் பாபநாசத்திற்கு மேற்கே சுந்தரபெருமாள் கோவிலுக்கு அருகில் 279/8 கிலோ மீட்டரில் மேம்பாலம் ஒன்றைக் கட்டுதல். | 20·00 | இரயில்வே அனுப்பிய வரை படத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ரூ. 22 இலட்சம் செலவில் அணுகு சாலைகள் போடுவதற்குரிய மதிப்பீடு ஒப்புதல் பெறுவதற்காக இரயில்வேக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| 8 | சென்னை - கும்பகோணம் - தஞ்சாவூர் சாலையில் பாபநாசத்திற்கு மேற்கே சுந்தரபெருமாள் கோயிலுக்கு அருகில் 282/4 கிலோ மீட்டரில் மேம்பாலம் ஒன்றைக் கட்டுதல். | 20·00 | பொது நில நேர்பாடு அமைப்புப் படத்திற்கு இரயில்வேயின் இசைவு எதிர்பார்க்கப்படுகிறது. |
| 9 | தூத்துக்குடி — திருநெல்வேலி — செங்கோட்டை—கொல்லம் சாலையில் 97/8 கிலோ மீட்டரில் மேம்பாலம் ஒன்றைக் கட்டுதல். | 15·00 | ரூ. 38 இலட்சம் செலவில் அணுகு சாலைகள் போடுவதற்குரிய மதிப்பீடு இரயில்வேயின் ஒப்புதல் பெறுவதற்காக அவர்களுக்கு அனுப்பப்பட்டது. |
| 10 | இராணிப்பேட்டை-கிருஷ்ணகிரி சாலையில் வேலூர் எல்லையில் 116/8–10 கிலோ மீட்டரில் மேம்பாலம் ஒன்றைக் கட்டுதல். | 50·00 | இரயில்வேயின் நில நேர்பாடு அமைப்புப்படம் ஒப்புதல் பெறுவதற்காக அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அவ்விடத்தை இருதுறைகளும் பார்வையிடலாம் என்று இரயில்வே தெரிவித்துள்ளது. |
| 11 | திருச்சி-நாமக்கல் சாலையில் பிச்சாண்டார் கோயிலுக்கு அருகில் மேம்பாலம் ஒன்றைக் கட்டுதல். | 15·00 | இத்திட்டம் பரிசீலனை செய்ய ஆய்வு செய்யப்பட்டு வருகிறது |



III. பரிசீலனை செய்யப்படும் மேம்பாலங்களின் பட்டியல்.—

(அ) பிற துறைகளுக்காக நிறைவேற்றப்படும் பணிகள் என்கிற முறையில் சென்னை-கல்கத்தா சாலையை இணைப்பதற்கான இணைப்புச் சாலையில் மணலிக்கு அருகே மேம்பாலம் ஒன்றைக்கட்டுதல்.

(ஆ) சென்னை துறைமுகத்திற்கும் இராயபுரத்திற்கும் இடையே தற்போதுள்ள சாலை இருப்புப் பாதைக் கடவுக்குப் பதிலாக, மேம்பாலம் ஒன்றைக் கட்டுதல்.

(இ) கிண்டி இரயில்வே நிலையத்திற்கு அருகேயுள்ள மேம்பாலத்தை மேம்படுத்தல்.

(ஈ) காட்பாடி இரயில்வே நிலையத்திற்கு அருகேயுள்ள மேம்பாலத்தை மீண்டும் கட்டுதல்.

(ஐ) பல்வேறு மூலப்பணிகள்—

1979–80 ஆம் ஆண்டில் ரூ. 30·30 இலட்சம் செலவிடப்பட்டது. 1980–81 ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 2.21 இலட்சம் ஆகும். இத்தலைப்பின் கீழ் முக்கியமாக தூத்துக்குடியில் ஸ்பிக் (Spic) திட்டம் குறித்து ஒப்புதல் அளிக்கப்பட்டு, எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகள் தொடர்பாகச் செலவிடப்பட்டது. மேற்சொன்னதைத் தவிர, மதுரையில் நடைபெறவிருக்கும் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டை முன்னிட்டு மதுரையில் நிறைவேற்றப்பட்டு வருகிற அரசு சாலைகளை மேம்படுத்துவதற்குரிய செலவும் இத்தலைப்பின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மதுரையில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ் மாநாட்டை முன்னிட்டு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய மேம்பாட்டுப் பணிகள் குறித்த விவரம் பின்வருமாறு—

1981 ஜனவரியில் நடைபெறவிருக்கும் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு தொடர்பாக, மதுரை மாநகரில் சிறந்த போக்குவரத்து வசதிகளை அளிக்கும் பொருட்டு மதுரை மாநகரிலும் அந்நகரைச் சுற்றிலும் உள்ள சாலைகளை மேம்படுத்தும் பணி, நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மதுரை மாநகராட்சியில் ரூ. 90.00 இலட்சம் செலவில் 47 புறச் சாலைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ரூ. 25.90 இலட்சம் செலவில் அரசுச் சாலைகள் எல்லாவற்றையும் மேம் படுத்தும் பணியும், ரூ. 2.00 இலட்சம் செலவில் மதுரை-அருப் புக்கோட்டை சாலையில் 2.0–8.6 கி.மீ. நெடுகவும், மதுரை-தேனீ சாலையில் 9.0–15.0 கி.மீ. நெடுகவும் மரங்களை நடும் பணியும், ரூ. 8.00 இலட்சம் செலவில் 11 சாலைச் சந்திப்புகளில் போக்குவரத்து மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள் ளன. இத்துடன், ரூ. 2.50 இலட்சம் செலவில் திருப்பரங் குன்றம் ஊராட்சியில் கோயிலைச் சுற்றியுள்ள இரு சாலைகளை மேம்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1979–80 ஆம் ஆண்டில் 60 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 13 பணிகள் (அமைப்பு மேம்பாட்டுப் பணிகள்) விரை வில் முடிக்கப்படும்.

(ஒ) பழங்குடியினர் நலத் துணைத் திட்டம்.

இத்திட்டம், ஒருங்கிணைக்கப்பட்ட பழங்குடியினர் மேம் பாட்டுத் திட்டத்தின்கீழ் வருகிறது. இத்திட்டத்தில், போக்கு வரத்து ஒரு பிரிவாகும். வெகு தொலைவிலுள்ள மலைப்பகுதி களில் வசிக்கும் பழங்குடியினருக்கு சாலை வசதிகளை அளிப்ப தும், அதன்மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்து வதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த (தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, சேலம், தருமபுரி, திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள்) பழங்குடியினர் வசிக்கும் ஒன்பது பகுதிகளுக்குச் சாலை வசதிகளை அளிக்கும் பொருட்டு, ரூ. 209.25 இலட்சம் செலவில் 171·10 கி.மீ. தொலைவுக்கு பின்வரும் 12 சாலைப்பணிகள் கொண்ட பெருந்திட்டத்திற்கு 1978 சூலையில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ஐந்து ஆண்டுக் கால அளவில் (அதாவது 1978–83) செயற்படுத்தப்பட வேண்டுமெனத் திட்ட மிடப்பட்டுள்ளது.



| தொடர் எண்ணும் பழங்குடியினர் பகுதியும். (1) | பணியின் பெயர். (2) | நீளம். (3) கி.மீ. | செலவு. (4) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| I பச்சைமலைக் குன்றுகள் (சேலம் மாவட்டம்). | ஒடைக்காடுபுதூரிலிருந்து செங்காட்டுப்பட்டி மேல் பகுதி வரை சாலை அமைத்தல். | 10·20 | 20·00 |
| II ஜவ்வாது மலைகள் (வடாற்காடு மாவட்டம்). | நாட்ராம்பள்ளியிலிருந்து புதூர் நாடு வரையுள்ள சாலையை மேம்படுத்துதல். | 14·30 | 40·00 |
| III அறனூத்துமலை (சேலம்) .. | புழுதிக்குட்டையிலிருந்து அறனூத்துமலைச்சாலை வரை சாலை அமைத்தலும், மேம் படுத்துதலும். | 12·00 | 17·40 |
| IV சித்தேரி மலைகள் (தருமபுரி) .. | ஹரூரிலிருந்து, வலையூர் செங்கும் பட்டி வழியாக சித்தேரிகலச பாடி வரையிலுள்ள சாலையை மேம்படுத்துதல். | 25·60 | 25·00 |
| V கொல்லிமலைகள் (சேலம்) .. | (i) தென்னனூர்-வேலப்பூர் சாலையை மேம்படுத்துதல். | 27.00 | 24.00 |
| | (ii) சேலக்காடு முதல் குளிவளவூர் வரையுள்ள சாலையை மேம் படுத்துதல். | 6.80 | 5.80 |
| | (iii) குளிவளவூர் முதல் ஓடைக்காடு வரையுள்ள சாலையை மேம் படுத்துதல். | 23.20 | 26.20 |

| தொடர் எண்ணும், பழங்குடியினர் பகுதியும். (1) | பணியின் பெயர். (2) | நீளம். (3) கி.மீ. | செலவு. (4) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| VI ஏற்காடு மலைகள் (சேலம்) .. | (i) கோட்டசேடுகுப்பம் சாலையில் 6.00 கி. மீட்டரிலிருந்து 10.50 கி.மீ. வரையுள்ள சாலையை மேம்படுத்துதல் இவ்விடத்திலும் 0.0—6.0 என்ற இடத்திலும் பார்க்கப்படும் குறுக்கு வடிகால் (C.D.) பணிகள் உட்பட. | 4·60 | 6.71 |
| | (ii) பட்டியாடி முதல் வள்ளூர் வரையிலுள்ள சாலையை மேம்படுத்துதல். | 6.60 | 8.64 |
| VII கல்ராயன் மலைகள் (தென் ஆர்க்காடு மாவட்டம்). | பொதிகம் முதல் கொடியனூர் வரை சாலை அமைத்தல். | 22.00 | 27.50 |
| VIII பச்சை மலைகள் .. (திருச்சிராப்பள்ளி). | (i) சோபனபுரம் மேல் பகுதியிலிருந்து செங்காட்டுப்பட்டி பகுதி வரையுள்ள சாலையை மேம்படுத்துதல் (தரைப்பாலங்கள் உட்பட). | 15.00 | 6.60 |
| | (ii) செங்காட்டுப்பட்டி மலைக்காட்டுச் சாலையை மேம்படுத்துதல். | 3.60 | 1.40 |
| | மொத்தம் .. | 171.10 | 209.25 |

மேலே (I), (II)-ஆகிய இனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் ஏற்கெனவே நடைபெற்று வருகின்றன. (III), (IV), (V), (VI) (i), (VII), ஆகிய இனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் 1980-81 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படுவதற்குத் திட்டமிடப் பட்டுள்ளன. 1979-80 ஆம் ஆண்டில் ரூபாய் 37·47 இலட்சம் செலவிடப்பட்டது. 1980-81 ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூபாய் 31.87 இலட்சம் ஆகும்.





**(ஒ) மீனவர் குப்பங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைத்தல்.**

மீன்வளத் துறை இயக்குநர், மீனவர் குப்பங்களுக்குச் சாலைகள் அமைப்பதற்காக முன்னுரிமைப் பட்டியல் ஒன்றைக் கொடுத்துள்ளார். அதன் அடிப்படையில், ரூபாய் 93·50 இலட்சம் செலவில் 84·7 கி.மீ. நீளமுள்ள 37 பணிகளுக்கு அரசு 1980 பிப்ரவரியில் நிர்வாக ஒப்புதல் அளித்தது. 1979-80 ஆம் ஆண்டில் ரூபாய் 14·37 இலட்சம் செலவிடப்பட்டது. 1980-81ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூபாய் 30.00 இலட்சம் ஆகும்.

**(ஓ) மத்திய அரசு ஆதரவு அளிக்கும் கிராம இணைப்புச் சாலைத் திட்டம்.**

இத்திட்டம் கடற்கரையோரப் பகுதிகளுக்கும், பின் தங்கிய பகுதிகளுக்கும் சாலைகள் போடுவதற்குரியதாகும். சுமார் 1,500 பேர்களைக் கொண்டதும் (தனித் தனியாகவோ அல்லது கூட்டாகவோ) உற்பத்தி வளத்தைக் கொண்டதுமான கிராமங்களை 5 கி. மீட்டர் நீளத்திற்கு மேற்படாத இணைப்புச் சாலைகள் மூலம் இணைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். உள்ளாட்சி மன்றங்களும், அதாவது ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் ஆகியவையும் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு தங்களால் இயன்ற நிதியுதவியை அளிக்குமாறு செய்யப்பட்டன. சாலைகள் போடுவதற்குத் தேவைப்படும் நிலங்களைத் கையகப்படுத்துவதற்குரிய செலவையும், மண் சாலை வேலைக்குரிய செலவையும் அவர்கள் ஏற்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது.

இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு 1977-78, 1978-79-ம் ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு, மத்திய அரசு ரூபாய் 71.00 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்தது. 31—3—1980 வரை ரூபாய் 83.44 இலட்சம் செலவிடப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிகளில் பெரும்பாலானவை முடிக்கப்பட்டுள்ளன. முடிக்கப்பட்ட சாலைகளின் மொத்த நீளம் 135 கி. மீட்டராகும். இதன் மூலம் 87 கிராமங்கள் பயனடைந்துள்ளன. மத்திய அரசிடமிருந்து எவ்வித நிதி உதவியும் கிடைக்கப்பெறாததால், இத்திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது.

**(க) கிராமச் சாலைகள் திட்டம் :**

1,500 அல்லது அதற்கு மேலும் மக்கட் தொகை உள்ள கிராமங்களை எல்லாப் பருவ நிலைகளுக்கும் உரிய சாலைகளால் அருகிலுள்ள முக்கிய சாலையுடன் இணைப்பதை நோக்கமாகக் கொண்டு, 1972-73 ஆம் ஆண்டில் கிராமச் சாலைகள் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டம், குறைந்தளவு தேவைத் திட்டத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது. இதற்கு மத்திய அரசு தனியாக நிதி ஒதுக்கியுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் மேம்படுத்துவதற்காக ஊராட்சி, ஊராட்சி ஒன்றியச் சாலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மேம்பாட்டுப் பணிகள் முடிவடைந்த பின், வருங்காலத்தில் அவற்றைப் பராமரிப்பதற்கு அரசால் அச் சாலைகள் எடுத்துக் கொள்ளப்படும். இத்திட்டத்தின்கீழ் சில புதிய சாலைகளும் போடப்பட்டுள்ளன. 1976 ஆம் ஆண்டில் மதிப்பிட்டபடி, மேம் படுத்துவதற்காக சுமார் 8,310 கி.மீ. நீளம் உள்ள சாலைகள் உள்ளன. இது வரையில் நான்கு நிலைகளில் (I முதல் IV வரை) சுமார் 4,395 கி.மீ. நீளமுள்ள சாலைகளை மேம்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஒப்புதல் பெறுவதற்காக ரூபாய் 24·00 கோடி செலவில் 1,523 கி.மீ. நீளமுள்ள சாலையை மேம்படுத்து வதற்காக V ஆம் நிலையின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய சாலைகளின் பட்டியல் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தின்கீழ் 31—3—1980 வரை ரூபாய் 18·50 கோடி செலவில் 3,514 கி.மீ. நீளமுள்ள சாலைகள் எடுத்துக் கொள்ளப் பட்டு முடிக்கப்பட்டுள்ளன. 1979-80 ஆம் ஆண்டில் ரூபாய் 300·00 இலட்சம் செலவிடப்பட்டது. கிராமச் சாலைகளுக்கும் சீர் பருவச் சாலைத் திட்டத்திற்கும், இவ்விரு திட்டங்களையும் ஒன்றாகச் சேர்த்து 1980-81 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கம் ரூபாய் 600 இலட்சம் ஆகும்.

(ஙு) சீர்பருவச் சாலைகள் :

சாலைகளால் இணைக்கப்படாத கிராமங்களை அங்குள்ள மக்கட் தொகையைக் கருதிப்பாராது சரளைக் கல்லிடப்பட்ட சாலைகளோடு இணைப்பதை நோக்கமாகக் கொண்ட சீர்பருவச் சாலைகள் அமைக்கும் திட்டம் 1974-75 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், மண், சரளைக்கற்கள் ஆகியவற்றைக் கொண்டு புதிய சாலைகளை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட சரளைக் கல்லிடப்பட்ட சாலைகள் மழையால் அடித்துச் செல்லக் கூடியவையாகவுள்ளதால், 1977-78 ஆம் ஆண்டிலிருந்து தார் போடப்பட்டது. பணி முடிவடைந்தவுடன், இச்சாலைகளைப் பராமரிப்பதற்காகச் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்படுகின்றது. இத்திட்டத்தின்கீழ் 31—3—1980 வரை 8·56 கோடி ரூபாய் செலவில் 6,227 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. 6,227 கிலோ மீட்டரில் 840 கிலோ மீட்டர் நீளத்திற்கு தார் போடப்பட்டது. 1,500-ம் அதற்கு மேற்பட்டும் மக்கள் தொகையைக் கொண்ட பல கிராமங் கள் மோட்டார் வண்டிகள் செல்லும் முக்கிய சாலைகளுடன் இணைக்கும் வகையில் எல்லாப் பருவ காலத்திற்குமேற்ற சாலை களை அமைக்க வேண்டியிருப்பதாலும், இத்தகைய திட்டத்திற் குப் பெருந்தொகை தேவைப்படுவதாலும், சீர்பருவச் சாலை களை அமைப்பதை 1980-81 ஆம் ஆண்டு முதல் அரசு தள்ளிப் போட்டுள்ளது. முடிவடையாத பணிகள் 1980-81 இல் முடிக்கப் படும்.



(ச) நீலகிரி மாவட்டத்தில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

(i) கிராமங்களின் சமூக-பொருளாதார நிலையை மேம் படுத்தல், (ii) வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, பாற்பண்ணை வளர்ச்சி, மீனளம், வனம், தொழில், சுற்றுலா முதலியன போன்ற ஏனைய பல்வேறு திட்டங்களின்கீழ் மேம்படுத்தக் கருதப்பட்டுள்ள எல்லா இடங்களுக்கும் எளிதில் செல்வதற்கான சாலை போடுதல், (iii) பழங்குடியினர், அரிசனங்கள் வாழும் பகுதிகளை இணைத்தல் ஆகியவற்றிற்குத் தேவைப்படும் சாலை களை மேம்படுத்தும் பணி, இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப் பட்டுள்ளது. 100 இலட்சம் ரூபாய் செலவாகும். 21 பணி களைக் கொண்ட பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டது. இப் பணிகளை 1975–76 ஆம் ஆண்டிலும் (14 பணிகள்), 1976–77 ஆம் ஆண்டிலும் (7 பணிகள்) நிறைவேற்ற அனுமதிக்கப் பட்டது. மேலும் பல பணிகளை மேற்கொள்ள வேண்டி யிருந்ததால், 1977–78 ஆம் ஆண்டில் 7 பணிகளையும், 1978–79 ஆம் ஆண்டில் 3 பணிகளையும், 1979–80 ஆம் ஆண்டில் 16 பணிகளையும் கொண்ட வேறொரு பட்டியல் தயாரிக்குமாறு கருத்துரைக்கப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்தாலோசித்த பின்னரே பொதுவாக இப்பணிகள் தெரிந் தெடுக்கப்பட்டன. அளிக்கப்பட்ட ஒப்புதல், செய்யப்பட்ட இறுதி ஒதுக்கீடு, ஆண்டு வாரியாகச் செய்யப்பட்ட செலவுகள் ஆகியவை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| ஆண்டு. | அனுமதிக் கப்பட்ட பணிகளின் எண் ணிக்கை. | அனுமதிக் கப்பட்ட பணிகளின் செலவு. | இறுதி ஒதுக்கீடு. | செய்யப் பட்ட செலவு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1975–76 .. | 14 | 76.87 | 40.00 | 37.72 |
| 1976–77 .. | 7 | 23.22 | 35.00 | 31.75 |
| 1977–78 .. | 7 | 21.11 | 21.68 | 19.31 |
| 1978–79 .. | 3 | 9.35 | 17.76 | 17.20 |
| 1979–80 .. | 16 | 141.50 | 31.28 | 31.38 |
| மொத்தம் .. | 47 | 272.05 | 145.72 | 137.36 |

1980 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் நாளன்றுள்ளவாறு
எஞ்சிய பணிகளின் மதிப்பு 143.00 இலட்சம் ரூபாயாகும்.
47 பணிகளுள் 20 பணிகள் முடிவடைந்துள்ளன. எஞ்சியுள்ள
பணிகள் பல நிலைகளில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

அரசு 141.50 இலட்சம் ரூபாய் செலவில் அண்மையில் அனு
மதி அளித்த கடைசி 16 புதிய பணிகளுள், 46.70 இலட்சம்
ரூபாய் செலவில் முதல் ஆறு பணிகளுக்குத் தொழில் நுட்ப
அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிகளுக்குரிய ஒப்பந்தங்
களும் முடிக்கப்பட்டு உள்ளன. எஞ்சியுள்ள பத்து பணிகள்
குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

1979-80 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட செலவு 31.38
இலட்சம் ரூபாயாகும். இது வரை 139 கிலோ மீட்டர்
தொலைவுடைய ஊராட்சி ஒன்றியச் சாலைகள் (அதாவது
124 கிலோ மீட்டர் தார் சாலை, 15 கிலோ மீட்டர்
மெகாடம் சாலை) மேம்படுத்தப்பட்டுள்ளன. 4/6 கிலோ
மீட்டரில் கைகாட்டி கூக்கத்தூர் சாலையில் பாலம் கட்டும் பணி
1980 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆம் நாளன்று முடிக்கப்
பட்டுள்ளது. 1980-81, 1981-82 ஆம் ஆண்டுகளில் 143.00
இலட்சம் ரூபாய் செலவில் சுமார் 60 கிலோ மீட்டர் தொலை
வுள்ள சாலைகள் மேம்படுத்தப்பட வேண்டும். 1980-81 ஆம்
ஆண்டுக்கு 60 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்
டுள்ளது.

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், சமீபத்தில்
அனுமதிக்கப்பட்ட மேலே குறிப்பிடப்பட்டுள்ள 16 பணிகள்
நீங்கலாக, 371 இலட்சம் ரூபாய் செலவில் உதகமண்டலம்,
குன்னூர், வெலிங்டன், அரவங்காடு, கோத்தகிரி ஆகிய ஊர்
களுக்கு வெள்ளப் பெருக்கு ஏற்படும் காலங்களில் மாற்று வழித்
தடங்களை (கீழே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலைக் காண்க)
அமைப்பது குறித்த செயற்குறிப்புகளும் அரசு பரிசீலனையில்
உள்ளன.

…லகிரி மாவட்டத்தில் மேம்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள
மாற்றுச் சாலைகள் குறித்த பட்டியல்.

(i) லோயநலா-கேரளா-அச்சன்கோயில்
...ட்டு சாலை (5.2 கி.மீ.)

இப்பணி
யானது
மலைப்பகுதி
மேம்பாட்டுத்
திட்டத்தின்கீழ்
ஏற்கனவே
எடுத்துக்
கொள்ளப்
பட்டுள்ளது.



| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| (ii) கேத்தி-எல்லனஹள்ளி பழைய அரவன்காடு, மொடிதளை-ஒட்டுப்பட்டேரி சாலை (10 கி. மீட்டர்) (அரசின் ஏனைய மாவட்டச் சாலைகள்). | 7.00 |
| (iii) கேத்தி-பாலாட-சேலம் சாலை (10 கிலோ மீட்டர்) (அரசின் ஏனைய மாவட்டச் சாலைகள்). | 10.00 |
| (iv) உதகமண்டலம் - ஸ்னோடன் - மேட்டா சாலை (உதகமண்டலம் நகராட்சிச் சாலை) (6.0 கி. மீட்டர்). | 6.00 |
| (v) ஷோலூர் மட்டத்திலிருந்து தெங்கு நாரதாவுக்கு மலைச் சாலை (புதிதாக 31.0 கி.மீட்டர் அமைத்தல்). | 76.00 |
| (vi) காரமடை - பில்லூர் - கொலக்கொம்பை சாலை (27 கி. மீட்டர்) (புதிதாக அமைப்பது 17.00 கிலோ மீட்டர்). | 29.00 |
| (vii) மாசினிகுடி ஆனைக்கட்டி சிறூர் - தெங்கு நாரதா சாலை (1) மாநில நெடுஞ்சாலை 3 கிலோ மீட்டர், (2) வனச் சாலை 8 கி. மீட்டர், (3) மண் சாலை 8 கி. மீட்டர், (4) புதிதாக அமைத்தல் 15 கி. மீட்டர், மொத்தம் 39 கிலோ மீட்டர். | 128.00 |
| (viii) பைகாரா ஷோலூர் - கோலநத்தி கவரத்தி தவமி குடனாடு - தேனாடு கோம்பை - தூனேரி கொடுமுடி - கட்டபேத்து சாலை (அரசின் ஏனைய மாவட்டச் சாலைகள் 35 கிலோ மீட்டர், ஊராட்சி ஒன்றியச் சாலைகள் 15.00 கிலோ மீட்டர்). | 35.00 |

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| (ix) குந்தா - காரமடைச் சாலை (மின் வாரியச் சாலை - அரசின் ஏனைய மாவட்டச் சாலைகள் 32 கிலோ மீட்டர்) 5 கிலோ மீட்டர். | 20.00 |
| (x) உதகமண்டலம் - கோத்தகிரி - மேட்டுப் பாளையம் சாலை (அரசின் ஏனைய மாவட்டச் சாலைகள்) 58 கிலோ மீட்டர். | 60.00 |
| மொத்தம் .. | 371.00 |

வனத் துறை தொடர்பான, மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.
நீலகிரி மாவட்டம்.

நீலகிரி மாவட்டத்தில் பின்வரும் மூன்று சாலைகள், நெடுஞ் சாலை - கிராமப் பணிகள் துறை நிறைவேற்றும் என்னும் கருத்தை வனத் துறைத் தலைவர் தெரிவித்துள்ளார் :—

| | செலவு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| (i) ஆனைக் கட்டியிலிருந்து சிறுருக்குச் செல்லும் சாலையை மேம்படுத்துதல் 0/0-7/2 கிலோ மீட்டர். | 15.00 |
| (ii) மடுமந்து சாலை சந்திப்பிலிருந்து முக்கூர்த்தி ஏரி மேற்குக் கரைச் சாலை நெடுகவுள்ள சாலையை மேம்படுத்துதல். | 15.00 |
| (iii) நீலகிரி மலையுச்சிக்குச் செல்லும் தற்போதுள்ள வனச் சாலையை மேம்படுத்தல். | 7.00 |

1979–80 ஆம் ஆண்டில் 15.00 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டது.



(ரு) மேற்கு மலைத் தொடர் சாலை வளர்ச்சித் திட்டம் :

மலையில் விளையும் பொருட்களைச் சமவெளிக்குக் கொண்டு வருவதற்காக மேற்கு மலைத் தொடரில் சாலையை அமைத்தல், ஏற்கெனவே உள்ள சாலைகளை மேம்படுத்தல் ஆகிய பணி இந்திய அரசின் நிதியுதவியுடன் இத்திட்டத்தின்கீழ் தொடங்கப் பட்டது. இது மத்திய அரசு ஆதரவளிக்கும் ஒரு திட்டமாகும்.

இத்திட்டத்தின்கீழ், ஒரே ஒரு பணி, அதாவது, சிறுமலை மலைச் சாலையில் 13·0 முதல் 25·8 கிலோ மீட்டர் வரையுள்ள சாலையை 15.00 இலட்சம் ரூபாய் செலவில் மேம் படுத்தும் பணி தொடங்கப்பட்டு முடிவடைந்தது.

பின்னர் ''506 பகுதி மேம்பாடு குறித்த மூலதனச் செலவு'' என்ற தலைப்பில், இத்திட்டத்தின்கீழ் நிறைவேற்றுவதற்காக மதுரை மாவட்டத்தில் 72.00 இலட்சம் ரூபாய் செலவில் பின் வரும் பணிகளைச் செய்ய, 1978–79 ஆம் ஆண்டில் அரசு அனுமதி அளித்தது.

| பணியின் பெயர். | மதிப்பு. நி. ஒ. / தொ. து. ஒ. | 1979–80ம் ஆண்டுக் குரிய நிதி ஒதுக்கம். | 31-3-1980 வரை ஏற்பட்ட செலவு. | 1980–81-க் குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | பணி நடைபெற்று வரும் நிலை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| (i) கொடைக்கானலிலிருந்து வெள்ளக் கவி வரை (மதுரை மாவட்டம்) ஜீப் செல்லக் கூடிய சாலையை அமைத்தல். | 6·75 | .. | .. | .. | உத்தேசிக்கப்பட்டுள்ள சாலை மிகச் செங்குத்தான பகுதி வழியாகச் செல்வதால் இப்பணியை விட்டு விடும்படி பரிந்துரைக்கப்பட்டுள்ளது. |
| (ii) கும்பக்கரையிலிருந்து வெள்ளக்கவி வரை ஜீப் செல்லக்கூடிய சாலையை அமைத்தல். | 15·00 | .. | 28·00 இலட்சம் ரூபாய்க்கு திருத்த நிர்வாக அனுமதி அளிக்கக் கருதப் பட்டுள்ளது. | 15·00 | நடப்பு அட்டவணை விதங்களின்படி இப்பணிக்குரிய திருத்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. |
| (iii) தருமத்துப்பட்டியிலிருந்து ஆதலூருக்குச் சாலை அமைத்தல் | 35·00 / 38·50 | 8·00 | 9·00 | 25·00 | இப்பணிக்குரிய ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டு, பணி விரைவில் நிறைவேற்றப் படும். |
| (iv) பெரியக்குளத்திலிருந்து ஆடுக்கம்வரை சாலை அமைத்தல் | 15·00 / 20·00 | 2·00 | 1·00 | 10·00 | திருத்த நிர்வாக அனுமதிக்குரிய செயற் குறிப்பு பரிசீலிக்கப்பட்டு வருகிறது. |
| மொத்தம் .. .. | | 10·00 | 10·00 | 50·00 | |

(ட) கரும்பு ஆலைப்பகுதிச் சாலை வளர்ச்சித் திட்டம்:—

இத்திட்டம், சர்க்கரைத் துறை இயக்குநரின் கட்டுப்பாட்டின்
கீழ் உள்ளது. கரும்பை தோட்டங்களிலிருந்து சர்க்கரை ஆலை
களுக்கு எடுத்துச் செல்வதற்காக, சாலைகளை மாவட்டப் பெருஞ்
சாலைகள் நிலைக்கு மேம்படுத்துவதற்காக ஒவ்வொராண்டும்
அரசு நிதியுதவி அளிக்கிறது. இம் மாநிலத்தில், கரும்பு
வளர்ச்சிப் பகுதியில் உள்ள சாலைகள், பொதுவாக 21
கரும்பாலைகளுக்கு அருகாமையிலேயே அமைந்துள்ளன. இவை
மாவட்டப் பெருஞ்சாலைகளாக நெடுஞ்சாலை—கிராமப் பணித்
துறையால் மேம்படுத்தப்பட்டும், பராமரிக்கப்பட்டும் வருகின்
றன.

இத்திட்டத்தின் கீழ் 1979-80 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட
தொகை 150·00 இலட்சம் ரூபாயாகும். செலவு செய்யப்பட்ட
தொகை 147.65 இலட்சம் ரூபாயாகும். 1—4—80 நாளன்றுள்ள
வாறு, மேம்படுத்துவதற்காகவும், அமைப்பதற்காகவும், பராமரிப்
பதற்காகவும் எடுத்துக்கொள்ளப்பட்ட சாலைகளின் நீளம்
553·20 கிலோ மீட்டர் ஆகும். 1980—81ஆம் ஆண்டில் அரசு
150 இலட்சம் ரூபாய் அளித்துள்ளது.

ஏறக்குறைய 152.55 இலட்சம் ரூபாய் செலவில் பணி
மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்காக 13 புதிய பணிகளை சர்க்
கரைத் துறை இயக்குநர் தெரிந்து எடுத்துள்ளார். பணி
மதிப்பீடுகளைத் தயாரிப்பது பல்வேறு நிலைகளில் உள்ளது.
(ண) உலக வங்கித் திட்டத்தின்கீழ் சென்னை மாநகர்ப்புற வளர்ச்சித்
திட்டம்:—

சென்னை மாநகரில் 11.7 கிலோ மீட்டர் நீளத்தில்
உள்வட்டச் சாலை ஒன்றை அமைக்கவும், குறிப்பிட்ட சில
பெருவழிச் சாலைகளை மேம்படுத்துவதற்காகவும், மாநகராட்சி
பிரிவில் சில சாலைகளை மேம்படுத்துவதற்காகவும் உலக
வங்கியிடமிருந்து 7.18 கோடி ரூபாய் நிதியுதவி கோரப்பட்
டுள்ளது. பெருவழிச் சாலைப் பணிக்கு 4 கோடி ரூபாயும்
மாநகராட்சிப் பிரிவின்கீழ் செய்யப்படும் பணிக்கு 3.18 கோடி
ரூபாயும் ஆகும்.

இத்திட்டத்திற்கு, 1979—80 ஆம் ஆண்டில் 190.48 இலட்சம்
ரூபாய் செலவு செய்யப்பட்டது. 1980—81ஆம் ஆண்டிற்
குரிய வரவு-செலவுத்திட்ட மதிப்பீடு 198.96 இலட்சம்
ரூபாயாகும்.



11.7 கி. மீ. உள் வட்டச் சாலையில் 6.8 கி. மீ. தொலை
விற்குப் பணிகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன. 0.7
கி. மீ. தொலைவுக்கு சாலை போடும் பணிக்குரிய ஒப்பந்தப்
புள்ளிகள் கேட்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் நிலம்
கையகப்படுத்தப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்படும்.

அண்ணா சாலையில் உள்ள இந்து பத்திரிகை அலுவலகம்
அருகேயும், பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் கீழ்ப்பாக்கம்
மருத்துவக் கல்லூரி அருகேயும் சுரங்கப்பாதை அமைக்கும்
பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. வால்டாக்ஸ் சாலையில் சென்ட்
ரல் ரயில்வே நிலையத்திற்கு அருகிலும், வடக்குக் கடற்கரை
சாலையில் கடற்கரை ரயில் நிலையத்திற்கு எதிரேயும் அண்ணா
சாலையில் சபையர் திரையரங்குக்கு அருகிலும், சைதாப்
பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு அருகிலும் சுரங்கப்
பாதைகள் அமைக்கும் பணி முடிக்கப்பட்டு அவை பொது
மக்களின் பயனுக்குத் திறந்து விடப்பட்டுள்ளன. அண்ணா
சாலை, பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை ஆகியவற்றில் கால்நடை
யாகவும் செல்வோருக்கும், சைக்கிளில் செல்வோருக்கும்
உரிய வசதிகளைச் செய்து கொடுக்கவும், மேம்பாடுகளைச்
செய்வதற்குமான பணிகள் நடைபெற்று வருகின்றன. கீழ்ப்
பாக்கம் தோட்டச்சாலை, டிமெல்லோ சாலை, பிரகாசம் முதலி
சாலை, வெங்கட நாராயணா சாலை, விஜயராகவாச்சாரி
சாலை, ஆகியவற்றில் 5 சிறு பாலங்களைக் கட்டும் பணிகள்
முடிக்கப்பட்டுள்ளன.

பிராட்வே, மாலை அங்காடிச் சாலை, பீட்டர்ஸ் சாலை,
ஆடம்ஸ் சாலை ஆகியவற்றில் போக்குவரத்து அடையாள
விளக்குகளை அமைக்கும் பணி நிறைவேற்றப்பட்டுள்ளன.
காண்ட்ஸ் சாலையில் உள்ள பாலத்தை 20 இலட்சம் ரூபாய்
செலவில் புதுப்பித்துக் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.
நெல்சன் மாணிக்க முதலியார் சாலையில் உயர் நிலைப் பாலம்
கட்டும் பணியும் நடைபெற்று வருகிறது. கோயம்பேட்டுக்கு
அருகே கூவத்தின் குறுக்கே பாலம் கட்டும் பணி எடுத்துக்
கொள்ளப்பட்டுள்ளது. நெல்சன் மாணிக்க முதலியார்
சாலையில் தற்போதுள்ள இருப்புப் பாதை கடவுக்குப்பதிலாக
வாகனங்கள் சுரங்கப் பாதை கட்டும் பணி ரூ. 94 இலட்சம்
செலவில் விரைவில் எடுத்துக்கொள்ளப்படும்.

அண்ணா சாலையில் கிண்டி இரயில்வே நிலையத்திற்கு அருகே
யும், எல்.ஐ.சி. கட்டிடத்திற்கு அருகேயும், தண்டையார்
பேட்டையில் தொற்றுநோய் (I. D. Hospital) மருத்துவமனைக்கு
அருகேயும் சுரங்கப்பாதை பணிகள் தற்போது நடைபெற்று
வருகின்றன.

1980–81இல், நெல்சன் மாணிக்க முதலியார் சாலையில் வாகனப் போக்குவரத்து சுரங்கப்பாதை கட்டுவது, வைத்திய நாத முதலியார் தெருவில் மேம்பாலத்தைக் கட்டுவது ஆகிய பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. 4.9 கி.மீ. (4.4 – 8.6, 11/0 — 11.7) நீளமுள்ள உள்வட்ட சாலைக்குரிய எஞ்சிய பணியும் எடுத்துக்கொள்ளப்படும். 1979–80ஆம் ஆண்டு இறுதியில் நடைபெற்று வந்த அனைத்துப் பணி களையும் 1980–81 ஆண்டிற்குள் முடிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேற்சொன்ன பெருநகர் மேம்பாட்டுத் திட்டம் (நிலை —1) தவிர, பெருநகர் மேம்பாட்டுத் திட்டம் (நிலை—2) பெரிய பணிகள் மேற்கொள்ளப்படுமென உத்தேசிக்கப்பட்டுள்ளன. அதாவது 1980–81இல் 11.7 முதல் 17.7வரை உள்வட்டச் சாலையை அமைத்தல், 10.4 முதல் 25·0 வரை சென்னை திருவள்ளுவர் சாலையையும், மொகப் பையரில் உள்ள பாலத்தையும் மேம்படுத்துதல்.

(த) ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சாலைப் பணிகள்.

இத்திட்டம், நெடுஞ்சாலை, சென்னை மாநகராட்சி ஆகிய வற்றிடம் நிலைபெற்றுள்ள சாலைப் பணிகளை சென்னைப் பெருநகர் பகுதியில் மேம்படுத்துவதற்கு வகை செய்கிறது. புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனம் அருகே எல்லியட்ஸ் கடற் கரைச்சாலையில் பக்கிங்காம் கால்வாய் குறுக்கே உள்ள பாலத்தை அகலப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. பூவிருந்த வல்லி நெடுஞ்சாலையை (I, II நிலைகள்) அகலப்படுத்துவதற்கு நிலத்தைக் கையகப்படுத்துவது, இரும்புலியூர் சாலையில் மறைமலையடிகள் பாலத்தை மேம்படுத்துவது ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

இராமகிருஷ்ணமடப் சாலையில் பக்கிங்காம் கால்வாய் குறுக்கே உள்ள பாலத்தை இத்திட்டத்தின்கீழ் புதுப்பித்துக் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. கோட்டூர்புரத்தையும், டர்ன் புல்ஸ் சாலையையும் இணைக்கும் பாலம் ஒன்றை அடையாற்றின் குறுக்கே கட்டுவதற்கான செயற் குறிப்புக்கு ஏற்பளிக்கப் பட்டுள்ளது. இப்பணி விரைவில் எடுத்துக்கொள்ளப்படும். சென்ட்ரல் ரயில்வே நிலையம் அருகே பக்கிங்காம் கால்வாய் குறுக்கே பாலத்தின் இரண்டாவது பாதியை ரூ. 16.50 இலட்சம் செலவில் புதுப்பித்துக் கட்டும் பணிக்கான மதிப் பீட்டிற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணி குறித்து ஒப்பந்தப் புள்ளிகள் கேட்கப்பட்டுள்ளன.



இத்திட்டத்தின்கீழ், கீழ்க்கண்ட ஏழு (7) பணிகளுக்கு ரூ. 120·25 இலட்சம் மொத்தச் செலவில் 1979-ல் ஒப்புதல் வழங்கப்பட்டது. இப்பணிகள் பல்வேறு நிலைகளில் நிறை வேற்றப்பட்டு வருகின்றன.

| தொடர் எண்ணும், பணியின் பெயரும். | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| (1) | (2) |
| (i) சென்ட்ரல் ரயில்வே நிலையத்திலிருந்து புதிய ஆவடிச்சாலைவரை பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையை மேம்படுத்துதல். | 16·30 |
| (ii) மறைமலை அடிகள் பாலம்—இரும்புலியூர் சாலையில் மை. 5/0 தொலைவிற்கும் சென்னை தரமணி வழியாக மகாபலிபுரம் சாலையில் 13·4 கிலோ மீட்டருக்கும் இடையில் இணைப்புச் சாலை அமைத்தலும் வேளச்சேரி நகருக்குப் புறச்சாலை அமைத்தலும். | 30·00 |
| (iii) 45-ஆவது தேசிய நெடுஞ்சாலையில் 11·7 முதல் 15·4 கிலோ மீட்டர்வரை (நகர எல்லை யிலிருந்து விமான நிலையம்வரை) சாலை மேம்படுத்துதல். | 12·30 |
| (iv) அண்ணா நகர் பிரதானசாலைச் சந்திப்பி லிருந்து உள்ளவட்டச்சாலை சந்திப்புவரை புதிய ஆவடிச்சாலையை மேம்படுத்துதல். | 18·65 |
| (v) திருவொற்றியூர்—பொன்னேரி - பஞ்செட்டி சாலையில் முறையே 5.2 கி.மீ., 7·4கி.மீ., 7·10 கி.மீ. தொலைவில் மூன்று பாலங்கள் கட்டுதல். | 10·50 |
| (vi) வடக்குப் பெருஞ்சாலையில் 6·8-9 கிலோ மீட்டரில் உள்ள பாலத்தைப் புதுப்பித்தல். | 30.00 |
| (vii) அண்ணாநகரையும், அம்பத்தூர் தொழில் பேட்டையையும் இணைத்துச் சாலை அமைத்தல். | 2·50 |
| மொத்தம் .. | 120·25 |

ரூ. 55·49 இலட்சம் 1979-80ஆம் ஆண்டில் செலவிடப் பட்டது. 1980-81ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 55·13 இலட்சம் ஆகும்.

கீழ்க்கண்ட இரண்டு பணிகள் பரிசீலனையில் உள்ளன :—

(i) கிண்டி இரயில் நிலையம் அருகே கிண்டி சுரங்கப் பாதையிலிருந்து மவுண்ட் பூவிருந்தவல்லி சந்திப்புவரை 47ஆம் எண். தேசிய நெடுஞ்சாலையை 11·7 முதல் 12·2 கி.மீ. வரை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்துதல்.

(ii) பூவிருந்தவல்லி தேசிய நெடுஞ்சாலையை அகலப் படுத்துதல்.

(ந) பெருநகர்ச் சாலை மேம்பாட்டுத் திட்டம்.

ஒருங்கிணைந்த நகர மேம்பாட்டுத் திட்டம் கொண்டு வரப் படுவதற்கு முன்னர், மாநகரச்சாலை மேம்பாட்டுப் பணிகள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டன. நெடுஞ்சாலைத் துறை, சென்னை மாநகராட்சி ஆகியவற்றில் நிலைபெற்றுள்ள சாலைகளை சென்னை பெருநகர் பகுதியில் மேம்படுத்து வதற்கு இத்திட்டம் வகை செய்கிறது. பல பணிகள் இது வரையில் இத்திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டன. நடைபெற்று வருகின்ற இரண்டு பணிகள் வருமாறு.—

| | (ரூபாய் இலட்சத்தில்) |
| --- | --- |
| (i) தேசிய நெடுஞ்சாலை புறவழிச்சாலையைத் தொடர்ந்து சென்னை—கல்கத்தா சாலைக்கும் திருவொற்றியூர் — பொன்னேரி — பஞ்செட்டி சாலைக்கும் இடையில் இணைப்புச்சாலை அமைத்தல் (நிலம் கையகப்படுத்துவது மட்டும்) | 8·50 |
| (ii) சென்னை — திருச்சிராப்பள்ளி — திண்டுக்கல் சாலைக்கும்மகாபலிபுரம் சாலைக்கும் இடையில் தேசிய நெடுஞ்சாலை புறச்சாலையை இழக்காக சாலை அமைத்தல். (நிலம் கையகப்படுத்துவது மட்டும்.) | 27:00 |

1979-80 ஆம் ஆண்டில் ரூ. 24·11 இலட்சம் செலவிடப் பட்டது. 1980-81 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 13.74 இலட்சம் ஆகும்.



(ப) ஆராய்ச்சி-மேம்பாடு—

ஆராய்ச்சி என்பது வளர்ச்சிப் பணிக்கு அடிப்படைத் தேவை யாகும். சாலைகளை அமைப்பதற்கு ஆகும் செலவைக் குறைப் பதற்கும், சாலைகளை அமைப்பதற்கு உள்ளூரிலே கிடைக்கக் கூடிய தக்க மூலப் பொருள்களைப் பயன்படுத்தும் பொருட்டும் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் பல்வேறுத் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அவை விரைவாக நடைபெற்று வருகின்றன.

குறைந்த செலவில் சாலை அமைப்பதற்காகத் தகுந்த சாலை தொழில் நுட்பவியலை வகுப்பதற்குரிய ஆய்வும் செய்யப்பட்டு வருகிறது.

அத்தகைய ஆய்வின் பலனாகவும் ஏனைய ஆராய்ச்சித் திட் டங்களினாலும் சாலை அமைக்கும் பணிகளுக்காகும் செலவு குறிப் பிடத்தக்க வகையில் குறையும்.

1979-80 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 8.6 இலட்சம் செலவிலான செயற் குறிப்புகளுக்கு அரசு ஒப்புதல்வழங்கியுள்ளது. 1980-81 ஆம் ஆண்டுக்கு ரூ. 10.00 இலட்சம் மதிப்புள்ள பணிகளை மேற்கொள்வது குறித்து பரிசீலனையில் உள்ளது. 1979-80-ல் ரூ. 4·6 இலட்சம் செலவு ஏற்பட்டது. 1980-81 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 8.60 இலட்ச மாகும்.

(ம) பேருந்து வழித்தடங்களை அரசு எடுத்துக் கொள்ளுதல்—

கிராமப் பகுதிகளில் கிராம மக்களின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கு சிறந்த சாலைப் போக்குவரத்து வசதிகள் தேவைப்படுகின்றன. மக்கள் சென்று வரவும் பொருட்களை எடுத்துச் செல்லவும் கிராமங்கள் அண்டையிலுள்ள நகரங்களுடன் இணைக்கப்பட வேண்டியது அவசியமாகும். கிராமப் பகுதிகளில் உள்ள பேருந்து வழித்தடங்கள் குறித்த விரி வான ஆய்வைத் தமிழ்நாடு அரசு அண்மையில் மேற்கொண்டது. தற்போது பேருந்துகள் செல்லும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை (ஆனால், பேருந்து செல்வதற்கு ஏற்றதாய் இல்லாதவை) எல்லா வித தட்பவெட்ப நிலமைக்கும் ஏற்றவாறு மேம்படுத்தக் கரு தப்பட்டது. வழித்தடத்தில் பேருந்து செல்வதற்கான கால அளவு, பேருந்துப் பயணங்களின் எண்ணிக்கை பயணஞ் செய்யும் மக்களின் எண்ணிக்கை முதலியவற்றைக் கருத்திற்கொண்டு முன் னுரிமைப் பட்டியல்கள் வகுக்கப்பட்டுள்ளன. 1978ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாளன்றுள்ளவாறு கிராமப் பகுதிகளில் சுமார் 5,200 கி. மீட்டர் தொலைவுக்குப் பேருந்து வழித்தடச்

சாலைகள் உள்ளன. முதற்படியாக, 2,510 கி. மீட்டர் பெருந்து வழித்தடச் சாலைகளை மேம்படுத்த அரசு ஏற்பளித்துள்ளது. இதில் '' தன்னிறைவு '' திட்டத்தின் கீழ்வரும், தெரிந்தெடுக்கப்பட்ட 69 வட்டாரங்களில் வரும் 867 கி. மீட்டர் நீளமுள்ள சாலையும் அடங்கும். மேற்சொன்ன செயற்குறிப்புக்காக, அரசு 1979—80-ல் ரூ. 6 கோடி ஒதுக்கியுள்ளது.

1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளுக்குள் இட்டத் தட்ட ரூ. 6 கோடியும் செலவிடப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள வழித்தடச் சாலையை மேம்படுத்துவதற்குச் சுமார் ரூ. 2.04 கோடி ஆகும்.

2,605 கி. மீட்டர் நீளமுள்ள பெருந்துவழித்தடச் சாலைகளை மேம்படுத்த 1980-81 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 10·00 கோடி அரசு நிதி ஒதுக்கியுள்ளது. கி. மீட்டர் ஒன்றுக்கு சுமார் ரூ. 40,000 என்ற வீதத்தில் ரூ. 10·50 கோடி செலவாகும். எனவே எஞ்சிய பணிகளை முடிக்க ரூ. 2.00 கோடி தேவைப்படும். எனவே, எஞ்சிய பணிகளையும் 2,605 கி. மீட்டர் புதிய பணிகளையும் முடிக்க மொத்தம் ரூ. 12.50 கோடி தேவைப்படும் என்று குறிப்பிடலாம். இதுவரையில் குறிப்பிட்ட வழித்தடத்தின் நீளம் 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் வரையிலான காலத்திற்குச் சம்பந்தப்பட்டதாகும் எனவே 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதல் 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் வரையில் மேம்படுத்தப்பட்ட பெருந்து வழித்தடங்களின் பட்டியல் தொகுக்கப்பட்டு வருகிறது.

(ய) ஆய்வு:— மூன்று பிரிவுகளுடன் கூடிய தனிச்சரகம் ஒன்று எல்லாப்பெருந்திட்டங்கள் பற்றிய ஆய்வுப்பணிக்கும் விரிவான திட்டங்களையும் மதிப்பீடுகளையும் தயாரிக்கும் பணிக்கு பொறுப்பு வகிக்கின்றது, தேசிய நெடுஞ்சாலைகளைத் தவிர, மாநிலத்திலுள்ள பாலப் பணிகள், முக்கிய சாலைப் பணிகள் அனைத்து குறித்தும் இச்சரகம் தொடக்க நிலையில் விரிவாக ஆய்வு செய்து நேரிட விவரங்களைச் சேகரிக்கின்றது. இவை சரியான முறையில் திட்டங்களை வடிவமைப்பதற்கும் மதிப்பீடுகள் தயாரிப்பதற்கும் உதவுகின்றன. இத்துடன், அரசின் ஏனைய துறைகளான தொழில், மீனளம், வேளாண்மைத் துறைகளின் பணிகள் குறித்த ஆய்வு, திட்டங்கள், மதிப்பீடுகள் தயாரித்தல் ஆகிய பணிகளையும் இச்சரகம் மேற்கொள்கிறது.

(ர) வடிவமைப்பு : தனிச் சரகம், மேற்கொள்ளும் முக்கிய பணிகளுக்கான வடிவமைப்புகளைத் தயாரிக்கும் பொறுப்பை ஏற்கிறது. பெரியபாலங்கள், மேம்பாலம், சுரங்கப்பாதை, நீண்டவிட்டமுள்ள முன்னரே விழுத்தப்பட்டசிமிட்டிக்கற்கலவைக்கட்டுமானங்



கள்போன்ற சிக்கலான கட்டுமானங்கள் ஆகியவற்றின் வடிவமைப்பு களைத் தயாரித்து தற்போதைய தொழில்நுட்ப உத்தியுடன் இணைக்கும் பணியில் இச்சரகம் பெரும்பாலும் ஈடுபடுகிறது. இதன் காரணமாக பணியை நிறைவேற்றுவதற்குச் சிக்கனமான சிறந்த வடிவமைப்புகள் கிடைக்கின்றன. வலுவற்றக் கட்டு மானங்களைக் கண்டறிந்து, ஏற்கெனவே உள்ள கட்டுமானத்தில் உள்ள குறைகளைப் போக்குவதற்கு அவசியமான செயற்குறிப் பைத் தயாரிக்கும் பணியையும் இச்சரகம் மேற் கொள்கிறது.

(ல) போக்குவரத்துப் பொறியியல் நிர்வாகப் பிரிவு :

நமது நாட்டில் போக்கு வரத்து பெருமளவுக்கு வளர்ந்துள் ளது. அதன் காரணமாகப் போக்குவரத்தும், போக்குவரத்துப் பொறியியல் துறையும் மிகுந்த முக்கியத்துவம் அடைந்து வளர்ச்சி யடைந்துள்ளது. சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு போக்குவரத்துப் பொறியியல் பிரிவு ஒன்றை மாநில அரசு ஏற் படுத்தியுள்ளது. இப்பிரிவு, மேற்பார்வைப் பொறியாளரது தலைமையின்கீழ்ச் செயல்படுகின்றது. இவருக்குக் கோட்டப் பொறியாளர்கள் இருவர் உதவிபுரிவர். இக்கோட்டங்களில் ஒன்று சென்னையிலும் மற்றொன்று திருச்சியிலும் உள்ளன. சென்னை மாநகரிலும் மற்றும் ஏனைய முக்கியமான நகரங்களி லும் போக்குவரத்து அடையாள விளக்குகளை அமைப்பதிலும் அவசியமாயிருக்குமிடங்களிலும் போக்குவரத்துத் தீவுத்திடல்களை ஏற்படுத்துவதிலும் போக்குவரத்து பாதுகாப்புடனும் முறை யாகவும் செல்வதற்கு போக்குவரத்துப் பாதைகளை அமைப்பதி லும் சாலைகளின் போக்குவரத்துத் தாங்கும் திறனை உரிய அளவுக்கு உயர்த்துவதிலும் நிர்வாகப் பணியாளர்களுக்கு இப் பிரிவு ஆலோசனை நல்குகிறது.

(வ) தமிழ்நாடு கட்டுமானப் பணிக்கழகம் :

மதுரையைத் தலைமையிடமாகக்கொண்டு ''தமிழ்நாடு கட்டு மானப் பணிக் கழகத்தை''. அமைக்க அரசு அனுமதித்துள்ளது. இக்கழகம் ரூ. 5.00 இலட்சமும் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) அதற்கு மேற்பட்டும் செலவாகும் பணிகளை நிறைவேற்று வதற்கு எடுத்துக்கொள்ளும். மேலும், இக்கழகம் ஒப்பந்தக்காரர் கள் செய்யாமல் கைவிட்ட பணிகளையும் ஒப்பந்தப் புள்ளிகள் வரப்பெறாத பணிகளையும் (செலவு எவ்வளவாயினுஞ் சரி) மேற்கொள்ளும். இக்கழகம் 11—2—1980 அன்று செயல்படத் தொடங்கியுள்ளது.

(ழ) தொழில் நுட்பப் பிரிவு :

நெடுஞ்சாலைகள் துறை ஒவ்வோராண்டும் ரூ. 40 கோடி முதல் ரூ. 50 கோடி வரை மதிப்புள்ள பணிகளை (சாலைகளும் பாலங்களும்) நிறைவேற்றுகின்றது.

அத்தகைய பெரும் பணிகளை மேற்கொள்ள சரியான தரக் கட்டுப்பாடு தேவைப்படுகிறது. அத்தகைய முறையான தரக் கட்டுப்பாட்டை கொண்டுவர பிரிவு ஒன்று இத்துறையில் தலைமைப் பொறியாளரது கட்டுப்பாட்டின்கீழ் அமைக்கப்பட்டுள்ளது. தெரிந்தெடுக்கப்பட்ட மதிப்பீடுகளை ஆய்வு செய்தல், தொழில்நுட்ப கண்ணோட்டத்தில் செய்யப்பட்ட ஏற்பாடுகள் போதுமானதா என்று ஐயமறத்தெளிதல், பணிகளை நிறைவேற்றுகையில் குறிப்பீடுகள் சரவர செயல்படுத்தப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்துவதற்காக பெரும் பணிகளை திடீரென்றும் திட்டமிட்டும் சென்று பார்வையிடுதல் ஆகிய பணிகளுக்கு இப்பிரிவு பொறுப்புள்ளதாகும். பணிகளை வடிவமைத்தல், நிறைவேற்றுதல் ஆகியவற்றில் தரத்தினை உயர்த்துவதற்கு இப்பிரிவு உதவுகிறது.

(ள) கிராமச் சாலைகள்—போக்குவரத்து அதிகார மன்றம் :

மாநிலத்தில் கீழ்க்காணும் துணைத் திட்டங்கள் குறித்து திட்டமிடுதல், ஒருங்கிணைத்தல், நிர்வகித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கான கிராமச் சாலைகள் போக்குவரத்து அதிகார மன்றம் ஒன்றை அமைப்பது பற்றி ஆய்வு செய்ய அரசு முடிவு எடுத்துள்ளது.

(i) வண்டிகள் அவற்றை இயக்குதல் துணைத் திட்டம்.

(ii) சாலை துணைத்திட்டம் (கட்டுமானம்—பராமரிப்புப் பணி சம்பந்தப்பட்டது).

(iiii) பயன்படுத்துவோர் துணைத் திட்டம்.

(iv) கட்டுப்பாட்டுத் துணைத் திட்டம்.

இந்த அதிகார மன்றம், கொள்கை விளக்கப் பணியை வகுப்பதிலும், முன்னுரிமைகளை வகுப்பதிலும் ஆலோசனை மன்றமாகவே செயல்படும். குறித்த காலத்திற்கு ஒரு முறை கூட்டங்களை நடத்தி, ஒருங்கிணைந்த வகையில் செயல்பட வழிவகுப்பதுடன், கிடைத்தற்கரிய வாயில்களை உரிய வகையில் பயன்படுத்த வழிவகைகளைக் காணவும் அது வழிகோலும்.

தேசிய நெடுஞ்சாலைகள் :

(1) தேசிய நெடுஞ்சாலைப் பிரிவு, 1971 ஆம் ஆண்டு செப்டம்பரில் ஏற்படுத்தப்பட்டு, தனித் தலைமைப் பொறியாளர் ஒருவரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது.

(2) தேசிய நெடுஞ்சாலைப் பிரிவு, தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களையும் மத்திய சாலை நிதித் திட்டப் பணியையும் கவனித்து வருகிறது. தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்கள், மத்திய அரசுத் துறைத் திட்டங்களாகும்; இவற்றிற்கு மத்திய அரசு முழு நிதியுதவி அளிக்கிறது.



மத்திய சாலை நிதித் திட்டம்.

(3) மத்திய சாலை நிதி, காலம் கடந்து போகாத நிதியாகும். மோட்டார் எண்ணெய்க்கு லிட்டர் ஒன்றுக்கு 3.5 காசு வீதம் விதிக்கப்படும் சுங்க—ஆயத் தீர்வையின் மூலம் இந்த நிதிக்கு வருவாய் கிடைக்கிறது. மொத்த வசூலில் 80 சதவிகிதம் இத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளுக்காகும் செலவுகளைச் சரிக்கட்டுவதற்காக மாநில அரசுக்கு ஒதுக்கப்படுகிறது. 20 சதவிதத்தை 'சேமத் தொகையாக' மத்திய அரசு வைத்து வருகிறது.

(4) மத்திய அரசு, நிதியுதவி முறையை 1977 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் திருத்தியமைத்துள்ளது. அதன்படி சாலைகள், பாலங்கள் அமைக்கும் பணிகளுக்கு குறைந்த முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ஆராய்ச்சித் திட்டங்கள், போக்குவரத்து ஆய்வுகள், பொருளாதார ஆய்வுகள், இளம் பொறியாளர் பயிற்சித் திட்டம் ஆகிய பணிகளை மேற்கொள்ளுவதற்கும் வழியோர வசதிகள் செய்து கொடுக்கவும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

நான்காம் திட்டம்.

(5) மத்திய சாலை நிதித் திட்டப் பணிகளுக்காக, நான்காம் திட்ட காலத்தில் ரூ. 224·10 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. நான்காம் திட்டக்காலத்தில் மத்திய சாலை நிதித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப் பட்ட திட்டங்கள் யாவும் முடிக்கப்பட்டுள்ள மூன்று பணிகள் மட்டும் விரைவில் முடிக்கப்படவிருக்கின்றன.

(1) வளர்த்தி காமபந்தாவுக்கும் ஆந்திர மாநில எல்லைக்குச் செல்லும் சாலைகள் மேற்கொள்ளப்படும் மேம்பாட்டுப் பணிகள் உட்பட, வாணியம்பாடிக்கும் ஜாப்பரதாபாத்துக்கும் இடையே பாலாற்றின் குறுக்கே தரைப்பாலம் ஒன்றைக் கட்டுதல் (ரூ. 49·50 இலட்சம்).

(2) கள்ளபுரம்—இணையமுத்தூர் சாலையில் கள்ளபுரத்திற்கருகில் 5·6 கி. மீட்டர் தொலைவில் அமராவதிக்குக் குறுக்கே தரைப்பாலம் ஒன்றை கட்டுல் (ரூ. 11·50 இலட்சம்).

(3) வலுவிழந்த பழைய பாலங்களைச் சோதனையிடுவதற்கு சோதனை வண்டிகளைத் தயாரித்தல் (ரூ. 7·70 இலட்சம்).

ஐந்தாண்டுத் திட்டம்.

(6) ஐந்தாம் திட்ட காலத்தில், ரூ. 322 395 இலட்சம் செலவு மதிப்புள்ள 13 பணிகளுக்கு மூன்று நிலைகளில் இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இப்பணிகளில் ஒரு பணியை (அதா வது தமிழ்நாடு—கருநாடக எல்லையில் கிர்காண்டிக்கு அரு கில் பாலாற்றின் குறுக்கே பாலம் ஒன்றைக் கட்டுதல்) கருநாடக மாநிலம் நிறைவேற்றவிருக்கிறது. இப்பணிக்காகும் செலவினை இரு அரசுகளும் சமமாக ஏற்கவேண்டும். தமிழ்நாடு அரசு தனது பங்குக்குரிய தொகையைச் செலுத்திவிட்டது.

(7) எஞ்சிய பன்னிரண்டு பணிகளில் பத்து பணிகளுக்குத் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது. இரண்டு பணிகளுக்குத் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட வேண்டும். இவ்விரு பணிகளில் ஒரு பணி (அதாவது, பெரியார் மாவட்டம் குத்தி யாலத்தூர் வனப் பகுதியில் சாலைகளை அமைத்து, மேம் பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல்) மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒரு பகுதிக்குத் தொழில் நுட்ப அனுமதி வழங் கப்பட்டு, எஞ்சிய இரண்டு பகுதி மதிப்பீடுகளுக்கு அனுமதி வழங்கப்படவேண்டும்.

(8) மற்றொரு பணி போளூரிலிருந்து ஜவ்வாது மலை உச் சிக்கும், ஆலங்காயத்திற்கும் செல்கின்ற மலைச் சாலையை மேம் படுத்துதல் ஆகும். இது ஆய்வில் உள்ளது.

(9) கிருபாகவுண்டன் ஜாகிர், வஞ்சிக்குழி வழியாக கிழக் காட்டையும் இராயப்பனூரையும் இணைத்து ரூ. 52 இலட்சம் செலவில் ஜீப் பாதை போகும் பணிக்கு மத்திய அரசு ஒப்பு தல் அளிக்குமென எதிர்பார்த்து மாநில அரசு மேற்கொண் டது. மத்திய அரசும் அப்பணிக்கு ஒப்புதல் அளித்தது. நெடுஞ் சாலைப் பிரிவு, இப்பணியைக் கவனித்து வருகிறது. இப்பணி நடந்தேறி வருகிறது.

(10) 49 ஆம் எண் நெடுஞ்சாலையான மதுரை தனுஷ்கோடி சாலையிலிருந்து கோதண்டராமசாமி கோயிலுக்குச் செல்ல சாலை ஒன்றை அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது. எஞ் சிய பணிகள், பல்வேறு நிலைகளில் நடந்தேறி வருகின்றன. எல்லாப் பணிகளின் நிலை பற்றிய விவரங்கள் இணைப்பு 8-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

(11) மாநில அரசு, மத்திய அரசின் பங்கிற்கு இணையாக தனது பங்கினைக் கொடுக்க முன்வருமேயானால் மத்திய அரசு மத்திய சாலை சேமநிதியிலிருந்து ரூ. 35 இலட்சம் கொடுக்க தன்னுடைய விருப்பத்தைத் தெரிவித்துள்ளது: அதன்படி ரூ. 70·00 இலட்சம் செலவு மதிப்புள்ள எட்டு பணிகளுக்கு ஒப்



புதல் அளிக்குமாறு மத்திய அரசுக்கு எழுதப்பட்டுள்ளது. மத் திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. 70 இலட்சம் ரூபாயில் ரூ. 35 இலட்சம் மத்திய அரசின் பங்காகும். அத் தொகை மத்திய சாலை (சாதாரண சேம) நிதியிலிருந்து வழங் கப்படும். எஞ்சிய 35 இலட்சம் மாநில அரசின் பங்காகும். இது ஆறாம் திட்டத்திற்காக மத்தியச்சாலை நிதிக்கு ஒதுக்கப் பட்ட தொகையில் எஞ்சியுள்ள தொகையிலிருந்து சரிக்கட்டப் படும். மேலும், நான்காம், ஐந்தாம் திட்ட காலத்தில் நடக் கும் பணிகள் குறித்து கணிசமான அளவுக்குக் கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. R1, R5, R9 ஆகிய ஆராய்ச்சித் திட்டங்களுக்கான மாநில அரசின் பங்கு, ஆறாம் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டதில், எஞ்சியுள்ள தொகையிலி ருந்து சரிக்கட்டப்பட வேண்டும். மத்தியச்சாலை நிதி ஒதுக்கீட் டின் கீழ் ஆறாவது திட்டத்திற்காக சேர்ந்து வரும் தொகை சுமார் ரூ. 232·00 இலட்சமாக இருக்குமென மத்திய அரசு தெரிவித்துள்ளது. சாலை வளர்ச்சித் திட்டங்களுக்குரிய இணை மானியத்தையும் செலவு பொறுப்பினையும் சரிக்கட்டுவதற்கா கவும் நடந்தேறி வரும் பணிக்கான செலவு அதிகரித்தாலும் தேவைப்படும் நிதி சுமார் ரூ. 102·505 இலட்சம் ஆகும். மேற்சொன்ன தொகையை சரிக்கட்டிய பின்னர், எஞ்சி யிருக்கும் தொகை ரூ. 129.500 இலட்சமாகும். அத் தொகையில் ரூ. 143·30 இலட்சம் செலவு மதிப்புள்ள ஆறு பணிகளை நிறைவேற்றக் கருதி அவற்றுக்கு மத்திய அரசின் ஒப்பு தல் பெற வேண்டி மாநில அரசு அனுப்பி வைத்தது. மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

(12) தமிழ்நாட்டில் வட்டார ஆய்வுக்கூடம் ஒன்றை ஏற் படுத்துவதற்காக ரூ. 2.25 இலட்சமும் அந்த ஆய்வுக்கூடத்தில் கூடுதல் சாதனங்களை வாங்குவதன்மூலம் அதிலுள்ள வசதி களைப் பெருக்குவதற்காக ரூ. 4.00 இலட்சமும் மத்தியச்சாலை (சாதாரண) சேம நிதியிலிருந்து மானியமாக மத்திய அரசு கொடுத்துள்ளதோடு ஒவ்வொரு பணிக்கும்சரிசமமாகத் தொகையை ஒதுக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளது. மதுரையில் வட்டார ஆய்வுக்கூடத்தை நிறுவுவது, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலை யத்தில் கூடுதல் சாதனங்களை வாங்குவதற்காகும் செலவில் 50 சதவீதத்தை ஏற்பது குறித்த செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

(13) கல்ரான் மலையில் சாலைமேம்பாடு குறித்த செலவு உட்பட 1979-80-ல் சாலை மேம்பாட்டிற்கு ஏற்பட்ட செலவு ரூ. 44·74 இலட்சமாகும். 1980-81-ம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 66.88 இலட்சம் ஆகும்.

## நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்.

(14) தமிழ்நாடு நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம், 1957-ல் நிறுவப்பட்டது. இது கடந்த 22 ஆண்டுகளாக நெடுஞ்சாலைகள் கிராமபுறப் பணிகள் துறை, அண்டை மாநிலங்களின் தேவைகளை நிறைவேற்றி வந்துள்ளது. இது, வட்டார சோதனை—ஆராய்ச்சி ஆய்வுக்கூட நிலைக்கு உயர்ந்துள்ளது. நெடுஞ்சாலைகள்—பாலங்கள் பொறியியல் தொடர்பான துணைத் துறைகளில் ஆராய்ச்சி செய்து பி.எச்.டி. (Ph. D.) பட்டம் பெற இதற்கு சென்னைப் பல்கலைக்கழகம் அங்கீகாரம் அளித்துள்ளது. அதுபோலவே பேரறிஞர் அண்ணா பல்கலைக் கழகம் அங்கீகாரம் அளிப்பது குறித்தும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

(15) ஆராய்ச்சிக்காகவும், புதிய கருத்துக்கள், சாலை மேம்பாட்டுப் பணிகள், நவீன தொழில்நுட்ப உத்திகளையும் செய்முறைகளையும் பின்பற்றுதல், பல்வேறு மண் தரத்திற்கேற்ப நடைபாதைகள் அமைத்தல் போக்குவரத்து நிலைமைகள் ஆகியவற்றிற்குச் சோதனை அடிப்படைச் சாலையாகச் செயல்படுவதற்காகவும், சோதனைப் பாதை ஒன்று ரூ. 25 இலட்சத்தில் அமைக்கப்பட்டு வருகிறது.

(16) பாலங்களின் பளு தாங்கும் திறனை சோதனையிடுவதற்காக 120 டன் எடை கொண்ட சோதனை வண்டி ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த வண்டிக்கான 100 சானல் டாட்டா லாக்கர் வாங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(17) கீழ்க்காணும் மூன்று ஆராய்ச்சித் திட்டங்களுக்கு அரசு அண்மையில் அனுமதி வழங்கியுள்ளது: அவை விரைவில் செயல்படுத்தப்படும். இவை, சாலை—போக்குவரத்துத் தொழில் நுட்ப உத்திகளுக்குப் பெருமளவு உதவும்.

| தொடர் எண். | பணியின் பெயர். | தோராயச் செலவு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (i) | முன்னரே பார்க்கப்பட்ட மதகுக் கட்டுமானப்பணியில் ஆராய்ச்சியும் வளர்ச்சியும். | 2.70 |
| (ii) | சாலை ஒட்டுப் பொருள்களை (Road Binder) தயாரிப்பதற்காக, முன்னோடித் தொழிற்சாலை ஒன்றை அமைத்து நெய்வேலியில் இருந்துசாலை மேம்பாப்புப் போடுதல். | 2·40 |



| | | |
|---|---|---|
| (iii) | தொழிலாளர் உழைப்பு, இயந்திரம் ஆகியவற்றை பெருமளவுக்கு பயன் படுத்திக்கொள்ள இடைச்சாலை தொழில் நுட்ப உத்தியை உருவாக்குதல். | 3·50 |
| | மொத்தம் .. | 8·60 |

## வெள்ள நிவாரணப் பணிகள்.

(18) 1977 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களில் ஏற்பட்ட பெரும் புயலாலும் வெள்ளத்தாலும் சேதமடைந்த சாலைகளையும், கட்டுமானங்களையும் சீர்செய்வதற்காகவே தலைமைப் பொறியாளர் பதவியையும் தேவையான தனிப்பணியாளர் பதவிகளையும் அரசு ஏற்படுத்தியது.

(19) இதேபோன்று 1978, 1979 ஆம் ஆண்டுகளிலும் வெள்ளத்தால் பாதிப்புகள் ஏற்பட்டன. 1979 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளத்தால் இம்மாநிலம் முழுவதும் பெருமளவிற்கு பாதிப்பு ஏற்பட்டது. உதகமண்டலத்தில் நிலச்சரிவுகள் ஏற்பட்டன.

(20) ஆகவே, வெள்ளப் பாதிப்பு நிவாரணப் பணிகளை கவனிக்கும் தனிப் பணியாளர்களின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டது. மேலும், வெள்ள நிவாரணப் பணியைக் கவனிப்பதற்கென்றே இரு தனிப்பிரிவுகளும் தேவையான சார்நிலைப் பணியாளர்கள் கொண்ட 10 தனிக்கோட்டப் பிரிவுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

(21) வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகள், மதகுகள், பாலங்கள், சிறுபாசன ஏரிகள், கட்டிடங்கள் ஆகியவற்றைப் பழுது பார்ப்பது மட்டுமே அரசின் நோக்கமன்று. அவற்றை வலுப்படுத்தியும் சீரமைத்தும் ஏனைய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென்பதே அரசின் முக்கிய நோக்கமாகும். அவ்வாறு செய்வதால் இனிமேல் ஏற்படும் வெள்ளத்தாலும், புயலாலும் பெருஞ்சேதம் ஏற்பட்டால் அதைத் தடுக்கும் வகையில் எல்லாச் சாலைகளிலும் வெள்ள நீர் போதுமான அளவுக்கு வடிந்து செல்ல வழிவகைகள் இருக்கும். இதைக் கருத்தில் கொண்டு மண்ணரிப்பு, பள்ளங்கள், ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் தேவையான இடங்களில் தடுப்புச் சுவர்கள் கட்டும் பணியும் காட்டாற்று வெள்ளமும் மழைநீரும் சாலையைக்

கடக்குமிடத்தில் மதகுகள் கட்டும் பணியும், கூடுதல் வடிகால்கள் அமைத்து பழைய நலிவுற்ற பாலங்களை மீண்டும் கட்டும் பணியும் ஏனைய பாதுகாப்புப் பணிகளும் முதற்கண் மேற்கொள்ளப்பட்டன.

(22) இவற்றுடன் இயற்கைச் சீற்றம் காரணமாக ஏற்பட்ட பெருந்துயர் துடைப்பு என்பது குறித்து மத்திய அரசின் பொதுக்கணக்குக் குழு கொடுத்துள்ள ஐந்தாம் அறிக்கையில் (1977–78) பரிந்துரைத்துள்ளபடி, துயர் துடைப்புப் பணிக்கென ஒதுக்கப்பட்ட நிதி கூடியவரை மிகவும் பயனுள்ள வகையில் செலவிடப்படுகிறது. துயர் துடைத்தல் மேலும் நிலையான நன்மை பயத்தல் என்னும் இவ்விரு நோக்கங்களையும் எய்தும் வகையில் நிதிபற்றாக்குறை காரணமாக நிறுத்திவைக்கப்பட்ட பணிகளை மீண்டும் மேற்கொள்ளுவதற்காக மேற்கூறிய நிதி செலவிடப்படுகிறது. இது இனிமேல் ஏற்படும் இயற்கைச் சீற்றத்தின் பாதகமான விளைவுகளை முழுவதுமாக அகற்றாவிட்டாலும் ஓரளவிற்குக் குறைக்கக்கூடும்.

(23) வெள்ளத்தடுப்புப் பணிகளை விரைவில் முடிக்கும் பொருட்டு இத்துறை அதிகாரிகளுக்குப் பல கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டன. சில விதிகளும் தளர்த்தப்பட்டன.

## 1979 ஆம் ஆண்டு வெள்ளத் தடுப்புப் பணிகள்.

(24) 1979 டிசம்பர்த் திங்களில் மத்தியக்குழு இம்மாநிலத்திற்கு வந்தது. அப்போது 1979 நவம்பர்த் திங்களில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகள், கட்டிடங்களின் மதிப்பு ரூ. 2,790·34 இலட்சம் என அக்குழுவிடம் தெரிவிக்கப்பட்டது.

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| அரசின் பொறுப்பிலுள்ள சாலைகள் | 1,550·50 |
| ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பிலுள்ள சாலைகள். | 1,028·00 |
| சிறு பாசன ஏரிகள் .. .. | 101·12 |
| கட்டிடங்கள் .. .. | 110·72 |
| | 2,790·34 |



(25) மத்தியக்குழு கொடுத்த அறிக்கையின் பேரில், மத்திய அரசு பின்வரும் தொகையை அவற்றுக்குரிய பங்காக ஒதுக்கிட ஒப்புதல் அளித்தது.

சாலைகள்—ரூ. 555 இலட்சம்.

கட்டிடங்கள்—ரூ. 10 இலட்சம்.

சிறுபாசன ஏரிகள்—ரூ. 23 இலட்சம்.

வெள்ளத்தால் ஏற்பட்ட சேதத்தைச் சீராக்கும் பணியை ரூ. 2,790·34 இலட்சம் செலவில் உடனடியாக மேற்கொள்ளுவதில் நியாயமுள்ளபோதிலும், சாலைகள், கட்டிடங்கள், சிறு ஏரிகள் ஆகியவற்றைச் சீராக்குவதற்கு மொத்தம் ரூ. 810 இலட்சம் தொகைக்கு மட்டுமே மாநில அரசு அனுமதி அளித்தது. நீலகிரி மாவட்டத்திற்குக் கருவிகள் தளவாடங்கள் வாங்குவதற்காக ஒதுக்கப்பட்ட ரூ. 10 லட்சம் நீங்கலாக மொத்த செலவை ரூ. 605 இலட்சமாகக் கட்டுப்படுத்தும் படியும் அரசு கட்டளை பிறப்பித்தது. அதன் விவரம் வருமாறு :

| தொடர் எண். | வகை. | அளிக்கப்பட்ட தொகை. |
|---|---|---|
| (அ) | சாலைகள். | 750 இலட்சம் (1979–80ஆம் ஆண்டில் ஆகும் செலவை ரூ. 555 இலட்சத்திற்குக் குறைத்துக் கொள்ள வேண்டும்.) |
| (ஆ) | தளவாடங்களும் இயந்திரங்களும். | 10 இலட்சம். |
| (இ) | கட்டிடங்கள் | 27 இலட்சம். |
| (ஈ) | சிறுபாசன ஏரிகள் | 23 இலட்சம். |

(26) வருகின்ற பருவத்தில் வெள்ளத்தாலும் புயலாலும் ஏற் முன்னெச்சரிக்கை படக் கூடிய நிலையைச் சமாளிக்கவேண்டி. தொடர்பாக மேற்கூறிய நிதியுடன் நடவடிக்கை எடுப்பது மேலும் ரூ. 9,51 இலட்சத்திற்குத் தளவாடங்கள் சாதனங்கள் வாங்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

(27) 1979–80 ஆம் ஆண்டில் சாலைகளைப் பழுதுபார்க்கும் வகையில் ரூ. 555 இலட்சமும், சிறுபாசன ஏரிகளைப் பழுது பார்க்கும் வகையில் ரூ. 23 இலட்சமும், கட்டிடங்கள் வகையில் ரூ. 27 இலட்சமும் ஆக மொத்தம் ரூ. 605 இலட்சம்

ஒதுக்கப்பட்டதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டி. ரூ. 1,094·43 இலட்சம் மதிப்பிற்குப் பணிகள் நிறைவேற்ற எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

(28) எஞ்சிய பணிகள் தொடர்ந்து 1980–81 ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்டு அப்பணிக்குத் தேவைப்படக்கூடிய நிதி ரூ. 532·860 இலட்சம் என மதிப்பிடப்படுகிறது. அவற்றின் விவரம் வருமாறு:—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| அரசின் பொறுப்பிலுள்ள சாலைகள் .. .. | 283·856 |
| ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பிலுள்ள சாலைகள் | 227·004 |
| சிறுபாசன ஏரிகள் .. .. .. .. | 10·000 |
| கட்டிடங்கள் .. .. .. .. .. | 12·000 |
| மொத்தம் .. | 532·860 |

(29) 1980–81 ஆம் ஆண்டிற்கென ஒதுக்கப்பட்ட தொடக்க நிதியிலிருந்து செலவிடுவதற்கு இசைவளிக்கும்படி மத்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

(30) மேற்கூறியபணிகளன்றி, கீழேகுறிப்பிட்டுள்ள நகராட்சிகள் நிறைவேற்ற வேண்டிய வெள்ளத்தடுப்புப் பணிகளை அவற்றிற்குரிய தொகையை நகராட்சிகள் வைப்பீடு செய்த பின்னர் இத்துறை நிறைவேற்ற வேண்டியிருந்தது.

வெள்ளத்தடுப்புப் பணிகள் (1979)

உதகமண்டல நகராட்சி—ரூ. 17·50 இலட்சம்.

குன்னூர் நகராட்சி—ரூ. 17·50 இலட்சம்.

மதுரை நகராட்சி—ரூ. 50·00 இலட்சம்.



(31) 1977, 1978, 1979 ஆம் ஆண்டுகளில் வெள்ளத்தடுப்பு பணிக்குரிய மொத்த நிதி ஒதுக்கீடு மொத்தச் செலவு குறித்து ஆண்டு வாரியான விவரங்கள் வருமாறு:—

1977 ஆம் ஆண்டு வெள்ளத் தடுப்புப் பணிகள்.

| வகை. | 1977–78 | | 1978–79 | | 1979–80 | | மொத்தம். | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஒதுக்கீடு. | செலவு. | ஒதுக்கீடு. | செலவு. | ஒதுக்கீடு. | செலவு. | ஒதுக்கீடு. | செலவு. |
| அரசுச்சாலைகள். | 500·00 | 507·50 | 180.17 | 187·69 | 14·55 | 12·80 | 694·72 | 707.99 |
| ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய சாலைகள். | 500·00 | 496·10 | 505·34 | 485.46 | 19.47 | 19·97 | 1,024·81 | 1,001·53 |
| சிறுபாசன ஏரிகள் | 75·00 | 77·55 | 299·72 | 298·89 | 0·44 | 0·37 | 375·16 | 376·81 |
| கட்டிடங்கள் .. | 50·00 | 50·10 | 5·70 | 4·97 | 0·26 (—) | 0·21 (—) | 55·44 | 54·86 |
| | 1,125.00 | 1,131.25 | 990·93 | 977·01 | 34·20 | 32·93 | 2,150.13 | 2,141.19 |

1977 ஆம் ஆண்டு வெள்ளத் தடுப்புப் பணிகள் (1978)

| | 1978–79 | | 1979–80 | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | ஒதுக்கீடு. | செலவு. | ஒதுக்கீடு. | செலவு. | ஒதுக்கீடு. | செலவு. |
| ரசுச்சாலைகள் | 290.61 | 306.70 | 178.52 | 175·55 | 469.13 | 482·25 |
| ராட்சி ஒன்றியச் சாலைகள். | 108·39 | 135.54 | 62·18 | 62·63 | 170·57 | 198·17 |
| நகராட்சிச் சாலைகள் (பணிக்குரிய தொகையை ஒப்படை செய்வதன் மேல் நிறைவேற்றப்படு பவை). | 101·00 | 101·00 | .. | .. | 101·00 | 101.00 |
| சிறுபாசன ஏரிகள் | 12·00 | 12·96 | 6·81 | 6·75 | 18·81 | 19·71 |
| கட்டிடங்கள். | 29·86 | 29·03 | 1.27 | 0·78 | 31·13 | 29.81 |
| | 941·86 | 585·23 | 248·78 | 245·71 | 790·64 | 830·94 |



வெள்ளத் தடுப்புப் பணிகள் (1979)

| | 1979–80 | | மொத்தம் | |
|---|---|---|---|---|
| | ஒதுக்கீடு | செலவு | ஒதுக்கீடு | செலவு |
| அரசுச் சாலைகள் | 339·90 | 346·31 | 339·90 | 346·31 |
| ஊராட்சி ஒன்றியச் சாலைகள் | 215·10 | 212·16 | 215.10 | 212·16 |
| சிறுபாசன ஏரிகள் | 23·00 | 23·05 | 23·00 | 23·05 |
| கட்டிடங்கள் | 27·00 | 26·88 | 27·00 | 26·88 |
| | 605·00 | 608·40 | 605·00 | 608·40 |

1977, 1978, 1979-ஆம் ஆண்டுகளில் வெள்ளத் தடுப்புப் பணிகள் ஒவ்வொன்றின் திட்டச் சாதனைகளையும் அவற்றிற்குச் செலவிடப்பட்ட தொகையையும் காட்டும் மாவட்ட வாரியான விவர அறிக்கை 9 முதல் 29 வரையிலான இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

1980–81-ஆம் ஆண்டுக் காலத்தில் 1980-மே இறுதி வரையில் மாவட்ட வாரியாக ஏற்பட்ட செலவும் 30-ஆம் இணைப்பில் காட்டப்பட்டுள்ளது.

## பாம்பன் பாலத் திட்டம்

பொது.—தமிழ்நாட்டில் இராமேஸ்வரம் தீவுக்கருகில் 49-ஆம் எண். தேசிய நெடுஞ்சாலையில் பாம்பன் ஜலசந்திக்கு குறுக்கே உயர்மட்ட சாலைப் பாலம் ஒன்றை ரூ. 532.87 இலட்சம் செலவில் கட்ட மத்திய அரசு 1972 ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் அனுமதி வழங்கியது. இந்த பாலத்திற்கு இரு பக்கங்களிலும் அணுகு சாலைகளை அமைப்பதற்காகும் செலவு ரூ. 51.01 இலட்சமும் இதில் அடங்கும். இப்பாலம் தேசிய நெடுஞ்சாலையில் அமைவதால் மத்திய அரசு இப்பணிக்கு நிதியுதவி அளிப்பதுடன், செலவு முழுவதையும் தனது பொறுப்பில் ஏற்றுக்கொள்கிறது. மத்திய அரசின் சார்பில் மாநில அரசு, இப்பணியை நிறைவேற்றி வருகிறது. இயற்கையின் சீற்றங்களை எதிர்த்தும் உவர் மண் அதிகமாகப் படிந்திருக்கும் நிலையிலும் கடலின் குறுக்கே இப் பாலம் கட்டப்படுவதால் இந்தியாவில் இவ்வகைப் பாலங்களுள் இதுவே முதலாவதாகும்.

முக்கிய கூறுகள்.—மேற்சொன்ன பாலத்தில் ஒவ்வொன்றும் 27.13 மீட்டர் அகலமுள்ள 76 கண்கள் உள்ளன. பாலத்தின் மத்தியில் கப்பல் போக்கு வரத்து வசதிக்காக 115.21 மீட்டர் அகலமுள்ள ஒரு கண்ணும் அதன் இருபுறமும் ஒவ்வொன்றும் 68.50 மீட்டர் அகலமுள்ள இரு கண்களும் அமைந்துள்ளன. இப் பாலத்தில் மொத்தம் 79 கண்கள் உள்ளன. கப்பல் போக்கு வரத்துக்காக, மண்டபம் பக்கம் உள்ள கண்களில் 1 சதவிதம் சாய்வுடனும் பாம்பன் பக்கக் கண்களில் 2 சதவித சாய்வுடனும் கப்பல் போக்குவரத்துக்காக உள்ள கண்களில் கீழ் மட்டம் கடல் பொங்கும் அலை உயர் மட்டத்திலிருந்து 17.68 மீட்டர் உயரத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. அப்போதுதான் கப்பல்கள் அவ்வழியே எளிதாகக் கடக்க இயலும்.

முக்கியபாலம்.—மண்டபம், பாம்பன் பக்கங்களைச் சேர்ந்த அஸ்திவார பணிகளும் சார்புச் சுவர்களும் 41 பாலத் தூண்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இத்துடன், 8 பாலத் தூண்களுக்கான அடித்தளம் முடிக்கப்பட்டுள்ளன. 7 பாலத் தூண்களுக்கான துணைக் கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. மண்டபம், பாம்பன் பக்கங்களில் நங்கூரம் பாலத் தூண்கள் பணிகளும் கப்பல் போக்குவரத்து அடித்தளப் பணிகளும் பல்வேறு நிலைகளில் உள்ளன. முன்னரே அழுத்தப்பட்ட 45 கான்கிரீட் கம்பங்கள் வார்க்கப்பட்டு அவற்றில் 20 கம்பங்கள் இறக்கப்பட்டுள்ளன.

இந்நாள்வரை இப் பாலப் பணியில் அடைந்துள்ள சாதனை 36 சதவிதமாகும்.



1979 ஜூலைத் திங்களிலிருந்து பணியை ஒப்பந்தக்காரர்கள் செய்யாமல் நிறுத்தி விட்டனர். 4—11—1978 அன்று தோன்றிய புயலினால் அவர்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் இழப்புகளைச் சரிகட்டும் வகையில் ரூ. 20.66 இலட்சம் இழப்பீட்டுத் தொகையுடன் கட்டுமானப் பொருட்களின் செலவையும் சேர்த்து அவர்கள் கேட்டனர். ஒப்பந்தக்காரரின் கோரிக்கை சட்டப்படி சரியானதுதானா என்பது பற்றி ஆராயப்பட்டு வருகிறது.

### பொருளாதார பல மாநில முக்கியத்துவம் வாய்ந்த திட்டம்.

பொருளாதார பல மாநில முக்கியத்துவம் முகவுரை.—பொருளாதார பல மாநில முக்கியத்துவம் வாய்ந்த சாலைகளை அமைத்து பாலங்களை கட்டி அவற்றை மேம்படுத்தும் திட்டத்திற்கு இந்திய அரசு நிதியுதவி அளிக்கிறது. இது, மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகும். இத் திட்டத்தின்கீழ் குறிப்பிட்ட பணிகளுக்கு மட்டுமே மத்திய அரசு ஒப்புதல் அளிக்கிறது. பன்மாநில சாலைப்பாலங்கள் குறித்துப் பணிகளுக்காக, மத்திய அரசு முழுக் கடனுதவி அளிக்கிறது. பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த சாலை பாலப் பணிகளுக்காகும் செலவினை மத்திய அரசும், மாநில அரசும் சரிசமமாக ஏற்கின்றன.

கீழ்க்காணும் வகையைச் சேர்ந்த சாலைப் பால வேலைகள் இத்திட்டத்தின்கீழ் பரிசீலிக்கப்படுவதற்குத் தகுதியுடையவையாகும்.

(i) போக்கு வரத்துக்கு அவசியமாயிருக்கிற பல மாநில சாலைகள்,

(ii) அண்மைக் காலத்திற்குள் இருப்புப் பாதைகள் அமைக்க முடியாத புதிய பகுதிகளில் புறப்பகுதிகளை இணைக்கும் சாலைகள், பாலங்கள்.

(iii) அதிகமான கனிவளம் மலைத்தோட்டம் மிக்க மலைப் பகுதிகளிலும், சமவெளிப் பகுதிகளிலும் விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமாக உதவக்கூடிய சாலைகளும் பாலங்களும்.

இலக்கும் சாதனையும்.—நான்காம் திட்டக்காலத்தில் கிழக்குக் கடற்கரைச் சாலையில் ரூ. 401.20 இலட்சம் செலவில் 38 பாலங்கள் கட்ட மத்திய அரசு ஒப்புதல் அளித்தது. அப் பணிகளுக்காக ரூ. 261.00 இலட்சம் கடனுதவியும் அளித்துள்ளது. இப் பணிகள் முடிக்கப்பட்டு விட்டன.

இத்துடன் ஐந்தாம் திட்டக் காலத்தில் பொருளாதார பல மாநில முக்கியத்துவம் வாய்ந்தத் திட்டத்தின்கீழ் ரூ. 60.00 இலட்சம் செலவில் இரண்டு பணிகளை மேற்கொள்ள மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இப் பணிகள் முடிக்கப்பட்டு விட்டன.

மேற்சொன்ன பணிகளுடன், ''திருச்சிராப்பள்ளி மாவட்டத் தில் மணப்பாறை—துறையூர் சாலையில் மூசிறியையும் குளித் தலையையும் இணைத்து'' ரூ. 139 இலட்சம் செலவில் காவேரி ஆற்றின் குறுக்கே ஒரு பாலத்தைக் கட்டும் பணியும் இத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நான்காம்-ஐந்தாம் திட்டத்தின் பணிகளின்கீழ் பொருளாதார பன் மாநில முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தில் இப்பணியை சேர்த்துக்கொள்ளும்படி மத்திய அரசுக்குப் பரிந்துரைக்கப் பட்டது. ஆனால், மத்திய அரசு, அதற்கு ஒப்புதல் அளிக்க வில்லை. எனவே இப்பணி மாநில நிதியைக் கொண்டு நிறைவேற்றப்பட்டது.

இப்பாலம் கட்டி முடிக்கப்பட்டு 8—6—1979 அன்று அதன் வழியே வண்டிகள் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

அண்மையில் மேற்சொன்ன பாலத்தில் ரூ. 4.00 இலட்சம் செலவில் மின்வசதி ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. இப்பணியை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



## இணைப்பு—I

**1979–80 ஆம் ஆண்டில் தேசிய நெடுஞ்சாலையின் (நாட்டுப்புற) கீழ் அனுமதிக்கப்பட்ட பணிகளின் பட்டியல்.**

| தொடர் எண்ணும் மாவட்டத்தின் பெயரும். (1) | பணியின் பெயர். (2) | செலவு. (3) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1 வடாற்காடு .. | வேலூர் நகராட்சி எல்லையிலுள்ள கிருஷ்ணகிரி—இராணிப்பேட்டை தேசிய நெடுஞ்சாலை 46, காசி-கன்னியாகுமரி சாலையின் மேம்பாட்டுப் பணிகள் உள்பட நடைபாதை அமைத்தலும், செப்பனிடுதலும் (116/9 கிலோ மீட்டர் 119/6). | 1.00 |
| 2 ஷை | ஆற்காடு நகராட்சி எல்லையில் உள்ள தேசிய நெடுஞ்சாலை 46. கிருஷ்ணகிரி—இராணிப்பேட்டை சாலையின் மேம்பாட்டுப் பணிகள் உட்பட நடைபாதை அமைத்தலும், சீர்படுத்தலும் (138/8 கிலோ மீட்டர்—142/2). | 0.50 |
| 3 திருச்சிராப்பள்ளி .. | கரூர் நகராட்சி எல்லையில் உள்ள தேசிய நெடுஞ்சாலை 7. காசி—கன்னியாகுமரி சாலையில் கிருஷ்ணகிரி—சேலம்-மதுரை சாலை பிரிவில் மேம்பாட்டுப் பணிகள் உட்பட நடைபாதை அமைத்தலும், சீர்படுத்தலும் (295/6 கிலோ மீட்டர்-302/4 கிலோ மீட்டர்). | 0·50 |
| 4 மதுரை .. | தேசிய நெடுஞ்சாலை 7. காசி—கன்னியாகுமரி சாலையில் மேம்பாட்டுப் பணிகள் உட்பட மதுரை—கன்னியாகுமரி பிரிவில் நடைபாதை அமைத்தலும், சீர்படுத்தலும் (0/0 கிலோ மீட்டர்—1/645). | 0·50 |

| தொடர் எண்ணும், மாவட்டத்தின் பெயரும். (1) | பணியின் பெயர். (2) | செலவு. (3) (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|
| 5 மதுரை .. | .. மதுரை நகராட்சி எல்லையிலுள்ள தேசிய நெடுஞ்சாலை 49. மதுரை-இராமநாதபுரம்-தனுஷ்கோடி சாலையில் மேம்பாட்டுப் பணிகள் உட்பட நடைபாதை அமைத்தலும்,சீர்படுத்தலும் (0/0 கிலோ மீட்டர் 3/2 கிலோ மீட்டர்). | 1·00 |
| 6 இராமநாதபுரம் | .. விருதுநகர் நகராட்சி எல்லையிலுள்ள தேசிய நெடுஞ்சாலை 7. காசி—கன்னியாகுமரி சாலையில் மதுரை—கன்னியாகுமரி பிரிவில் மேம்பாட்டுப் பணிகள் உட்பட நடைபாதை அமைத்தலும், சீர்படுத்தலும் (42/4 கிலோ மீட்டர்—45/6). | 0·50 |
| 7 டி | .. பரமக்குடி நகராட்சியிலுள்ள தேசிய நெடுஞ்சாலை 49. மதுரை-இராமநாதபுரம்-தனுஷ்கோடி சாலையில் மேம்பாட்டுப் பணிகள் உட்பட நடைபாதை அமைத்தலும், சீர்படுத்தலும் (கிலோ மீட்டர் 72/4—76/8). | 0.50 |
| 8 .. | .. இராமநாதபுரம் நகராட்சி எல்லையில் தேசிய நெடுஞ்சாலை 49. மதுரை—இராமநாதபுரம்-தனுஷ்கோடி சாலையில் மேம்பாட்டுப் பணிகள் உட்பட நடைபாதை அமைத்தலும், சீர்படுத்தலும் (110/1 கிலோ மீட்டர்—114/6). | 0·50 |



| | | |
|---|---|---|
| 9 திருநெல்வேலி | .. திருநெல்வேலி நகராட்சி எல்லையிலுள்ள தேசிய நெடுஞ்சாலை 7. காசி—கன்னியாகுமரி சாலையில் மதுரை—கன்னியாகுமரி பிரிவில் மேம்பாட்டுப் பணிகள் உட்பட நடைபாதை அமைத்தலும், சீர்படுத்தலும் (148 கிலோ மீட்டர்-150/6). | 0·50 |
| 10 டி | .. பாளையங்கோட்டை நகராட்சி எல்லையிலுள்ள தேசிய நெடுஞ்சாலை 7. காசி—கன்னியாகுமரி சாலையில், மதுரை—கன்னியாகுமரி பிரிவில் மேம்பாட்டுப் பணிகள் உட்பட நடைபாதை அமைத்தலும் சீர்படுத்தலும் (188/8-163/8கி.மீ.). | 0.50 |
| 11 கன்னியாகுமரி | .. நாகர்கோயில் நகராட்சி எல்லையிலுள்ள தேசிய நெடுஞ்சாலை 47. கன்னியாகுமரியில் கேரள எல்லையில் மேம்பாட்டுப் பணிகள் உட்பட நடைபாதை அமைத்தலும் சீர்படுத்தலும் (631/2 கிலோ மீட்டர்—638/6). | 1·00 |
| 12 தருமபுரி | .. கிருஷ்ணகிரி நகராட்சியில் உள்ள தேசிய நெடுஞ்சாலை 46 (0/0—1/0 கிலோமீட்டர்) காசி—கன்னியாகுமரி சாலையில், கிருஷ்ணகிரி—இராணிப்பேட்டை சாலைப் பிரிவில் மேம்பாட்டுப் பணிகள் உட்பட நடைபாதைகள் அமைத்தலும் சீர்படுத்தலும் (0/0—1/0 கிலோ மீட்டர்). | 0·25 |
| 13 தருமபுரி | .. கிருஷ்ணகிரி நகராட்சி எல்லையிலுள்ள தேசிய நெடுஞ்சாலை 7. கிருஷ்ணகிரி-சேலம்—மதுரை பிரிவில் மேம்பாட்டுப் பணிகள் உட்பட நடைபாதைகள் அமைத்தலும் சீர்படுத்தலும், (90/0—93/6 கி.மீ.). | 0.50 |

| | | | |
|---|---|---|---|
| [illegible] | [illegible] | தருமபுரி நகராட்சி எல்லையிலுள்ள தேசிய நெடுஞ்சாலை 7. காசி–கன்னியாகுமரி சாலையில், கிருஷ்ணகிரி – சேலம் – மதுரை பிரிவில், மேம்பாட்டுப் பணிகள் உட்பட நடைபாதைகள் அமைத்தலும், சீர்படுத்தலும் (135/6 கிலோ மீட்டர்–135/8, 138/4–141/0). | 0·75 |
| 15 | சேலம் | சேலம் நகராட்சி எல்லையிலுள்ள தேசிய நெடுஞ் சாலை 7. காசி–கன்னியாகுமரி சாலையில், கிருஷ்ணகிரி – சேலம் – மதுரை பிரிவில், மேம்பாட்டுப் பணிகள் உட்பட நடைபாதை அமைத்தலும் சீர்படுத்தலும்(201/4–206/9 கி.மீ.) | 1·00 |
| 16 | [illegible] | நாமக்கல் நகராட்சி எல்லையிலுள்ள தேசிய நெடுஞ்சாலை 7· காசி-கன்னியாகுமரி சாலையில் கிருஷ்ணகிரி-சேலம் மதுரை பிரிவில் மேம் பாட்டுப் பணிகள் உட்பட நடைபாதை அமைத்தலும் சீர்படுத்தலும். (கி.மீ. 249/8—254/785) | 0·50 |
| | | மொத்தம் .. | 10·00 |



## இணைப்பு 2.

தேசிய நெடுஞ்சாலை (நகர்புறம்) 1980–81 ஆம் ஆண்டில் அனுமதிக்கக் கருதப்பட்டுள்ள புதிய பணிகள் குறித்த பட்டியல்.

| தொடர் எண்ணும் மாவட்டமும். | | பணிகளின் பெயர். | செலவு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| 1 | வட ஆற்காடு | இராணிப்பேட்டை நகராட்சி எல்லையிலுள்ள தேசிய நெடுஞ்சாலை 46. கிருஷ்ணகிரி — இராணிப்பேட்டை சாலையில் மேம்பாட்டுப் பணிகள் உட்பட நடைபாதை அமைத்தலும், சீர்படுத்தலும் (142/8— 144/4 கிலோ மீட்டர்). | 0·70 |
| 2 | .. | இராணிப்பேட்டை நகராட்சி எல்லையிலுள்ள தேசிய நெடுஞ்சாலை 4. சென்னை–சித்தூர்-பெங்களூர் சாலையில் மேம்பாட்டுப்பணிகள் உட்பட நடைபாதை அமைத்தலும், சீர் படுத்தலும் (111/2–115/0 கிலோ மீட்டர்). | 1·50 |
| 3 | திருச்சிராப்பள்ளி .. | திருச்சிராப்பள்ளி நகராட்சி எல்லையில் உள்ள தேசிய நெடுஞ்சாலை 45. சென்னை–திருச்சிராப்பள்ளி–திண்டுக்கல் சாலைகளில் மேம் பாட்டுப் பணிகள் உட்பட நடைபாதை அமைத் தலும், சரிபடுத்தலும் (322/0–323/4 கிலோ மீட்டர்). | 2·50 |

| | | | |
|---|---|---|---|
| 4 | கோயம்புத்தூர் .. | சிங்காநல்லூர் நகராட்சி எல்லையிலுள்ள தேசிய நெடுஞ்சாலை 47. சேலம்–கொச்சி சாலையில் மேம்பாட்டுப் பணிகள் உட்பட நடை பாதை அமைத்தலும், சீர்படுத்தலும் (151/0–154/2 கிலோ மீட்டர்). | 1·00 |
| 5 | கோயம்புத்தூர் .. | கோயம்புத்தூர் நகராட்சி எல்லையிலுள்ள தேசிய நெடுஞ்சாலை 47. சேலம்–கொச்சி சாலையில் மேம்பாட்டுப் பணிகள் உட்பட நடைபாதை அமைத்தலும், சீர்படுத்தலும் (154/2–160/6 கிலோ மீட்டர்). | 2·00 |
| 6 | சேலம் .. .. | சேலம் நகராட்சி எல்லையில் உள்ள தேசிய நெடுஞ்சாலை 47. சேலம்–கொச்சி சாலையில் மேம்பாட்டுப் பணிகள் உட்பட நடைபாதை அமைத்தலும், சீர்படுத்தலும் (0/0–0/35 கிலோ மீட்டர்). | 0·30 |
| | | மொத்தம் .. | 8·00 |



## இணைப்பு 3.

**மாநில அரசு நெடுஞ்சாலைகள்—மாநில அரசுச் சாலைகள் திட்டம்—1980–81 ஆம் ஆண்டில் அனுமதிக்கக் கருதப்பட்டுள்ள புதிய பணிகள் குறித்த பட்டியல்.**

| தொடர் எண்ணும் பணிகளின் பெயரும். | | செலவு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1 | கடலூர்–சித்தூர் (காட்பாடி இரயில்வே நிலையம் அருகில்) சாலையில் 195/0 கிலோ மீட்டரில் தற்போதுள்ள இரயில்வே மேம்பாலத்தை புதுப்பித்தல் (வடாற்காடு மாவட்டம்). | 35·00 |
| 2 | சேலம்–உளுந்தூர்பேட்டை சாலையில் 76/4 கிலோ மீட்டரில் பாலத்தை புதுப்பித்தல் (தென்னாற்காடு மாவட்டம்). | 6·00 |
| 3 | பெரம்பலூர்–மானாமதுரை சாலையில் 227·8 கிலோ மீட்டரில் வைகை ஆற்றின் குறுக்கே தற்போது பாழடைந்து மோசமாகவுள்ள பாலத்தைப் புதுப்பித்தல் (இராமநாதபுரம் மாவட்டம்). | 40·00 |
| 4 | கோயம்புத்தூர் சத்தி–சாம்ராஜ நகர் சாலையில் 69/4 கிலோ மீட்டரில் பாலம் கட்டுதல் (பெரியார் மாவட்டம்). | 10·00 |
| | மொத்தம் .. | 91·00 |

## இணைப்பு 4.

### மாநில அரசுச் சாலைகள் திட்டம்—மாவட்டப் பெருஞ்சாலைகள்.

**1980–81 ஆம் ஆண்டில் அனுமதிக்கக் கருதப்பட்டுள்ள புதிய பணிகளின் பட்டியல்.**

| தொடர் எண்ணும் பணிகளின் பெயரும். | செலவு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1. மதுரை மாவட்டத்தில் பழனி–தெக்கான் தோட்டம் சாலையில் 2/4 கிலோ மீட்டரில் சிறுபாலம் மீண்டும் கட்டுதல். | 2·00 |
| 2. மதுரை மாவட்டத்தில், கோயம்புத்தூர்–திண்டுக்கல் சாலையில் 102/4 கிலோ மீட்டரிலிருந்து பழனி–தெக்கான் தோட்டம் சாலையில் 2/6 கிலோ மீட்டர் வரையில் பழனி நகரத்திற்கு 5·6 கிலோ மீட்டர் நீளமுள்ள மாற்று வழிப்பாதை ஒன்று அமைக்க நிலம் கையகப்படுத்துதல். | 5·00 |
| 3. தேவிப்பட்டினம்–திருப்பழஞ்சுபு சாலையில் 0/8–6/8 கிலோ மீட்டரில் மேம் படுத்தும் பணிகள் (இராமநாதபுரம் மாவட்டம்). | 6·00 |
| 4 கோயம்புத்தூர் மாவட்டத்தில், திருப்பூர்–மேட்டுப்பாளையம் சாலையில் 7/6 கிலோ மீட்டரில் நல்லாற்றின் குறுக்கே பாழடைந்த பாலத்தைப் புதுப்பித்துக் கட்டுதல். | 5·00 |
| 5. கோயம்புத்தூர் மாவட்டத்தில், பொள்ளாச்சி–வால்பாறை சாலையில் 5/10 கிலோ மீட்டரில் உப்பாற்றுக்குக் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டுதல். | 4·00 |
| 6. கோயம்புத்தூர் மாவட்டத்தில், பொள்ளாச்சி–வால்பாறை சாலையில் 8/4 கிலோ மீட்டரில் உயர்மட்டப்பாலம் ஒன்று கட்டுதல். | 2·00 |
| 7. பெரியார் மாவட்டத்தில் ஈரோடு–பெருந்துறை சாலையில் 5/4 கிலோ மீட்டரிலிருந்து, ஈரோடு–சத்தி சாலையில் 6/2 கிலோ மீட்டர் வரை 7·2 கிலோ மீட்டர் நீளத்திற்கு மாற்று வழிப்பாதை அமைத்தல். | 11·00 |



| | |
|---|---|
| தாராபுரம் மாற்று வழிப்பாதை–பெரியார் மாவட்டம் .. .. .. | 6·00 |
| தருமபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி–இராயக்கோட்டை சாலையில் 20/4 கிலோ மீட்டரில் பாலம் ஒன்று கட்டுதல். | 5·00 |
| மொத்தம் .. | 46·00 |

## இணைப்பு 5.

### மாநில அரசுச் சாலைகள் திட்டம்.

### ஏனைய மாவட்ட சாலைகள்.

1980—81-ம் ஆண்டில் அனுமதிக்கக் கருதப்பட்டுள்ள புதிய பணிகள் குறித்த பட்டியல்.

| தொடர் எண்ணும் பணியின் பெயரும். | செலவு. (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| 1. காவிரி இடது பக்கக் கரை சாலையை அகலப் படுத்துதலும் பழுது பார்த்தலும் (சென்னை-திருச்சி-திண்டுக்கல் சாலையில் 314/4 கி. மீட்டரில் பிரியும் திருவானைக் காவல்-கல்லணை சாலையில் 2/0—14/2 கி.மீ. (திருச்சி மாவட்டம்) | 14·50 |
| 2. திருச்சி மாவட்டத்தில், ஸ்ரீரங்கம் பக்கத்தில் மேம்பாலச் சாலை புதியதாகக் கட்டப்பட்டுள்ள காவிரி பாலத்தின் அருகில் பிரியும் காவிரி இடது பக்கக் கரை சாலையை மேம்படுத்துதல். | 6·00 |
| 3. ஆயலூர்-கடலூர் சாலையில் 0/0—8/8 கி. மீட்டரில் மேம்படுத்துதல் (மதுரை மாவட்டம்). | 4·00 |
| 4. அபிராமம்-வீரசோழம் சாலை 12 கி.மீ. கிரிதாம்பை ஆற்றின் குறுக்கே 2·8 கி. மீட்டரில் மூழ்கு பாலம் கட்டுதல் உட்பட மேம்படுத்தும் பணிகள் (இராமநாதபுரம் மாவட்டம்). | 9.00 |
| 5. வடிகால் பணிகள் உட்பட, உச்சி நத்தம்வழியாகச் செல்லும் பெருநல்லி குரங்குடி சாலையை மேம்படுத்துதல் (0/0-8/8 கி.மீ.). | 21·60 |
| 6. கடானா ஆற்றின் குறுக்கே 5/10 கி. மீட்டரிலும், வெள்வால் ஓடையின் குறுக்கே அம்பாசமுத்திரம்-பாப்பாக்குடி சாலையில் 8/8 கி. மீட்டரிலும் பாலம் கட்டுதல் (திருநெல்வேலி மாவட்டம்). | 18·00 |



| தொடர் எண்ணும் பெயரும் | செலவு (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 7 புஜங்கனூர்-மேட்டுப்பாளையம் சாலையில் 1/10 கி. மீட்டரிலும், 3/2 கி. மீட்டரிலும் உயர்மட்டப்பாலங்கள் கட்டுதல் (கோயம்புத்தூர் மாவட்டம்). | 27·00 |
| 8 மங்கலம்-பட்டிக்காடு சாலையில் 27 சிறு பாலங்கள் கட்டுதல் (செங்கல்பட்டு மாவட்டம்). | 5·40 |
| மொத்தம் .. | 105·50 |

## இணைப்பு 6.

1979—80-ஆம் ஆண்டில் ஏனைய சாலைகள் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள பணிகள் குறித்த பட்டியல்.

| தொடர் எண்ணும் பணியின் பெயரும். | செலவு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1. பள்ளிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் பொதட்டூர்-பேட்டை காக்களூர் சாலையில் 1/4 கி. மீட்டரில் தரைப்பாலம் கட்டுதல் (செங்கற்பட்டு மாவட்டம்). | 1·25 |
| 2. உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தில் சித்தமல்லியன்கரணை சாலையில் 0/0—6/0 கி.மீ. மேம்படுத்தும் பணிகள். | 4·58 |
| 3. கடலூர் சித்தூர்-பெரியகலம்பாடி சாலையில் (வழி) கருமேதவம்பாடி, காட்டுப்புத்தூர், உதிரம்பூண்டி) 9/10 கி. மீட்டரில் ஊராட்சி ஒன்றிய சாலையில் வடிகால் பணிகள் மற்றும் சிறு பாலம் ஒன்று கட்டுதல் உட்பட மேம்பாட்டுப்பணிகள் (வட ஆற்காடு மாவட்டம்). | 3.30 |
| 4. களத்தூர் உபரி வாய்க்கால் குறுக்கே 2/0 கி. மீட்டரில் பாலம் ஒன்று கட்டுதலும், கடலூர்-சித்தூர் சாலையிலிருந்து (வழி) காட்டுநல்லூர் ரெட்டிபாளையம் செல்லும் சாலையை மேம்படுத்துதலும். | 2.83 |

| தொடர் எண், பணியின் பெயர். (1) | செலவு. (2) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 5. கள்ளக்குறிச்சி வட்டத்தில் கூத்தக்குடி நினியூர் சாலையில் மணிமுத்தாற்றில் குறுக்கே 0/4 கி. மீட்டரில் பாலம் கட்டுதல் (தென்னாற்காடு மாவட்டம்). | 4·50 |
| 6. சின்ன சேலம் ஊராட்சி ஒன்றியத்தில், இலட்சுமணபுரம்-கூகையூர் செல்லும் சாலையை (8 கி.மீ) அமைத்தலும் மேம்படுத்தலும் (தென்னாற்காடு மாவட்டம்). | 5·00 |
| 7. காரியமங்கலம் கிழமான்குடி சாலையில் 1/2 கி. மீட்டரில் மாணப்பாத்தான் கால்வாயின் குறுக்கே பாலம் ஒன்று கட்டுதல் (தென்னாற்காடு மாவட்டம்). | 1·10 |
| 8. தரைப்பாலம் மற்றும் 5 சிறுபாலங்கள் கட்டுதல் உட்பட, கழவன்தோண்டியிலிருந்து பெரிவளையம் (வழி கரைமேடு-பி.டி.வரை; செல்லும் சாலையை மேம்படுத்துதல் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்). | 4·00 |
| 9. நிலையூர், வடவயல், கொல்லன்மனை ஆகிய ஊர்களின் வழியாகக் கண்டிச்சன்காட்டிலிருந்து இடையாத்திமங்கலம் செல்லும் சாலையை 0/0—19/8 கி. மீ. மேம்படுத்தல் (அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம்). | 10.00 |
| 10. குறுக்காக வடிகால் அமைத்தல், வர்த்தலை வடிகாலுக்குக் குறுக்கே பாலம் கட்டுதல் உட்பட சேந்தன்காட்டிலிருந்து அத்திக்கோட்டைக்குச் செல்லும் சாலையை மேம்படுத்தல் (தஞ்சாவூர் மாவட்டம்). | 6.73 |
| 11. செங்கமங்கலத்திலிருந்து தேமங்கலம்செல்லும் சாலையில் இவெலைல்லூரில் 0/2 கி. மீ-ல் உள்ள தேவநதிக்குக் குறுக்கே பாலம் கட்டுதலும், அச்சாலையை 0/0—5/0 கி. மீட்டரில் மேம்படுத்தலும் (தஞ்சாவூர் மாவட்டம்). | 8.60 |



| தொடர் எண், பணியின் பெயர். (1) | செலவு. (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 12. வெல்லூர் மேற்கு, கிழக்கு அரிசனக்காலனி, அலந்தன் குடிக்காடு, தண்டராம்பட்டு ஊராட்சி. திருமங்கலக்கோட்டை காலனி, முக்கரை, திருமங்கலக்கோட்டை ஊராட்சி ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம் ஆகியவற்றின் வழியாகப்பெரிய குமிழியிலிருந்து வடசேரிக்குச் செல்லும் சாலையை (10 கி.மீ.) மேம்படுத்தல் (தஞ்சாவூர் மாவட்டம்). | 5.25 |
| 13. தாடிச்சேரி வழியாக நாகாலாபுரத்திலிருந்து தப்புக் குண்டுக்குச் செல்லும் சாலையை மேம்படுத்தல் (மதுரை மாவட்டம்) | 1.25 |
| 14. தும்பப்பட்டி, அட்டப்பட்டி, கீழ்வளவு ஊராட்சி சாலையில் 5/2 கி. மீட்டரில் தரைப்பாலம் கட்டுதல் (மதுரை மாவட்டம்). | 1.00 |
| 15. கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அகதப்பட்டியிலிருந்து வடக்கம்பட்டிக்குச் செல்லும் சாலையில் 0/0-1/6 கி. மீட்டர் மேம்படுத்தல் (மதுரை மாவட்டம்). | 0.90 |
| 16. பூச்சிக்காடு கானாடு சாலையிலிருந்து பிரிந்து தளவாய் புரத்திற்குப் செல்லும் சாலையில் 0/8 கி. மீட்டரில், எருசலத்திலிருந்து புள்ளிப்பட்டு போகும் வாய்க்கால் மீது குறுக்கே பாலம் ஒன்று கட்டுதல் (திருநெல்வேலி மாவட்டம்). | 1.00 |
| 17. கோவில்பட்டியிலிருந்து பசுவந்தனை செல்லும் சாலையில் 17/4 கி. மீட்டரில், அச்சன்குளம் ஓடைக்குக் குறுக்கே பாலம் ஒன்று கட்டுதல் (திருநெல்வேலி மாவட்டம்). | 3.20 |
| 18. முதுகுளத்தூர் வட்டத்தைச் சேர்ந்த மண்டல் மாணிக்கத்திலிருந்து வீரசோழம் செல்லும் சாலையை மேம்படுத்தல் (இராமநாதபுரம் மாவட்டம்). | 9.20 |

| தொடர் எண், பணியின் பெயர். (1) | செலவு. (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
| --- | --- |
| 19. ஸ்ரீவில்லிப்புத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கொத்தன்குளம் சாலையில் 1/8 கி. மீட்டரில் வாணியம்பட்டிக்கும், புதுக் கண்வலந்தம்பட்டிக்கும் இடையில் உள்ள சாயல்குடி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல் (இராமநாதபுரம் மாவட்டம்). | 1.50 |
| 20. ஆரியன்கோட்டை, காவனூர் சாலையிலிருந்து சிறுவயல் கீழ்குடியிருப்புக்குப் பிரிந்து செல்லும் சாலையை 0/0-3/0 கி. மீட்டரில் மேம்படுத்தல் (இராமநாதபுரம் மாவட்டம்). | 1.65 |
| 21. ஆரியன்கோட்டை-காவனூர் சாலையில் கடம்பூர் வரை சாலையை 0/0-2/0 கி. மீட்டரில் மேம்படுத்தல் (இராமநாதபுரம் மாவட்டம்). | 1.18 |
| 22. ஆரியன்கோட்டை- காவனூர் சாலையிலிருந்து மஞ்சக் குளத்திற்குப் பிரிந்து செல்லும் சாலையை 0/0-2/0 கி. மீட்டரில் மேம்படுத்தல் (இராமநாதபுரம் மாவட்டம்). | 1.18 |
| 23 கரிப்பட்டியிலிருந்து பணிக்கனேந்தல் செல்லும் சாலையில் (ஊராட்சி சாலை) 0/2 கி. மீட்டரில் பாலம் கட்டுதல் (இராமநாதபுரம் மாவட்டம்). | 3.00 |
| 24. குலசேகரத்திலிருந்து திருவெறும்பூர் செல்லும் சாலையில் (ஊராட்சி ஒன்றியச் சாலை) 4/1 கி. மீட்டரில் கோதையாறு ஆற்றுக்குக் குறுக்கே உயர்மட்டப்பாலம் கட்டுதல் (கன்னியாகுமரி மாவட்டம்). | 18.00 |
| 25. ரத்னபுரியிலுள்ள சாஸ்திரி சாலையை இணைக்கும் செங்கனூரிலிருந்து பள்ளம் செல்லும் சாலைக்குக் குறுக்கே பாலம் கட்டுதல் (கோயம்புத்தூர் மாவட்டம்). | 3.70 |



| தொடர் எண், பணியின் பெயர். (1) | செலவு. (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
| --- | --- |
| 26 கொடுவை கங்காருபாளையம், எல்லைப் பாளையம் ஆகியவற்றிற்குச் செல்லும் கோபி-தாராபுரம் சாலையை (0/0-16/6 கி.மீ.) மேம்படுத்தல் (தார் போடுதல்) (கோயம்புத்தூர் மாவட்டம்). | 9.30 |
| 27 காரமடை ஊராட்சி ஒன்றியத்தில் நெல்லிப் பாளையத்திலிருந்து சிறுமுகைக்குச் செல லும் சாலையில் (ஊராட்சி ஒன்றியச் சாலை) 16/2 கி. மீட்டரில் பாலம் கட்டு தல் (கோயம்புத்தூர் மாவட்டம்). | 2.50 |
| 28 சர்க்கார் சாமக்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் குரும்பபாளையம்-சிதாரா சாலையில் 8/8 கி. மீட்டரில் உயர்மட்டப் பாலம் கட்டுதல் (கோயம்புத்தூர் மாவட்டம்). | 2.50 |
| 29 சிங்காநல்லூர்-சித்தாண்டேஸ்வரி கோயில் சாலையில் (ஊராட்சி சாலை) 0/6 கி. மீட்டரில் பாலாறு ஆற்றுக்குக் குறுக்கே மூழ்கு பாலம் (தரைப்பாலம்) கட்டுதல் (கோயம்புத்தூர் மாவட்டம்). | 9.00 |
| 30 வீரபாண்டி ஊராட்சி ஒன்றியத்தில், பெரிய புதூர்-கொண்டாலம்பட்டி ஊராட்சி சாலையில் 0/8 கி. மீட்டரில் திருமணிமுத் தாறுக்குக் குறுக்கே பாலம் கட்டுதல் (சேலம் மாவட்டம்). | 5.00 |
| 31. அ. இளம்பிள்ளை-அழகப்பபாளையம் சாலை யை 0/0-7/2 கி. மீட்டரில் மேம் படுத்தல். ஆ. தார்போடுதல், குறுக் குவடிகால் பணி உட்பட அழகப்பபாளையம்புதூர்- காச்சிப்புள்ளி 6சாலையை (ஊராட்சி 0சாலை) 0/0-4/ கி. மீட்டரில் மேம் படுத்தல் (சேலம் மாவட்டம்). | 6.80 |

| தொடர் எண், பணியின் பெயர். (1) | செலவு. (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 32 தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில், தாரமங்கலம் தோப்பாறு சாலையில் 3/6 கி. மீட்டரில் சரபங்கா ஆற்றுக்குக் குறுக்காக பாலம் கட்டுதல் (சேலம் மாவட்டம்). | 5.00 |
| 33 ஹரூர் ஊராட்சி ஒன்றியத்தில், ஆச்சாள்வாடி வழியாக, ஹரூரிலிருந்து போத்தம்பட்டி செல்லும் சாலையை 0/0-8/2 கி. மீ. மேம்படுத்துதல் (தருமபுரி மாவட்டம்). | 4.10 |
| 34 சாலையை உயர்தரப்படுத்தல்— | |
| அ. கன்னம்பள்ளி கோயில் சாலையில் 0/0-3/2 கி. மீட்டரில் (ஊராட்சி ஒன்றியச் சாலை) (தருமபுரி மாவட்டம்). | |
| ஆ. கன்னம்பள்ளிக் கோயிலிலிருந்து மேலேரிக் கோட்டைக்குச் செல்லும் சாலையில் 0/0-2/0 கி. மீட்டரில் (தருமபுரி மாவட்டம்). | 2·50 |
| இ. மேலேரிக்கோட்டையிலிருந்து பெரிய மலைக்குச் செல்வதற்காக அமைக்கப்படும் சாலையில் 0/0-3/0 கி. மீட்டர் (தருமபுரி மாவட்டம்). | |
| 35 பருத்திக்கோட்டையிலிருந்து வெண்டையாநிருப்புக்குச் செல்லும் சாலையை மேம்படுத்துதல் (தஞ்சாவூர் மாவட்டம்). | 6·50 |
| 36 துரையாண்டார் கோட்டையிலிருந்து கீழ வளூருக்குச் செல்லும் சாலையை மேம்படுத்துதல் (தஞ்சாவூர் மாவட்டம்). | 5·75 |



| தொடர் எண், பணியின் பெயர். (1) | செலவு. (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 37 இராமநாதபுரம் மாவட்டத்தில், போகலூர் ஊராட்சி ஒன்றியம் நரியாவேந்தலிலிருந்து மதுரை-இராமநாதபுரம் சாலைக்குச் செல்லும் சாலை அமைத்தல் (நிலங்களை கையகப்படுத்தல் உட்பட). | 0.22 |
| 38 வலங்கைமான் ஊராட்சி ஒன்றியத்தில், ஆலூரிலிருந்து அவளிவணநல்லூர் செல்லும் சாலையை மேம்படுத்தல் (தஞ்சாவூர் மாவட்டம்). | 3.00 |
| மொத்தம் .. | 165·87 |

## இணைப்பு 7.

ஏனைய சாலைகளுக்குரிய திட்டங்கள்—1980-81-ம் ஆண்டில் அனுமதிக்கக் கருதப்பட்டுள்ள புதிய பணிகள் குறித்த பட்டியல்.

| தொடர் எண். பணியின் பெயர். (1) | செலவு. (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1. மரியமங்கலம்-பாளையகேஸ்வரம் சாலையில் 0/2 கி. மீட்டரில் தரைப்பாலம் கட்டுதல் (செங்கல்பட்டு மாவட்டம்). | 4·00 |
| 2. அம்மன் கோயில்படைவீடு சாலையில் (ஊராட்சி ஒன்றியச் சாலை 20/2 கி. மீட்டரில் கமண்டலநாக நதிக்குக் குறுக்கே பாலம் கட்டுதல் (வட ஆற்காடு மாவட்டம்). | 6·50 |
| 3. கம்பிலிமேடு, திருக்கோபுரம் வழியாகச் செல்லும் பெரிய குப்பம்-ஆலப்பாக்கம் ரயில் நிலையச் சாலையில் 0/8 கி. மீட்டரில் பக்கிங்காம் கால்வாய்க்குக் குறுக்கே பாலம் கட்டுதல் (தென் ஆற்காடு மாவட்டம்). | 9·50 |

| தொடர் எண், பணியின் பெயர். (1) | [1980 ஜூலை 21 செலவு. (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 4. மருதையூர் ஆற்றுக்குக் குறுக்கே நீர்க்கால் வைத்துக் கட்டும் நீர்க்கடவு பாலம் உட்பட, கூடலூரிலிருந்து திம்மூர் செல்லும் சாலையை 11/0-15/2 கி.மீ. மேம்படுத்தல் (ஊராட்சி ஒன்றியச் சாலை) (திருச்சி மாவட்டம்). | 2.75 |
| 5. பருத்திக்கோட்டையிலிருந்து வண்டிப்பாளிருப்புக்குச் செல்லும் சாலையை மேம்படுத்தல் (தஞ்சாவூர் மாவட்டம்). | 6·50 |
| 6. மித்ரவயலிலிருந்து எம்பலூக்குச் செல்லும் சாலையை 9·1 கி. மீட்டரில் அமைத்து, மேம்படுத்தல் (சிவகங்கைப் பிரிவில் 5·0 கி. மீட்டர், புதுக்கோட்டை பிரிவில் 4·1 கி. மீட்டர்) (புதுக்கோட்டை மாவட்டம்). | 8·00 |
| 7. பெருங்கூரூர் சாலையை 3·0 கி. மீட்டரில் மேம்படுத்தலும், பெருங்காலூரிலிருந்து குப்பக்காட்டிற்குச் சாலை அமைத்து, மேம்படுத்தலும் (கண்ணகுடி ஊராட்சி ஒன்றியத்தில் 2·0 கி. மீட்டரில்) (இராமநாதபுரம் மாவட்டம்). | 3·00 |
| 8. இராமநாதபுரம், நயினார் கோயில் சாலையிலிருந்து பி. கொடிக் குளத்திற்குச் செல்லும் சாலையில் 27/2 மீ. மீட்டரிலிருந்து (16·00 கி.மீ.) சாலையை மேம்படுத்தல் (இராமநாதபுரம் மாவட்டம்). | 15·50 |
| 9. நரிக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் கோட்டைமாள்-திருச்சிரை சாலையை (ஊராட்சி சாலை) 4·00 கி. மீட்டரில் சாலையை உயர்நிரப்படுத்தல் (இராமநாதபுரம் மாவட்டம்). | 2·00 |
| 10. கடையம் ஊராட்சி ஒன்றியத்தில், இராவண சமுத்திரம்-கோவிந்தப்பேரி சாலையில் 1/2 கி. மீட்டரில் பாலம் கட்டுதல் (திருநெல்வேலி மாவட்டம்). | 4·50 |



| 1980 ஜூலை 21] தொடர் எண், பணியின் பெயர். (1) | செலவு. (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 11. தெம்மலை-விஸ்வநாதப்பேரி சாலையில், 11/2 கி. மீட்டரில் பாலம் கட்டுதல் (வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியம்) (திருநெல்வேலி மாவட்டம்). | 1·00 |
| 12. திருவெட்டார் ஊராட்சி ஒன்றியத்தில் குமரன்குடி 2/6 கி. மீட்டரில் பெறளையாற்றுக்குக் குறுக்கே பாலம் கட்டுதல் (கன்னியாகுமரி மாவட்டம்). | 12·00 |
| 13. பணியாளரால் இயக்கப்படும் சாலை-இருப்புப்பாதை கடவு அமைப்பு உட்பட, கோயம்புத்தூர் - மேட்டுப் பாளையம் சாலையையும் (எஸ்.எச்.) கணபதி செங்கனூர் சாலையையும் இணைக்கும் சாலையை அமைத்து, மேம்படுத்தல் (கோயம்புத்தூர் மாவட்டம்). | 2·00 |
| 14. புக்கம்பட்டிக்குச் செல்லும், ஓமலூர் மேச்சேரி சாலையை 0/0-3/2 கி.மீட்டரில் மேம்படுத்தல் (சேலம் மாவட்டம்). | 1·00 |
| 15. சூலகிரி ஊராட்சி ஒன்றியத்தில் சூலகிரியிலிருந்து உத்தனப்பள்ளிக்குச் செல்லும் சாலையை மேம்படுத்துதல் (தருமபுரி மாவட்டம்). | 2·00 |
| 16. அஞ்செட்டியிலிருந்து உரிகத்திற்குச் செல்லும் சாலையில் (21·0 கி.மீ.) கப்பிப் போடுதல், தார் போடுதல் போன்ற மேம்பாட்டுப்பணிகளும், பாலங்கள், மதகுகள் கட்டுதலும் (தருமபுரி மாவட்டம்). | 20·00 |
| துறையுண்டார் கோட்டையிலிருந்து கீழக்குளூர் செல்லும் சாலையை மேம்படுத்துதல் (தஞ்சாவூர் மாவட்டம்). | 5·75 |
| மொத்தம் .. | 106·00 |

இணைப்பு—8.

மத்தியச் சாலை நிதித் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட ஐந்தாண்டுத் திட்டப் பணிகளின் நிலை.

| ...டர் எண்ணும் பணிகளின் பெயரும். (1) | நிர்வாக அனுமதி/ தொழில் நுட்ப அனுமதி. (2) | நிலை. (3) |
| --- | --- | --- |
| | ரூ. | |
| 1 தமிழ்நாடு, கர்நாடக எல்லையில் கிர்கண்டிக்கு அருகே கொள்ளேகாலம் செல்லம்பாளையம் சாலையை இணைப்பதற்குப் பாலாறு ஆற்றுக்குக் குறுக்கே பாலம் கட்டுதல். (AL/TN/1/VPL). | 5,46,000 | தமிழ்நாடு அரசின் பங்கு கொடுக்கப்பட்டு விட்டது. கர்நாடக அரசு இப்பணியை நிறைவேற்ற இருக்கிறது. |
| 2 இராமேஸ்வரம் தீவில் அருள்மிகு கோதண்டராமசாமி கோயிலை, மதுரை, தனுஷ்கோடி சாலையுடன் இணைப்பதற்குச் சாலை அமைத்தல். (AL/TN/1/VPL) | 8,00,000/ 8,47,000 | பணி முடிக்கப்பட்டு விட்டது. |
| 3 பெண்ணகரம்—பெரும்பாலை சாலையில் 34/2 கி. மீட்டரில் கோப்பையாறுக்குக் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டுதல். (AL/TN/1/VPL) | 14,50,000/ 7,72,700 | தார் போடுதல் தவிர அணுகு சாலை போடும் பணி முடிக்கப்பட்டு விட்டது. பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. |



| | | |
| --- | --- | --- |
| 4 சித்தலந்தூர்—ஜேடர்பாளையம் சாலையில் மூழ்கு பாலம் ஒன்றைக் கட்டுதல். (AL/TN/3/VPL) | 16,80,000/ 2,87,000 | பாலம் கட்டி முடிக்கப்பட்டு விட்டது. சாலை சந்திப்பு மேம்பாட்டுப் பணி மேற்கொள்ளப்பட வேண்டும். |
| 5 திருநெல்வேலி மாவட்டத்தில், பாளையம் கோட்டை—நாகலாபுரம் சாலையில் சிவலப்பேரிக்கு அருகே, 11/8 கி. மீட்டரில் தாமிரவருணி ஆற்றுக்குக் குறுக்கே தரைப்பாலம் கட்டுதல். (AL/TN/4/VPL) | 20,50,000/ 22,55,000 | பணி நடைபெற்று வருகிறது. |
| 6 வட ஆற்காடு மாவட்டத்தில் நானாவரம்—சாந்தமங்கலம் சாலையில் நெம்மேலி கிராமத்திற்கு அருகே 16/10–17/2 கி. மீட்டரில் தரைப்பாலம் கட்டுதல். (AL/TN/7/VPL) | 8,00,000/ 8,80,000 | இப்பணி அண்மையில தொடங்கப்பட்டுள்ளது. |
| 7 நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் சோதனை அடிப்படையில் சாலை அமைத்தல். (CE/Misc/2/I/VPL) | 22,00,000/ 22,00,000 | பணி நடைபெற்று வருகிறது. |
| 8 ஆரிய கவுண்டம் ஜாகீரிலுள்ள கீழக்காட்டை கிருபாகவுண்டர் ஜாகீர் வழியாக ரங்கப்பானூருடன் இணைப்பதற்கு ஜீப் செல்வதற்குரிய தடம் அமைத்தல். (AL/TN/S/VPL) | 53,00,000 மறு திருத்த மதிப்பீடு ரூ. 65 இலட்சம் தொழில் நுட்ப வகையில் ஏற்றுக் கொள்ளப் பட்டது. திருத்த நிர்வாக அனுமதி வழங்குமாறு அரசை கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. | இப்பணி நெடுஞ்சாலைப் பிரிவில் நடைபெற்று வருகிறது. நெடுஞ்சாலைப் பிரிவில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. 1980-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 31-ம் நாளுக்குள் இப்பணியை முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. |

இணைப்பு—8—தொடர்ச்சி.

| தொடர் எண்ணும் பணிகளின் பெயரும். | நிர்வாக் அனுமதி/ தொழில் நுட்ப அனுமதி. | நிலை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ரூ. | |
| 9 செங்கற்பட்டு மாவட்டத்தில் ஆர். கே. பேட்டை—பள்ளிப்பேட்டை சாலையில் 17/7—18/4 கி. மீட்டரில் குசஸ்தலை ஆற்றுக்குக் குறுக்கே நீர்க்கால் வைத்துக் கட்டும் நீர்க்கடவுப் பாலம் கட்டுதல். (AL/TN/9/I/VPL). | 27,00,000/ 29,27,000 | பணி நடைபெற்று வருகிறது. |
| 10 இராமநாதபுரம்—தஞ்சாவூர் மாவட்டத்தில், முத்துப்பேட்டை மீமிசல் சாலையில், 49/7 கி. மீட்டரில் மீமிசலுக்கு அருகே பாம்பாறு ஆற்றுக்குக் குறுக்கே உள்ள பாலத்தினை உறையூர் திருப்புவனவாசல் ஆகியவற்றுடன் இணைப்பதற்கு இணைப்புச் சாலை அமைத்தல். (AL/TN/10/VPL). | 4,90,000/ 5,39,000 | பணி நடைபெற்று வருகிறது. 35 சதவீதப் பணி முடிக்கப்பட்டுள்ளது. |
| 11 வட ஆற்காடு மாவட்டத்தில், போளூரிலிருந்து ஜவ்வாது மலை உச்சிக்கும், அலங்காயத்திற்கும் செல்லும் மலைச் (ghat சாலையை மேம்படுத்தல். (AL/TN/11/VPL). | 75,00,000 | இப்பணி குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. |